
சைவத்தமிழ் வரலாறும் வாழ்வியல் நெறிகளும்



ஔவை அடிப்பொடி
முனைவர் மூ. கலைவேந்தன்
தொகுப்பாசிரியர்

சைவத்தமிழ் வரலாறும் வாழ்வியல் நெறிகளும்

"ஔவை அடிப்பொடி"
முனைவர் மு. கலைவேந்தன்
தொகுப்பாசிரியர், தமிழ்ஐயா கல்விக் கழகம்,
திருவையாறு.

அனைத்துலக
16 ஆவது சைவத்தமிழ் ஆய்வு மாநாட்டுக்
கருத்தரங்கக் கட்டுரைத் தொகுப்பு

தமிழ் ஐயா வெளியீட்டகம்
பதிப்பாசிரியர்: கண்ணகி கலைவேந்தன்,
ஔவைக்கோட்டம், திருவையாறு–613 204,
தஞ்சாவூர் மாவட்டம்.
கைப்பேசி : 094867 42503

நூல் விவர அட்டவணை

தலைப்பு	:	சைவத்தமிழ் வரலாறும் வாழ்வியல் நெறிகளும்
வகை	:	சமயம்
பதிப்பாசிரியர்	:	க. கண்ணகி (04362 - 260711)
முதல்பதிப்பு	:	திருவள்ளுவராண்டு 2049 (சூலை, 2018)
பதிப்புரிமை	:	தமிழ் ஐயா வெளியீட்டகம், திருவையாறு
நூல் அளவு	:	டெம்மி 1x8
I.S.B.N. எண்	:	978-81-930633-3-0(V-2)
எழுத்து அளவு	:	12
பக்கங்கள்	:	480
படிகள்	:	500
கட்டுமானம்	:	சாதாரணம்
விலை	:	ரூ. 600/-
கணினி அச்சு	:	செ.தீபா (கிரியேட்டர் கிராபிக்சு) சிவகாசி
அச்சாக்கம்	:	செல்வவிநாயகம் அச்சகம், சென்னை

தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகம் இலக்கியத்துறை, மொரிசிய மாணிக்கவாசகர் திருக்கூட்டம் திருவையாறு தமிழ்ஐயா கல்விக்கழகம் இணைந்து 21-07-2018 அன்று நடத்திய **அனைத்துலக 16ஆவது சைவத்தமிழ்** ஆய்வு மாநாட்டுக் கருத்தரங்கில் படித்தளிக்கப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு நூல்.

2-6

ஔவையைப் போற்றுதும் ஔவையைப் போற்றுதும்
அருந்தமிழ் அன்னையாம் ஔவையைப் போற்றுவோம்!



ஔவைக் கோட்ட அறிஞர் பேரவை

ஔவை அறக்கட்டளை,
ஔவைக் கோட்டம்,
திருவையாறு.
தஞ்சாவூர் மாவட்டம்.

மாநாட்டுக் குழு

தலைவர்	:	சிவனடியார் **மு.சுந்தரேசன் செங்கப்ராய்டு** மாணிக்கவாசகர் திருக் கூட்டம், மொரிசியசு
ஆலோசனைக்குழுத் தலைவர்	:	முனைவர் **க.பாஸ்கரன்** துணைவேந்தர், தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
வரவேற்புக் குழுத் தலைவர்	:	முனைவர் **செ.தேவி** இலக்கியத்துறைத் தலைவர், தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
புரவலர்க் குழுத் தலைவர்	:	மதி.முனைவர் **ஆர்.ஆர். கோவிந்தராசன்** தொழிலதிபர், வல்லம்.
அமைப்புக்குழுத் தலைவர்	:	வழக்குரைஞர் **கோ.அன்பரசன்** ஔவைக்கோட்ட அறிஞர் பேரவைத் தலைமை அமைச்சர்
காப்பாளர்	:	முத்தமிழ் அரசி, முனைவர் **சரசுவதி இராமநாதன்** ஔவைக்கோட்ட மதிப்பியல் தலைவர்
பொதுச் செயலாளர்	:	**டத்தோ தான் ஸ்ரீகுமரன்** மலேசிய முன்னை இணை அமைச்சர்
இணைப் பொதுச் செயலாளர்	:	மருத்துவர் **சு.நரேந்திரன்** தமிழ் ஐயா கல்விக் கழக மதிப்பியல் தலைவர், தஞ்சாவூர்.
		திருப்புவனம் முனைவர் **வெ.கண்ணன்** ஔவைக்கோட்ட அறிஞர் பேரவைத் தலைமை இணை அமைச்சர்
நிதிக் காப்பாளர்	:	திருமதி. **கண்ணகி கலைவேந்தன்** ஔவை அறக்கட்டளைத் தலைவர், திருவையாறு.
பன்னாட்டு ஒருங்கிணைப்பாளர்	:	முனைவர் **நா.வி.மு. நவரத்தினம்** முன்னை இசைப்புலத் தலைவர் (ப.நி.), யாழ்ப்பாணம்
பன்னாட்டு இணை ஒருங்கிணைப்பாளர்	:	முனைவர் **கோ.தெய்வநாயகம்** தலைவர், தஞ்சாவூர் தமிழ்ச் சங்கம்
மாநாட்டு இயக்குநர்	:	முனைவர் **மு. கலைவேந்தன்** தமிழ் ஐயா கல்விக்கழகத் தலைவர், திருவையாறு.

நெறியாளர்கள் :

புதுச்சேரி கலைமாமணி **கல்லாடன்**	முனைவர் **இளமதி சானகிராமன்** புதுச்சேரி
அந்தமான் முனைவர் **மா.ஐயாராசு**	முனைவர் **இரா.இராசாமணி,** கரந்தை
காரைக்கால் **கி.இராகவசாமி**	முனைவர் **பா.வேலம்மாள்,** குற்றாலம்
மருத்துவர், கவிஞர் **சு.தமிழரசன்**	முனைவர் **இள.மேகலா,** நாகை
அரிமா. **வை.கலியபெருமாள்**	முனைவர் **வாசுகி கண்ணப்பன்,** சென்னை
ஐயாறு **தங்க கலியமூர்த்தி**	முனைவர் **சௌ.கீதா,** கிருட்டினகிரி
முனைவர் **இரா.குருநாதன்**	வழக்குரைஞர் **வ.அம்பிகா,** சென்னை

ஆய்வுத் தொகுதி வெளியீட்டு ஆலோசனைக்குழு

'ஐயாற்று அடிகளார்'

முனைவர் மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த அடிகளார்

இளையபட்டம், தருமபுர ஆதீனம், தருமபுரம்.

'தமிழ்மாமணி'

புலவர் மா. கந்தசாமி

ஔவைக் கோட்ட அறிஞர் பேரவை அமைச்சர், தஞ்சாவூர்.

'செந்தமிழ்மாமணி'

பெரும்புலவர் பூவை சு. செயராமன்

ஔவைக் கோட்ட அறிஞர் பேரவை அமைச்சர்,
செயங்கொண்ட சோழபுரம்.

'சிந்தனைச்சுடர்'

சுழல்நர் குப்பு. வீரமணி

தலைவர், திருமகள் தொழிற்பயிற்சி நிறுவனம், அம்மன்பேட்டை.

'ஔவை அடிப்பொடி'

முனைவர் மூ. கலைவேந்தன்

தலைவர், தமிழ் ஐயா கல்விக்கழகம், திருவையாறு.

பொறிஞர் கவிஞர் மூ.க. முகில்வேந்தன்

ஔவை அறக்கட்டளை, திருவையாறு.

ஆக்கப்பணி ஆளுமை

முனைவர் **சுடலி தியாகராசன்** சென்னை	**உமையாள் இராதா கிருட்டினன்** கல்கத்தா
முனைவர் **வாசுகி இளவரசு** நாகை	முனைவர் **வாசுகி கரிகாலன்** திருவையாறு

புலவர் **அ.வைத்திலிங்கம்,** செயங்கொண்ட சோழபுரம்

தோரணவாயில்



கண்ணகி கலைவேந்தன்
வெளியீட்டாளர்
தமிழ் ஐயா வெளியீட்டகம்
திருவையாறு

சைவ சமயம் தமிழரின் வாழ்வியல் நெறிகளை, பண்பாட்டுக் கூறுகளை, அறச்சிந்தனைகளை ஆக்கமளிக்கும் வகையில் உருவான தொன்மையான சமயம்; இயற்கையை வழிபட்ட தமிழரது வாழ்வில் இன்ப, துன்பங்களுக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் கடவுளர் உருவங்களும் குறிப்பாக மலைத் தெய்வமான தமிழ்க்கடவுள் முருகனையும் அன்பே கடவுளான சிவபெருமானையும் முன்னிறுத்தி தமிழர் நெஞ்சங்களில் தமிழ்ச்சமயம் சைவசமயமாக மலரத் தொடங்கியது; இத்தகைய சிறப்பு வாய்ந்த சைவ சமயக் கோட்பாடுகளையும் அறநெறிகளையும் உலகவர் அறியும் வண்ணம் சைவத்தமிழ் அனைத்துலக 16ஆவது ஆய்வு மாநாட்டுக் கருத்தரங்கத்தை திருவையாறு தமிழ்ஐயா கல்விக்கழகம் நடத்த முனைப்பான செயல்களில் ஈடுபட்டது.

குறிப்பாக சைவத்தை உயிர் மூச்சாகக் கருதி இன்றும் வாழ்வியல் அறமாகப் போற்றிவரும் மொரிசியசு நாட்டில் மாணிக்கவாசகம் திருக்கூட்டத்துடன் இணைந்து தொடக்கவிழா நடத்தியது; நிறைவு விழாவை தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக இலக்கியத்துறையுடன் இணைந்து நடத்திடவும் கருத்தரங்கப் பயனாக தமிழ் ஆய்வாளர்கள் 320க்கும் மேற்பட்ட ஆய்வாளர்களால் படிக்கப்பட்ட கட்டுரைகள் 4 ஆய்வு மாலை நூல்களாக வெளிவருவதும் தமிழ் இலக்கிய வரலாற்றிற்கு அரண் சேர்ப்பதாக அமைந்துள்ளது.

சைவத்தமிழ்க் கருத்தரங்கிற்கு ஆய்வுக் கட்டுரைகள் அனுப்பிய உள்நாட்டு, அயல்நாட்டு தமிழறிஞர்கள், பல்துறைப் பேராசிரியர்கள், ஆய்வாளர்கள் மற்றும் ஆர்வலர்கள் அனைவரின் ஆய்வுக் கருத்துக்கள் இவ்வாய்வு மாலையில் பதிவு செய்யப்பட்டு நூல் வடிவம் பெற்றுள்ளன. இவ்வாய்வுக் கட்டுரைகளைத் தொகுத்தும் பகுத்தும் தலைப்பினைத் தந்தும் அரும்பாடுபட்டு வரும் மாநாட்டு இயக்குநர் முனைவர் மு.கலைவேந்தன் அவர்களுக்கும் பேருள்ளத்தோடு மாநாட்டுப் பணிகளுக்குத் துணை நின்று வரும் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் க.பாசுகரன், இலக்கியத்துறைத் தலைவர் முனைவர் செ.தேவி, மொரிசியசு மாணிக்கவாசகர் திருக்கூட்டத் தலைவர் மு.சுந்தரேசன் செங்கப்பிராய்டு ஆகியோருக்கும் எனது கரம்குவித்த வணக்கங்கள். மாநாடு, நூல் வெளியீடு ஆகியவற்றிற்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கி வரும் அனைவருக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். தற்பொழுது வெளிவந்துள்ள சைவத்தமிழ் ஆய்வுக் கட்டுரைத் தொகுதிகளால் சைவமும் தமிழும் தழைத்தோங்கட்டும்; சமரசமான அமைதி வாழ்வு உலகம் முழுவதும் ஒளிரட்டும். நன்றி!

(ஒ.ம்.)
கண்ணகி கலைவேந்தன்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் – 613 010
தமிழ்நாடு – இந்தியா

தொலைபேசி : 04362 - 226720
அலுவலகம் : 04362 - 227228
தொலைநகலி : 04365 - 227413
மின்னஞ்சல் : tamiluniverg@gmail.com
இணையதளம் : www.tamiluniversity.ac.in

முனைவர் ச.முத்துக்குமார்
பதிவாளர்



வாழ்த்துரை

திருமுறையே சைவ நெறிக் கருவூலம் தென் தமிழின் தேன்பாகு ஆகும்
திருமுறையே கயிலையின்கண் சிவபெருமான் செவிமடுத்த செந்தமிழ் வேதம்
திருமுறையே நடராசன் கரம் வருந்த எழுதியருள் தெய்வ நூலாம்
திருமுறையே சொக்கேசன் மதிமலிவாய் மலர்ந்தருளும் சிறப்புற்றாமால்

என்று சைவத்தமிழ் இலக்கியத்தின் பெருமையைக் குறிப்பிடுவர். சங்க காலத் தமிழின், தமிழரின் பண்பாட்டு மரபுகளையும், இசை, பக்தி, வழிபாடு, வாழ்வியல் என அனைத்தையும் மீட்டுருவாக்கம் செய்த சிறப்பு சைவத்தமிழ் இலக்கியங்களுக்கு உண்டு. கி.பி. ஏழாம் நூற்றாண்டில் பக்தியை இயக்கமாகத் தொடங்கி வைத்த திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் தமிழ்மொழியின் இலக்கியம் மற்றும் இசையின் தொன்மையையும், சிறப்பையும் இணைத்தே சைவத்தைப் பரப்பினர். கொண்டாடினர். தேவாரத் தமிழ் அளித்த பண்ணிசைக் கொடையால் தான் தமிழிசை இன்றுவரை நிலைத்துள்ளது. தமிழரின் ஆதி இசையாகிய பண்ணிசையே பிற்கால இசை மரபுகள் அனைத்திற்கும் தாயாக விளங்குகிறது என்பதை உறுதி செய்வதை திருநெறிய தமிழாகிய திருமுறைகள் என்பதில் இருவேறு கருத்துகள் இருக்க வாய்ப்பில்லை.

சைவத்தமிழ் இலக்கியங்கள், காரைக்காலம்மையார் பாடிய பதிக மரபில் தொடங்கி, தேவார மூவர் பாடிய திருமுறைகள், மாணிக்கவாசகர் பாடிய திருவாசகம், பெரியபுராணம் முதலான காப்பியங்கள், பதினோராம் திருமுறை முதலான சிற்றிலக்கியங்கள், பட்டினத்தார், தாயுமானவர் முதலானவர்களின் தனிப்பாடல்கள், சந்தநயம்மிக்க திருப்புகழ், நாட்டுப்புற இசை வடிவுடைய பாடல்கள் என மிகப்பெரிய இலக்கிய வகைமையை வளமாகக் கொண்டவை.

பக்தியை மட்டும் அல்லாது பண்பாடு, நாகரிகம், திருக்கோயில், இயற்கைவளம், அறிவியல் தொழில் நுட்பம், நீர்வளம், நீர்மேலாண்மை, சுற்றுப்புறச் சூழல் சிந்தனை, மனிதநேயம், ஆன்ம நேய ஒருமைப்பாடு, பண்டைய தொழில்கள், வணிகம், மேலாண்மை, இசை, நாட்டியம் குறித்த கலை மரபுகள் என வாழ்வியலின் அனைத்து வகைமைகளையும் கொண்டுள்ள சிறப்பு சைவத்தமிழுக்கு உண்டு.

இத்தகு சிறப்பு வாய்ந்த சைவத்தமிழுக்கென்று தனியாக ஒரு மாநாடு ஏற்பாடு செய்துள்ளமை பாராட்டிற்குரியதாகும். நம்முடைய தமிழ்ப் பல்கலைக்கழக இலக்கியத்துறையும், திருவையாறு தமிழ்ஐயா கல்விக்கழகமும், மொரிசியசு மாணிக்கவாசகர் திருக்கூட்டம் ஆகியன இணைந்து நடத்தும் அனைத்துலக 16ஆவது ஆய்வு மாநாட்டுக் கருத்தரங்கம் வெற்றி பெறவும், சைவத்தமிழ் இலக்கியங்களின் தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவவும் மனமார வாழ்த்துகிறேன். இம்மாநாட்டை ஏற்பாடு செய்த இயக்குநர் முனைவர் மு.கலைவேந்தன் மற்றும் தமிழ்ப்பல்கலைக் கழக இலக்கியத்துறையினர், மொரிசியசு நாட்டின் மாணிக்கவாசகர் கூட்டம் அனைவரையும் பாராட்டி மகிழ்கிறேன். வாழ்த்துக்கள்.

(ஒ.ம்.)
முனைவர் ச. முத்துக்குமார்

மாணிக்கவாசகர் திருக்கூட்டம்

மொரிசியசு



வாழ்த்துரை

சிவத்திரு. மு.சுந்தரேசன் செங்கப்பிராய்டு
தலைவர்

அன்பே சிவம்

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவருக்கும் இறைவா போற்றி

மொரிசியசு மாணிக்கவாசகர் திருக்கூட்டத்துடன் இணைந்து அனைத்துலக 16ஆவது சைவத்தமிழ் ஆய்வு மாநாட்டு நிறைவு விழா தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் நடைபெறுவது யாம்பெற்ற பெரும்பேறாகக் கருதுகிறோம்.

சைவத்தை மறவாத தமிழும், தமிழை மறவாத சைவமும் தமிழரின் பாரம்பரியக் கோட்பாடாகும். இக்கோட்பாடு உலகம் முழுவதும் பரவும் வகையில் நடைபெறும் இம்மாநாடு பல்லாற்றனும் வெற்றிபெற மொரிசியசு தமிழ் மக்களின் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். மாநாட்டுப் பணிகளை சிறப்புடன் செய்துவரும் தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக் கழக இலக்கியத்துறை, திருவையாறு, தமிழ்ஐயா கல்விக்கழகம் ஆகியவற்றிற்கு இதயங்கனிந்த பாராட்டுக்கள்; நன்றி.

(ஒ.ம்.)
மு.சுந்தரேசன் செங்கப்பிராய்டு

உ

சாதிகள் ஒழியட்டும் எல்லா நிறைவாகட்டும் சமத்துவம் வெல்லட்டும்



கோவை காமாட்சிபுரி ஆதீனம்

ஞானகுரு சாக்தஸ்ரீ சிவலிங்கேஸ்வர சுவாமிகள்

நிறுவனர் { ஸ்ரீ அங்காளபரமேஸ்வரி சித்தர் பீடம் மகா சமஸ்தானம்
உலக சமாதான தெய்வீகப் பேரவை

காமாட்சிபுரம், திருச்சி சாலை, ஒண்டிப்புதூர் (அஞ்சல்), கோயமுத்தூர் - 641 016.
தொலைபேசி : 0422-2273353, 98430 16211, 98437 16211, ஃபேக்ஸ் : 0422-2273353
மின்அஞ்சல் : gnanaguru, kamatchipuram@gmail.com இணையதளம் : www.kamatchipuriadhinam.com

அருள் வாழ்த்துரை

நன்று உடையார் ஔவை கோட்ட அதிபர்
என்றும் இன்பம் பெருகும் தமிழ்த்தாய்க்கு
நிறைந்த புகழ் விளங்க நிரந்தரமாய் மாநாடு
விரைந்து பலவும் விழாவாகச் செய்வார்
எம் தமிழர் வாழும் மொரிசியசுத் திருநாட்டில்
தமிழ்மொழி ஆய்வு மாநாட்டினைச் சிறப்பாக
அமிழ்தினும் மேலான தமிழுக்கு ஆராதனையாக
தஞ்சைத்தமிழ்ப் பல்கலைக்கழகத்திலும்
ஆர்வத்துடன் பெருவிழா எடுக்கும் அன்பர்
அனைவரும் வாழ்க வளர்க.
16ஆவது சைவத்தமிழ் ஆய்வு மாநாடு
பார்போற்ற நிறைவாக நடைபெறட்டும்
எல்லாம் நிறைவாகட்டும்



அன்புடன்...
(ஒ.ம்.)
தவத்திரு சிவலிங்கேசுவர அடிகளார்

பகவானை அடைதலே - மனித வாழ்க்கையின் நோக்கம்



வை. கலியபெருமாள்

லயன்ஸ் சங்க மாவட்டத் தலைவர் - மாவட்டம் 324 A2
ஒருங்கிணைப்பாளர், ஔவைக் கோட்டம், திருவையாறு
துணைத்தலைவர், செஞ்சிலுவை சங்கம், திருவையாறு கிளை
46, கல்கி அக்ரகாரம், திருவையாறு, தஞ்சாவூர் மாவட்டம்-613 204.
தொலைபேசி:04362-295269; கைப்பேசி:9443463773

வாழ்த்துரை

தமிழின் தொன்மையான சமயமான சைவ சமயம் அன்பையும், அறத்தையும், அருளையும் அடிப்படையாகக் கொண்டு வளர்ந்த சமயமாகும். தமிழரின் வாழ்வினை, பண்பாட்டினை, பாரம்பரியத்தினைக் கட்டிக் காக்கும் வகையில் அன்று முதல் இன்று வரை சைவ சமயம் அடியார்களாலும், அருளாளர்களும் கட்டிக்காக்கப்பட்டு வருகிறது. செந்தமிழ் வழிபாட்டு நெறிகளையும் தித்திக்கும் திருமுறைகளையும் அறம் காக்கும் அறச் செயல்களையும் தன்னைத்தேடிக் கொண்டு இன்றும் மக்களிடம் செல்வாக்குப் பெற்றுள்ள சைவத் தமிழுக்கு எழுச்சி ஏற்படுத்தும் வகையில் தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக்கழகத்தில் திருவையாறு தமிழ்ஐயா கல்விக்கழகத்தின் அளப்பரியப் பணிகளால் உருவாக்கம் பெற்றுள்ள அனைத்துல சைவத்தமிழ் 16ஆவது ஆய்வு மாநாட்டுக் கருத்தரங்கம், ஆய்வு மாலை வெளியீடு ஆகிய அனைத்துத் தமிழ்ப்பணிகளும் சிறக்க வாழ்த்துகிறோம். நன்றி.

அன்புடன்...

(ஒ.ம்.)



அரிமா. வை. கலியபெருமாள்
நிறுவனர் காந்திமதி கலியபெருமாள்
அறக்கட்டளை
திருவையாறு

இல்லாதர்க்கு இயன்றதை செய்வோம்! இயலாதவர்க்கு முடிந்ததை செய்வோம்!
தொண்டு செய்வோம்! தொடர்ந்து செய்வோம்!
நன்றே செய்வோம்! இன்றே செய்வோம்!

அணிந்துரை



சைவத்தின் தோற்றம்

பேரா முனைவர் **கோ.தெய்வநாயகம்**
தலைவர்
தஞ்சாவூர் தமிழ்ச்சங்கம்
தஞ்சாவூர்

இந்த இருபத்தோராம் நூற்றாண்டுத் தமிழ் மக்களிடையே பெருவழக்காக வழங்கும் சொற்களில் சைவம் என்ற ஒரு சொல் உண்டு. இதன் எதிர்ப்பதமாக உள்ளது. அசைவம் இவ்விரு சொற்களின் பொருளும் தமிழ்மக்களின் உணவுப் பழக்கத்தின் மேலாக எழுந்த ஒன்றாகும். சைவம் என்றால் தாவர உணவும் அசைவம் என்றால் சில விலங்கு, பறவை, மீன் சார்ந்த இறைச்சி உணவும் கருத்தாகக் கொள்ளப் பெறுகின்றது. எனவே சைவம் என்றசொல் தாவர உணவை மட்டும் உணவாகக் கொள்வோரின் சுட்டப் பெயராக சைவர் என அமைந்து கிடப்பது உணரத்தக்கது. இந்து சமயம் என்ற வழிபாட்டு நம்பிக்கைக்கு சார்ந்த பழகுநிலையில் பல்வேறு குறியீடுகளை நம்பிக்கை சார்ந்த நிலையில் பல்வேறு தெய்வங்கள் வழிபட்டு வருகின்றன. இவற்றின் பெரும்பான்மை வழக்கு அடிப்படையில் ஏழுவகை வழிபாடுகள் வரையறை செய்யப்பட்டன. அவை சைவம், வைணவம், சாக்தம், ப்ரம்மம், காணாபத்யம், கௌமாரம், சௌரம் என்பனவாகும். இவ்வேழு நெறிகளும் தம்முன் தாம் இணங்கியும் பிணங்கியும் வழங்கிய நிலையில் ப்ரம்மம் விடுக்கப்பட்டு ஏனைய அறுவைச் சமயம் என வரையறுக்கப்பெற்று உறுதி செய்யப்பட்டன. ஆதலின் சமயம் என்ற அச்சொல் வழங்குதல் அல்லது பழக்க வழக்கம் என்ற கருத்தை தழுவிக் காணப்படுவது உணரத்தக்கதாகும்.

சமயம் சைவமாயிற்றோ? என்ற ஐயம் இன்றளவும் இருந்துவரத்தான் செய்கின்றது. ஆனால் அறுவகை வழிபாட்டு முதன்மைப் பொருளை அணுகிக்காண்பார் அவ்வாறு வகையும் வழிபாட்டு முதன்மை குறியீடு பெற்ற கொள்கை நெறித்ததென உணர்வர். அவ்வகையில் சிவன் என்று சுட்டப்பெற்ற கடவுளை முதன்மைத் தெய்வமாகக் கொண்ட வழிபாட்டு நெறி சிவநெறி

என வழங்கியதாகும். சிவன், பேச்சு வழக்கில் சைவனாகிய திறம் தமிழ் மொழிக்குண்டு சித்தத்தை சிவன் பாலே வைத்தார் யாவரும் சைவராகினர். ஆனால் காடுடைய சுடலைப்பொடி பூசி உள்ளங்கவர் கள்வன் அந்த அகோரியர் தாவர உணவும் பழக்கத்தாராக வேட்டையரிலிருந்து வேளாண்மையராக மாற்றம் பெற்ற திறம் பிறவற்றைத் தவிர்த்தல் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்த ஒன்றோ? என எண்ணத் தோன்றுகிறது. சிவத்துவம் என்ற உயிர்வன சாலையின் உச்சநிலையே சிவம் அதுவே பரம் எறிதரங்கம் உடுக்கும் புவனங்கடந்து நின்ற ஒன்று. மோனவெளி அது. அது ஆணன்று பெண்ணுமன்று இரண்டுமாகி நிற்பது, கடந்தது. ஆனால் அன்பிற்குள் அகப்படுந்தேனாகும்; அதனை தாயும் ஆன தயாபரனாக சிவனாகி ஆண் வடிவில் வழிபடும் நெறி சைவநெறி என ஆன்றோர் விளக்குவர்.

சைவர் என்ற சொல் சிவநெறி படர்ந்தாரைக் குறிக்கும். சிவநெறியில் காணலாகும் பைரவம், பாசுபதம், கபாலிகம், காளாமுகம் என்ற கிளைநெறிகளில் உணவுப் பழக்கம் அதன் பழமையைச் சுட்டுவதாக வேட்டை உணவையும் கொண்டு விளங்குகிறது. ஆனால் அதன் பிந்தய வளர்ச்சியில் ஆகம நெறிச் சைவமோ தாவர உணவுப் பழக்கத்தை மட்டுமே கொண்டு திகழ்ந்து கொல்லாமையை வலியுறுத்துகிறது. மாவிரதம், விரதமாகி வேட்டை வேளாண்மைக்கு மாற்றம் பெற்ற மாந்தவியல் சமயநெறியிலும் நிகழ்ந்து பல்கிப் பெருகிய ஒரு சமயவியல் வளர்நிலையே சைவம். அது உலகு புரப்பது. அது பல்லுயிரையும் பேணிக்காத்து அருளிச் செய்வதாகும். இத்தொகுப்பில் சைவத்தமிழ் வரலாறும் வாழ்வியல் நெறிகளும் என்ற தலைப்பில் தொகுக்கப்பட்டுள்ளன. மிகச் சிறப்பான முறையில் கட்டுரை எழுதிய ஆய்வாளர் அனைவருக்கும் நெஞ்சார்ந்தப் பாராட்டுக்கள். சைவ நெறியைத்தனிப் பெரும் சிறப்புகள் மாநாட்டுக் கருத்தரங்கம் ஆய்வுப் பொருளாக கொண்டு தமது 16ஆவது அனைத்துலக ஆய்வு மாநாடாக நடத்தி வரும் திருவையாறு தமிழ்ஐயா கல்விக்கழகத் தலைவர் முனைவர் மு.கலைவேந்தன் அவர்களின் முயற்சியும் தமிழ்ப்பல்கலைக் கழக இலக்கியத்துறையில் வழிகாட்டுதலும் சைவத்தமிழுக்கு அமைந்த ஒரு கொடையாகும். இம்மாநாடு பல்லாற்றானும் சிறந்து விளங்க வாழ்த்துகிறேன். வாழ்க சைவம் வாழ்க செந்தமிழ்.

(ஒ.ம்.)

பேரா முனைவர் கோ.தெய்வநாயகம்

நன்றி மலர்கள் மணம் வீசட்டும்



முனைவர் **மு.கலைவேந்தன்**
மாநாட்டு இயக்குநர்
தமிழ்ஐயா கல்விக்கழகம்
ஔவைக்கோட்டம், திருவையாறு

இயற்கை எழிலும் அமைதியும் செழித்தோங்கும் அறம்வளர்த்த நாயகி உடனாய ஐயறப்பர் திருக்கோயில் அமைந்து, அப்பரடிகளுக்கு கயிலைக் காட்சி நல்கிய திருநகராகவும் நால்வராலும் பாடப்பட்ட திருமுறைத் திருநகராகவும் விளங்கும் திருவையாற்றில் ஔவைக் கோட்டத்தைத் தலைமையகமாகக் கொண்டு தமிழரது அறஞ்சார்ந்த வாழ்வியல் நெறிகளை உலகெங்கும் பரப்பிவரும் திருவையாறு தமிழ்ஐயா கல்விக்கழகம் செந்தமிழரது சீர்மிகு வாழ்வியல் நெறிகளை அடிப்படைகளாகக் கொண்டு, இயற்கையோடு இயைந்த சைவ நெறிகளின் மாண்புகளையும், வரலாற்றுச் சுவடுகளையும் திருக்கோயில்களின் சிறப்புக்களையும் பொருண்மையாக வெளிப்படுத்தும் வகையில் சைவத்தமிழ் அனைத்துலக 16ஆவது ஆய்வு மாநாட்டுக் கருத்தரங்கினை நடத்தத்திட்டமிட்டது; நல்வாய்ப்பாய் பல்துறை ஆய்வாளர்களின் கட்டுரைகள் 4 ஆய்வு மாலைத் தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன. வெளியிடுவதற்குத் துணை நின்று தமிழ் நெஞ்சங்களுக்கு இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இம்மாநாட்டுக் கருத்தாங்கம் சிறப்பாக நடைபெறுவதற்குத் துணைநின்று வரும் தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக் கழகத்து அனைத்துத்துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், ஆய்வாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கும் மொரிசியசு தமிழ்க் கூட்டமைப்புகளுக்கும் ஔவைக்கோட்ட அறிஞர் பேரவையைச் சார்ந்த அமைச்சர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். குறிப்பாக மாநாட்டுப் பணிகளுக்கு பெருந்துணைப் புரிந்துவரும் முனைவர் சரசுவதி இராமநாதன், தமிழ்ஐயா கல்விக்கழக மதிப்பியல் தலைவர் மருத்துவர் சு.நரேந்திரன், தொழிலதிபர் மதி.முனைவர் ஆர்.ஆர்.கோவிந்தராசன், அறிஞர் பேரவை தலைமை அமைச்சர் கோ.அன்பரசன், தலைமை இணைஅமைச்சர் வெ.கண்ணன், ஔவைக் கோட்ட ஒருங்கிணைப்பாளர் அரிமா. வை.கலியபெருமாள் ஆகியோருக்கும் அணிந்துரை, வாழ்த்துரை வழங்கியவர்களுக்கும் நன்றி.

மெய்ப்புப் பணியினைத் திறம்பட செய்து கொடுத்த புலவர் மா.கந்தசாமி, புலவர் அ.வைத்திலிங்கம், முனைவர் வாசுகிகரிகாலன், முனைவர் வாசுகி இளவரசு மற்றும் பல்வகை செயல்பாடுகளுக்கும் துணைநின்று வரும் முனைவர் சி.பஞ்சநாதன் ஆகியோர்களுக்கும் கணினி அச்சாக்கிய சிவகாசி செ.தீபா, அட்டைப்படம் ஆக்கிய குடந்தை சனா.சானகிராமன், நூல்களை அச்சாக்கிய சென்னை துரைபாண்டியன் ஆகியோர்க்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி மலர்களால் இவ்வாய்வு மாலையும் மணம் பெறட்டும்; சைவத்தமிழும் செழித்தோங்கட்டும்.

(ஒ.ம்.)

மு. கலைவேந்தன்

பொருளடக்கம்

வ. எண்.	தலைப்பு	ப.எண்

அ. சைவத்தமிழ் நெறி வரலாறு

ஆ. சைவத்தமிழ் கோட்பாடுகள்

1. சைவத் தமிழ்நெறி வளர்ந்த வரலாறு

மருத்துவர் **கோவைகிருட்டினா**
பொதுச்செயலாளர்
தமிழ் இலக்கியப் பாசறை
கோவை

முன்னுரை

சைவம் என்பது இந்துக் கடவுளான சிவபெருமானை முழுமுதற்கடவுளாக வழிபடும் சமயத்தைப் பற்றியது. இதில் வரன்முறை படுத்திய வழிமுறைகளை உள்ளடக்கியது நெறி எனப்படும். சிவபெருமானின் புகழ் பாடியும், சைவநெறி வளர்க்கும் நோக்குடனும் தூயவழிமுறைகளைப் பின்பற்றும் சன்மார்க்க நெறிகளை வரலாற்றுச் சிறப்புடன் சொல்லப்பட்டது நம்முடைய தமிழ் இலக்கியங்கள் ஆகும். இந்தச் சைவத் தமிழ்நெறி வளர்ந்த வரலாறு எப்படி உருவானது என்பதைப்பற்றி இக்கட்டுரையின் கண் காண்போம்.

சைவநெறி வளர்ந்த வரலாறு

சிவநெறி என்று அழைக்கப்படும் சைவத் தமிழ்நெறி வளர்ந்த வரலாறு என்பது சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன்பு முதற்சங்கம் அமைந்த காய்சின பெருவழுதி என்ற பாண்டிய மன்னர் காலத்தில் தலைமைப் புலவராக இருந்த அகத்தியர் வாழ்ந்த காலந்தொட்டே தமிழ் நெறியானது வளர்க்கப்பட்டது. தொல்காப்பியருக்கும் முந்தியவர் என அறியப்படும் அகத்தியர், முனிவர்கள் எழுவருள் முதலாமவர் என்ற பெருமைபெற்றவர். இவர் கைலையில் சிவசக்தித் திருமணத்தைத் தமிழகத்திலிருந்து கண்டவரும், தமிழைச் சிவபெருமானிடத்தில் கற்றவர் என்றும் அறியப்படுகிறார். இதனைத் தழற்புரை சுடர்க்கடவுள் தந்த தமிழ் தந்தான் என்ற கம்பரின் வரிகள் அகத்தியரின் பெருமையைப் பறைசாற்றுகிறது. இவரே அகத்தியம் எனும் முதல் தமிழ் இலக்கண நூலை இயற்றியவர். இவரின் ஐந்திலக்கணம் எனும் ஞானநூலில்,

மூவெழுத்தும் ஈரெழுத்து மாகிநின்ற

மூலமதை யறிந்துரைப் போன் குருவுமாகும்
ஊவெழுத்துக் குள்ளதா னிருக்கு தப்பா
உணர்வதுவே கண்டறிந்தோன் அவனே ஆசான்
- ஞானம் (5ம் தொகுதி 10வது பாடல்)

மூன்றெழுத்தான அகாரம், உகாரம் மகாரம் ஆகிய மூன்றும் சேர்ந்து (அ+உ+ம்=அஉம்) ஒன்றாகி உச்சரிக்கும் பொழுது ஓம் என்று இரண்டெழுத்தாகி நிற்கும். இதுவே பிரபஞ்ச சக்தியான சிவாயநம எனும் பஞ்சபூத பரிணாமத்திலே தான் சீவனின் உயிர், உடல், உணர்வு எனும் மூன்றும் கூடிய தோற்றமும், ஆண், பெண் என இரண்டு இனமாகி இந்த இனத்தில் பிறந்த அனைத்து சீவராசிகளின் இயக்கத்திற்கும் மூலமான பிரணவமே இந்த ஓங்காரமாகும். இது உடலின் உள்ளேதான் இருக்கின்றது. இதனை உணர்வுகள் மூலம் கண்டவரே குருவாகும் என்ற சித்தாந்தத்தை முன்வைத்துத் தமிழுடன் சைவநெறி வளர துணை நிற்கிறார்.

சைவநெறி தமிழ் இலக்கியங்கள்

கி.பி.7ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 12ஆம் நூற்றாண்டு வரையிலான காலங்களில் சைவப் பனுவல்கள், பெருங்காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள் எனும் பல சைவத் தமிழ் இலக்கியங்களும் சைவநெறி தழைத்தோங்க இயற்றப்பட்டுள்ளன. கி.பி. 650 காலப்பகுதி தொடங்கி சுமார் 550 ஆண்டுகள் தமிழ்மொழியைச் சைவமே ஆட்சிசெய்தது என்று சைவசமயக் கலைக்களஞ்சியம் எனும் பெரும் தொகுப்பு நூலை வெளியிட்ட பேச்சாளரும், எழுத்தாளரும், தருமபுரம் ஆதீனம் கலைக்கல்லூரியில் தமிழ் பேராசிரியராகப் பணியாற்றிய முனைவர் இரா.செல்வகணபதி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

சைவநெறி தமிழ் இலக்கியங்களை 63 நாயன்மார்கள், ஔவையார், சிவப்பிரகாசர், குமரகுருபரர், உலகநாதர் போன்றோர்கள் சைவ சமயத்தின் தமிழ் நூல்களைப் பெருமளவு இயற்றியவர்கள். பல்லவர் காலத்திலும், அதற்குப் பின்னர் இயற்றப்பட்ட சைவ இலக்கியங்கள் பன்னிரு திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டன. சிவ்நெறியை அடிப்படையாகக் கொண்டு

தொகுக்கப்பட்ட நூல்களை திருமுறைச் சார்ந்த நூல்கள் என்று அழைக்கப்படுகிறது. அவையாவன.

1. பன்னிரு திருமுறைகள்
2. திருத்தொண்டர் புராண சாரம்
3. திருத்தொண்டர் திருநாமக் கோவை
4. திருமுறை கண்ட புராணம்
5. சேக்கிழார் புராணம்
6. திருப்பதிக் கோவை

போன்ற நூல்கள் சிவநெறியை போற்றி வளர்க்கும் சைவத் தமிழ்நெறி நூல்களாகும். இவற்றையும் சுருக்கமாக இங்கு காண்போம். சைவத் திருமுறைகள் என்று கூறப்படும் பன்னிரு திருமுறைகள் சிவனடியார்கள் என்று சொல்லப்படும் நாயன்மார்கள் பலரால் பல்வேறு காலங்களில் இயற்றப்பட்ட பாடலின் தொகுப்பாகும். அவையாவன.

1. முதல் திருமுறை (சம்பந்தர் அருளியது)
2. இரண்டாம் திருமுறை (சம்பந்தர் அருளியது)
3. மூன்றாம் திருமுறை (சம்பந்தர் அருளியது)
4. நான்காம் திருமுறை (அப்பர் அருளியது)
5. ஐந்தாம் திருமுறை (அப்பர் அருளியது)
6. ஆறாம் திருமுறை (அப்பர் அருளியது)
7. ஏழாம் திருமுறை (சுந்தரர் அருளியது)
8. எட்டாம் திருமுறை (திருவாசகம், மாணிக்கவாசகர் அருளியது)
9. ஒன்பதாம் திருமுறை (ஒன்பதின்மர் அருளியது)
10. பத்தாம் திருமுறை (திருமூலர் அருளிய திருமந்திரம்)
11. பதினொன்றாம் திருமுறை (சிவனடியார் இருபத்தேழ்வர் அருளியது)
12. பன்னிரண்டாம் திருமுறை (சேக்கிழார் அருளிய பெரியபுராணம்)

இந்தப் பன்னிரு திருமுறைகளின் சன்மார்க்க நெறிகளை, ஆகம விதிகளைப் பக்தி வழிமுறைகளைப் பின்பற்றுவோருக்கு மும்மலம் நீங்கி மங்கல வாழ்வும், இறைவன் திருவடி சேரும்

பெரும்பேறும் உண்டாகும் என்பது சைவ சமயத்தின் கருத்தாகும். திருத்தொண்டர் புராண சாரம், திருமுறை கண்ட புராணம், சேக்கிழார் புராணம் ஆகிய மூன்று நூல்களும் 14ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட சிவநெறி கொண்ட சிவனடியார்களைப் போற்றும் சைவத் தமிழ்நெறி நூல். இதனை இயற்றியவர் உமாபதி சிவாசாரியார். திருத்தொண்டர் புராண சாரம் என்பது 63 நாயன்மார்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு பாடல் என்ற முறையிலும், திருநாவுக்கரசர், திருஞான சம்பந்தருக்குக் கூடுதலாக இரண்டு பாடல்கள், பாயிரப் பாடலும் சேர்த்து 83 பாடல்களைக் கொண்டது.

திருமுறை கண்ட புராணம் எனும் நூல் தில்லை சபையில் காப்பு செய்யப்பட்ட திருமுறைகளை வெளிப்படுத்தி ஈசன் கட்டளைப்படி அவற்றிற்கு பண் வகுத்த வரலாற்றை இந்நூல் கூறுகிறது. சேக்கிழார் புராணம் எனும் நூல் சேக்கிழாரைப் பற்றி அறிய உதவும் வகையில் எழுதப்பட்டதாகும். அநபாயச் சோழன் என்ற அரசன் சமணத்தைத் தழுவி, சமண நூல்களின் மோகத்தில் திளைத்திருந்தான். அவனை மாற்றுவதற்காகச் சேக்கிழார் பெரியபுராணம் என்ற நூலைச் செய்தார் என்ற தகவலைச் சொல்லும் விதமாகச் சேக்கிழார் புராணம் இயற்றப்பட்டுள்ளது. மேலும் திருத்தொண்டர் திருநாமக்கோவை எனும் நூல் 18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சிவஞான முனிவர் என்பவரால் இயற்றப்பட்டது.

திருப்பதிக்கோவை எனும் நூல் சிவத்தொண்டு புரிந்த சிவனடியார்கள் வாழ்க்கை முறையும் அவர்களின் பெயர்களைப் போற்றியும் சொல்லப்பட்டதாகும். இதனை உமாபதி சிவச்சாரியர் இயற்றியிருக்கலாம் என்று அறியப்படுகிறது. திருப்பதி என்பது திருமலையை குறிப்பது அல்ல. பதியான சிவம் குடியிருக்கின்ற திருக்கோயில்கள் உள்ள இடங்களை எடுத்துரைக்கின்ற நூல் திருப்பதிக் கோவை ஆகும். இறைவனின் தொண்டர்களான சிவனடியார்களின் பெயர்களைப் போற்றியும் சிவநெறி வளர்க்கும் நூலாகச் சைவத் தமிழ்நெறி விளங்குகிறது. இவை மட்டுமன்றி சைவ சித்தாந்த நூல்களும் உண்டு. அவையும் சிவநெறியைப் போற்றுவதோடு சைவத்

தமிழ்நெறி போற்றி வளர்க்கும் பதினான்கு நூல்களைக் கீழ்வரும் வெண்பா மூலம் அறியலாம்.

உந்தி களிறோ டுயர்போதம் சித்தியார்
பிந்திருபா உண்மைப் பிரகாசம் வந்த அருள்
பண்புவினா போற்றிகொடி பாசமில் நெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்ப முற்று

என்ற வெண்பாவின் மூலம் சைவ சித்தாந்தம் பதினான்கும், சிவநெறி போற்றி வளர்த்துக் கொண்டிருக்கிறது. இந்து சமயத்தின் தத்துவப் பிரிவுகள் பெரும்பாலும் வேதங்களையும் அதன் இறுதி முடிவுகளாகச் சொல்லப்படும் உபநிடதங்களையும் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. தமிழ்மொழி சிறக்கவும் சிவநெறி வளரவும், மேற்சொன்ன வெண்பாவின் படி இயற்றப்பட்ட மெய்கண்ட சாத்திரங்களின் சித்தாந்தநெறிகளை இயற்றிய ஆசிரியர்களும், நூல்களும்.

1. திருவுந்தியார் - திருவியலூர் உய்யவந்த தேவநாயனா;
2. திருக்களிற்றுப்படியார் - திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார்
3. சிவஞானபோதம்-திருவெண்ணெய் நல்லூர் மெய்கண்டார்
4. சிவஞான சித்தியார்-திருவாவடுதுறை அருணந்தி சிவாசாரியார்
5. இருபா இருபது-திருவாவடுதுறை அருணந்தி சிவாசாரியார்
6. உண்மை விளக்கம்-திருவதிகை மனவாசகம் கடந்தார்
7. சிவப்பிரகாசம் - உமாபதி சிவாசாரியர்
8. திருவருட்பயன் - உமாபதி சிவாசாரியர்
9. வினாவெண்பா - உமாபதி சிவாசாரியர்
10. போற்றிப் பஃறொடை - உமாபதி சிவாசாரியர்
11. கொடிக்கவி - உமாபதி சிவாசாரியர்
12. நெஞ்சுவிடு தூது - உமாபதி சிவாசாரியர்
13. உண்மை நெறி விளக்கம் - உமாபதி சிவாசாரியர்
14. சங்கற்ப நிராகரணம் - உமாபதி சிவாசாரியர்

இந்த பதினான்கு நூல்களில் இயற்றப்பட்ட சித்தாந்த

நெறிகள் சிவநெறி வளர்ப்பதோடு மட்டுமல்லாமல், மும்மலப் பற்றுகள் நீக்கும் வழிமுறைகள், அறவழி நடக்கும் உபாயம். இறையருள் பெற்று பெரும்பேறு அடையும் நெறிகள், பிறப்பில்லா பெருவாழ்வு போன்றவையும் அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்மறை நெறிகளும், இதனைக் கற்போர்களிடம் அடைந்திட வழிவகுத்து வருகிறது.

முடிவுரை

தமிழ்மொழி காலத்தால் மிகவும் தொன்மையானது. தொன்மை காலத்தில் கல்மேல் எழுதப்பட்ட பிராமி என்ற தமிழ் எழுத்துருக்களைக் கண்டெடுத்துள்ளனர். அதன் பழமையும், அன்றைய காலகட்டத்தில் நடந்த நிகழ்வுகளையும் முன்னிறுத்தியும் வரலாற்றுப் பதிவுகளை இனிவருவோரும் அறிகின்றவாறு வழிவகை செய்துள்ளனர். சிவ வழிபாடு என்பது மொகஞ்சதாரோ, கராப்பாவில் கண்டெடுக்கப்பட்ட பொருட்கள் இதனை உறுதிபடுத்துகிறது. சிந்துச் சமவெளி நாகரிகம் இதற்கு எடுத்துக்காட்டாக அமைகிறது. மேலும் ஓலைச்சுவடிகள் மூலம் இயற்றியுள்ள தமிழும் தமிழ் சார்ந்த சிவநெறிகளும் சேர, சோழ பாண்டியர் எனும் மூவேந்தர்களால் போற்றிப் பாதுகாத்து வளர்க்கப்பட்டுள்ளது. அறவாழ்க்கை தொடரவும், அழியாப் புகழ் நிலைக்கவும் சைவர்களுக்குத் துணையாகின்ற வாழ்வியலும், மெய்யியலும் இதில் கற்பிக்கப்பட்டுள்ளது. மனித வாழ்க்கை ஆன்ம நிறைவோடு இன்புற்று வாழ வகை செய்துள்ளது. இதன் சிறப்பும் பெருமையும் அறிந்த சில மேலை நாடுகள் சைவநெறிக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் இன்று சைவத் திருக்கோயில்களை அவர்கள் தேசத்தில் கட்டியுள்ளனர். திருக்கோயில்களைப் புதிதாகக் கட்டியும் வருகின்றனர். நம்முடைய ஆகம விதிகளையும் கடைப்பிடித்து வழிபாடும் செய்கின்றனர். இது சைவத் தமிழ்நெறிக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும். அகிலத்தை ஆளும் சிவத்திற்கு மற்றொரு பெயர் அன்பு. அன்பு வழியில் அறநெறி சொன்னது நம் சைவத்தமிழ். இதுவே வெற்றிக்குக் காரணம் ஆகும்.

2. தமிழ் வளர்த்த சைவம்



க. அனிதா
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை
சிறி சாரதா மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
சேலம்

முன்னுரை

இன்பத் தமிழுக்கு எத்தனையோ சிறப்புகள் உண்டு. அவற்றுள் ஒன்று அனைத்துச் சமயங்களும் அனைத்துத் தமிழைப் பாடியது. உலகில் உள்ள இணையற்ற சமயங்கள் அனைத்தும் ஒன்று கூடிப் பல இலக்கியங்களைப் படைத்து மகிழ்ந்ததுநம் அருந்தமிழே ஆகும். தமிழ் இலக்கியத்தினை மீட்டுருவாக்கம் செய்து பார்க்கப்படின் சங்க இலக்கியத்தில் ஒரு பகுதியைத் தவிர மற்ற அனைத்தும் சமயம் தந்த செல்வங்களாகும்.

பாண்டியர்களின் அவையில் சங்கத் தலைவனாக வீற்றிருந்த சிவனில் தொடங்கி பல நாடுகளை வென்று ஒரு குடையின் கீழ் ஆட்சிபுரிந்த சோழர்கள் பின்பற்றியதும் தேவாரம், திருவாசகம் எனும் மாபெரும் பக்திப் பனுவல்களும், சைவத்தின் சொத்தாகக் கருதப்படும் பெரியபுராணம் என இன்றளவும் வழி நெடுங்க சைவத்திற்கும் தமிழுக்குமான வரலாறு விரிந்துகொண்டே செல்கிறது. சைவ சமயமானது தமிழுக்கு ஆற்றிய பங்கும் சைவமானது தழைத்தோங்க சைவ மடங்கள் ஆற்றிய பங்கும் குறித்த சிறு ஆய்வே நம் கட்டுரை.

சைவ நூல்கள்

சைவ சமயத்தவர் உச்சி மேற்கொண்டாடும் இலக்கியம் கந்தபுராணம். அதனால் தான் இவற்றைத் திருவருட்சுவையும், தீந்தமிழ்ச் சுவையும் நிறைந்த இலக்கியம் என்பார் சேதுப்பிள்ளை. முருகவேள் பிறப்பு, சூரன் வரம், தேவர்களைச் சிறையிடல், முருகன்-சூரன் போர், வள்ளி தெய்வானை இருவரையும் மணத்தல் போன்றவை நயம்பட அமைந்து சைவ சித்தாந்த கருத்துக்கள் நுட்பமுடன் விளக்கப்பட்டுள்ளது.

திருவுந்தியார், சிவஞான போதம், சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம், உண்மைநெறி விளக்கம் என சைவ சித்தாந்த கருத்துக்களை விளக்கும் நூல்கள் பல உள்ளன. இவையனைத்தும் பதி, பசு, பாசங்களைப் பற்றிப் பேசுபவை. இந்தச் சாத்திர நூல்கள் மொத்தம் பதினான்கு எனக் கூறுவர். சிவத்திற்கு மேல் தெய்வமில்லை என்பதே இவற்றின் நோக்கம்.

இலக்கியமானாலும் சமயமாக இருந்தாலும் மிகவும் போற்றுதலுக்குரியவர் காரைக்கால் அம்மையார். ஆண்டவனால் அம்மையே என்றழைக்கப்பட்டவர். பெரியபுராணத்தில் வரும் இவருடைய வரலாறு வியக்கத்தக்கன. இலக்கிய உலகில் இவர் செய்த புதுமை கட்டளைக் கலித்துறை எனும் புது விருத்தத்தைப் படைத்ததாகும். இந்தப் பாவகையானது பின்வந்த பக்திப் பனுவல்களுக்கு வளஞ்சேர்த்தது. இவரையடுத்து சைவசித்தாந்தக் கொள்கைகளை உணர்த்தும் பழைய தமிழ் ஆகம நூல் எனப்படும் திருமந்திரம் எழுதிய திருமூலர் ஆவர். சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கும் பிறக்கும் முன்பே சைவசமயத்தின் முதல் நூலாகத் திகழ்கிறது.

இவர் எழுதிய மூவாயிரம் பாடல்களும் கலிவிருத்தம் எனும் ஒரே பாவகையில் நடைபயில்கிறது. அறிவுரை, அறநெறி, ஐந்தெழுத்தின் அருமை, பக்திமார்க்கம், யோகமுறைகள், வழிபாடு, தவம், மருத்துவம், துறவு என இன்றளவும் பயன்படும் அனைத்துக் கருத்துகளும் அடங்கியுள்ளது. சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் சொற்கள், மிக நேர்த்தியான தொடர்கள், ஆழமான கருத்துக்கள், திட்பமும் நுட்பமும் அமைந்த ஒவ்வொரு பாடலும் ஒரு மந்திரம் போல் அமையப்பெற்றுள்ளது. இத்தகைய அரும்பெரும் மறையினைத் தமிழுக்குத் தந்த திருமூலருக்குத் திருவாடுதுறை திருக்கோயிலினுள் தனிக்கோயில் அமைக்கப்பட்டுள்ளது. சேக்கிழார் பெருமானால் இயற்றப்பெற்ற பெரியபுராணம் இலக்கிய உலகில் மிகப்பெரிய நூலாக மதிக்கப்படுகிறது. நாயன்மார் அறுபத்து மூவர் வரலாறு கூறுவது. பெரியபுராணத்தில் குறிக்கப்பெறும் அடியார் பெருமக்கள்

யாவரும் தமிழரே, பல ஊரினர், பல பிரிவினர், பல்வேறு தொழிலைச் செய்பவர். அதனால் இது சமய இலக்கியமாக மட்டும் திகழாது மக்கள் இலக்கியமாகவும் சிறந்தோங்குகிறது. நம் தமிழ் நாட்டின் இடைக்கால நிலை, நாட்டின் சிறப்பு, பழக்க வழக்கம், மரபு என அனைத்தும் கூறப்படுவதால் வரலாற்று இலக்கியமாகவும் விளங்குகிறது. மற்ற இலக்கியங்கள் போல் இல்லாமல் தனித் தமிழின் முதல் நூலாக இருக்கின்றது.

சைவ சமய பக்தி நெறியின் மூலம் சமுதாய ஒருமைப்பாட்டை ஒளிரச் செய்வது இக்காப்பியம். பிறப்பில் உயர்வு தாழ்வு கருதாமலும், ஆண்-பெண் பேதமின்றியும், கலப்பு மணம், காதல் மணம், விதவை மணம் போன்றவையும் பேசப்படுகின்றன. வாழ்வியலுக்கான அறங்களை நன்கு விளக்கிச் செல்கிறது. சைவம் செழிக்க-சிவநெறி தழைக்க-தமிழ் ஓங்கச் செய்யும் காப்பியம் பெரியபுராணமாகும். தேவாரத் திருமுறைகளில் உள்ள பொதுவான சைவக் கருத்துக்களை அனைவரும் புரியும் வண்ணம் எளிமையாகக் கூறப்படுகிறது. இதன் பெருமை கருதியே பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ எனச் சேக்கிழாரை மீனாட்சி சுந்தரம்பிள்ளை பாராட்டுகிறார். நாயன்மார் அறுபத்துமூவரைப் பற்றி பாடிய சேக்கிழார் திருவாசகம் அருளிய மாணிக்கவாசகரைப் பாடாமலிருப்பது இன்றளவும் தமிழ் இலக்கியவுலகில் ஆய்விற்குட்பட்டதாகவே உள்ளது.

சைவ மடங்கள்

மடங்கள் வளர்த்த தமிழ் என்ற தனி நூல் அமையும் அளவிற்கு அருந்தமிழை வளர்த்துள்ளன சைவ மடங்கள். சமயப்பணியினை ஆற்றுவதோடு மற்றும் நில்லாமல் செந்தமிழ் இலக்கண, இலக்கியங்களைக் காப்பதிலும் பரப்புவதிலும் பெரிதும் துணைபுரிகின்றன. பழைய நூல்களுக்கு உரை காணவும், புது நூல்கள் தோன்றவும் காரணமாக உள்ளன. இவற்றுள் திருவாடுதுறை ஆதீனம், திருமபுர ஆதீனம், திருப்பனந்தாள் காசிமடம் போன்றவை குறிப்பிடத்தக்கது.

திருவாடுதுறை ஆதீனத்தை நிறுவியர் நமச்சிவாய மூர்த்திகள. இதன் தலைவர்களும் இங்கு தங்கியிருந்த

புலவர்களும் பல நூல்களை எழுதியுள்ளனர். ஆண்டுதோறும் திருமந்திர மாநாட்டை நடத்தியும் திருமந்திரம் விளக்க உரைநூல் வெளியிட்டும் வருகின்றனர். திருவெண்ணெய் நல்லூரில் சிவஞானபோதம் மாநாட்டை நடத்துகிறது. அதற்கு அடுத்தபடியாகக் குருஞான சம்பந்த தேசிகர் உருவாக்கிய தருமபுரமடம் தேவாரத் திருமுறைகளுக்குப் பேரூரைகள் எழுதி வெளியிட்டுள்ளது. இதுவரை வந்துள்ள அனைத்து உரைகளையும் இணைத்து திருக்குறள் உரைவளத்தை வெளியிட்டுள்ளது. ஆண்டுதோறும் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாட்டினை நடத்திவருகிறது. ஞானசம்பந்தம் எனும் திங்கள் ஏட்டினையும் நடத்துகிறது. தமிழ்க் கல்லூரியையும் சித்தாந்தக் கல்லூரியையும் இயக்கி வருகிறது. திருப்பனந்தாள் காசி மடம் தில்லைநாயக சுவாமிகளால் நிறுவப்பட்டது. குமரகுருபரின் அனைத்து பிரபந்தங்களும் பன்னிருத் திருமுறைகள், கந்தபுராணம், திருவிளையாடல் புராணம், பெரியபுராணம் என அனைத்தும் பதிப்பித்துப் பைந்தமிழுக்குப் பெரும் சேவை செய்து வருகிறது. சைவநூல்கள் பலவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து உள்ளது. மேலும் செந்தமிழ்க் கல்லூரி ஒன்றையும் நடத்தி வருகிறது. திருக்கோவில்கள் தோறும் திருமுறைகளைச் சலவைக் கற்களில் செதுக்கிப் பதித்துள்ளது. குமரகுருபரன் என்கிற திங்கள் ஏட்டினை நடத்திப் பணிபுரிந்து வருகிறது.

முடிவுரை

நாளும் இன்னிசையால் தமிழ்ப்பரப்பும் ஞானசம்பந்தன் என்று கூறுவார் சுந்தரர். இவரைப் போன்றே அனைத்து நாயன்மார்களும் சிவநெறியின் மூலம் தமிழன்னைக்குக் கணக்கிலடங்காத பல பக்தி பனுவல்களைத் தந்துள்ளனர். சமயக்கோட்பாடுகள் எத்தனையோ இருந்த போதிலும் அன்பே சிவமென்று அழைப்பது இச்சமயத்தின் சிறப்பம்சமாகும். தமிழர்களின் பண்பாடுகளிலும் வாழ்வியல் நெறிகளிலும் வரலாறு தோறும் நீண்ட பயணத்தைக் கொண்டிருப்பது சைவமாகும். மேற்கூறிய அனைத்துப் புலவர்கள் எழுதிய நூல்களும் மடங்கள் ஆற்றிய பங்கும் தமிழுக்கு மிகப்பெரிய வளம்சேர்த்து உள்ளது.

3. சைவ சமய வரலாறும் சைவத் தமிழும்

வை. நாராயணசாமி
பன்னிரு திருமுறை மன்றம்
புதுச்சேரி

சமயமும் மதமும்

சைவ சமயம் மிகவும் தொன்மை வாய்ந்தது. உலகின் பல பகுதிகளிலும் பரவி இன்றும் நிலைத்து நிற்பது. அதன் வரலாற்றினைச் சிறிது காண்போம்.

மதம் என்னும் சொல் கொள்கை என்னும் பொருளில் வழங்கி வருகிறது. மணிமேகலை என்னும் காப்பியத்தில் சமயம் என்ற சொல் வருகிறது. தொல்காப்பியம் என்னும் பழந்தமிழ் நூலில் மதம், சமயம் என்ற இரு சொற்களுமே இடம்பெறவில்லை. உலகில் நிலவிவரும் பல்வேறு மதங்களும் குறிப்பிட்ட ஒரு காலத்தில் தோற்றுவிக்கப்பட்டன என்று வரலாற்று நூல்களால் அறிகின்றோம். மிகப் பழமையானவை எனக் கூறப்படும் சில மதங்கள் தோன்றிய காலம் கீழ்வருமாறு.

யூதமதம் - கி.மு. 1500-1200; சிண்டோமதம் - கி.மு.660; சமணம் - கி.மு.599; பௌத்தம்-கி.மு.560; கன்பூசியசு - கி.மு.551; கிருத்தவம்-கி.பி.4; இசுலாமியம்-கி.பி.570, சீக்கியம்-கி.பி. 1469 மேலே குறிப்பிட்டுள்ள மதங்கள் ஒரு கொள்கையைக் கொண்டு வளர்ந்து வந்துள்ளது. ஆனால் சைவ சமயம் எந்த ஆண்டு தோற்றுவிக்கப்பெற்றது என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை. இது ஒரு வாழ்க்கை நெறி என்று தான் நாம் கொள்ளலாம்.

சமய வாதிகள் தத்தம் மதங்களே அமைவதாக அரற்றி மலைந்தனர் என்று போற்றித் திருவகலில் சமயம், மதம் என்ற இரு சொற்களும் இடம் பெற்றுள்ளன. இதிலிருந்து மதம் என்ற சொல் கொள்கை என்ற பொருளிலும், சமயம் என்ற சொல் கொள்கை மட்டுமின்றி அதற்கும் மேலான ஒரு நெறிப்பாட்டைக் குறிக்கும் சிறப்புடையது என்பதும் புலப்படும்.

சைவத்தின் புண்ணியக் கண்கள்

வேத காலத்திற்கு முன்பே தோன்றிச் செழித்திருந்த சைவமானது பௌத்தமும், சமணமும் தலையெடுத்த பின்னர், குறுகிய காலத்திலேயே செல்வாக்கிழந்து விட்டதைக் கூர்ந்து நோக்கினால் தான் திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் செய்த சைவப் பணிகள் எவ்வளவு உன்னதமானவை என்பதை உணர முடியும். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோரால் தான் கி.பி. ஏழாம் நூற்றாண்டுக்குப் பின் சைவமும், கி.பி. எட்டாம் நூற்றாண்டிலிருந்து வைணவமும் செழிக்க ஆரம்பித்தன என்பதனை யாரும் மறுக்க இயலாது.

திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய இந்நால்வரும் தலைசிறந்த பதிகங்களைப் பாடி, ஊர்தோறும் சென்று மக்களிடம் சிவபெருமானின் பெருமைகளைக் கூறி, சிவநெறியில் மக்களெல்லாம் வாழ வழிவகுத்துத் தந்தனர். தேவாரத் திருப்பதிகங்கள் பலவும் நம் தமிழக அரசர்களின் காலமான கி.பி. எட்டு மற்றும் ஒன்பதாம் நூற்றாண்டுகளில் தொகுக்கப் பெற்றுத் திருக்கோயில்களில் ஆங்காங்கே ஓதப்பெற்று வந்தன என அறிகின்றோம்.

தம் ஒன்பதாம் பதிகம்தோறும் திருமாலைக் குறைத்து மதிப்பிடும் சம்பந்தர் தேவாரமும், அறியார் சமணர் அயர்த்தார் பௌத்தர் சிறியார் சிவப்பட்டார். மாதவனை ஏத்தாதார் ஈனவரே என்னும் திருமழிசைப் பிரானின் பாசுரமும், சமயக் கொடுமைகள் பற்றிய பல்லவர் ஆட்சியின் முற்பகுதியில் சமயப் போராட்டத்தை உறுதிப் படுத்துகின்றன. சமயப் போரில் சைவமும், வைணவமும் வெற்றி பெறவே, பௌத்தமும் சமணமும் ஒடுங்கின என்பதனையும் இதனால் அறிகிறோம்.

அரசாங்க ஆதரவை மிகுதியாகத் தமிழ் பெறவில்லை என்ற போதினும், சைவ நாயன்மார்களும், வைணவ ஆழ்வார்களும் பண்சுமந்த பாடல்களைப் பாடிப் பக்தி இலக்கியத்தை உருவாக்கினார். இத்தகைய உள்ளமுருக்கும் பக்திப் பனுவல்களைப் பிறமொழிகளில் காணுதல் அரிது என்பர்.

சைவ சமயக் குரவர்களாகிய திருநாவுக்கரசரும், திருஞான சம்பந்தரும் வாழ்ந்த காலமாகிய கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த அப்பூதி அடிகள், முருகநாயனார், சிறுத்தொண்டர், திருநீலநக்கர், குலச்சிறையார், மங்கையர்க்கரசியார், நெடுமாறர், திருநீலகண்ட யாழ்ப்பாணர் முதலியோரும், பூசலாரும், சுந்தரர் வாழ்ந்த எட்டாம் நூற்றாண்டில் இருந்த கோட்புலிநாயனார், நரசிங்க முனையரையர், சோமாசிமாறர், கலிக்காமர், சடையார், இசைஞானியார் முதலிய நாயன்மார்களும் சைவத்தைப் பேணிக்காத்ததும் - வைணவ ஆழ்வார்களாகிய பொய்கையாழ்வார், பேயாழ்வார், பூதத்தாழ்வார், திருமழிசை ஆழ்வார், நம்மாழ்வார், மதுரகவி ஆழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கையாழ்வார், தொண்டரடிப் பொடி ஆழ்வார் முதலியோர் வைணவத்தைப் போற்றி பாடுவதை விடுத்து, மாதேவனை பாட்டுடைத் தலைவனாக் கொண்ட பக்தி இலக்கியங்கள் பண்ணொடு பாடுவதற்கு ஏற்றவையாக இயற்றப்பட்டவை இக்காலத்தில் தான்.

பல்லவர் காலத்திற்குப் பிறகு, தமிழிலக்கிய வரலாற்றிலே சோழர்காலம் *(கி.பி.850-1350)* ஒரு தனிச்சிறப்புடைய காலமாகும். சோழர்கால இலக்கியம், சமய நோக்கு, மொழி நோக்கு, இலக்கிய நோக்கு ஆகிய மூவகை நோக்கினைக் கொண்டது. தோத்திரப் பாடல்களின் தொகுப்பும், முறையான சாத்திரநூல் தோற்றமும் சைவ, வைணவ, சமண பௌத்தக் கொள்கைகளை வற்புறுத்த எழுந்த காப்பியங்களும், இறைவன் இயற்றிய அற்புதங்களைத் தொகுத்துரைக்கும் புராணங்களும், தமிழும் வடமொழியும் கலந்து எழுதப்பட்ட மணிப்பிரவாளமும் சமய நோக்கில் எழுந்தவையே. ஆழ்வார்கள் அருளிச்செய்த பாடல்களை எல்லாம் நாலாயிர திவ்வியப் பிரபந்தமாக நாதமுனிகள் தொகுத்தது இக்காலத்தில் தான். சோழர்காலம் காப்பியங்களையும், சிறு காப்பியங்களையும் கண்டது. இக்காலத்தில் எழுந்த பேரிலக்கியங்கள் எல்லாம் சமயம் சார்ந்தவையே. இக்காப்பியங்களில் பெரும்பாலானவை பிறமொழிக் கதைகளையே தழுவல்களாகக் கொண்டன.

பெருங்காப்பியங்களில் சிலம்பும் மேகலையும் மட்டுமே தமிழ்க் கதைகளைக் கொண்டவை.

முருகக்கடவுள் சூரபதுமன் மேல்பெற்ற வெற்றியைச் சிறப்பித்துக் கச்சியப்ப சிவசாரியார் எழுதிய கந்தபுராணமும், சிவபெருமானின் திருவிளையாடல்களை விளக்கும் பெரும்பற்றப்புலியூர் நம்பியின் திருவிளையாடற் புராணமும், தொண்டர் வரலாறுகளைத் தொகுத்துச் சேக்கிழார் இயற்றிய சைவப் பெரும்காப்பியமாகிய பெரியபுராணமும், இராமவதாரத்தின் சிறப்பைக் கூறும் வைணவப் பெருங்காப்பியமாகிய கம்பர் எழுதிய இராமாயணமும் காப்பியங்கள் வரிசையில் குறிப்பிடத்தக்கவை.

நம்பியாண்டார் நம்பி அவர்கள், ஞானசம்பந்தர் பாடி அருளியவற்றை முதலில் மூன்று திருமுறையாகவும், திருநாவுக்கரசரின் திருமுறைகளை அடுத்து மூன்று திருமுறைகளாகவும், சுந்தரர் அருளியவற்றை ஏழாம் திருமுறையாகவும், மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் திருக்கோவையாரை எட்டாம் திருமுறையாகவும், திருமாளிகைத் தேவர் முதல் சேந்தனார் வரை ஒன்பது அருளாளர்கள் இயற்றியவைகளை ஒன்பதாம் திருமுறையாகவும் திருமூலர் எழுதியருளிய திருமந்திரத்தைப் பத்தாம் திருமுறையாகவும், அடுத்து திருவாலவுடையார், காரைக்காலம்மையார் முதற்கொண்டு தன்னையும் சேர்த்து பதினோர் பேர் எழுதி யருளிவைகளை நம்பியாண்டார் நம்பி பதினோராவது திருமுறையாகவும் தொகுத்தருளினார். அநபாயன் என்று அழைக்கப் பெற்ற இரண்டாம் குலோத்துங்கனிடம் அமைச்சராகப் பணியாற்றிய சேக்கிழார் *(1113-1173)* அம்மன்னனின் வேண்டுகோளின்படி சுந்தரர் அருளியத் திருத்தொண்ர் தொகையை அடிப்படையாகக் கொண்டு, திருத்தொண்டர் புராணத்தைப் பாடியருளினார். இத் திருத்தொண்டர்புராணம் பன்னிரெண்டாம் திருமுறையாக இடம்பெற்றுள்ளது.

திருமுறை என்றால் என்ன? என்று சிதறி சிந்திப்போம்.

திரு என்றால் சிவனைக் குறிப்பதாகவும் முறை என்றால் நெறிப்படுத்தி அல்லது வழிபடுத்திக் கூறுவது என்ற பொருளில் இவை திருமுறை என்று பெயர்பெற்றது என்று அறிஞர் பலரும் கூறுவர். திருமுறை என்னும் சொல், மூன்றாம் குலோத்துங்கன் காலத்துக் கல்வெட்டுகளில் தான் முதன் முதலில் தோன்றியது என்று ஆராய்ச்சியாளர் கூறுவர். இக்காலம் கி.பி.1185, அதற்கு முன்பு, மூவர் முதலிகள் அருளியவை திருப்பதிகம் அல்லது திருப்பதிகம் என்றே குறிக்கப்பட்டு வந்துள்ளன.

இன்றும் திருமுறை சைவர்களின் வேதமாக இருந்துவருகிறது. திருமுறையின் நுண்புலத்தினை இறையருள் பெற்றவர்களே முழுமையாக உணரமுடியும் . இறைத்தன்மையில் பொதிந்துள்ள உண்மைகளை நம்மைப்போன்ற சாதாரண ஆன்மாக்களும் அறியவேண்டும் என்பதனால் தான், ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் முதலியவர்களை இப்பூவுலகில் அவதரிக்கச் செய்து, அவர்கள் வாயலாக அவற்றை எழுதுமறைகளாக இறைவன் அருளிச் செய்துள்ளான் என்பதனை நாம் ஆணித்தரமாகக் கூறலாம். ஆதலின் திருமுறைப் பாடல்கள் அனைத்தும் இறைவன் வாக்கே எனவும் அவைதான் நமக்கு அருள்வாக்கு எனவும் நாம் உணரலாம். இதனை எனதுரை தனதுரையாக என்று கூறும் ஞானசம்பந்தரின் வாக்கும் மெய்ப்படுத்துகின்றது.

மொழியாலும், சாதியாலும், அரசியலாலும் தமிழர்கள், அவர்கள் பிறந்து வளர்ந்த தமிழ்நாட்டிலேயே அந்நியப்படுத்தப்பட்டு இருந்தார்கள். அந்நிய அரசியல், அந்நியமொழி, அந்நிய மதம், அந்நியக் கடவுள் என நான்கு முனைக் கிடுக்கிக்குள் அக்காலத் தமிழ் உலகமும், தமிழர் உலகமும், தமிழ்ப்புலவர் உலகமும் சிறைப்படுத்தப் பெற்றிருந்தன. இந்நிலையில் தான் அருணகிரிநாதர் தனது திருப்புகழில்,

“இத்தரணி மீதிற் பிறவாதே
எத்தரொடு கூடிக் கலவாதே
முத்தமிழை ஓதித் தளராதே

முத்தியடி யேனுக் கருள்வாயே'' (பா.533)

என்று முருகனைத் தேர்ந்தெடுத்து மக்களை எழுச்சி பெறச் செய்து சைவச் சமயத்தினைத் தூக்கி நிறுத்தினார். இந்து சமயத்தினரால் நாயக்கர் மன்னர்களின் துணைகொண்டு 14, 15ஆம் நூற்றாண்டுகளில் மேலோங்க எடுத்துப் பேசப்பெற்ற தெய்வங்கள் சிவனும் விட்ணுவும் ஆவர். நாயக்கர் கால மன்னர்களால் இரு கடவுளருக்கும் முதன்மை கொடுக்கப்பெற்றது. கோயில்கள் கட்டப்பெற்றன. மானியங்கள் வழங்கப் பெற்றன. திருவிழாக்கள் எடுக்கப்பெற்றன. இசுலாமிய அரசியலுக்கு எதிராக மட்டுமல்ல, மதத்திற்கும் எதிராக நாயக்க மன்னர்கள் இந்து சமயத்தைத் தூக்கிப்பிடிக்க வேண்டியிருந்தது. சிவன், விட்ணு என் இருபெருங்கடவுளர்களில் நாயக்க ம்ன்னர்களால் விட்ணு முனைப்பாகப் போற்றப்பெற்றார். முருகனைத் தலைமுறை தலைமுறையாகத் தமிழ்க் கடவுளாகக் கொண்டிருந்த தமிழருக்கு முருகனுக்கு அடுத்த நிலையிலே சிவனும், சிவனுக்கு அடுத்த நிலையிலேயே விட்ணுவும் இருந்தனர். அயல் கடவுள் அயல் மத அழுத்தம் தமக்குரிய பூர்வீகக் கடவுளை நோக்கித் தமிழர்களைத் திரும்பச் செய்தது. இதன் வெளிப்பாடே முருகன் மேல் அருணகிரி பாடிய திருப்புகழ்.

தமிழர் சமய வரலாற்றிலும், இலக்கிய வரலாற்றிலும் வேறு எந்தக் காலத்தையும் விட அருணகிரி வாழ்ந்த நாயக்கர் காலம் சைவ சித்தாந்த சாத்திரங்கள் படைக்கப் பெறும் காலமாக இருந்தது உணரத்தக்கது. அருள்நந்திச் சிவாச்சாரியார், மெய்கண்டார், உமாபதி சிவாச்சாரியார், மஞ்சு செட்டியார் என்ற அருள் நமச்சிவாயர், சீர்காழி சிற்றம்பல நாடிகள் முதலான பலர் சைவ சித்தாந்த சாத்திரங்களைப் பெருக எழுதினர். இன்னும் சொல்லப்போனால் சைவ சமயம் என்பது இந்து சமயத்திலிருந்து வேறுபட்ட தத்துவம் என உருக்கொடுக்கும் முயற்சி என்னும் இதனை அழைக்கலாம் வீர சைவ எழுச்சியும் சிவப்பிரகாச சுவாமிகள் படைப்பும் இச்சூழலில் வைத்து எண்ணத்தக்கன. எனவே அயல்மொழி, சமய, தத்துவ, அரசியல் ஆதிக்கத்தின் தீவிரம், தன்மொழி, சமயம், தத்துவம் ஆகியவற்றின் மேல்

மிகுநேயம் கொள்ளச் செய்தது. அருணகிரி முருகனை ஓர் இடத்தில் தண்டமிழின் மிகுநேய முருகேசா என்று அழைப்பார்.

இதேகாலச் சூழலில் வாழ்ந்த குமரகுருபரர் முருகனை மையமாக வைத்து முத்துக்குமர சுவாமி பிள்ளைத்தமிழ் பாடியதும், வீரசைவத்தைச் சார்ந்த சிவப்பிரகாசர் திருச்செந்தூர் முருகனைப் பாடியதும் ஒத்து எண்ணத்தக்கன. ஆக முருகன் என்னும் குறியீடு வழியாகத் தெய்வத் தேசியமும், தமிழ் மொழித் தேசியமும், தமிழ் இனத்தேசியமும் பேசப்பெற்றன. பாராட்டப் பெற்றன என்று கருதுதலே தகும். இன்று தமிழ்மொழி என்றால் என்ன, சைவ சமயம் என்றால் என்ன என்பதனை உலகின் பல நாடுகளிலும் வாழும் வேற்றுமொழி, மற்றும் மதம் இவைகளைப் பின்பற்றும் மக்களும் அறிந்துகொண்டு, சைவ சமயத்தை மேலும் நேரில் அறிந்துகொள்ள இந்திய நாட்டிற்கும், குறிப்பாகத் தமிழ்நாட்டிற்கும் வந்து, தங்களின் வாழ்க்கையிலும் கடைப்பிடிப்பதனை அறியும் பொழுது, தமிழர் நாம் ஒவ்வொருவரும் பெருமை கொள்ளலாம்.

4. சங்க காலத்தில் சைவ சமயம்

க.செல்லம்மாள்
முனைவர்பட்ட ஆய்வாளர்
இராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி
திருநெல்வேலி

முன்னுரை

சிந்துவெளி நாகரிகம் உலகிற்குத் தெரிந்தது முதல் சைவ சமயத்தின் பழமையும் கால எல்லை கடந்து நிற்கின்றது. இந்தியாவில் ஆரியர் வருகைக்கு முன் இருந்தவர் முண்டர், கோலர் என்ற பண்டை இனத்தவரும் திராவிடருமே ஆவர். இவ்விரு இனத்தவருள் லிங்க வழிபாடு எவருக்கு முதலில் உரியதாக இருந்தபோதிலும், சிந்துவெளி நாகரிக காலத்தில் திராவிட மக்களுக்கும் உரியதாக இருந்தது. லிங்க வணக்கம் பல நாடுகில் பரவி இருந்தது என்பதைப் புதைபொருள் ஆராய்ச்சியாளர் பல சான்றுகளுடன் விளக்கி எழுதியுள்ளனர். அவ்விவரங்களை அறிய, சைவ சமயம் மிக்க பழமையுடையது சங்ககாலத்தில் சைவ சமயத்தினைப் பற்றி எடுத்துரைப்பது இக்கட்டுரையின் நோக்கம்.

தொல்காப்பியத்தில் சைவ சமயம்

பழைய இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நிலப்பிரிவுகள் கூறப்பட்டுள்ளன. குறிஞ்சி என்பது மலையும், மலை சார்ந்த இடமுமாகும். காடும் காடு சூழ்ந்த இடம் முல்லையாகும். பயனுள்ள விளைச்சல் அற்ற இடம் பாலை எனப்படும். மருதம் வயலும் வயல் சார்ந்த இடம் நெய்தல் என்பது கடலும் கடல் சார்ந்த இடமாகும். ஒவ்வொரு நில மக்களும் ஒரு தெய்வத்தை வணங்கி வந்தனர் என்று தொல்காப்பியம் கூறுகின்றது. குறிஞ்சி நிலத் தெய்வமாக முருகனை வழிபட்டனர். முல்லை நில கடவுளாகக் கண்ணனை வழிபட்டனர். பாலை நிலத் தேவதையாகக் கொற்றவையை வழிபட்டனர். இந்திரன் மருதநில மக்கள் வணக்கத்துக்கு

உரியவரானார். கடல் அரசனனாக வருணன் நெய்தல் நில மக்களால் வழிப்படப்பட்டான். இவ்வாறு ஒவ்வொரு நிலத்திற்கும் அமைந்த தெய்வத்தைத் தவிரக் கடவுள் வழிபடப்பட்டு வந்ததாகத் தொல்காப்பியம் கூறுகின்றது.

தொகை நூல்களில் சைவசமயம்

எட்டுத்தொகை நூல்களிலும், பத்துப்பாட்டிலும் சிவனைப் பற்றிய குறிப்புகள் மிகப்பலவாகக் காணப்படுகின்றன. முடிமேல் பிறைச் சந்திரனைச் சூடியவன்; முடி மீது மேகத்தையும், கங்கையையும் தாங்கியவன்; வேதத்தை வாயில் உடையவன்; புலித்தோல் ஆடையன்; உமாதேவியைப் பாதியாகக் கொண்டவன்; அரிய தவம் செய்பவன்; உயிர்கட்குப் பாதுகாவலன்; முப்புரங்களை எரித்தவன்; எரித்த அச்சாம்பலைப் பூசிக் கொண்டவன்; புலியைக் கொன்று அதன் தோலை உடுத்திக் கொன்றை மாலை தோளில் அசையப் பிரமன் தலையொன்றை ஏந்தி ஆடும் கூத்து கபாலம் எனப்படும். அவன் உமையம்மையுடன் இமயமலை மீதுள்ளான். இவை போன்ற குறிப்புகள் தொகைநூல்களில் காணப்படுகின்றன.

சிலப்பதிகாரம், மணிமேகலையில் சைவசமயம்

சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இரண்டு காவியங்களிலும் பத்துப்பாட்டுள் ஒன்றான மதுரைக் காஞ்சியிலும் தெய்வங்கள் வரிசையில் சிவபிரான் முதலிடம் பெற்றுள்ளான்.

> ''நுதல் விழி நாட்டத்து இறையோன் முதலாப்
> பதிவாழ் சதுக்கப்பூத மீறாக''

என்று மணிமேகலையிலும்,

> ''பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
> அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்''

என்று சிலப்பதிகாரத்திலும் சைவத்தைப் பற்றி கூறுகிறது. இந்த நூல்களில் சிவம் என்னும் சொல் இல்லை. ஆயின், சைவம் என்னும் சொல் காணப்படுகிறது. சேரன் செங்குட்டுவன்

சிவனருளால் பிறந்தவன், சிவபூசை செய்தவன் என்று சிலப்பதிகாரம் செப்புகிறது.

மணிமேகலை ஒவ்வொரு மதவாதியிடம் சென்று அவர்தம் மதக்கொள்கையையும் கடவுள் தன்மையையும் கேட்டறிந்தாள். அவள் சைவவாதியிடம் சென்று, உன் கடவுள் எத்தகையவர்? என்று கேட்டாள். அதற்குச் சைவவாதி, என் இறைவன் இருசுடர் இயமன் ஐம்பூதம் என்ற எட்டினையும் உயிராகவும் உடம்பாகவும் உடையவன்; உலகங்களையும் உயிர்களையும்; படைத்து விளையாடுபவன்; அவற்றை அழித்து உயிர்களின் களைப்பைப் போக்குபவன்; தன்னைத் தவிரப் பெரியோரின் ஒருவனைப் பெற்றிராதவன். அவன் ஈசானன் என்று பதில் கூறினான்.

முருக வழிபாடு

குறிஞ்சி நிலத்துக்கே உரிய முருகன் வடவர் கூட்டுறவால் சுப்பிரமணியன் என்றும் கார்த்திகேயன் என்றும் சிவகுமாரன் என்றும் பெயர் பெற்றான். அவன் கார்த்திகைப் பெண்கள் அறுவர்க்கும் பிறந்தவன் என்று பரிபாடல் கூறுகிறது. அவன் கொற்றவை மகன் உமையின் மகன் என்று திருமுருகாற்றுப்படை கூறுகிறது. இப்பாடலில் திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருஆவினன்குடி, திருவேரகம், பழமுதிர்சோலை, மலைகள் என்னும் ஆறிடங்கள் முருகனுக்கு உகந்த இடங்களாகக் கூறப்பட்டுள்ளன. முருக வழிபாட்டைப் பற்றிய பழந்தமிழ் செய்திகளும் நாற்பத்தெட்டு வயதுவரை பிரமசரிய விரதம் காக்கும் அந்தணரது வழிபாட்டுச் செய்திகளும் திருமுருகாற்றுப் படையுள் கூறப்பட்டுள்ளன.

பரிபாடலில் முருகனைப் பற்றி எட்டுப் பாடல்கள் இருக்கின்றன. முருகன் சூபத்மனை வென்றவன்; ஆறு தலைகளும் பன்னிரண்டு கைகளையும் உடையவன்; தேவசேனாபதி, மும்மூர்த்திகட்கு முதல்வன்; வள்ளி தெய்வானையர்க்குக் கணவன்; திருப்பரங்குன்றம் மலை மீது முருகன் கோயில் இருக்கின்றது. அக்கோயிலில் இருந்த மண் சுவர்களிலும், மேற்கூரையிலும் பல நிகழ்ச்சிகளைக் குறிக்கும்

ஓவியங்கள் குறிப்பிடத்தக்கவை. பாண்டியன் முதல் சாதாரண மக்கள் வரை எல்லோரும் திருப்பரங்குன்றம் சென்று வழிபட்டனர். கோயில்களில் ஆடல், பாடல்கள் நிகழ்ந்தன. பண் அமைத்து பாடல்களைப் பாடி மக்கள் முருகனை வழிபட்டனர். இவைப் போன்ற செய்திகள் பரிபாடலில் காணப்படுகின்றன.

சைவமும், வைணவமும்

சிவனுக்கும், முருகனுக்கும் கோயில்கள் அமைந்தவாறே, திருமாலுக்கும் தமிழகத்தில் கோயில்கள் இருந்தன. முல்லை நிலக் கடவுளான திருமால் நாளடைவில் நகரங்களிலும் கோயில் கொண்டான். சங்ககாலத்தில் திருமால், பலராமன், சிவன், முருகன் இந்நால்வர் வணக்கமும் சிறப்புற்றிருந்தன. பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனை நக்கீரர் பாடிய ஒரு செய்யுளில் அவனை இந்நால்வருடனும் ஒப்பிட்டுப் பாடியுள்ளார்.

பரிபாடலில் திருமாலைப் பாடிய கடுவன் இள எயினனார் என்ற புலவரே முருகனையும் வாயார வாழ்த்தியுள்ளார். கேசவன், அச்சுதன் என்ற வைணவப் பெயர்களைக் கொண்ட புலவர் இருவர் முருகனைப் பாடியுள்ளனர். பாரதம் பாடிய பெருந்தேவனார் என்ற புலவர் அகநானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு என்ற மூன்றிலும் கடவுள் வாழ்த்தாகச் சிவனையும் குறுந்தொகையில் முருகனையும் நற்றிணையில் திருமாலையும் பாடியுள்ளார்.

கோவில்கள்

சிவன், முருகன், திருமால், பலராமன், கொற்றவை முதலிய தெய்வங்கட்குக் காவிரிப்பூம்பட்டினம், மதுரை, வஞ்சி போன்ற பெரிய நகரங்களில் கோயில்கள் இருந்தன. நீலநாகம் நல்கிய கலிங்கத்தை ஆலமரத்தடியில் இருந்த சிறுவனுக்கு ஆய்வேள் அளித்தான் என்று புறநானூறு கூறுவதால் ஆய்நாட்டில் பொதிகை மலைப்பகுதியில் சிவன் கோயில் இருந்தமை தெளிவு. தொண்டை நாட்டுக் குளங்கள் சிலவற்றில் தாமரை மலர்கள் பூத்திருக்கும் அவைத் தெய்வங்கட்கு உரியவை, என வரும் பெரும்பாணாற்றுப் படைக் குறிப்பினால்,

அக்குளங்களை அடுத்த ஊர்களில் கோயில்கள் இருந்தமையும் கடவுளர் உருவங்கள் இருந்தமையும் பெறப்படும். வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள செங்கம், சங்க காலத்தில் செங்கண்மா எனப்பட்டது. அதனை ஆண்ட நன்னனது நவிரம் என்ற மலையில் காரியுண்டிக் கடவுள் என்பட்ட சிவபிரான் கோயில் இருந்தது. பண்டைக்காலக் கோயில்களில், கோயில், நியமம், நகரம், கோட்டம் எனப் பெயர் பெற்றன; சமணர், பௌத்தர் பள்ளிகள் இருந்தன.

இலிங்க வழிபாடு

இலிங்க வழிபாடு வேதகாலத்துக்கு முற்பட்ட சிந்துவெளி மக்களிடமிருந்தது என்பது முன்னரே கூறப்பட்டது. வேத காலத்தில் இந்திய பழங்குடி மக்களிடத்தில் அவ்வழிபாடு இருந்தது; இதிகாச காலத்தில் எல்லாரிடமும் பரவியது. இலிங்கம் சிவபெருமானை மகாதேவனைக் குறிக்கும் மூர்த்தமாகக் கருதப்பட்டது. குடிமல்லம், இளத்தூர், குருமியான் மலை என்னும் இடங்களிலுள்ள லிங்கங்கள் கி.மு. இரண்டாம் நூற்றாண்டு என்று ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர். கல் லிங்கத்தைப் போலப் பலர் கூடும் பொது இடங்களில் மரத்தூண்கள் வைக்கப்பட்டிருந்தன. அவைக் கந்து எனப்பட்டன. அவற்றில் தெய்வ உருவங்கள் எழுதப்பட்டிருந்தன. மக்கள் அவற்றின் மீது மலர்களைச் சூடினர். அவற்றின் அண்மையில் அணையாவிளக்கு ஏற்றி வைத்தனர். சிவபிரான் ஆலமர்ச் செல்வன் என்று பழைய நூல்களில் குறிப்பிட்டதல்ல தொன்முகக் கடவுள் வடிவம் சங்க காலத்திலேயே இருந்தது என்று கூறலாம்.

விழாக்கள்

கார்த்திகை விழா, கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நாளன்று இரவில் தெருக்களில் விளக்குகள் வைத்து அவற்றுக்கு மாலைகள் இட்டு மக்கள் விழா கொண்டாடினர் என்பது அகநானூற்றுப் பாடல்களில் தெரிகின்றது. திரு ஆதிரை விழா இது மார்கழி விழா என்றும் பெயர் பெறும். சிவபெருமான் ஆதிரை முதல்வன் எனப்பட்டான். இவ்விழாச் சிவத்

தொடர்பானது, தைவிழா தைந்நீராடல், தத்தம் விருப்பக் கடவுளரை வணங்குதல், இதுவே பிற்கால மார்கழி நோன்பு என்று அறிஞர் கூறுவர். முருக விழா முருகன் கோயில்களில் கொண்டாடப்பட்ட பெருவிழா இவை போன்ற பல செய்திகளைக் காண்பதால், சங்ககாலக் கோயில்களில் விழாக்கள் நடைபெற்றன என்பதும், திருமேனிகள் ஊர்வலமாகக் கொண்டு வரப்பட்டன. காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திரவிழா இருபத்தொருநாள் சிறப்பாக நடைபெற்றது. எல்லாக் கோயில்களிலும் பூசைகள் நடைபெற்றன. ஆடல் பாடல்கள் நிகழ்ந்தன. பல சமயப் பெரியோர்கள் தத்தம் மடங்களில் அற உபதேசம் செய்தனர் என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது.

சமய அணிகள்

பழந்தமிழ்ப் பிள்ளைகளுக்குக் காத்தற் கடவுளான திருமாலின் சங்கு, சக்கரம், கதை, வில், வாள் என்னும் ஐந்தின் வடிவமாக அமைத்து அணிவிக்கும் அணி ஐம்படைத்தாலி எனப்பட்டது. இது போலவே சிவபிரானுடைய மழு, வாள், இடபம் இவற்றைப் போலப் பொன்னால் செய்து அணிந்திருந்தனர் என்று கலித்தொகை கூறுகிறது.

சிவனார் பெயர்கள்

சங்ககால மக்கள் இறையனார், உருத்திரன், சத்திநாதன், பெருந்தேவன், வெண்பூதி, பேரெயில், முறுவலார் முதலிய சிவனைக் குறிக்கும் பெயர்களைப் பிள்ளைகளுக்கு இட்டு வழங்கினர். பெருந்தேவன் என்பது மகாதேவன் என்னும் பெயர்ப் பொருளை உடையது. பேரெயில் முறுவலார் என்பதும் சிவன் முறுவலால் திரிபுரங்களை எரித்ததைக் குறிக்கும். வெண்பூதி என்பது திருநீற்றை அணிந்தவர் என்பதைக் குறிக்கும்.

முடிவுரை

இதுகாறும் கூறப்பெற்ற செய்திகளால், சங்ககாலத்தில் சைவம், வைணவம், பௌத்தம், சமணம் முதலிய பல்வேறு சமயங்கள் இருந்தன என்பதும், ஆயினும் இந்நாட்டுக்கே உரியவை சைவமும் மாயோன் வணக்கமும் கோயில்களில் இருந்தன என்பதும் அவற்றில் விழாக்கள் நடைபெற்றன. கடவுள் வரிசையில் சிவபெருமான் முதலிடம் பெற்றிருந்தான் என்று இக்கட்டுரையின் வழி அறியமுடிகிறது.

5. சைவத் தமிழ்நெறி வரலாறு



சிவ.ச.நடராசன்
மணிவாசகர்
சோதிட ஆராய்ச்சி மையம்
திருவிடைமருதூர்

தன்மைப் பிறரால் அறியாத தலைவன்

சைவ சமயம் சிவபெருமானை முழு முதலாகக் கொண்ட சமயமாகும். சிவவழிபாடு பண்டு தொட்டே உலகில் நிலவி வந்திருக்கிறது. சைவ சமயத்தின் காலத்தை வரையறுப்பது கடினமானது. சிந்து சமவெளி நாகரிகம் நிலவிய மொகஞ்சதாரோ கரப்பா மற்றும் வடமேற்கு இந்தியாவின் தொல்லியல் பகுதிகளில் கிடைத்த சான்றுகளைக் கொண்டு அங்கெல்லாம் சைவம் நிலவியிருந்தது என்று ஒரு கருதுகோள் உண்டு. இதற்கு ஆதாரமாக அங்குக் கிடைத்த சான்றுகளுள் முந்து சிவன் என ஆய்வாளர் கூறும் பசுபதி முத்திரையும் இலிங்கத்தை ஒத்த கற்களும் சுட்டிக்காட்டப்படுகிறது. ஆதார விளக்கம் துங்க பத்திரை நதிக்கரையோரம் கல்லிற் செதுக்கிய 1008 லிங்கங்கள் கம்பி (கர்நாடகா) இந்தியா இவை எல்லாம் மனிதன் ஆராய்ச்சிக்கு உட்பட்டவையாகும். ஆனால் மணிவாசகரின் திருவாசகத்தில் திருவெம்பாவையில் முன்னைப் போர்த்துமப் பெற்றியனே என்பார். இதன் பொருள் முற்பட்டனவாகிய பண்டைப் பொருள்கள் யாவற்றிற்கும் இறைவன் பழமையான மெய்ப்பொருளானவன், என்றும் பிற்பட்டனவாகிய புதிய பொருள்களுக்கும் மீண்டும் புதிய பொருளாகின்றவன் இறைவன் என்றும் சிவபெருமானின் அளப்பரிய பெருமையினை உணர்த்துவார். அதுபோலவே பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்நெறியே எல்லாவற்றிலும் முன்னோடியாக இருந்துள்ளது.

இப்படிச் சைவமும், தமிழும் ஆதிகாலம் தொட்டே உலகின் முன்னோடியாகவும், சிறப்பாகவும் அமைந்துள்ளது. மேலும் நாயன்மார்களின் நெறிகள் தான் சைவச்சமயத்தில் எடுத்துக்காட்டாகும். இவர்கள் தான் வாழும் நெறியை வாழ்ந்து

காட்டி அறநெறியை இவ்வுலகத்திற்கு எடுத்துகாட்டிய அருளாளர்கள். பன்னிரு திருமுறைகளே தமிழ் பக்தி இலக்கியங்கள் எல்லாவற்றிலும் மேன்மை உடையதாகும். இதைச் சிதம்பர தல தனிப்பாடல் மூலம் நன்கு அறியலாம். இதோ அந்தப் பாடல் விளக்கம்,

திருமுறையே சைவநெறிக் கருவூலம்
திருமுறையே தென்தமிழின் தேன்பாகு ஆகும்
திருமுறையே கயிலையின்கண்
சிவபெருமான் செவிமடுத்த செந்தமிழ் வேதம்
திருமுறையே நடராசன் கரம் வருந்த
எழுதியருள் தெய்வ நூலாம்
திருமுறையே சொக்கேசன் மதிமலிவாய்
மலர்ந்தருளும் சிறப்பிற்றாமால்,
(சிதம்பர தல தனிப்பாடல்)

இதன் விளக்கம்

திருமுறைகள் தான் சைவநெறிக்கு ஒரு கருவூலமாகும். தென் தமிழுக்குத் தேன்சுவையைப் போன்று இன்பமாகும். கயிலையில் இருந்து கொண்டு சிவபெருமான் செவிமடுத்துக் கேட்பது நம்முடைய செந்தமிழ் வேதமான திருமுறையாகும். தில்லைச் சிற்றம்பலமுடையான் தன்னுடைய பொற்கரம் வருந்த எழுதிய அருள் நூல் திருவாசமாகும். ஆலவாய் (மதுரை) அண்ணலாகிய சொக்கநாதப் பெருமானே, தன்னுடைய திருவாய் மலர்ந்தருளிய திருமுகப்பாசுரம் என்ற கடித வரைவு செந்தமிழ்த் திருமுறையாகும். இதற்கு மேல் எவராலும் திருமுறையின் பெருமையை அளவிடமுடியுமா? சைவ சமயத்தின் நாயகர். சிவபெருமான் இறைவனின் சொந்த மொழி. செந்தமிழ் மொழியாகும். அருளான நூல், செந்தமிழ் நூல், இறைவன் உணர்த்திய பன்னிரு திருமுறைகளாகும். ஆகையால் தான், சிவபெருமானையும், பன்னிரு திருமுறைகளையும் எவ்வுவகிலும், எவராலும் பிரிக்க முடியாத தன்மை வாய்க்கப் பெற்றது.

சிவபெருமான் ஒருவரே பரம்பொருள். ஏனைய யாவரும்

சிறுதெய்வங்கள் என்று பொருள்படும். பிரம்மா, மகாவிட்ணு, ருத்திரன் முதல் ஏனைய முப்பத்து முக்கோடி தேவர்களும் பிறப்பு, இறப்புக்கு உட்டபட்டவர்களே. பகுத்தறிவில்லாதவர்களால் தேவர்களை எல்லாம் கடவுளாக வழிபடும் அவலநிலை நாட்டில் நிலவி வருகிறது. திருநாவுக்கரசர் திருக்குறுந்தொகையில் செத்து செத்துப் பிறப்பதே தேவென்று என்று தேவர்களின் நிலையில்லாத இழி நிலையைதான் நமக்கு உணர்த்துவார். மேலும் பிரம்மா, நாராயணன், இந்திரன் எல்லாம் பதவியின் பெயரே தவிர கடவுளின் பெயர் அல்ல என்பதை நாம் முதலில் தெளிவாக உணரவேண்டும். இதற்குச் சான்றாகத் திருநாவுக்கரசர் ஆதிபுராண திருக்குறுந்தொகையில் அருளியுள்ள ஒரு பாடலை விளக்குவோம்.

நூறு கோடி பிரமர்கள் நொந்தினார்
ஆறுகோடி நாராயணர் அங்ஙனே
ஏறு கங்கை மணல் எண்ணில் இந்திரர்
ஈறில்லாதவன் ஈசன் ஒருவனே

பொருள்

நூறுகோடி பிரமர்கள் அழிந்தனர். ஆறு கோடி நாராயணரும் அங்ஙனமே ஆயினர். இவர்களை விட கணக்கிட்டு எண்ண முடியாதவாறு கங்கையாற்றின் மணல் துளிகள் போன்று எண்ணற்ற இந்திரர்கள் மாண்டனர். முடிவும், அழிவும் இல்லாதவராக விளங்குபவர் சிவபெருமான் ஒருவரே ஆவார். இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால், பிரம்மா, இந்திரன், விட்ணு, இவையெல்லாம் பீடத்தின் பெயர். அதாவது பதவியின் பெயரே தவிர, இவர்களை எல்லாம் கடவுளாக வழிபடுவது நம் பகுத்தறிவின்மையே காட்டுகிறது.

மேலும் மாணிக்கவாசகரின் திருவாசகத்தில், திருவண்ணாமலையில் அருளிய திருவம்மானையில் கையார் வளை சிலம்பக் காதார் குழையாட என்ற பாடலில் ஒரு வரியில் சேர்ந்தறியாக் கையானை என்று இறைவனைச் சொல்லுவார் இதன் விளக்கம். சிவபெருமானின் இரு கைகளும் சேராது என்று

பொருள். மேலும் தெளிவாகச் சொல்வோமேயானால், சிவபெருமானின் இரு கரங்களும் ஒன்றை ஒன்று இணையாது என்று பொருள். அப்படி இணைந்துவிட்டால் சிவபெருமான் எவரையாவது வணங்குவது போல் ஆகிவிடும். சிவபெருமான் ஒருவரே உயிர்கள் வணங்குவதற்கு உரிய பரம்பொருளே தவிர, அவர் எவரையும் வணங்கமாட்டார் என்ற தத்துவத்தை உலகிற்கு காட்டவே மணிவாசகப்பெருமான் சேர்ந்தறியாக் கையானை என்று உணர்த்தியுள்ளார். மேலும் இந்தக் கருத்தை ஒட்டி திருமூலர் அருளுகையில், பொன்னால் என்று தொடங்கும் பாடலின் 3வது வரியைச் சற்று ஆழ்ந்து நோக்குவோம். என்னால் தொழப்படும் எம்மிறை மற்று அவன் தன்னால் தொழப்படுவார் இல்லை தானே என்று அருளுவார்.

இதன் பொருள்

என்னால் அவன் வணங்கத் தக்கவன். உயிர்கட்கு எல்லாம் தலைவன். ஆயினும் அவனால் வணங்கத் தக்கவர் எவரும் இல்லை என்று கூறுவது, சிவனொடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை என்பதும் புலனாகிறது. மேலும் நம் திருமுறைகள் எல்லாம் சிவபெருமான் ஒருவரே பரம்பொருள் என்பதையே நன்கு உணர்த்துகிறது. நம் நாயன்மார்கள் நெறி என்பதும், சிவபெருமானையும், அடியார் மாண்பையுமே போற்றுவதாகும். தேவர்கள் தான் சமயக் குரவர்களை, அடியார்களை வணங்கி இருக்கிறார்களே தவிர, தேவர்களை அடியார்கள் வணங்கியதாக வரலாறு இல்லை என்பது குறிப்பிடதக்கதாகும். மேலும் சுந்தரர் திருக்கயிலைக்கு வருவதற்கு இறைவன் அளித்த ஐராவதமாகிய வெள்ளை யானையில் மேல் அமர்ந்து மேலுலகம் செல்லும் பொழுது, இறைவன் இந்திரன் மால், பிரமன் முதல் மற்ற ஏனைய தேவர்களையும், எதிர்கொண்டு சுந்தரரை அழைத்து வர பணித்தார். தேவர்கள், முனிவர்கள் எல்லாம் எதிர்கொண்டு அழைத்தனர். தேவர்கள் சுந்தரரின் திருவடிகளை வணங்கி திருக்கயிலைக்கு அழைத்துச் சென்றனரே தவிர, மாறாக சுந்தரர் தேவர்களை வணங்கியதாக வரலாறு இல்லை. மேலும் இதே சுந்தரரைத்தான் சிவபெருமான் பாற்கடலில் பரவிய ஆலகால

விசத்தை எடுத்துவரச் சொல்லி அனுப்பி வைத்தார். அப்போதும் தேவர்கள் சிவபெருமானை மறந்து, பாற்கடலில் மந்தாரமலையை மத்தாகவும், வாசுகி என்ற பாம்பைக் கயிறாகவும் கடைந்ததால் விசம் கடல் முழுதும் பரவியது. தேவர்கள் அலறியடித்துக் கொண்டு ஓடினார்கள். அப்படிப்பட்ட விசத்தையே சுருட்டிச் சுந்தரர் தன் திருக்கரத்தால் எடுத்து வந்து இறைவனிடம் தந்தார் என்பது யாவரும் அறிந்ததே. இங்கு அடியாரின் பெருமையும், தேவர்களின் சிறுமையும் புலப்படுகிறது. இப்படியே தேவர்களின் சிறுமையினையும், சிவபெருமானின் அளப்பரிய பெருமையினையும் சொல்லிக்கொண்டே போகலாம். திருமுறையில் எடுத்துக்காட்டிய நான்கைந்து பாடலுக்கே இவ்வளவு பெருமை என்றால் பதினெட்டாயிரத்திற்கும் மேலாக உள்ள பன்னிரு திருமுறைகளின் பெருமையை முழுமையாகச் சொல்ல இப்பிறவியில் முடியாது என்பது புலனாகிறது. இவ்வுலகின் மூத்த சமயம் நம் சைவ சமயம் மட்டுமே. இவ்வுலகின் மூத்தமொழி தமிழ் மட்டுமே. இவ்வுலகின் அறம், பொருள், இன்பத்தையும், வீடுபேற்றையும் அளிக்கவல்ல முதன்மையான நூல் நம் தெய்வத் தமிழ் மறையான பன்னிரு திருமுறைகளே என்பதில் ஐயமில்லை. மேலும் திருவாசகத்தில் 35வது தலைப்பாகிய அச்சப்பத்து என்று தில்லையில் அருளிச் செய்துள்ளார் மணிவாசகர். இப்பதிகம் உலக மக்கள் உண்மையறியாது சிறு தெய்வ நெறியில் உழல்வதைக் கண்டு அஞ்சிப் பாடியது.

பாடல்

புற்றில்வாள் அரவும் அஞ்சேன்
பொய்யர்தம் மெய்யும் அஞ்சேன்
கற்றைவார் சடைஎம் அண்ணல்
கண்ணுதல் பாதம் நண்ணி
மற்று ஓர் தெய்வம் தன்னை
உண்டென நினைத்து எம்பெம்மான்
சுற்றிலாதவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சுமாறே

இதன்பொருள்

ஆசை மிக வந்து என்னைப் பற்றிக் கொண்டாலும், நான் அஞ்சமாட்டேன். வினை என்னும் கொடிய கடல் என்னைப் பற்றிக் கொண்டாலும் அஞ்சமாட்டேன். பிரமன், திருமால் காண முயன்றும் முடியாதவன், எம் தலைவன். அத்தகைய இறைவனது திருவடித்தையே கண்டு களிப்படைவேனே அன்றி மற்றைய தேவர்களை, அவர்கள் என்ன தேவர்கள் என்று அருவருப்புக் கொள்ளாதவரைக் கண்டால், ஐயோ நான் அஞ்சுகின்ற வகையை என்னவென்று சொல்வேன்.

என்று இப்படியெல்லாம், மிகத்தெளிவாக உணர்த்தியுள்ளார். மணிவாசகப் பெருமான். இதை விடுத்து பிறப்பு இறப்பிற்கு உட்பட்ட தேவர்கள் கூட்டங்களை வழிபடுவது நமது அறியாமையே. மேலும் இவர்களை எல்லாம் கடவுள் என்று சொல்லிக் கொண்டு திரிந்தோம் என்றால் நாம் பகுத்தறிவு இல்லாதவர்களே என்பதில் ஐயமில்லை.

மேலும் செத்து செத்துப் பிறக்கும் தேவர்களை வழிபாடு செய்வதை மெய்யடியார்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அப்படித் தேவர்களை வழிபாடு செய்பவர்கள் சிவனடியாருக்கு . உரிய இலக்கணம் இல்லாதவர்கள், என்று பொருள்படும். கல்தோன்றி, முன்தோன்றா காலம் தொட்டே சைவ நெறியும், தமிழ் மொழியும் இருந்துள்ளது என்பதை எவராலும் மறுக்கமுடியாது.

6. சைவ சமயமும் தமிழும்

மா. இராகுல்காந்தி
முனைவர்பட்ட ஆய்வாளர்
இலக்கியத்துறை
தமிழ்ப்பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்

முன்னுரை

சமயம் என்பது மானிட சமுதாயத்தை நல்வழியில் வாழ வழிக்காட்டும் தன்மை உடையதாகும். உலகமெல்லாம் ஒரே சமயம் என்ற நிலை இல்லாமல் பல்வேறு சமயங்கள் தோன்றி எல்லாம் இறை நம்பிக்கைகளோடும் இருந்தன. அன்பும், சிவனும் இரண்டென்பர் அன்பே சிவம் என்கிற தாராக மந்திரமே சைவ சமயத்தின் ஆணிவேர் இந்த சமயக் கொள்கைகள் கோட்பாடுகள், சிந்தனைகள் போன்றவற்றையும் பரப்பும் மனிதனிடம் செல்லவும் மொழி என் ஒரு கருவி தேவைப்படுகிறது. ஒரு மொழியை வளப்படுத்தும் திறமை ஆற்றல் மனிதனுக்கு மட்டுமே உண்டு. மொழி வளம் பெறும் போது சிந்தனையும், அறிவும் வளம் பெறும் பின்னர் அது வலுப்படும் பல்வேறு மொழிகள் இருப்பினும் தமிழ்மொழி எந்த வகையில் தமிழ் மொழிக்குத் தொண்டாற்றியுள்ளது என்பதை நம்மால் காணமுடிகிறது.

சைவ சமயத்தின் தொண்மை

சமயம் பற்றிக் காந்தியடிகள் குறிப்பிடுகையில் சமயம் இல்லாமல் மனிதன் உயிர்வாழ முடியாது என உறுதியுடன் சொல்கின்றனர். அந்த அளவுக்குச் சமயம் முக்கிய பங்கு வகிக்கிறது. சமயங்கள் இறை நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டவையாகும். சமயங்களிடையே சடங்குகள், வழிபாட்டு முறை போன்றவைகள் மாறுபாட்டாலும் அடிப்படையில் சமயக் கொள்கை ஒன்றே எனக் கூறலாம்.

சைவம், வைணவம் என இரு பிரிவுகளாகக் கொண்டு இந்து சமயம் உலகில் தோன்றிய பழமையான சமயம் ஆகும்.

அதில் குறிப்பாகச் சைவ சமயம் தொன்மை வாய்ந்தது எனக் கூறலாம். சங்க இலக்கியங்களான பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு போன்ற நூல்களில் சிவனைப் பற்றிய செய்திகள் உள்ளன.

புறநானூற்றில்

> ''பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி
> நீலமணி மிடற்று ஒருவன்''

எனச் சிவபெருமானைப் பற்றி ஔவையார் கூறியுள்ளார். தமிழ் இலக்கியங்களில் சிறந்த காப்பியமான சிலப்பதிகாரத்தில் பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும் எனச் சிவபெருமானைப் பிறவா யாக்கைப் பெரியோனாக இளங்கோவடிகள் கூறியுள்ளார். சைவ சமயம் சிவனோடு தொடர்புடையது. இச்சமயம் உலகில் தோன்றிய முதற் சமயம் ஆகும்.

> ''சிவனொடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை
> அவனோடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை
> புவனம் கடந்தன்று பொன்னொளி மின்னும்
> தவளச் சடைமுடித் தாமரையோனே''

என்று திருமந்திரன்படி சைவத்தின் படி முழுமுதற் கடவுள் சிவபெருமான் ஆவான். சைவ சமயம் என்று தொடங்கும் தாயுமானவரின் தமிழ்ப்பாடல் சைவ சமயத்தின் மாண்பை உலகெங்கும் பறைசாற்றுவதாக அமைகிறது. சைவத்தின் மேற் சமயம் வேறில்லை. அதில் தெய்வத்தின் மேற்தெய்வம் வேறில்லை என்று சைவ எல்லப்ப நாவலர் கூறியுள்ளார்.

சிந்துவெளி நாகரிக காலத்தின்போது சிவலிங்க வழிபாடு இருந்ததை நிருபிக்க சிந்துவெளி அகழ்வாரய்ச்சியின் போது கிடைத்த பொருட்களில் சிவலிங்கமும் ஒன்றாகும் மொகஞ்சதாரோ அகழ்வாராய்ச்சியின் போது பண்டையகாலத் தமிழ் எழுத்துக்கள் பல கிடைத்துள்ளன. முருகப்பெருமானும் தமிழும் வேறியில்லை முருகனே தமிழ் தமிழே முருகன்.

ஏழாம் நூற்றாண்டில் சைவ நெறிக்கு ஒரு மறுமலர்ச்சி

ஏற்பட்டது என கூறலாம். காரணம் இந்தக் காலத்தில் தான் இறைவனின் தூதர்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் போன்ற நால்வர்கள் தோன்றிக் காலத்திற்கும் அழியாத அரிய செயல்களைச் செய்தனர்.

தமிழ்மொழியின் பங்களிப்பு

தகவல் பரிமாற்றத்திற்கு மொழி அவசியம் மனிதன் தோன்றிய காலம் முதலே மொழி எனும் கருவி தோன்றிய காலம் முதலே மொழி எனும் கருவி இருந்து மனித உறவுக்குப் பாலமாக அமைந்தது மொழி ஆகும். ஒரு சமுதாயத்தின் கலை, கலாச்சாரம், பண்பாடு, வரலாறு இலக்கியம் போன்ற அனைத்தும் மொழியைச் சார்ந்து விளங்குகிறது. மனிதனுக்கும் உயிர்க்கும் போன்ற கருத்துக்களைப் பரிமாறுவதற்கு மொழி எனும் ஒரு கட்டமைப்பு தேவைப்படுகிறது.

எந்த ஒரு சமயமும் மொழியைப் பின்பற்றிக் கட்டமைக்கப்படுகிறது. மொழியின் மூலம் சமயத்தின் விளக்கங்கள், கொள்கைகள், பண்பாடு ஆகியவற்றைப் பிறருக்கு எளிதாகக் கருத்தை எடுத்து இயம்புவதற்கு மொழி ஒரு சிறந்த அடையாளமாக விளங்குகின்றன.

சைவ சமயம் தோன்றி இன்றளவும் தழைத்தோங்கி விளங்குகிறது என்றால் அதற்கு முதலில் மொழிதான் முழுமுதற் கடவுள் என்றே கூறலாம். ஒரு மொழியின் மூலம் தான் இறைவகை புரிந்துக்கொள்ள முடியும். அப்போது தான் என்ன கொள்கைகள் என்ன கருத்துக்கள் என்று அனைவராலும் புரிந்துகொள்ள முடிகிறது.

முடிவுரை

இந்தக் கட்டுரைகள் மூலம் சைவ சமயம் எவ்வாறு தோன்றியது. அவை எவ்வாறு வளர்ச்சிப்பெற்றன. இவர்களின் தாரக மந்திரங்கள் என்ன என்று கூறியிருக்கிறோம். சைவ சமயத்திற்கும் தமிழ்மொழிக்கும் ஒரு நீண்ட நெடிய தொடர்பு உண்டு. மொழி இருந்தால் தான் ஒரு சமயம் வளரமுடியும். சைவ சமயமும் தமிழும் பிரிக்க முடியாதது

7. சைவத்தமிழ் வரலாறும் நெறிகளும்



து. இந்திராணி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
எசு.எசு.கே.வி. கலை, அறிவியல்
மகளிர் கல்லூரி
கீழம்பி, காஞ்சிபுரம்

சைவத்தமிழ் நெறி கோட்பாடுகள் : எது சைவ நெறி?

சைவத்தில் சாக்தர், காளாமுகர், சன்மார்க்கர் முதலிய பிரிவுகளும் ஆங்காங்கு நிலைத்துத் தத்தம் பணிகளை ஆற்றிவந்தன. தமிழகத்துச் சைவத்திற்கும் வட இந்தியச் சைவத்திற்குமிடையே நெருங்கிய தொடர்பு இருந்து வந்தது. இந்து சமயத்தின் மும்மூர்த்திகள் தத்துவம் ஏற்றுக்கொள்ளப் பட்டதாயினும் சிவனே முழுமுதற் கடவுளாகக் கொள்ளப்பட்டார். ஆக்கல், பாதுகாத்தல், அழித்தல் தொழிலை இயற்றியவராயினும் அவர் தோற்றம் இறுதியற்றவர் என்று சைவ சமயம் கூறிற்று.

பல்லவர் காலத்திலேயே சைவ சமயத்தின் நடராச தத்துவம் வளர்ந்துவிட்டது. சோழர் காலத்தில் அது சிற்பத்திலும், ஓவியத்திலும் வடிக்கப்பட்டது. வடமொழி ஆகமங்கள் தமிழகத்தில் பரவியதன் காரணமாகச் சைவ சமயம் புது மலர்ச்சி பெற்றது. அவர்களுடைய தமிழ் மறையில் பொதிந்து கிடந்த மெய்ப்பொருள்களைத் தனியே திரட்டிச் சிலைகளின் வடித்துக் காட்டிய பெருமையானது சோழகர்களையே சாரும். சங்கராச்சாரிய சுவாமிகள் அத்துவித வேதாந்தத்தை நாடெங்கும் போதித்து வந்தார்.

சைவ சித்தாந்தத்தின் தத்துவம்

சித்தாந்தம் என்னும் சொல்லை முதன் முதலில் கையாண்டவர் திருமூலர் ஆவர். சித்தாந்தம் என்னும் சொல் பிறகு சைவ சித்தாந்த நூல்களுள் சேர்ந்துவிட்டது. சைவ அகம முடிவுகளும், தந்திரங்களும், மந்திரங்களும், சக்தி வழிபாடுகளும், யோக நிலைகளும் திருமந்திரத்தில் மிகுதியாக

இடம் பெற்றுள்ளன. சைவசமயத்தின் முடிவான கொள்கை சைவ சித்தாந்தமாகும். கடவுள் ஒருவர் உண்டு. உயிர் என்பது ஒன்று உண்டு. அது தன்னைத்தான் அறியக்கூடாமலும் இறைவனை அறியக்கூடாமலும் அதைத் தடை செய்யும் இருள் ஒன்று உண்டு என்பது சைவ சித்தாந்தத்தின் அடிப்படைத் தத்துவம் ஆகும்.

ஐந்தொழில்கள்

உயிரில்லாத பொருளான இவ்வுலகம் காலத்தின் இறுதியில் நுண்பொருளாய்ப் பின்பு ஆற்றலாய் மாறி ஒடுங்கும். ஒவ்வோர் உயிருக்கும் இறைவன் உலகையும் உடலையும் படைத்துக் கொடுக்கின்றான். இவைப் படைத்தல் தொழில் ஆகும். உலகில் பிறவி எடுத்த உயிர்களைப் பாதுகாத்து வருகின்றான். இவை அளித்தல் தொழில் ஆகும். உயிரானது பிறவியின் பயனை அறியாமல், வீண் காலங்கழித்து இறப்புக்குள்ளாவது அழித்தல் தொழில் ஆகும். உயிரானது முற்பிறவிகளையும் குழந்தைப் பருவத்தையும் மறந்து விடுவது. மறைப்புத் தொழில் ஆகும். இறுதியாகப் பக்குவம் பெற்ற உயிர் சிவஞானமான மெய்ஞ்ஞானம் கை வந்து சிவஒளியில் இரண்டறக் கலந்து விடுவது அருளுந் தொழில் ஆகும்.

இவ்வைந்தொழிலும் ஒவ்வோர் உயிரினிடத்திலும் நிகழ்வதுண்டு. ஆற்றலாக மாற இறைவனிடத்தில் ஒடுங்கிய மாயையானது அவனுடைய ஆணையால் விரிவுற்று அண்டங்களாகவும் உலகங்களாகவும் தோற்றமுறும். இந்த ஆற்றலின் துடிப்புகள் ஒவ்வொன்றும் ஒரு படைப்பும் அழிப்பும் ஆகும். இறைவன் தனித்து நிற்கின்றான் உயிர்களிடத்திலும் காணப்படுகின்றான். உயிரில்லாத சடப் பொருள்களிடத்திலும் காணப்படுகின்றான். இம்மூன்று நிலைகளையும் இறைவன் வேறாயும் ஒன்றாயும் உடனாயும் உறையும் நிலைகள் எனச் சைவ சித்தாந்தம் கூறும்.

நடராச உருவத்தின் தத்துவம்

இறைவனின் ஐந்தொழில் தத்துவமே நடராச உருவத்தின் தத்துவமாகும். நடராசர் திருவுருவத்தில் அமைந்துள்ள உடுக்கை

படைப்பைக் குறிக்கின்றது. அபயகரம், அளிக்கும் தொழிலைக் குறிக்கின்றது. நெருப்பு அழித்தற் தொழிலைக் குறிக்கின்றது. ஊன்றிய பாதம் மறைப்பையும் குறிக்கின்றது. தூக்கிய திருவடி அருளுந் தொழிலையும் குறிக்கின்றன. சமய குரவர்கள் நால்வரும் தம் பாடல்களின் மூலம் சைவ வழிபாட்டையும் நடராச தத்துவத்தையும் நாடறியப் பரப்பினார்கள். இவர்கள் இல்லையென்றால் சைவமே இல்லை என்பர்.

''சொற்கோவுந் தோணிபுரத் தோன்றலுமெஞ் சுந்தரனுஞ்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும் முற்கோலி
வந்திலரேல் நீரெங்கே மாமறை நூல் தான் எங்கே
எந்தைபிரான் அஞ்செழுத் செழுத்தெங்கே?''

என்று நால்வரையும் போற்றுகிறது சிவானந்த மாலை.

நடராசர் துதி

''உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்;
நிலவுலாவிய நீர்மலி வேணியன்;
அலகின் சோதியன்; அம்பலத் தாடுவான்;
மலர்ச்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்''

இறைவனான சிவபெருமான். உலக உயிர்களால் இன்ன தன்மையன் என்று எடுத்துக் கூறுவதற்கு இயலாதவன் யாவரும் வணங்கும்படியாகப் பிறைச்சந்திரனையும் கங்கையையும் அணிந்த சடையினை உடையவன். அளவில்லாத ஒளி பொருந்தியவன் தில்லையம்பலத்தில் திருக்கூத்து ஆடுபவன்.

திருமுறைகள் புராணம்

இவ்வைந்தொழில் தத்துவத்தின் அடிப்படையில் தான் திருமுறைகளும் சைவசித்தாந்த சரித்திர நூல்களும் அமைந்துள்ளன. திருமூலர் திருமந்திரம் முதலாக இராமலிங்க அடிகள் திருவருட்பா ஈறாகச் சைவத்தைப் போற்றி எழுந்த சமய இலக்கியம் படைப்புகள் அத்தனையும் மிகப் பெரிதும் போற்றிப் புகழ்ந்து பாடிய கோயில் தில்லைச் சிற்றம்பலந்தான். இறைவன் உருவமாகவும், அருவுருவமாகவும், அருவமாகவும் உயிர்களுக்கு அவற்றின் அறிவுத் திறத்திற்குகேற்ப காட்சியளிக்கின்றன

என்பது சைவ சித்தாந்தத்தின் பேருண்மைகளின் ஒன்றாகும். தில்லைத் திருச்சிற்றம்பலத்தில் இறைவனின் இம்மூன்று திருமேனிகளையும் காணலாம்.

நடராசரின் வடிவம் உருவத் திருமேனி திருச்சிற்றம்பலத்துக்குப் பின்புறமுள்ள திருமூலட்டானேசுரர் என்னும் சிவலிங்கம் அருவுருவத்திருமேனி. திருச்சிற்றம்பலத்தில் இரகசியம் என்று மறைத்து வைக்கப்பட்டுள்ள வெற்றுவெளி அருவத்திருமேனியாகும். தமிழில் இக்கோயிலின் வரலாற்றைக் கோயில் புராணம் என்னும் பெயரில் உமாபதி சிவாசாரியார் இயற்றியுள்ளார்.

சைவ நெறியை வழி நடத்தும் முறைகள்

சைவ திருமுறைகள்

தேவாரப் பாடல்கள் நெடுங்காலம் மறைந்து கிடந்தன. அவற்றைக் கண்டுபிடித்து முதல் ஏழு திருமுறைகளாக் வகுத்துத் தந்தவர் நம்பியாண்டார் நம்பி என்பவர். சிதம்பரத்துக்கு அண்மையிலுள்ள திருநாரையூரில் இவர் வாழ்ந்திருந்தார். அவ்வூரின் கோயில் கொண்டிருக்கும் ''பொல்லாப் பிள்ளையாரின்'' திருவருள் துணை கொண்டு நம்பியாண்டார் நம்பியடிகள் திருமுறைகள் வகுத்தார் என்பது வரலாறு.

திருஞானசம்பந்தர்

காதலாகிக் கசிந்து, கண்ணீர் மல்கி ஓதுவார்தமை நன்னெறிக்கு உய்ப்பது... நாதனாமம் நமச்சிவாயவே என்று திருஞானசம்பந்தர் பாடினார். மூன்றாம் ஆண்டிலேயே இவர் மெய்ஞ்ஞானம் கைவரப் பெற்றார். சித்திர கவிகளும், யமககவிகளும் யாழ்முரியும் பாட வல்லவர், ஐந்தெழுத்தின் சிறப்பை வியந்து ஓதினார்.

திருநாவுக்கரசர்

எவ்வுயிரினும் சிவத்தையும், சக்தியையும் இணைத்துக் காண வேண்டும் என்ற தத்துவம் இவரிடம் விளக்கம் பெற்றுள்ளது. கடவுளை இப்படியன் இந்நிறத்தன்,

இவ்வண்ணத்தன் இவன் இறைவன் என்று எழுதி காட்டொணாது என்றும் தொண்டு செய்தே மெய்யுணர்வுப் பாதையில் நடக்க வேண்டும் என்பது இவரது துணிவு என் கடன் பணி செய்து கிடப்பதே என்று இவர் பாடினார். நான் என்னும் முனைப்பை அறவே ஒழித்த மெய்ஞ்ஞானி இவர்.

சுந்தரர்

இறைவன் மீது அன்பு கனிந்து பித்தா பிறைசூடி எனத் தொடங்கும் பதிகத்தையும் திருத்தொண்டர்த் தொகை என்னும் திருப்பாட்டை சுந்தரர் பாடினார்.

மாணிக்கவாசகர்

மாணிக்கவாசரின் திருவாசகம் திருகோவையார் என்னும் பாடல்களைக் கேட்டு மகிழ்ந்த சிவபெருமான் அவருக்கு மாணிக்கவாசகர் என்று பெயர் சுட்டினர் எனக் கூறுவர். திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார். சிதம்பரத்தில் திருச்சிற்றம்பலத்தில் நடம்புரியும் மெய்ப்பொருளே தம் பாடல்களின் உட்பொருள் என்று கூறி திருச்சிற்றம்பலத்துக்குள் கலந்துவிட்டார்.

சிவப்புராணம்

சிவனைப் பற்றிய பழைய வரலாறு அதாவது மன்னுயிர்களை உய்வித்தற் பொருட்டுச் சிவபெருமான் அளவில்லாத காலமாக இயற்றிவரும் பழமையான திருவருட் செயல்முறையைக் கூறும் பகுதி என்பதாம். நமச்சிவாய வென்னுந் திருவைந்தெழுத்தானது என்றும் நிலை பெறுக தலைவனது திருவருப் பக்தியானது என்றும் விளங்கும்.

மெய்கண்டர்

சைவ சித்தாந்தக் கோட்பாடுகளை முறைப்படுத்திச் சிவஞான போதம் என்னும் நூலை இயற்றியவர், வேளாளர் குலத்தைச் சார்ந்த மெய்கண்டார் ஆவார். சிவஞான போதம் பன்னிரெண்டு சூத்திரங்களால் ஆனது. அது, பதி, பசு, பாசம் என்னும் சைவ சித்தாந்த முப்பொருளின் உண்மை கூறி அவற்றுள் காணப்படும் தொடர்பை விளக்கி இறுதியில்

உயிரானது பெறவேண்டிய வீடுபேற்றையும் விளக்கிக் காட்டுகின்றது.

வாகீச முனிவர் ஞானாமிர்தம் என்னும் சைவ சித்தாந்த விளக்கம் ஒன்றைப் பாடினார் அது சரியை, கிரியை, யோகம் ஞானம் என்னும் நான்கு பாதங்களால் ஆனது.

உமாபதி சிவாசாரியார்

உமாபதி சிவாசாரியார் என்பவர் தில்லை மூவாயிரவரில் ஒருவர் அவர் எட்டுச் சித்தாந்த நூல்களை இயற்றினார். அவர் சைவ சித்தாந்த உண்மைகளை உணர்ந்து அவற்றில் தோய்ந்திருந்தார்.ஆதலின் தில்லைத் தீட்சிதர்கள் அவரைக் குலத்தினின்றும் விலக்கி ஒதுக்கி வைத்தனர் எனக் கூறுவர்.

சிதம்பரம் கோயில்

சிதம்பரம் கோயில் திருச்சிற்றம்பலம் எனப்படும். சைவ சித்தாந்தக் கருத்துக்கள் அனைத்தையும் விளக்கிக் காட்டுமாறு அமைந்துள்ளது.

கனக சபை

முன்புறம் இருப்பது பொன்னம்பலம் அல்லது கனகசபை, வழிபடுவோர் நிற்குமிடம் தூய வினை, தூய ஒழுக்கம், உள்ளத்தில் ஒழுக்கம், விரிந்த தடையுறாத பேரறிவு ஆகியவற்றால் ஒருவர் தம் உடம்பைப் பொன் உடம்பாக்கிக் கொள்ளலாம். இவ்வுண்மையை வெளிப்படுத்துவது தான் கனகசபை.

ஞானசபை

இத்தூய உடம்பிலிருந்து கொண்டு விரிந்த துண்டுபடாத பேரறிவை அடைந்து சிவத்தோடு கலத்தலைக் குறிப்பதே சிற்றம்பலம் அல்லது ஞானசபை. இச்சபையில் நின்று தான் நடராசப் பெருமான் ஐந்தொழில் கூத்து நிகழ்த்துகின்றான்.

சைவ வழிபாட்டில் அடிப்படையான கொள்கைகள் சில உண்டு அவை :

ஒருவன் செய்கின்ற வினை, வினையைச் செய்கின்றவன், செய்த வினையால் அவனுக்கு நேரிடும் விளைவுகள், வினைபுரிபவனையும் அவன் புரியும் வினையின் பயனையும் ஒன்று கூட்டும் கடவுள் ஆகிய நான்கு மெய்ப் பொருள்கள் ஆகும்.

முடிவுரை

சைவத் தமிழ் நெறி வளர்ந்த வரலாறு மற்றும் எது சைவ நெறி? என்பதையும் பன்னிரெண்டு திருமுறைகளாகவும் அவற்றை பாடியவர்களையும் சைவ நெறியின் வரலாற்றையும் அறிந்தோம்.

"ஒருவனாகியும் பலவுருக் கொண்டும் இருக்கும்
இறைவனின் திருவடி வாழ்க
தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

நமசிவாய வாழ்க!

8. காலம் தோறும் சைவம்

எம். ஞானவேல்
முதுகலை இரண்டாம் ஆண்டு
தமிழ்நாடு அரசு
கவின்கலைப் பல்கலைக் கழகம்
சென்னை

முன்னுரை

ஊர்த்தவ சைவம், அனாதி சைவம், ஆதிசைவம், மகாசைவம், பேதசைவம், அபேதசைவம், அந்தர சைவம், குண சைவம், நிர்க்குண சைவம், அத்துவா சைவம், யோக சைவம், ஞானசைவம், அணு சைவம், கிரியச சைவம், நாலுபாத சைவம், சுத்த சைவம் பதினாறு வகைப்பட்டதாய்ச் சிவனைப் பரதெய்வமாகக் கொண்டு வழிபடுஞ் சமயம் சைவம் ஆகும்.

1. காசுமீர சைவம், 2.வீர சைவம், 3.சிவாத்துவைதம், 4.பாசுபதம், 5.கபாலிகம், 6.காளமுகம் இவற்றின் தத்துவங்கள், கோட்பாடுகள் ஆகியவற்றில் சில வேறுபாடுகள் உள்ளவாயினும் அவற்றின் அடிப்படைக் கொள்கைகளில் வேறுபாடு இல்லை சைவ சித்தாந்தத்தைத் தத்துவமாகக் கொண்டு விளங்குவது சித்தாந்த சைவம், இந்தியாவில் மட்டுமன்றி நேபாளம், இலங்கை மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் பிறநாடுகளிலும் விளங்குகிறது.

சைவ சித்தாந்தம்

வாழ்ந்தே ஆக வேண்டிய தவிர்க்க முடியாத நியதிக்கு உட்பட்டிருக்கும் நமது வாழ்க்கை பதி (கடவுள்) பசு (உயிர்), பாசம் (பற்று) என்ற மூலங்கள் மூன்றின் சேர்க்கையால் ஆனது. இவற்றில் பதிக்குப் பாசத்தால் ஆவதொன்றும்மில்லை, பாசத்துக்குப் பதியைத் தொழுது பயன்பெற்றுக் கொள்ளமுடியாது. மூன்றாவதாகிய பசுவே பதியின் இடையறாத உபகாரத்தால் தனது வினைப் பயனாகப் பிறந்து இறந்து பெறும் நீண்டகால அனுபவத்தில் பாசகத்தடையில் (பற்றிலிருந்து) இருந்து நீக்கிப் பதியினைச் சார்ந்து விடுதலை பெறுவதற்கான

நிலையில் உள்ளது. இந்த நிலையே ஞானம் எனப்படுகிறது. இந்த ஞானமே சைவ வழிபாட்டின் தனித்துவப் பண்பாகும்.

சைவ வழிபாட்டிற்கு ஆதார நூலாக விளங்கும் சிவாகமங்கள் இந்த ஞானம் பற்றிய விளக்கத்தை முதலில் வைத்தே கடவுள் வழிபாடு விதிமுறைகளைத் தெரிவிக்கின்றன. சைவ வழிபாட்டுத் தலமான ஆலயமும் ஞானி ஒருவரின் உடல் அமைப்பின் மாதிரிலேயே உருவமைக்கப்படும். அங்கு நிகழும் கிரியைகள் யாவும் (விழுந்து) கும்பிடுதல் முதல் பூசை செய்தல் வரை இந்த ஞான விளக்கப் பின்னணியிலேயே அமையும், கொலை, கள்குடித்தல், ஊண் உண்ணல், பொய் பேசுதல், சூதாடுதல் போன்றவற்றினைச் சைவம் பாவம் என்கிறது. இதனைச் செய்பவர்கள் நரகத்தில் விழுந்து அத்துன்பத்தை அனுபவிப்பர் என்கிறது. புண்ணியம் என்பது பதி புண்ணியம், பசு புண்ணியம் என இருவகைப்படும். பதி புண்ணியம், சிவபுண்ணியம் எனப்படும், பசு புண்ணியம் உயிர்புண்ணியம் எனவும் படும்பதி புண்ணியம், சிவபெருமானை நோக்கிச் செய்யப்படும் நற்செயல்கள் ஆகும். சிவபெருமானைத் தவிர்த்து வேறு எவரையும் நோக்கிச் செய்யும் நற்செயல்கள் அனைத்தும் பசுபுண்ணியம் ஆகும். பதி புண்ணியங்கள் ஒருபோதும் அழிவில்லாமல் ஒன்றும்; நின்று முத்தியைக் கொடுக்கும். பசு புண்ணியங்களுக்கும் பயன் உண்டு ஆனால் அப்பயன் அனுபவித்து முடிந்ததும், அழிந்துவிடும். பதி புண்ணியப்பயன் சிவபெருமானால் அனுபவிக்கப்பட்டதால் அழிவதில்லை. அதன் பயன் உயிர்களுக்கு நிலையான இன்பத்தைத் தருவதே ஆகும்.

''பசித்து உண்டு பின்னும் புசிப்பானை ஒக்கும் இசைத்து வருவினையில் இன்பம்''

சிவஞானபோதம்

இதன் பொருள் பசியோடு இருக்கும் ஒருவனுக்கு உணவு கொடுப்பது பசு புண்ணியம் : அவ்வுணவின் பயனாக அவனுக்குள்ள பசி ஆறுகிறது. அவனுக்கு மீண்டும் பசி வரும்போது முன்புண்ட உணவின் பயன் அனுபவிக்கப் பட்டு விட்டதால், அவனுக்குச் செய்த பசு புண்ணியமும் அத்தோடு

அழிந்துவிடுகிறது.

சைவ ஆசான்கள் பட்டியல்

சைவ உலகில் திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும், மாணிக்கவாசகரும், நாவலர் எனப்படுவர். இவர்களைச் சைவ சமயக் குரவர்கள் என்றும் அழைப்பர். சந்தானக் குரவர் என்போர் இவரினும் வேறுபட்ட மெய்யியல் சான்றோர், வீர சைவருக்குப் பசலர் முதலான சரணரம், காசுமிரிகளுக்கு அபிநவகுப்தலல் வசுகுப்தர் முதலானோரும், சிரௌத்தருக்கு அப்பைய தீட்சிதர், சிறிகண்டர், அரதத்தர் ஆகியோரும், நாத சைவருக்கு கோரக்கர் முதலானோரும் முக்கியமான சைவப்பெரியோர்.

சிவ இலிங்க வழிபாட்டுக்கு அடிப்படையாக நடுகல் வழிபாடே அமைந்திருக்கலாம் என்ற கருதுகோளும் உண்டு இத்தகைய சான்றாவணங்களால் சிவ வழிபாடு மிகத் தொன்மையானது என்றும் மானுடர்களின் மிகப்பழைய தெய்வங்களில் ஒருவன் ஈசன் என்றும் அறியமுடிகின்றது.

சிந்துவெளி நாகரிகச் சான்றுகள்
பொ.மு. 2300 முதல் 2000 வரை

நில வியதாகக் கருதப்படும்

சிந்துவெளி நாகரிகக் களவெளிகளில் கிடைத்த சில ஆதாரங்கள் அக்காலத்தே கூட சிவ வழிபாடு நிலவியிருக்கக் கூடும் என்ற ஊகத்தை வலுப்படுத்துவனவாக இருக்கின்றன. மொகெஞ்சதாரோ, கரப்பா பகுதிகளில் சிவலிங்கத்தை ஒத்த பல கற்கள் கிடைத்துள்ளன. இருகொம்புகளுடன் விலங்குகள் சூழ அமர்ந்திருக்கும் மனித உருவ முத்திரை, ஈசனின் பசுபதித் தோற்றத்தைக் குறிக்கின்றது என்றும் அதுவே மிகப்பழைய முத்து சிவன் சிற்பம் என்றும் சிந்துவெளி ஆய்வாளர்கள் முடிவுக்கு வந்திருந்தனர். அதைக் கூர்ந்து ஆராய்ந்த பலர் அது சிவவடிவர் என உறுதியாகச் சொல்லமுடியாதென்றும் அமர்ந்திருக்கும் நிலை தெளிவுற்றுத் தெரியும் மூன்று முகங்கள், பிறை நிலை எனக் கொள்ளக்கூடிய இரு கொம்புகள்

என்பவற்றைக் கருத்தில் கொண்டு இது சிவன் எனும் பெருந்தெய்வம் எழுவதற்கு முந்திய வடிவமாக இருக்கக்கூடும் என்றும் சொல்கின்றனர்.

வேதகாலச் சைவம்

இலகுலீசர் : பாசுபதத்தைத் தோற்றுவித்தவர் பொ.மு. 1500 இற்கும் 500 இற்கும் இடைப்பட்ட வேதகாலத்து நூல்களில் வருகின்ற வருந்திரன். இமயன் முதலான தெய்வங்களின் கலவையாகவே பின்னாளில் ஈசன் எழுந்தான் என்பர். இவருக்கு வேதத்தில் எவ்வித முக்கியத்துவம் இல்லாமல் மிகச் சில பாடல்களிலேயே போற்றப்படும் உருத்திரன் யசுர் வேதத்தில் திருவருத்திரம் பகுதியில் இன்றைய சிவனாக வளர்ந்து நிற்பதைக் காணலாம். வேதங்களை அடுத்து வருவான உபநிடதங்களில் பல சிவ வழிபாட்டைப் போற்றுவதிலிருந்து வேதகாலத்தின் பிற்பகுதியிலேயே சிவன் இன்றைய வழிபாட்டு முக்கியத்துவத்தை அடைந்துவிட்டதை அறியமுடியும்.

தென்னகச் சைவம்

சங்க இலக்கியங்களில் சிவ வழிபாடு பற்றிய குறிப்புகள் காணப்படும் பொழுதும் அவைக் கிறித்துவுக்குப் பிந்தியவை என்பது பொதுவான கருத்தாகக் காணப்படுகின்றது. எனினும் தமிழகம் இலங்கையில் பொறிக்கப்பட்ட கிறித்துவுக்கு முந்திய பிராமி சாசனங்களிலும் நாணயங்களிலும் காணப்படும் சிவ என்ற பெயரும் நந்தி திரிசூலம், பிறை நிலா முதலான சிவச் சின்னங்களும் தென்னகத்தில் பல்லாண்டுகளாகவே சைவம் நிலவிவந்ததற்கும் சான்று கூறும்.

சைவத்தின் எழுச்சி

ஆதிமார்க்கம்

தெளிவான அடையாளங்களுடன், சைவமானது முழுமையான ஒரு மதமாகத் தன்னை முன்னிறுத்திக் கொண்டது. பொ.மு 3 முதல் பொ.பி. 2 ஆம் நூற்றாண்டுகளுக்குக் கிடையில் என்று சொல்லப்படுகின்றது. பொ.மு. 6-4ஆம் நூற்றாண்டுகளுக்கு இடையே தொகுக்கப்பட்ட

சுவேதாசுவதரமே மிகப்பழமையான சைவ நூலாகக் கொள்ளப்படுகின்றது. உலக இன்பங்களைத் துறந்து கடுநோன்புகள் புரிந்து தாந்திரீக நெறியில் ஈசனை வழிபடும் வழக்கம், கிறித்து காலத்திலேயே ஆரம்பித்து விட்டது. இவர்கள் பாசுபதர் என்று அறியப்பட்டனர்.

பாணினியின் அசுடாத்யயி எனும் சங்கத இலக்கண நூலுக்கு பதஞ்சலி முனிவர் எழுதிய மாபாடிய உரையில் பொ.மு. 2ஆம் நூற்றாண்டு பாசுபதர் பற்றிய குறிப்புகளைக் காணமுடிகின்றது. பாசுபதரில் தலைசிறந்தவரான இலகுலிகர் இக்காலத்திலேயே பொ.மு. 2 முதல் பொ.பி. 2 ஆம் நூற்றாண்டு தோன்றி பாசுபத நெறியை வளப்படுத்தியதாகத் தெரிகின்றது. இலகுலிகளுக்குப் பின் அவர் ஏற்படுத்திய புரட்சி, பாசுபதத்திலிருந்து காளமுகம், காபாலிகம் எனும் இரு கிளைச் சைவங்களை அடுத்தடுத்து உருவாக்கியது இவை மூன்றும் ஆதிமார்க்கம் என்றே அறியப்பட்டதுடன் துறவிகளுக்குக் குறிப்பாக அந்தணராகப் பிறந்து சைவ சந்நியாசிகளாக மாறியோரால் மாந்திரமே கடைப்பிடிக்கப்பட்டது வைணவம், பௌத்தம், சமணம் முதலான நெறிகளுடன், இவைக் கொண்ட உரையாடல்கள் சைவத்தை அடுத்தகட்ட வளர்ச்சிக்கு இட்டு சென்றன. பொ.பி. 5ஆம் நூற்றாண்டுக்குப் பின் சைவம் மாபெரும் சமயமாக எழுச்சி பெறுவதற்கான உறுதியான கால்கோள்களாக விளங்கின.

சைவத்தின் உயர்ந்த காலம்

பொ.பி. 600 முதல் 1200 வரையான காலம் சைவத்தின் பேரெழுச்சிக் காலமாக அறியப்படுகின்றது. ஆதிமார்க்கத்துக்குப் பின் உருவான சித்தாந்தமும், வாமம், தட்சிணம் முதலான புறச்சித்தாந்த நெறிகளும் மாந்திமார்க்கம் எனும் பிரிவை சைவத்தில் தோற்றுவித்தன. இவை துறவிகளுக்கு மாத்திரமன்றி, இல்லறத்தாருக்கும் உலகியல் இன்பங்களுக்கும் அரிய முன்னுரிமை கொடுத்தால் தீவிரமாக மக்கள் மத்தியில் பரவலாயிற்று. சமணம், பௌத்தம் என்பவற்றுக்கு எதிராக அப்பர், சம்பந்தர் முதலான நாயன்மார், பத்தி இயக்கத்தை ஏற்படுத்தி சமூக மறுமலர்ச்சிக்கு வழிவகுத்தனர். வடநாட்டில்

இதே காலத்தில் உருவான புராணங்கள் மக்கள் மத்தியில் சைவத்தை எடுத்துச் செல்லலாயின.

துறவிகளின் மதமாக இருந்த சைவர் அரச ஆதரவைப் பெற ஆரம்பித்தவுடன் அதற்கு முன் அரச ஆதரவைப் பெற்றிருந்த சமணம், பௌத்தம் என்பவற்றைத் தன் தத்துவச் செழிப்பால் தோற்கடித்துத் தன்னை வலுப்படுத்திக் கொண்டது.

பிற்காலம்

காசுமீரில் பல்கிப் பெருகிய சைவநெறி, தொடர்ச்சியான முகலாயப் படையெடுப்பால் தென்னகம் நாடவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஏற்கனவே சைவம் செழித்திருந்த தென்னகம், காசுமீரில் தோன்றி வளர்ந்து கொண்டிருந்த சித்தாந்த மந்திர மார்க்கத்தை மேலும் வழுப்படுத்தி இந்திய மெய்யியல் வரலாற்றிலேயே முதன்முறையாக சமசுகிருதம் அல்லாத வேற்றுமொழியொன்றில் தமிழில் சைவ மெய்யியலொன்றைத் தோற்றுவித்தும் சரித்திரம் படைத்து அதே காலத்தில் பிராமண எதிர்ப்புடன் கன்னட தேசத்தில் தோன்றிய வீர சைவம் சாதிமத வேறுபாடின்றி சகலரிடமும் சைவத்தைக் கொண்டு சேர்த்தது. இவ்வாறு, தமிழகம், காசுமீர், கன்னடம் ஆகிய மூன்று பகுதிகளும், சைவ சமயத்தின் தவிர்க்கமுடியாத இன்றியமையாத பாகங்களாக மாறிப்போயின.

முடிவுரை

இப்படிக் காலந்தோறும் வளர்ச்சி கண்ட சைவம் தமிழகம் மட்டுமின்றி உலகம் முழுவதிலும் பரந்து விரிந்துள்ளது என்று கூறினால் அது மிகையாகாது. நாமும் சைவ நெறிகளைத் தழைக்கச் செய்வோம்.

9. சைவத்துக்குச் சோழர்காலம் பொற்காலம்

முனைவர் சி. சியாமளா
உதவிப்பேராசிரியர், வரலாற்றுத்துறை
த.ஞா.அரசு கலைக்கல்லூரி
மயிலாடுதுறை

முன்னுரை

விசயலாலயன் வழிவந்த சோழர்கள் ஆழ்ந்த சிவபக்தர்களாக விளங்கினர். தேவாரத் திருவாசகப் பாடல்களை ஆலயங்களில் ஒலிக்கச் செய்தனர். ஆலயங்களும் மடங்களும் எழுப்பப்பட்டன. ஆலயங்களுக்குப் பொற்கூரைகள் அமைத்தனர். ஆலயங்களும், மடங்களும் தானங்களைப் பெற்றன.

துறவு பூண்ட துறவிகளுக்கு மதிப்புப் பெருகியது. அவர்களுக்கு ஆலயங்களில் உண்டியிட்டுப் போற்றினர். இல்லறத்தார்களும் அவர்களை வரவேற்று உண்டியிட்டு மனநிறைவு பெற்றனர். காவி அணியுடன் தோன்றிய பண்டாரங்களின் எண்ணிக்கை பெருகியது.

மடங்கள்

கோயில்களை எழுப்பிய மன்னர்கள் மடங்களையும் எழுப்பினர். கோயில்களுடன் மடங்களும் திருக்கூட்டங்களும் சமயப் பணிக்குப் பெரிதும் உதவின. சைவ மடங்கள் நாடெங்கும் பரவின. விக்கிரமசோழன் கோலத்தில் திருவாவடுதுறையிலிருந்த மடத்தில் பிராமணர்களுக்கும், தவசிகளுக்கும் உண்டியிட்டு இலக்கணமும் மருத்துவமும் கற்பிக்கப்பட்டன. மடங்கள் சமயக் கல்விக்குப் பெருந்தொண்டாற்றின. ஆலயங்களைப் போன்று மடங்களுக்கும் கிராமங்கள் தானமாக விடப்பட்டன.

சைவம்

சோழர்காலம் சைவத்துக்குப் பொற்காலம் எனலாம். சோழர்கள் சைவத்துக்குக் காட்டிய பற்றுதல் நம்பியாண்டார்

நம்பி திருமுறைகளைத் தொகுக்கத் தூண்டியது. சைவ சமயக் குரவர்களாகிய அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் போன்ற பெரியோர்கள் தொடங்கிய வழியில் சமயப் பெரியார்கள் சைவதித்தாந்தத்தை உருவாக்கினார்கள். சோழர் காலத்தின் இறுதியில் சந்தனாச்சாரியர்கள் என்னும் சமயப் பெரியார்கள் அதனை விளக்கி நிலைநாட்டினர். அவர்களும் மெய்கண்டாரும், அருள் நந்தியும் மறைஞான சம்பந்தரும், உமாபதியும் முக்கியமானவர்களாவார்கள். சித்தாந்த சைவம் நீங்கலாகக் கபாலிகர்கள், காளாமுகர்கள் போன்ற சிவபக்தர்களும் இருந்தனர்.

அம்மன் கோயில்கள்

அம்மன் வழிபாடு தமிழர்களின் பழமையான வழிபாட்டு முறையாகும். பதினொன்றாம் நூற்றாண்டில் இராசேந்திர சோழன் காலம் முதல் தமிழகத்தில் பரவலாக அம்மனுக்குக் கோயில்கள் எழுப்பப்பட்டிருந்தன. அவை திருகாமக்கோட்டம் எனப்பட்டன. சிவாலயத்திலும் வைணவ ஆலயத்திலும் தேவிக்கு இறையகங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன.

விநாயகர் வழிபாடு

தொல்பழங்காலத்தில் முதல் நிலை திராவிடர்களின் வழிபாட்டுக் கடவுளர்களுள் இல்லாத ஒன்றும் ஆரியப்படையெடுப்பாளர்கள் விரும்பாததுமான விநாயகர் வழிபாடு வரலாற்றுக் காலத்துத் தமிழகத்தில் புதிதாகும். பல்லவர் காலம் வரை தமிழகத்தில் விநாயகர் வழிபாடு நடைபெறவில்லை. நரசிம்மவர்ம பல்லவனின் வாதாபி வெற்றிக்குப்பின் வெற்றிச் சின்னமாக வாதாபி கணபதி சிலையைத் தமிழகத்துக்குக் கொண்டு வந்தான் என்று கண்டோம்.

இராசசிம்ம பல்லவன் காலம்வரை தமிழகத்துக் கோயில்களில் விநாயகர் சிலைக்கு இடமளிக்கவில்லை. அது சோழர் காலத்தில் தமிழகத்துக் கோயில்களில் இடம்பெறத் தொடங்கியது. பனங்குடி, திருப்பல்லாந்துறை, திருக்கட்டளை முதலிய ஆலயங்களில் கணபதி சிலைக்கு இடமளித்தனர்.

நவக்கிரக வழிபாடு

ஆலயங்களில் மன்னர்களின் பிறந்த நாட்களில் விழா எடுத்தனர். மாதங்களுக்குரிய நாண்மீன் (நட்சத்திரம்) நாட்களிலும் விழாக்கள் எடுத்தனர். இவற்றைப் போன்று நவக்கிரக வழிபாடும் தமிழகத்தில் பரவியது. சூரியனார் கோயில் தோன்றியது. அதில் விழா எடுக்க முதலாம் குலோத்துங்கன் வகை செய்தான். சூரிய கிரகண நாட்களில் ஆலயங்களில் விழா எடுக்கக் கட்டாயப்படுத்தப்பட்டனர். வேதியர்கள் வேதவேள்விகளில் ஈடுபாட்டைப் பெருக்கியிருந்தனர். இவற்றுடன் சமயச் சடங்குகளும் விரிவடைந்திருந்தன.

10. சைவத்தமிழ் மரபு சமுதாய அடிப்படை மாற்றத்திற்காகவே...



மா. மாணிக்கம்
முனைவர்பட்ட ஆய்வாளர்
சைவ சித்தாந்தத் தத்துவத்துறை
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை

முன்னுரை

தமிழ் இலக்கியம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலான தொடர்ச்சி கொண்ட உலகின் சிறந்த இலக்கியங்களில் ஒன்று. வாழ்வின் பல்வேறு கூறுகளைத் தமிழ் இலக்கியம் இயம்புகின்றது. சைவம் என்பது சிவனை வணங்கும் மார்க்கம் மட்டுமே என்று குறிப்பிட்டு விட முடியாது. மாறாக தத்துவம், இறைக் கோட்பாடுகள், முக்திநிலை என இலக்கியச் சான்றுகளும் தொல்லியல் சான்றுகளும் பல புதிய ஆய்வுக் கண்ணோட்டங்களுக்கு வழிவாசல்களைத் தந்துள்ளன. மூவர் தேவாரம் குறித்து பேரா. சொ.சிங்காரவேலன் அவர்கள் மெய்ப்பொருள் திறன் என்ற இரண்டாம் பார்வைப் பகுதியில் உள்ள கருத்துக்களை மையமாகக் கொண்டு இந்த ஆய்வுக் கட்டுரை எடுத்தாளப்படுகின்றது. மக்களிடம் காணப்பட்ட ஏற்றத் தாழ்வுகளைத் தகர்த்தெறிகின்ற தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது.

தென்னகத்தில் பக்தி நெறி பரவிய காலத்தில் சைவ சமயம் கோலோட்சிய நிலை பொற்காலம் என்றே கருத முடியும். சங்ககாலத்தைப் பொற்காலம் என்று கூறுவது இயல்பு அல்லது இலக்கிய மரபு ஆகும். சைவ சமய எழுச்சிக்கும், சைவ சித்தாந்த சீர்மைக்கும் மூன்று பெருமக்களும் செய்த பணிகள் கடலினும் ஆழமானது. இவர்கள் தோன்றியிராவிட்டால் சைவத்தின் நிலை என்னவாக இருக்கும் என்று சிந்திக்க வேண்டிய தேவை நமக்கு இருக்கின்றது.

சமண பௌத்தமாகிய புறச்சமயங்கள் வளர்ந்திருக்கும்;

திருத்தொண்டர் புராணம் தோன்றி இருக்காது. சிவனுறையும் கோயில்கள் கற்றளிகளாக மாறியிருக்காது. பாடல் பெற்ற பழம்பதிகள் விளக்கம் பெற்றிருக்க முடியாது. சைவசமயம் இடைக்காலத்தே தன் வலிவையும் பொலிவையும் இழந்திருக்கும் சமண பௌத்தமதங்கள் இன்று சின்னங்களால் தன் இறந்த காலத்தைப் பழைமைகாட்டி சைவமும் அருகியிருக்கும். கம்பன் என்ற பெருங்கவிஞன், சீதையின் ஒளியிழந்த மேனியை, அசோகவனத்து ஆற்றாத் துயரில் வெயிலிடைப்பட்ட விளக்கு என்று வருணிப்பது போன்று வெயில் நேரத்து ஏற்றப்பட்ட விளக்குபோல இருந்திருக்கும். மூவர் தோன்றித் தமிழகத்துத் தெருக்களில், சிற்றூர்களில், பேரூர்களில், மன்னர் மன்றங்களில் செய்த பணிகளாலேயே சைவம் சீரும் சிறப்பும் எய்தது. மேலும் இன்று சமய பன்மயச் சூழலில் சைவ வைணவ வளர்ச்சியால் சமண பௌத்த மதங்கள் அமிழ்ந்து போயின என்ற கருத்தும் தற்கால ஆய்வாளர்களால் முன்வைக்கப்படும் கருத்தியல்களும் ஆய்வுக்குரியவனவாகும்.

சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும் எம் சுந்தரனும் சிற்கோல வாதவூர்த் தேசிகனும் முற்கோலி வந்திலரேல் நீ றெங்கே மாமறைநூல் தானெங்கே எந்தை பிரான் ஐந்தெழுத்தெழுத்தெங்கே என்ற பழமையான இவ்வாறு எதிர்மறையால் சிந்தித்து வினா எழுப்பி திருநீறு, திருநெறி திருவைத்தெழுத்து ஆகிய மூன்றும் நிலைத்து நிற்க வளர, வையகத்திற்கு வாழ்வு தர வந்தவர்களே இம்மூவரும், மாணிக்கவாசகரும் என்று உய்த்துணர வைக்கின்றது.

அனுபவப் பிரிவு

மூவர் தேவாரத் திருப்பாட்டுக்கள் முற்றும் அவர்கள் அடைந்த சமய அனுபவத்தினைத் தேக்கி வைத்த கருவூலங்கள் போன்றன. அவர்களின் இறை ஒளி இன்பநிலை அடைந்தும்; உலகில் வாழும் தகுதி பெற்ற உயிர்க்குலம், உலகப் பொல்லாங்கினின்று விடுபட்டு அப்பேரொளிப் பிழம்பாகிய இறைவன் அடிகளில் செம்மாந்திருக்கும் நிலைகள் நமக்கு சைவ சமய நூல்கள் ஆதாரமாகின்றன.

புத்துயிர் மறுமலர்ச்சியும் தந்தவை

மருத்துவர் சி.யூ.போப் இவ்வளாளர்கள் குறித்து மனமாரப் பாராட்டி உரைக்கும் வாய்மொழிகள் குறிப்பிடக்குரியவை. தென்னிந்தியாவின் வரலாற்றிக்கு முற்பட்ட சமயம் சைவ சமயம் என்றும், ஆரியர் வருகைக்கு முன்பிருந்தே தமிழ்மக்களின் வாழ்விடை நிலவி வந்திருக்கும் தொன்மையான மரபினைக் கொண்ட தென்றும் கடவுள் உயிர், மனித இயல், இயற்கை, தீமை, துன்பம், காணப்படாத உலகியல் முதலியவற்றை, கொள்கைகளாகச் சைவ சமயத்தில் காணப்படும் அனைத்தையும் ஆங்கில மொழியில் எடுத்து விளக்கப் பெறவில்லை என்றும், குறிப்பிடத்தக்க பேராற்றலும், அயரா உழைப்பும், சீரிய பக்தியும் கொண்ட அருளாளர்களால் இடைக்காலத்தே இச்சீரிய சமயம் புத்துயிர்ப்பும் மறுமலர்ச்சியும் பெற்றுச் சிறந்தது என்று அக்கிருத்தவப் பேரறிஞர் சான்றாக நமக்கு விளக்கம் தருகிறார்.

தமிழகத்தின் மாண்பு

பக்தி என்பது தமிழகத்தில் பிறந்தது மராத்திய மாநிலத்தில் வளர்ந்து பருவம் எய்தியது. குசராத்தில் முதுமை எய்தியது என்று பத்ம புராணத்தில் ஒரு செய்யுள் கூறுகின்றது என்பர். உலகில் அன்பு செலுத்தும் தனிநெறி; பிறர் நலத்திற்காகத் தொண்டு புரியத் தூண்டும் தூநெறி தொண்டன் என்ற சொல்லால் அடியவனைக் குறிக்கும் தமிழகப் பக்தி நெறி மாண்பை நம்மிற் பலர் புரிந்து கொள்ளவில்லையே தவிர உலகம் நன்கு உணர்ந்து கொண்டு இருக்கின்றது.

நாகரிகம் என்பது ஒரு மரத்திற்குச் சமம். அதன் வேர்கள் அறநெறி உணர்வுகளே, ஆனால் நம்மிற்பலர் அதனை ஒத்துக்கொள்ளவில்லை. இந்த வேர்கள் இல்லாவிட்டால், இம்முதுமரத்தின் கிளைகள் உலர்ந்துவிடும்; இலைகளில் உதிர்ந்து விடும், நாகரிக வரலாற்றில் அறநெறி உணர்வுகளின் விழுமிய உள்ளடக்கத்தை வளப்படுத்திய பெருமையும் உரிமையும் ஆசியாவிற்கே உண்டு என்று டாக்டர் எசு.இராதாகிருட்டினன் அவர்கள் பொன்னெழுத்துக்களால் அறியமுடிகின்றது.

ஆசியாவில், குறிப்பாக இந்தியா, தமிழகம் இந்த வகையில் பீடு நடை கொண்டு நிற்கு உரிமையுடையது.

சித்தாந்த சால்பு

தத்துவக் கொள்கைகளில் பழமையானது குறிப்பாகத் தமிழகத்தில் சைவசித்தாந்தம் மிகத் தொன்மையானதாகும். தமிழ் மக்களின் உயர்ந்த தெளிவான சிந்தனைகள் அடங்கிய சித்தாந்த மரபு உலகையும், இறைவனையும் கூர்ந்து நோக்கி ஆராய்ந்துள்ள அறிவாராய்ச்சியை வேற்றுச் சமயத்தவரும் மனம் திறந்து பாராட்டுகின்றார் என்றால் வேறு கூறவேண்டிய தேவை இல்லையன்றோ?

சைவ சித்தாந்தர் திராவிட அறிவியல் நுட்பத்தின் உயர்நிலைப் படைப்பாக உள்ளது. விரிவானது, முடிவு நிலை உண்மையோடு மிகமாக நுட்பாக அணுகி நிற்கும் அக முகத் தொடர்பு வாய்ந்தது. மெய்ப்பொருள் ஞானங்கள் எல்லாவற்றிலும் மாண்புடையதாக உள்ளது. இது தென்னிந்திய தமிழ் மெய்ப்பொருள் ஞானப்பனுவல் மரபுடையது என்று பாராட்டும் டாக்டர் சி.யூ.போப் அவர்கள் வரை நடுநிலை வாய்ந்ததாகும்.

சித்தாந்தங்கள்

சைவசித்தாந்த ஞானப் பனுவல்கள் கூறும் உயிர்ப் பொருளின் உலக வாழ்விற்கு உடந்தையாக ஆனவம், கன்மம், மாயை என்ற மும்மலங்கள் உள்ளன. திருவருளால் இறைசார்ந்து வாழும் நிலை பந்த நிலை (பெத்த நிலை) திருவருளால் இவற்றின் தொடர்பு நீங்கி ஞான உணர்வினால் கடவுளை அனுபவிக்கும் நிலை முக்திநிலை (சுத்த நிலை) இந்த சுத்தநிலைப்பேறு எல்லா உயிர்க்கும் உரியது. ஆனால் அதன் பக்குவ காலத்தில் மட்டும் அனுபவிக்க வாய்ப்பது. இவ்வகையிற்றொடர்புடைய மூன்று பொருள்களாகிய இறைவன் (பதி) உயிர் (பசு) உலகு (பாசம்) என்றும் உள்ள பொருள்கள், உண்மை அறிவியல் கோட்பாடுகளுக்கு முரண்படாத வகையில் இம்முப்பொருள் இயல்புகளை உரிய முறையில் கற்றுக் கேட்டுத் தெளிவாரே உண்மை ஞானம்

பெறுவர். அவர்களே வீடுபேற்றிற்குரியவர். வீடுபேறு என்பது உயிர் தன் தன்மை கழிந்து சிவமாகிய இறைவனோடு ஒன்றாய் நின்று அனுபவிக்கும் ஆராத பேரின்ப நிலை.

காலம் கடந்த தத்துவச் சிந்தனை மரபு

சைவ சித்தாந்தத் தத்துவம் மெய்கண்டார் அருளிய சாத்திரப்பனுவலாக மற்ற அருளாளர்கள் அருளிய அரும்பனுவல்களாக மலரத் தொடங்கிய காலம் பிற்காலமாக இருக்கலாம். ஆனால் அந்தத் தத்துவக்காலம் கடந்த பேருண்மைகள் காலங்காலமாக இந்த நாட்டில் பரவி இருந்தவை. தேவார மூவர் திருப்பாடல்களால் அவற்றைக் கீழே தெளிவுற்றுக் காணலாம்.

''கானன்றி வேறொன்றில்லாத் தத்துவனை''

என்றும்

''ஐயஞ்சின் அப்புறத்தானும் ஆரர் அமர்ந்த அம்மானே''

என்றும்,

''தத்துவம் தலை கண்டறி வாரிலைத்
தத்துவம் தலைகண்டவர் கண்டிலர்
தத்துவம் தலை நின்றவர்க் கல்லது
தத்துவனலன் தன் புகலூரனே''

என்று அப்பரடிகளார் அருளும் கருதும் போது, தத்துவ ஆராய்ச்சியும் சிந்தனையும் அடியார்க்கு முந்தியன என்ற உண்மை இனிது விளங்கும். சமயத் தத்துவநெறியில் அடிகளார் காலத்திற்கு முற்பட்ட தமிழ்ச்சிந்தனைகள் உண்டு என்ற கருத்து ஆழ்ந்து சிந்திக்க வேண்டியது. பக்தி இலக்கிய காலத்திற்கு முன்பே தோத்திர சாத்திரங்கள் இருந்து வந்தன. அதனாலன்றோ அப்பரடிகளும், தோத்திரமும் சாத்திரமும் ஆனார் தாமே என்று அழகுறப் பாடுவாராயினர். இலக்கண முழுநூல் அருளிய தொல்காப்பியரும் கடவுள் என்ற சொல்லாலும் வினையின் நீங்கிய அறிவின் முனைவன் என்ற தொடராலும் முதற்பொருளைச் சுட்டினர். இம்முதற்பொருளைத் தம் மெய்யுணர்வினால் தலைப்பட்டுக் கண்டு இன்புற்ற நம் சைவ சமய குரவர்கள், அதன் தன்மை, இயல்பு முதலியவற்றைத் தம்

திருமொழிகளில் பிரித்தோதினர். அதனை உட்பொருள் என்றே உணர்த்தினர்.

> ''காற்றைச் செஞ்சடையான் உளன்
> நாம் உளோம்''

என்றனர் அப்பரடிகளார். இம்முதற்பொருள் உண்மைக் கொள்கையினைத் திருவள்ளுவரும் தம் முதலதிகாரத்தில் இனிது விளக்கினார்.

முடிவுரை

தமிழ் இலக்கியத்தில் சமயம், தத்துவம், பண்பாடு இவற்றின் ஆழமான பதிவுகள் இலக்கியப் பனுவல்களில் ஏராளமான சிந்தனை மரபுகள் கொட்டிக் கிடக்கின்றன. சைவ சமய வளர்ச்சிக்கும் சமய மறுமலர்ச்சிக்கும் பெரும் பங்களிப்பினைப் பதிஞானம் பெற்ற திருஞானசம்பந்தரும், இறையொளி பெற்ற நாவரசர் என்ற திருநாவுக்கரசரும், சுந்தரரும் சிவனைக் கண்டு கொண்ட மூவர் ஆவர். இவர்கள் உழைப்பும் சமயப் பங்களிப்பும் மறுமலர்ச்சியும் ஆய்வுக் களங்களாகவே பார்க்க முடிகின்றது. ஆய்வாளர் கருத்துப்படி சமயங்கள் சமுதாய அடிப்படை மாற்றத்திற்காகவே என்பதைச் சைவ சமயத்தை நிறுவ பல்வேறு களங்களும் தமிழ்மொழியின் தொன்மை மரபைச் சுமந்து செல்லும் பெட்டகம் என்றே குறித்து அளவிடலாம்.

11. சைவத் தமிழ் நெறிப்பரவலும் செல்வாக்கும்



சுசிலா மகாலிங்கம்
மெய்கண்டார் அருள்நெறி மன்றம்
மதுரை

முன்னுரை

சிந்து சமவெளி நாகரிகம் உலகிற்குத் தெரிந்தது முதல் சைவ சமயத்தின் பழமையும் கால எல்லை கடந்து நிற்கின்றது. சில வழிபாடும் சிவ நெறியின் அடிப்படைக் கொள்கைகளும் வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட தொன்மை உடையவை. சிறியதும் பெரியதுமான சிவலிங்கங்களைக் கண்ட ஆராய்ச்சியாளர் வியப்புற்று சைவ சமயம் கணித்தறிய முடியாத பழமை உள்ளது எனக் கூறியுள்ளனர். சங்கச் செய்யுட்களும், பெருங்காப்பியங்களும் அக்கால மக்கள் சிவனையே முழுமுதற் கடவுளாகக் கொண்டிருந்தனர் என்பதைக் கோடிட்டுக் காட்டுகின்றன. இக்கட்டுரை பண்டைக்காலம் முதல் கி.பி. 13 ஆம் நூற்றாண்டு வரையில் சைவம் வளர்ந்து வந்த வரலாற்றையும், பின்பு பல காரணங்களால் சைவம் தேய்ந்து வந்த வரலாற்றையும் இன்றும் சைவம் வளரத்தகும் வழிகளையும் வரலாற்று முறையில் தெரிவிக்கின்றது.

வேதகால சைவம்

கி.மு. 1500ற்கும் 500ற்கும் இடைப்பட்ட வேதகாலத்து நூல்களில் வருகின்ற உருத்திரன், இயமன் முதலான தெய்வங்களின் கலவையாகவே பின்னாளில் ஈசன் எழுந்தான் என்பர். இருக்கு வேதத்தில், எவ்வித முக்கியத்துவமும் இல்லாமல், யிகச்சில பாடல்களிலேயே போற்றப்படும் உருத்திரன், யசுர் வேதத்தின் திருவுருத்திரப் பகுதியில் இன்றைய சிவனாக வளர்ந்து நிற்பதைக் காணலாம்.

சங்ககாலமும் சைவத்தமிழ் நெறியும் (கி.மு.-கி.பி. 300)

சங்க காலத்தில் சிவன் - ஆலமர் செல்வன்,

முக்கண்ணன், பெருந்தேவன் முதலிய பல பெயர்களால் வழிபடப்பட்டார். சங்ககாலக் கடவுளர் வரிசையில் சிவனே முதலிடம் பெற்று விளங்கினார் என்பதை மதுரைக் காஞ்சி போன்ற சங்க இலக்கியங்கள் மூலம் அறியலாம். முருக வணக்கமும் கொற்றவை வழிபாடும் இருந்தன.

சங்ககாலம் தொட்டு செந்தமிழ் நாட்டில் உருவான காப்பியங்களும் இலக்கியங்களும் தமிழ்ச்சுவையை மட்டும் ஊட்டுவனவாக இல்லாமல் அற சிவநெறியையும் ஊட்டுவனவாக இருப்பது தெளிவு. திருஞானசம்பந்தர் தம் அருட்பாடல்களைத் திருநெறிய தமிழ் என்று குறிக்கின்றார். கிறித்து காலத்திற்கு முன் தமிழ்நாட்டில் சமயம் பரப்பும் கணக்கர்கள் இல்லை. ஆனால் சமயம் பரப்பும் கணக்கர்கள் தமிழ்நாட்டில் நிலைக்கத் தொடங்கிய பின்னர் மக்கள் அமைதி வாழ்வை இழக்கத் தொடங்கினார்கள். இக்காலத்தில் தான் உலகப் பொது மறையான திருக்குறள் உதித்தது. ஆயினும் திருவள்ளுவர் காலத்திற்குப் பின் சிவநெறி உச்சநிலையில் இருப்பினும், பிற தெய்வ வழிபாடும் பிற சமயப் பிரச்சாரமும் இருந்தன என்பது கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் தோன்றினவாகக் கருதப்படும் சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் நூல்களால் புலனாகிறது.

> நூதல்விழி நாட்டத்து இறையோன் முதலாப்
> பதிவாழ் சதுக்கப் பூத மீறாக

என்பது மணிமேகலை,

> ''பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
> அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்''

என்பது சிலப்பதிகாரம்

பல்லவர் காலத்தில் சைவ சமயம் (கி.பி. 300-கி.பி.900)

பல்லவர் ஆட்சி ஏறத்தாழ ஆறு நூற்றாண்டுகள் நடந்ததாயினும் கி.பி. 7,8 மற்றும் 9 ஆகிய நூற்றாண்டுகளில் உன்னத நிலையை அடைந்தது. கி.பி. 4,5,6 ஆகிய நூற்றாண்டுகளில் திருமூலர், காரைக்காலம்மையார் போன்ற

நாயன்மார் சைவ சமயத்தை வளர்த்து வந்தனர். இக்காலத்தில் திருமூலர் திருமந்திரத்தை இயற்றினார். சமணாக இருந்து அப்பரைத் துன்புறுத்திய மகேந்திரவர்மன் சைவனாக மாறி குணபராசுவரம் கோயிலைக் கட்டினான். பின்னர் வந்த மன்னர்களான நரசிம்மவர்மன், பரமேசுவரவர்மன், இராசசிம்மன், நந்திவர்மன், பிற்காலப் பல்லவர்களால் சைவமும் தமிழ்நெறியும் தழைத்தோங்கின. பல்லவர் காலத்தில் மெய்ப்பொருள் நாயனார், சிறுத்தொண்ட நாயனார், கலிக்காம நாயனார், கோட்புலி நாயனார் முதலிய நாயன்மார்கள் தோன்றி சைவ நெறியைப் போற்றி வளர்த்தனர். இதனால் சாதி வேறுபாடுகள் குறைந்தன.

சோழர் காலத்தில் சைவ சமயம் (கி.பி.900-கி.பி.1300) சைவத்தின் உன்னதகாலம்

சோழர்கள் பேரரசை ஏற்படுத்தி ஆண்ட நானூறு ஆண்டு காலம் (கி.பி.900-1300) இந்தியா முழுவதும் சைவசமயம் நன்கு வளர்ந்த காலமாகும். காசுமீர் நாட்டில் பல சிவன் கோயில்கள் சிறபுற்றிருந்தன. கோயில்களை அடுத்து மடங்களும் தோன்றி வளர்ந்தன. நேபாள நாடு அசோகருக்கு முன்பிருந்தே பெரிய சைவமடத்தைப் பெற்ற நாடாக இருந்தது. அங்குள்ள பசுபதி கோயிலும் அதனைச் சார்ந்த சைவமடமும் சிவாசாரியார் பலரைத் தோற்றுவித்தன. கூர்ச்சரம், கத்தியவார் நாடுகளிலும் சிவன் கோயில்கள் சிறபுற்றிருந்தன. அப்பகுதியையாண்ட சாளுக்கிய மன்னர்கள் லகுலீச பரசுபத ஆசார்யர்களைத் தாங்கள் கட்டிய மடங்களின் தலைவர்களாக வைத்தனர்; அவர்களிடம் தீட்சை பெற்றுத் தங்களைப் பரம மாகேசுவரர் என்று கூறிக்கொண்டனர். தங்கள் கல்வெட்டுத் தொடக்கத்தில் ஓம் நமசிவாய என்று எழுதினர். இவர்தம் ஆட்சியில் லகுலீசர் தோன்றிய காரோணநகர் சிறப்புற்றது. இலகுலீச பாசுபதரும் சிறப்புற்றனர். இக்காலத்தில் சைவம், இந்திய உபகண்டத்தில் மாத்திரமன்றி, தென்கிழக்காசியா வரை மிகச்சிறப்புடன் திகழ ஆரம்பித்தது. பாதாமி சாளுக்கிய மன்னன் விக்கிரமாதித்தன் (கி.பி.660) கீழைக்கங்கன் தேவேந்திரவர்மன் (682,683) காஞ்சியின் இரண்டாம் நரசிம்ம பல்லவன் (680-728)

போன்றோர், சைவ ஆச்சாரியர்களிடம் மகுடாபிசேகம் பெற்றே பட்டம் சூடிக் கொண்டதற்கான தரவுகள் கிடைத்துள்ளன. கம்போடியாவின் அங்கோர் வம்சத்து முதல் மன்னன் ஈசானவர்மனும் சைவத்துறவியிடமே இராச்யாபிசேகம் பெற்றுக் கொண்டதும், சாவகத்து மயாபாகித்துப் பேரரசு மன்னன் விசயன் சைவ மகுடாபிசேகம் பெற்று நாட்டை ஆண்டதும் தென்கிழக்காசிய வரலாற்றில் பொறிக்கப்பட்டுள்ளது.

சேர-சோழ பாண்டியருள் சைவத்துள் மிகவும் அழுத்தமான பற்றுடையவரும் நூற்றுக்கணக்கான சிவன் கோயில்களைக் கட்டியவரும் சோழரேயாவர். அழுத்தமான சைவப் பற்றுடைய சோழர்கள் பல்லவரை முறியடித்துச் சோழப் பேரரசை ஏற்படுத்திய பிறகும் சைவத்தை வளர்ப்பதிலேயே கண்ணுங்கருத்துமாய் இருந்தனர். ஆதித்த சோழன் (கி.பி. 871-907) செய்த திருப்பணிகளுள் சிறந்தது காவிரியின் இருகரைகளிலும் இருந்த பாடல்பெற்ற கோயில்களைப் புதுப்பித்தமையாகும். பாடல்பெற்ற கோயில்கள் அழியத்தக்க மண், மரம் முதலியவற்றால் ஆனவை. சோழன், அவை அழியாமலிருக்க வேண்டி அவற்றைக் கற்றளிகளாக்கினான்.

ஆதித்தன் மகனான முதற்பராந்தகன் (கி.பி.907-953) சிறந்த சிவபக்தன்; புலவர் புரவலன்; இவன் செய்த திருப்பணிகளுள் மிக்க சிறப்புடையது தில்லைச் சிற்றம்பலத்தைப் பொன்வேய்ந்தது. பராந்தகன் மூத்த மகனான இராசாதித்தன் திருநாவலூர்க் கோயிலுள் ஒரு புதிய கோயிலைக்கட்டினான். இராசாதித்தன் தம்பியான கண்டராதித்தர் (கி.பி.947-957) திருவிசைப்பா ஆசிரியருள் ஒருவர். அவர் திருப்பழனத்துக்குப் பக்கத்தில் கண்டராதித்த சதுர்வேதி மங்கலம் என்ற ஊரை உண்டாக்கினார். அங்கு சிவன் கோயிலைக் கட்டினார்.

தன் காலம் வரையிலும் தமிழகத்தில் ஏற்பட்டிராத பெரிய அளவில் மிக அற்புத வேலைப்பாடுகள் கொண்ட கோயிலை அமைத்தவன் முதலாம் இராச ராசனே ஆவன். அவன் ஆறுஆண்டுகள் அரும்பாடுபட்டுத் தஞ்சைப் பெரிய கோயிலைக்

கட்டினான். திருநாரையூர் நம்பியாண்டார் நம்பியைக் கொண்டு தில்லையில் அடக்கம் செய்யப்பட்டிருந்த முதல் ஏழு திருமுறைகளைத் தொகுப்பித்தான். இவன் சிவபாத சேகரன் என்று பாராட்டப்பட்டவன். இவன் காலமுதல் திருமுறைகள் நாடெங்கும் பரவலாயின. முதலாம் இராசேந்திரன் (கி.பி.1012-1044) முதற் குலோத்துங்கன் (கி.பி.1070-1120) விக்கிரம சோழன் (கி.பி. 1120-1135) இரண்டாம் குலோத்துங்கன் (கி.பி. 1133-1150) இரண்டாம் இராசராசன் (கி.பி.1146-1173) மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி.1178-1218) எனப் பல சிற்றரசர்கள் சைவ நெறியைப் பரப்பினார்கள்.

தமிழும் சைவமும் முக்காலமும்

திருமுருகாற்றுப்படை காலம் தொடங்கித் தமிழ் மக்கள் வழிபடு கடவுளர்களிடையே உறவுமுறை கற்பிக்கும் பழக்கம் ஏற்பட்டது. எனவே, அவ்வகையில் தாய்த் தெய்வ வழிபாடாகிய சக்தி வழிபாடு, முருக வழிபாடு, கி.பி. ஐந்தாம் நூற்றாண்டுக்குப்பின் தமிழகத்தில் தோற்றம் கொண்டு வளர்ந்த கணபதி வழிபாடு, சிவன்-சக்தி-முருகன் அம்சமாகக் கருதப்பட்ட சிறுதெய்வ வழிபாடு என்பன எல்லாம் ஒருங்கிணைந்த சிவவழிபாட்டின் அங்கங்களாயின. தமிழில் கடைச்சங்ககாலம் முதற் கொண்டு, 20-ஆம் நூற்றாண்டின் இறுதி வரை தோற்றம் கொண்ட பல்வேறு வகையான இலக்கியப் பரப்பில், அறுபது விழுக்காட்டு இலக்கியங்கள் சைவ சமயம் குறித்து எழுந்தன என்பது நன்கு நினைவு கூறப்படவேண்டியதாகும். யாதும் ஊரே யாவரும் கேளீர் என்ற தொடருக்கு அடுத்துத் தமிழ் இனப்பெருமை பேசும், ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்ற சமய சமரசத்தை முன்வைத்த திருமூலரின் திருமந்திரம், சைவம் தந்த தமிழ் இலக்கியக் கொடைகளும் சிறப்பாகக் குறிக்கத்தக்கது. என்னை நன்றாக இறைவன் படைத்தனன், தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே எனக் கட்டியம் கூறித் தொடங்கும் திருமூலர், சைவத்தைத் தோத்திர நெறியிலிருந்து சாத்திர நெறிக்கு எடுத்துச் சென்றார். கி.பி. 14ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில். அறிவாராய்ச்சிக்கு உட்படுத்தக்கூடிய அறிவியல் பூர்வமான சைவ சித்தாந்தம் என்ற

பெருநெறி தோன்றி வித்திட்டவர் திருமூலர். கி.பி. 650 காலப்பகுதி தொடங்கி, 550 அண்டுகாலம் தமிழ்மொழியைச் சைவ சமயமே ஆட்சி செய்தது. கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் 12-ம் நூற்றாண்டு வரை அளப்பரிய சிறப்புடைய சைவப் பனுவல்களும், சிற்றிலக்கியங்களும், பெருங்காப்பியங்களும் தோன்றின. பிற்காலச் சோழர்களின் எழுச்சியும், நால்வர் பெருமக்களின் வருகையும், சைவம் வழித் தமிழ்மொழிக்கு விலைமதிப்பற்ற ஆபரணங்களை அணிவிக்கக் காரணமாயின. பெரும் சமயப் போராட்டம் நிகழ்த்திய சைவர்கள், வெற்றிவாகை சூடி, தமிழ் அன்னைக்கு அரியணை தந்தனர். நாளும் இன்னிசை யால் தமிழ் வளர்க்கும் ஞானசம்பந்தன், நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன் நாவினுக்கு அரையன் என்ற சுந்தரர் பதிவுகள் அன்னார் இருவரும் சைவத்தின் பெயரால் தமிழ்வளர்த்த திறம் உரைத்தன. இவ்வாறு சைவமும் தமிழும் மக்களின் வாழ்வில் இருகண்களாயின.

வள்ளுவத்தையும், பதினெண் கீழ்க்கணக்கில் உள்ள ஏனைய நூல்களையும் வழிமொழிந்து, சைவநெறி நின்ற ஔவையார், குமரகுருபரர், சிவப்பிரகாசர், உலகநாதர் போன்றோர் ஆகிய எளிய அறநூல்களைச் சைவத்தின் பெயரால் வடித்தமைத்தனர். கச்சியப்பரின் கந்தபுராணம், பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடல் புராணம், சிவஞான சுவாமிகளின் காஞ்சிப் புராணம் என்பன தமிழன்னைக்குச் சூட்டப்பெற்ற விலைமதிப்பற்ற ஆபரணங்கள். சிற்றிலக்கியம், தனிப்பாடல் வரிசையில் சித்தர்கள் ஆற்றிய பங்கும் மகத்தானது. ஒட்டக்கூத்தர், புகழேந்தி, பட்டினத்தார், தாயுமானார், சிவப்பிரகாசர், குமரகுருபரர் சைவத்திருமடத்து தலைவர்கள் அருளாளர்கள் வழங்கிய நூல் தொகுதிகள் கணக்கில் அடங்காதவை.

சைவம் மீண்டும் செல்வாக்குப் பெற நாம் செய்ய வேண்டுவன

1. பொது மக்களுக்குப் புரியும் வகையில் எளிய வகையில் சைவ சமய வரலாறு, சைவ சமயக் கொள்கைகள், சைவம் வாழ்க்கையோடு தொடர்பு கொண்டுள்ள தன்மை,

திருக்கோயில்களின் சிறப்பு, அவற்றை மக்கள் பயன்படுத்தும் முறை, சைவ சித்தாந்தத்தின் தெளிவான கருத்து இவற்றைச் சிறுசிறு நூல்களாக வெளியிட்டுப் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்க வேண்டும்.

2. வீணானவையும் வாழ்க்கைக்குப் பயன் படாதனவுமான கதைகளைச் சொல்லி மக்களை மேலும் மூடர்களாக்காமல் சமய நெறியில் வாழ வழி அமைத்துத் தருதல் வேண்டும்.

3. பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல் என்ற முறை பற்றிப் பொதுமக்களுக்குச் சிறிதும் பயன்தராத விழாக்களையும், ஆரவாரங்களையும் ஒழித்து அவற்றிற்குச் செலவாகும் பணத்தை ஏழைச் சைவ மக்களுக்கு உதவி, அவர்களைச் சிவநெறியில் வாழ்விக்க வழிசெய்தல வேண்டும். மக்களை வாழ்விக்கத்தகும் முறையில் சிவபிரான் தொழிற்சாலை போன்ற கடவுட் பெயர்களால் தொழிற்சாலைகளை நிறுவ வேண்டும்.

4. சைவ மக்கள் தங்கள் இல்லங்களில் பிறக்கும் குழந்தைகளுக்குச் சைவப் பெயர்கள் வைப்பது நல்லது. சிவநெறிச் செல்வன், தேவாரச் செல்வன், நெடுமாறன், கோட்புலி, கண்ணப்பன், கழற்சிங்கன் என்றாற்போல நாயன்மார் பெயர்களையும் திருமுறைகளில் வரும் அரும் பெயர்களையும் வைத்து வழங்குதல் பழமையைப் புதுப்பித்து நிலைக்கச் செய்வதாகும். இவ்வாறே பெண் பிள்ளைகளுக்கு மங்கையர்க்கரசி, சிவ அரசி, வெண்காட்டு நங்கை, சந்தன நங்கை முதலிய சைவப் பெயர்களை வைக்கலாம்.

5. சைவர் தம் ஊர்களில் ஏற்படும் புதிய தெருக்களுக்குச் சேக்கிழார் தெரு, சம்பந்தர் தெரு, ஆலால சுந்தரர் தெரு எனச் சைவப் பெயர்களை வைக்க ஏற்பாடு செய்யலாம். இவ்வாறே தம் வளமனைகளுக்குச் சேக்கிழார் அகம், சுந்தரர் அகம் எனப் பெயர்களைச் சூட்டலாம்.

6.

12. சைவத்தமிழ்

கு. இந்துபாலா
மெய்கண்டார் அருள்நெறி மன்றம்
மதுரை

சைவத்தமிழ் தொண்டு

திருப்பனந்தாள் சிறி காசிமடம் இமயம் முதல் குமரி வரை செந்தமிழும் சிவநெறியும் வளரப் பெருந்தொண்டு புரிந்து வருகின்றது. இந்த மடத்திற்குச் சீரும் சிறப்புமிக்க தமிழ்நூல்கள் இயற்றி இருள் பெற்ற ஆதி குருமூர்த்தி சிறி குமரகுருபர சுவாமிகள் ஆவார்கள்.

சைவத்தமிழ் வளர்த்த ஆதீனங்கள்

திருமுறைக் களஞ்சியங்களைப் போற்ற வாழ்பவையும், வாழ்விப்பவையும் தென்னாட்டுச் சைவமடங்களாகும். திருமுறைகளைக் கண்ணென போற்றி மக்களுக்கு .அருள் ஞானத்தை வழங்குவது. திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம் என்பது கண்கூடு. திருமுறைகள் ஓதாய் மனமே உனக்கென்னவாய் என்று தருமை ஆதீனம் முதல் குருவராகிய குருஞான சம்பந்த பரமாச்சாரிய மூர்த்திகளும் அருளி உள்ளார்கள்.

சமுதாயப் பணிகள்

1. 16க்கும் மேற்பட்ட முக்கிய திருக்கோயில்களுக்கும், பல சிறிய கோயில்களுக்கும் திருப்பணிகள் செய்து திருக்குடமுழுக்கு நடத்தினார்கள்.

2. ஆதீன வெளியீடாக 300க்கும் மேற்பட்ட நூல்கள் இவர்களால் வெளியிடப்பட்டன. ஒவ்வொரு திங்களிலும் மகம் நட்சத்திரத்தில் திருவாவடுதுறைத் திருமடத்திலும் பலதிருக்கோயில்களிலும் கிளை மடங்களிலும் திருவாசகம் முற்றோதல் திருப்பணி நடத்தி வருமாறு செய்துள்ளார்கள். அதே போன்று அசுவதி நன்னாளில் நமசிவாய மூர்த்திகளின் தோத்திரப் பாக்கள் பாடுமாறு அருளியுள்ளார்கள். உழவாரப்

பணி செய்து வரும் அன்பர்களுக்கு உணவு உடை வழங்கி ஊக்குவித்தார்கள். நலிவடைந்த திருக்கோயில்கள், திருமடங்களின் பூசைக்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

சைவ சமய இலக்கியங்கள்

1. இராசவல்லிபுரம் அகிலாண்டேசுவரி பதிகம், 2.பஞ்சாக்கர தேசிகர் மாலை, 3.கம்பராமாயண முதற்செய்யுள் சங்கோத்த விருத்தி, 4.திருத்தொண்டர் திருநாமக்கோவை, 5.வடதிருமுல்லை வாயில் அந்தாதி, 6.சோமேசர் முதுமொழி வெண்பா, 7.இளசைப் பதிற்றுப்பத்து அந்தாதி, 8.திருஏகம்பர் அந்தாதி, 9.கச்சி ஆனந்த ருத்திரேசர் பதிகம், 10.திருஏகம்பர் ஆனந்தக்களிப்பு, 11.கலசைப் பதிற்றுப்பத்து அந்தாதி, 12. செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ், 13. குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ், 14. குளத்தூர் பதிற்றுப்பத்து அந்தாதி ஆகிய நூல்கள் மடத்தின் சார்பில் வெளிவந்துள்ளன.

சைவத்தமிழ் சிற்றிலக்கியங்கள்

பைந்தமிழ் மொழியின் பரந்து விரிந்த நூற்பரப்பில் பிரபந்தம் என்னும் சிற்றிலக்கிய வகை பன்னூறு இன் கவிதை நூல்களைத் தன்னகத்துக் கொண்டது. சமயம் சார்ந்த இலக்கியங்களும் வரலாற்றுச் சான்று கூறும் இலக்கியங்களும் இவ்வகையினவே, சிற்றிலக்கியங்களுள் பல, தொல்காப்பியர் வகுத்த அகத்துறை, புறத்துறைகளை அடிப்படையாகக் கொண்டு தோன்றின. அவற்றுள் பிள்ளைக்கவி என வழங்கும் பிள்ளைத்தமிழ் என்னும் வகையில் பெருங்கவிஞர்கள் ஏராளமான கவிதை நூல்கள் இயற்றினார்கள். கவிச்சக்ரவர்த்தி, ஒட்டகக்கூத்தர் இயற்றிய குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ் இவ்வகையில் அமைந்த மிகப்பழைய நூல் 17ஆம் நூற்றாண்டில் மிகப்பல பிரபந்தங்கள். இயற்றிய முனிவர் குமரகுருபரால் மதுரை அருள்மிகு மீனாட்சி அம்மையின் மேல் இயற்றப்பட்ட மீனாட்சிஅம்மை பிள்ளைத் தமிழும், வைத்தீசுவரன் கோயில் அருள்மிகு செல்வ முத்துக்குமார சுவாமி மேல் செய்யப்பட்ட முத்துக்குமார சுவாமி பிள்ளைத் தமிழும் மிகச்சிறந்த நூல்களாகும்.

செந்தமிழ் தத்துவ நூல்கள்

இதுகாறும் எடுத்துக்காட்டியவற்றால் சைவத் திருமுறைகள் பன்னிரண்டினையும், சிவஞானபோதம் முதலிய மெய்கண்ட நூல்கள் பதினான்கினையும் ஒப்பு நோக்கி ஆராயுமிடத்து சிவஞானபோதம் முதலிய சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்குக்கும் பொதுவாக உலகப் பொதுமறையாகிய திருக்குறளையும் வேதசிவாமகக் கருத்துக்களையும் தழுவியனவாய்ச் சிறப்பாக சைவத்திருமுறைகள் பன்னிரண்டினையும் மூல இலக்கியங்களாகக் கொண்டு அவற்றினின்றும் தெளிந்துரைப் பெற்ற தத்துவ உண்மைகளை விரித்துரைக்கும் செந்தமிழ்த் தத்துவ நூல்களாகத் திகழ்கின்றமை இனிது புலனாகும்.

சைவத்தமிழ் நெறி வளர்த்த வரலாறு

அருளோடு கூடிய சிவபரம்பொருளே திரு. அதாவது பெறத்தக்க செல்வம் அதை நாடி அடைந்ததின் பயனாய் அடியார்கள் பெற்ற இன்பம் அவர்கள் உள்ளத்தினின்றும் தோத்திரப்பாடல்களாக ஊற்றெடுத்து ஆறாய், அருவியாய் பெருவெள்ளமாய்த் தமிழ்நாடு எங்கும் இரண்டாம் நூற்றாண்டு முதல் பன்னிரண்டாம் நூற்றாண்டு வரை பரவி ஓடியது. அத்தோத்திரப் பாடல்களை அருளிச் செய்தவர் திருஞானசம்பந்தர் முதல் சேக்கிழார் பெருமான் வரை உள்ள இருபத்தேழு அருள் ஆசிரியர்கள் ஆவர். அவைகள் தமிழரசர் வேண்டுகோளின்படி பன்னிரண்டாக வகுக்கப்பெற்று தொகுக்கப்பட்டன. அத்தொகையே பன்னிரு திருமுறை என்பது. முறை என்னும் சொல் நூல் என்னும் பொருள் கொண்டு நிற்கின்றது.

13. திருஞானசம்பந்தரின் காலமும் வரலாறும்

ஆர். வெண்ணிலா
ஆய்வாளர், வரலாற்றுத்துறை
ஏ.வி.சி . கல்லூரி (தன்)
மண்ணம்பந்தல், மயிலாடுதுறை

முன்னுரை

திருஞானசம்பந்தர் காலம் யாது என்பது ஆராய்வதற்குரியது. காலத்தை ஆராய்ந்தோர் மாறுபட்ட கருத்துக்களை அளித்துள்ளனர். கூன்பாண்டியன் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியவன் என்றும், அதனடிப்படையில் திருஞானசம்பந்தர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர் என்றார் திரு.சி.வை. தாமோதரம்பிள்ளை.

விடம் தீண்டப்பட்ட வணிகன் எழுப்பப்பட்ட சிலப்பதிகாரக் கூற்றினைத் திருவிளையாடல் கூற்றுடன் இணைத்து இலங்கைக் கயவாகுவுக்கு முன் கிறித்து சகத்தின் தொடக்கத்தில் வாழ்ந்தவர் திருஞானசம்பந்தர் என்றார் குமாரசாமி. தேவார ஆசிரியர்களைக் கரிகாலன் காலத்துடன் காட்டினார் கீல்சு என்பார்.

"சோழ பூருவ பட்டயத்தின்" அடிப்படையில் தேவார ஆசிரியரின் காலம் கி.பி. 5ஆம் நூற்றாண்டு என்றார் திரு சைமன் காசிச் செட்டியார். ஞானசம்பந்தர் காலத்தை ஆராய்ந்த பேராசிரியர் மனோன்மணியம் சுந்தரம்பிள்ளையவர்கள். ஆதிசங்கரரை ஆதாரம் காட்டினார். சங்கரருக்கு முந்தியவர் என்றார். திருஞானசம்பந்தர் கி.பி. 7 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவர் என்றார்.

கி.பி.642ல் ஏற்பட்ட வாதாபி வெற்றிக்குப்பின் பரஞ்சோதியாருக்குச் சீராளன் தோன்றினான். சீராளனின் மூன்றாம் வயதில் ஞானசம்பந்தர் திருச்செங்காட்டங்குடிக்குச் சென்றார் என்று பெரியபுராணம் காட்டுகின்றது. இது கி.பி. 647

அளவில் நிகழ்ந்திருக்கும். பன்னிரு திருமுறைகளின் வரலாற்றை ஆராய்ந்த வெள்ளைவாரணனார் சீராளன் கி.பி. 644-ல் பிறந்தான் என்றும், ஞானசம்பந்தர் கி.பி. 647-ல் திருச்செங்காட்டாங்குடி சென்று பரஞ்சோதியாரைச் சந்தித்தார் என்றும், அப்போது அவருக்கு வயது 9 என்றும் கி.பி. 638-ல் ஞானசம்பந்தர் பிறந்தார் என்றும் துணிந்தார்.

மகேந்திரவர்மனை மதம் மாற்றிய காலகட்டத்தில் அப்பரின் வயோதிகக் காலத்தில் சம்பந்தர் வாழ்ந்தவர். அவருடன் தலயாத்திரை செய்தவர். சேர்ந்து பதிகம் பாடியவர். இவரை ஆதிசங்கரர் தன்னுடைய சௌந்தரிய இலகரி என்ற நூலின் (சமற்கிருதம்) திராவிட சிசு என்றார். எனவே இவர் ஆதிசங்கரருக்கு முந்தியவர். நரசிம்மவர்ம பல்லவனின் தளபதியாக இருந்த பரஞ்சோதியாருக்குச் சீராளன் தோன்றிய மூன்றாமண்டில் திருஞானசம்பந்தர் பரஞ்சோதியாரைத் திருச்செங்காட்டங்குடியில் சந்தித்துள்ளார். கி.பி.7 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஞானசம்பந்தர் வாழ்ந்தார் என்பதற்கு இவை சான்றுகளாகும்.

வரலாறு

ஞானசம்பந்தர் வரலாற்றுடன் கதைகள் பல கலந்து கிடக்கின்றன. வரலாற்றுத் துணுக்குகளின் துணைகொண்டு வரலாற்றை அறிய வேண்டும்.

சமண, புத்த சமயங்கள் தமிழகத்தில் மேலோங்கி இந்து சமயம் குன்றியிருந்த காலத்தில் தோன்றினார் திருஞான சம்பந்தர். சீர்காழி இவருடைய பிறப்பிடம் பகவதியம்மையாரும் சிவபாத இருதயமும் இவரைப் பெற்றதால் பெருமையடைந்தனர். தமிழ் வழக்கின்படிப் பெயரிட்டு, தொட்டிலில் அமர்த்தி, திருக்காப்பிட்டு மகிழ்ந்தனர் பெற்றோர். ஞானசம்பந்தர் இளம்வயதிலேயே ஞானம் பெற்றுப் பதிகம் பாடத் தொடங்கினார். சிறுவனாக இருந்த போதே தந்தையின் துணையுடன் சிவாலயங்களுக்குச் சென்றார். திருநனிப்பள்ளி சென்று பதிகம் பாடினார். பின்னர் திருத்தலைச் செங்காடு, தில்லை, திருபெண்ணாகடம் போன்ற பல தலங்களுக்குச்

சென்று பதிகம் பாடினார்.

திருமணம்

திருஞானசம்பந்தர் திருமண வயது அடைந்த நிலையில் பெற்றோர்கள் திருமணத்திற்கு வற்புறுத்தினர். இசைவில்லாத மனத்துடன் உட்பட்டார் ஞானசம்பந்தர். திருப்பெருமண நல்லூரில் மணம் பேசி வேத முறைப்படி மங்கல அணிகளுடன் திருக்காப்பு நாணிட்டு நகர்வலம் புரிந்து, சுற்றத்தார், அடியார் புடைசூழப் பெருமணநல்லூர் சென்றார். முறைப்படி மணம் நடைபெற்றது. அனைவரும் மணக்கோயிலுக்குச் சென்றனர். ஆனால் எவரும் வீடு திரும்பவில்லை. அனைவரும் எரியும் சோதிக்குள் மறைந்தனர் என்ற செய்தி கதைவடிவில் சுழன்றது. ஞானசம்பந்தரின் வேண்டுதலுக்கிணங்கச் சுற்றத்தாருடன் மணமக்களைச் சிவனார் கைலாயத்தில் ஏற்றுக்கொண்டார் என்று கதை கூறுகின்றது. அத்துமீறும் நம்பிக்கையும் ஆராயும் வரலாறும் இங்கே மோதுகின்றன. எதிர்பாரா வினைக்கிரையாயினர் என்று தான் வரலாறு துணியும்.

ஞானசம்பந்தர் சிவனை முதல் உருவக் கடவுளாகவும் சோதியாகவும் கண்டார். அவர் பல தலங்கள் சென்று 8000 பாடல்களுக்கு மேல் பாடினார். அவை திருமுறைகளில் முதல் மூன்று திருமுறைகளாக முதலிடம் பெறுகின்றன. கல்லையும் கனியவைக்கும் பாடல்களில் ஞானசம்பந்தருக்குச் சமணர்களிடத்திலிருந்த வெறுப்புணர்வு இலைமறை காயாகத் தொனிக்கிறது. தமிழகத்தில் சமணம் மறைவதற்கு இவர் மூலக் கருவியாக விளங்கினார். ஞானமார்க்கத்தில் சென்றவர் சிறு பருவத்தினராய்த் தோன்றியதால் ஆளுடைய பிள்ளை எனப்பட்டார்.

14. மெய்கண்டார் அருள்நெறி மன்றம்

விசயலெட்சுமி ரத்தினம்
மெய்கண்டார் அருள்நெறி மன்றம்
மதுரை

முன்னுரை

தமிழோடு நான்முகனின் மனைவி சரசுவதிதேவி தன் பதியினால் பெற்ற சாபத்தின் விளைவாய்ப் பூமியில் நாற்பத்தெட்டு இடங்களில் நாற்பத்தெட்டு இனத்தில் பிறந்து வளர்ந்து வந்தார். தக்க வயது வந்த பின் அறிவும் புலமையும் பெற்று, உருத்திராக்கம் அணிந்து திருநீறணிந்து, பாமாலையும், பூமாலையும் சூட்டிச் சிவபூசை செய்து வந்தனர்.

புலவர்கள் நாற்பத்தெட்டு பேர்களும் நாடுமுழுவதும் சுற்றித் தங்கள் புலமையின் வலிமையால் எதிர்த்தவர்களை எல்லாம் வென்று பாண்டிய நாட்டிற்கு வந்தனர். சோமசுந்தரப் பெருமான் புலவர் வேடங்கொண்டு அவர்களை வரவேற்று, கோயிலுக்குஅழைத்துச் சென்று வழிபடச் செய்து மறைந்தார். புலவர்கள் வியப்படைந்து, இது சிவபெருமானின் அருட்செயலே என்று தெளிவடைந்து சோமசுந்தரப் பெருமானை வகை வகையான தமிழ்ப் பாடல்கள் பாடி தோத்திரம் செய்து வணங்கினர்.

பின்னர் பாண்டியனது அரசவைக்குச் சென்றனர். அங்கே சேர பாண்டியனும் அவர்கள் அனைவரையும் வரவேற்று உபசரித்தான். பரிசுகள் பல வழங்கிச் சிறப்புச் செய்தான். மேலும் சோமசுந்தரப் பெருமானின் ஆலயத்திற்கு வடமேற்கே சங்க மண்டபம் ஒன்றையும் நிறுவி அதிலே புலவர்களை இருக்கச் செய்தான்.

சங்கப் புலவர்கள் அனைவரும் சேர்ந்து திருக்கோயில் சென்று சோமசுந்தரப் பெருமானை முறைப்படி துதித்து வணங்கினர். எம்பெருமானே பலர் தொடர்ந்து வந்து எங்களோடு வாதம் புரிகின்றனர். ஆதலால் அவர்களது

புலமையைச் சீர்தூக்கி அளக்கும் கருவியாக சங்கப் பலகையொன்று எங்களுக்குத் தந்தருள வேண்டும் என வேண்டினர். சொக்கநாதப் பெருமான் புலவர் போல் உருக்கொண்டு ஒரு பலகையை அவர்களுக்கு கொடுத்தருளினார். புலவர்களே இப்பலகை இரண்டு சான் சதுர அளவு உள்ளது. வெண்மையானது, தூய்மையானது, மந்திரசக்தி கொண்டது. அறிவிலே சிறந்தவர்கள் வந்தால் ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொரு முழமாக வளர்ந்து அவர்கள் அமர இடம் கொடுக்கும் ஆற்றல் உடையது. பிறர் திறமை அளக்கும் கருவியாக இப்பலகை உங்களுக்குப் பயன்படும் என்று இயம்பி சங்கப் பலகையைத் தந்தருளி மறைந்தார். புலவர்கள் அத்திருப் பலகையைப் பாங்கான இடத்தில் வைத்து பூமாலை சூட்டி, பன்னீர் தெளித்து சந்தனம் குங்குமம் இட்டு தூபதீபம் காட்டிப் பூசை செய்து வணங்கினார்.

சங்கப்பலகையின் மேல் முதன்முதலாக நக்கீரரும், அடுத்து கபிலரும், பாரணரும் அமர்ந்தனர். மற்ற புலவர்களும் ஒவ்வொருவராக ஏற, பலகையும் ஒவ்வொரு முழமாக வளர்ந்து அவர்கள் அமர இடம் கொடுத்தது. நாற்பத்தெட்டுப் புலவர்களும் எண்ணிலடங்கா தூயதமிழ்ப் பாக்களை இயற்றினர். எந்தப் பாடலை யார் பாடியது என்று அறிந்துக் கொள்ள வழியில்லாமல் இருந்தது. அது சமயம் சோமசுந்தரப் பெருமானை வேண்ட, இறைவன் புலவர் உருக்கொண்டு தோன்றினார். புலவர்கள் தங்கள் செய்யுட்களைகக் கொண்டு வாருங்கள் என்றார். ஒவ்வொரு பாடலாகப் படித்துப் பார்த்து, ஆராய்ந்து இது உம்முடையது, இந்தப் பாடல் உம்முடையது என்று அவரவர் ஏற்று மகிழும் வண்ணம் தந்தருளினார். எம்பெருமானின் தகைமையைக் கண்டு வியந்து, எம்பெருமானே தாங்களும் எங்களோடு ஒரு புலவராய் இருந்து அருள வேண்டும் என்று வேண்டிக் கொண்டனர். தெய்வப் புலவரான எம்பெருமான் சங்கப் பலகையில் நடுநாயகமாக வீற்றிருந்து தமிழ்ச் சங்கத்திற்குப் பெருமை சேர்த்தார். இவ்வாறு எம்பெருமானின் கருணையால் சைவத்தமிழும், தமிழ்ச் சங்கமும் வளர்ந்தது.

பாணபத்திரர் என்னும் புலவர் சோமசுந்தரப் பெருமானிடம் மிகுந்த பக்தி கொண்டு எந்நேரமும் கோயிலில் பக்தி ரசம் பொருந்திய பாடல்களை எம்பெருமான் முன்பு பாடிக் கொண்டிருப்பார். பாணபத்திரர் வறுமையில் வாடுவது கண்டு அவருக்கு உதவ நினைத்தார் எம்பெருமான். சேரமான் பெருமான் என்ற மன்னனுக்கு திருமுகக் கடிதம் எழுதிக் கொடுப்பதாக பாணபத்திரரின் கனவில் வந்து கூறினார். கண் விழித்த பாணபத்திரர் பக்கத்தில் சோமசுந்தரர் எழுதிய திருமுக ஓலை இருப்பதைக் கண்டு மகிழ்ந்தார். கோயிலுக்குச் சென்ற எம்பெருமானின் திருமுக ஓலையை யானைமேல் வைத்து ஊர்வலமாகக் கொண்டு சென்றான். இறைவன் ஆணைப்படி பாணபத்திரருக்கு வேண்டிய உதவி செய்து மகிழ்ந்தான். சேரநாடு எல்லை வரை வந்து பாணபத்திரரை வழியனுப்பி வைத்தான். சேரமான் பெருமானிடம் உதவி பெற்ற பாணபத்திரர் அடியார்களுக்குத் திருவமுது படைத்து மகிழ்ந்தார். இவ்வாறு இறைவனே தன் கைப்பட திருமுக ஓலை எழுதி வளர்த்த தமிழ் நம் சைவ நெறித் தமிழாகும்.

மற்றொரு சமயம் தருமி என்ற புலவன் வறுமையைப் போக்க தானே பாடல் எழுதித் தருமியிடம் கொடுத்தனுப்பினார். அப்பாடலைக் கேட்ட மன்னன் தருமிக்குப் பரிசளித்தான். பாண்டியன் சபையில் தலைமைப் புலவரான நக்கீரர் அப்பாடலில் பொருட்பிழை இருப்பதாகக் கூறினார். இறைவனே நேரில் வந்து வாதம் செய்தும், நக்கீரர் பயப்படாமல் நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்று வாதாடினர். நெற்றிக் கண்ணின் வெப்பம் தாழாமல் பொற்றாமரைக் குளத்தில் மூழ்கியிருந்தார் நக்கீரர். இவ்வாறு ஒரே சமயத்தில் நக்கீரரின் தமிழ்ப் புலமையையும் சோதித்து வறுமையில் வாடிய புலவர் தருமிக்கும் பரிசு கிடைக்கச் செய்து தமிழோடு விளையாடினார் எம்பெருமான்.

குதிரைகள் வாங்குவதற்காகப் பாண்டியன் கொடுத்த பொற்காசுகளைத் திருப்பெருந்துறையில் இறைவனுக்குக் கோயில் கட்டினார் மாணிக்கவாசகர். அவர் எழுதிய தேன்தமிழ்

திருவாசகத்தில் மகிழ்ந்த இறைவன் பாண்டியனிடம் பிரம்படி பட்டான் மாணிக்கவாசகருக்காக.

சங்ககாலத்தில் சிறு சிறு தனிச் செய்யுள்கள் தோன்றின. இடைக்காலத்தில் தொடர்நிலைச் செய்யுள்கள் காப்பியங்கள் பிறந்தன. பிற்காலத்தில் பிரபந்தங்களும், புராணங்களும் எழுதப்பட்டன. அவை யாவுமே கடவுள் வழிபாட்டை முன்னிலைப்படுத்தி எழுதப்பட்ட சைவத் தமிழ் பாடல்களாகும். சமண மதத்தைச் சார்ந்திருந்த மகேந்திர பல்லவனைத் திருநாவுக்கரசரும், தெற்கே நின்ற சீர் நெடுமாறன் பாண்டியனை ஞானசம்பந்தரும் தங்கள் பக்தியாலும், தமிழ்ப்பற்றாலும் சைவர்களாக மாற்றினர். பின் அவ்வேந்தர்கள் உதவியோடு சைவத் தமிழை வளர்த்தனர். தேவாரம் போன்ற தமிழ் பாடல்களைக் கோயில்களில் இன்னிசையோடு பாட வேந்தர்கள் ஏற்பாடு செய்தனர். இவ்வாறு இறைவனின் கருணையோடும், அரசர்களின் உதவியோடும் சைவநெறித் தமிழ் வளர்ந்தது.

15. கந்தபுராணத்தில் சைவநெறிகளும் கடவுளர்களின் தோற்றங்களும்



முனைவர் சிவ.சண்முகசுந்தரம்
காஞ்சிபுரம்

முன்னுரை

சிவபெருமானின் முக்கண்களாகத் தமிழரால் வழங்கப்படும் சிறப்புடைய புராணங்கள் திருத்தொண்டர் புராணம். திருவிளையாடல் புராணம், கந்தபுராணம். இவை முறையே வலம், இடம், நெற்றிக்கண்ணாகக் கூறப்படுகின்றன. இந்நூல்கள் முறையே 4286, 3363, 10345 பாடல்கள் கொண்டன. இவை முறையே 12,16,11ஆம் நூற்றாண்டுகளில் சேக்கிழாராலும் பரஞ்சோதி முனிவராலும் கச்சியப்ப சிவாசாரியாராலும் அருளிச் செய்யப்பட்டுள்ளன. இங்குக் கந்தபுராணத்தில் நாம் காணும் சைவ நெறிகளையும் கடவுளர்களின் தோற்றங்களையும் மட்டும் காண்போம்.

கடவுள் வணக்கம்

கந்தபுராணத்தின் எல்ல இடங்களிலும் சைவ சமயத்தின் நெறியாகிய ஏகநாயகன். அதாவது இறைவன் ஒருவனே என்னும் முறையில் சிவபெருமானின் மேன்மையே சொல்லப்படும். கந்தபுராணத்தின் இடைப்பகுதியில் உள்ள யுத்த காண்டத்திலும் போரில் கந்தப்பெருமான் வெற்றிபெற்றுத் தேவர்களைக் காத்தல் வேண்டும் என்னும் நோக்கில், ஆரண முடிவும் தேறா அநாதியாய் உயிர்கட்கெல்லாம் காரணனாய மேலோன் கழலிணைக் கருத்துள் வைப்பாம் (ஏமகூடப்படலம்-1) என்று இறைவனுக்கு வணக்கம் கூறுதல் காணலாம்.

மும்மூர்த்திகளினும் மேம்பட்டவர்

பிரமன், திருமால், சிவன் என்னும் மும்மூர்த்திகளுள் சிவபெருமானே உயர்ந்தவர் என்பதனைப் பிரமனே. தக்கனுக்கு

விளக்கமாகக் கூறும் பொழுது, எல்லா உயிர்களினிடத்தும் தாம் உயிராய் நின்று அவற்றைச் செயல்படுத்துபவர் என்றும், நம் மனத்தினுள்ளும் இரு கண்களாலும் காணும் பொருளாகவும் காணப்படும் பொருளாகவும் விளங்குகின்றார் என்றும் அறிவு மயக்கம் பொருந்திய நிலையில் எம்முள் தோன்றி அருள்புரிவார் என்றும் எங்களைப் போன்று தானும் ஒரு தொழிலினை ஏற்று அதனைச் செயல்படுத்துகின்றவர் போன்று எங்களுடன் கலந்து ஒரு சேர விளங்குகிறார் என்றும் இயம்புகிறான் *(6-1-11)* இக்கூற்றுக் காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல் காண உள்ளத்தைக் கண்டுகாட்டலின் சிவஞானபோதம் சூ*0-11*இன் அடிப்படையில் விளங்கக் காணலாம். இதன் வாயிலாக உயிர்களிடத்தில் உள்ளவாறே சிவபெருமான் மும்மூர்த்திகளிடையேயும் ஒன்றாய் வேறாய் உடனாய் விளங்குவது உணரலாம்.

சிவபெருமானின் மேன்மைகள்

அப்பெருமான் என்னினுள் எண்ணெய் போலவும் அடிக்கப்படும் மணியில் எழும்பும் ஒலி போலவும் மலர்களில் மணம் போலவும் நல்ல மணிகளின்றும் நீக்க இயலாத பேரொளி போலவும் எல்லா உலகங்களிகூலும் எல்லாவற்றுக்கும் உள்ளும் புறமுமாக ஒன்றுபட்டுப் பரந்து விளங்குகின்றார். (மேற்படி, 12)

ஆறுகள் அனைத்தும் இறுதியில் கடலையே சென்றடைவது போல் எந்த ஒரு பொருளை எவர் வணங்கினாலும் அச்செயல், மூன்று கண்கள் உடைய முதற்பொருளாகிய சிவபெருமானையே சென்று சேரும் (மேற்படி, 17) என்னும் கருத்து, யாதொரு தெய்வம் கொண்டீர். அத்தெய்வமாகி ஆங்கே மாதொரு பாகனார்தாம் வருவர் என்னும் சிவஞான சித்தியார் சூ.2.25 ஆம் பாடலுடன் ஒப்பிட்டுவருதல் அறியலாம்.

அப்பெருமானே தந்தையாகவும், கடவுளாகவும் உருவம் அற்றவராகவும் உருவம் உடையவராகவும் இயல்பாகவே தூய்மையானவராகவும் அறிவினால் அறிதற்கரிய பேரொளி பொருந்தியவராகவும் எங்கும் நீக்க மற நிறைந்து மாய

வித்தைகளில் எல்லாம் வல்லமை உடையவராகவும் தொன்மையானவரும் தேவர்களுக்கெல்லாம் முதல்வராகவும் என்றும் அழியாது இருப்பவரும் உயிர்களின் உள்ளிருந்து இயக்குபலருமாக விளங்குகின்றார் அவரே, விண்ணுலகம், மண்ணுலகம், பாதாள உலகம் எனப்படும் மூன்று உலகங்களிலும் தோன்றக்கூடிய பொருள்களையெல்லாம் படைத்து அவற்றைக் காக்கும் தந்தையாகவும் அவற்றுக்குப் புகலிடமாகவும் அவருக்கு ஒப்பாக வேறொருவர் இல்லாதவராகவும் சிறந்த குருவாகவும் திகழ்கிறார்.

மனத்திருந்த கருத்தறிந்து முடிப்பாய்-6-38-3 என்னும் தேவாரப் பாடல் கருத்தினை எண்ணிய எண்ணியாங்கே ஈபவன் தானும் என்னும் பாடலடி அறிவிக்கிறது. எல்லா உயிர்கட்கும் பதியாக விளங்குபவர் சிவபெருமான். சிவன் என்று உள்ள ஒப்பற்ற முதற்பொருளே அனைத்து உயிர்களுக்கும் முத்திப் பேற்றினை அளிப்பவர். மேகம் போன்று கருமையான உடலை உடைய திருமாலையும் பிரமனாகிய என்னையும் நூல்களுள் புகழ்ந்து கூறப்படும் இடங்கள் உண்டாயின் அவையாவும் உபசார வழக்கே என்றும் அவரே ஆதியும் அந்தமும் இல்லாதவர் சிவபெருமானின் திருவருளாகிய கருணை பெறாமல் வீடுபேற்றினை அடைந்தவர் எவரும் இல்லை. அவர் திருவருள் இல்லாமல் வாழ்கின்ற தேவர்களும் இல்லை. அவர் திருவருளைப் பெற்றால் பெறாத அரிய பொருள்கள் எவையும் இல்லை என்பது உறுதி. எனவே எவரும் அப்பெருமானையே அடைக்கலம் அடைந்து யாவரும் உய்வு பெற வேண்டும் (மேற்படி,32) என்று பிரமன் தக்கனுக்குக் கூறும் உபதேசங்கள் வாயிலாக அறியலாம்.

தக்கனின் பிள்ளைகளுக்கு நாரதமுனிவர் வீடுபேறு பெறும் நெறியினை வளக்கிக் கூறுங்கால் முழுமுதற்கடவுளான சிவபெருமானின் திருவடிகளை அப்பெருமானின் திருவருளால் முறைப்படி வழிபடும் தன்மை உடையவர்கள் செயற்படும் வழிகள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு என்றும் அவற்றுள் ஞானமுடையோர் பெறுவது உயர்ந்த மேலான சாயுச்சிய நிலையாகும். (தக்கன் மகப்பெறு படலம்

பா.46) என்றும் அறிவிக்கின்றார். அவரை அன்புடன் வழிபட்டு இருவினை ஒப்பும் மலபரிபாகமும் அற்ற பண்புடையோர்களால் முத்தி என்னும் நிலையினை உணரலாமே அல்லாமல் தேவர்களாலும் அந்நிலையினை அறிய இயலாது சாயுச்சிய நிலையினைப் பெற்றவர்களே சிவபரம்பொருளுடன் இரண்டறக் கலந்து எந்நாளும் இன்புற்றிருப்பர் என்று அப்பரம்பொருளை அடைவதற்குரிய நெறிகளைக் கூறுகின்றார்.

ஒரு காலத்தில் சந்திரன் விநாயகப் பெருமானின் உருவம் கண்டு ஏளனமாகச் சிரித்தான். அதனால் அவனுடைய கலைகள் தேய விநாயகர் சாபமிட்டார். தக்கனின் இருபத்தேழு பெண்களுள் கார்த்திகை, உரோகிணி என்னும் இருவரைத் தவிர மற்றவர்களை வெறுத்து வாழ்ந்தமையால் சந்திரன் தக்களால் அவனது கலைகள் தேயுமாறு சாபம் பெற்றான் என்றெல்லாம் கந்தபுராணம், சந்திரன் சாபம் பெற்றதற்குரிய காரணங்கள் கூறும். அச்சந்திரன் பிரமனின் அறிவுரையால் சிவபெருமானை அடைக்கலம் அடைந்து தன் குறையைப் போக்கிக் கொண்டான்.

''இடுக்கண் அங்கு ஒருவர்மாட்டு எய்தின் எந்தைதன்
அடித்துணை அரணம் என்று அடைவரே எனில்
துடைத்து அவர் வினைகளும் தொலைக்கும்''

- மேற்படி, 29

என்னும் பாடலடிகளால் சிவபெருமானின் அடைக்கலம் அடைந்தவருக்குக் கருணைபுரியும் இயல்பினை அறியலாம்.

அருளது சத்தியாகும் அரன் தனக்கு - சிவஞான சித்தியார் பரபக்கம் உலகில் படைக்கப்படும் உயிர்க் கூட்டங்கள் அனைத்திலும் நிலைத்து நின்று அவற்றின் பாசத்தை அகற்றும் பொருட்டு ஒப்பற்ற தம் அருட்சத்தியை நினைத்து இச்சாசத்தி, கிரியா சித்தி, சிற்சத்தி, ஞானசத்தி, பராசத்தி என்னும் ஐந்து வகையான சத்திகளைப் படைத்தருளியும் சகல வடிவு கொண்ட இருபத்தைந்து மகேசுவர வடிவங்கள் என்னும் ஞான உருவங்களாய் விளங்கும் தன்மையும் எங்கும் நிறைந்துள்ள சுத்த மாயையினின்று உலக நிகழ்வுகளைச் செயல்படுத்தியும் முதன்மையான சுத்த மாயை, அசுத்த மாயை, பிரகிருத மாயை

என்னும் மாயைகளினின்றே அழிவில்லாத முப்பத்தாறு தத்துவங்களும் தோன்ற அருள்புரிந்தும் முறையே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் அருளல் என்னும் ஐந்து தொழில்களையும் மனத்தில் கொண்ட கருணையால் அத்தொழில்களைச் செய்தும், படைக்கப்படும் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்னும் மூவகை ஆன்மாக்களும் ஒன்றிலிருந்து ஒன்று மேம்பட்டு விளங்கும் தத்துவக் கணங்களாகி அவையாவும் தோன்றிய முறையிலேயே ஒடுங்குமாறு செய்தும் தாம் மட்டும் ஒப்பற்ற ஒரே பரம்பொருள் தன்மையில் எண்ணிச் சிவமாய்த் தனித்து நிலைத்து நிற்றலையும் சிவபெருமான் ஆகமங்களும் வேதங்களும் கூறும் முறையில் தம் மேன்மையினை விரித்தும் பகுத்தும் தொகுத்தும் உமையம்மைக்குக் கூறியதாக, உமை கயிலை நீங்கு படலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

சிவனை வழிபடும் முறை

சிவபெருமானின் திருவருளால் தோன்றிய ஏகாதசருத்திரர்கள் சிவபெருமானை அயன், அரி, உருத்திரன், சதாசிவன், மகேசன் என்னும் ஐவகை கருத்தா வடிவங்களும் எண்ணத்தக்க உருவம், அருவம், அருவுருவம் என்னும் மூவகை இயல்புகளுள் மண்டல விதிப்படி அருவுருவத் திருமேனியாகிய இலிங்க வடிவத்தை உருவாக்கி இறைவனுக்குரிய வழிபாட்டு முறையில் ஆத்மசுத்தி, தானசுத்தி, திரவியசுத்தி, மந்திரசுத்தி, இலிங்கசுத்தி என்னும் பஞ்சசுத்தில் செய்து சிவச்சின்னங்கள் தரித்து பதினாறு வகையான உபசாரங்களுடன் திருவைந்தெழுத்து மந்திரம் ஓதி அந்தரியாகம் என்னும் அகப்பூசனை செய்தனர். நறுமணமிக்க மலர்கள் கொண்டு வழிபாடு செய்தனர். நான்கு யாமங்களிலும் இவ்வாறு வழிபாடு செய்து இறைவனுக்கு உகந்த பச்சைப் பயிற்றுஞ்சோறு, பாற்சோறு, எள்ளுச்சோறு, நல்ல வெறுஞ்சோறு ஆகியனவற்றை நைவேத்தியமாகப் படைத்தனர் என்றும் உமை கயிலை நீங்கு படலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

சிவனை வழிபடுதலின் நோக்கம்

இறைவனது அருள் பெறவில்லையெனில் உயிர்கள் எல்லாம் சடப்பொருளாகவே விளங்கும் என்பதனை, யாங்கள் எல்லாம் உன்னருள் உறாத நீரால் உணர்வு ஒரீஇச் சடமதாகிப் பன்னெடுங்காலம் வாளா இருந்தனம் என்று பிரமன் முதலான தேவர்களின் கூற்று வாயிலாக அறியலாம்.

சிவனே பதி

ததீசி முனிவர், பிரமன் வாயிலாக, ஒப்பற்ற சிவபெருமானே பரம்பொருள் என்று வேதங்கள் எல்லாம் மொழிகின்றன. இன்னும் அத்தகையவரின் மேன்மையினை பிரமனாகிய நானும் திருமாலும் தியானித்தும் தேடியும் காண இயலாதவர்களானோம். ஆகவே பதி எனப்படும் தலைவர் அவரே ஆவர். மற்றவர்கள் எல்லோரும் பசுக்கள் எனப்படும் நிலைபெற்ற உயிர்க் கூட்டங்கள் ஆவர் என முனிவர்களுக்கும் பரம்பொருளின் மேன்மையினை உணர்த்தினார்.

கந்தப்பெருமானின் கருணை

தனக்குத் தானே மகன் ஆகிய தத்துவன் சிவபெருமான். கந்தபுராணம் கந்தனின் மேன்மையை உணர்த்த வேண்டும் ஆதலால் முருகப் பெருமானைப் பரத்தினும் மேற்படு பண்ணவன் - யுத்தகாண்டம், சிங்கமுகாசுரன் வதைப்படலம் பரத்தினும் மே.த.கு. பண்ணவன் - மேற்படி, சூரபண்மன் வதைப் படலம் என்று சிவபெருமானினும் மேம்பட்டவர் என்று உபசார வழக்கில் கூறப்பட்டுள்ளமை உணரலாம்.

முடிவுரை

இங்குச் சைவநெறிக் கருத்துகளாகச் சிவபெருமானின் மேன்மை, இயல்பு உணர்த்தும் செய்திகள் சிலவே சொல்லப்பட்டுள்ளன. சைவநெறி பற்றிச் சொல்லப்படாத கருத்துகளே இல்லை என்று கூறத்தக்க அளவில் கந்தபுராணம் ஒப்பற்ற மாக்கதைத் தமிழ் இலக்கியமாகத் திகழ்கிறது.

16. சங்க இலக்கியங்களில் காணலாகும் சைவ நெறிக் கோட்பாடுகள்



ஆர்.இராசேசுவரி சிறிதர்
கீழ்க்கட்டளை
சென்னை

சங்க இலக்கியங்களில்

இன்றைக்கு இருக்கும் தமிழ் இலக்கிய, இலக்கணங்களில் மிகத் தொன்மையானவை தொல்காப்பியமும், சங்க இலக்கியங்களும் ஆகும். இவற்றுள் தொல்காப்பியத்துள் சிவன் என்னும் சொல் வழக்கு இன்றேனினும், அப்பொருளைக் குறித்தற்குரிய ஆதாரமான தொடர் ஒன்று காணப்படுகிறது. அது வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் என்பதாகும்.

நால்வகை நிலத் தெய்வங்களாகக் குறிக்கப்பட்டவர்கள் முருகன், திருமால், இந்திரன், வருணன் ஆகிய நால்வருமாவர். இந்நால்வரில் முருகன் சிவத்தோடு தொடர்புடையவன். சிவபெருமானின் மகன் எனக் குறித்துப் போற்றப்படுபவன். இந்திரனும், வருணனும் தேவர்கள் ஆவர். இனித் திருமால் சிவத்தின் வேறாக வைணவ சமயத்திற்குரிய கடவுளாகப் போற்றப் பெற்றவரினும் அவரும் சிவத்தின் ஒரு கூறாகிய சக்தியின் அம்சமாகக் கருதப்பெற்று வருபவராவர். அரியலால் தேவியில்லை ஐயன் ஐயாறனார்க்கே என வரும் அப்பர் அடிகள் திருவாக்கு இதனை உறுதிபடுத்தும். இவரின் சிவபெருமானுக்கே தலைமையும், முதன்மையும் கொடுத்துச் சங்க இலக்கியங்கள் பாராட்டியுள்ளன. அன்றியும் திருமால் ஒரு நிலதெய்வமாகப் போற்றப் பெற்றமையும் அவர்க்குரிய இடம் இன்னதென விளங்குகிறது.

சங்க இலக்கியங்களில் சிவபெருமான் என வரும் சொல் இல்லை எனினும், சிவபெருமானுக்கு நாம் வழிவழியாகக் கூறிவரும் திருவுருவச் சிறப்புகளும் அவர்தம் ஆற்றலும் குணங்களும் விரிவாகக் குறிக்கப்பெற்றன.

1. ''நன்றாய்ந்த நீள்நிமிர் சடை முதுமுதல்வன்''

2. ''ஆதிரை முதல்வன்''

3. ''நீரும் நிலனும் தீயும் வளியும்
மாகவிசும் போடு இந்துடன் இயற்றிய
மழுவாள் நெடியோன் தலைவனாக''

4. தொல்லூழி தடுமாறித் தொகல் வேண்டும் பருவத்தால், பல்வயின் உயிரெல்லாம் படைத்தான் கண் பெயர்ப்பான் போல்

எனவரும் தொடர்களால் சிவபெருமானே முதல்வன் என்பதும், இவ்வுலகைக் காத்தும், படைத்தும், கரந்தும் விளையாடுபவன் என்பதும் விளங்குகன்றன. இனிச்சங்கம் மருவிய காலத்து எழுந்த சிலப்பதிகாரமும், சிவபெருமானைப் பெரியோன் என்னும் சொல்லால் அழைத்துள்ளது.

''பிறவா யாக்கைப் பெரியோன்''
''பிறைமுடிக் கண்ணிப் பெரியோன்''
''பெரியோன் தருக திருநுதலாகென''
''உலகு பொதி உருவத்து உயர்ந்தோன்''

என வருவன. இவற்றுள் உலகு, பொதி, உருவம் என்பது நிலனுய்த் தீயாகி, நீருமாகி, எரியும் காற்றுமாகி அருநிலைய திங்களாம், ஞாயிறாகி, சுட்ட மூர்த்தியாகி, நிற்கும் நிலையாம். இதனால் இறைவன் எண்வகைப் பொருளுமாகி இருப்பவன் என்பது அறியப்படுகிறது.

''தனியுறத் தாங்கிய தனிநிலைச் சலதாரி''
''பிறங்கு நீர்க் கடைக் கரந்த ன்''
''கங்கை முடிக்கணிந்த கண்ணுதலோன்''

என வரும் தொடர்களால் சிவபெருமான் கங்கை தாங்கிய கடவுள் எனத் தெரிகிறது.

''பிறைநுதல் விளங்கும் ஒருகண் போல்''

''பிறைமுடிக் கன்னிப் பெரியோன் ஏந்திய''
''குழவித் திங்கள் இமையவர் ஒத்த
அழகொடு முடித்த அருமைத் தாயினும்''

என வரும் தொடர்களால் அவன் பிறையணிந்த பெருமான் எனத் தெரிகிறது.

''அயந்திகழ் நறுங்கொன்றை அலங்கலன் தெரியலான்''
''மணிமிடற்கு மான்மலர்க் கொன்றையவன்''

என வரும் தொடர்கள் அவன் கொன்றையணிந்தவன் என்பதைக் குறிக்கின்றன.

''முக்கட் செல்வர் நகர்வலம் செயற்குப் பணிகநின் தலையே''
''நுதல் விழிநாட்டத்து இறையோன் முதலா''

என வரும் தொடர்களால் அவனுக்கு முக்கண் உடைமை பெறப்படுகின்றது.

''நீல மணிமிடற்று ஒருவன் போல மன்றுக பெரும நீயே
காரி உண்டிக் கடவுள்''

என வரும் தொடர்களால் அறியலாம். அவன், அவன் நஞ்சுண்டமையும் அவனது அழியாத தன்மையும் பெறப்படுகின்றன.

''உமையமர்ந்து விளங்கும் இமையர் முக்கண்,
முவெயில் முருக்கி முரண்மிகு செல்வனும்''

''இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்
உமையமர்ந்து ஒரு மலை ஈரந்தனனாக''

''மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே''

''உமையவள் ஒருதிறனாக ஓங்கிய இமையவன்
ஆடிய கொடு கொட்டியாடலும்''

என வரும் தொடர்களால் அவன் தானும், தன் தையலுமாய் வீற்றிருந்தமை புலனாகும். ''கொலைவன் சூடிய

குழவித்திங்கள்'' இவ்வரிய தொடர் கலித்தொகையில் வருவதாகும். ஈண்டுக் கொலைவன் என்பது சிவபெருமானைக் குறிப்பதாகும். உயிர்களின் வினை மாசு கழிய அவற்றிற்கு உலகு, உடல், கருவிகள் முதலியவற்றையெல்லாம் கொடுத்தருளும் இறைவன், ஒரு கால எல்லையில் அவ்வுயிர்கள் இளைப்பாறுதற்குத் தன்பால் ஒடுக்குவன்; அவ்வாறு ஒடுக்குதலை அழித்தல் என்பர். அச்செயல் சிவபெருமானாலேயே செய்யப்படுகின்றது. இவ்வாறு அந்தத்தைச் செய்யும் இறைவனே உலகிற்கு ஆதியாவான். தலைமையுடையவனும் அவன் எனச் சிவஞான போதம் செப்புகின்றன. இவ்வாறு அந்தத்தைச் செய்பவன் அதாவது சங்கார காரணன் எனச் சிவஞான போதத்தில் இறைவன் குறிக்கப் பெறுவதற்கு ஏற்ப, இக்கலித்தொகைத் தொடர் முன்னோடியாக அமைந்துள்ளமை அறிந்து இன்புறுவதற்கு உரியதாம். காய் கடவுள் எனப் பரிபாடலில் வரும் தொடரும் ஈண்டு நினைவு கூறத்தக்கதாம். இவ்வாறு சங்க இலக்கியங்களில் சிவபெருமானைப் பற்றி வரும் குறிப்புகள் மிகப்பலவாம்.

17. ஐவகை நிலங்களில் சைவக் கடவுளர்களின் ஆளுமை

ரெ.இராதிகா
மதிப்பியல் விரிவுரையாளர், தமிழ்த்துறை
திருவள்ளுவர் பல்கலைக்கழக மாதிரி
உறுப்புக் கல்லூரி
திட்டக்குடி

முன்னுரை

இறைவனும் இயற்கையும் விரவிக் கலந்தது சைவ சமயம். இறைவனோடு இயற்கையான ஐவகை நிலங்களும் கலந்து நிற்றலையே பழந்தமிழ் பாடல்கள் காட்டுகின்றன. பண்டைக் காலங்களின் ஐவகை நிலங்களின் சைவக்கடவுளர்கள் எவ்வாறு வழிபடப்பட்டுள்ளனர் என்பதை ஆயும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது. அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக இன்புருகு சிந்தை இடுதிரியாக என்கிறார் பூதத்தாழ்வார். நும் சிந்தை மூலம் அன்பை அகலாகவும் ஆர்வத்தை நெய்யாகவும் இட்டு ஒளியேற்றி அறிவைச் சிவபெருமானின் துணைகொண்டு சைவத்தமிழை வளர்த்திட வேண்டும் என்பது முதலாழ்வார்களின் கருத்தாகும். மெய்ஞானம் பெறுவதற்கு அன்புதான் அடிப்படை என்கிறார்.

இயற்கை கூறும் சைவக்கடவுளும்

மக்கள் தம் இன்பத்திற்காகக் கலைப்படைப்புகளை உருவாக்குவது போல் இறைவனும் தன் இன்பத்திற்காக இயற்கையைத் தமது கலைப்படைப்பாக உருவாக்கியுள்ளான். இயற்கை இறைவனின் வடிவமாக விளங்குகிறது.

திருமூலர் காட்டும் சைவம்

இந்து சமயங்களில் சைவத்தமிழாய் விளங்குவது பன்னிரு திருமுறைகள். அறுபத்து மூவரின் சைவ சமயப்பற்றினையும் பக்தியின் உயர்வையும் வெளிப்படுத்துகிறது. திருமூலர் பதினெண் சித்தர்களில் தலையாயவர். சைவ

சமயங்கள் பல தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பெரிதும் துணை செய்கிறது திருமூலர் திருமந்திரத்தில்,

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகும்கதி யில்லை நம் சித்தத்து
நின்றே நிலைபெற நீர் நினைந்து உய்மினே *(பா.2104)*

என்று திருமூலர் சைவ சமயம் ஒன்றே குலம். ஈசன் ஒருவனே தேவன். அத்தகைய தேவனே நமது பிறவித்துன்பத்தைப் போக்கி முக்தியின்பம் அளிக்கும் ஆற்றல் பெற்றவர். சமயங்களில் ஆதியில் தோன்றியது சைவ சமயம். முக்திக்குரிய எளிய மார்க்கத்தை வகுக்கும் சமயம் என எல்லோரும் விரும்பி ஏற்றனர். சைவத்தமிழும், சிவத்தமிழும் ஒன்றேயாம். திருமூலர் காட்டும் அண்டமே சிவலிங்க வழிபாட்டைச் செய்வதாகக் குறித்துள்ளார். சீவன் சிவனுள் அடக்கம், பிறப்பு, இறப்பும் ஆதியும் அந்தமும் அற்றவர் சைவக்கடவுளராகிய ஈசன்.

சம்பந்தர் காட்டும் இறைவன்

திருஞானசம்பந்தரும் இயற்கையில் இறைவன் காட்சி தருவதாகவும் திருக்கோயில்களில் இறைவன் அமர்ந்து இவ்வுலகை ஆள்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

திருவருட்பா காட்டும் சைவம்

இவ்வுலகு அதிலே இறைஅரசாட்சி
இன்பத்தும் மற்றை இன்பத்தும்
எவ்வள வெனினும் இச்சை ஒன்றறியேன்
எண்ணுதோ றருவருக் கின்றேன்
(திருவருட்பா. பா.816)

இவ்வுலகம் இயங்குவது இறைவனால் மட்டுமே. இவ்வுலக இன்பங்கள் எல்லாம் இன்பம் அல்ல. எவ்வளவு இருந்தாலும் அது நம்முடன் இணைந்து இருப்பவன். இறை ஞானம் ஒன்றே நம்மை நல்வழியில் அழைத்துச் சென்று முக்தியை அளிக்க வல்லது. இறைப்பற்றில் சைவநெறி ஒன்றையே நான் ஏற்கிறேன்; மதிக்கின்றேன் என்பது இராமலிங்கர் கருத்து. இதிலிருந்து

சைவக்கடவுளான சிவபெருமானின் சிறப்பு விளங்கும். சிவம் ஒரு யோகம். சிவபெருமான் ஒரு யோகி. அதுவே சிவயோகம். அதையே அடியார்களும் பின்பற்றுகிறார்கள். திருவருட்பாவும் அதை விளக்கிக் கூறியுள்ளது. இறைவருளின் பயனே திருவருட்பயன். அதைப் பாடுவதே திருவருட்பா, அருட்பெருஞ்சோதி, அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி என்ற தனிப்பெரும் மந்திரத்தை உருவாக்குகிறார் இராமலிங்கர்.

ஐவகை நிலமும், தெய்வமும்

பழந்தமிழகத்தில் இறைநம்பிக்கை இருந்தது. கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் வேகமாக வளர்ச்சி பெற்றது. கடவுளார் வழிபாடும் மரபுவழியாக ஐவகை நிலங்களிலும் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. இதற்குச் சங்க இலக்கியம் சான்று பகர்கிறது. குறிஞ்சி நிலத்திற்கு முருகனும், முல்லை நிலத்திற்குத் திருமாலும், மருத நிலத்திற்கு இந்திரனும், நெய்தல் நிலத்திற்கு வருணனும், பாலை நிலத்திற்குக் கொற்றவையும் தெய்வங்களாகப் பிரிக்கப்பட்டனர்.

சிலம்பில் கொற்றவை வழிபாடு

உலகில் பல நாடுகளில் பக்தியுணர்வும், சமய வளர்ச்சியும் இருப்பினும் தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில் தோன்றிய பக்தியுணர்வும், சமய வளர்ச்சியும் தனித்தன்மை வாய்ந்தவை. சிலப்பதிகாரத்தில் கண்ணகியும், கோவலனும் கொற்றவையை வழிபட்டதாகக் காட்டப்பட்டுள்ளது. கொற்றவை சைவ சமயக் கடவுளான சிவனின் துணைவியாவள். சக்தியின் வடிவமாகவே காட்டப்பட்டுள்ளது. உலகம் முழுவதும் துர்க்கை வழிபாடு இன்றளவும் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

சேவும் மாவும் செறிந்தன கண்ணுதல்
பாகம் ஆளுடையாள் பலி முன்றிலே

(சிலம்பு, வே.வரி உரைப்பாட்டு மடை.1)

என்ற வரிகளில் நெற்றிக்கண்ணினை உடைய சிவபெருமானின்

இடப்பாகம் இருப்பவள் கொற்றவை. இவ்வுலகை அன்னையாக இருந்து காப்பவள் பராசக்தியாகிய கொற்றவையாவாள். இதன்மூலம் சைவக்கடவுளர்களான கொற்றவை, முருகன், காளி என்று பல தெய்வங்களை வணங்கினர் என்பதை அறியமுடிகிறது. பிறைச்சந்திரனைத் தமது திருமுடியில் அணியாகக் கொண்ட நீண்ட சடை முடியையுடைய சிவபெருமான் பற்றிய குறிப்புகள் ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான சிலம்பில் இடம்பெறுவதைக் காணமுடிகிறது.

பரிபாடலில் சைவக் கடவுள்

சிவப்பெருமானின் தவப்புதல்வனான செவ்வேளைப் பற்றிப் பரிபாடல் விரிவாகப் பேசுகிறது. திருப்பெருங்குன்றத்தில் அடியார்கள் சிறப்பித்துப் பாடுவதைப் பரிபாடலில் காணமுடிகிறது.

தேம்படு மலர்குழை பூந்துகில் வடிமணி
ஏந்திலை சுமந்து சாந்தம் விரைஇ
விடையரை அசைத்த வேலன் கடிமரம்
பரவினர் உரையோடு பண்ணிய விசையினர் *(பா.5:1-4)*

இப்பாடலில் வேலையும், முருகனையும் முருகனுக்குரிய சேவல் கொடியையும் புகழ்ந்து பாடியுள்ளனர். சங்க இலக்கியங்களில் ஒன்றான பரிபாடலில் முருகனைப் பாடியுள்ளதிலிருந்து சைவக் கடவுளர்களின் ஆளுமையை இலக்கியப்பதிவுகள் காட்டுகின்றன.

ஐவகை நிலங்களில் பரம்பொருள் ஆளுமை

சிவசக்தியாக விளங்குபவன் இறைவன். சிவம் இல்லையேல் சக்தி இல்லை என்பது சிவ அடியார்களின் கூற்று. இறைவனானவன் அனைத்து சீவராசிகளிலும் உறைபவன். அப்பரம்பொருளே வானாகவும்-வளியாகவும்-மண்ணாகவும்-ஒளியாகவும் விளங்குவதோடு மட்டுமின்றி உயிராகவும் அவ்வுயிர் உறையும் உடம்பாகவும் விளங்குபவன். அனைத்தையும் ஆளக்கூடிய அரசனாக விளங்குபவன். அடியார்களின் உள்ளத்தில் மும்மலங்களை அழிக்கும்

கூற்றுவனாகவும் விளங்குகின்றான். இதையே மாணிக்கவாசகர் தம் திருவாசகத்தில்,

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்
கோனாகி யான் யெனதென்று அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே
(திருவாச.15)

இதிலிருந்து நாம் யான். எனதென்று சொல்லிக்கொண்டிருக்கும் உலகப்பற்றுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஆனால் உலகினுக்கே ஆதியுமாய் அந்தமுமாய் விளங்குபவன் பரம்பொருள். அனைத்துமாய் இருக்கின்ற இறைவனை நாம் வணங்கினாலே போதும் என்பது சைவநெறி. ஐவகை நிலங்களுக்கும் தலைவனாய் இருப்பவன் சிவபெருமான்.

முடிவுரை

இவ்வுலகம் மண் எனும் பெருநிலப்பரப்பைக் கொண்டது. இதில் தெற்கே குமரிக் கண்டமும், வடக்கே வேங்கட மலையும், கிழக்கே வங்கக் கடலும் மேற்கே அரபிக்கடலையும் எல்லையாகக் கொண்டுள்ளது. பண்டு ஐவகை நிலப்பரப்பிலும் கடவுளர் வழிபாடும் பக்தியுணர்வும் மிக்கு இருந்ததை இலக்கியப் பதிவுகள் காட்டுகின்றன. அதில் கல்லால் மரத்தில் சிவனும், கடம்ப மரத்தில் கந்த வேளையும் கண்டு உணர்ந்தனர். நதிகளைப் பெண்தெய்வங்களாகவே மதித்து தொழுதனர். சங்க காலங்களில் மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வை வாழ்ந்தனர். சக்தியின் வடிவமான கொற்றவை பாலை நிலத்திற்கும் மறவர்களின் தெய்வமாகவும் போற்றப்பட்டாள்.

18. அகநானூற்றில் சிவனியம் (சைவம்)

ப.லோகேசு
முதுகலைத் தமிழ்
இலக்கியத்துறை
தமிழ்ப்பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்

முன்னுரை

உலகச் சமயங்களுள் சைவ சமயம் மிகத் தொன்மையான சமயமாகும். மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை இடைவிடாது தொடர்ந்து வருவது கடவுள் வழிபாடு. இக்கடவுள் நம்பிக்கை சமுதாய ஒற்றுமை, ஒழுக்கம், மனக்கட்டுப்பாடுகள் போன்றவற்றிற்குக் காரணியாக அமைகிறது. இக்கடவுள் வழிபாடு சமயப்பற்றை உருவாக்குகின்றது.

தமிழ்ப் பண்பாட்டின் கருவூலமாகத் திகழ்வது தொல்காப்பியமும், சங்க இலக்கியங்களும் இதில் சைவ சமயக் கருத்துக்களும், சிவ வழிபாடுகளும் மிகுந்திருப்பதை அறியமுடிகிறது. சங்ககால இலக்கியமான எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான அகநானூற்றில் சிவனியம் (சைவம்) என்ற சைவக் கருத்துக்களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அகநானூறு

சங்ககால மக்கள் வாழ்க்கை முறையினை அகம், புறம் என வகுத்து வாழ்ந்தனர். அகம், அகப்பாட்டு, நெடுந்தொகை, நெடும்பாட்டு மற்றும் பெருந்தொகை நானூறு என அழைக்கப்படுவது அகநானூறு ஆகும். இதில் அகம் சார்ந்த செய்திகள் மட்டுமல்லாத வரலாற்றுச் செய்திகளை கூறும் இலக்கியமாக இது திகழ்கிறது. மேலும் பண்டைய தமிழ் மக்களின் திருமணவிழா நடைபெறும் விதம் பற்றியும், நந்தர்கள், மௌரியர்கள் பற்றியும், சோழர் கால குடவோலை முறை பற்றியும் கூறப்பட்டுள்ளது.

சிவம்

சிவம் என்றால் தமிழில் சிவந்தவன் என்று பொருள். வடமொழியில் சிவம் என்ற சொல்லுக்கு முழுமையானது. மங்கலகரமானது என்ற பல பொருள்கள் உண்டு. முதுமுதல்வன், ஈர்ஞ்சடை, அந்தணன், காரியுண்டிக் கடவுள், ஆலமார் கடவுள் போன்ற பல பெயர்கள் சங்க நூல்களில் உள்ளன. எக்கணமும் யோகநிலையில் ஆழ்ந்திருப்பதால் யோகி என்றும், அட்டமா சித்திகளில் வல்லவர் என்பதால் சித்தன் என்றும் சுடுகாட்டில் மன் பேதலித்துப் பேய்களுடன் ஆடுபவராகச் சித்தரிக்கப்படுவதால் பித்தன் எனவும் குணங்களின் அடிப்படையில் அழைக்கின்றனர். சைவம் என்ற சொல் சிவம் என்ற சொல்லுடன் தொடர்புடையது ஆகும். சிவம் என்பதற்கு செம்பொருள் என்ற பெயரும் உண்டு. எந்த ஒன்று தூய்மையானதாகச் செம்மையானதாகக் காணப்படுகிறதோ அதுவே சிவம் அல்லது சைவம் என்ற பொருளால் அழைக்கப்படுகிறது. சிவமெனுஞ் செம்பொருளைச் சாந்தம், சிவம் அத்வைதம் என்ற வேதாந்தம் வலியுறுத்துகிறது. தாயுமான சுவாமிகள் ஆண்டவனைச் சிவமெனும் நாமத்தால் போற்றுகின்றார்.

> தெய்வம் வேறுள தென்பவர் சிந்தனை
> நைவ ரென்பது நற்பர தற்பர
> சைவ சிற்சிவ நேயுனைச் சார்ந்தவர்
> உய்வ ரென்பதும் யானுணர்ந் தேனுற்றே
> (தாயுமானவர் பா.76)

என்று கூறுகிறார். திருமூலர் திருமந்திரத்தில் சிவன் என்பதைப் பற்றி எடுத்துரைக்கிறார்.

> சிவசிவ என்கிலார் தீவினை யாளர்
> சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
> சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
> சிவசிவ என்றிச் சிவகதி தானே (திருமந்திரம்:2716)

என்று கூறுகிறார். சைவ சமய வரலாறு என்னும் நூலில் சிவ என்ற சொல்லில் உள்ள சி என்ற எழுத்து இறைவன் கடந்து

நிற்கும் இயல்பையும் வ என்ற எழுத்து இறைவனின் கலந்து நிற்கும் இயல்பையும் குறிப்பதால் கடவுள் என்ற சொல்லுக்குச் சிவம் என்பதே பொருளாகும்.

அகநானூற்றில் சிவம்

அகநானூறு வாழ்த்துப் பாடலில் சிவபெருமானின் தோற்றமும் பெருமைகளும் காணப்படுகின்றது. கார்காலத்தில் பூக்கும் கொன்றை மலர்களை மாலையாகவும் கண்ணிகளாகவும் அணிந்து கொள்பவன். நெற்றியில் இமைக்காத கண் உடையவன். தோல்வியே அடையாத இவனுக்கு சில படைக்கருவிகள் உள்ளன. இவனின் வாகனம் காளைமாடு. இவனோடு ஒன்றாய்ச் சேர்ந்து இருப்பவள் உமை. பற்றி எரியும் தீப்போல சடைமுடி உடையவன். புலித்தோலை இடையில் கச்சாகக் கட்டியவன். நீலமணி போன்ற நிறத்தை உடையவன். இவனது குற்றமற்ற திருவடி நிழலில் உலகம் இயங்குகிறது. அதனால் இவ்வுலகிற்கு எவ்வித இடையூறும் இல்லை என்பதை,

''செவ்வான் அன்ன மேனி, அவ்வான்
இலங்கு பிறை அன்ன விலங்கு வால்வை எயிற்று
எரி அகைந்தன்ன அவிர்ந்து விலங்கு புரிசடை
முதிராத் திங்களொடு சுடருஞ் சென்னி
மூவா வமரரும் முனிவரும் பிறகும்
யாவரும் அறியாத் தொன்முறை மரபின்
வரிகிளர் வயமான் உரிவை தைஇய
யாழ்கெழு மணிமிடற்றந்தனணன்
தாவில் தாள் நிழல் தவிர்ந்தன்றால் உலகே''
(அகம்,க.வாழ்)

என்று சிவனைப் போற்றுகின்றார். எனவே, திருவடி நிழலின் கீழ் இவ்வுலகம் இயங்கினால் மக்களுக்கு எவ்விதத் துன்பங்களும் வராது. அத்துன்பங்களில் இருந்து போக்கி தம்மைப் பாதுகாப்பான் என்று சிவனை வழிபட்டனர். சிவனும் திருமாலும் சேர்ந்து செம்மையும் கருப்புமாக ஒருங்கே பெற்ற தோற்றத்தைப் போல அந்திச் செவ்வானமும் கடலின் நீல வண்ணமும் இணைந்ததை மாலைக்காலம் என்று அகநானூற்றில்

இடம்பெறுகின்றது. இதனை,

> ''வெருவரு கடுந்திறல் இருபெருந் தெய்வத்
> துருவுடனியையந்த தோற்றம் போல
> அந்திவானமொடு கடலனி கொளாஅ'' (அகம்.360:6-8)

என்று மதுரைக் கண்ணத்தனார் வர்ணித்துக் கூறுகிறார். எனவே அக்கால மக்கள் இவ்விரு தெய்வ வழிபாட்டினைக் கொண்டிருந்தனர். சைவ வைணவ வழிபாடு என்பது வேறு என்றில்லாமல் ஒற்றுமை கொண்டிருப்பதைக் காணமுடிகிறது. இதன் ஒற்றுமையை நோக்கும் போது சமய ஒற்றுமைப் பண்பாட்டினை அறியமுடிகிறது.

கொன்றை மாலையணிந்த சிவபெருமானின் புதல்வனாகிய குறிஞ்சித் திணைக் கட்வுளாகிய முருகனையும், அவன் வீரத்தையும் செயல்பாட்டையும் மனிதனின் செயல்பாட்டிற்கு ஒப்பிட்டுக் கூறப்படுகின்றன.

முருகனின் மார்பில் கிடக்கும் ஒளி வீசும் முத்து மாலை போலச் சிவந்த அந்திமாலைப் பொழுதானது மலர்ந்தது என்று மாலைக்கால வருணனையை முருகனின் அழகிய ஒளி வீசும் அணிகலன்களோடு ஒப்பிட்டுக் கூறப்படுகிறது.

> ''நெடுவேண் மார்பினாரம் போலச்
> செவ்வாய் வானந் தீண்டி மீனருந்தும்'' (அகம் 120:1-2)

என்று அகநானூற்றுப் பாடல் சுட்டுகிறது. மக்களின் வாழ்வில் தெய்வ நம்பிக்கைகள் அன்று முதல் இன்று வரை தொடர்ந்து காணப்படுகின்றது. மக்களின் சமய ஒற்றுமைப் பண்பாட்டினை இலக்கியங்களின் மூலம் அறியலாம். சைவமும் வைணவமும் வேறுபட்டவை என்றாலும் இரண்டும் ஒன்றே என்றும், சைவக் கருத்துக்களையும், சிவனின் தோற்றப் பொழிவினையும் முருகனின் வீரச் செயல்பாடுகளையும் இதில் அறியமுடிகின்றது.

19. சங்க இலக்கியங்களில் சிவபிரான்

முனைவர் கி.மாலதி
விரிவுரையாளர்
வரலாறு, சுற்றுலாவியல் துறை
பாரதியார் பல்கலைக்கழகம்
கோவை

முன்னுரை

இலக்கியங்கள் காலத்தின் கண்ணாடிகள். அத்தகைய கண்ணாடிகள் நாட்டின் ஆட்சியாளர்கள், நிர்வாகம், தொழில்கள், வருவாய், வரி, பண்டமாற்றம், சமுதாய கட்டமைப்புகள், சமுதாய மாற்றங்கள், நிலப்பாகுபாடுகள், சமயங்கள், நம்பிக்கைகள், சடங்குகள், அன்றாட நிகழ்வுகள் போன்றவற்றைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. மனிதன் நாகரிகமடைவதற்கு முன்னும் நாகரிக வளர்ச்சிக்குப் பின்னும் பின்பற்றிய ஒரே வழக்கம் நம்பிக்கை மட்டுமே. இயற்கையைக் கண்டு அஞ்சிய மனிதன் பின் அதை வணங்கி வழிபாடு செய்வதன் மூலம் அதனைக் காக்கும் சக்தியாகக் கருதினான். பின் உருவ அமைப்பைக் கொடுத்து பல்வேறு உருவங்களில் சடங்குகள், சம்பிரதாயங்கள் மூலம் காக்கும் கடவுளாக நம்பினான். இத்தகைய உருவ அமைப்பின் மூலம் பெண் தெய்வங்கள், ஆண் தெய்வங்கள் உருவாகின. அத்தகைய தெய்வத்தின் தலையாய தெய்வமாக ஆதி மூலமாகச் சிவனைப் போற்றினான். சிவபிரானைப் பற்றியும், அவரின் வழிபாட்டு முறையைப் பற்றியும் குறிப்பிடுவதாக உள்ள பாடல்கள் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன.

சங்க இலக்கியம்

தமிழின் பெருமையை வர்ணிக்க வரிகள் இல்லாத நிலையில் சமூகத்தின் ஆதிகுடிகள் முதல் அவற்றின் பல்வேறு பரிமாண வளர்ச்சி நிலைகளை, வரையறுத்து தொகுத்தளித்த பெருமை சங்க இலக்கியங்களுக்கு உண்டு. ஆறாம் நூற்றாண்டில் ஏற்பட்ட பக்தி இயக்கம் பக்தர்களைத் தங்களது பக்தியின்

காரணமாகத் தங்களுக்கு விருப்பமான கடவுளை வணங்கியதன் மூலம் சைவம், வைணவம் எனப் பிரித்து சிவனையும், விட்ணுவையும் வழிபட்ட முறைகள் இருப்பினும், எத்தகைய பாகுபாடுகளும் இல்லாமல் அனைத்துக் கடவுள்களையும் சிவன், பிரம்மன், திருமால், கொற்றவை, பார்வதி, லட்சுமி மற்றும் முருகன் போன்ற கடவுள்களை வணங்கிய முறைகளையும் இனிய சொற்கள் மூலம் அழகு சேர்த்த பெருமையும் கொண்டது சங்க இலக்கியங்கள் ஆகும்.

சங்க இலக்கியத்தில் சிவன் வழிபாடு

எம்பெருமான் இன்றி எதுவும் அசையாது என்பதற்கேற்ப இலக்கியங்கள் வளரக் காரணமாக அமைந்த சங்கங்களை அமைத்து தமிழ் வளர்ச்சிக்குச் சிறப்பு சேர்த்தவர்கள் பாண்டியர்கள், மூன்று சங்கங்கள் தோன்றி மறைந்த வரலாறு உண்டு எனினும், முதல் சங்கத்தைத் தொடங்கியவர் எம்பெருமான் சிவபிரான் ஆவார். அவர் தோற்றுவித்த சங்கத்தில் இயற்றப்பட்ட இலக்கியங்கள். சிவபிரானை மையப்படுத்தியும் பாடல்களைத் தந்துள்ளன. சிவபெருமானை நேரடியாகக் குறிப்பிடாமல் அவரின் தன்மைக்கும் தனிச்சிறப்புக்கும் ஏற்ப பெயர்களைக் கொண்டு பாடல்கள் உருவாயின சிவன் வழிபாடு என்பது சைவ சமய வழிபாட்டு முறைகளையே குறிப்பிடுகின்றன. சிவபிரான் வேறு சைவ வழிபாட்டு முறை வேறு என்றில்லாமல் சங்க இலக்கியங்கள் இரண்டையும் இரண்டறக் கலந்து சிறப்பித்துள்ளன. சிவபிரான் பெயரானது சங்க இலக்கியமான எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டில், ஆதிரையான், ஆலமர் செல்வன், ஆனேற்றுக் கொடியுடையான், ஈசன், ஈர்ங்கடை அந்தணன், காலக்கடவுள், தாழ்சடைப் பெரியோன், நீலமேனி வாலிழைபாகத்து ஒருவன், மணிமிடற்றன், முக்கட் செல்வன் போன்ற பெயர்களால் அழைக்கப்படுகிறார். இத்தகையப் பெயர்கள் சிவபிரானின் அவதாரம், சிறப்புகள், கருணைத் தன்மையை விவரித்துக்காட்டுவதாக அமைகின்றன.

ஆணுக்கு பெண் நிகரானவள். பெண்மையைப் போற்றுதல், சம மதிப்பளித்தல், எல்லா நிலைகளிலும் ஈடாகவும்

இணையாகவும் இருப்பவள், ஆக்கல் மற்றும் அழித்தல் வல்லமை கொண்டவர். பெண்ணிற்கு மதிப்பளித்தல் என தற்காலத்தில் பெண்ணிற்கு அனைத்துத் துறைகளிலும் முக்கியத்துவம் அளித்தல் வேண்டும் என அவர்களின் உரிமையை வலியுறுத்தி வரும் நிலையில் அத்தகைய உரிமையைத் தனது உடலில் சரிபாதியாக அளித்து மதிப்பையும் சிறப்பையும் வழங்கி உலகிற்கு முன்னுதாரணமாக விளங்கிய முழு முதற்கடவுள் சிவபிரானே ஆவார். மனைவியாகிய பார்வதி தேவியைத் தனது உடம்பின் இடப்புறம் கொண்டு நீலநிற மேனியாகவும் அர்த்த நாரியாகவும் விளக்கியவர்.

சிவபெருமானின் உருவ அமைப்பைப் பற்றி குறிப்பிடுகையில் நீலமேனியைக் கொண்டவர் என்பதை பாரதம் பாடிய பெருதேவனார்.

''செவ்வான் அன்னமேனி, ஆவான்''

என்று அகநானூற்று கடவுள் வாழ்த்துப் பாடலில் குறிப்பிடுகின்றார். சண்பக மலரானது மலரும் பருவமதில் வருவேன் என தலைவன் தலைவியிடம் கூறுமாறு தோழியிடம் அறிவுறுத்துகையில், சண்பக மலரானது சிவபெருமானுக்குப் பிடித்த மலராகவும் அதைக் கொண்டு அழகு செய்வதை,

''அரும்பெறல் ஆதிரையான் அணிபெய மலர்ந்த
பெருந்தன் சண்பகம் போல, ஒருங்கு அவர்''
(கலித்தொகை :150:20)

எனக் குறிப்பிடப்படுகிறார். உலகைக் காக்கும் எம்பெருமான் ரிசப வாகனத்தைக் கொண்டு விளக்குகிறார் என்பதை,

''ஆண் ஏற்றுக் கொடியோன்போல, எதிரிய இலவமும், ஆங்கு'' (கலித்தொகை : 20:5) சிவபெருமான் தனது கழுத்தில் அணிந்திருக்கும் அணிகலன்களைக் கொண்டு அவரின் தன்மையை விவரிக்கையில்,

''நீல நாகம் நல்கிய, கலிங்கம்
ஆல்அமர் செய்வதற்கு அமர்ந்தனன் கொடுத்த''

(சிறுபாணாற்றுப்படை:96:97)

ஒளிமிக்க நீல மணியினையும், நாகம் கொடுத்த கலிங்கத்தையும் விருப்பத்தோடு அணிந்தவர் ஆலமரத்தின் கீழ் வீற்றிருப்பவர் எனக் குறிப்பிடப்படுகிறார். பக்தர்களுக்கு அன்பானவர், அருள் வழங்குபவர் என்பதோடு நியாத்தை நிலைநாட்டுபவர், முக்தி அளிப்பவர் எனக் கருதப்படும் சிவபிரான் அழிக்கும் காலனாகவும் விளங்குகிறார் என்பதை,

எரி எள்ளு அண்ண நிறத்தன், விரிஇணர்க
கொன்றை அம்பைந்தார் அகலத்தன், பொன்றார்
எயில்வரி யூட்டிய வில்லன், பயில்இருள்
காடுஅமர்ந்து ஆடிய ஆடலன், நீடிப்
புறம்புதை தாழ்ந்த சடையன், குறங்கு அறைந்து
வெண்மணி ஆர்க்கும் விழவினன், நுண்ணூல்
சிரந்தை இரட்டும் விரலன், இரண்டு உருவா
ஈர்அணி பெற்ற எழில்தகையன், ஏரும்
இளம்பிறை சேர்ந்த நுதலன், களங்கனி
மாறுஏற்கும் பண்பின் மறுமிடற்றன், தேறிய
சூலம் பிடித்த சுடர்ப்படைக்
காலக் கடவுட்கு உயர்கமா வலனே

எனப் பதிற்றுப்பத்து கடவுள் வாழ்த்து பாடலின் மூலம் அறியமுடிகிறது.

முடிவுரை

சங்க இலக்கியங்கள் பல்வேறு புலவர்களால் பல்வேறு காலங்களில் எழுதப்பட்டது இருப்பினும் ஆதிகடவுளை வழிப்படும் முறையை, அவரின் சிறப்புகளைத் தெளிவுப்படக் கூறியுள்ளார்கள். சிவபிரானின் அருள் பெருமைகளை அறிய உருவான பெரியபுராணத்திற்கு முன் தோன்றிய இலக்கியங்கள் சிவனையும், அவரின் பெருமைகளையும் அழகுற எடுத்துரைக்கின்றன. சிவனின் பெருமைகளை மட்டும் அல்லாது பார்வதியைப் பற்றியும் முருகனையும் இன்ன பிற கடவுள்களையும் சிவனுடன் இணைத்துப் பாடப்பட்டுள்ளது.

20. பொது மறையும் திருமுறைகளும்



முனைவர் நயம்பு.அறிவுடைநம்பி
மண்டலச் செயலாளர்
உலகத் திருக்குறள் பேரவை
நயம்பாடி, செஞ்சி

முன்னுரை

உலகச் சான்றோர் இடத்தால் காலத்தால் வேறுபட்டிருப்பினும் சில கருத்தால் ஒன்றுபட்டிருப்பவர். இங்கே பொதுமறை என்றது திருக்குறளை, திருமுறைகள் என்றது பன்னிரு திருமுறைகளை இவ்விரண்டிலுள்ள சில பொதுவான ஒப்புமையான கருத்துக்கள் சில விளக்கப்பட்டுள்ளன.

தேவர் குறளும் திருநான்மறை முடிபும்
மூவர் தமிழும் மணிமொழியும் கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும
ஒருவாசகம் என்று உணர் (நல்வழி : பா:40)

என்பார் ஔவையார். அவ்வகையில் குறிப்பாகத் திருக்குறளுடன் மூவர் தேவாரம், திருவாசகம், திருமந்திரம் என்னும் நூல்களின் ஒப்புமைப் பதிவுகள் சில இக்கட்டுரையில் இடம்பெறுகின்றன.

இறைவன் தலைமை :

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு (குறள்:1)

எழுத்துக்கள் யாவும் அகரத்தை முதலாக உடையன. அதைப்போல இவ்வுலகம் ஆதிபகவனை முதலாக உடையது எழுத்து உலகிற்கும், அகரம் ஆதிபகவற்கும் உவமையாகும். எனவே எழுத்தை அறிந்து, இறைவன் உண்மையை உணர வேண்டும். அகரம் தான் தனித்து இயங்கி, பிற எழுத்துக்களை இயக்கும். அதுபோல, இறைவன் தனித்து இயங்குவான். பிற உயிர்களுள் கலந்து அவற்றை இயக்குவான். அகரம் இயங்காவழி எந்த எழுத்தும் இயங்காது. அதுபோல் அவன்றி ஓர் அணுவும்

அசையாது என்பதாம். காணப்பட்ட உலகத்தால் காணப்படாத கடவுட்கு உண்மை கூற வேண்டுதலின் ஆதிபகவன் முதற்றே என உலகில் மேல் வைத்துக் கூறினார் என்பது பரிமேழகர் விளக்கம். இப்பாடல் கடவுளது உண்மையும், முதன்மையும் கூறவந்ததாகும். அகர முதலானை அணிஆப்ப னூரானை என்றார் திருஞானசம்பந்தர்.

திருமூலர் அகர முதலாய் அனைத்துமாய் நிற்கும் (திருமந்திரம் 7:5:1) என்றார். இதனால் இவ்விருவரின் உவமை ஒப்புமையும், கருத்தொப்புமையும் விளங்கும். அகரவுயிர் எழுத்தனைத்து ஆதிவேராய் என்ற தாயுமானவர் பாடலடியும், அகரம் என அறிவாகி உலகம் எங்கும் என்ற விநாயகப் புராணப் பாடலடியும் இங்கு எண்ணத்தக்கன. சுந்தரர் அகர முதலின் எழுத்தாகி நின்றாய் (7:நெல்வாயில் அறத்துறை 1:7) ஆனத்து முன்னெழுத்தாய் நின்றார் போலும் (ஆறாம் திருமூலர்:2368) என்றார், அப்பரடிகள்.

இறைவன் இருக்குமிடம்

தூய்மையான, அன்புள்ள மனத்தில் இறைவன் தானே வந்து தங்குவான். இதனை, மலர்மிசை ஏகினான் என்பதில் காணலாம். மனத்தை மலராக உரைப்பது மரபு. உள்ளக்கமலம் என்பர் பெரியோர். இப்பதிவை உள்ளப் புண்டரிகத்து உள்ளிருக்கும் புராணர் என்ற தேவாரத்தால் உணரலாம். மனத்தில் எழுகின்ற மாயநன் னாடன் என்றார் திருமூலர்.

''நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார்சடைப் புண்ணியன்''

என்றார் அப்பரடிகள், யாவர் அவர் உளம்தான் எமபெருமான் நடம்புரியும் இடமெனத் தேர்ந்தேன் என்ற வள்ளலார் வாக்கும் இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

இறைவன் இயல்பு

மக்கள் விருப்பு, வெறுப்பு உடையவர்கள். இறைவன் இவ்விரண்டும் இல்லாதவன். இதனை, வேண்டாமை, வேண்டுவதும் இல்லான் தன்னை என்ற அப்பர் வாக்கால்

உணரலாம். இக்கருத்து,

''வேண்டுதல் வேண்டாமை இலான் அடிசேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல'' (குறள்:4)

என்பதில் எதிரொலிக்கிறது. மேலும் இறைவனின் இயல்பை திருவள்ளுவர் தனக்குவமை இல்லாதான் (குறள்:7) என்றார். இதனைத் தன்னை நேர் ஒப்பிலாத தலைவனை என்ற தேவாரத்திலும் காணலாம். மாணிக்கவாசகரும்,

''ஒப்பு உனக்கில்லா குருவனே அடியேன்
உள்ளத்துள் ஒளிர்கின்ற ஒளியே'' (திருவாசகம்)

என வழிமொழிந்துள்ளார்.

''அறவாழி அந்தணன்'' (குறள்:8)

என்ற தொடர் அப்படியே திருமந்திரத்தில் இடம்பெற்றுள்ளது. இறைவனின் பிறிதோர் இயல்பைத் திருவள்ளுவர் எண்குணத்தான் எனக் குறிப்பிட்டுள்ளார். என் குணங்களாவன தன்வயத்தனாதல், தூய உடம்பினாதல், இயற்கை உணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றுலுடைமை, வரம்பில் இன்பமுடைமை என இவை. இவ்வாறு சைவாகமத்துக் கூறப்பட்டுள்ளன என்பது பரிமேலழகர் விளக்கம் என இவ்வகையில் ஒப்புமைக் கருத்துக்கள் பல இவ்விரு நூல்களில் கற்று மகிழலாம்.

மெய்யுணர்தல்

எக்காலத்திலும், எவ்விடத்திலும் அழியாது நிற்கும் பொருள் யாது என உணர்வது மெய்யுணர்தலாகும். காமம், வெகுளி, மயக்கம் முதலியவற்றையும், யான் எனது என்னும் பற்றுக்களை விட்டால் மெய்யுணர்வு உண்டாகும்.

''காமம் வெகுளி மயக்கம் இம்மூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்'' (குறள் 360)

ஆசையும், வெகுளியும், மயக்கமும் என்னும் இவை மூன்றினது

நாமம் போக வினைபோம் என்றவாறு வினைகெடுதற்கு வழிஇது என்று கூறுதலான் இது மெய்யுணர்த்தலாயிற்று என விளக்கியுள்ளார். மணக்குடவர்.

இந்த மெய்யுணர்தல் உண்மையைத் திருமூலரும், ''காமம் வெகுளி மயக்கம் இவை கடிந்து'' என்றார்.

இறைவன் திருவடி பெருமை

வாலறிவன், நற்றாள், மாணடி, வேண்டுதலன் வேண்டாமை இலான் அடி, தனக்குவமை இல்லாதான் தாள், அறவாழி அந்தணன்தாள், எண்குணத்தான் தாளை, இறைவனடி என்றெல்லாம் திருவள்ளுவர் இறைவனின் திருவடிகளைக் குறிப்பிட்டுள்ளார். நிலமிசை நீடுவாழ, துன்பம் அகல, இருவினை சேராதிருக்க, மனக்கவலை மறைய, பிறவியைக் கடக்க, கற்றதன் பயன் இறைவனின் திருவடி சேர்தலின் பயனாகும். எனவே, இறைவனடி நினைத்தலும், வாழ்த்தலும், அவன் நெறி நிற்றலும் செய்வார் வீடு பெறுதல் திண்ணம். இறைவனின் திருவடிப் பெருமைகளைப் புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன் என்று அப்பரும், அடி சேர்வோம் என்று சம்பந்தரும், திருவடியே சிவமாவது என்று திருமூலரும், புயங்கப் பருமான் பூங்கழல்கள் மிகவே நினைமின் மிக்கவெல்லாம் வேண்டா போக விடுமின்கள் இகழ்மின் எல்லா அல்லலையும் இனியோர் இடையூறு அடையாமே திகழும் சீரார் சிவபுரத்துச் சென்று சிவன்தாள் வணங்கி நாம் என்று மணிவாசகரும் பாடியன இங்கு எண்ணி மகிழலாம்.

காலமறிதலின் இன்றியமையாமை

எந்த ஒரு செயலையும் காலமறிந்து, இடமறிந்து செய்தால், ஞாலம் கருதினும் கைகூடும்.

''கொக்குஒக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து'' (குறள் : 490)

இக்குறளிலுள்ள கொக்குஒக்க என்னும் தொடர் திருவாசகத்தில் காணலாம்.

''அரையே பொன்னம்பலத்தாடும் அமுதே என்றுன் அருள்நோக்கி
இரைநேர் கொக்குஒத்து இரவுபகல் ஏசற்றிருந்தே வேசற்றேன்''

என மணிவாசகர் புலம்பலில் காணலாம். கொக்கானது ஓடுமீன் ஓட உறுமீன் வறுமளவும் காத்திருக்கும். அதைப்போலத் தம் உயிரானது இறையருளை எதிர்ப்பார்ப்பதாகப் பாடியுள்ளார். தனக்குரிய இரை கிடைக்கும் வரை கொக்கு போலக் காத்திருக்க வேண்டும். கிடைத்தவுடன் விரைந்து தவறாமல் குத்துவது போலச் செயலை முடிக்க வேண்டும். இறையருளை வேண்டுவோர் கொக்கு ஒக்கப் பொறுமையாக இருக்க வேண்டும் என்பது உணர்த்தப்பட்டது.

தன்னை உணர்த்தும் பாங்கு

அப்பரடிகள் தன்னிலை உணர்ந்து உணர்த்திய பாடல் அயலே வருகின்றது.

''மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த மேனியான்தாள் தொழாதே
உய்யலாம் என்றெண்ணி உறிதூக்கி யுழிதந்தென் உள்ளம் இட்டுக்
கொய்யுலா மலர்ச்சோலைக் குயில்கூவ மயிலாலும் ஆரூரைக்
கையினால் தொழாதொழிந்து கனியிருப்பக் காய்கவர்ந்த
கள்வனேனே (தேவாரம்)

தாம் சைவ நன்னெறியால் வாழாமல் புறச்சமயம் சென்று வாழ்ந்த தம் நிலைமையை எண்ணிப் பார்த்த அப்பரடிகளின் நினைவலைகள் இப்பாடலில் புலப்படுகின்றன.

''இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று'' (குறள்:100)

என்பது இங்கு இயல்பாகவே நினைவிற்கு வருகிறதல்லவா, திருவள்ளுவர் நுகர்ந்தற்று என்று கூறாமல் கவர்ந்தற்கு என்றது ஏன் எனில், வலிந்து கொள்ளுதலை உணர்த்துவதற் காகவேயாகும். இன்சொல் பேசுவதுதான் இயல்பானது. வன்சொல் பேசுவது வலிந்து செய்வது. ஆகவே தான் ஔவையாரும் வெட்டெனப் பேசேல் என்றார். குண்டலகேசியும் நம்மைப் பார்த்து, வெட்டென உரைத்தலை விடுத்திடுமின் என வேண்டியுள்ளது.

இனிய கனி என்பது ஔவையாருக்கு அதியமான் அளித்த அருநெல்லிக் கனி போல் வாழ்வு நீட்டிக்கும். இன்னாதகாய் என்பது எட்டிக்காய் போல உடன் கொல்லியைக் குறிக்கும். மேற்குறித்த உவமைப் பண்புகள் முறையே இன்சொல்லுக்கும், இன்னாச் சொல்லுக்கும் பொருந்தும்.

யாரைப் பற்ற வேண்டும்? ஏன்?

எல்லா உயிர்களிடத்தும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவன் பற்றற்றவன். அவன்மீது பற்று வைத்தால், அது மற்ற கீழான ஆசைகளை எல்லாம் விட்டொழிக்க உதவும். இவ்வுண்மையை,

> "பற்றுக பற்றுஅற்றான் பற்றினை அப்பற்றைப்
> பற்றுக பற்று விடற்கு" (குறள்:350)

என்ற குறளில் காணலாம். பற்று அது பற்றில் பரமனைப் பற்றுமின் என்று திருமூலரும் பற்றி இப்பாசத்தைப் பற்று அற நாம் பற்றுவான் பற்றிய பேரானந்தம் என்று மாணிக்கவாசகரும் வள்ளுவர் உண்மையை உறுதிபடுத்தியுள்ளனர். உயிரானது ஏதேனும் ஒன்றைப் பற்றி நிற்கும் இயல்புடையது. உயிரானது தான் பற்றி நிற்கும் ஒன்றைவிட வேண்டுமெனில், அதனைவிட மேலான ஒரு பொருளினைப் பற்றினால் முடியும். உலகில் மேலான பொருள் எது எனில் இறைவனே ஆவான். எனவே உலகப் பற்றுகள் அனைத்தையும் ஒருங்கே விட்டுவிட பற்றே இல்லாத பரம்பொருளைச் சிக்கெனப் பிடித்துக் கொள்ள வேண்டும்.

> ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
> சோதிக்க வேண்டா சுடர்விட்டுளன் எங்கள் சோதி
> மாதுக்கம் நீங்கல் உறுவீர் மனம் பற்றி வாழ்மின்
> சாதுக்கள் மிக்கிர் இறையே வந்து சார்மின்களே

என்றார் திருஞானசம்பந்தர். எனவே, பரம்பொருளை மனம் பற்றினாலன்றி எப்பற்றையும் விட இயலாது என்பது உணரத்தக்கது. ஆன்மா இயல்பு சார்ந்ததன் வண்ணமாதலாகும். எனவே பற்றற்றானைப் பற்றினவன் தானும் பற்று அற்றவன்

ஆவான் என்பது உணர்த்தப்பட்டது.

வாழ்க்கையில் இறுதி குறிக்கோள்

வாழ்க்கையின் இறுதி குறிக்கோள் பிறவிக்கடலைக் கடந்து வீடு பெறுவதாகும். இறைவனடியாகிய தெப்பத்தின் மூலமே பிறவிக்கடலைக் கடக்க இயலும். இதனைப்

''பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார்'' (குறள்:10)

என்பதால் உணரலாம். உலகியல்பை நினையாது இறைவனடி நினைப்பார்க்குப் பிறவி அறுத்தலும், அவ்வாறின்றி மாறிநினைப்பார்க்குப் பிறவி அறாமையும் ஆகிய இரண்டும் இதனால் நியமிக்கப்பட்டன என்பது அழகர் விளக்கமாகும். இவ்வுலகில் ஒருவன் ஏதேனும் ஒன்றைப் பெறவிரும்பினால், பிறவாமையை வேண்டிப் பெறவேண்டும். ஆகவேதான் காரைக்கால் அம்மையார் இறைவனிடம் பிறவாமை வேண்டும் என்றார். திருவள்ளுவரும் வேண்டங்கால் வேண்டும் பிறவாமை என்றார். பாருருவாய பிறப்பு அறவேண்டும் என மணிவாசகர் வேண்டினார். பிறவி அறுப்பீர்கள் அறவன் ஆரூரை மறவாது ஏத்துமின் எனறார் திருஞானசம்பந்தர். எனவே, பிறப்பு நீங்கலும் வீடு பெறலும் மாந்த வாழ்க்கையின் இறுதிக் குறிக்கோளாகும்.

நிறைவாக

திருக்குறள் சமயம் சார்ந்த நூலன்று. ஆனால் அதிலுள்ள பொதுமைக் கருத்துக்கள் எல்லாச் சமயங்களிலும் காணலாம். அவ்வகையில் பன்னிரு திருமுறைகளில் இடம்பெற்ற திருக்குறள் கருத்துக்கள் சில இக்கட்டுரையில் எடுத்துரைக்கப்பட்டன. இன்னும் திருமுறையும், பொதுமறையும் என்ற தலைப்பில் ஒரு விரிவான நூல் எழுதப்பட வேண்டுமென்பது இக்கட்டுரையாளரின் வேண்டுகோளும், விருப்பமும் ஆகும்.

21. ஞானசம்பந்தரும் சைவ சமய மறுமலர்ச்சியும்

முனைவர் கை.சங்கீதா
உதவிப்பேராசிரியர்
இதயா மகளிர் கல்லூரி
கும்பகோணம்

முன்னுரை

தமிழர்களின் ஐந்திணைத் தெய்வ வழிபாட்டில் இருந்து இரண்டு மட்டுமே பெருந்தேவ மதமாக வளர்ச்சி பெற்றன அவற்றுள்ளும் சிவனியம் என்று சொல்லப்படுகின்ற சைவ சமயம் மிகவும் தொன்மை வாய்ந்ததாகும்.

சைவ சமயத் தொன்மை

நமக்குக் கிடைத்துள்ள இலக்கியச் சான்றுகளையும் தொல்பொருள் சான்றுகளையும் கொண்டு நோக்கும் போது சைவ சமயத்தின் தொன்மை தெற்றென விளங்கும். முதலிரு கழக நூல்கள் அழிந்துபட்டமையால் கடைக்கழக நூல்களே நமக்குச் சான்றுகளாக உள்ளன. அந்நூல்களுள் சைவ சமயக் கடவுளான சிவன் பற்றிய செய்திகள் மிகுதியாகக் காணப்படவில்லை. ஆனால் சிவன் பற்றிய முக்கட் செல்வன், செஞ்சடைக் கடவுள், ஆலமர்ச் செல்வன், கறைமிடற்றண்ணல் காரியுண்டிக் கடவுள், ஏறூர்தியான், நீலமணிமிடற்றொருவன் முதலான பெயர்கள் காணப்படுகின்றன.

சங்ககாலச் சமூகத்தில் சமயநிலை மிகவும் இயல்பு நிலையிலேயே காணப்பட்டுள்ளது. சமயக் காழ்ப்புணர்ச்சியும் சமயப் போரும் ஏற்படாது. மக்கள் அனைவரும் அமைதியுடன் வாழ்ந்துள்ளனர். மக்கள் தமிழ் மக்கள்; நாடு தமிழ்நாடு; அரசன்-தமிழ் அரசன், எனவே சமயம்-தமிழ்ச்சயம் என்ற நிலையில் வாழ்ந்துள்ளனர். அதேநேரம் சமயச் சிந்தனையில் மிக உயர்ந்த நிலையிலும் வாழ்ந்துள்ளனர் என்பதையும் உணர முடிகின்றது. அஃதாவது எங்கும் நிறைந்துள்ள பரம் பொருளாகிய

இறைவனை அறிவியல் கண்ணோட்டத்துடன் ஆராய்ந்துள்ளனர். தமிழர்களின் விஞ்ஞான நோக்கும், வானியல் நோக்கும் நம்மை வியக்க வைக்கின்றன.

சைவ சமயச் சிறப்பு

கடவுள் என்ற சொல், எல்லாம் கடந்த நிலையைக் குறிக்கும். நமக்குக் கிடைத்துள்ள முதல் இலக்கண நூலான தொல்காப்பியத்திலேயே கடவுள் என்னும் சொல் காணப்படுகின்றது. கடவுள் என்றும் சொல் மேம்பட்ட நிலையை உரைப்பதாகும். அனைத்தையும் கடந்த அக்கடவுள் தன்மையை நம் தமிழர்கள் உணர்ந்தமையால் எங்கும் நிறைந்த பரம்பொருள் என்ற அடிப்படையில் வெளியன் என்றும், பிறப்பு இறப்பு அற்றவன் என்னும் அடிப்படையில் பிறவா யாக்கை பெரியோன் என்றும் கூறி வணங்கியுள்ளனர்.

இருண்ட காலம்

வரலாற்றில் இருண்ட காலம் என குறிப்பிடுவதைப் போன்று, சமயநிலையிலும், சங்க காலத்திற்குப் பிறகு சிறிது காலத்தை இருண்ட காலமாகவே குறிக்க வேண்டும். சமயநிலையில் மிகத் தூய்மையாக இருந்த தமிழகத்தில் புறச்சமயங்களான சமணமும், பௌத்தமும் காலூன்றத் தொடங்கின. ஐம்பெருங்காப்பியங்களும் ஐஞ்சிறுகாப்பியங்களும் சமயப் பரப்புரை செய்ததை எடுத்துரைக்கின்றன.

மன்னர்களின் ஆதரவுடன் சமணர்கள் இருக்கைகளையும் பள்ளிகளையும் உருவாக்கித் தென்தமிழகம் வரை, தங்கள் சமயத்தைப் பரப்பினர். அதுபோல் வடபகுதியில் பௌத்தத்தின் செல்வாக்கு மிகுந்திருந்தது. அச்சமயத்தின் அடையாளமாகப் பௌத்த விகாரங்களும், கல்வி நிலையங்களும் அமைக்கப்பட்டன.

சமயப் பூசல்கள்

புறச் சமயங்களாக உள்ளே நுழைந்த இரு சமயங்களும் தங்களுக்குள் போட்டியையும், அடக்குமுறைகளையும் உருவாக்கி

மோதத் தொடங்கின. சமணர்களின் நீலகேசி பௌத்தர்களையும், பௌத்தர்களின் குண்டலகேசி சமணர்களையும் கேலி செய்து தாக்கிக் கொண்டன. சமண, பௌத்த சமயம் தாங்கி அரசர்களுக்குள் போட்டியும் பொறாமையும் உருவாகி, பூசல்கள் தோன்றின. இதனால் சமூக நிலை மிகவும் பின்னடைந்து காணப்பட்டது.

சமூக மறுமலர்ச்சிக் காலம்

இந்தச் சூழலில் சமூகத்தில் மறுமலர்ச்சி தோன்றியது. தொன்மைச் சமயமாகிய சைவத்தைத் தழைத்தோங்கச் செய்ய சமயக் குரவர்களும் நாயன்மார்களும் தோன்றினர். மக்களிடம் இறைவனை அன்பு வடிவின் எனக் காட்டி, அவர்களின் மனம் உருகும் படியான இசைப்பாடல்களைப் பாடினர். ஓர் இயக்கமாகவே செயல்பட்டு, சமூக மறுமலர்ச்சியை உருவாக்கினர்.

ஞானசம்பந்தரும், மறுமலர்ச்சியும்

சைவ சமய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்களில் குறிப்பிடத்தக்கவர் ஞானசம்பந்தர் ஆவார். இவர் தம் பாடல்களின் வழியாகவும் ஊர் ஊராகச் சென்று சமயச் சொற்பொழிவு ஆற்றுவதன் மூலமாகவும் சைவ சமயப் பரப்புரையைச் செய்து வந்தார். மக்களிடம் மட்டுமின்றி மன்னனிடம் ஞானசம்பந்தர் தம் சமயப் பரப்புரையைச் செய்து சமண சமயத்தவராக இருந்த கூன் பாண்டியனை மாற்றி, நின்ற சீர் நெடுமாறானாக மாற்றினார்.

சமணர்களுடன் வாதத்தில் ஈடுபட்டு வெற்றிகண்டார். அமண் ஆதரை வாதில் வென்றழிக்கத் திருவுள்ளம் என்று பதிகம் பாடினார். போதிமங்கையை அடைந்து பௌத்தர்களுடன் வாதில் ஈடுபட்டார்.

மலர்ச்சியின் மாற்றங்கள்

சமய மறுமலர்ச்சிக்கு வித்திட்ட ஞானசம்பந்தரின் இறைப்பணியால் பல மாற்றங்கள் உருவாயின. ஞானசம்பந்தர் தம் இறைப்பயணத்தைத் தொடர்ந்து நிகழ்த்திக்

கொண்டிருந்தார். பல சமண, பள்ளிகளும், புத்த விகாரங்களும் அழிக்கப்பட்டு அங்குச் சிவத்தலங்கள் அமைக்கப்பட்டன. சமணர் வீடுகள் இடிக்கப்பட்டன நிலங்கள் பறிக்கப்பட்டன.

சிவத்தலங்களுக்குப் பயணம் மேற்கொள்வது; நடமாடும் பக்தர்களை வரவேற்று உணவு அளிப்பது முலான செயல்கள் நிகழ்ந்தன. இறையில் மூழ்கிச் கல்லையும் கனிய வைக்கும் இனிய பாடல்களைப் பாடி நாடு சுற்றிப் பக்திச் சுவையூட்டும் அறிஞனாகவும், தொண்டனாகவும் ஞானசம்பந்தர் திகழ்ந்தார். மூன்று வயதாய் இருக்கும் போது இறைவனால் ஞானப்பால் உண்டவர் ஞானசம்பந்தர் என்பது வரலாறு. எனவே மிகச்சிறு வயதிலேயே இறைவனை ஞானமார்க்கத்தில் வணங்கி, மக்களையும் சமுதாயத்தையும் மாற்றிய பெருமை ஞானசம்பந்தருக்கே உரியதாகும்.

இவர் பிறப்பிடம் சீர்காழியாக இருந்தாலும் தமிழகம் முழுவதும் உள்ள சிவத் தலங்களுக்குச் சென்று தன் சமயப் பரப்புரையைச் செய்து இனிய தமிழால் பதிகங்களைப் பாடி, மக்களிடம் மிகுந்த செல்வாக்கைப் பெற்றிருந்தார். தம் பதிகம் ஒவ்வொன்றிலும் 10வது பாடலில் சமண பௌத்தர்களைத் தாக்கிக் கருத்துரைத்திருப்பது நாம் எண்ணத்தக்க ஒன்றாகும்.

சைவ சமயச் செழுமை

மேற்கூறியவாறு எளிய மக்கள் முதல் நாட்டின் அரசன் வரை அனைவரையும் சைவத்தில் மூழ்கச் செய்து சைவத்தைத் தழைத்தோங்கச் செய்த பெருமை ஞானசம்பந்தரையே சாரும். அடிமுதல் முடிவரை சைவ செழுமை பெற்றிருப்பதற்கு ஞானசம்பந்தரின் தொண்டு அளப்பரியதாகும். மேலும் ஒவ்வொரு பதிகத்தின் இறுதியிலும் ஒரு பாடல் அமைந்திருக்கும். அதற்குத் திருக்கடைக் காப்புச் செய்யுள் என்று பெயர். அச்செய்யுளிலே ஞானசம்பந்தர் இந்தப் பாடல்களைப் பாடுவதினால் பெறலாகும் மேன்மையினை விளக்கியிருப்பார்.

“ஒரு நெறிய மனம் வைத்துணர் ஞானசம்
பந்தன் உரை செய்த
திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை

தீர்தல் எளிதாமே''

எளிய இனிய தமிழால், தந்தையாகிய இறைவனிடம், மக்கள் அவரவர் தேவைக்கேற்ப வேண்டி வழிபட்டுப் பாடும் ஒரு சூழலை ஞானசம்பந்தர் உருவாக்கினார். அதன் வழி சைவசமயமும் தழைத்தோங்கியது. எண்ணில் நல்ல கதிக்குச் செல்ல, அவர் இயற்றிய பண்ணில் அமைந்த பாடல்கள் அனைவரையும் ஈர்த்தன. சமயநிலையில் இருண்டு காணப்பட்ட தமிழகத்தை மறுமலர்ச்சி பெற வைத்து, சைவசமயத்திற்குப் புத்துயிர் ஊட்டி, ஞானசம்பந்தர் புதுப்பொலிவு பெறச் செய்தார் எனில் அது மிகையாகாது.

22. அற்புதத் திருவந்தாதி, திருஇரட்டை மணிமாலை - சைவநெறிப் புலப்பாடு



முனைவர் ச.கலைவாணி
உதவிப்பேராசிரியர் (தமிழ்)
தமிழ்ஆய்வியல் துறை
மதுரை சிவகாசி நாடார்கள் பயோனியர்
மீனாட்சி பெண்கள் கல்லூரி
பூவந்தி

முன்னுரை

சமயத்தால் தமிழ் வளர்ந்ததையும் தமிழால் சமயங்கள் வளர்ந்ததையும் யாராலும் மறுக்க இயலாது. மனிதன் தோன்றிய காலம் முதல் வழிபடும் முறையும் இருந்து வந்துள்ளது. மனிதன் முதலில் இயற்கையை வழிபடத் தொடங்கினான். பின்னர் அவை சமயங்களாக உருப்பெற்றன. அச்சமயங்கள் உலகின் பல்வேறு நாடுகளிலும் பல்வேறு சமயங்களாக உள்ளன.

சமயம் மக்களின் மனத்தைப் பண்படுத்துகின்ற கருவியாகும். சமயம் இல்லையேல் மனித வாழ்வு பண்பாடற்ற நெறியற்ற வாழ்வாக மாறிவிடும். ஏனெனில் சமயங்கள் அனைத்தும் மனித சமூகம் அன்பு வழியில் வாழ்ந்து தழைத்தோங்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றன. அங்ஙனம் அன்பு, ஈகை ஆகியவற்றை மக்களிடையே வளர்ப்பதில் முக்கியப் பங்காற்றுவது சைவ சமயம் ஆகும். சைவ சமயத்தின் மாண்பினை எடுத்துரைக்கும் நூல்கள் தமிழில் பல உள்ளன. சிவபெருமானை முழுமுதற் கடவுளாக வழிபடும் சைவ சமயத்தினைப் பற்றிய இலக்கியங்கள் சைவ நெறி இலக்கியங்களாகும். இவை சைவ நெறி பற்றியும், சிவபெருமான் பற்றியும் புகழ்ந்து பாடவும், சைவ நெறியைப் பரப்பவும் இயற்றப்பட்டன. கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் 12ஆம் நூற்றாண்டு வரையான காலங்களில் சிற்றிலக்கியம், பெருங்காப்பியம், சைவப் பனுவல்கள் என்று பல சைவ இலக்கியங்கள் இயற்றப்பட்டன. கி.பி. 650 காலப்பகுதி

தொடங்கி. 550 ஆண்டுகாலம் தமிழ்மொழியைச் சைவ சமயமே ஆட்சி செய்தது என முனைவர் இரா.செல்வகணபதி குறிப்பிடுகிறார்.

ஔவையார், குமரகுருபரர், சிவப்பிரகாசர், உலகநாதர், நாயன்மார்கள், நால்வர் போன்றோர் சைவ சமயத்தின் பெரும் நூல்கள் இயற்றியவர்கள். அவற்றுள் சைவ நெறிக்கோட்பாட்டை உணர்த்தி சைவ சமயம் தழைத்தோங்கச் செய்தவை பன்னிருதிருமுறைகள். இப்பன்னிரு திருமறைகளுள் பதினொறாம் திருமுறையில் இடம்பெற்றவை காரைக்காலம்மையாரின் திருஇரட்டை மணிமாலையும் அற்புதத் திருவந்தாதியும் ஆகும். இவ்விரு நூல்களும் எடுத்தோதும் சைவ நெறிப்புலப்பாட்டை உணர்த்துவதே இவ்ஆய்வுரையாகும்.

அம்மையாரின் படைப்புநெறி

''பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போதுன்
அடியின் கீழ் இருக்க'' (பெரிய.1781)

என்று திருத்தொண்டர் வரலாற்றுள் காரைக்காலம்மையாரின் வரலாற்றையும், அற்புத நிகழ்வுகளையும் பற்றி உலகிற்கு வழங்கிய பெருமைக்குரிய சேக்கிழார் எடுத்துப் பேசுகிறார். சைவ நெறியின் பால் ஈடுபட்டுத் தன் இலக்கியங்களின் வழி புதிய பாதையை உருவாக்கியக் காட்டிய தாயன்பிற்கோர் அடையாளச் சின்னமாக விளங்கியவர் புனிதவதியார். அவர் இறைவனைப் போற்றிப் பாடும் நிலையில்,

''நல்கணத்தினில் ஒன்று ஆனேன்
நான்... '' (பெரிய.1773)

என்று தான் யார்? என்பதனையும் உலகிற்குக் காட்டிய அடியவர். அங்கணன் ''அம்மையே'' என்று அருளிட அம்மையும் ''அருள் செய் அப்பா'' என்று செம்பொன் பாதம் பணிந்து வீழ்ந்து

எழுந்தவர்க்கு,

''ஆடுமா நடமும் நீ கண்டு
ஆனந்தம் சேர்ந்து எப்போதும்
பாடுவாய் நம்மை'' (பெரிய.1782)

என்று கட்டளை இட, ஆய்ந்த சீர் இரட்டைமணிமாலையும், அந்தாதியும் பாடிச் சிறப்பித்துள்ளார். இறைவனது அருளே உலகெல்லாம் வாழ்விப்பது , அவன் அருளே உயிர்களின் பிறப்பு அறுப்பது, அவன் அருளாலே யான் மெய்ப்பொருளை அறியும் வழியுடையேன், எனவே அவ்வருளே எனக்கு எல்லாப் பொருளாகவும் விளங்கும் என்று உறுதிப்பாட்டில் நின்றவர் அம்மையார்.

''சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோசை பாடல் மறந்தறியேன்
நலம் தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன் நாமம் என்நாவில் மறந்தறியேன்'' (அப்பர்)

என்ற அப்பரின் கோட்பாட்டினை அடியொற்றிய நிலையில் இறைவனது நாமம் தன்னைப் பிறந்து மொழி பயின்ற நாள் முதலாக ஓதி உணர்ந்த பெருமைக்குரியவர். இவரது படைப்புக்குள் அற்புதத் திருவந்தாதி பேய் வடிவம் பெற்றவுடன் அத்தன்மையின் திறத்தைப் புகழ்ந்து பாடியது. அத்தன்மையத் தனக்களித்த இறைவனது சிறப்புக்களைப் புகழ்ந்த பாடியது திருவிரட்டை மணிமாலையாகும். திருவாலங்காட்டு இறைவனது நடனக் காட்சியில் ஈடுபட்ட தன் உள்ளத்தின் வெளிப்பாட்டினைத் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகமாகப் பாடி அருளியுள்ளார்.

''அறிவு அறிவென்ற அறிவும் அனாதி
அறிவுக் கறிவாம் பதியும் அனாதி
அறிவினைக் கட்டிய அனாதி'' (திரு.இர.மணி.2378)

என்றுரைத்த திருமூலரின் இறைநெறிக் கோட்பாட்டைக் காரைக்காலம்மையாரின் படைப்புகளில் நாம் கண்டு உணரமுடிகிறது.

அம்மையாரின் இறைநெறிக் கோட்பாடு

வாழ்ந்தே ஆகவேண்டிய தவிர்க்க முடியாத நியதிக்கு உட்பட்டிருக்கும் நமது வாழ்க்கை பதி, பசு, பாசம் என்ற மூலங்கள் மூன்றின் சேர்க்கையால் ஆனது. இவற்றில் பதிக்குப் பாசத்தால் ஆவதொன்றுமில்லை. பாசத்துக்குப் பதியைத் தொழுது பயன்பெற்றுக் கொள்ளமுடியாது. மூன்றாவதாய இவை இரண்டிற்கும் இடைப்பட்ட பசுவே இவை இரண்டிற்கும் உள்ள தொடர்பு அதாவது பசுவாகிய உயிர் பாசமாகிய பற்றில் இருந்து விடுபட்டுப் பதியாகிய கடவுளை அடைவதே வழிபாட்டின் நோக்கம். உயிர், கடவுளை அடையும் நிலையே "ஞானம்" எனப்படுகிறது. இந்த ஞானமே சைவ வழிபாட்டின் தனித்துவப் பண்பாகும். "பாசமாம் பற்றறுத்து பாரிக்கும் ஆரியனே" என்ற சிவ புராணத்தின் வரிகள் சிவ வழிபாட்டின் நோக்கத்தை நமக்கு விளக்குகின்றது. எனவே இந்த உலக இன்பதுன்ப உறவுகளில் இருந்து நம்மை விடுவித்து கொண்டு சிவ வழிபாட்டின் மூலம் சிவகதி அடையவே நாம் முயல வேண்டும் "உலகியலிருந்து விடுபட்டு ஆன்மா கடவுளைக் காண முற்படும் பொழுது, கடவுளின் சக்தி அதற்கு வழிகாட்டுகிறது. அப்பொழுது கடவுள் ஆன்மாவை உயரே எடுத்துக்கொள்கிறது. அப்பொழுது தான் அறிவு எல்லாம் வல்ல கடவுளைக் காண்கிறது. இதனைக் கடவுள் குருவாகி வந்து ஆன்மாவைத் தன் வழிக்கு நடத்துகிறான் என்பர். ஆன்மீக ஒளியைக் கொடுத்துக் கடவுளைக் காண வழிகாட்டுகிறது" என இறைவனின் அருள் திறம் குறித்து எசு.கேசவமூர்த்தி குறிப்பிட்டுள்ளார். சைவ நெறியாளர்கள் பகுத்தறிந்து விளக்கிக் கூறிய,

சாரியை - புறச்செயல்
கிரியை - அக வழிபாடு
யோகம் - மனத்தால் வழிபடுவது

சன்மார்க்கம் - இறையருள் பெற்று இறைவனை எங்கும் எதிலும் காணலாகும் தன்மை என வரும் நால்வகைக் கோட்பாட்டினுள் மனவழிபாட்டிற்கு முக்கியத்துவம் கொடுத்து இறைவனை உணர்ந்து உலகிற்கு உணர்த்த வரும் நிலையில்,

''காண்பார்க்கும் காணலாம் தன்மையனே கைதொழுது
காண்பார்க்கும் காணலாம் காதலால்-காண்பார்க்குச்
சோதியாய்ச் சிந்தையுளே தோன்றுமே தொல்லுலகுக்கு
ஆதியாய் நின்ற அரன்''

என அற்புதத் திருவந்தாதியில் சுட்டிக் காட்டுபவர் இறைவனைக் காண முற்படும் அடியவர்களுக்கு வழிகாட்டியாய் அமைத்துள்ளார். அவனருளால் அவன்தாள் காண வணங்கிடும் உயர்ந்த நெறியை உலகிற்குக் காட்டிய அருள்தாய் அம்மையே ஆவார்.

''எவ்வுருவோ நின்னுருவம் ஏது?'' (அற்.திரு.61)

என்று வினா எழுப்பினாலும் கூட, மன வேதனைப்பட்ட நிலையில்,

''அன்றும் திருவுருவம் காணாதே ஆட்பட்டேன்
இன்றும் திருவுருவம் காண்கிலேன்'' (அற்.திரு.61)

என வருந்தவும் செய்கிறார். வினைக் கடலிலிருந்து மீட்டுவிக்கும் தன்மை இறைவனுக்கு உண்டு என உணர்ந்தமையால் திருஇரட்டைமணிமாலை நூல் முழுதும் இறைவனின் தோற்றத்தை வியந்து போற்றுபவர், இறைவன் அடியவர்களின் வினைத்துன்பத்தை நீக்குவதனையும் ஒருசேர இணைத்து மிகச் சிறப்பாகப் பாடி இறைத் தத்துவநெறியை விட்டுச் சென்றுள்ளார் எனலாம். உலக வாழ்வியல் துன்பம் உண்டாகும் பொழுதும், உள்ளம் தளராது இறைவனையே போற்றுதல் வேண்டும். இறைவன் ஆணையின்றி இவ்வுலகத்தில் எதுவும் நிகழாது என்பது உணர்ந்து மறவாது போற்றும் அடியார்களை இறைவன் மீண்டும் பிறவாது காத்தருளுகின்றான் என்ற நெறியினை அம்மையார் தம்முடைய திருவிரட்டைமணிமாலையில் இடம்பெறச் செய்துள்ளார்.

அடியவர்க்கு அருளும் திறன்

ஓவாது நெஞ்சே எப்போதும் இறைவனை வணங்குவாயாக எனக் கட்டளை இடுபவர் சிவபிரானைப்

பற்றிக் குறிப்பிடுகையில், அந்தணனே, வேதியனே, ஆதிரை நன்னாளான், சங்கரன், நம்பன் நந்தாதை, அண்டவானன், மொய்கழற் புண்ணியனே என்றெல்லாம் குறிப்பிட்டுப் பாடியுள்ள அம்மையார் திருவிரட்டைமணிமாலை பகுதிப் பாடல்களின் பின் இருவரிகளில் முறையே இறையருள் திறம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

வானவர் மாமதில் மூன்றும் வெந்திடச் சிலை தொட்ட இறைவன், மாலவனும் காணமாட்டாத திருவடியையுடையவன் என்கிறார். மேலும் இலங்கை வேந்தன் இராவணன் தோள் முரிக்கப்பட்ட செய்தியைக் குறிப்பிடுமிடத்து,

''அடித்தலத்தின் அன்றரக்கன் ஐந்நான்கு தோளும்
முடித் தலமும் நீ முரித்தவாறு ஏன்'' (திரு.இர.மணி14)

என வியப்புடன் வினவவும் செய்கிறார். அடியவர்களின் தீவினையை நீக்கும் செயலைக் குறிப்பிடுகையில் ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதினால் இறைவனைக் காணலாம் எனத் தெளிவுபடுத்தியுள்ளார்.

''தலையாய ஐந்திணையுஞ் சாதித்துத் தாழ்ந்து
தலையாயின வுணர்ந்தோர் காண்பர்''

மேலும் முக்தி தரும் செயலைச் சுட்டிக்காட்டுமிடத்து,

''கீழயின துன்ப வெள்ளக் கடல் தள்ளி உள்ளூறப் போய்
வீழா திடுந்தின்பம் வேண்டுமென்பீர்''

எனக் குறிப்பிட்டுள்ளார். இறைவனையன்றி, இறைவனின் அடியவர்களை வணங்கினாலும் முக்தி உண்டு என்பதை,

''கழற்கொண்ட சேவடி காணலுற்றார் தம்மைப் பேணலுற்றார்
நிழல்கண்ட போழ்தத்து நில்லா வினை''

என உறுதியுடன் எடுத்தியம்பவும் செய்கின்றார். அண்டவாணன் அடித்தலமே இங்கோர் தஞ்சம் என்று தெளிவு பெற்ற நிலையில் அவ்வின்ப நிலை பற்றி மிக அழகாக எடுத்துரைத்துள்ளார்.

23. திருஞானசம்பந்தரின் வாழ்வும் சைவநெறி மாண்புகளும்



சொ.தமிழ்ச்செல்வி
ஆய்வியல் நிறைஞர் தமிழ்
சிறி சாரதா மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
சேலம்

முன்னுரை

சைவநெறி தழைத்தோங்க பாடுபட்டவர்களில் தேவார மூவரின் பங்களிப்பு பெரியதாகும். இவர்கள் பாடிய தலங்கள் திருமுறைத் தலங்கள் என்றழைக்கப்படுகின்றன. தேவார மூவர் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் ஆவர். இவர்களில் இளம் வயதிலேயே சிவன் அருள் பெற்றுப் பல பாடல்களைப் பாடி இறைவனுடன் கலந்த பெருமை திருஞானசம்பந்தரையே சாரும். இத்திருஞான சம்பந்தரின் வாழ்வு குறித்தும் சைவ நெறிக் கோட்பாடுகள் குறித்தும் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

திருஞானசம்பந்தர்

நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும் ஞான சம்பந்தன் என்று எல்லோராலும் போற்றப்படுகின்ற திருஞானசம்பந்தர் சோழநாட்டு சீர்காழியிலே அந்தணர் குலத்தில் சிவபாத இருதயருக்கும் பகவதி அம்மையாருக்கும் மகனாய்த் தோன்றினார். இவருடைய இயற்பெயர் ஆளுடைய பிள்ளை ஆகும். இவர் பால் மணம் மாறாச் சிறுவனாக இருந்தபோதே பாட்டுப் பாடத் தொடங்கி "தோடுடைய செவியன்" என இவர் தேவாரத் திருமுறையில் முதல் மூன்று திருமுறைகள் பாடியுள்ளார். இவர் 16000 பதிகங்கள் பாடியுள்ளார். ஆனால் தற்போது 384 பதிகங்களே கிடைக்கின்றன. பெரிய புராணத்தில் இவர் புராணமே மிகுதியான பாடல்களில் பாடப்படுகிறது. அதனால் பிள்ளை பாதி புராணம் பாதி என்பர். வேத நெறி தழைத்தோங்க மிகு சைவத் துறை விளங்க இவர் தோன்றினார் எனப் பாராட்டுவார் சேக்கிழார். இவர் நின்றசீர் நெடுமாறன்

என்ற பாண்டிய மன்னனைச் சமண சமயத்திலிருந்து சைவ சமயத்திற்கு மாற்றினார். இவர் தன்னுடைய பதினாறாவது வயதில் திருப்பெருமண நல்லூரில் இறைவனுடன் கலந்தார்.

ஞானசம்பந்தரின் ஐந்தெழுத்து மந்திரம்

திருஞான சம்பந்தர் சிறந்த சிவ பக்தரானதால் சிவ பெருமானின் பெருமைகளைப் பலவாறாகப் பாடி உள்ளார். சிவ பெருமானுக்குரிய நமசிவாய என்னும் ஐந்தெழுத்து மந்திரத்தை வேதமாகக் கருதி ஓதினார்.

மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையுள் நின்றவர் தம்மை யாள்வன
செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்கு
அந்தியுள் மந்திரம் அஞ்செழுத்துமே

என்று மந்திரம். நான்கு வேதங்களுமாகி தேவர்களின் சிந்தையில் நின்று அவர்களை ஆட்கொள்வதும், மறையோர்களின் வேதத்தில் காலை, மாலை, நண்பகல் என முப்பொழுதும் ஓதப்படுவதும் நமச்சிவாய எனும் ஐந்தெழுத்தே என்று பாடுகின்றார்.

ஈசனும் விரும்பக் கூடியது ஐந்தெழுத்தே

ஐந்தெழுத்து மந்திரமான நமசிவாயத்தை ஈசனும் விரும்புவான் என்று குறிப்பிடுகின்றார். இதனைப் பின்வரும் பாடல் வரிகளின் மூலம் அறியலாம்.

வீடு பிறப்பை அறுத்து மெச்சினர்
பீடை கெடுப்பன பின்னை நாள்தொறும்
மாடு கொடுப்பன மன்று மாநடம்
ஆடி உகப்பன அஞ்செழுத்துமே

என்ற வரிகளில் இறப்பை நீக்கி நல்ல செல்வத்தைத் தந்து மகிழச் செய்யக்கூடிய இவ்வைந் தெழுத்தை ஈசனும் விரும்புவான் என்று குறிப்பிடுகின்றார்.

திருநீற்றின் பெருமைக் கூறல்

திருஞான சம்பந்தர் திருவைந்தெழுத்தின் பெருமையினை மட்டுமல்லாது திருவாலவாய்ப் பதிகத்தில் திருநீற்றின் பெருமையை எடுத்துரைக்கின்றார். இதனைக்

''காண வினியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி அணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருவாலவாயன் திருநீறே''

என்ற வரிகளில் அடைக்கலம் தருவதும் செல்வம், புகழ், அறிவு என அனைத்துப் பெருமைகளையும் தருவது சிவபெருமானின் திருநீறே என்று குறிப்பிடுவதனை அறியமுடிகின்றது.

மனதை உருக்கும் மந்திரம்

திருஞான சம்பந்தர் சிவபெருமான் மீது தீராத காதல் கொண்டு பாடும் பாடல் ஒன்று கருங்கல் மனத்தையும் உருக வைக்கும் இயல்பினது ஆகும். இதனைக்

''காதலாகிக் கசிந்துகண்ணீர் மல்கி
ஓது வார்தமை நன்னெறிக்கு உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே''

என்ற பாடல் வரிகளின் மூலம் அறியமுடிகின்றது.

அறியாமையை அகற்றும் ஐந்தெழுத்து

நமசிவாய என்கிற இவ்வைந்தெழுத்து மந்திரத்தை அறிந்து ஓதுவாருக்கு அறியாமை எனும் துன்பம் நீங்குவதாக குறிப்பிடுகின்றார். இதனை,

''ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி ஒண்சுடர்
ஞான விளக்கினை ஏற்றி நன்புலத்
தேனை வழிதிறந்து ஏத்து வார்கிடர்
ஆன கெடுப்பன அஞ்செ ழுத்துமே''

என்ற வரிகள் வாயிலாக உணர முடிகின்றது.

பிற கடவுளரையே வணங்கக்கூடிய திருவைந்தெழுத்து

சிவபெருமானவன் மற்ற முப்பெருங்கடவுள்களான திருமால், நான்முகன் போன்றோர் வணங்க கூடியவன் ஆவான். இதனைக்

"கார்வணன் நான்முகன் காணு தற்கொணரச்
சீர்வணச் சேவடி செல்வி நாள்தோறும்
போவணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்கு
ஆவணம் ஆனவ அஞ்செழுத்துமே"

என்ற பாடல் வரிகளின் மூலம் கார்மேக வண்ணனான திருமாலும் நான்கு முகங்களையுடைய பிரம்மனும் சிவனுடைய திருவைந்தெழுத்தினை அறிந்து போற்றுதற்குரியது என்பதனை அறியமுடிகின்றது.

முடிவுரை

இத்திருஞான சம்பந்தரின் நமசிவாய பதிகத்தை அறிந்து பாடுபவர்கள் வானவர்களுக்கு ஈடாகவும் ஈசனின் திருவடியை வீடுபேறாகவும் அடைவர் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. எனவே சிவனடிப் போற்றுவோம் சிவனடியாரைப் போற்றுவோம்.

24. மாணிக்கவாசகர் காட்டும் சைவநெறி



கோ. பிரியா
ஆய்வியல் நிறைஞர் தமிழ்
சிறி சாரதா மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
சேலம்

முன்னுரை

பக்தி இலக்கியங்கள் யாவும் உலகில் பிறக்கக்கூடிய உயிர்கள் அனைத்தும் உயர்வு பெறக்கூடிய வகையில் ஆன்மீகப் பெரியோர்கள் பலர் ஞானமார்க்கங்களைக் கடைப்பிடித்து வாழ்ந்து வந்துள்ளனர் என்ற தகவலை எடுத்துரைக்கின்றன. பக்தி இலக்கியங்களுள் சைவமும் வைணவமுமே இருபெரும் சமயங்கள் ஆகும். அவற்றுள் சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு பன்னிரு திருமுறைகள் உள்ளன. இதனுள் எட்டாம் திருமுறையாகவுள்ளது திருவாசகம். இத்திருவாசகம் சிவபெருமானையே குருவாக ஏற்ற ஞானநிலையில் எழுந்த ஒரு வாசகமே. திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார். திருவாசகத்தை இயற்றிய மாணிக்கவாசகர் இறைவனின் அருளால் அவன்தாள் வணங்கி எளிய முறையிலே இன்பமென்னும் திருவடிப்பேற்று நிலையை அடைந்தார். எனவே திருவாசகத்தில் கூறலாகும் சைவ நெறிக் கருத்துக்களை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

முடிவில்லாப் பரம்பொருளானவன்

உலகில் தோன்றும் உயிர்கள் யாவும் தோன்றி மறையும் ஆற்றல் கொண்டவை. இருப்பினும் எக்காலக்கட்டத்திலும் முடிவே இல்லாத பரம் பொருளாக இருப்பவன் இறைவன் ஒருவனே. தோற்றம், எல்லை, முடிவு ஆகிய மூன்றும் இல்லாதவனாகயுள்ளான். உலகங்கள் எல்லாவற்றையும் படைத்து, காத்து, அழித்து அவற்றுக்கு அருள்புரியும் தன்மைக் கொண்டவன் என்பதை,

> "உலகம் யாவையும் தாமுள வாக்கிலும்
> நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா"

என்ற பாடல் வரிகளின் மூலம் தாயுமானவர் இறைவனின் தொழிலாக முதல் மூன்று செயல்களையே எடுத்துரைத்துள்ளார். மேலும் உலக உயிர்கள் யாவும் இறக்கும் தன்மையைப் படைத்த இறைவனுக்கு என்றுமே அழிவே இல்லை என்பதனை,

ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே

என்ற மாணிக்கவாசகரின் திருவாசகப் பாடல் மூலம் அறியமுடிகின்றது.

மெய்ஞ்ஞானம் பெறல்

ஞானம் என்றால் அறிவு என்பது பொருள் அனைத்து உயிர்களுக்கும் ஒவ்வொரு வகையில் அறிவு கொண்டிருக்கும் என்பதை ஒரறிவதுவே உற்றறிவதுவே என வரும் தொல்காப்பிய நூற்பா உணர்த்துகிறது. மனித இனம் ஆறறிவு பெற்றுத் திகழ்கின்றான். ஆகவே ஆறறிவுக்கும் மேலான மெய்ஞ்ஞான அறிவு பெற மக்கள் செய்ய வேண்டிய செயல்களாகத் திருவாசகப் பாடல் பின்வருமாறு எடுத்துரைக்கின்றது. இதனைப்

''போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வநடர் வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்மை கட்டழிக்க வல்லானே''

என்ற பாடல் இறைவனை வணங்கி அவன் புகழ்பாடி இருந்ததன் பயனால் தம்மிடம் குடிகொண்டிருந்த பொய்மைகள் அழிந்து மெய்ஞ்ஞானம் பெற்று மெய்யடியார் ஆனவர் மீண்டும் இந்நிலவுலகில் தோன்றி வினைப்பயன் காரணமாக வரும் பிறப்பைச் சாரமல் வஞ்சனைகளைச் செய்யும் ஐம்புலன்களுக்கு உறைவிடமாகிய உடம்பினால் உளவாகும் பாசத் தொடர்புகளை ஒழிக்க வல்லமை பெற்றவனே இறைவன் என்பதைப் புலப்படுத்துகிறது.

சிவபெருமான் நற்குணங்களை வழங்கல்

அன்பு, கருணை ஆகிய நற்குணங்களை வழங்குபவன் இறைவன். தீய குணங்களை அழிப்பவன் என்பதைப் பின்வரும் பாடல் விளக்குகிறது.

''உள்ள மலமூன்றும் மாய உகுபெருந்தேன்
வெள்ளத் தரும்பரியின் மேலவந்த வள்ளல்
மருவும் பெருந்துறையை வரித்துமின்கள் வாழ்த்தக்
கருவுங் கெடும்பிறவிக் காடு''

என்ற பாடல் மூலம் காணலாம். வல்லவனாகிய சிவபெருமான் நம்மிடமுள்ள ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று தீயக் குணங்களை அழித்து மேன்மேலும் பொங்கி பெருகுகின்ற பேரின்ப வெள்ளத்தனை வழங்குபவன். அன்றைய நாளில் குதிரையின் மீது ஏறி வந்த வள்ளலும் நீயே என்று இறைவனை வாழ்த்தி வணங்கலாம் என்பதை உணரமுடிகிறது. எனவே நம்முள் இருக்கும் தீய செயல்களை அழித்து நற்குணங்களை மட்டுமே வழங்கும் ஆசானாகவே இருக்கக்கூடியவன் இறைவனை ஒருவனே. ஆதலால் இறைவனைத் தொழுது வணங்கி வந்தால் நற்குணங்கள் நம்மை வந்து சேரும்.

எல்லா தெய்வங்களுக்கு மேலானவன்

தெய்வங்களுக்கெல்லாம் முதன்மையான தெய்வமாகச் சிவபெருமான் விளங்குகிறார்.

''தில்லைக் கூத்தனே
தென்பாண்டி நாட்டானே''

தென்னாட்டில் உள்ள தில்லை என்ற ஊர் உலகிலேயே மையமான பகுதியாகத் திகழ்கிறது. இந்நகரில் குடிகொண்டுள்ள இறைவன் சிவபெருமான் இவர் மேலான தெய்வம் என்பதற்குச் சான்றாக,

''யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடையான்
யாவருக்குங் கீழாம் அடியேனை -யாவரும்
பெற்றறியா இன்பத்துள் வைத்தாய்க்கென் எம்பெருமான்
மற்றறியேன் செய்யும் வகை''

என்ற பாடலானது ஒரு சிறிய அடியேனை யாராலும் பெறவியலாத பேரின்பப் பேற்றினுள் கொண்டு செல்லும் இறைவனுக்கு ஒரு அடியேன் எவ்வளவு கைம்மாறு செய்தாலும் ஈடாகாது என்பதை உணர்த்துகிறது.

சிவனின் திருவடியை அடைவதற்கான வழிமுறைகள்

ஒவ்வொருவரும் சிவபெருமானின் திருவடிகளை அடைவதற்காகச் சிந்தனையைத் தெளிவாக வைத்துக் கொண்டு மேன்மேலும் நன்றாகச் சிந்தித்து நல்லறத்தைக் கடைப்பிடித்து வாழ்ந்து வந்தாலே போதுமானது. பொலிவு பெற்று விளங்கும் வேலினைப் போன்ற கண்களையுடைய உமையம்மையை ஒரு பாகத்தில் கொண்டிருப்பவனும் பாம்பை அணைந்தவனுமாகிய சிவபெருமானின் அருளமுதத்தை நிறைவாகப் பருகி பொய்யான இவ்வுலகில் இருந்து கொண்டிருக்காமல் அடங்காத ஆர்வத்துடன் மெய்யான சிவபெருமானின் திருவடிகளை அடைவதற்கான முயற்சியை மேற்கொள்ளலாம். இதனைச்

''சேரக் கருதிச் சந்தனையைத்
திருந்த வைத்துச் சிந்துமின்
போரிற் பொலியும் மேற்கண்ணன்
பங்கன் குயங்கன் அருளமுதம்
ஆரரப் பருகி ஆராத
ஆர்வங் கூர அழுந்துவீர்
போராப் புரிமின் சிவன்கழற்கே
போய்யிற் கிடந்தது புரளாதே''

என்ற பாடல் உணர்த்துகிறது.

எல்லாச் செயலிலும் இறைவனே

உலகில் நிகழ்த்தப்பெறும் அனைத்துச் செயல்களிலும் இறைவன் நிறைந்துள்ளான் என்பதற்குச் சான்று பகரும் வகையில் நான் உரையாடும் நாக்கு முதற்கொண்டு காரணம் முடிவாக எல்லாமும் நீயே நான் தேர்ந்து தெளிகின்ற வகையும் நீயே. தீமையும் நம்மையும் ஆகிய அனைத்தும் நீயே உன்னைத் தவிர எனக்கென்று எதுவுமே இவ்வுலகில் இல்லை. மேலும்

விரிவாக உனைச் சொல்ல எனக்குத் தெரியும் வகைதான் யாதோ? யாதொன்றும் தெரியவில்லை. தெரியாது என்ற வார்த்தைக்கு விடையாய் இருப்பதும் நீயே என்பதை,

"கூறும் நாவே முதலாக்
கூறுங் காரணம் எல்லாம் நீ
தேறும் வகைநீ திகைப்புநீ
தீமை நன்மை முழுவதும் நீ
வேறோர் பரிசிங் கொன்றில்லை
மெய்ம்மை உன்னை விரிந்துரைக்கில்
தேறும் வகை என சிவலோகா
திகைத்தால் தேற்ற வேண்டாவோ"

என்ற பாடலின் மூலம் ஆதி முதலாய் அந்தம் வரையில் பிறப்பு முதல் இறப்பு வரை நிகழும் அனைத்துச் செயல்களுக்கும் அடிப்படையாய் விளங்கும் சிவபெருமானே வழிநடத்திச் செல்கின்றாய் என்று மாணிக்கவாசகர் குறிப்பிடுகின்றார்.

சிவனின் தோற்றத்தை அடியேன் அறிதல்

மூன்று கண்களையுடைய எம்முடைய தந்தை தன்மை எவர் ஒருவரும் அறிந்து கொள்ள இயலாதவாறு அரிதாக விளங்குபவன். ஆனால் தன்னுடைய அடியவர்க்கோ எளிதாக அறிந்துக்கொள்ள இயலுமாறு விளங்குபவன். சிவபெருமான் மிளிரும் பொன்னையும் வென்றதாகிய சடைமுடியைக் கொண்டவன். அந்தச்சடைமுடியில் இளம்பிறையினைக் சூடியிருப்பவன். இவ்வாறு தோற்றம் கொண்ட சிவபெருமான் முந்தை தீவினைகள் அகலும்படி என்னை ஆட்கொண்டான். அதனோடு மட்டுமின்றி அவனுடைய அடியவர் பலருள் தன்னையும் ஓர் அடியவனாகச் சேர்த்துக் கொண்டான் என்று மாணிக்கவாசகர் குறிப்பிடுவதை,

"முன்னை என்னுடைய வல்வினை
போயிட முக்கண் துடையெந்தை
தன்னை யாவரும் அறிவதற்
கரியவன் எளியவன் அடியார்க்கு
பொன்னை வென்றதோர் புரிசடை

அன்மை ஆண்டுதன் அடியரிற்
கூட்டிய அதிசயங் கண்டோமேள''

என்ற பாடல் மூலம் சிவபெருமான் அடியவர்க்குக் காட்சித் தருகின்ற தன்மையையும் அடியவர்களின் பக்தி நெறியினையும் உணரமுடிகின்றது.

முடிவுரை

சமய இலக்கியங்களாகப் பன்னிரு திருமுறைகள் வாய்க்கப் பெற்றன. அவற்றுள் எட்டாம் திருமுறையாக அமைந்ததே மாணிக்கவாசகரின் திருவாசகம். திருமுறைகள் பொதுவாக உள்ளத்து உணர்வில் கலப்பன எனினும் ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்குவதாகத் திகழ்கிறது என்பதை இறைவனின் அருள்தன்மையிலிருந்தும் அடியவர்களின் சிவபக்தி நெறியின் மூலம் புலனாகிறது. எனவே திருவாசகப் பாடலைக் கேட்பதன் மூலம் நல்லறம் பெற்றுத் திகழ நன்வாய்ப்பு நல்கும் என்பதை இக்கட்டுரையின் வழி எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

25. திருவிளையாடற் புராணத்தில் இறைக் கோட்பாடுகள்

எம். மீனாட்சி
உதவிப்பேராசிரியர்
வரலாற்றுத்துறை
த.ஞா.அ.ம.கலைக் கல்லூரி
மயிலாடுதுறை

முன்னுரை

ஒவ்வொரு சமயமும் தாம் வகுத்துக் கொண்ட குறிக்கோளை அடைவதற்குச் சில நெறிமுறைகளைக் கொண்டுள்ளது. ஆன்மா இறைவனைச் சார்ந்த பேரின்பம் அடையச் செய்வதே சைவ சமயத்தின் குறிக்கோளாகும். இந்நிலையை அடைய சமயச் சடங்குகளும், நெறிகளும், நம்பிக்கைகளும், வழிபாட்டு முறைகளும், பழமை வாய்ந்த புராணங்களும் பயன்படுகின்றன. அத்தகைய முறைகள் பற்றித் திருவிளையாடற்புராணம் குறிப்பிடுவனவற்றை இப்பகுதி விளம்புகின்றது.

சைவத்தின் தொன்மை

சிவ வழிபாடும் சிவ நெறியின் அடிப்படைக் கொள்கைகளும் வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட தொன்மை உடையவை. இது நூல்களாலும், ஆராய்ச்சியாலும் விளங்கும் உண்மை. பற்பல சமயங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு காலத்தில் ஒவ்வோர் ஆசிரியரால் நிறுவப்பட்டப் பின் அவர்தம் மாணாக்கர்களால் உலகில் பரப்பப்பட்டு வந்தன என்பதை அவற்றின் வரலாறு தெரிவிக்கும். ஆனால் சைவம் என்பது அவ்வாறு ஒரு காலத்து ஒருவரால் நிறுவப்பட்டு நடப்பதன்று. நிலவுலகில் பண்டுதொட்டுப் பயின்று வருவது. இதன் அடிப்படையில் உள்ள ஞான நெறியினைச் சிவபெருமான் முதன் முதல் நான்கு முனிவர்க்கு ஓர் ஆலமர நிழற்கீழிருந்த விளக்கியருளியதாகத் திருமுறைகள் முழங்குகின்றன. இதனைப் பரஞ்சோதியார்,

''மறைகள் ஆகமம் பொதுச்சிறப் பெனச்சிவன் வகுத்து
முறையினோதிய விதிவிலக்குரைகளும்
பேதுமற்ற முனிவர்க் கன்று பெருமறை விளக்கஞ் செய்து
வேதத்தின் பொருளே யிந்த வெஞ்சமண் வலையிற் பட்டு''

என்ற பாடலடிகள் மூலம் சிவநெறியின் அடிப்படை கொள்கைகளைச் சிவபெருமானே முதலில் அருளினார் என்பது தெளிவாகின்றது.

சிவம் என்பதன் பொருள்

கடவுள், இறைவன், முதல்வன் என்றாற்போலப் பெரியோர்கள் உலக முதற்பொருளுக்கு இட்டு வழங்கி வரும் பெயர் சிவம் என்பதாகும். அம்முதற் பொருளின் ஒவ்வோரியல்பையும் நினைவூட்டும். கடவுள் என்னும் பெயர் எல்லோருடைய உணர்வையும், செயலையும் கடந்தது. இறைவன் என்பது எப்பொருளிலும் தங்குபவன் அவன் எங்கும் உள்ள நிலைமையைக் குறிக்கும். முதல்வன் என்பது எப்பொருட்கும் முற்பட்டு நின்று, அதனைத் தொழிற்படுத்துவன் என எல்லாவற்றிற்கும் தான் சார்பாயிருந்து நடத்தும் வினை முதலாற் தன்மையை உணர்த்தும்.

இவற்றைப் போலச் சிவம் என்னும் பெயர் முதற்கடவுள் எத்தகைய மாறுதல், எய்துதல் இன்றி தூய பேரின்பப் பொருளாய் விளங்கும் தன்மையை உணர்த்துவதாகும். திருவிளையாடற்புராணம் எத்தகைய மாறுதலும் இல்லாத, தூய பேரின்பப் பொருளாய் விளங்கும் சிவபெருமானின் திருவிளையாடல்களைக் குறிக்கின்றது. மேலும், எல்லாப் பொருட்கும் தலைவனாய் இருக்கும் தன்மையையும், எல்லாவற்றிலும் தான் சார்ந்து நடத்தும் தன்மையையும், எல்லாப் பொருளிலும் தங்கும் தன்மையையும் இப்புராணம் சுட்டிக்காட்டுகின்றது. இதற்குப் பின்வரும் பாடல் அடிகள் சான்றாகின்றன.

''பூத நாயகன்
ஏகநாயகனெவ் வுயிர்க்குந் தானே
ஒப்பாரும் மிக்கோர் வேறற்றொரு வரை யெங்குந்தாங்கு
அப்பரஞ் சுடரே
பூண்ட வெங்காரி மேற்பட்ட தெவ்வுயிர்க்கும்
போதன் மேற்பட்ட''

சிவ வழிபாடு

''சிவன் மங்கலம்'' என்றும், பைரவன் என்றும் பொருள்படும். ''சிவன்'' என்னும் சொல் எளிதில் நலம் தருபவன் என்பதாகும். ''சிவ'' என்பது சிவப்பு நிறத்தைக் குறிக்கும் சொல்லாகும். ஆகவே சிவன் சிவந்த நிறமுடையவன். அவனுடைய சடைமுடியும் சிவந்த நிறத்தை உடையது என்று,

''இலக்கணம் கூறுகிறார் திருமூலர். அவை
ஊரும் உலகமும் ஒக்கப் படைகின்ற
பேரறிவாளன் பெருமை குறித்திடின்
மேருவும் மூவுல காளி யிலேங் கெழந் தாரணி''

எல்லா உலகையும் ஒரு சேரப் படைக்கின்ற பேரறிவாளனாகிய பெருமானின் பெருமையை எடுத்துக் கூறும் சமய நெறி சைவமாகும். பழந்தமிழர்கள் கடவுள் கொள்கை உடையவர்கள் என்பதும், எல்லாவற்றையும் கடந்து நின்ற முழுமுதற்கடவுள் சிவன் என்றே வழிபட்டுள்ளனர். இதனைச் சங்க கால இலக்கியங்களான, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, கலித்தொகை, அகநானூறு ஆகிய ஐந்து நூல்களில் கடவுள் வாழ்த்து சிவனைப் பற்றியே அமைந்துள்ளன.

புறநானூற்றில் சிவபெருமான் எல்லா வகையான உயிர்களுக்கும் காவலாய் உள்ளவன். நீர் வற்றாத தாழ்ந்த சடையையுடைய சிறந்த தவத்தையுடையவன் என்பதை,

''எல்லா உயிர்க்கும் ஏமம் ஆகிய
நீரறிவு அறியாக் கரகத்துக்
தாழ்சடைப் பொலிந்த அருந்தவத்தோர்க்கே''

என அறியமுடிகிறது.

சமய உண்மைகள்

சைவ சித்தாந்தத்தின் அடிப்படையாகக் கொள்ளப்படும் பொருள்கள் மூன்று. அவை, பதி, பசு, பாசம் என்பன. இவற்றைத் தமிழில் இறை, உயிர், தளை என்பர். இவை ஒன்றினின்றும் பிறவற்றன என்றோ, அதன் திரிவு என்றோ சைவ சித்தாந்தம் கொள்ளவில்லை. மூன்று பொருள்களும் தோற்றமில்லாத காலமாக உள்ளன என்று கொள்வர். இக்கருத்தைப்,

''பதிபசு பாசம் எனப் பகற் முன்றிற்
பதியினைப் போறபசு பாசம் அநாதி''

என்று திருமந்திரம் தெரிவிக்கின்றது. பதி,பசு, பாசம் என்பதன் விளக்கமாக,

''என்னை அறிவென்றான் என்னறில் ஆனந்தற்
தன்னைச் சிவமென்றான் சந்தமும் என்னை யுள்ளிப்
பாரா மறைந்ததுவே பாசமென்றான் இம்மூன்றும்
ஆராய்ந்த தவர் முத்தராம்''

என்ற சிவயோக சாரப் பாடல் உள்ளதைக் காணலாம். இம்முப்பொருள்களின் இயல்பைத் திருவிடையாடற்புராணம் சுட்டிக்காட்டுகின்றது. பகு என்னும் சொல் காப்பவன் என்னும் பொருளுடையது. அது தலைவன் என்னும் கருத்தில் வழங்குகிறது. பதி தலைவன் என்பதனால் பசுக்கள் அவனுக்கு அடிமையாகவும், பாசங்கள் அவனுக்கு உடைமையாகவும் விளங்குகின்றன. தலைவன் என்பது கடவுளைக் குறிக்கும். இத்தன்மையைத் திருவருட்பயன்,

''தன்னிலைமை மன்னுயிர்கள் திருவருட்பயன்
பின்ன மிலான் எங்கள் பிரான்''

பதி அறிவு வடிவமானவன், பேரறிவுடையவன். எல்லாம்வல்ல பேராற்றல் உடையவன். எல்லாப் பொருள்களையும் தம் இச்சைப் படியே படைத்தும், காத்தும், அழிப்பவன். தான் அவ்வாறு

பிறரால் படைக்கவும், காக்கவும், அழிக்கவும் விடாமல் என்றும் நிலைத்திருப்பவன்.

பசு-பாசம்

பசு என்பது உயிர். உயிர் கண்ணால் காண்பதற்கே உரியது அன்று. கருத்து வகையால் மட்டுமே உணர்தற்கு உரியதாகும். உயிர் எத்தன்மைத்து என்ற வழி உணர்தல் தன்மைத்து என வரும் இலக்கணம் இவ்வுண்மையை விளக்கும் உயிர் அல்லது ஆன்மா என்பது பற்றி மெய்கண்டார்.

''அறிவித்தால் அறியக் கூடியதும், அங்ஙனம் அறியுங்கால் அறியப்பட்ட பொருளில் எழுந்து அதுவே நின்று அறிவதுமாகிய இயல்பினை உடைய அறிவுப் பொருளே உயிர் என்று கூறுகின்றார்''

உயிர்களின் உண்மை இயல்பு

சார்ந்த தன் வண்ணம் சார்தல் என்பது உயிர்களின் உண்மை இயல்பு எனப்படும். அதாவது தான் எந்தப் பொருளைச் சார்கின்றதோ, அந்தப் பொருளின் தன்மையே தன் தன்மையாகக் கொண்டு நிற்றலாகும். ஆகவே உயிர் பாசத்தைச் சார்ந்த வழிப் பாசமேயாயும், பதியைச் சார்ந்த வழிப் பதியேயாவும் நிற்கும். உயிர்கட்கு இன்பத்தை விரும்புதலே இயற்கையாதலின் இன்பப் பொருளாகிய பதியை அடைதலே உயிர்கட்கு இயற்கையாகும். இறைவனை மனம், மொழி, மெய் மூன்றாலும் வழிபட வேண்டும். மனத்தால் நினைத்து வாயாற்பாடித் தலையால் வணங்கித் திரிகரணமும் ஒன்றுபட்ட வழிபாட்டினை உடையார் உலகத்தில் உயிர் பேரின்பமாம் வீட்டின்பத்தை எய்துவதற்குரிய தலையாயவர்கள்.

வழிபாடு பற்றிப் பரஞ்சோதியார், தவம் மானதம், வாசிகம், காயதம் மூன்று வகைப்படுத்துகிறார். மானதம் என்பது மனத்தாற் செய்யப்படுவன. தருமமும், தானமும் செய்வதில் கருத்து வைத்தல், பிற உயிர்களுக்கு இரங்கல், பொறுமை காத்தல், உண்மை கூறல், மௌனநிலை பொருந்த இறைவனைச் சிந்தித்தால், ஐந்து பொறிகளை அடக்கி ஆளுதல் இது மனத்தால்

வழிபடும் நெறியாகும்.

''மானதமே வாசிகமே காயிகமே யெனவகுத்த
ஈனமில் சீர்த்தறு மூன்றாம் இவற்றின் மானதந்தரும்
தானமிகை மதிவைத்தல் தயவு பொறைமெய் சிவனை
மோனமுதற் தியானித்த கலந்தடக்கல் முதலனந்தம்''

என்ற திருவிளையாடற்புராணப் பாடலே சான்றாகும். திருவைந்தெழுத்தை உச்சரித்தலும், பஞ்சபிரம மந்திரங்களையும், உபநிடதப் பகுதிகளையும் வேதம் கூறும் சத உருத்தி மந்திரங்களை ஒத்தலும், துதிப்பாடல்களைக் கூறுதலும் பெரிய அறங்களைக் கூறுதலும் வாக்கால் செய்யப்படும் நெறியாகும்.

பாசம்

பசுக்களைப் பிணித்துள்ளவைப் பாசம் எனப்படும். பாசங்கள் மூன்று. அவை ஆணவம், கன்மம், மாயை என்பன, பதியை அடைய விடாது. பசுவைத் தடைச் செய்வது. இந்தப் பாசம் மும்மலங்களை உடைய உயிரைச் சகவர் என்பர். இதனைத் திருவருட்பயன்,

''திரிமலத்தார் ஒன்று அதனிற் சென்றார்கள் அன்றி
ஒரு மலத்தார் ஆயும் உயிர்''

என்று குறிப்பிடுகின்றது. அம்மும்மலங்களுள் ஒன்றாகிய மாயையினின்றும் நீங்கி ஏனை இரு மலங்களையும் உடையாரைப் பிரளயாகலர் என்பர். இவர்களைத் தவிர மாயை கன்மமாகிய இரு மலங்களுமின்றி ஆணவமாகிய இருமலமே உடையாரை விஞ்ஞானகலர் என்பர். தானல்லாததைத் தான் என்றும், தன்னுடையதல்லாவற்றை தன்னுடையவென்றும் கருதும் செருக்கே ஆணவமாகும். இதனை,

''யான் எனது என்னும் செருக்கே
நன்மை உடையம் யாம் என்னும் செருக்கே''

எனத் திருக்குறள் கூறுகின்றது.

மாயை

குடத்திற்கு மண் போல், உலகத்திற்கு முதற்காரணமாய் இருப்பது மாயை, காரியப் பொருள்கள் தம் காரணத்தில் ஒடுங்கி, அதனின்றே தோன்றுகிறது.

''மா யா என்பவற்றில் மா ஒடுங்குதல்
யா வருதல் எனப் பொருள் தரும்

உயிர்கள் மாயை என்ற மலத்தினின்று விடுபட்டு இறைவனடியை வணங்க வேண்டும்.

''இனித்த மாயையோ டிருவினைத் தொடக்கினும் இருளினும் வேறாகி''

''கொடியமா பாசந் தீர்ப்பான்''

''தள்ளிய பவமகற்றுந் தவமருள் செய்கெனக் கருணை''

''மருட்படு மாயை கழிந்தவன்''

என்ற பாடலடிகளில் பரஞ்சோதி முனிவர் மாயையின் இயல்பினையும், மாயையைப் போக்கும் இறைவன் கருணையையும் குறிப்பிடுகின்றார்.

முடிவுரை

தொன்றுதொட்டு விளங்கி வரும் பதி, பசு, பாசம் என்ற முப்பொருள்களும் திருவிளையாடற்புராண பாடல்களில் பொதிந்து கிடக்கும் பாங்கு தொகுத்துக் காட்டப்பெற்றது.

26. சைவ சமயம் - ஒரு கண்ணோட்டம்



ஆ. சித்ரா
முனைவர்பட்ட ஆய்வாளர்
விவேகானந்தா கல்லூரி
கன்னியாகுமரி

முன்னுரை

உலகம் முழுவதிலும் பல்வேறுபட்ட சமயங்கள் உள்ளன. அவற்றுள் சைவ சமயமே மிகவும் பழமையானதும், காலத்தால் அழியாததும், மாறுபடாமல் இருப்பதும், சைவ சமயமே ஆகும். இம்மதம் செழிக்க காரணமானவர்கள் நால்வகை குறவர்களான அப்பர், சுந்தரர், திருஞானசம்பந்தர், மாணிக்கவாசகர் போன்றோர். இவர்கள் சைவ மதத்தை ஆல்போல் தழைக்கச் செய்தவர்கள். அதுமட்டுமன்றி ஆலமர நிழலில் சைவசமயத்தின் புகழை உலக மக்கள் அனைவருக்கும் அறியச் செய்தவர்களும் ஆவர். அத்தகைய சைவ சமயத்தைப் பற்றியும் அதில் உள்ள இறைவழிபாடு, சைவ சமய கோட்பாடுகள் பற்றியும் இக்கட்டுரையில் காண்போம்.

சைவம் - விளக்கம்

புலால் நீங்கிய உணவை உட்கொள்ளும் வாழ்க்கையைக் கடைபிடிப்பதே சைவம். இக்கொள்கையை ஏற்றுக் கொண்டு வாழ்பவர் சைவர்கள். இவர்கள் வழிபடும் தெய்வம் சிவம். புலால் மறுத்தல் என்பது உயிர்களிடத்தில் அன்பு செலுத்துவதைக் குறிக்கும். பாரபட்சமற்ற அன்பை உயிர்களிடத்தில் செலுத்த பழகிக் கொண்டால் அதனைக் கொல்லுதல் எனும் செயல் தடுக்கப்படுகிறது. அன்பே சிவம் என்பதாலேயே சைவ வாழ்வு சிறந்த வாழ்வாகக் கருதப்படுகிறது. இதனையே,

> "கொல்லான் புலால் மறுத்தானைக் கைகூப்பி
> எல்லா உயிரும் தொழும்" (குறள்-260)

என்று திருவள்ளுவரும், "கொல்லா நெறியே குருவருள் நெறி"

என்று வள்ளல் பெருமானும், கொல்லாமையைப் பெருமைபடுத்துகின்றனர். இத்தகைய கொல்லா நெறியைக் கடைபிடித்து வாழ்ந்தவர்கள் சைவாச்சாரியர்கள் ஆவர்.

சைவ ஆசாரியார்

சைவ மரபில் சிவபெருமானே ஆசானாக வந்து ஆட்கொள்கிறான் என்பது அடிப்படைக்கருத்து. சிவாலயத்தில் பரம குருவானவர் தட்சிணாமூர்த்தி. இவர் கைலாய மலையில் சகல கல்வி கேள்விகளிலும், சிறந்து விளங்கிய அனைத்து முனிவர்களுக்கும் பரம ஞானத்தை வழங்கி வீடு பேறுளித்தவர். இப்பெருமான் வலக்கையில் காட்டும் சின் முத்திரை இருக்கருத்தைப் புலப்படுத்தும். பெருவிரல் இறைவனையும், முதல் விரல் ஆன்மாவினையும் குறிக்கின்றது. நடுவிரல், மோதிர விரல் மற்றும் சிறுவிரல் மூன்றும் ஆன்மாவைப் பாதிக்கும் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்றையும் முறையே குறிக்கும். ஆன்மாவானது இந்தப் பாதிப்பினின்று வழிபட்டு இறைவனது காலடியில் வந்து அடங்க வேண்டும் என்பதையே இம்முத்திரை குறிக்கின்றது. இவர் கைலாயத்தில் உள்ளவர். அவரைப் போலவே பூலோகத்தில் சைவ சமயத்தில் சமய குரவர்கள் என்று சொல்லப்படுவர் நால்வர்.

சமயாசிரியர்

சமயாசாரியர் நால்வரும் தமிழ் நாட்டில் 7,8மற்றும், ஒன்பதாம் நூற்றாண்டுகளில் தோன்றிச் சிவபக்தியையும், சைவ சமயத்தையும் வளர்த்தனர். இவர்கள் சாத்திரப் படிப்பு, குலத்தின் மேன்மை ஆகிய அனைத்தையும் விட மெய் அன்பே அருள் பெறுவதற்கு வழி. உலகுக்கு அனைத்தையும் விட மெய் அன்பே அருள் பெறுவதற்கு வழி. உலகுக்கு அனைத்தையும் விட மெய் அன்பே அருள் பெறுவதற்கு வழி. உலகுக்கு ஒரே தெய்வம், அத்தெய்வமே சிவம், அன்று முதல் இன்று வரை இவர்கள் ஆற்றுப்படுத்திய வழியிலேயே, நெறியிலேயே சிறிதும் பிறழாமல் சைவ மக்கள் அனைவரும் பின்பற்றி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கோயில் வழிபாடு

சைவர்கள் அனைவரும் நாள்தோறும் சிவாலயம் சென்று சிவ வழிபாடு செய்யக் கூடியவர்கள் இறைவன் எங்கும் நிறைந்து இருந்தாலும் அனைவராலும் மனத்தினாலே மட்டும் வழிபாடு செய்வது என்பது இயலாத காரியம். எனவே தான் முன்னோர்கள் ஆலயம் அமைத்தனர். ஆலயம் மக்கள் அனைவருடைய வழிபாட்டுக்கு என அமைந்த தனி இடமாகும். திருக்கோயில் வழிபாடு செய்யும்பொழுது பொருள் தெரிந்து வழிபடுவது சிறப்பு. கோயிலின் கோபுரமானது மிகவும் உயரமாக அமைக்கப்பட்டிருக்கும் எந்நேரமும் மக்கள் மனத்தில் இறைபக்தி இருக்க வேண்டும் என்ற நோக்கிலும் எங்கிருந்து பார்த்தாலும் கோபுரம் கண்ணில் படுகின்ற போதெல்லாம் பக்தி உணர்வு மக்களிடம் தோன்றி கடவுளை மனத்தில் கொண்டுவர வேண்டும் என்று அமைக்கப்பட்டதே உயரமான நிலையில் உள்ள கோபுரம். கோபுரத்தை தரிசித்தப் பின்னர் உள்ளே நுழைந்தவுடன் கொடிமரம் காணப்படும். கொடிமரம்-சிவம், கொடி-ஆன்மா, தருப்பைக் கயிறு - பாசம் என்பது ஒரு கருத்தாகும். கொடிமரத்தை அடுத்து பலிபீடமும், நந்தியும் அமைக்கப்பட்டுள்ளது. கருவறையினுள்ளே சிவலிங்கம் பரம்பொருளாய் அமைக்கப்பட்டுள்ளது. சிவலிங்கத்தை நோக்கியுள்ள நந்தியே ஆன்மா, பலி பீடமே நாம் பலி கொடுக்க வேண்டிய மனம் அல்லது ஆணவமாகிய பாசம் ஆலயத்தினுள் அமைக்கப் பெற்ற சிவலிங்கம் ஆன்மாக்கள் வழிபாட்டுக்காகவே லிங்க வடிவம் கொண்டுள்ளது. சிவபெருமான் அருவமாயும், உருவமாயும் இருந்து ஆன்மாக்களுக்கு அருளுகின்றார்.

சைவ தருமம்

ஒவ்வொரு சமயமும், தன் சமய தத்துவங்களுக்கு அடிப்படையாகச் சில தருமங்களைக் கொண்டுள்ளது. இவற்றைத் தருமம் அல்லது ஒழுக்க நீதி என்று கூறலாம். சைவசமய தருமங்களே ·இந்து சமயத்தின் தருமங்களாகச் சொல்லப்பட்டுள்ளன. ஒரு சமயத்தின் தருமம் என்பது மக்களின் வாழ்க்கைக் குறிக்கோளைத் தழுவியதாய் இருக்கும். சைவ

தருமத்தில் சிவாலய வழிபாடு முக்கியமான அடிப்படை உயர்ந்தவர், தாழ்ந்தவர், ஞானி, கல்வியற்றவர், ஆடவர், பெண்டிர் என எவ்வித வேறுபாடும் இல்லாமல் அனைவரும் கோயில் சென்று சிவபெருமானை முறையாக வழிபடுவது சைவ தருமங்களில் முக்கியமான ஒன்றாகும். பக்தியினைப் பூண்டு ஒழுகி அதன் மூலம் அருள் பெற்று வீடு பேற்றிற்கு வழிவகுப்பது எளிது என்பதே சைவ தருமமாகும்.

சைவ சித்தாந்தம்

சைவ சமயக்கோட்பாடுகள் பிற சமயக் கோட்பாடுகளின்றும் தனியே பிரிந்து சைவ சித்தாந்தம் என்று வழங்கப்பெறும். சித்தாந்தம் என்பது இதுவே சமயம் அனைத்திலும் முடிந்த முடிவு என்பதைப் புலப்படுத்துகிறது. சைவ சித்தாந்தத்தில் குரு உபதேசத்தால் பெறுகின்ற ஞானம், சிவஞானம் என்கிறது. மாயை உலகத்தைப் படைப்பதற்கு ஒரு காரணப்பொருள் இது அருவமாய் உள்ளது. உலகின் முதற்காரணம் மாயை என்பதாகும். சைவசித்தாந்தத்தில் மாயை ஆன்மாவுக்கும், சுகபோகங்களைத் தந்து வினை அனுபவித்துத் தீர உதவிசெய்கிறது.

முடிவுரை

உலகத்துப் பொருட்கள் யாவும் ஒரு காலத்தில் உண்டாகி சிறிது காலம் இருந்து பின் அழியும் தன்மை உடையன. உயிர்கள் வாழ இடமானது உலகமாகும். உலகைப் படைத்த இறைவன் உயிர்களுக்குப் பல வகையான உடல்களைத் தந்து இருக்கின்றான். அத்தகைய உயிர்கள் அனைத்தையும் கருணை வடிவோடும், அன்போடும் பார்ப்பவர்கள் சைவர்கள். அதனாலேயே அன்பே சிவம் என்கின்றார்கள். புலால் நீங்கிய உணவை உட்கொண்டு சைவம் தழைக்க அரும்பாடுப் பட்டவர்கள், சைவசித்தாந்த கோட்பாட்டின் படி வாழ்பவர்கள் சைவர்கள், அத்தகைய சைவர்களின் வழிச்சென்று சைவம் தழைக்கச் செய்து நாம் அனைவரும் சிவநாமம் போற்றுவோம்.

27. சைவ சமயத்தின் உயிர்க் கொள்கைகள்



முனைவர் தீ. கீதாமகேசுவரி
உதவிப்பேராசிரியர்
பூம்புகார் கல்லூரி (தன்னாட்சி)
மேலையூர்

முன்னுரை

பக்தி இலக்கியத்தில் சைவ சமயத்தின் வழிபாடுகள் பெரிதும் துணைபுரிகிறது. சைவம் என்பது சிவனுடன் சம்பந்தமானது பொதுவாக இந்துக்கள் வழிபாட்டில் கண்ணுக்குப் புலனாகும் ஒளி வடிவமும், காதுக்குப் புலனாக ஒலி வடிவமும் இடம் பெறுதல் உண்டு. அவ்வகையில் உயிர்க் கொள்கைகளைப் பற்றிய சில செய்திகளைக் காண்போம்.

சைவ சமயம்

இறை, உயிர், தளை என்று சொல்லப் பெறுகின்ற மூன்று பொருள்களுள் இறைவனைப் போலவே, உயிர்களும் உயிர்க்குத் தடையாய் இருக்கும் பாசப் பொருள்களும் என்றும் அநாதியே உள்ளனவாகும். உயிர்களும் பாசப் பொருள்களும் இறைவனைச் சென்று அடையும் திறனுடையனவல்ல. எனவே அவை இறைவனை அணுகமாட்டா. இறைவன் பக்குவம் வாய்ந்த ஆன்மாவுக்கு அருளும் பொழுது பாசப் பொருள்கள் அந்த ஆன்மாவைப் பந்திக்க மாட்டாமல் விலகிவிடும்.

''பதி பசு, பாசம் எனப் பகர் மூன்றில்
பதியினைப் போல் பசு பாசம் அனாதி
பதியினைச் சென்று அணுகாப் பசு பாசம்
பதி அணுகில், பசு பாசம் நிலாவே'' (திருமந்திரம்-116)

முப்பொருள் உண்மையையும் அவற்றின் இயல்பையும் அறியாதவர். தத்துவத்தை முழுமையாக அறியமுடியாது. எனவே தான் திருமூலர் இந்தப் பாடலில் சைவ சித்தாந்த நுட்பத்தைத் தெளிவுற விளக்குகிறது. உயிர் ஆராய்ச்சி தமிழகத்தில் மிகப்

பழங்காலத்திலேயே நடைபெற்றுள்ளது. ஓரறிவுயிர் முதலாக ஆறறிவு உயிர் ஈறாக உயிர்களை அறுவகையாகப் பாகுபடுத்தப் பெற்றுள்ளது. அப்பாகுபாடு பரிணாம வளர்ச்சியடிப்படையிலும் புலன்கள் செயல்படும் முறைகள் அடிப்படையிலும் அமைந்திருக்கிறது. அதனை,

''ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே யதொனொடு நாவே''

எனத் தொல்காப்பியர் நூற்பா புலப்படுத்துகிறது. மேலும், இறை, உயிர், தளை ஆகிய மூன்றும் என்றும் இருப்பவை. அழிவில்லாதவை என்பது சைவ மெய்ப்பொருள் நூல்களின் துணிவு. உயிர்கள் அழிவில்லாதன் எனும் கருத்தை,

''வான் பொய்த்து நதிகள் தப்பி மன்னுயிர்கள்
கண் சாம்பி உணவு மாறி''
(தடுத்தாட் கொண்ட புராணம்-162)

எனும் கூற்றினால் அறியமுடிகிறது.

உயிர் பற்றிய கொள்கை

உயிர் என ஒன்று உண்டு என்பதை உயிரின இருப்பையும் புலப்படுத்தும் வகையில் உலகிலுள்ள சமயங்கள் யாவும் ஒன்றுபடுகின்றன. ஆயினும் உயிரைக் குறித்த கொள்கைகளில் தம்முள் பலவாறாகச் சமயங்கள் வேறுபடுகின்றன. பௌத்த சமயம், உடம்பும் பொறியும் மனமுமே உயிர் என்கிறது. இச்சமயத்துள் சௌத்திராந்திகர் என்ற பிரிவு மட்டும் உயிர் இல்லை என மறுக்கிறது. சமண சமயம் உயிரானது தான் எடுத்த உடலின் இயல்விற்கு ஏற்பத் தன்னைப் பெருக்கவும் சுருக்கவும் செய்யும் என்கிறது. உலகாயத்தார் வானம் தவிர பிற நான்கு பூதங்களின் கூட்டுறவின் உணர்வே உயிர் என்பர்.

''உருக்கிளரும் வடிவு என்றும் நிலையாத விடயத்தில்
உழலும் புலன்கள் என்றும்
ஒழிக்கின்ற புத்தி அது தான் என்றும் விரிவாகி
ஒன்றாய குணமது என்றும்
பரக்கும் இவை அன்று அன்று புருடனே என்றும்''

(சிவ.பிள்.பா.33)

என்ற பாடல் உயிர் பற்றிய பல்வேறு சமயங்களின் கருத்தைப் புலப்படுத்தக் காணலாம். சைவ சமயம், பிற சமய உயிர்க் கொள்கைகளிலிருந்து மாறுபட்டு தனக்கென தனிக் கொள்கையை வகுத்துள்ளது.

சிவஞான போதம் கூறும் உயிர்

சிவஞான போதம் உயிர் உண்டு என்பதற்கு எண்வகைக் காரணங்களைச் சுட்டி, உயிர்க் கொள்கையினை நிலை நாட்டுகிறது. அவ்வெண்வகைக் காரணங்கள்,

1. இங்கு இல்லை, அங்கில்லை என்பதனாலேயே உயிர் உண்டு எனப் பெறப்படுகிறது.
2. எனது உடல் என்று கூறுவதனால் உயிர் உள்ளது.
3. இதனை யாக்கை தான் எனில் எனது உடம்பு என்பது இங்கு என்னை ஒடுக்கம் அறிதலின் ஆன்மா ஒன்று உள்ளது.
4. உறங்கும் போது வினை நுகர்வு இன்மையின் ஆன்மா உள்ளது.
5. உணர்த்த உணர்தலின் ஆன்மா உள்ளது
6. மாயா காரியமாகிய உடலில் உயிர் உள்ளது
7. மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற நான்கு அந்த காரணங்களும் சந்தித்தவையே ஆன்மா என்றும் விளக்குகிறது.

உயிருக்கு பசு என்ற பெயர்

சைவ சித்தாந்தம் உயிரினைப் பசு என்ற சொல்லால் குறிக்கிறது. இவ்வடசொல் - பச்+உ எனப் பிரித்து பச் என்பதற்குப் பந்திக்கப்பட்டது (கட்டப்பட்டது) எனப் பொருள் கூறி உ விகுதியாக நிற்கின்றதெனக் கூறுவர். பசு என்பது காரணப் பெயர் பசுவின் தன்மை மலத்தால் கட்டப்பட்டிருப்பது இதனைப் பசுத்துவம் என சித்தாந்தம் கூறுகிறது.

உயிரின் வேறு பெயர்கள்

பசுவின் பல்வேறு நிலைகளுக்குத் தகுந்தவாறு பசுவினைப் பிற பெயர்களால் குறிப்பிடுகிறோம். சாத்திரங்களும்

திருமுறைகளும் பசுவின் பல்வேறு நிலைகளைப் பல்வேறு பெயர்களில் சுட்டுகின்றன. பசு, அகம், ஆவி, சகலன், சதசத்து, சிவன், சேதனன், புருடன் என சாத்திரங்களும், அணு, உள்ளம், தொழும்பு எனத் திருமுறைகள் பசுவின் பெயர்களை இயம்புகின்றன.

அநாதி

பதியினைப் பற்றிக் குறிப்பிடுகையில் பதியினைப் போல் பசு, பாசம், அனாதி, திருமூலரின் திருமந்திரத்தில் பதியைப் போல பசுவும் மிகப் பழமையானது என்று கூறப்பெற்றுள்ளது. இதனை,

> "நெல்லிற் குமியும் நிகழ் செம்பினிற் களிம்பும்
> சொல்லின் புதிதன்று தொன்மையே - வல்லி
> மனகன்மம் அன்றுளவாம் வள்ளலால் பொன்வாள்
> அவர் சோகம் செய்கமலத்தாம்"

என்றும் கூறுகிறார். பதியாகிய இறைவனைப் போல பசு எனப்படுகிற உயிரும் அனாதி என்று சித்தாந்தம் வரையறுக்கிறது.

உயிர்களும் தளையும்

பந்திக்கப்படுதலால் அதாவது கட்டப்படுதலால் தான் உயிர்கள் பசு எனப் பெயர் பெறுகின்றன. பாசம் என்பதற்குத் தளை என்ற வேறொரு பெயருண்டு. உயிர்கள் தளைகளால் இறுக்கப்பட்டுள்ளன. சிவஞானபோதம் உயிர்கள் மனத்தினால் கட்டப்பட்டுள்ளமையைச் சுட்டுகிறது. உயிர்கள் பாசத்தினால் கட்டப்பட்டுள்ளமையைக் குறிப்பிடும் போது பிணித்த நோய்ப் பிறவி என்று திருநாவுக்கரசரும் பந்தித்த நல்வினைப் பற்று என்று சுந்தரரும் கூறுகின்றார்.

உயிர் உணர்த்த உணர்வது

உயிர்கள் ஆணவம், கன்மம், மாயை எனும் மூன்று மலங்களால் கட்டப்பட்டுள்ளமையால் எதனையும் தாமாக உணரும் தன்மையை உடையன அல்ல. இதனை,

''அறிந்திடும் ஆன்மா - ஒன்றை
ஒன்றினால் அறிதலாலும்
அறிந்தவை மறைத்த லாலும்
அறிவிக்க அறித லாலும்'' (சிவஞானசித்தி-பா.233)

என்று அருணந்தி சிவாச்சாரியார் தம் நூலில் குறிப்பிடுகிறார்.

மூவகை உயிர்கள்

தம்மிடையே அமையும் மலங்களின் தொடர்பினால் உயிர்கள் விஞ்ஞான கலர், பிரளயாகலர், சகலர் என மூவகைப்படுகின்றன. இம்மூவகை உயிர்களின் விஞ்ஞானகலர் (ஆணவம்) வகை உயிர்கள் அட்ட வித்தே யசுவரர், சப்தகோடி மகா மந்திரர், அப்ரமுக்தர், அணு சதாசிவர் என நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

உயிர் உலகியல் இன்பங்களை விழைதல்

உயிர்கள் பக்குவமுறா நிலையில் உலகப் பற்றுகளில் ஈடுபடுதலும், உலகியல் இன்பங்களைத் துய்த்தலும் புலனின் பங்கு துய்த்தலும் ஆகிய செயல்களைத் தம் சிற்றறிவுக் கேற்ற வகையில் செய்கின்றன.

''இச்சா ஞானக் கிரியைகள் இவை
உடற் கண் பிணங்கிடும்'' (அருணந்திசிவம்-சித்தி-196)

என்று உணர்த்துகிறது.

உயர்வீடு போற்றுதற்குரியது

வீடு பேறு என்பதைச் செம்மலர் நோன்தாள் சேரல் எனக் கூறுவர் மெய்கண்டார். திருவள்ளுவர் இதனைத் தாள் சேர்தல், அடிசேர்தல் என்று கூறுவர். வீடு பேறடைதலைச் சேக்கிழார் செல்கதிப் பயன் என்று கரையேறுதல் என்றும் கூறுகிறார். இதனைச்,

''செல்க திப்பயன் காண்பவர் போல்களி
சிந்தை கூர் தரக்கண்டு'' (பெரி.புரா.திருநா.63)

என்ற பாடல் வரிகள் மூலம் உணரலாம்.

உயிர் அறிவு சிற்றறிவு

உயிர்களின் அறிவு ஐந்தறிவு மயக்கங்களை உடையது. உயிர் இயல்பாக தெளிவான அறிவு பெற்றிருப்பினும் ஆணவ மலத்தால் உயிர் அறிவு கெடுகிறது. மேலும் நல்வினை, தீவினைகளாலும் அத்தகைய நிலையை அவ்வுயிர் அடைகிறது. பிறவித் தொடர்ச்சியில் இருக்கும் வரை, உயிரறிவு சிற்றிவாகவே விளங்கும். பதி,ஞானம், பசு ஞானம், பாச ஞானம் எனும் மூவகை ஞானங்களுள் பசு ஞானம் குறையறிவுடையது.

“பரந்துபடு மிகுபாச ஞானமொடு மற்றைப்
பசுஞானம் கடந்த சிவஞானியை” (சிவ.பிள.9)

என்ற பாடல் அடிகளின் பசுஞானம், பதிஞானம் குறித்து அறிந்து கொள்ள முடிகிறது.

முடிவுரை

உயிர்கள் அநாதி பல என்பன மட்டுமின்றி வீடுபேறு பெறும் வரையில் அவை மாறி மாறிப் பிறக்கக் கூடியன. உலகத் தொடர்பு உள்ள வரையிலும் அப்பிறப்பு தொடரும். உயிர் பற்றிய வினாக்களுக்கும் தேடுதல்களுக்கும் சைவ சித்தாந்த நூல்கள், யான் என்ற தன்னோக்கு உணவாக உய்த்துரைப்படுவது உயிராகக் கொள்ளலாம்.

28. சிவநெறிச் சிந்தனைகள்

க.வாணிதேவி
முனைவர்பட்ட ஆய்வாளர்
இராசூக்கள் கல்லூரி
இராசபாளையம்

முன்னுரை

மனிதன் தனக்குள் இருக்கும் இந்த இரட்டைத் தன்மையை உணராத வரை அவனுக்கு விடிவு இல்லை. தனக்குள் இருக்கும் நல்ல எண்ணம் மற்றும் தீய எண்ணங்கள் ஆகிய இந்த இரண்டு குணங்களை உணர்ந்து கொண்டு தீயனவற்றை விலக்கி நல்லனவற்றைச் செயல்படுத்த வேண்டும் என்று உணர்கின்ற ஒருவனுக்குச் சமயத்தின் உதவி தேவைப்படுகிறது. நம்மை அற்ப ஆசைகளுக்கும், உலகியல் சிற்றின்பங்களுக்கும் அடிமைப்படச் செய்வது மனமே. உயர்ந்த இலட்சியங்களில் இருந்து குறுகிய உடலின்பங்களுக்குத் தடம் புரளச் செய்வதும் மனமே. இவற்றிலிருந்து ஒருவரைத் திசை திருப்பி உயர்ந்த நோக்கங்களைக் கொண்ட நல்வழிக்கு அழைத்துச் செல்வதே சமய நெறிகளின் நோக்கம்.

நமக்குள்ளே நாம் அறிவு பூர்வமாக ஆழ்ந்து நோக்கினால், தெளிவான நல்லறிவும், நெறியும், நேர்மையும் உள்ள ஒழுங்குக்கும் கட்டுப்பாட்டுக்கும் உட்படுகின்ற மனிதர் என்று கூறிக்கொள்ள விரும்புகின்ற ஒருவரைக் காண்கிறோம்.

வள்ளுவர் கருத்து

எல்லாவற்றுள்ளும் ஒழுக்கமே முக்கியமானது என்பதால் எந்தவித ஆராய்ச்சியும் ஒழுக்கத்தைப் பற்றிய அறிவுக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ துணை செய்வன ஆதல் வேண்டும். இது மட்டுமின்றி வேதங்களில் மனித ஒழுக்கம் பற்றி என்ன கூறப்பட்டுள்ளது என்பதனையும் இங்குத் தெளிவுபடுத்த வேண்டியுள்ளது. வேதங்கள் மனிதனுடைய கடமைகளை ஐந்தாகப் பிரித்துள்ளன. தெய்வம், ஞானிகள், பிதிரர் உடன் பிராணிகளுக்கும் தன்னால் ஆவன செய்ய ஒவ்வொரு மனிதனும்

கடமைப்பட்டுள்ளான் என்பது வேதவாக்கு.

''தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை''

என்ற வள்ளுவர் வாக்கு இங்கு ஒப்பிட்டு நோக்குதற்குரியது.

பதவி மோகம்

எத்தனைப் பேருக்குத் தலைமை தாங்கும் நிலை இருக்கிறதோ அத்தனை உயர்வு அந்தப் பதவிக்கு உண்டு. ஒரு சிற்றூர்த் தலைவனாக இருக்கும் பதவியை விட ஒரு பேரூராட்சித் தலைமைப் பதவி பெரியது. அதைவிடப் பெரியது மாவட்டத் தலைமைப்பதவி. இவ்வாறு பதவிகள் உயர்ந்து வரப் படிப்படியாக அதிகாரங்களுடன் கூடிவரும். ஒரு பதவியை அடைந்தவர்கள் அதனோடு நிறைவு பெறுவதில்லை. அதற்கு மேற்பட்ட பதவிகளைப் பெற ஆசைப்படுவார்கள்.

''ஆசைக்கோர் அளவில்லை அகிலமெலாம்
கட்டி ஆளினும் கடல் மீதிலே
ஆணை செலவே நினைவர்''

என்று தாயுமானவர் பாடுகிறார்.

ஊழ்வினை நம்பிக்கை

சைவ நெறியில் ஊழ்வினை நம்பிக்கை உண்டு என்றாலும் வினைவழியில் வரும் துன்பத்தை இறைவனின் அருள் துணையாலும் அயர்விலா முயற்சியினாலும் மாற்ற இயலும் என்று சைவ நெறிக் கொள்கை கூறும். இறைவனது ஆற்றல் இடர் களைய வல்லது. விண்ணவர்கள் துயர் களைவதற்காக நஞ்சினை உண்டவன் அவன். அடியவர்களுக்கு உதவ ஒரு போதும் தயங்காத அவனைத் துணையாகப் பெற்ற மனிதனால் வினையுடன் போராடி வெற்றி பெற இயலும்.

''முன்னை வினையிரண்டும் வேரறுத்து முன்நின்றான்
பின்னைப் பிறப்பறுக்கும் பேராளன்-தென்னன்
பெருந்துறையின் மேய பெரும் கருணையாளன்

11

வருந்துயரம் தீர்க்கும் மருந்து''

துன்பம் தொடர்ந்து வருகின்ற போது துவண்டு விடக்கூடாது. நம் அறிவிற்கும் கற்பனைக்கும் எட்டாத திருவருள் சக்தி உலகை இயக்குகிறது என உணர்ந்து இறைவனே நமக்கு வழியும் துணையும் என்ற ஆழ்ந்த நம்பிக்கையுடன் செயல்படுதல் வேண்டும்.

உயிர்களின் மயக்கம்

உயிர்களைப் பொறுத்த வரை மரணம், பிறப்பு என்ற இரண்டுமே புரிந்து கொள்ள முடியாத புதிராகும். மரணத்தைக் கண்டு அஞ்சுதலும் பிறப்பில் மகிழ்தலும் உயிர்களுக்கு இயல்பாக அமைந்துள்ள தன்மையாகும். அதனையே மாணிக்கவாசகர் மயக்கு என்பார். அகக்கருவி, புறக்கருவி ஆகியவற்றுக்கும் அப்பாற்பட்ட இறைவனது திருவடிகளைச் சரணடைகின்ற போது இறப்பு, பிறப்பு என்னும் இரண்டாலும் ஏற்படக்கூடிய மயக்கம் தெளிகிறது என்பதைப் பின்வரும் பாடலில் கூறுவார்.

''கரணங்கள் எல்லாம் கடந்து நின்ற கறை மிடற்றின்
சரணங்களே சென்று சார்தலுமே தான் எனக்கு
மரணம் பிறப்பு என்ற இவை இரண்டின் மயக்கு அறுத்த
கருணைக் கடலுக்கே சென்று ஊதாய் கோத்தும்பி''

இறை காட்சிக்கு இன்றியாமையாதன

மாணிக்கவாசகர் இறைவனை அன்பின் மிகுதியினால் நினைந்து நினைந்து உருகுவார். அவர் தம் நெஞ்சத்தில் இறைவன் எந்நேரமும் இருந்தான். அவனை எண்ணுந்தோறும் அவரது உள்ளத்தில் அன்பு ஊற்றெடுக்கிறது. அன்பின் பெருக்கமும் உள்ளத்தின் உருக்கமும் இறைகாட்சிக்கு இன்றியமையாதன.

''ஓயாதே உள்குவார் ஒள்இருக்கும் உள்ளானைச்
சேயானைச் சேவகனைத் தென்னன் பெருந்துறையின்
மேயானை வேதியனை மாது இருக்கும் பாதியனை

நாயான நம்தம்மை ஆள்கொண்ட நாயகனைத்
தாயான தத்துவனைத் தானே உலகு ஏழும்
ஆயானை ஆள்வானைப் பாடுதும் காண் அம்மானாய்''

உள்ளுதல் என்றால் ஆழ்ந்து சிந்திப்பது தியானிப்பது என்று பொருள்படும். எண்ணுதல், நினைத்தல், சிந்தித்தல் என்ற சொற்கள் ஏறத்தாழ ஒரே பொருளைத் தருவதலால் அவற்றில் ஒன்றினைப் பயன்படுத்தாது உள்குவார் என்றார். உள்குதல் என்பது மனத்தின் ஆழத்தில் ஆழ்ந்து சிந்தித்து நீண்டநேரம் அதை நிலை நிறுத்துவது என்று பொருள். உலகியல் வாழ்வில் உள்ள மக்கள் சில நாழிகை இறைவனை வழிபட்டுப் பின்னர் தத்தம் பணிகளில் ஈடுபடுவர். இது இயல்பானது. எண்ணெய் ஒழுக்குப் போன்று இடையீடு இல்லாது இறைவனை மனத்தில் இருத்தித் தியானிப்பது பேரடியார்களது இயல்பு.

பட்டினத்தார் கருத்து

''இருவினைக் குள்ளாகாதே என் உடமை எண்ணாதே
பெருகு சினங்கொண்டு பினத்தாதே-மருவுமலக்
கள்ளமெலாம் விட்டுக் கரைந்து கரைந்துருகி
உள்ளுணர்ந்து நெஞ்சே பார் ஒன்று''

என்று பட்டினத்தார் பாடுகிறார். தன்னைச் சீரமைத்துக் கொள்வதும், நன்னெறிக்குத் திரும்புவதும் அவரவர்களால் மட்டுமே முடியும். குருமார்களும், சாத்திரங்களும், நீதி நூல்களும் அதற்கு வழி காட்டுமே தவிர அவையே தம்முடைய இலக்கிற்கு நம்மை இட்டுச் செல்லாது. இதையே ஆங்கிலத்தில் Alone to the Alone, All Alone என்று கூறுவார்கள்.

நாம் செய்ய வேண்டுவது

நல்ல உபதேசங்களைக் கேட்கும் போதும் நல்லவர்களோடு பழகு; போதும் நம்மிடத்தில் உள்ள இந்த அகந்தை சற்றே விலகி நிற்கும். அவர்களிடமிருந்து விலகிப் போனால் மறுபடியும் தலைதூக்கும். எனவே சில நேரங்களில், சில காலங்களில் செருக்கின்றி இருக்க நேர்வதை எண்ணித் திருப்திப்பட்டுக் கொள்ளக் கூடாது. அகந்தையை அடியோடு

அழித்து விட வேண்டும். அது சிறு பொறியளவுக்கு நின்றாலும் மறுபடியும் காட்டுத் தீப்போல் பரவிவிடும். அகந்தை என்னும் கிழங்கு நம்முள் ஆழவேருன்றி நிற்கிறது அதை அகழ்ந்து எறிய வேண்டும்.

''அகந்தைக் கிழங்கை அகழ்ந்து
எடுக்கும் தொழும்பர் உளக்கோயிற்கு
ஏற்றும் விளக்கே''

என்று பாடுவார் குமரகுருபர முனிவர்.

நிறைவுரை

சமயம் மனிதனைத் திருத்தி நல்லாற்றுப் படுத்துகிறது. ஒழுக்க நெறியை விட்டு வழுவாதே என்று நல்லுரை கூறுகின்றது. தாறுமாறான சிந்தனைகளுக்குத் தடை போடுகிறது. வஞ்சனையான எண்ணங்கள் மனத்தில் எழுகின்ற போது சிந்தனையைத் திருப்பி நல்வழிப்படுத்துகிறது. அதனைச் சார்ந்து நிற்கின்ற மனிதன் நன்றாண்மை மிக்கவனாக மாறிவிடுகின்றான். மனிதன் இறைவனைச் சார்வதற்குச் சமயம் உறுதுணையாகிறது.

29. சைவ சமயம் அறிவுறுத்திடும் அடிப்படை உண்மைகள்



செ. பாண்டியம்மாள்
மலுமிச்சம்பட்டி
பொள்ளாச்சி முதன்மைச்சாலை
கோயம்புத்தூர்

முன்னுரை

இறைவன் ஒருவனே என்ற உண்மையை உலகிற்குத் தெளிவாக விளக்கிச் சொல்வது சைவ சமயமாகும். சைவ சமயக் கடவுளாகிய இறைவன் மங்களமானவர். அவர் நம்மைப் போன்றவரல்லர். குற்றமற்றவர் (மலங்கள்) செம்மையான பொருளாக விளங்கும் இறைவனுக்கு இன்று நாம் வழங்கும் பெயர் தான் சிவன். அவர் எங்குமுள்ளவர். அவர் எல்லையில்லா சக்தியுடையவர். அவருடைய ஆற்றலை ஒரு பெண்ணாக உருவகித்துச் சக்தி என்கிறோம். சக்தி என்பது சிவத்துக்குள்ளே அடங்கியிருப்பது. எனவே தான் ஆணாகிப் பெண்ணாகி நின்றானவன் என்றும், மாதொருபாகன் திருவுருவம் விளக்கம் தருகின்றன. இறைவன், பிறப்பு, இறப்பு, பந்தம், பாசம், அன்பு, நீளம், உயரம், அகலம், காலம், மொழி, இனம் என்று எல்லைகளைக் கடந்தவன். நாம் வாழும் இப்பூமியை நன்கு ஆராய்ந்து பார்த்தல் மூன்று பொருட்கள் இருப்பது புரியும். அவைப் பாசம் என்பது இப்பூமியிலுள்ள பொருட்களை உள்ளடக்கியதாகும். பிறவிச்சுழற்சி என்பது நம் போன்ற உயிர்கள் பிறந்து, இறந்து மீண்டும் மீண்டும் பிறந்து இறக்கும் தன்மையுடையது. இந்தத் துன்பச் சூழலில் இருந்து விடுபட்டு முக்தி அடையவே இறைவனாகிய சிவனை வணங்க வேண்டும். இறைவனை வணங்கவிடாமல் நம்மைத் தடுப்பது இவ்வுலகியல் ஆசையே காரணமாக விளங்குகிறது. உலகத்திலுள்ள சடப்பொருட்களாகிய பாசம் என்பது மண்ணாசை, பொண்ணாசை, ஆணவம் என்றுரைக்கிறது சைவசித்தாந்தம். பதி என்பது இறைவனேயாகும். பசு என்பது நமது ஆன்மாவாகும். முற்ற பந்த பாசம் எல்லாம் பாசத்துடனேயாகும். இதுவே

முப்பொருளின் உண்மையாகும்.



முப்பொருள்களான பதி, பசு, பாசம் ஆகியவற்றின் தொடர்பினை விளக்கும் வரைபடம்.

முப்பொருள் என்பது சைவ சித்தந்தத்தில் பதி, பசு, பாசம் ஆகியவற்றைக் குறிப்பதாகும். இவற்றில் பதி என்பது இறைவனையும், பசு என்பது உயிர்களையும், பாசம் என்பது தளைகளையும் குறிக்கிறதாகும்.

வரைபட விளக்கம்

முப்பொருள்களில் கடவுளாகிய பதி என்பது பேரறிவுடையது என்றும், உயிர் சிற்றிவுடையது என்றும் தளை உயிற்றத்தாகவும் அறியப்படுகிறது. முதல் இயல்புகள் : முதல் தூய வடிவாய் என்றம் உள்ளவன் உயிர்களது சுட்டறிவைக் கடந்து நிற்றலின் கடவுள் எனப் பேசப்படுகின்றான். தானே எல்லாம் உணரும் இயற்கை முற்றுணர்வு உடையவன். பசு பாசங்களைத் தன் வியாபகத்தில் அடங்கக்கொண்டு தொழிற்படுத்துகின்றவன. இவ்வாறு உயிர்களையும் உலகையும் இடமாகன் கொள்ளுதலினால் இறைவன் எனக் கூறப்படுகிறான். இருத்தல் தங்குதல். அவற்றைத் தொழில்படுத்துதல் பற்றி இயவுகள் என உரைக்கப்டுகிறான். உயிருக்கு உயிராய் நிற்கும் உயிர்களின் பாசத்தையை நீக்கி அவற்றின் அறிவுச் செயல்களை விளக்கி வளர்ந்த வருதல் பற்றி அம்மையப்பர் எனவும் உணர்வின்தமி (உயிர்களின் உணர்வுக்கு முதல்வன்) எனவும் கூறப்படுகின்றது. காணப்படும் அனைத்துப் பொருளுக்கும் முந்தைய பொருளாய் அவையணைத்துக்கும் முடிந்த சார்பாய் நின்று, அவற்றைத் தொழிற்படுத்துவோன் ஆதலால் முதல்வன் எனவும் ஆதி எனவும் தலைவன் எனவும் வழங்கப்படுகின்றான். இதுவே பதியின் இயல்புகளாகச் சைவ சித்தாந்த நூல்கள் வாயிலாக அறியமுடிகின்றது.

ஈரியல்புடையவன்

சூரியன் பூமி முதலிய பொருள்களுக்கு ஈர்ப்புச் சக்தி உண்டு என்பதை அறிவோம். ஆனால் அச்சக்தியை நாம் காணவில்லை. அச்சக்தியின் வயப்பட்டுச் சுழலும் கோள்கள், உபகோள்கள் என்பவற்றின் இயக்கங்களைக் கண்டு தான் ஈர்ப்புச் சக்தியின் உண்மையினையும் அதன் இயல்பினையும் கருதி உணர்கிறோம். முதல்வன் சக்தியை நாம் இது போலவே காண்பதில்லை. ஆனால் முதல்வனது சக்தி வயப்பட்டு நடக்கும் பசு பாசங்களின் தொழிற்பாடு பற்றி அச்சத்தியின் உண்மையினையும் இயல்பினையும் கருதி உணர வேண்டும். அதன் ஈர்ப்பு சக்தியைப் போல முதல்வனது சக்தி என்னும் சொற்குப் பொருள் வல்லமை அல்லது ஆற்றல் என்பது ஆகும்.

ஒரு பொருளாய் நிற்றல்

ஒரு பொருள் பிறிதொரு பொருளைத் தன்வயப்படுத்தி நடத்தும் இடங்களில் எல்லாம் அப்பொருள் இருதன்மைப்பட்டு இயைந்து நிற்கும். அதாவது, சிவனும் சக்தியும் என இரு தனிமைப்பட்ட ஒரு பொருளாய் நிற்கும் என்பது சைவ சாத்திர நூல்கள்.

சைவ சமயம்

சைவ சமயம் இலிங்க வழிபாட்டில் தொடங்கியதாகச் சிந்து சமவெளி முத்திரைகளிலிருந்து தெரியவருகிறது என்பர். இந்த இலிங்க வழிபாட்டைக் குறிக்கும் சான்றுகள் உள்ளன. இலிங்கம் மக்களின் ஆண் பெண் உறவைக் காட்டும் பொம்மை இதனை அம்மையப்பன் வழிபாடு என்பர். இந்தச் சமயம் தன் வளர்ச்சிப் பாதையில் பல மாறுதல்களைப் பெற்றது. ஆரியர் வருகைப் பின்னர் சைவம் வேதாந்த நிலையைப் பெற்றது. இதனை வேதாந்தம் என்பர். இதில் சிவனைப் பற்றிக் கதைகள் தோன்றின. இதனை விடுத்து, சிவத்தை பதி, பசு, பாசம் என முக்கோணப் பாங்கில் எண்ணிப் பார்த்தனர்.

சித்தாந்தம்

சித்தாந்தம் என்பது சிந்தித்துக்கூறும் முடிவைச் சித்தாந்தம் என்றனர். ஞாலத்தைச் சித்தாந்தம் பதி, பசு, பாசம் எனக் கண்டது. அதாவது,

1. சிவம், உயிர், பாசம்.
2. அறிவு, ஆன்மா, ஆசை
3. பரமாத்மா, சீவாத்மா, பாசம் (உறவு)
4. வித்து, சித்து, அசத்து (சடம்)

என்றெல்லாம் இதனைப் பாகுபடுத்திப்பார்த்தனர். சைவ சித்தாந்த நூலாசிரியர்களான வினாவெண்பா, உண்மைநெறி விளக்கம், சிவஞான சித்தியார், சிவஞான போதம் முதலான நூல்களின் ஆசிரியர்களாவர். இவ்வாசிரியர்கள் விரிவாகவும், தெளிவாகவும் தங்கள் நூல்களில் கூறியுள்ளனர்.

அறிவியல் சிந்தனைப்படி

அறிவுக் கண்ணோட்டத்துடன் பதி. அது தான் எங்கும் பதிந்திருப்பது. பதி என்பது உயிர்தெழுந்து மூச்சு விடுவது உயிர். இந்த உயிர்ச்சத்து உடலை கட்டிக்கொள்கிறது. பாசம் என்பது கயிறாகிய கட்டு. பாசம் என்பது கட்டும், அவிழும், அறுந்து போகும். இதுதான் வாழ்வு பதி, பசு, பாசங்களை உணர்ந்து பார்த்தனர். உமாபதி சிவம்-பதி பொருள் விளக்கம் : பதி என்பதற்கு சிவம் அறிவு, பரமாத்மா, வித்து இறைவன், கடவுள் பேரறிவு, சத்துவபொருள், பிறர் அறிவிக்க வேண்டாதது, தானே அறியும் தன்மையுடையது. அழியாப் பொருள், அருஉருவானவன், சுக்குமம், பரந்தும், துலப்பொருள், உள்ளடங்கியும் வியாபியாகவும் வியாபகமாகவும் இருக்கும் கடல்போன்றது என்பது பொருள்.

அருவேல் உருஅன்று : உருவேல் அரு அன்று
இருவேறும் ஒன்றற்கு இசையா - உருஒரில்
காணில் உயர்கடந்தைச் சம்பந்தா, கண்ட உடல்
பூணும் இறைக்கு என்னாம் புகல்?

(வினா வெண்பா:8வது பாடல்)

முதல்வன் - பதி எனப்படுகிறான். பதி=பாச+தி பதி-காக்கிறவன், பா-காத்தல், தி-வினைமுதற்பொருள் விகுதி.

இருப்புநிலை

பதியின் இருப்பு நிலை என்பது இருப்பு முறையினைச் சித்தாந்தங்கள் காண்டல் கருதல் முறையில் துணிகின்றனர். இப்பிரமானத்தை அடிப்படையாகக் கொண்டு உலகைப் படைக்க ஒருவர் உள்ளார்.

காண்பானும் காட்டுவதும் காண்பதுவும் நீத்து உண்மை
காண்பார்கள் நன்முத்தி காணார்கள்-காண்பானும்
காட்டுவதும் காண்பதுவும் தண்கடந்தைச் சம்பந்தன்
வாட்டும் நெறி வாராதவர் (வினா வெண்பா:11வது பாடல்)

சிவம் ஒன்றையே அறிந்து நிற்கும் பேரின்பப் பெருநிலையாகும். காணல் - என்பது கண்ணால் காண்பதும் காதால் கேட்பதும் ஆகும். இதில் பல பிரிவுகள் உண்டு. கருதல் - என்பது இருப்பதைக் கொண்டு இல்லாததை ஊகிப்பது ஆகும்.

சான்று : பானையையும் குயவனையும் சான்றாகக் காணலாம். பானை தன்னைத் தானே வனைந்து கொள்ளாது. அது முன் உருவாக்கப்பட்ட பொருளும் அல்ல, அது போலவே உலகமும் தன்னைத் தானே உருவாக்கிக் கொள்ளாது. அது முன்னர் படைக்கப்பட்டு உருவாக்கப்பட்ட பொருளும் அல்ல. பானையை வனைய குயவன் ஒருவன் இருந்தே ஆக வேண்டும். அதே போல உலகத்தைப் படைக்க இறைவன் இருந்தே ஆக வேண்டும். எனவே இறைவன் உலகைப்படைக்கக் காரணம் என்பது தெளிவு. அதே போல் பசுவாகிய ஆன்மாவுக்கும் தாம் செய்த வினையையும் அதற்கேற்ற பலனைத் தாமே அனுபவிக்கும் வல்லமையும் ஆன்மாவுக்கு இல்லை ஆன்மாவின் வினைக்கு ஏற்ப தனு காரண புவன போகத்தை வழங்க ஒருவன் தேவை அவனே இறைவனாகிய பதியாகும்.

பதியென்பதின் அகராதி விளக்கம் : பதி என்பதன் பொருள் இறைவன், உளி கடவுள், சிவன், என்றும் (பக்கம் 642)

கழகத் தமிழ் அகராதி கணவன் என்றும் கிரியாவின் தற்காலத் தமிழ் ஆங்கில அகராதி பொருள் விளக்கம் தருகின்றன.

இறைவன் இருப்பதை உணர ஆதாரமானவை.

"அவன் அவள் அது எனும் அவை
மூவினைமையின் தோன்றிய திரிபே
ஒடுங்கி மலத்துளதாம் அந்தம் ஆதி எனமனார் புலவர்"

சிவஞான போதம் முதல் சூத்திரம்.

சைவ வழிபாட்டின் பண்புகள்

பழஞ்சமயமாகிய சைவத்தில் கடவுள் வழிபாட்டுப் பண்பும் பயனும் திட்டவட்டமாக வரையறுக்கப்பட்டுள்ளன. வாழ்ந்தே ஆகவேண்டிய தவிர்க்க முடியாத நியதிக்கு உட்பட்டிருக்கும் நமது வாழ்க்கை பதி, பசு, பாசம் என்ற மூலங்கள் மூன்றின் சேர்க்கையால் ஆனது. இவற்றில் பதிக்குப் பாசத்தால் ஆவதொன்றுமில்லை. பாசத்துக்குப் பதியைத் தொழுது பயன்பெற்றுக் கொள்ளமுடியாது. மூன்றாவதாகப் பசுவே பதியின் இடையறாத உபகாரத்தால் தனது வினைப் பயனாகப் பிறந்து இறந்து பெறும் நீண்டகால அனுபவத்தில் பாசத்தடையில் இருந்து நீங்கிப் பதியினைச் சார்ந்து விடுதலை பெறுவதற்கான நிலையில் உள்ளது. இந்த நிலையே ஞானம் எனப்படுகிறது. இந்த ஞானமே சைவ வழிபாட்டின் தனித்துவப் பண்பாகும். சைவ வழிபாட்டிற்கு ஆதார நூலாக விளங்கும் சிவாகமங்கள் இந்த ஞானம் பற்றிய விளக்கத்தை முதலில் வைத்தே கடவுள் வழிபாட்டு விதிமுறைகளைத் தெரிவிக்கின்றன. சைவ வழிபாட்டுத் தலமான ஆலயமும் ஞானி ஒருவரின் உடல் அமைப்பின் மாதிரியிலேதேய உருவமைக்கப்படும். அங்கு நிகழும் கிரியைகள் யாவும் இந்த ஞான விளக்கப் பின்னணியிலேயே அமையும்.

சிவத்தொண்டு

சைவத்தொண்டு என்பது சிவாலயத்துக்கும் சிவனடியார்களுக்கும் தொண்டு செய்தலைச் சைவம் சிவத் தொண்டென அழைக்கிறது. இவ்வாறு செய்யும் தொண்டினால்

பலன் பெற்று ஆத்மாக்கள் இறைவனை அடைகின்றன என்றும் நம்பப்படுகிறது. சைவசித்தாந்தத்தை விளக்கும் திருமந்திரம் பதி,பசு, பாசம் என்னும் மூன்றையும் வலியுறுத்துகிறது.

''பதி பசு எனப்பகர் மூன்றில் பதியினைப் போல் பசு பாசம் அனாதி
பதியினைச் சென்று அணுகாப் பசுபாசம்
பதி அணுகில் பசுபாசம் நிலாவே''

ஆன்மாவைப் பசுவாகவும், இறைவனைப் பதியாகவும், அவனை அடைவதற்குப் பாசத்தை விடுவதுவும் இந்தத் தத்துவ விளக்கம். தமிழ்நாட்டில் சைவ சமயம் அறுபத்து மூன்று நாயன்மார்களின் திருத்தொண்டினால் புத்துயிர் பெற்று நன்கு வளர்ந்தது.

முடிவுரை

இதுவரையில் கூறியதிலிருந்து பின்வரும் முடிவுணரப்படுகின்றது. முதல்வன் தனக்கு வேறாகிய உலகு உயிர்களோடு கலந்து தொழிற்படுத்தும் நிலையில் சக்தி எனப்படுகின்றான்.அவனுக்கு உலகு உயிரோடு உள்ள தொடர்பைக் கருதாது, முத்தான்மாக்களுக்கு அவன் அனுபவப்படும் தன்மையைக் கருதி அவனை உண்மை அறிவின்பப் பொருளாகக் கருதும்போது சிவம் எனப்படுகிறான். இவ்விரண்டியல்பையும் உடையன் ஒருவனே இவ்வியல்புகளை உடையவனாய் உலகுயிர்களை ஐவகைத் தொழிலின் அகப்பட வைத்து ஆட்சிபுரியும் நிலையில் முதல்வன் பதி எனவும் அம்மையப்பர் எனவும் ஈசுவரம் எனவும் வழங்கப்படுகின்றன.

30. மெய்ப்பொருளும் திருநீற்று நெறியும்



அ. கல்பனாதேவி
தமிழ்த்துறைப் பேராசிரியர்
வாவு வசீகா வனிதையர் கல்லூரி
காயல்பட்டணம்

முன்னுரை

சைவ சமயம் பழமையும் பெருமையும் வாய்ந்தது. பரந்து விரிந்த கொள்கைகளை உடையது. அன்பே சிவம் என்ற அன்பு நெறியைக் கொண்டது. அவ்வழியில் சைவ சமயக் கருவூலமாகத் திகழும் பெரியபுராணம் எனும் நூல் காப்பியச் சுவையும் கற்பனை நலனும் பக்திச் சிறப்பும் கொண்டு சேக்கிழரால் எழுதப்பட்டது. இந்நூல் அறுபத்து மூன்று நாயன்மார்களையும் ஒன்பது தொகையடியார்களின் வரலாற்றையும் சிறப்பித்துக் கூறுகிறது. மெய்ப்பொருளாகிய இறைவனின் பெருமையும் திருநீறு பூசும் இறைவனின் பெருமையும் பெரியபுராணம் முழுமையும் பரவிக் கிடக்கிறது. அவ்வகையில் அடியவர் திருவேடத்தையே மெய்ப்பொருளென எண்ணி வழிபட்ட மெய்ப்பொருள் நாயனாரின் பக்தியும் திருநீற்று நெறியும் பற்றி ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

மெய்பொருள் நாயனார்

அறுபத்து மூன்று இறையடியவர்களில் ஒருவரான மெய்ப்பொருள் நாயனார் சேதி நாட்டில் திருக்கோவலூரில் வாழ்ந்த மன்னர், பகைவர்களை வென்று நாட்டிற்கு நன்மை செய்வதில் சிறந்தவர். அரசாட்சியில் சிறந்தும் அறநெறியில் பொலிந்தும் சிவ நெறியைப் போற்றியும் வந்தவர். அடியவர்களின் கருத்தை அறிந்து ஏவல் செய்வதில் சிறந்தவர். தமது உடமை எல்லாம் அடியவர்களது உடைமை என்னுங் கருத்துடையவர். திருக்கோயில்களில் பூசை, விழா முதலியன செய்வதும் அவர்தம் திருத்தொண்டாகும்.

அடியவர்கள் மீது அன்பு

மெய்ப்பொருளாளர் சிவபெருமானைக் காட்டிலும்

அடியவர்களின் திருவடிகளின் மீது மிகுதியான பற்று உடையவர்.

''தேடிய மாடு நீடு செல்வமும் தில்லை மன்றுள்
ஆடிய பெருமான் அன்பர்க் காவன ஆகும் என்று''

எனும் பாடலடிகளில் மெய்ப்பொருள் நாயனார் தான் அரசாட்சியின் மூலம் பெற்ற பொருள்கள் அனைத்தும் தில்லையில் நடனமாடும் அடியவர்களுக்கே உரியது எனும் தனது கருத்தை வெளிப்படுத்துகிறார். அதனால் தன்னை நாடி வரும் அடியவர்களுக்கு அச்செல்வங்களை எல்லாம் மகிழ்வுடன் கொடுத்து உதவி செய்தார்.

சைவ குறியீடு

சைவ நெறியின் குறியீடாகத் திருநீற்றினை உடல் முழுதும் பூசியிருந்த கோலத்தைச் சேக்கிழார் குறிப்பிடுகிறார். மெய்ப்பொருள் நாயனாரிடம் பல முறை போர் செய்து தோற்ற பகை மன்னன் முத்தநாதன் வஞ்சனையால் வெல்ல முடிவு செய்தான். நாயனாரின் திருநீற்றன்பையும் சிவனடியார் நேயத்தையும் தெரிந்து கொண்டு தன் உடல் முழுவதும் திருநீறு பூசி சடைமுடி அணிந்து பெருந்தவ முனிவர் வேடத்தினை அணிந்து கொண்டான் என்பதை,

''மெய்யெலாம் நீறு பூசி வேணிகள் முடித்துக் கட்டிக்
கையினிற் படைக ரந்த புத்தகக் கவளி ஏந்தி
மைபொதி விளக்கே என்ன மனத்தினுட் கருப்பு வைத்துப்
பொய்தவ வேடங் கொண்டு புகுந்தனன் முத்தநாதன்''

எனும் பாடல் வரிகள் உணர்த்துகிறது.

மெய்ப்பொருளார் சிவநெறியின் மீது கொண்ட மதிப்பு

முத்தநாதன் மெய்ப்பொருளாரை வஞ்சனையால் வெல்லும் பொருட்டு சிவனடியார் வேடம் தரித்து அரண்மனைக்குச் செல்கிறார். அவர் சிவவேடம் தாங்கி வந்த வடிவத்தைப் பார்த்து வாயில் காவலர்கள் கைகளால் வணங்கி உள்ளே அனுப்புகின்றனர். மெய்ப்பொருளாளரின்

இருப்பிடத்தை அடைந்தும் மன்னன் துயில் நீங்கி,

> "அண்டர் நாயகனார் தொண்டராம் எனக் குவித்த செங்கை
> கொண்டெழுந் ததிரே சென்று கொள்கையின் வணங்கி
> நின்று"

என்று தன் தலை மீது கையைக் கூப்பி எழுந்து நின்று வணங்கினார். முத்தநாதனுக்கு உரிய மரியாதையினைச் செய்தார். முத்தநாதன் வருகை புரிந்த நிகழ்வை தன் வாழ்வில் மங்கலம் பெருகிய நாளாக எண்ணினார். தான் இறைவன் அருளிச் செய்த ஆகம நூலை வாசிக்க வந்துள்ளதாக முத்தநாதன் கூறுகிறான். தான் தனிமையை விரும்ப மெய்ப்பொருளாளர் தன் மனைவியை உள்ளே அனுப்பி விட்டு,

> "தருதவ வேடத்தானைத் தவிசின் மேல் இருத்தித் தாமும்
> இருநிலத் திருந்து போற்றி இனியருள் செய்யும்"
> *(பா.எ.480, 3-4)*

என்று கூறுகிறார். தவவேடம் கொண்ட முத்தநாதனை இருக்கையில் அமரச் செய்து தான் தரையில் உட்கார்ந்து ஆகம நூலைக் கேட்க முடிவு செய்கிறார்.

கொடியவனுக்கும் அருளும் குணம்

வஞ்சனை குணம் கொண்ட முத்தநாதன் ஆகம நூலை வாசிப்பதைப் போல நடித்துப் புத்தகத்தில் மறைத்து வைத்திருந்த வாளால் மெய்ப்பொருளாரை வெட்டினார். அப்போது மெய்ப்பொருளாளர், மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள் என்று முத்தநாதனைத் தொழுதார். இரத்த வெள்ளத்தில் இருந்த மன்னைப் பார்த்த தந்தன் எனும் காவலன் முத்தநாதனை வாளால் வெட்ட முற்பட, நாயனார். தத்தா நமர் என்று தடுக்கிறார். மேலும்,

> "எம்பிரான் அடியார் போக
> மீதிடை விலக்கா வண்ணம் கொண்டு போய் விடுநீ"
> *(பா.எ.483,3-4)*

என்று கூறுகிறார். முத்தநாதன் சிவ அடியவர் வேடம் புனைந்து

வந்தார் எனும் ஒரு காரணத்திற்காகத் தன்னைக் கொல்ல முற்பட்டான் என்பதையும் பொருட்படுத்தாது அடியவருக்கு எவ்வகையிலும் துன்பம் நேருதல் கூடாது என்று எண்ணி, தன் வாயில் காவலன் தத்தன் மூலம் பாதுகாப்பாக அனுப்பி வைக்க விழைகிறார். இதன் மூலம் மெய்ப்பொருளாளர் சிவநெறி மீது கொண்ட பற்றினை அறியலாம்.

உயிர் தாங்கி நின்ற மெய்ப்பொருளார்

மெய்ப்பொருளார், தத்தன் பொய்த்தவ வேடம் கொண்ட முத்தனாதனை வழியனுப்பி வைத்தான் என்ற செய்தியை அறிந்து கொள்ள உயிர் தாங்கி நின்றார். இதனை,

''மற்றவன் கொண்டு போன வஞ்சனை வேடத் தான்மேற்
செற்றவர் தம்மை நீக்கித் தீதிலா நெறியில் விட்ட
சொற்றிறங் கேட்க வேண்டிச் சோர்கின்ற ஆவி தாங்கும்
கொற்றவன்''

எனும் பாடலடிகளின் மூலம் அறியலாம். தத்தன் முத்தநாதனை எவ்வித இடையூறும் ஏற்படாதவாறு அனுப்பி வைத்தேன் என்று கூற மெய்ப்பொருளார் மகிழ்ந்து, ''இன்றெனக்(கு) ஐயன் செய்த தியார் செய்ய வல்லார்?'' என்று நன்றி மிக்க சொற்களைக் கூறுகிறார்.

திருநீற்று அன்பு

மெய்ப்பொருளாளர் உயிர் போகும் தருணத்திலும் தன்னுடன் இருக்கும் அரசியார், இளவரசர், அமைச்சர், அமைச்சர், உறவினர்கள் என அனைவரையும் பார்த்து,

''விதியினாலே பரவிய திருநீற்றன்பு பாதுகாத் துய்ப்பீர்''

என்று கூறுகிறார். திருநீற்றின் மீது கொண்ட அன்பைப் பாதுகாத்து உலகில் இன்புற்று வ்ாழும்படி கூறுகிறார்.

இறையடி நிழலை இடைதல்

மெய்ப்பொருளார் அடியவர் வேடம் தாங்கித் தன்னை

வாளால் வெட்டிய முத்தநாதன். தன் வாயில் காவலன் தத்தன் மூலம் மக்களால் எத்தகைய இடையூறும் இல்லாமல் நகரை விட்டு வெளியேறினான் என்பதைத் தெரிந்ததும் இவ்வுலகை விட்டு உயிர் பிரிந்து இறைவன் திருவடியைச் சிந்தித்தார். தேவர்களுக்கும் கிடைக்காத இறையருளாகிய திருவடி நிழலை அடையும் பேற்றினை அடைந்தார்.

முடிவுரை

மெய்ப்பொருள் நாயனார் மன்னராக இருந்தும் இறைபணியைத் தலைமேற்கொண்டு நாள் தவறாமல் செய்து வந்தார். இறைஅடியவரின் திருவடிகளே மகிழ்ச்சி தரக் கூடியது என எண்ணினார். சிவ வேடத்தை அரன் வடிவாகக் கருதி போற்றினார். திருநீறு பூசி, தவமுனிவராக வாழும் அடியவர்களை மதிப்பும் மரியாதையுடனும் நடத்தினார். பொய்த்தவ வேடம் கொண்ட முத்தநாதன் தன்னை வாளால் வெட்டியும், அவர் கொண்ட தவ வேடத்திற்காக மன்னித்து அருள் செய்தார். இவ்வுலகை விட்டு உயிர் பிரியும் வேளையிலும் திருநீற்று நெறியின் சிறப்பினை எடுத்துக் கூறி சிவபெருமானின் திருவடி நிழலை அடைகிறார்.

31. நிலையாமையே சைவநெறி



தி. யோகேசுவரன்
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை
து.கோ.வைணவக் கல்லூரி
அரும்பாக்கம், சென்னை

முன்னுரை

''உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவுலா விய நீர் மலிவே ணியன்
அலகில் சோதியன், அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவோம்''

இறைவனைச் சிவபெருமான் உலக உயிர்களால் இன்ன தன்மையன் என்று எடுத்துக் கூறுவதற்கு அரியவன் அரிய வனாயினும் யாவரும் வணங்கும்படியாகப் பிறைச் சந்திரனையும் கங்கையையும் அணிந்த சடையினை உடையவன் அளவில்லாத ஒளி பொருந்தியவன் தில்லையம்பலத்தில் திருக்கூத்து ஆடுபவன். நிலையாமை என்பது நிரந்தமல்லாதது எதுவும் இறுதிவரை வரயியலாத நிலையை தெளிவுபடுத்துவது அதுவே விதியாகும்.

நினைவெதுவோ அதுதானே சீவனமாகும்
நினைவெதுவோ அதுதானே சகமுமாகும்
நினைவெதுவோ அதுதானே துக்கமுமாகும்
நினைவெதுவோ அதுதானே மனதுமாகும்
நினைவெதுவோ அதுதானே காமமுமாகும்
நினைவெதுவோ அதுதானே கர்வாமகும்
நினைவெதுவோ அதுதானே ஈசனாகும்
நினைவெதுவோ அதுதானே அனைத்துமாகும்

என்ற பெரியோரின் வாக்கிற்கேற்ப எதுவும் நிரந்தரமில்லை என்பதனை உலகிற்கு உணர்த்திய ஒரே நெறி சைவ நெறியே என்பதனை இக்கருத்துரையில் உணர்வோம்.

''இருபத மாவது இரவும் பகலும்
உருவது ஆவது உயிரும் உடலும்
அருளது ஆவது அறமும் தவமும்
பொருவது உள்நின்ற போகமது ஆமே'' - 1792
திருமந்திரம்

''ஆயும் அறிவொடு அறியாத மாமாயை
ஆய கரணம் படைக்கும் ஐம்பூதமும்
ஆய பலஇந் திரியம் அவற்றுடன்
ஆய அருள் ஐந்து மலம் அருட்செய்கையே''
-1805 திருமந்திரம்

''அருளே சகலமும் ஆய பவுதிகம்
அருளே சராசர மாய அமலமே
இருளே வெளியே யெனும் எங்கும் ஈசன்
அருளே சகலத்தின் அன்றி இன்றாமே''
-1806 திருமந்திரம்

''அருளில் தலைநின்று அறிந்து அழுந் தாதார்
அருளில் தலைநில்லார் ஐம்பாசம் நீங்கார்
அருளின் பெருமை அறியார் செறியார்
அருளில் பிறந்திட்டு அறிந்து அறிவாரே''
-1814 திருமந்திரம்

ஆன்மநிலை

தானே புலன்ஐந்துந் தன்வசம் ஆயிடும்
தானே புலன்ஐந்துந் தன் வசம் போயிடும்
தானே புலன் ஐந்துந் தன்னில் மடைமாறும்
தானே தனித்துஎம் பிரான்தனைச் சந்தித்ததே
-140 திருமந்திரம்

இளமை நிலையாமை

''கிழக்கெழுந் தோடிய ஞாயிறு மேற்கே
விழக்கண்டும் தேறார் விழியிலா மாந்தர்
குழக்கன்று மூத்தெரு தாய்சில நாளில்
விழக்கண்டும் தேறார் வியனுல கோரே''
- 177 திருமந்திரம்

செல்வம் நிலையாமை

''தேற்றத் தெளிமின் தெளிந்தீர் கலங்கன் மின்
ஆற்றுப் பெருக்கிற் கலக்கி மலக்காதே
மாற்றிக் களைவீர மறுத்துங்கள் செல்வத்தைக்
கூற்றன் வருங்கால் குதிக்கலு மாமே'' -172 திருமந்திரம்

மெய்ப்பொருள் நாயனார்

''தேடிய மாடு நீடு செல்வமும் தில்லை மன்றுள்
ஆடிய பெருமான் அன்பர்க் காவன''
-470(4) பெரியபுராணம்

தில்லையில் அருட் கூத்து ஆடுகின்ற பெருமானால் கிடைக்கப் பெற்ற இச்செல்வம் ஏழைகளுக்கும், அடியவர்களுக்குமே பயன்பெற வேண்டும் என்றார்.

செல்வம் நிலையாமை

''காதற்ற வூசியுங் வராதுகாண் கடைவழிக்கே''

என்னும் பாடல் வரிகள் செல்வம் நிலையாமையை உணர்த்துகின்ற ஓர் அருமையான சைவ நெறியை உணர்த்தும் சித்தர் வரிகளே.

''கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே வெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று'' - திருக்குறள் 331

என்ற வரிகள் செல்வம் நிலை பெறாததை நினைவுபடுத்துமே

பதவி நிலையாமை

''எண்ணிய ஞானி உடல் எரி தாவிடில்
அண்ணல் தம் கோயிலவ் அழல் இட்டது ஆங்கு ஒக்கும்
மண்ணில் மழைவிழா வையகம் பஞ்சமாம்
எண்ணரு மன்னர் இழப்பார் அரசே'' -1911 திருமந்திரம்

யாக்கை நிலையாமை

''புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு'' திருக்குறள் - 340)

உடம்பினுள்ளே குடியிருந்து வருகின்ற உயிர்க்குப் புகுந்து புகுந்து செல்கின்ற இந்தக் கூடு எனும் உடம்பு ஒருபோதும் நிலைபெறாது நிலையாமை

''யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்'' - திருக்குறள் 341

எவனொருவன் எவ்வப்பொருளில் ஆசையை ஒழிந்தானோ அனுக்கு அவ்வப் பொருளனால் துன்பம் உண்டாவது இல்லை.

''சார்பு உணர்ந்து சார்புகெட ஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரும் நோய்'' திருக்குறள் 359

ஒருவரின் எல்லாப் பொருட்களுக்கும் சார்பாகிய மெய்ப்பொருளை உணர்ந்து பற்று அற நடக்க வல்லவனானால் அவனைச் சாரக் கூடிய துன்பவங்கள் அவனது உணர்வைக் கெடுத்து அவனை வந்து அடையமாட்டாது என வள்ளுவரின் மெய்யுணர்வு நெறி சைவ நெறியின் சாரம்சமே.

உயிர் நிலையாமை

''இன்புறு வண்டிங்கு இனமலர் மேற்போய்
உண்பது வாசமது போல் உயிர்நிலை
இன்புற நாடி நினைக்கிலும் மூன்றொளி
*கண்புற நின்ற கருத்துள் நில்லானே'' * 194 திருமந்திரம்*

யாக்கை நிலையாமை

''ஊரெலாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று போரிட்டுச்
சூரையும் காட்டிடைக் கொண்டு போய்ச் சுட்டிட்டு
நீரில் மூழ்கி நினைப் பொழிந்தார்களே'' -145 திருமந்திரம்

பந்தல் பிரிந்தது பண்டபாரங் கட்டற்ற
ஒன்பது வாசலும் ஒக்க அடைத்தன
துன்புறு காலந் துரிசுவர மேன்மேல்
அன்புடை யார்கள் அழுதகன் றார்களே
- 152 திருமந்திரம்

இறப்பு

அந்தமில் ஞானிதன் ஆகம் தீவினில்
வெந்திடின் நாடெலாம் வெப்பத் தீயினில்
நொந்து நாய்நரி நுகரின் நுண்செரு
வந்து நாய் நரிக்கு உணவாகும் வையகமே

- 1910 திருமந்திரம்

''நெருநல் உளன்ஒருவன் இன்றுஇல்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு'' - திருக்குறள் 336

என்னும் வள்ளுவரின் வாக்கும் பிறப்பு இறப்பு என்பன இவ்வுலகில் நிலையில்லை என்பதைத் தெளிவுபடுத்துகிறது. இதனையே திருமூலரும் அன்றே கூறினார் போலும்.

முடிவுரை

இவ்வுலகமானது எதனை நோக்கிப் பயணிக்கின்றது எதனை அடிப்படையாக வைத்து இயங்கிக் கொண்டிருக்கின்றது எதனை உட்பொருளாக உணர்ந்து இந்த மனித மனம் மாசுபட்டு மாறுபாடு அடைந்து விதி வழி வந்து முடிகிறது என்ற சிறந்த நிலையாமை தன்மையினை சைவ நெறியை விளக்கும் பாடல்கள் நமக்கு தெளிவுபடுத்துமே.

32. சிவபுராணத்தில் மெய்ஞ்ஞான அறிவு



முனைவர் ச. தமிழரசன்
உதவிப்பேராசிரியர் (சுயநிதி)
தமிழ்த்துறை
தியாகராசர் கல்லூரி
மதுரை

முன்னுரை

"வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்
கோனாகி யானெனது என்று அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை யென் சொல்லி வாழ்த்துவனே"

யான் எனதென்று ஆணவத்தால் அஞ்ஞானத்தில் சிக்கி உழலும் உயிரை உடையவரைக் கூத்தாட்டுபவனும் இறைவனே. கூத்தாடுபவருக்குக் குருவாய் இருந்து உபதேசித்து மெய்ஞ்ஞானத்தை உணர்த்துபவனும் இறைவனே. அஞ்ஞானத்தால் அல்லல்பட்டவருக்கும் அறியாமையினால் இன்னல்பட்டவருக்கும் உண்மையான இறைவனின் அறிவு எத்தகையது எனவும், அதை எவ்வாறு நாம் உணர்ந்து கொள்ள வேண்டும் எனவும் மாணிக்கவாசகர் சிவபுராணத்தின் வழி விளம்புகிறார்.

மெய்ஞ்ஞானப் பொருள்

மெய் என்பது உண்மை. மெய்ப்பொருள் என்பது உண்மைப் பொருள். உண்மைப் பொருளே தெய்வம். வழிபடுதெய்வம் நிற்புறங்காப்ப எனத் தொல்காப்பியம் உரைக்கிறது. நாம் தொழுவது நம்மைத் தொழவைத்தது அத்தெய்வம். இதைத்தான் அவனருளாலே அவன்தாள் வணங்கி என்று சிவபுராணம் செப்புகிறது. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் தெய்வத்துள் வைக்கப்படுவர் எனத் திருக்குறள் நவில்கிறது. மனிதனை இறைநிலை அடையச் செய்வது தெய்வச் செயல். வாழ்வாங்கு நம்மை வாழவைப்பதும் தெய்வமே. மெய்ஞ்ஞானம் என்பது மெய்ப்பொருளைப் பற்றிய உண்மையான

அறிவு என அகராதிகள் குறிப்பிடுகின்றன. உண்மையான அறிவு இறைவனிடத்திலிருந்து முகிழ்கிறது. அவன் கைகூட்ட நமக்குக் கைவரப்பெறுகிறது. மாணிக்கவாசகருக்கும் இத்தகைய மெய்ஞ்ஞான அறிவு ஏற்பட்டது. அவர் உரைத்த மெய்ஞ்ஞான அறிவு எத்தன்மை வாய்ந்தது என்பதை ஆயும் கட்டுரையே இது.

மாணிக்கவாசகர்

மாணிக்கவாசகர் திருப்பெருந்துறையில் பாடி அருளியது சிவபுராணம் சம்புபாதாசிரியருக்கும் சிவஞானவதியாருக்கும் மகனாக அவதரித்த அடியார் மாணிக்கவாசகர். இவரது இயற்பெயர் வாதவூரன், இளமையில் கல்வி கேள்விகளால் பலரை வியக்கவைத்துப் பிரமராயன் என்ற பட்டத்தை வழங்கினார். மன்னரால் குதிரை வாங்க அனுப்பப்பட்ட மாணிக்கவாசகர் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டு அவனருளாளே திருப்பெருந்துறையில் இறைப்பணி செய்யலானார். அப்போது நடந்தேறியவையே நரி பரியானதும், பரி நரியானதுமாகிய படலங்கள். மாணிக்கவாசகரின் பெருமையை உலகிற்கு உணர்த்த இறைவனே பிட்டுக்கு மண் சுமந்தும் பிரம்படி பட்டதுமாகிய திருவிளையாடல்களை அடியாரனைவரும் அறிவர். திருப்பெருந்துறையில் இறைவனை நினைந்து கசிந்து மனமுருகப் பாடியதே சிவபுராணம். அச்சிவபுராணத்தில் கூறப்படும் மெய்ஞ்ஞான அறிவுப் பொருளை விளம்பிய அறிவின் வழி உணர்தலே பேரின்பவீடாகும்.

ஏகன் அநேகன்

கடவுளை எல்லா அறிவும் ஆற்றலும் உடையவர் என்று கூறுதலே ஞானம். எல்லோரையும் காப்பவரும் அவரே. காத்து வேண்டியவற்றை அளிப்பவரும் அவரே. கடவுள் ஏகனாய்த் தனிப்பொருளாக உலகத்து உள்ளான் என்பது சித்தாந்தக் கருத்தாகும். அவனே எல்லாப்பொருளிலும் கலந்து அவ்வந்த பொருண்மைகளுள் உவந்து இனிக்கின்ற தன்மை அநேக நிலையாகும். முழுமுதற்பொருளாய் ஏகன் வித்தாய் இருக்கிறான். அவ்விதத்தின் பலன்களாய்ப் பல்கிப்பெருகி பல

உயிர்களிடத்து அநேகனாய் இருக்கிறான். புல், பூண்டு, தாவரங்கள், விலங்குகள், மரங்கள், ஊர்வன, பறப்பன என அனைத்திலும் இறைவன் நீக்கமற பல்கிப்பெருகி இருக்கிறான். அத்தன்மை அநேகனைக் குறிக்கிறது.

"ஏகன் அநேகன் இறைவனடி வாழ்க"

எனச் சிவபுராணம் இறைவடிவத்தை எடுத்துரைக்கிறது.

பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்

"இன்னாதம்ம இவ்வுலகம்" என்ற புறநானூறு செப்புகிறது. இவ்வுலகம் துன்பக் கடலையே விரித்துத் தன்னுள் வைத்துள்ளது. துன்பத்தைத் தரும் உடலே பிறவிதோறும் தோன்றிக் களைப்பாகிக் கவலையுறுகிறது. உயிர் இறந்து மீண்டும் இன்னொரு உடலைத் தேடி பயணிப்பதேன் என அறிவைச் செலுத்தினோமென்றால் விடைகிடைக்கும். பிறவி ஏற்பட வினைகளே காரணம். அவ்வினைகளின் தன்மை பொருட்டே நல்லனவும் தீயனவும் நடந்தேறுகின்றன. நல்லன மிகுதியாய், தீயன குறைவாய் செய்தோமென்றால் தான் பிறவிப்பிணி மெல்ல மெல்ல அகலும். மாறாக கேடு தரும் துன்ப வினைகளை நாம் செய்யச் செய்ய பிறவிப் பெருங்கடலின் ஆழமும் அகலமும் நீளும்.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார்"

எனத் திருக்குறள் பிறவிப் பெருங்கடலில் நீந்துவோர் தன்மையைப் பற்றி உரைக்கிறது. பிறப்பருக்கும் பெம்மான் என ஞானசம்பந்தர், நாவுக்கரசர் உள்ளிட்ட அடியார் பலரும் உரைப்பது இறைவனின் பிறப்பறுக்கும் தன்மையினையே. உலகப்பற்றுக்களிலிருந்து நீங்கும் உயிரானது இறைவனை அடையும். இறைவன் திருக்காலடி சேர்ந்த உயிர்களுக்கு அவன் மீண்டும் பிறவித் துன்பத்தைத் தராமல் அருளிக்காப்பான்.

"பிறப்பறுக்கும் பிஞ்ஞகன் மெய்கழல் வெல்க"

என இறைவனது தொழிலைக் குறிப்பிடுகிறது. பிறவித்துயரானது

வினைகளுக்கேற்ப எல்லா வடிவத்தையும் எய்தச் செய்து உயிரைக் களைப்படையச் செய்யும். அத்துன்பம் தாளாதது. இக்கருத்தை மாணிக்கவாசகர் சிவபுராணத்தில்,

''புல்லாகிப் பூடாகிப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய் பேயாய் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய் தேவராய்
செல்லா நின்ற இத்தாவரச் சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்''

எனும் பாடலடிகளால் உணர்த்துகிறார். பிறவித்துன்பத்துள் மனிதராய் இருப்பதும் பெரும் துன்பத்தையே தரும் என இவ்வடிகள் சுட்டிக் காண்பிப்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். பிறவித்துன்பம் நீங்குதல் பொருட்டு நல்வினை ஆற்றல் வேண்டும்.

மெய்ஞ்ஞானமானவன்

எல்லாப் பொருளிடத்தும் மெய்யாய் இருப்பவன். வேதங்களின் தலைவனாய் ஓங்கி இருப்பவன். மெய்ஞ்ஞானம் தரும் அறிவுதனில் ஆழ்ந்தகன்று இருப்பவன். நம்மை அறிவை அடையச் செய்கிறவன. வெம்மையாகிச் சுடரான வடிவத்தில் ஏறி நிற்பவனும் அவனே. துணிந்து தண்ணீராக வடிவாமாய் இறங்குபவனும் அவனே. இமயனாய் இருப்பவனும் அவனே. பொய்யானவற்றை நீக்கி மெய்யானவற்றைப் புலப்படச் செய்பவனும் அவனே. எஞ்ஞானமும் இல்லாத அஞ்ஞானத்தில் மிதக்கும் ஏதுமற்ற அறிவினருக்கும் மெய்யறிவை ஊட்ட வந்தவனும் அவனே.

''மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற சுடரே''

என்ற சிவபுராண அடி இறைவன் உண்மையறிவைப் பெற்றுத் திகழ்பவன் என நமக்கு உணர்த்த வந்தது.

முத்தொழில் முதல்வன்

உலகத்திலுள்ளவருக்கு இறைவன் செய்கின்ற

தொழில்கள் மூன்று. படைத்தல், காத்தல், அழித்தல் ஆகும். இதனையே வேதங்கள் முத்தொழில் எனக் கூறுகின்றன. படைத்தலாவது இருப்பதை இன்னொரு வடிவமாகத் தோற்றுவிப்பது. புலப்படாத நிலையில் உள்ள ஒன்றைப் புலப்படுத்தும் தொழிலே படைத்தலாகும். இறைவன் தனு, கரண, புவன யோகங்களை புலப்படுமாறு படைத்து உலகத்தின் அனைத்து உயிர்களும் எய்துமாறு செய்திருக்கின்றான். படைக்கப்பட்ட உடம்பு முதலியவற்றை அவ்வந்த உயிர்கள் புரியும் செயல்களுக்கு ஏற்ப அவற்றின் வினைகளுக்கு ஏற்ப இவ்வுலகில் எவ்வளவு காலம்வரை நிறுத்தி வைக்க வேண்டும் என்பதை அறிந்து அவ்வளவுடைய காலம் நிறுத்தி வைத்தலே காத்தல் தொழிலாகும் என்கிறது சித்தாந்தம். வினைப்பயன்களுக்கு ஏற்றப்படி இன்ப துன்பங்கள் உயிர்களுக்குக் கொடுக்கப்பட்ட உடம்பின் வழிச்சேரும். அழித்தலாகிய செயல் இறைவனால் செய்யப்படுவது. குறிப்பிட்ட காலம் வரை உயிரைக் காத்த உடம்பினின்று பிரித்து அதனை ஒடுக்கி வைத்தலே அழித்தல் தொழிலாகும். அழித்தல் என்பது முற்றிலும் ஒன்றை நீக்குவது என்பதல்ல. மாறாக உயிர்களைச் சூக்கும நிலைக்கு மாற்றுதலாகும்.

நிலையற்ற வாயில்குடில்

வினைகளைத் தம் வயதிற்கும் அனுபவத்திற்கும் தக்கபடி செயலாற்றும் உடலானது நிலையற்றது. மேனிவளர்க்கப் பெரும்பாடுபடும் மனிதர் கூட்டம் அது நிலையற்றது என்பதை உணர வெகுநாட்களாகின்றன. அவ்வுடலுக்காகவே சொத்தையும், சுகத்தையும் தேடித்தேடித் தம் வினைகளைப் பெரிதாக்கித் தேக்கி வைக்கின்றனர். ஆண்டு அனுபவித்துத் தீரவேண்டும் என்ற ஆணவத்தின் உச்சியேறிச் சறுக்குகின்றனர். இளமையும் அழகும் உடலினது வயதிருக்கும் வரைதான். அது நிலையற்றது என்றோ பயனற்றது என்றோ காலத்தோடு உணர்வாரில்லை. மாணிக்கவாசகர் உடலை ஒன்பது வாயிலினின்று வெளிப்படும் அழுக்குகளால் நிரம்பப்பெற்றது என்கிறார்.

''புறத்தோல் போர்த்து எங்கும் புழுஅழுக்கு மூடி

மலஞ்சேரும் ஒன்பது வாயில் குடிலை''

ஒன்பது வாசலுள்ள குடிலே உடலென மாணிக்கவாசகர் கூறிய கருத்து சித்தர் கூறும் ஞானந்திரியங்களான செவி, தோல், கண், வாய், மூக்கு ஆகிய உறுப்புகளையே. இவை மாசுக்களால் நிரம்பி வழிகின்றவை. நிலையற்றவை என்பதை நாம் உணர்தலே ஞானம்.

கள்ளப் புலக்குரம்பை கட்டழிப்பவன்

இன்னதென்று அறியாமையினால் உடம்பு சிற்றறிவையும், அவ்வறிவினால் பெற்ற தொழிலையும் பெரிதென எண்ணிப் பொழுதைக் கழிக்கிறது. உயிர்களின் மலம் சிற்றறிவால் தோன்றுகின்றது. அம்மலம் ஆணவம், கன்மம், மாயை என விரிந்து நிற்கிறது. மனிதர்கள் புலன்வழி மலமுள்ளவர்களாக இருக்கிறார்கள். இறைவன் மலமற்றவன். குற்றம் நிறைந்த இவ்வடம்பைக் கட்டழித்து உயிருக்கு உபதேசிப்பவன். அறிவே உருவாய் இருக்கும் இறைவன் கள்ளப்புலனுடைய உடம்பை நீக்குபவனாக இருக்கிறான்.

நிறைவுரை

முற்பிறவிகளில் செய்த வினைகளின் பயனாக உயிர்கள் படும் துன்பத்தை நீக்கும் பொருட்டு இறைவன் குரு வடிவத்திலே வந்து ஞானோபதேசம் செய்கிறார். அக்குருவின் உபதேசங்கள் உயிர்களுக்கு இறைவனின் திருவடிப்பாதையை அடையும் வழியைக் காட்டி ஞானத்தை அடையச்செய்கின்றன. சிவஞானபோதம் உயிர்களுக்கு முக்தி கிடைக்கும் வழிகளைக் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், முக்தியடைதல் எனும் படிநிலைகளில் கூறுகிறது. குருவானவர் அஞ்ஞானத்தில் உழலும் உலக உயிர்களுக்கு மெய்ஞ்ஞானத்தைக் காட்டும் இறைவடிவினராகக் கருதப்படுகிறார். அதனால் தான் மாணிக்கவாசகருக்கு இறைவன் குருவடிவம் ஏந்தி குருந்தமரத்தடியில் ஞானம் நல்கினார். குரு உபதேசம் மெய்ஞ்ஞானத் தேடலை வளர்க்கும்.

33. அறப்பண்பாடு



முனைவர் இரா.கண்ணன்
தமிழ்ப்பேராசிரியர்
பிள்ளையாம்பேட்டை
திருப்புவனம்

முன்னுரை

உலகை உய்விக்க வந்த பெரியபுராணம், தமிழர்தம் வாழ்வியலின் வரலாற்றுப் பெட்டகம். இது 12 ஆம் திருமுறையாகத் தொகுக்கப்பட்டுள்ளது. சேக்கிழாரின் திறம் வியந்து போற்றுதற்குரியது. மனுநீதிச் சோழனின் (எல்லாளன்) கதையை நூலின் தொடக்கத்திலேயே விவரிக்கின்றார். சோழனின் ஒரே மகன், வீதிவிடங்கன் தேர் ஏறி ஒரு பசுங்கன்று தேர்க்காலில் பட்டு இறந்து விட்டது. தாய்ப்பசு ஆராய்ச்சிமணியை ஒலித்தது. மன்னன் பதைபதைத்தான். அமைச்சன் மிகவும் மதிநுட்பம் வாய்ந்தவன். இளவரசன் மீது எவ்வித குற்றமுமில்லை என தெளிவுபடுத்த வேண்டிய கடப்பாடும், இளவரசனைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பும் தமக்கு இருப்பதாக அமைச்சன் எண்ணுகின்றான். நடந்த நிகழ்வை அரசனிடம் கூறுவதாகத் தெய்வச்சேக்கிழார் ஒரு பாடலை அமைக்கின்றார். அப்பாடல் இதோ,

> "வளவ நின்புதல்வன் ஆங்கோர் மணிநெடுந்தேர் மேல் ஏறி
> அளவில் தேர்த்தானை சூழ அரசுலாந்தெருவில் போங்கால்
> இளையஆன் கன்று தேர்க்கால் இடைப்புகுந் திறந்ததாகத்
> தளர்வுறும் இத்தாய் வந்து விளைத்ததித் தன்மை என்றான்"

இப்பாடலின் பொருளை மேலோட்டமாகப் படித்தால் சாதாரண நிகழ்ச்சி போன்று காணப்படும். மன்னா உன்னுடைய மகன் தேர்மேல் ஏறிச்செல்லும் பொழுது ஒரு பசுங்கன்று தேர்க்கக்கரத்தில் பட்டு இறந்ததால், இத்தாய்ப்பசு இந்த ஆராய்ச்சி மணியை அடித்துள்ளது என்று அமைச்சன் கூறினான் என்பது பாடலின் பொருள். இப்பாடலின் சொல்லுக்குச் சொல் பொருள் உணர்ந்து படித்தால் தான் சேக்கிழார் பெருமானின் உயர்வு நமக்குப் புலப்படும்.

முதலில் வளவ என்ற சொல்லைப் பார்ப்போம். வளவ என்றால் மன்னன் என்று பொருள். வளவ என்றால் வளமையான நாட்டிற்குச் சொந்தக்காரன் என்றும் பொருள் உண்டு. ஆனால் வளவ என்றால் பால்தரும் பசுக்கள் நிறைந்த வளமான நாட்டின் தலைவன் என்பதே சரியானது. ஏனெனில் பால்தரும் பசுக்கள் இருப்பின், கன்றுகள் நிறைந்து இருக்கும். பல்லாயிரக்கணக்கான பாற்பசுக்களும், கன்றுகள் உன்னிடம் இருப்பதினால், ஒரு சிறுகன்று இறந்ததற்காக மன்னா நீ கவலைப்படாதே என்று அமைச்சன் மறைமுகமாக அறிவுறுத்துகிறான். பல கன்றுகள் இருக்கும் நாட்டில் ஒன்றிரண்டு இறப்பது இயற்கையே என்பதும் அமைச்சரின் கூற்று.

அடுத்துவரும் சொற்றொடர் நின்புதல்வன் என்பதாகும். புதல்வன் என்றால் மகன் என்று பொருள். புதல்வன் என்றால் மாணவன் என்றும் பொருளுண்டு. புதல்வன் என்றால் சீடன் (சிசியன்) எனவும் பொருள் கூறலாம். புதல்வன் என்றால் குடிமகன் எனவும் கருத இடமுண்டு. நின்புதல்வன் என்றால் உன்னுடைய மகன் எனப்பொருள். தந்தையின் குணமே மகனுக்கும் வாய்க்கும். சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே என்பர். தந்தை சான்றோனாக இருந்தால் தான் மகனைச் சான்றோனாக்க முடியும் சான்றோனாகிய உமக்குப் பிறந்த மகனும் சான்றோன் தான். சான்றோனுக்குப் பிறந்த மகன் தவறு செய்வானோ? மாட்டான் என அமைச்சன் அறிவுறுத்தினான் என்க. புதல்வன் என்றால் மாணவன் என்றொரு பொருள் உண்டு எனப் பார்த்தோம். நல்ல மாணவனாக இருக்க வேண்டுமெனில், நல்லாசிரியன் வேண்டும். உன்னிடம் அறம் பயின்ற உன் மாணவனாகிய வீதிவிடங்கன், நின்புதல்வன் எவ்வாறு அறத்திற்குப் புறம்பாக போகமுடியும்? ஆகவே நின்மகன் தவறு செய்யவில்லை எனக் குறிப்பால் உணர்த்துகிறார் அமைச்சன் என்க.

புதல்வன் என்றால் சீடன் என்றொரு பொருளுண்டு எனக்கண்டோம். நின்மகன் குருவாகிய உமக்கு வாய்த்த நல்ல சீடன். குருவின் பெருமைக்கு களங்கம் ஏற்படுத்துவானா? சீடன் மீது குற்றமில்லை எனக் குறிப்பால் உணர்த்தினார் அமைச்சர்.

புதல்வன் என்றால் நல்லகுடிமகன் என்றொரு பொருளுண்டு. மன்னன் எவ்வழி. மக்கள் அவ்வழி. அறநெறி வழுவாது அரசாட்சி நடத்தும் உமது நல்லாட்சியில் குடிமகன் தவறு செய்வானோ? மாட்டான். நின்மகன் நல்ல குடிமகன். அவன் தவறு செய்யவில்லை என அமைச்சன் குறிப்பால் உணர்த்தினான் என்க.

அடுத்த சொல் ஆங்கோர் என்பதாகும். இன்றும் கிராமங்களில், இளைஞர்கள் பேசிக்கொள்ளும் பொழுது, அங்கே பாருடா என்பார்கள். அதாவது அங்கே பார்வைக்குத் தெரியக் கூடிய பொருள் ஒன்று இருக்கிறது என்று பொருள். ஓர் என்பது ஒரே ஒரு பொருளைத்தான் குறிக்கும். நிறைய பொருள்கள் இருந்தால், மூளைக்கு எதுவென்று தெரியாமல் போகும். குழப்பம் ஏற்படும். அங்கே காட்சிக்கு தெரியக்கூடிய பொருள் ஒன்று உண்டு. அதுமிக நன்றாகத் தெரியும் தேர் மட்டுமே. அப்பொருளை பார்க்காமல் போனது கன்றுக் குட்டியின் குற்றமேயொழிய, இளவரசனாகிய நின்புதல்வனின் குற்றமன்று என்று அமைச்சன் அறிவுறுத்துகிறான்.

அடுத்தவரும் சொற்றொடர் மணி நெடுந்தேர் ஏறி என்பதாகும். தேர் என்பது ரதம் என்றும் அழைக்கப்படும். அரசகுலத்தினர் சொல்லும் தேரெனில் அது மிக நன்கு அலங்கரிக்கப்பட்டிருக்கும். காண்போரின் கண்ணையும், கருத்தையும் கவரும். கண் சென்று பற்றும் கருவி. அழகை கண் சென்று பற்றும். அழகிய தேரினை கண் உடனே கண்டு களிக்கும். அத்தேரை காணாமல் இருந்தது கன்றின் குற்றமேயன்றி, நின்புதல்வனின் குற்றமன்று என, அமைச்சன் உணர்த்தினான். அத்தேர் மிக அகலமாக இருந்திருந்தால் கூட பார்வைக்கு, காட்சிக்கு தப்பியிருக்கும். ஆனால் அது ஒரு நெடுந்தேர் அதாவது மிக உயரமான தேர். மிக உயரமான பொருள், உடனே கண்ணுக்குத் தென்படும். உயரமான அரண்மனை, கோபுரம் போன்றவை உடனே கண்ணுக்குப் புலப்படுவதுபோல, நெடுந்தேர் அனைவரின் கண்ணுக்கும் தென்பட்டது. ஆனால், நெடுந்தேரைப் பார்க்காமல் வந்தது கன்றின் குற்றமேயொழிய, நின்மகனின் குற்றமன்று என்று

அமைச்சன் உணர்த்தினான். மேலும், அது நெடுந்தேர் மட்டுமன்று. மணி நெடுந்தேர் ஆகும். அதாவது தேரின் மணியோசையானது. கிண்கிணி கிண்கிணி யென நாற்புறமும் கேட்டது. அனைவரும் கேட்டனர். அனைவரின் காதுகளிலும் ஒலித்தது. நெடுந்தேரைப் பார்க்காமல், மணி ஓசையையும் கேட்காமல் வந்தது கன்றின் குற்றமேயொழிய மைந்தன் குற்றமன்று என அமைச்சன் உணர்த்தினான் என்க. கன்று மணியோசையைக் கேட்டிருக்க வேண்டும் நெடுந்தேரைப் பார்த்திருக்க வேண்டும். அவ்வாறு செய்யவில்லை. ஏறி என்றால் சற்று உயரத்திற்குச் சென்று என்பது பொருள். தேரில் ஏறி நின்று பார்த்தால் எதிரே வரும் பொருள் யாவும் தெரியும். ஆனால் பார்க்கும் தொலைவு எங்கும் கன்றுக்குட்டி வந்து கொண்டிருப்பதற்கான அறிகுறியே இல்லை. கன்று தேருக்கு நேரே வந்திருந்தால் நின்புதல்வன் தேரை நிறுத்தியிருப்பான். கன்று வேறுவழியாக வந்திருக்கிக்கிறது. அது கன்றின் குற்றமேயொழிய நின்மைந்தனின் குற்றமன்று என அமைச்சன் உணர்த்தினான்.

அடுத்துவரும் சொற்றொடர் அளவில் தேர்த்தானைச் சூழ என்பதாகும். நின்மகன் தனியொருவனாகப் போகவில்லை. அளவில் என்றால் பெருங்கூட்டம். பெருந்திரளான கூட்டத்தோடு செல்கிறான். அரசபரிவாரங்களுடன் செல்கின்றான். இசை முழக்கமும் உண்டு. கூட்டத்திலிருந்தவர்களின் யார் கண்ணிலும் அக்கன்று படவில்லை என்பது பொருள். கூட்டத்தின் கண்ணில் தென்பட்டிருந்தால் கன்றைப் பிடித்திருப்பர். தேர்த்தானை சூழ என்றால் தேர்ப்படை வீரர்கள் தேரைச்சுற்றி இருந்தனர். சூழ்ந்து நின்றனர். சூழ் என்பதற்குப் பொருள் சூழ்ந்து என்பதாகும். அச்சொல்லின் பொருளை இங்கே அமைச்சன் குறிப்பிடுகின்றான். சூழ் என்றால் தேரினை முன்வினை சூழ்ந்து என்பது பொருள் என்க. அவர்களையும் மீறி கன்று வந்தது கன்றின் குற்றமேயொழிய மகனின் குற்றமன்று என்று அமைச்சன் உணர்த்தினான்.

அடுத்துவரும் சொல், போங்கால் என்பதாகும். போங்கால் என்பது போனபொழுது அவ்வாறு சென்ற

சமயத்தில், மிகவும் எச்சரிக்கையாக சென்றபொழுது என்று பொருள். தேர்த்தானை சூழ சென்றதினால், நின்மகன் தேரை விரைவாகச் செலுத்தவில்லை மிக மெதுவாக ஊர்ந்து சென்றான். எனவே நின் மகன் மீது குற்றமில்லை என்பதாக.

அடுத்துவரும் சொற்றொடர், இளைய ஆன் கன்று என்பதாகும். கன்று மிகவும் இளமையானது என்று பொருள். இளைய ஆன் கன்று, என்றால் மிகவும் சின்னக்குட்டி என்று பொருள். ஆன் கன்று என்பது பசுங்கன்றாகும். (ஆன்-பசு) பசுக்களைக் கொல்லக்கூடாது. அது அதர்மம் என்று இளவரசனுக்குத் தெரியும் என்பது உட்கிடை. இளங்கன்று மிகவும் துடுக்கானது. இளமை வேகத்தில் வந்துள்ளது. மிகச்சிறிய பசுங்கன்றாதலால் மன்னன் இது பற்றிக் கவலைப்பட வேண்டாம். அதைப் போல ஏராளமான பசுங்கன்றுகள் நம் நாட்டில் உள்ளன. மன்னன் வருந்துமளவிற்கு ஏதும் நடந்துவிடவில்லை. இதைப் பெரிதாக எடுத்துக்கொள்ள வேண்டாம். இளைய ஆன் கன்று, எப்போதும் தாயைச் சுற்றியே விளையாடும். இது தாயைவிட்டு வெகுதொலைவு வந்துவிட்டது. இது கன்றின் குற்றமேயொழிய மகனின் குற்றமன்று என்று அமைச்சன் உணர்த்தினான்.

அடுத்து வரும் சொல், தேர்க்கால் என்பதாகும். தேரின் சக்கரம் மிகவும் மெதுவாகச் சுழன்று சென்று சக்கரம். அந்தச் சக்கரம் வினைச் சக்கரம் விதிச்சக்கரம், விதி வசத்தால் நிகழ்ந்தவொன்றாகும். இதற்கு மகன் காரணமன்று.

அடுத்துவரும் சொற்றொடர், இடைப்புகுந்து இறந்ததாக என்பதாகும். மன்னா, நான் முன்பு குறிப்பிட்டதைப் போல அரசவீதியில் கண்பார்வைக்கு எதிரே தெருவில் இளங்கன்று வந்திருந்தால், தேரை நின்மகன் உடனே நிறுத்தி இருப்பான். குறுக்குச்சாலை வழியாக, யார்கண்ணிலும்படாமல், வந்து தேர்க்காலில் பட்டிருக்கிறது. கன்று இடைப் புகுந்தது. புகுதல் என்றால் சாலையின் இருமருங்கும் பார்க்காமல் வருதல் என்று பொருள். தேர்க்காலில் புகுதல் என்றால் சக்கரத்தின் இடையில் வந்து விழுதல் என்று பொருள். மேலே தேரில் இருக்கும்

இளவரசனுக்குச் சக்கரத்தில் நடப்பது தெரிய வாய்ப்பில்லை. தாய்ப்பசுவும், இடைப்புகுந்து இறந்தது என்று நினைக்கவில்லை. இடைப்புகுந்து இறந்ததாக என்பதினால், குறுக்கு சாலையில் வரும் பொழுதே வேகமாக எங்கோ மோதி அடிபட்டு தேர்க்காலில் வந்து விழுந்திருக்கலாம் என்பது பொருள். விபத்து வேறிடத்தில், இறப்பு தேர்க்காலில் என்பதாக. எனவே இது கன்றின் குற்றமேயொழிய மகனின் குற்றமன்று. தேர்க்காலில் பட்டுத்தான் கன்று இறந்திருந்தது என்பதற்கான எவ்வித காட்சி சாட்சியும், ஆவணமும் இல்லை குற்றத்தை உறுதிபடுத்தக்கூடிய எவ்விதத் தடயமும் இல்லை. தெளிவான நம்பத்தகுந்த, சான்று எதுவும் இல்லை நின்புதல்வன் குற்றமற்றவன்.

அடுத்து வரும் சொற்றொடர், தளர்வுறும் இத்தாய் வந்து என்பதாகும். தளர்வுறும் தாய், என்றான் அமைச்சன். துன்புறும் என்று சொல்லியிருந்தால், அதன் பொருள்வேறாக இருந்திருக்கும். இளங்கன்று இறந்ததினால் கொஞ்சம் சோர்வுற்றது தாய்ப்பசு. அதற்குப் பெருந்துன்பம் ஒன்றும் ஏற்பட்டுவிட வில்லை. தளர்வு கொஞ்ச நேரத்தில் சரியாகிவிடும். அதனால் மன்னன் கவலைப்பட வேண்டாம் என்றான் அமைச்சன் என்பதறிக.

அடுத்துவரும் சொற்றொடர். விளைத்தது இத்தன்மை என்றான், என்பதாகும். விளைத்தது என்றால் வினா எழுப்பு என்றும், ஒன்று வளர்வதற்கான காரணம் என்றும், விளைவு அல்லது விளைச்சல் உருவாக்கு என்றும் பொருள்படும். இந்நாட்டில் அறத்திற்கும், தர்மத்திற்கும் சோதனை வந்துவிட்டதாகத் தாய்ப்பசு வினா எழுப்புகிறது. இளவரசனின் செயல் அதர்மம் வளர்வதற்கான காரணமாக அமைந்துவிட்டதோ? என எண்ணித் தாய்ப்பசு வினா எழுப்புகிறது. தீமையான விளைவுகள் இந்நாட்டிற்கு வந்துவிடுமோ? எனக் கருதி தாய்ப்பசு வினா எழுப்புகிறது. தன்மை என்பதற்கு, இங்கு இயற்கை இயல்பு எனப் பொருள் கொள்வது நன்று. இந்நாட்டின் இயற்கை இயல்பே (தன்மையே) அறம் சார்ந்ததாக உள்ளது. தாய்ப்பசுவின் இச்செயல் அறம் சார்ந்த தன்மை கெட்டுவிடுமோ? எனத் தாய்ப்பசு கருதியது

போலும், தர்மத்தின் அடிப்படையிலான சமுதாயம் கெட்டு விடுமோ எனத் தாய்ப்பசு எண்ணியது போலும். ஆனால், ''அறத்திற்கு எத்தீங்கும் நேர்ந்துவிடவில்லை மன்னா'' என அமைச்சன் கூறினான்.

அமைச்சன் சொன்ன செய்தி அனைத்தையும் மன்னன் கேட்டான். தாய்ப்பசு தன் கன்றை இழந்து வாடுகிறது. அத்தாய்ப்பசுவிற்குத் தக்க நீதி கிடைக்க வேண்டும். என் மகனைத் தேர்க்காலிலிட்டு, அந்த வேதனை நான் அனுபவித்தால் தான் இதற்கு தக்க நீதியாகும். சேக்கிழார் சுவாமிகள் சொல்கிறார். தருமம் தன் வழி செல்கை கடனென்று தர்மத்தின் வழியில் தான் செல்லவேண்டும் என்பதில் உறுதியாக இருந்தான். இதனைச் சேக்கிழார்.

''ஒருமைந்தன் தன்குலத்துக் குள்ளான் என்பதும் உணரான்
தருமம் தன் வழிச் செல்கை கடனென்று தன்மைந்தன்
மருமம் தன் தேராழி உற ஊர்ந்தான் மனுவேந்தன்
அருமந்த அரசாட்சி அரிதோ? மற்றெளிதோ தான்''

எனக் குறிப்பிடுகின்றார். கடனென்பது செய்தே ஆக வேண்டிய செயல். தர்மத்தைக் காப்பது வேந்தனின் கடன். இளவரசனின் உடலினுள்ளே எங்கோ அதர்மம் ஒளிந்திருக்கிறது. அதனால் தான் இச்செயல் செய்தான். எனவே அந்த அதர்மம் அழியும் வகையில் தேர்க்காலில் இட்டான் என்க. மர்மம் என்றால் வெறும் உயிருள்ள உடல் மட்டுமன்று. உடலுக்குள்ளே இருக்கும் அதர்மத்தைத் தேடி அழித்தான் என்க. ஈசனருளால் வீதிவிடங்கன் உயிர்பெற்றான். கன்றும் உயிர் பெற்றது. வீதிவிடங்கனைத் தேர்க்காலில் இடுக என்று மன்னன் ஆணையிட்டும், அதை நிறைவேற்ற மனமின்றி உயிர்துறந்த அமைச்சனும் உயிர்பெற்று எழுந்தான். எனவே அறம் தான் தமிழர் பண்பாட்டின் அடித்தளம். இந்தியப் பண்பாட்டின் ஆணிவேர். நமது பண்பாடு அறம் சார்ந்த பண்பாடு. அறநெறியைப் போற்றுவோம். அறப்பண்பாட்டை வளர்ப்போம்.

34. சாத்திரங்களின் தேவை

முனைவர் சுடலி தியாகராசன்
தமிழ்ப்பேராசிரியர் (ப.நி.)
சென்னை

முன்னுரை

சாத்திரம் என்றால் என்ன? திருமுறைகளுக்கும், சாத்திரங்களுக்கும் உள்ள வேறுபாடு. சாத்திரங்கள் தோன்றிய சூழ்நிலை. சாத்திரங்கள் தேவையா? இன்றைய நிலையில் செய்ய வேண்டியவை என்ற அமைப்பில் இக்கட்டுரை அமைகிறது. சைவம் என்றால் சிவநெறி, திருநெறி, செந்நெறி, அருள்நெறி, சிவசம்பந்தம், சிவனோடு தொடர்புடையது. சித்தாந்தம் என்பது பல கோணங்களில் ஆராய்ந்து தரும் முறையில் கண்ட முடிந்த முடிவு. சைவசித்தாந்த சாத்திரம் என்பது, சைவ சித்தாந்தக் கொள்கைகளை வரையறை செய்வது. இறைவனை அடையும் நெறி. இறைவனின் நிலை, இயல்பு, தன்மைகளைக் கூறி அவனை அடையும் வழிகளைக் கூறுவது.

''கற்பன கற்றுக் கலை மன்னும் மெய்யோகம்
முற்பத ஞானம் முறை முறை நண்ணியே
சொற்பதம் மேவி துரிசற்று மேலான
தற்பரம் கண்டுளோர் சைவ சித்தாந்தரே''
(திருமந்திரம் 1396)

''வேதாந்தம் சுத்தம் விளங்கிய சித்தாந்தம்
நாதாந்தம் கண்டார் நடுக்கற்ற காட்சியர்
பூதாந்த போதாந்தமாக புனம் செய்ய
நாதாந்த பூரணர் ஞானஞேயத்தரே''
(திருமந்திரம்-1397)

''வேதாந்த தெளிவாம் சைவ சித்தாந்தம்''
(சிவப்பிரகாசம்-7)

''சிவாகமங்கள் சித்தாந்த மாகும்'' (சித்தியார்)

265, 266, 267, 269 ஆகிய சித்தியார் பாடல்கள், நான்கு

வேதங்களும், காரணம், காமிகம் முதலிய சில ஆகமங்களும் சைவர்களுக்கு உரியவை என்கின்றன.

வேதங்களும், சிவ ஆகமங்களும் சிவனின் திருவடிகளின் கீழ் அடங்கும். வேதங்கள், ஆகமங்களை முதல் நூல்கள். இம்முதல் நூல்கள் சிவனால் அருளப்பட்டவை. வேதங்களையும், ஆகமங்களையும் அருளியமையால், சிவன் ஒருவன் மட்டுமே முற்றிவையும் முடிவில்லா ஆற்றலையும், பேரருளையும் உடையவர். வேதங்கள் பொது சிவாகமங்கள், அருஞ்சிறப்பு நூல்கள்.

தேவார காலத்துக்கு முற்பட்ட திருமூலர், காரைக்கால் அம்மை, கோச்செங்கட் சோழர், கண்ணப்பர், சண்டேசர் போன்றோர் பாடல்களில் சாத்திர கருத்துக்கள் விரவி வந்துள்ளன. களப்பிரர், சமண, பௌத்தர்களால் தமிழ்மொழி இடருற்றது. கி.பி. 575இல் அப்பரும், கி.பி. 638இல் சம்பந்தரும் தோன்றியதால் மறுமலர்ச்சி ஏற்பட்டது. மகேந்திர வர்ம பல்லவனும், கூன்பாண்டியனும் சைவ சமயத்துக்கு மாற்றப்பட்டனர்.

சைவ சித்தாந்த சாத்திர நூல்களையும் அவற்றின் பொருள் விளக்கங்களையும், சிவாகமங்களில் இருந்தே ஆசாரியர்கள் எடுத்துள்ளார்கள். ஆயினும் சைவ சித்தாந்தக் கொள்கை விளக்கங்களைத் திருமுறையிலிருந்தே பெற்றிருக்கிறார்கள். இதற்குச் சான்று சிவஞானமாபாடியம். இதில் சிவஞான முனிவர், சூத்திரங்களுக்குப் பொருள் விளக்கம் கூறும்பொழுது திருமுறைகளையே மேற்கோள் காட்டியுள்ளார். சைவ சமயத்தின் இலக்கிய கருவூலங்கள் திருமுறைகள் சைவ சித்தாந்த சாத்திரங்கள் அவற்றிற்கு இலக்கணங்கள். எனவே, சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து ஓத, சைவ சித்தாந்த சாத்திரங்களைக் கற்க வேண்டும். சான்றாக,

''அறிவானும் தானே அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்றான் தானே-அறிகின்ற
மெய்ப்பொருளும் தானே விரி சுடர்பார் ஆகாயம்
அப்பொருளும் தானே அவன்''

(அற்புத திருவந்தாதி-20)

இதற்கு இலக்கணமாகச் சிவஞான போத நூற்பா அமைந்துள்ளது.

''காணும் கண்ணுக்குக் காட்டும் உளம் போல்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன் கழல் செலுமே''
(சிவஞான பேதம்-11ஆம் நூற்பா)

''காண்பார் யார் கண்ணுதலாய்க் காட்டாக்காலே
அவனருளே கண்ணாகக் காணின் அல்லால்
இவனிறைவன் என்றெழுதிக் காட்டொணாதே''
(அப்பர்)

இதே போல், திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகத்தில் அம்மை, சிவன் ஆடும் இடம், முறை, பயன்பற்றிப் பாடுகிறார். அது உண்மை விளக்கத்தில் மனவாசகங்கடந்தார் பாடலில் பொருள் நயம் பொதிந்துள்ளது.

''மாயைதனை உதறி வல்வினையைச் சுட்டுமலம்
சாயஅமுக்கி அருள்தான் எடுத்து-நேயத்தே
ஆனந்த வாருதியில் ஆன்மா வைத்தான் அழுத்தல்
தான் எந்தையர் பரதம் தான்'' (உண்மை விளக்கம்-10)

ஆடலின் உட்பொருளை இச்சாத்திரம் விளக்குகிறது. சாத்திரங்கள் தோன்ற காரணமாக இருந்த சூழ்நிலை, 1. களப்பிரர், சமணர், புத்தர் போன்றோர் தமிழகத்துள் நுழைந்தது. 2.கி.பி. 8ஆம் நூற்றாண்டில் ஆழ்வார்கள் தமிழகத்தில் தோன்றியது. 3.பிறமதாச்சாரியர்கள் 8ஆம் நூற்றாண்டில் தோன்றியது (788இல் சங்கரர் 988இல் இராமானுசர், 1238 - 1318 மத்துவர்) இவர்கள் தனித்தனி மதம் நிறுவிக் குழப்பினர். உண்மையான சைவ சித்தாந்தம் என்ன என்ற குழப்பம் மக்களிடையே நிலவின.

4. சைவாச்சாரியர்கள் 11ஆம் நூற்றாண்டில் முதலாம் இராசேந்திரனால், கோதாவரிக் கரையில் இருந்த ஆமர்த்தகம், புட்பகரி, கோளாகி, இரணபத்திரம் என்ற சைவமடங்களில் இருந்து அழைத்துவரப்பட்டுக் காஞ்சி, சோழ மண்டலங்களில்

குடியேற்றப் பட்டனர். இவர்கள், பாடாணவாதம் வகம வாதம், சிவசங்கிராந்த வாதம், நிமித்த காரண பரிணாம வாதம் என அகச்சமயங்கள் பலவற்றை தோற்றுவித்தனர். தீக்கையே முத்திக்குக் காரணம். ஞானம் அங்கமே என்ற பொருந்தாக் கொள்கையை விதைத்தனர் மக்கள் குழம்பினர். 5. வடக்குத் தோன்றிய காசுமீர சைவம், பாசுபத சைவம், வீர சைவம் போன்றவைத் தமிழகத்துள் நுழைந்தன.

இத்தகு குழப்பமான சூழலில் கடவுளால் அனுப்பப்பட்ட மெய்கண்டார் என்ற குழந்தை வந்து சிவஞான போதம் தந்தது. இதற்கு முன், ஞானாமிர்தம், உந்தியார், திருக்களிற்றுப் படியார் இருந்தாலும், சிவஞான போதமே அப்படை நூலாக உள்ளது. பின் மடங்கள், சிவாச்சாரியர்கள் சாத்திரங்கள் பல எழுதினர். சைவ மடங்களின் பண்டாரங்களால் தோற்றுவிக்கப்பட்ட பண்டார சாத்திரங்கள் தோன்றின.

உமாபதிக்குப் பின், மஞ்சுச் செட்டியார் அருள் நமசிவாயர். சிற்றம்பல நாடிகள் கண்ணுடைய வள்ளல், தத்துவப் பிரகாசர், குருஞானசம்பந்தர், வெள்ளியம்பல தம்பிரான், சிவப்பிரகாசர், வள்ளலார், பாம்பன் சுவாமிகள் தோன்றிச் சாத்திரம் படைத்தனர். இன்று புதிய சாத்திர நூல்கள் தோன்றவில்லை உரைகள் சில தோன்றியுள்ளன. ஆனால் சாத்திர விளக்க வகுப்புகள் மடங்களாலும், சைவ மன்றங்களாலும் நடத்தப்பட்டுப் பரப்பப்படுகின்றன.

1. சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்ல.
2. தெளிவான, உண்மையான சித்தாந்தம் எது என்று விளக்க
3. அழியாமல் பாதுகாக்க
4. வருங்கால சந்ததி உணர சாத்திரங்கள் தேவை

35. அன்பே சிவம்

அருட்சகோ. முனைவர் இ.அல்போன்சாள்
பேராசிரியர், தமிழ்த்துறை
செ.அ.மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
பெரியகுளம்

முன்னுரை

அன்பே வேதம், அன்பே மதம், அன்பே சிவம், அன்பே கடவுள், அன்பே எல்லாம் அன்பே உயிர், அன்பே உலகு, அன்பே சிறந்தது அன்பினால் உலகை ஆளலாம். அன்பினால் உலகை வெல்லலாம். ஞானிகள் வானத்திலிருந்து கடவுளைக் காண முடியவில்லை மனிதர்களுக்குள்ளே தெய்வத்தைக் காண முயன்றார்கள். அன்பே இறைவன் அன்பை யாரும் தேக்கி வைக்கமுடியாது. அன்பில் இருந்தே எல்லாம் உருப்பெறுகின்றன. அன்பே அனைத்தையும் இயக்குகிறது. அன்பு மயமான இறைவன் தாயாக, தந்தையாக, நண்பனாக யார்யாருக்கு என்னென்ன உறவு வேண்டுமே அத்தன்மையுமாக விளங்குகிறான். இந்த அன்பால் இதயம் விரிவடையும். ஈர அன்பு பெருகி வளரும், வேறுபாடுகள் மறையும் ஒருமைப்பாடு தோன்றும்.

அன்பின் விளைவு

கவிஞர் கண்ணதாசன் தனது அர்த்தமுள்ள இந்துமதத்தில் தர்மம் என்ற வார்த்தையின் மூலம் கோயிலில் இருக்கும் தெய்வத்தை மனிதனுடைய இதயத்திற்குள் கொண்டு வர முயன்றார்கள் முன்னோர்கள்.

''அன்புள்ளவன் தெய்வம்
கருணையுள்ளவன் தெய்வம்
கற்புள்ளவன் தெய்வம்
பண்புள்ளவன் தெய்வம்''

மனித நிலையின் மேம்பாடுகளைத் தெய்வ நிலைகளாகக் குறித்தார்கள் என்று குறிப்பிடுகிறார். இயேசு பெருமான் நீங்கள்

தெய்வங்கள் என்று மனிதர்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும் தெய்வச் சாயலால் படைக்கப்பட்டவர்கள் என்றும் தெய்வ குணங்களோடு மனிதன் வாழ வேண்டும் என்றும் அப்படி வாழும் போது மனிதனின் அன்பு நெஞ்சம் இறைவன் குடியிருக்கும் இல்லம் ஆகிறது. அவ்வாறு குடியிருக்கையில் பகையேது? பொறாமையேது? வெறுப்பேது? மொத்தத்தில் தன்னலம் ஏது? உலகம் யாவும் ஒன்று. உயிர்கள் யாவும் ஒன்று என்று வாழும் வாழ்வில் மனிதனும் இறைவன் ஆகிறான்.

அன்பே வாழ்வு

வாழ்வில் கருணை உடையவரே கடவுளைக் காணமுடியும் என்பதை திருமூலர்,

''ஆர்வம் உடையவர் காண்பார் அரன்தன்னை
ஈரம் உடையவர் காண்பார் இணையடி''
(திருமந்திரம் 273)

என்ற திருமந்திரத்தின் வரிகள் வழி அறியமுடிகிறது. சக மனிதர்களுடன் கருணையோடு வாழும் போது அன்பு வாழ்வாகிறது. அன்பினால் இயங்குவது தான் மனிதவாழ்வு அன்பு இல்லாத இடத்தில் வாழ்வு என்பதே இல்லை. இதனையே இயேசு பெருமான் ''நான் உங்களிடம் அன்பு செலுத்தியது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள்'' அன்பு நல்லதைச் செய்யும் தீமை செய்யாது உயர்வானதையே உள்ளும். தந்தை என்மீது அன்பு செலுத்துகிறார். ஏனெனில் நான் என் உயிரைக் கொடுக்கின்றேன் என்ற விவிலியக் கருத்தின் வழி அன்புடையவர்கள் நல்லவர்களாக வாழ்வார் என்பதை உணர்ந்துக் கொள்ள முடிகிறது.

''செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே'' (திருப்பாடல் 9)

அன்பு ஆழம் அடையும் போது வீணான ஆசை எல்லாம் ஓய்ந்து உண்மையான அன்பு இயக்கம் ஏற்படுகிறது. உண்மையான அன்பு உள்ளத்தில் திருப்தியான அமைதியை ஏற்படுத்தும். இறை

அன்பில் ஆழ்ந்து தங்கு தடையின்றி உயிராற்றல் பெருக்கெடுத்து ஓடுவதே சிறந்த அன்பாகும். அன்பு நிறைந்த அகநோக்கில் எல்லாம் சங்கமம் ஆகின்றது. இந்த அனுபவமே இறை ஆனந்தப் பெருமகிழ்ச்சியாகும்.

அன்பின் செயல்பாடு

மெய்யன்பு உடையவரின் வாழ்வும் தன்னைக் கடந்து பிறர் நோக்கில் செல்வதால் தான் அன்பு இயங்குவதை நாம் அறிந்து கொள்கிறோம். இதனையே இராமலிங்க அடிகளார்,

> ''அப்பா நான் வேண்டுதல் கேட்டு
> அருள் புரிதல் வேண்டும்
> ஆருயிட்கட் கெல்லாம் நான் அன்பு
> செயல் வேண்டும்''

என்று தனது உள்ளத்தில் பொங்கிவந்த அன்பின் செயல்பாட்டினை வெளிப்படுத்தியுள்ளார். மேலும், அன்பெனும் அணுவுள் அமைந்த பேரொளியே அன்புருவாம் பரமசிவமே என்று இறைவனை அன்பின் உருவானவர் என்று இராமலிங்க அடிகள் பாடுகிறார். மாணிக்கவாசகர் தனக்கு எல்லாமே இறைவன் என்கிறார்.

> ''அன்றே என்றன் ஆவியும்
> உடலும் உடைமை எல்லாமும்
> குன்றே யானையாய் என்னையாட்
> கொண்ட போதே கொண்டிலையே''
>
> (திருவாசகம் குழைத்த பத்து 7)

தன் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதை விடச் சிறந்த அன்பு யாரிடமும் இல்லை என்று இயேசு பெருமான் கூறுவது அன்பின் சிகரம் எனக் கொள்ளலாம்.

தாயினும் சிறந்த அன்பு

தாயுமானவராய்த் தாயினும் சாலப் பரிவோடு அன்பைப் பொழிபவன் இறைவன் என்பதையும், அம்மா என்றால் அன்பு. அந்தத் தாயினும் தயாநிதியான அன்பே உருவான இறைவனை

அன்பால் பற்றிக் கொள்வதைப் பற்றி பாடுகிறார்.

''பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உவப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே''

(திருவாசகம் பிடித்த பத்து9)

திருவாசகப் பாடலின் வழி தெள்ளத் தெளிவாக அன்பின் சிறப்பினை விளக்கியுள்ளார்.

''அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்தவா ரமுதே'' (திருப்பாடல் 3)

என்ற பாடல் வழி அன்பினை அமுதத்திற்கும் ஒப்புமைப்படுத்தும் தன்மையினை அறியலாம்.

இறை மனித உறவே அன்பு

அன்பை அன்பினால் தான் அறிந்துத் தெளியமுடியும். காலம், இடம், பருமன் போன்ற அளவுகளை எல்லாம் கடந்தது. இறைவனின் பேரன்பு. இதய சுத்தம், முயற்சி இவை இல்லாமல் இறை மனித உறவாகிய அன்பை அடையமுடியாது.

''என்னன் புரக்கி இறைவனே ஏத்துமின்
முன்னன் புருக்கி முதல்வனே நாடுமின்
தேனொடு பால்திகழ் கொன்றை அணிசிவன்
தானொரு வண்ணம் என் அன்பில் நின்றானே''

உள்ளம் களவு கொண்ட காதலனைத் (இறைவனை) தேடிச் செல்லும் காதலி (உயிராற்றல், ஆன்மா) ஊன் உறக்கம் இல்லாமல் தன்னுடைய மனத்தை வேறு எங்கும் செலுத்தாமல் காதலனைப் பற்றிய அன்பில் ஆழ்ந்திருக்கின்றாள். பின் தன்னால் எப்படி எல்லாம் முடியுமோ, அப்படியெல்லாம் முயற்சி செய்கிறான். இதனையே அன்பு கடவுளிடமிருந்து வருகிறது.

அன்பு செய்பவன் என்னும் கடவுளிடமிருந்து பிறந்துள்ளான். அவனே கடவுளை அறிவான். அன்பு செய்யாதவனோ கடவுளை அறிவதில்லை ஏனெனில் அன்பே கடவுள் என்று புனித யோவான் கூறுகிறார். நீங்கள் ஒருவருக்கொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்றே இவைகளை உங்களுக்குக் கற்பிக்கிறேன்.

அன்பே சிவம்

அன்பு தான் சிவத்தை விளங்கும்படி செய்கிறது என்பதை எல்லாரும் உணர்ந்தபின் அன்பின் முதிர்வே சிவம் என்பதை அறியமுடிகிறது. அன்பு என்ற பண்பை காண முடியாது உணர முடியும். அதைப் போன்று, சிவத்தைக் காண முடியாது. உணரமுடியும் என்ற உண்மையும் உணரலாம்.

''அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே''
(திருமந்திரம் 27)

அன்பு என்ற பண்பைக் காணமுடியாது உணர முடியும். அதைப் போன்று சிவத்தைக் காணமுடியாது. உணர முடியும் என்ற உண்மையும் உணரலாம். திருவாசகத்தில்,

''அன்போ டுருகி அகங்குழை வார்க்கன்றி
என்போன் மணியினை யெய்தஒண் ணாதே''

என்று அன்பில் மனம் உருகி நெகிழ்வார் மட்டுமே இறைவனை அடையமுடியும் என்ற மாணிக்கவாசகர் கருத்துப்படி அறிந்து கொள்ள முடிகிறது. அன்பு கடவுளிடமிருந்து வருகிற அன்பு செய்பவன் எவனும் கடவுளிடமிருந்த பிறந்துள்ளான். அவனே கடவுளை அறிவான். அன்பு செய்யாதவனோ கடவுளை அறிவதில்லை ஏனெனில் அன்பே கடவுள் என்று புனித யோவான் கூறுகிறார்.

''அன்பினுள் ளாகி அமரும் அரும்பொருள்
அன்பினுள் ளார்க்கே அணைதுணை யாமே''

என்று அன்பின்வழி அணுகுவேர்க்கு அவன் துணையாக இருந்து உயிவிப்பான். திருமூலர்,

"உள்ளத் தொருவனை உள்ளுறு சோதியை
உள்ளம்விட் டோரடி நீங்கா ஒருவனை"

எல்லாருடைய இயத்தினுள்ளும் யாம் இருக்கின்றோம் என்று பகவத்கீதை எடுத்துரைக்கின்றது. இறைவன் மட்டுமல்ல, இறைவனது அரசே, இறைக்குலமே இதயத்தில் உள்ளது. நானும் தந்தையும் அங்குக் குடியிருப்போம் என்று காண விழைவதே இறைவனை உணர்த்தி, உள்ளொளி அளிக்க வல்லது. நம் அகத்தில் ஒளிரும் உள் ஒளியினைப் பரத்தில் நிலவும் பிரம்மத்தின் ஒளியோடு ஒன்றாக்க வேண்டும்.

அனபே பேரின்பம்

அருணகிரிநாதர் ஆன்றோர் போற்றிடும் பேரின்பத்தைப் பரமானந்த சாகரம் என்று குறிப்பிட்டு அன்பெனும் இன்பத்தின் அளவு பேரின்பத்துக்கு இட்டு செல்கிறது என்கிறார்.

"மெய்யன்பி னான்மெல்ல மெல்லவுள்ள
அரும்புந் துனிபிர மாநந்தந்" (கந்.அலங்6)
"உருகி நானுனைப் பருக வைத்தவா" (திருச்சதகம் 95)

உள்ளம் இறையன்பில் உருகி ஒன்றாகி பேரின்பம் அடைகிறது. சாந்தி நிலைக்குச் செல்கிறது. இயேசு பெருமான் என் அன்பில் நிலைத்திருங்கள் என் மகிழ்ச்சி உங்களுள் இருக்கவும் உங்கள் மகிழ்ச்சி நிறைவு பெறவுமே இவற்றை உங்களிடம் சொன்னேன் என்கிறார். அன்பில் நிறைந்த மகிழ்ச்சி, பேரின்பம், அமைதி நிறைந்துள்ளமை நோக்கத்தக்கது.

நிலைத்த அன்பு

அன்பைத் திருவாசகத்தில் மாணிக்கவாசகர் நிலையான, மேன்மையான, உயிரான, உணர்வான, ஒன்றாகக் காணுகிறார். அதனாலே அன்பே சிவம் ஆகும். அன்பு இறைவன் வடிமாகும் என்கிறார். அன்பு இயற்கையானது ·; அன்பு உணர்வுமயமானது ; காற்றை உயிர்கள் உணர்வது போல கருணை உள்ளத்துடன்

வாழ்ந்தால் அன்பின் தன்மையினை உணரலாம். திருவாசகத்தில் இறையன்பில் பிணைந்த மாணிக்கவாசகர் அன்பே சிவமாகும் என்பதனைத் தன் நிலையில்,

''இடையறா அன்பு உனக்கு என் ஊடகத்தே நின்றுருகத் தந்தருள்'' (திருச்சதகம் 11)

கண்ணப்பர் இறைவன் மேல் கொண்ட ஒப்பற்ற அன்பின் தன்மையினை,

''கண்ணப்பன் ஒப்பதோர் அன்பு இன்மை கண்டபின்''
(திருக்கோத்தும்பி 4)

என்று வெளிப்படுத்தியுள்ளதை அறியமுடிகின்றது.

நிறைவாக

இன்பமயமான அன்பு இறைவன் ஒருவரிடமே உள்ளது. நிறைவான, மனிதநேய ஒருமைப்பாட்டில் தூய அன்பில் இறைவன் வாழ்கின்றார். அதனால் தான் அன்பே இறைவன் அன்பே சிவம் என்கிறோம். அன்பு பிறரை ஈர்க்கிறது உண்மை அன்பு பிறருக்காகத் தன்னையே எதையும் எதிர்பாராமல் அளிக்கிறது. நல்லவையாகவே தனக்கும் பிறருக்கும் நடக்க வேண்டும். ஒருவருக்கொருவர் தன்னையே கொடுக்கும் அன்பில் நிறைகள் தவிர குறைகள் தெரிவதில்லை. இறையின்பின் நிறைவே பிறரன்பு. கருணை காட்டும் அன்பு. ஒன்றே குலம் ஒருவனே தேவன். இறைவன் நம் தந்தை. நாம் அவர் பிள்ளைகள் என்ற உணர்வு அன்பில் வாழ்வு பெறுகிறது. வாழ்வு வளர்ச்சி தருகிறது. வளர்ச்சி மகிழ்ச்சி தருகிறது. அன்பு உலகை ஆளுகையில் உலகில் போர், பகை, துயரம், அழுகை, வேற்றுமை இல்லை. இயேசு பெருமான் உலகின் பாவம் போக்க தன்னையே முழுமையாகச் சிலுவையில் அர்ப்பணித்த நிலையினில் அன்பின் தன்மையை அறியமுடிகிறது. அன்பில் வாழ்வோம், உலகை வளமாக்குவோம், அன்பே கடவுள் அன்பே சிவம்.

36. சங்க இலக்கியங்களில் காணலாகும் சைவநெறிக் கோட்பாடுகளும் - என்சி.இ.ஆர்.டி மதிப்புணர்வுகளும்



வி. வேல்முருகன்
முனைவர்பட்ட ஆய்வாளர்
கல்வியியல் துறை
பெரியார் பல்கலைக்கழகம்
சேலம்

முன்னுரை

கி.பி. ஆறாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை நிலவிய அரசியல் பின்னணி சைவ வளர்ச்சியில் பெரும் பங்காற்றியது. வடபெண்ணைக்கும், தென்பெண்ணைக்கும் இடைப்பகுதி தொண்டை நாடு. தென்பெண்ணைக்கும் வட வெள்ளாற்றுக்கும் இடைப்பகுதி நடுநாடு அல்லது திருமுனைப்பாடி நாடு, வடவெள்ளாற்றுக்கும் தென்வெள்ளாற்றுக்கும் இடைப்பகுதி சோழநாடு. இதன் தென்பகுதி பாண்டிநாடு. மேலைக் கடற்கரைப்பகுதி சேரநாடு, கோவை, சேலம் மாவட்டங்கள் கொங்குநாடு, சேர சோழ பாண்டிய களப்பிர, ம.ாளவ, சிங்கள, பல்லவ வேந்தர்கள் மேற்கண்டவற்றின் மன்னர்கள். பெரும்பாலும் தொண்டைநாட்டிலும், சிறுபான்மை சோழ, பாண்டிய நாடுகளிலும் சைவம் வளர்ந்தது. தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்குழுவானது கி.பி. 1979இல் கல்வியில் உள்ள சமூக, நன்னெறி மற்றும் இறையுணர்வு மதிப்புகளைக் குறித்த அறிக்கையினை வெளியிட்டது. இறையுணர்வு தொடர்பான இம்மதிப்புக்களைச் சங்க இலக்கியங்களில் உள்ள சைவ நெறிக் கோட்பாடுகளோடு இவற்றின் ஊடே ஒப்பிட்டு ஆராயப்பட்டுள்ளது.

சங்க இலக்கியம் (கலித்தொகை)
குறிஞ்சிக்கலி - 38 தோழிக்கூற்று
சிவபெருமான் இராவணனின் செருக்கை அடக்குதல்

NCERT குறிப்பிடும் இறையுணர்வு, பண்பாட்டுத் தொடர்புடைய மதிப்புணர்வுகள்.

நூற்பா

''இமையவியல் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்''
உமை அமர்ந்து உயர்மலை இருந்தனனாக

''இரு தலையின் அரக்கர் கோமான்
தொடிப்பொலி தடக்கையின் கீழ்புகுந்து
அம்மலை எடுக்கல் செல்லாது உழப்பவன் போல்''

(கபிலர்)

நூற்பா பொருள் விளக்கம்
(பண்பாட்டு வரலாறு)

இலங்கை வேந்தனாகிய இராவணன் ஒரு சமயம் தேரில் செல்லுங்கால் சிவனும் உமையும் அமர்ந்திருந்த இமயமலை குறுக்கிட்டதால், தன் இருபது கைகளையும் அம்மலையின் கீழே கொடுத்து அம்மலையை அசைத்தான். மலை குலுங்கியது கண்டு இராவணன் தன் முனைப்பை அகற்றுவான் பொருட்டுச் சிவபெருமான் தன்காற் பெருவிரலால் மலையை அழுத்தினார். இராவணனின் கைகள் மலையின் கீழ் அகப்பட்டு எடுக்க முடியாமல் துன்பம் பெற்றான். இச்செயல் வேங்கை மரத்தைக் குத்திய யானை தன் கொம்பைப் பிடுங்க இயலாது வருந்திய நிலைக்கு உள்ளானான். சிவபெருமான் இமயமலையினை வில்லாக வளைத்தார் என்றும் புராணச் செய்தியினைப் பாட்டின் தொடக்கத்தே இமயவில் வாங்கி ஈர்ஞ்சடை அந்தணன் என்று ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். மேலும் அந்தணன் என்பது சாதிப்பெயரென்று செந்தண்மை பூண்டு பொழுகுவார் அந்தணர் என்றழைக்கப் பெற்றார்.

இமயவில் வாங்கி என்பதற்கு நச்சினார்க்கினியர் இமயமலையிடத்துப் பிறந்த மூங்கிலை வில்லாக வளைத்து என்று பொருள் கூறுகின்றார். திருமணம் தொடர்பான செய்தியும் இப்பாடலுள் இடம்பெற்றுள்ளது. குறிஞ்சி நில மக்கள் வேங்கை மலரும் காலத்தைத் திருமணம் செய்யும் மரபினைக் கொண்டிருந்தனர். இச்செய்தி வேங்கை விரிவிடம் நோக்கி

என்பதனால் சுட்டப்பெற்றுள்ளது.

சங்க இலக்கியம் அகநானூறு மணிமிடைபவளம் - பாலை - 181 நூற்பா சிவபெருமான் எழுந்தருளும் குன்றினது சிறப்பு.

நூற்பா

"துன் அருங் கானமும் துணிதல் ஆற்றாய்
பின்நின்று பெயரச் சூந்தனை ஆயின்
என்நிலை உரைமோ என் நெஞ்சே ஒன்னார்
ஓம்புஅரண் கடந்த வீங்குபெருந் தானை
அடுபோர் மிசிலி செருவேல் கடைஇ" (பரணர்)

நூற்பா விளக்கம்

என் நெஞ்சிற்கு உரைப்பாய் என கூறுதல் பொருளார்வம் மேலிடத் தன் ஆருயிர் மனைவியைப் பிரிந்து கானகம்பல கடந்து சென்று கொண்டிருந்தான். ஒருவன் இடைவழியிலே அவனுடைய மனமானது தன் காதலியின் நினைவால் பெரிதும் பேதுற அவன் தன் நெஞ்சிற்கு இப்படிக் கூறுகின்றான்.

மிசிலி என்பவன் போர் செய்வதில் வல்லவன் பகைவர் பாதுகாக்கும் அரண்களை வென்று கடந்தவன். மிகப்பெரும் சேனைகளை உடையவன். அவனுடன் முருகனை ஒத்த வலிமையை உடைய ஆய் எயினன் என்பான் குருதியால் போர்க்களம் சிவக்குமாறு வேலினைச் செலுத்திப் போரிட்டு இறுதியில் தோற்றுக் களத்திலேயே வீழ்ந்துப்பட்டான். எயினன் பறவைகளின் பாதுகாவலன். ஆதலால் புதிய பறவைகளின் பெருங்கூட்டம் ஞாயிற்றின் ஒளி பொருந்திய கதிர்களின் வெப்பம் அவன் உடலில் படாது மறைப்பதற்காக வானத்தில் ஒன்றுகூடி வட்டமிட்டன.

மகரக்கொடியை உச்சியிற் கொண்ட வானைத் தீண்டும் மதிலையும உச்சியைக் காண முடியாதவாறு ஓங்கி உயர்ந்துள்ள மாடங்களையும் உடைய காவிரிபூம்பட்டினத்தை உடையது சோழநாடாகும். அந்நாட்டில் ஆலமுற்றம் என்னும் அழகிய இடம் புது வருவாயை உடைய ஊர்களைக் கொண்டது. சோழ

மன்னர்களால் பாதுகாக்கப்படும் சிறப்பினைக் கொண்டது. பூக்கள் விரிந்து அகன்ற துறையினை உடைய காவிரி என்னும் பெரிய ஆற்றில் அதி வேகத்துடன் ஆழ்ந்து ஓடுகின்ற நீரானது நுண்மணலைக் கொண்டு வந்து குவித்து மேடாக்கிய மணற்குவியல்களைக் கொண்டது. உலகம் யாவும் போற்றும் நல்ல புகழையுடைய நான்கு வேதங்களைக் கொண்ட பழம்பெரு நூலைத் தந்தருளிய மூன்று கண்களை உடைய சிவபெருமான் எழுந்தருளிய சிறப்பினைக் கொண்டது.

அவ்விடத்து அழகாகச் செய்யப்பெற்ற பொய்கை சூழ்ந்த சோலையில் அமைந்த வீட்டில் உள்ள பேதைப் பெண்களால் அழகுறப் புனையப்பட்ட விளையாட்டுப் பாவைகளை உடைய துறையின் கண் எயினனை வட்டமிட்ட பறவைகள் வந்து தங்கும். அத்தகைய சிறப்புகளைத் தன்னகத்தே கொண்ட சோழ நாட்டில்தான் விற்பவரது நறுமணப் பண்டங்களின் மணத்தினைப் பெற்ற வண்டுகள் மொய்க்கும் ஐந்து பகுதிகளாகப் பகுக்கப்பட்ட கூந்தலினையும் மூங்கில் போலத் திரண்ட அழகாகக் காண்பதற்கு இனிய மென்மையான தோளினையும் உடைய காண்பாரை வருந்தச் செய்யும் தலைவி தங்கியிருக்கும் மணங்கமழும் தெருக்களை மணலால் இயன்ற பெரிய குன்றம் அமைந்துள்ளது.

நூற்பா

''மண்மிசை அவிந்துழாய் மலர்தரு செல்வத்துப்
புன்மிசைக் கொடியோனும் புங்கவம் ஊர்வோனும்
மலர்மிசை முதல்வனும் மற்றவினடைத் தோன்றி
உலகிருள் அகற்றிய பதின்மரும் இருவரும்
மருந்துரை இருவரும் திருந்துநூல் எண்மரும்
ஆதிரை முதல்வனிற் கிளந்த'' -நல்லந்துவனார்

நூற்பா விளக்கம்

நிலந்தினடந்தே தோன்றி மலர்க்கின்றதான திருந்துழாய் மலரினையும், செந்தாமரை மலரானது தந்த செல்வத்துக்கு உரியவனான திருமகளையும் புட்களிற் சிறந்ததான கருடனுருவம் எழுதப்பெற்ற கொடியையும் உடையவன் திருமால் அவனும்,

இடப ஊர்தியை உடையவனாகிய சிவபிரானும், தாமரை மலர் மீது இருப்போனாகிய நான்முகனும் அவனிடத்திருந்தும் தோன்றி உலகத்தின் இருளைப் போக்கியவரான ஆதித்தர் பன்னிருவரும், தேவ மருத்துவர்கள் இருவரும் சிறந்த நூற்புலமை கொண்டோரரான வசுக்கள் எண்மருள் ஆதிரை முதல்வனாகிய சிவபிரானது பெயராலேயே சொல்லப்படுகின்றவரான பதினொரு உருத்திரனும் நல்ல திசைகளைக் காப்போராகிய இயந்திரன், நிருதி, இயமன், அக்கினி, வருணன், வாயு, குபேரன், ஈசானாகிய எண்மரும் மற்றுமுள தேவர்கள் யாவரும் இவரொழிந்த அமரரும் அவுணரும் ஆகிய பிறருமாகிய எல்லாரும் விரும்பத்தக்க வேதங்களைக் கற்ற சிறந்த தவமுதல்வர்களாகிய எழுவரும் நின்னைக் கண்டு போற்றும் பொருட்டு இத்திருப்பரங்குன்றத்திற்கு வருபவராகின்றார். ஆதலினாலே இப்பரங்குன்றமானது எம்பெருமானாகிய சிவபிரான் குடிகொண்டிருக்கும் இமயக்குன்றாகிய திருக் கயிலாயத்தையே ஒப்புடையதாக விளங்குவதாகும்.

நூற்பா

''நீடு நிலனுந் தீயும் வளியும்
மாக விசும்போ டைந்துட னியற்றிய
மழுவா ணெடியோன் றலைவ னாக
மாசற விளங்கிய யாக்கையர் சூழ்சுடர்
வாடாப் பூவின் இமையா நாட்டத்து''

-453 மாங்குடி மருதனார்

நூற்பா விளக்கம்

நிலம், நீர், தீ, காற்று, வான் என்னும் ஐம்பூதங்களும் கலந்து இயங்குகின்ற உலகினைப் படைத்தவனாகிய மழுவாயுதம் கொண்டிருக்கும் பிறப்பில்லாத கடவுளாகிய பெரியவனை முதலாகக் கொண்டு மனத்தானும் உடலாலும் தூய்மை உடையவர்களாய்த் தெய்வத் தன்மை மிக்கதும் ஒளி மிக்கதுமான வாடாத பூக்களையும் எப்போதும் இமைக்காத கண்களையும் யாகபாகமாகிய உணவினையும் உடைய திருமால் முருகன் முதலான தெய்வங்களுக்கும் பலி கொடுப்பதற்காக மாலை

வேளையில் நடத்திய விழாவிற்காக இசைக்கருவிகள் முழங்கவும் நடன மகளிரின் ஆடலும் பாடலும் சிவன் கோயில் விழாவின் காட்சிகளாய் அமைந்தன.

நூற்பா

''வெள்ளேறு
வலவயி னுயரிய மலர்புகழ் திணிதோள்
உமையமர்ந்து விளங்கும் இமையாமுக்கண்
மூவெயில் முருக்கிய முரண்மிகு செல்வனும்''

- 151 நக்கீரர்

நூற்பா விளக்கம்

வெண்ணிறமான காளையை வெற்றிக்கொடியாகத் தன் வலப் புறத்தில் கொண்டிருப்பவனும் பலராலும் புகழ்ந்து கூறப்படுகின்ற வலிமையான தோள்களை உடையவனும் இமைக்கும் குணம் இல்லாத மூன்று கண்களை உடையவனும் முப்புரத்தை எரித்தவனும் கோபம் மிகுந்தவனும் ஆகிய சிவனும் காட்சி அளிக்கின்றன.

முடிவுரை

இறைவன் மீது ஆர்வலர்களாகிய புலவர்களும், பக்தர்களும் உள்ளம் உருகப்பாடிய பாடல்களே சைவநெறி பக்திப் பாடல்கள் ஆயின. சொற்போர் நிகழ்ந்தன. சமய வாதங்கள் அரங்கேறின. தமிழ்ச் சங்கத்திலும் தமிழ் திருச்சபைகளிலும் சைவநெறி வாதங்களும், தர்க்கங்களும் செவிக்கு உணவாகப் பரிமாறப்பட்டன. அன்பே சிவம் அன்பே சைவம். உலகு இயங்க அன்பு தேவை. சைவநெறி உலக இயக்கத்திற்குத் தேவை. சைவ சமயத் தோத்திரங்களும், சாத்திரங்களும் அன்பு நெறியில் உலகுய்ய வழிகாட்டி நிற்கின்றன. நாட்டின் பொருளாதாரத்திற்கும் அரசியல், நீதி முதலிய துறைகளுக்கும் சைவக் கோயில்களே பெருநிலையங்களாய் விளங்கின. கோயில்களில் கல்வியும் ஏனை கலைகளும் ஒரு சேர வளர்ந்தன. தமிழ் இலக்கிய வரலாற்றுக்குத் தொடக்கம் தோற்றுவித்து நிற்கும் சங்க காலத்தே சிவனை வழிபடும் சமயமாக சைவம் நிலவியிருந்தது என்பதனைச் சங்க இலக்கியங்களால் உணரலாம்.

37. சிலப்பதிகாரத்தில் சைவநெறி

முனைவர் கி. சுதா
கௌரவ விரிவுரையாளர்
நா.க.இரா. அரசு மகளிர் கலைக்கல்லூரி
நாமக்கல்

முன்னுரை

முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரம் ஒரு சமயப் பொறையுடைய காப்பியம். இருப்பினும் முடியுடைய மூவேந்தராகக் கருதப்படும் சேர, சோழ, பாண்டியருள் சேரமன்னன் தமிழின் மீது கொண்ட அளவற்ற பற்றினைப் போன்றே சைவ சமயத்தின் மீதும் மிகுந்த ஈடுபாடு உடையவனாகக் காணப்பட்டான். அதை விளக்கும் முகமாக அமைந்த ஒரு சிறு முயற்சியே இக்கட்டுரை.

சிவனின் திருவடியைத் தலைமேல் தாங்கியவன்

ஓர் அதிகாலைப் பொழுது வேற்று நாட்டு மன்னர்கள் கப்பம் செலுத்தக் காத்திருந்த நேரம். ஆரிய படைக்கலங்களும், வீர மறவர்களும், சேனைத் தலைவர்களும் சூழ காலை முரசு முழங்கியது. ஒளிவீசும் பிறை நிலவைத் தன் சடை முடியிலே அணிந்து உலகத்தைக் காத்து நிற்கும் உயர்ந்தோனாகிய சிவனின் திருவடிகளை வணங்கி வேறுயாரையும் பணிந்து வணங்காத உள்ளம் கொண்டவனாக வலம் வந்தான் செங்குட்டுவன். அவ்வாறு வந்தவன் வெற்றி ஒன்றையே மனத்துள் கொண்டு அருந்தமிழை இகழ்ந்த ஆரிய அரசன் மேல் போர் தொடுத்து இமயம் வரை செல்லப் புறப்பட்டான். அப்போது அந்தணர் ஏந்திய வேள்வித்தீப் புகை தன் மார்பில் அணிந்த மாலையில் புகுந்து மணம் வீச, பட்டத்து யானைமேல் ஏறி அமர்ந்தான். மக்கள் பலரும் கூடிநின்று மேற்குத் திசையில் நாட்டரசனாகிய சேரன் செங்குட்டுவன் வெற்றிகள் பல பெறுக என்று வாழ்த்தினர். சிலர் அங்கு உள்ள ஆனந்த பத்மநாப சாமியின் கோயில் பிரசாதங்களைக் கொண்டு வந்து ஏந்தினர். அச்சமயம் கங்கையைத் தலையில் சூடிய சிவபெருமான் கோயில் பிரசாத்தை

வாங்கித் தோள்மேல் வைத்துக் கொண்டு சென்றான் என்று குறிப்பிடுவதன் வழி சேரன் செங்குட்டுவனின் சிவபக்தியை அறிய முடிகின்றது. இதனை விளக்குமுகமாக,

''நிலவுக்கதிர் முடித்த நீளிருஞ் சென்னி
உலகு பொதி யுருவத் துயர்ந்தோன் சேவடி
மறஞ்சேர் வஞ்சி மாலையொடு புனைந்து
இறைஞ்சாச் சென்னி யிறைஞ்சி வலங்கொண்டு
மறையோ ரேந்திர வாகுதி நறும் புகை
சேடங் கொண்டு சிலர்நின் றேத்தத்
தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள்
வண்ணச் சேவடி மணிமுடிக் கடவுள்
ஆங்காது வாங்கி யணிமணிப் புயத்துத்
தாங்கின னாகித் தகைமையிற் செல்வுழி''

என்ற அடிகள் வழி அறிய முடிகின்றது.

வேடதாரிகள்

அருந்தமிழை இழிவாகப் பேசிய ஆரிய மன்னன் செங்குட்டுவனின் கோபத்திற்கு ஆளாயினர். எனவே போர் மூண்டது. அப்போது வேலை கையில் ஏந்திய கனகனும், விசயனும், மகவும் விரைவாகத் தேரை ஓட்டும் வல்லமை பெற்ற வீரர்கள் ஐம்பதிரண்டு பேருடன் செங்குட்டுவனின் கோபத்தில் சிக்கினர். மன்னன் தோற்றுப் பிடிபட்டதும் வீரர் கூட்டங்கள் செய்வதறியாது தவிர்த்தனர். பிறகு செங்குட்டுவனின் சிவபக்தியை அறிந்து சிலர் சடைமுடிதரித்தும்; காவிஉடை அணிந்தும் உடல் முழுமையும் மெய்ப்பொருள் நாயனார் புராணம் போன்று நீறு பூசியும், முனிவர்கள் போன்றும், நடனம் ஆடுபவர்கள் போன்றும்; பாடகர்களாகவும், பக்கவாத்தியங்களைத் தோளில் சுமந்து கொண்டும் தமக்கு ஏற்றார் போன்று பல்வேறு வேடங்களைப் புனைந்து கொண்டனர். அவ்வாறு வேடம் பூண்டால் சேரமன்னன் தங்களை ஏதும் செய்யமாட்டார் என்றும் நம்பினர் என்பதை,

''வாய்வாள் ஆண்மையின் வண்தமிழ் என்பதை ;
காய்வேல் தடக்கைக் கனகனும் விசயனும்

ஆடும் கூத்தர் ஆகி எங்கணும்
ஏந்து வாள் ஏழியத் தாம் துறை போகிய
விச்சைக் கோலத்து வேண்டும் வாயில் படர்தர''
(225-230)

என்ற அடிகள் வழி அறியமுடிகின்றது.

இமயம் கொண்டான்

செங்குட்டுவன் வில்லவன் கோதை என்ற அமைச்சருடன் போரிட்டு பெற்ற வெற்றியுடன் பல வெற்றி வீரர்களையும் இமயம் நோக்கிப் புறப்படும் படி ஏவினான் பத்தினி தெய்வமாக வழங்கப்படும் கண்ணகிக்குச் சிலை வடிக்க கல்கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டு புறப்பட்டான். இருப்பினும் சிவன் மீது கொண்ட அளவற்ற பக்தித்திறம் மாறாதவனாய் வடதிசையில் வேதங்கள் ஓதிக் கொண்டு இருக்கும் அந்தணர்களின் சிவனுக்காக வார்க்கப்பட்ட ஓம குண்டத்தில் எரிகின்ற முத்தீ அணையாது பாதுகாத்தலையே சிறந்த குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டான் என்று கூறுவதன் மூலம் செங்குட்வனின் பக்தி நெறியை அறிய இயலும். இதனை விளக்கும் முகமாக,

''மறக்களம் முடிந்த வாய்வாள் குட்டுவன்
வடதிசை மருங்கின் மறைகாத்து ஓம்புநர்
தடவுத் தீ அவியாத் தண்பெரு வாழ்க்கை
காற்றூ தாளரைப் போற்றிக் காமின்''
(கால்கோள் காதை 247-250)

என்ற அடிகள் அமையந்துள்ளமை நோக்கத்தக்கது.

சாக்கையன் ஆடிய பெருங்கூத்து

பட்டத்து அரசியான இளங்கோ வேண்மா உடன் செங்குட்டுவன் ஒருங்கு வீற்றிருக்கும் போது பறையூரில் பிறந்த கூத்தச் சாக்கையன் என்பவன் வந்தான். அவன் சிவபெருமான் ஒருபுறமும், உமையம்மை ஒரு புறமும் இருக்கும் நிலையுடன் மன்னன் முன்பு தோன்றினான். சிவனின் திருவடியில்

காணப்படும் சிலம்பு சல்சல் என ஒலிக்கவும், அவரது கையில் வைத்திருந்த பறை, துடி என்ற ஓசை எழுப்பவும், அவரது சிவந்த கண்கள் ஆயிரம் குறிப்புகளை உணர்த்தவும்; தமது நீண்ட நெடிய செஞ்சுடையானது காற்றில் அங்கும் இங்கும் அலைந்து சுழலவும், உமாதேவியாரை தமது இடப்பக்கதில் பெற்றிருந்த சிவபெருமான் ஆடிய ஆட்டத்தில் சிறு துளி அளவு கூட அம்மையின் கால்களில் அணிந்து இருந்த பாடகம் அசையாது; தோள்வளை நடுங்காது; காதணி அசையாது; கூந்தல் அவிழாது காணப்பட்டார். அத்தனைய சிறப்பு மிகுந்த ஆட்டத்தைக் கொடுகொட்டி என்பார். அத்தகைய கூத்தைச் சாக்கையின் மன்னன் முன்பு ஆடிக்காட்ட செங்குட்டுவனோ இறைவனே நேரில் வந்து விட்டாரோ என்று எண்ணும்படி கண்டு மகிழ்ந்தான் என்பதை,

''திருநிலைச் சேவடிச் சிலம்புவாய் புலம்பவும்
பரிதரு செங்கையிற் படுபறை யார்ப்பவும்
வார்குழை யாடாது மணிக்குழல் அவிழாது
உமையவள் ஒரு திறனாக வோங்கிய
இமையவன் ஆடிய கொட்டிச் சேதம்
பாத்தரு நால்வகை மறையோர் பறையூர்க்
கூத்தச் சாக்கையின் ஆடலின் மகிழ்ந்து''

என்ற அடிகள் வழி உணர்த்தி நிற்கக் காணலாம்.

முடிவுரை

தேசியக் காப்பியம் என்ற சிறப்பிற்கு உரிய சிலப்பதிகாரம் சமயப் பொறை உடைய காப்பியமாகத் திகழ்ந்தாலும், சேரன் செங்குட்டுவனும் சிவன் மீது கொண்டு இருந்த பற்றினை விளக்கும் முகமாக இச்சிறு கட்டுரை அமைந்துள்ளமை தெளிவாகின்றது.

38. மாணிக்கவாசகரின் சிவப்பற்று

முனைவர் தே. இராசசீலி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
செயராசு அன்னபாக்கியம் மகளிர்
தன்னாட்சி கல்லூரி
பெரியகுளம்

முன்னுரை

திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார் என்னும் கருத்திற்கேற்ப மண்ணுலகில் மக்கள் இறை நம்பிக்கையில்லாமலும் பாவ புண்ணியம் கருதாமலும், நற்குணம், ஒழுக்கநெறி இல்லாமலும், செம்மையான வாழ்வியல் நெறி ஆகியவை இல்லாமலும் நாத்திகம் பேசி, மாயையாகிய மயக்கத்தில் வாழ்ந்து வந்தனர். அத்தகைய மக்களுக்கு இறை பற்றினை ஊட்டப் பிறந்தவர் தான் மாணிக்கவாசகர். இவர் திருவாசகம் மற்றும் திருக்கோவையார் என்னும் இருபெரும் நூல்களைத் தந்துள்ளார். இறைவனால் ஆட்கொள்ளப்பட்டு இறைத்தொண்டிலேயே தன்னுடைய வாழ்நாளைக் கழித்தார். அத்தகைய மாணிக்கவாசகருடைய சைவப் பற்றினைத் திருவாசகத்தின் வழியேக் காண்போம்.

மாணிக்கவாசகரின் குறிப்பு

பாண்டி வளநாட்டிலே அரிமர்த்தன பாண்டிய வேந்தனின் முதலமைச்சராகப் பணியாற்றினார். அரசனின் வேண்டுகோளுக்கு இணங்க வாதவூரார் குதிரை வாங்கச் சென்றார். அவ்வாறு சென்றபோது வழியில் சிவமுழக்கம் கேட்டு திருப்பெருந்துறையில் உள்ள திருக்குருந்த மரத்தடியை அடைந்தார். அங்கு சிவபெருமானால் ஆட்கொள்ளப்பட்டு, கொண்டு வந்த பணத்தைச் சிவத்தொண்டிற்கு முழுவதும் செலவிட்டார். இதனைக் கேள்விப்பட்ட பாண்டியன் மாணிக்கவாசகரிடம் பணத்தைத் தரும்படி கேட்டார். மாணிக்கவாசகர் இறைவனை வேண்டினார். இறைவனும் நரிகளைப் பரிகளாக மாற்றி அனுப்பினார். மறுநாள் பரிகள்

நரியாக மாறியதால் பாண்டியன் மாணிக்கவாசகரைத் தண்டித்தார். இதனால் இறைவன் வைகை ஆற்றில் வெள்ளம் பெருகச் செய்து, பிட்டுக்காக மண் சுமந்து திருவிளையாடல்களை நிகழ்த்தினார்.

சிவன் மீது கொண்ட பற்று

மாணிக்கவாசகர் சிவபெருமான் மீது அளவற்ற பக்தியைக் கொண்டிருந்தார். மனிதர், ஒருவர் மீது பற்று வைத்தால் அவரை விட்டு விலகிச் செல்லமாட்டார்கள். அதைப் போன்றே, மாணிக்கவாசகரும் சிவபெருமானை விட்டு வேறு எந்தக் கடவுளை நோக்கியும் செல்லவில்லை. அவர் சிவபெருமானுடைய அடிமையாகத் தன்னைக் கருதிக் கொண்டு அவருக்காகவே தன்னுடைய வாழ்வினைச் செலவழித்தார். தனக்கு மேலுலக வாழ்வைத் தந்தாலும் தன் குடியே கெட்டுப் போகும் என்றாலும் தான் சிவபெருமானை விட்டு விலகக்கூடாது என்ற வைராக்கியத்துடன் இருந்தார். இதனைத் திருவாசகத்தில் கூறுகிறார்.

''கொள்ளேன் புரந்தரன் மால்அயன் வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடி யாரொடல் லால்நீர கம்புகினும்
எள்ளேன் திருவடி ளாலே, இருக்கப்பெறின் இறைவா
உள்ளேன் பிறதெய்வம் உன்னையல் லாதெங்கள் உத்தமனே''

மேலும், அவர் சிவபெருமானை வழிபடுகின்ற இந்த உள்ளத்தினால் பிற தெய்வங்களை மனத்தால் நினைக்கமாட்டேன். மேலும், இறைவன் கட்டளையிட்டால் நரகத்தில் கூட வாழ்வேன் என்ற கொள்கையைக் கொண்டிருந்தார். அந்தளவு வைராக்கியத்தைக் கொண்டிருந்தார் மாணிக்கவாசகர்.

மாணிக்கவாசகரின் இறைவேண்டல்

மாணிக்கவாசகர் சைவத்தின் மீது அளவற்ற பாசத்தினைக் கொண்டிருந்தார். சிவனை விட்டுத் தன்னால்

இவ்வுலகில் வாழ முடியாது என்றும், சிவபெருமானை விட்டுப் பிரிந்தால் தன் உயிரை மாய்த்துக் கொள்ளும் அளவிற்கு இறைவன் மீது பாசம் வைத்திருந்தார். ஒரு செயல் நமக்குச் சாதகமாக நடைபெற வேண்டுமெனில் அவர்களிடம் கனிவாக நாம் பேசுவோம். அதைப் போன்றே மாணிக்கவாசகர் இறைவனிடம் தன்னை ஏற்று அருள்புரிந்து, தன்னுடைய அறியாமையை நீக்க வேண்டும் என்பதற்காக இறைவனிடம் மாணிக்கவாசகர் குழைந்து பேசி வேண்டுகிறார். இறைவனிடமே, கனிவாகப் பேசிச் செயலைச் சாதிக்கும் அளவிற்குப் பற்றினை மாணிக்கவாசகர் இறைவன் மீது கொண்டிருந்தார்.

''மானேர் நோக்கி மணவாளா
மன்னே நின்சீர் மறப்பித்தல்
ஊனே புகஎண் தனை நூக்கி
உழலப் பண்ணு வித்திட்டாய்
ஆனால் அடியேன் அறியாமை
அறிந்து நீயே அருள்செய்து''

நீக்கமறக் காணும் மாணிக்கவாசகர்

சிவப்பெருமானையே எங்கும் எதிலும் நீக்கமறக் காணும் மாணிக்கவாசகர் புற்றில் வாழும் பாம்பையும், மெய் போலப் பொய் கூறுபவர்கள். வேறு தெய்வங்களை வணங்குகின்ற மற்ற சமயத்தினர், ஆகியோரைக் கண்டுக் கூடத் தான் அஞ்சவில்லை. திருநீறு அணியாதவரைக் கண்டும், சிவப்பெருமானின் திருவடியை அடையாதோரினையும், சிவனை வழிபாடு செய்யாதோரையும் கண்டுதான் அஞ்சுவதாகக் கூறுகிறார். சிவன் அன்றி உலகில் எவரும் இல்லை என்று சிவன்மீது ஆழமான பற்றினைக் கொண்டிருந்தார். இதனையே பாடல் மூலம் தெளிவுபடுத்துகிறார்.

''புற்றில் வாழ் அரவம் அஞ்சேன்
பொய்யர் தம் மெய்யும் அஞ்சேன்
கற்றைவார் சடைஎம் எண்ணல்
கண்ணுதல் பாதம் நண்ணி

மற்றும் ஒரு தெய்வம் தன்னை
உண்டென நினைந்தெம் பெம்மாற்கு
அற்றிலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சும் ஆறே''

சிவனின் திருவடியினைப் புகழ்தல்

சிவனை அன்றி வேறு எந்த உயிர்த் துணையையும் அறிந்தது இல்லை. சிவனின் திருவடிகளிலேயே கசிந்துருக வேண்டும் என்று சிவனின் மீது அளவற்ற பக்தியைக் கொண்டிருந்தார்.

''உற்றரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனியமையும்
குற்றாலத்து அமர்ந்துறையும் கூத்தாஉன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே''

இப்பாடல் மூலம் சிவன் மீது கொண்ட பற்று புலப்படுகிறது.

திருவருள் நெறி

இறைவனின் திருவடிகளை அடைய வேண்டுமானால் தீயவழியே நல்லவழி என்று நினைத்துக் கீழான நெறிகளில் செல்லாமல் இறைவனுடைய திருவருள் நெறிகளிலேயே செல்ல வேண்டும். பெண் மயக்கம் மற்றும் பெண்கள் மீது பற்றுக் கொண்டு தவறான வழிகளில் செல்லுதல் கூடாது என்கிறார். நமசிவாய என்னும் நற்றமிழ் ஐந்தெழுத்து மந்திரத்தினை உச்சரித்துச் சிவபெருமானின் நினைவிலேயே வாழ்தல் வேண்டும் என்று மாணிக்கவாசகர் உபதேசிக்கிறார்.

''தையலார் மையலிலே தாழ்ந்துவிழக் கடவேனைப்
பையவே கொடுபோந்து பாசமெனும் தாழுருவி
உய்யும்நெறி காட்டுவித்திட் டோங்காரத் துட்பொருளை
ஐயன் எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே''

வாழ்நாளில் மாணிக்கவாசகர் சிவனின் திருவருள் அடைந்ததை

காணலாம்.

இறைவழிபாடு

சிவபெருமானையே தன்னுடைய தெய்வமாக ஏற்றுக் கொண்டு இறைவழிபாடு செய்தவர் மாணிக்கவாசகர். அவர் தனது வழிபாட்டில் பிற தெய்வங்களைச் சிந்தையாலும் எண்ணாது வாழ்ந்து வந்தார். இத்தகைய உறுதிப் பாட்டுடன் நின்ற மாணிக்கவாசகருக்குப் பல துன்பங்கள் வந்தன. அவர் அத்துன்பங்களை எல்லாம் பொருட்படுத்தாமல் இறைவன் மீதுள்ள அன்பினால் மாறுபடாமல் நின்றார்.

''மத்த மனத்தொரு மால்இவன் என்ன மனநினைவில்
ஒத்தன ஒத்தன சொல்லிட''

இவ்வாறு அவரைப் பித்தன், பேயன் என்று ஊரார் எள்ளி நகையாடிச் சிரித்தாலும் தான் கொண்ட இறையன்பில் உறுதியாக நின்று இறைவனின் திருவடிகளைப் பற்றிக் கொண்டார்.

முடிவுரை

பரம்பொருளாகவும், மும்மூர்த்திகளில் ஒருவராகவும், தீயவர்கள் அழித்தல் தொழிலைச் செய்கின்ற சிவபெருமானைத் தன்னுடைய மனத்தில் ஏற்று மாணிக்கவாசகர் சிவபெருமானைத் தவிர வேறு எந்தக் கடவுளையும் வழிபடுவதில்லை என்றும், பிற கடவுளை வழிபடும் அடியவர்களைக் கண்டு அஞ்சுவதாகவும் கூறியுள்ளார். சிவபெருமானால் ஆட்கொள்ளப்பட்டு அவருடைய அடிமையாக வாழ்ந்து சிவத்தொண்டிலேயே தன்னுடைய வாழ்நாளைக் கழித்தவர் மாணிக்கவாசகர். இதன் வழியாக மாணிக்கவாசகர் சிவன்மீது கொண்ட சிவப்பற்றினை அறிந்து அவரைப் போன்றே சிவன்மீது தளராத பக்திநெறியில் நாம் வாழ்தல் வேண்டும்.

39. கம்பராமாயணம் (வை.மு.கோ. உரை வழி) சிவபெருமானின் பெருமைகள்



முனைவர் செ. நாகசோதி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
வே.வ.வன்னியபெருமாள் பெண்கள் கல்லூரி
விருதுநகர்

முன்னுரை

கம்பராமாயணம் சைவ, வைணவ சமயத்தை இணைக்கும் பாலமாக அமைந்த காப்பியம் என்பர். இக்காப்பியத்தில் சைவ, வைணவக் கடவுள் பற்றிய புராணக் கதைகள் மிகுதியாக இடம்பெற்றுள்ளன. சைவ சமயம் மிகப்பழமையானது. அது பண்டுதொட்டே தமிழ் மக்களின் வாழ்வியலோடு இணைந்துவிட்ட அருட் சமயநெறி ஆகும். ரிக் வேதத்திலும் சிவம் என்னும் சொல் காணப்படுகிறது என்பார் அருணாசலம். ''ஆதிமுதல் பரம் ஆயபரம் சுடர்'' என்கிறார் மாணிக்கவாசகர். ஆதிமுதல்வன் எனச் சைவ சமயத்தாரால் போற்றப்படுகின்ற சிவபெருமானின் பெருமைகள் கம்பராமாயணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்நூலுக்கு விரிவான உரைவிளக்கம் தந்தவர் உரையாசிரியச் சக்கரவர்த்தி எனப் புகழப்படுகின்ற வை.மு. கோபால கிருட்டினமாச்சாரியார் ஆவார். இவரது உரை விளக்கத்தால் சிவபெருமானின் பெருமைகளை உணர்த்தும் கதைகளை நன்கு உணரமுடிகிறது. இக்கதைகளாவன.

1. சிவபெருமான் முப்புரம் எரித்த கதை
2. அகத்தியருக்குத் தமிழ் உணர்த்திய கதை
3. காலனைக் காலால் உதைத்த கதை
4. அனுமானுக்கு அழியா வரம் கொடுத்த கதை
5. சிவபெருமான் கைலையை நிலை நிறுத்திய கதை
6. சிவபெருமான் புலி, யானைத் தோலை உரித்த கதை
7. சிவபெருமான் விடமுண்ட கதை

ஆகியவையாகும். இக்கதைகளை வை.மு.கோவின் உரை மூலம் அறிய முற்படுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சிவபெருமான் முப்புரம் எரித்த கதை

தாரகன் என்னும் அரக்கனின் மக்களான தாரகாட்சன், கமலாக்கன், விந்துன்மாலினி ஆகிய மூவரும் செருக்கால் தேவர்களுக்குக் கொடிய தீங்கிழைந்தனர். அசுரர்களின் கொடுமை தாங்காத தேவர்கள் சிவனை நாடிச் சென்றனர். அசுரர்களை அழித்திடுமாறு தேவர்கள் வேண்டியதற்கு உடன்பட்டார் சிவபெருமான். மூன்று கோட்டைகளாக நின்ற அசுரர்களை சிவபெருமான் அழித்தார் என்பது புராணச் செய்தியாகும். இதனை, அயோத்தியா கண்டம் திருவடி சூட்டுப்படலத்தில் கம்பர்.

''புரஞ்சுடு மொருவனிந் பொலிவென் யானென்றான்''
(அ.கா.பா.1124)

என்கிறார். இவ்வரியில் அமைந்துள்ள கதையினை உணர்ந்த வை.மு.கோ. தாராகாகரனது புத்திரர்களாகிய வித்யுந்மாலின், தாரகாட்சன், கமலாட்சன் என்ற அசுரர்கள் மூவரும் அரும்பெரும் தவம் செய்து பெருவரங்கள் பெற்று மயனென்பவனால் சுவர்க்கம் மத்திமம் பாதாளம் என்ற மூவுலகங்களிலும் முறையே பசும்பொன் வெண்பொன் கரும்பொன் என்ற இவற்றால் அரண்வகுக்கப்பட்டு ஆகாய மார்க்கத்தில் சஞ்சரிக்குந் தன்மையுடைய மூன்று பட்டணங்களைப் பெற்று மற்றும் பல அசுரர்களோடும் அந்நகரங்களுடனே நினைத்தவிடங்களிற் பறந்து சென்று பாழாக்கி வருகையில், அவ்வுபத்திரவத்தைப் பொறுக்கமாட்டாத தேவர் முனிவர் முதலியோரது வேண்டுகோளினால் சிவபெருமான் பூமியைத் தேராகவும் சந்திர சூரியர்களைத் தேர்ச்சக்கரங்களாகவும், நான்கு வேதங்களைக் குதிரைகளாகவும், பிரமனைச் சாரதியாகவும், பொன்மயமான மகாமேருவை வில்லாகவும், ஆதிசேஷனை நாணாகவும், விட்ணுவை வாயுவாகிய சிறகு அமைந்து பிறபோர் கருவிகளாகவும் அமைத்துக் கொண்டு யுத்த சன்னத்தனாகிச் சென்று போர் செய்கையில் தேவர்கள் இறுமாப்புக் கொள்ள, அதனையுணர்ந்த சிவபெருமான் சினந்து புன்னகை செய்து அசுரர்களைப் பட்டணங்களோடு எரித்திட்டனர் என்கிறார். இதன் மூலம் முப்பெரும் அசுரர்கள் தேவர்களுக்கு நிகழ்த்திய

கொடுமைகளை முறியடிக்க சிவபெருமான் அசுரர்களை அழித்த கதையினை தெளிவாக உணரமுடிகின்றது.

அகத்தியருக்குத் தமிழ் உணர்த்திய கதை

சிவபெருமான் அகத்தியருக்குத் தமிழை உண்த்திய சிறப்பைக் கம்பர் ஆரணிய காண்டத்தில், ''தழற்புரை சுடர்க்கடவுள் தந்ததமிழ் தந்தான்'' (ஆ.கா.பா.158) என்கிறார். இவ்வடியில் உள்ள கதையினை உணர்ந்த வை.மு.கோ பூர்வத்தில் பெருமுனிவர்களெல்லாம் சேர்ந்து சமசுகிருத பாசையை அபிவிருத்தி செய்து காசியில் வடமொழிச் சங்கமொன்று ஏற்படுத்த, அச்சங்கப் புலவருள் ஒருவராகிய அகத்தியன், மற்றைப் புலவர்களோடு பலகாலும் தருக்கஞ்செய்து கொண்டு வந்து ஒரு நாள் அவர்களோடு மாறுகொண்டு, அவர்களிறுமாப்பை அடக்கும் பொருட்டுச் சிவபெருமானிடஞ் சென்று தன் கருத்தை வெளியிட்டுச் சற்றுநேரம் பேசிக் கொண்டிருக்கையில், தான் நின்ற மண்டப முழுவதுந்திவ்விய பரிமளமொன்று வீச, பரமசிவன் அவனை அம்மண்டபத்தில் ஓர் மூலைக்கு அழைத்துக் கொண்டு போய், குவியலாய்ப் போட்டிருந்த சில ஏட்டுப்பிரதிகளைக் காட்டவே அவற்றை கண்ட மாத்திரத்தில் மதுரமொன்று அர்த்தங்கொள்ளும் தமிழ் என்னும் இன்பமான பெயரைச் சொல்ல உடனே பரமசிவன் அப்பாதைக்கு ஆதாரவிதிகள் இவ்வேட்டுப் பிரதிகளிலுள்ளவென்று எடுத்துக் கொடுத்து உபதேசிக்க, அக்கணமே தட்சிணத்திலுள்ள பொதிய மலைக்குப் போய்த் தனிவாசஞ் செய்து அவ்விதிகளைக் கொண்டு, பேரகத்தியம், சிற்றகத்தியமென்னும் இலக்கண நூல்களை இயற்றி, அவற்றைத் தம் மாணாக்கராக்கிய தொல்காப்பியன் முதலிய பன்னிருவர்க்குங் கற்பித்தருளித் தமிழ்ப் பாசையைத் தழைத்தோங்கச் செய்தானென்பது என்கிறார். இதன்மூலம் தமிழ்ப் பெரங்கடவுள் சிவபெருமான் என்னும் பெருமையினை வை.மு.கோ. புலப்படுத்துகிறார்.

காலனைக் காலாலுதைத்த கதை

சிவபெருமான் மார்க்கண்டேயனுக்கு அருள் தந்த சிறப்பினைக் கம்பர் கறுக்கும் வெஞ்சினக் காலன் தன் காலமுங் காலால் என்கிறார். இத்தொடருக்கு உரை தந்த வை.மு.கோ. மிருகண்டு முனிவன் மருத்துவதியென்பாளை மணந்து கொண்டு சில காலங் கழித்த பின்பு பிள்ளையில்லாத குறையாற் காசியையடைந்து சிவபெருமானைக் குறித்துத் தவஞ்செய்ய அம்முனிவருக்குப் பரமசிவன் பிரதியட்சமாகி வடிவினாலும் குணங்களினாலும் சிறந்தவனாய்ப் பதினாறு பிராயமேயுடைய ஒரு புதல்வனை அநுக்கிரகிக்க அங்ஙனமே பிறந்த குமாரன் பிரமதேவனால் மார்க்கண்டேயனென நாமகரணம் செய்விக்கப் பெற்றுச் சகல சாத்திரங்களையும் இளமையிலேயே உணர்ந்து பின்பு தனது அற்பாயுளைக் குறித்து வருந்துகின்ற தாய் தந்தையரது துயரத்தைப் போக்குமாறு சிவபிரானை நோக்கி அரும்பெருந்தவம் புரிந்து அப்பரமசிவனால் அபயமளித்துத் தனது முடியிலே திருவடிகள் வைக்கப்பெற்று இனிது வாழ்ந்திருக்கையில், பதினாறு பிராயம் கழித்து அந்திம காலம் வரவே, யமன் சமீபத்துக் காலபாசத்தால் வெளிப்பட்டு அவ்யமன் உயிர் நீங்குமாறு காலாலுதைத்துத் தள்ளி, தான் அபயப் பிரதானஞ் செய்திருந்த ருசிகுமாரனுக்கு என்றும் பதினாறாக நீடுழி வாழுமாறு அருள் புரிந்தான் என்பதாம் என உரை தந்துள்ளார். இதன் மூலம் சிவபெருமான் தன்னை வழிபடும் பக்தர்களுக்கு வினை தீர்ப்பான் என்பதை அறியமுடிகிறது.

சிவபெருமான் கைலையை நிலைநிறுத்திய கதை

இராவணன் செருக்குணர்வோடு தன் இருபது கைகளைக் கொண்டு கைலாய மலையைப் பெயர்க்கக் கருதி அசைத்தான். இதனால் பார்வதி தேவி அஞ்சி நடுங்கினாள். இராவணன் கைலாய மலையைப் பெயர்த்துவிடாமல் இருக்கப் பரமசிவன் தன் கால் பெருவிரலால் அழுத்தினார் என்பது புராணச் செய்தியாகும். இதனைக் கம்பர் சுந்தரகாண்டத்தில்,

"அயிலெயிற் றரக்க னள்ளத் திரிந்தநா ளணங்கு புல்லக்

கயிலையி னிருந்த தேவைத் தனித்தனிக் கடுத்தல் செய்தார்''

(சு.கா.ப.12)

என்கிறார். இவ்வடிகளில் சிவபெருமானன்றி ஓர் அணுவும் அசையாது என்னும் சிறப்பைக் கம்பர் புலப்படுத்தியுள்ளார் என அறியமுடிகிறது.

சிவபெருமான் புலி, யானைத் தோலை உரித்த கதை

சிவபெருமான் புலி, யானைத் தோலை உரித்த கதையினை உணர்த்தக் கருதிய கம்பர்,

''கண்டத் திடைக்கறை யுடைக்கடவுள் கைம்மா''

என்கிறார். இவ்வடியில் அமைந்துள்ள புராணச் செய்தியைப் பற்றி வை.மு.கோ ஒரு காலத்தில் பரமசிவன் தவச் செருக்கினால் தன்னை மதியாத தாருகாவனத்து முனிவர்களது கருவத்தைப் பங்கச் செய்யவும் அவர்கள் மனைவிமார்களின் கற்பு நிலையைப் பரிசோதிக்கவும் கருதித் தான் ஒரு விடவடிவங் கொண்டு அவரில்லந்தோறும் சென்று பிட்சாடணஞ் செய்து தன்னை நோக்கிக் காதல் கொண்ட அம்முனி பத்தினியரது கற்பு நிலையைக் கெடச் செய்ய, அதுகண்டு பெறாமற் கோபம் மூண்ட அம்முனிவர்கள் அபசார ஓமமொன்று செய்து, மந்திர பலத்தால் அவ்வேள்வித் தீயினின்று எழுந்த நாகங்கள், பூதங்கள், மான், புலி, யானை, முயல்கள், வெண்டலை முதலியவற்றையும் இவ்வோமத் தீயையும் சிவனைக் கொன்று வரும்படி ஏவ சிவபெருமான், தன்மேற் சீறிவந்த நாகங்களை ஆபரணங்களாகவும், பூதங்களைத் தனது கணங்களாகவும் கொண்டு, மானை இடக்கையில் ஏந்தி புலித்தோலையுரித்து, யானைத்தோலையுரித்துப் போர்த்து, முயல்களை முதுகிற் காலாலூன்றி வெண்தலையைக் கையிற் பற்றிச் சடைமேலணிந்து, நெருப்பை ஒரு கையிலேந்தி இங்ஙனமே அவற்றையெல்லாம் வலியடக்கிப் பயனிலவாகச் செய்துவிட்டனன் என்கிறார்.

சிவபெருமான் விடமுண்ட கதை

தேவர்களுக்காகப் பாற்கடலைக் கடைந்த போது தோன்றிய விடத்தைச் சிவபெருமான் உட்கொண்ட கதையினைக் கம்பர்,

"வெவ்விடத் தினைமறுகு தேவர் தானவர்வெருவல்
தவ்விடத்தனியொரு தாழ்சடைக் கடவுளென
இவ்விடத் தினிதிருமி னஞ்சலென் றிடையுதவி"

என்கிறார். இதில் அமைந்துள்ள கதையினை வை.மு.கோ. கடலிற்புக் கொளித்த தேவர்களின் செல்வத்தை மீளவும் பெறுதற் பொருட்டுத் திருப்பாற்கடலைத் தேவாசுரர்கள் கடைந்த சமயத்தில் அதனின்று யாவரும் அஞ்சி நடுங்கி இரியும்படி எழுந்ததொரு ஆலகாலமென்ற கொடுவிசத்தைப் பரமசிவன் உட்கொண்டு கண்டத்திலடக்கிக் காத்தனன் என்க என்கிறார். இக்கதை மூலம் தேவர்களுக்காக விடத்தை அருந்துவதற்குத் துணிந்தவர் சிவபெருமான் என்பதை உணரமுடிகிறது.

தொகுப்புரை

கம்பராமாயணக் காப்பியத்தின் மூலம் சைவ சமயக் கடவுளாகிய சிவபெருமான் தேவர்களுக்கும் மானிடர்களுக்கும் அருள் பாலித்த கதையினை அறியமுடிகிறது. இக்காப்பியத்திற்கு உரை தந்த வை.மு.கோபால கிருட்டினமாச்சாரியார் வைணவப் பரம்பரையைச் சார்ந்தவர். எனினும் சிவபெருமானின் பெருமைகளை வெளிப்படுத்தும் புராணக் கதைகளை நன்கு உணர்ந்து உரை தந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவரது உரையால் சிவபெருமானின் பெருமைகளை நன்கு உணர முடிந்தது.

40. பெரியபுராணம் உணர்த்தும் சைவநெறிக் கூறுகள்



முனைவர் ப. முருகன்
தமிழ் உதவிப் பேராசிரியர்
ஞானம்பிகை மகளிர் கலைக்கல்லூரி
மயிலாடுதுறை

முன்னுரை

"உலகெலாம் உயர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவு ளாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்த வணங்குவாம்"

உலக மொழிகளிலே தமிழ்மொழியில் தான் பக்தி இலக்கியங்கள் அதிகம் உள்ளன. இவை அனைத்தும் அறநெறிக்கோட்பாடுகளையும் அன்பின் வழி வழிபாட்டு நெறிகளையும் சிறப்பாகப் போதிக்கின்றன. பெரியபுராணம் உண்மை நிகழ்வுகளின் பதிவாகவும், வரலாற்று சிறப்புணர்த்தும் நூலாகவும் உள்ளது. இந்நூலில் நாயன்மார்களின் பக்திச் சுவையையும் சைவநெறிக் கூறுகளையும் தெளிவாகக் காணலாம். நாயன்மார் சிவத்தொண்டையே தங்களது வாழ்க்கையின் நெறியாகக் கொண்டும், இறையருள் பெறுவதையே குறிக்கோளாகக் கருதியும் சரியை போன்ற நால்வகை நெறியில் வாழ்ந்து வந்ததைச் சிவனடியார்களின் ஒழுகலாறுகளால் காணலாம்.

பெரியபுராணம் அமைப்பும் சிறப்பும்

சுந்தரர் அருளிய திருத்தொண்டத் தொகையையும், நம்பியாண்டார் அருளிய திருத்தொண்டர் திருவந்தாதியையும் முதல் நூலாகக் கொண்டு இயற்றப் பெற்றதால் சேக்கிழார் அருளிய பெரியபுராணம் வழி நூலாகும். தனியடியார்கள் அறுபத்து மூவரும் தொகையடியார்கள் ஒன்பதின்மரும் ஆகிய எழுபத்திருவர் அருள் வரலாற்றைக் கூறுவது பெரியபுராணம்

ஆகும். இந்நூல் பன்னிரெண்டாம் திருமுறையாகும். உலகெலாம் என இறைவனே அடி எடுத்துக் கொடுக்க இந்நூலைப் பாடிய சேக்கிழார் இறுதிப்பாடலாக உலகெலாம் எனப் பாடி முடித்தார். இந்நூலில் நாட்டுவளம், நகரவளம், இயற்கை வருணனையோடு நாயன்மார் அருள்சிறப்பையும் அழகுறப் பாடியருளினார். இந்நூலில் சிவ வேதியரை ஆதி சைவரென்றும், திருமறையோரை அந்தணர் என்றும் பகுத்துக் காட்டியுள்ளார். இருப்பினும் சாதி, சமய பேதமற்ற அருள்நூலாகவும் விளங்குகின்றது. வேந்தர், மன்னர், வணிகர், வேளாளர், இடையர், குயவர், பாணர், பரதவர், வேடர், சான்றார், சாலியர், செக்கார், ஏகாலியர், புலையர் என்ற பல்வேறு மரபினரும் சிவனை வணங்கியும், அடியார் தொண்டு புரிந்தும் முக்தி நெறிப் பெற்றுள்ளனர். மேலும், ஆசான் அருளால் அடிசார்ந்தோர், சிவலிங்கத்தால் அடிசார்ந்தோர், அடியார் அருளால் அடிசார்ந்தோர் என்ற சைவநெறிக் கூறுகளை அறியலாம்.

திருத்தொண்டர் சிறப்பு

திருத்தொண்டர் புராணமாகிய அடியார்களின் சிறப்புணர்ந்த ஔவையார்,

"இறைவனோ தொண்டர் உள்ளத்து ஒடுக்கம்
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே"

என போற்றிப் பாடியுள்ளார். இறைச்சிந்தனையையே முன்னிருத்திய அடியார்கள் வழிபாட்டு நெறியைப் பின்பற்றியதை உவமை நயம்படக் கூறியதை அறியலாம்.

"பக்தியின் பாலராகிப் பரமனுக்கு ஆளாம் அன்பர்
தத்தழிற் கூடினார்கள் தலையினால் வணங்குமாபோல்
மொய்த்தநீள் பக்தியின் பால் முதிர்தலை வணங்கி மற்றை
வித்தகர் தன்மைபோல விளைந்தன சாலி யெல்லாம்"

வயலில் முற்றிய கதிர்கள் தலைசாய்த்து இருக்கும் காட்சியானது, அன்பின் வசப்பட்ட அடியார்கள் ஒன்றாகக் கூடும்போது ஒருவருக்கு ஒருவர் தலைதாழ்த்தி வணங்குவதைப் போல

வணங்கினர் என்பதை உவமை மூலம் பாடியருளினார். மேலும், சிவனடியார்களுக்குச் சிவமே பரம்பொருள். சிவபோகம் விளைப்பதைப் போலவே நெல் முதிர்ந்து போகம் விளைந்தது என்றும் அதனையும் சிவனடியார்களோடு ஒப்புவமைப்படுத்தினார் சேக்கிழார்.

நால்வகை நெறி

பெரியபுராணத்துள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நால்வகை நெறியில் நின்றோர் சிறப்பும், அந்நெறியில் நின்று வழிபட்டு இறையருள் பெற்றோர் தன்மையையும் சேக்கிழார் சிறப்புறப் பாடியருளினார். இதனால் நாயன்மார்களுக்குத் திருவருளும் குருவருளும் கிடைக்கப்பெற்றன.

சரியை நெறி

புறத்தொழில் அளவில் இறைவனது உருவத் திருமேனியை நோக்கிச் செய்வன பலவும் சரியை நெறியாகும். திருக்கோயிலில் சென்று இலிங்கமூர்த்தி முதலிய அனைத்து மூர்த்திகளையும் அகல நின்று வழிபடுதலும், நந்தவனம் வைத்தல், பூக்கொய்து கொடுத்தல், திருவலகிடுதல், உழவாரப்பணி செய்தல், நித்திய வழிபாடுகளுக்கு உதவுதல், குடம், கலசம், தூப தீபக்கால் அளித்தல், சிவபுராணங்களையும், அடியார் வரலாறுகளையும் கேட்டல், தீர்த்தயாத்திரை, தலயாத்திரை செல்லல் முதலியனயாவும் சரியை நெறியின் பால் நிற்றலாகும்.

தேவாரத்துள் நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே எனத் தொடங்கும் திருத்தாண்டகம் சரியை நெறியை நன்கு விளக்குகின்றது. இது தாசமார்க்கம் எனப்படும். இந்நெறியில் நின்றவர் திருநாவுக்கரசர். இவர் பெறும் பேறு சாலோகம் ஆகும். சாலோகம் என்பது சிவலோகத்தில் போயிருப்பதாகும். இதுவே தொண்டு நெறியாகும்.

கிரியை நெறி

சிவபெருமானது அருவுருவத் திருமேனியாகிய இலிங்க மூர்த்தத்தை அணுகியிருந்து மந்திரம், கிரியை, பாவனை என்ற மூன்றினாலும் அகத்திலும் புறத்திலும் பல வகை உபசார நெறிகளையும் கொண்டு வழிபடுதல். திருமுழுக்கு, ஆடை அணிகலன்கள், சந்தனம், மலர்கள் முதலியவற்றால் செய்யும் ஒப்பனை, படையல், புகை, ஒளி, குடை, கண்ணாடி, கவரி முலிய மங்கலப் பொருள்களை ஏற்பித்து வலம் வருதல். திருமுறையால் புகழ்ந்து பாடுதல் என்ற அணுக்கத் தொண்டே கிரியை நெறியாகும். இந்நெறியைச் சற்புத்திர மார்க்கம் என்றும் மகன்மை நெறி என்றும் கூறுவர். இந்நெறி நின்றவர் திருஞானசம்பந்தர். இந்நெறி நின்றவர் பெறும் பேறு சாமீபமாகும். சாமீபம் என்பது பரமசிவனுக்கு அண்மையிலேயே இருப்பதாம்.

யோக நெறி

யோகம் என்றால் கூடுதல் அல்லது சேருதல், ஒன்றுதல் எனப்படும். ஆன்மா இறைவனோடு ஒன்றுதலாகும். அறிவால் அல்லது உடலால் ஒன்றுதல் அன்று. மனம் முதலிய அந்தக்கரணங்கள் கண், காது, கால் முதலிய புறக்காரணிகள் போல ஆன்மாவிற்குத் தூரமாகாது ஒன்றியிருந்து இறைவனைக் கூடுதலும் யோகம் என்பர். இயமம், நியமம், ஆசனம், பிரணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்ற எட்டு நிலையில் படிப்படியாக யோகமுறையில் நின்று நெஞ்சு புருவ நடுவில் இறைவன் திருவுருவத்தை இருத்தி அதில் ஒரே நிலையில் மனத்தை நிற்கச் செய்து வழிபடுவதாகும். இதனைச் சகமார்க்கம் என்றும் தோழமை நெறி என்றும் கூறுவர். ஐந்நெறி நின்றவர் சுந்தரர், இந்நெறியில் நின்றவர் பெறும் பேறு சாரூபம் ஆகும். தேவலோகத்தில் ஒத்த உருவும் பெயரும் உடையவராய்த் தோழர் போல கொண்டிருக்கும் நிலையாகும்.

ஞானநெறி

ஞான குருவின் உபதேசத்தைக் கேட்டலும் பின் அதனைச் சிந்தித்தலும் பின் உபதேசப் பொருளைத் தெளிதலும்,

தெளிந்தவண்ணம் நிட்டையில் அழுந்துதலும் ஞானம் எனப்படும். யோகநெறியின் முயற்சியால் ஞானிகளின் எண்ணமானது எப்போதும் கடவுளிடத்தே நிலைத்து நிற்கப் பெறுவதாகும். உலகத்துப் பொருள்களில் அவர்களின் எண்ணம் செல்லாது. ஞானிகள் கடவுள் அருளால் மாந்தர்க்கு மெய்ப்பொருள் உணர்த்துதல், ஞானநூல் எழுதுதல் செய்வர். இதனைச் சன்மார்க்கம் என்றும் நன்னெறி என்றும் கூறுவர். இந்நெறி நின்றவர் திருமூலர், மாணிக்கவாசகர் ஆவார். இந்நெறி நின்றவர் பெறும் பேறும் சாயுச்சியம் ஆகும். ஞானத்தின் பயன் சாயுச்சியம் ஆகும். இந்நிலை இறைவனுடன் இரண்டறக் கலத்தலாகும்.

இந்நூலால் அறியப்படும் தன்மைகள்

இந்நூல் கயிலைமலைச் சிறப்பில் தொடங்கிய நிகழ்ச்சி வெள்ளானைச் சருக்கமாகக் கயிலையிலேயே முடிவு பெறுவதால் கயிலை நாதரின் திருவருளை எண்ணியே பாடியதாகத் தெரிகிறது. அரச வாழ்வை விட ஆன்மிக வாழ்வில் திளைக்க எண்ணியே நாயன்மார்கள் வாழ்ந்தனர்.

இல்லறத்தில் இருந்து முக்தி பெற்றோர் துறவறத்தில் இருந்து சிவகதி பெற்றோர், பிரம்மச்சாரியாய் இருந்து அருள் பெற்றோர், சிவனடியார்களைப் பகைத்து அழிவுற்றோர்; சிவபூசை செய்து முக்தி பெற்றோர் போன்றோரைக் காணலாம். முதலில் பண்பாடிய பெண்ணாக இறைவனால் அம்மையே என்று அழைக்கப்பட்ட காரைக்கால் அம்மையார் மகளிர்க்கு வழிகாட்டியான மங்கையர்க்கரசி, தவவிளக்காகத் திகழ்ந்த திலகவதியார், விருந்தோம்பலில் சிறந்த இளையான்குடி மாறனாரின் மனைவி, திருவெண்காட்டு நங்கை போன்றோரின் சிறப்பும் பேசப்படுகின்றன. நாயன்மார்களின் சிறப்பில் மகளிர்க்கும் பெரும்பங்குண்டு என்பதை மறுக்க முடியாது. அடியவர்கள் பலவித அறச் செயல்களைச் செய்தனர். சுருங்கக் கூறின் அடியார்களைச் சோதனைக்கு உட்படுத்தியே இறைவனால் ஆட்கொள்ளப் பெற்றன் என்பதையும் அறியலாம். எனவே பெரிய புராணத்தில் சைவ நெறிக் கூறுகளைப் பின்பற்றியும் நற்றொண்டு புரிந்தும் நலமாக வாழ்வோமாக.

41. விருந்தோம்பும் பண்பு - பெரியபுராணம்



வி.சரளா
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழாய்வுத்துறை
தந்தை கேன்சு கலை அறிவியல் கல்லூரி
பெரம்பலூர்

முன்னுரை

"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற் பாற் றன்று"

என்பது வள்ளுவர் விருந்து என்பதற்குப் புதுமை எனப் பொருள்தரும் காப்பியம். தம் இல்லம் வந்த புதியவர்களை வரவேற்று உபசரித்து வேண்டியன கொடுத்தலே விருந்தோம்பலாகும். விருந்தினர்களைப் பேணும் சிறந்த ஒழுக்கத்தைப் பற்றி திருவள்ளுவர் பத்து குறள்கள் அடங்கிய ஒரு தனி அதிகாரத்தையே படைத்துள்ளார். இந்த விருந்தோம்பல் என்னும் ஒழுக்கம் நம் நாட்டின் தலைசிறந்த பண்புகளில் ஒன்றாகும். அந்த வகையில் பெரியபுராணத்தில் அருளாளர் சிலர் வறுமை வாழ்வை அடைந்தபோதும் மனம் தளராமல் அடியவர்களுக்கு விருந்தோம்பினர் என்பதையும் விருந்தாக படைக்கப்பட்டதையும் குறித்து இக்கட்டுரை ஆராய விழைகிறது.

விருந்தும் சைவமும்

சைவ நெறியில் விருந்தோம்புதல் என்பது ஓர் இன்றியமையாத பண்பாகும். சைவ சமயத்தவர் பிறவிப்பயனை அடைய வேண்டுமானால் அவர்கள் அடியவர்களுக்கு அமுது செய்வித்தல் என்னும் பண்பையே முதலில் பெற்றிருக்க வேண்டும். இதனை,

"ஒட்டிட்ட பண்பின் உருத்திரப் பல்கணத் தார்க்கு
அட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்"

என்னும் சம்பந்தரது திருமயிலைத் திருப்பாசுரமாகும். சைவ சமய அடியவர்களின் சிறப்பை எடுத்துக் கூறும் பெரியபுராணத்தில் திருத்தொண்டர்கள் சிவப்பேறு பெற்ற முறைகள் பற்றிப் பலவாறு குறிப்பிடுகின்றது. அவற்றுள் சிவனடியார்களைப் பேணி அவர்களுக்கு வேண்டுவன அளித்து அமுது செய்வித்து அதனால் முக்தி பெற்றவர்கள் பலர். இவர்களுள் காரைக்கால் அம்மையாரைத் தவிர மற்ற தொண்டர்கள் ஆண்களேயாயினும் அடியவர்களுக்கு விருந்து செய்வித்தலில் உறுதுணையாக இருந்தவர்கள் இவர்களுடைய மனைவிமார்கள் ஆவார். இளையான்குடி மாறநாயனார் மனைவியும், திருவெண்காட்டு நங்கையும் இயற்பகை நாயனார் மனைவியும் அப்பூதியடிகளின் மனைவியும் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

பெண்ணின் கடமை

''விருந்து புறந்தருதலும் சுற்றும் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்'' (தொல் கற்பு 77)

என்னும் தொல்காப்பிய நூற்பா விருந்தோம்புதலை பெண்ணின் கடமை சுட்டுகிறது.

''அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்
முல்லை சான்ற கற்பின் மெல்லியல்'' (நற்றினை-142)

என்னும் சங்கப்பாடலுக்கு ஓர் எடுத்துக்காட்டாய் இளையான்குடி மாறநாயனாரின் மனைவி, தனக்கே உணவு இல்லாமல் பசித்திருந்தாலும் இரவு நேரத்தில் பகலில் விதைக்கப்பட்ட நெல் முளையை வாரிக்கொண்டு வரும்படி கணவருக்கு அறிவுறுத்தி கொண்டு வந்த நெல்லை மழைக்காலத்தில் நள்ளிரவில் வந்த சிவனடியார்க்கு நல்விருந்து செய்து உவக்கின்றாள். மாறனார் அடியவருக்கு விருந்தளிக்க இயலாத நிலையில் வருந்திய போது ஏற்ற வழிகளைச் சொல்லி இரவு நேரத்திலும் இருந்ததைக் கொண்டு அற்புத உணவாக்கிய அம்மையாரின் திறத்தை நாம் போற்றியே ஆக வேண்டும். சங்ககாலத் தலைவி (புறநானூறு 333) வீட்டில் உள்ள விதை நெல்லை வந்தவர்களுக்கு விருந்தாக்கினாள். பெரிபுராணத் தலைவி வயலில் விதைத்த விதை நெல்லையே விருந்தாக்கினாள். அதே சமயத்தில்

சிலப்பதிகார காப்பியத் தலைவி கண்ணகி,

''அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை''
(காதை-16:71-73)

என்பதன் மூலம் விருந்தினரை வரவேற்று உபசரித்தலை இழந்ததாகக் கூறி வருந்துகிறாள். மேலும், ''விருந்து வந்த போது என்னுறுமோ எனவிம்மும்'' சீதையைக் காட்டுகிறார் கம்பர். எனவே ஆண்களை விட பெண்களே விருந்தினர்களைப் பேணுவதில் சிறந்து விளங்கினர் என்பதை அறியமுடிகிறது.

விருந்தோம்பும் முறை

சிவபெருமானுக்குத் தொண்டு புரியும் அடியவர்கள் யார் வந்தாலும் அவர்களை மகிழ்ச்சியோடு வரவேற்றுத் தம் வீட்டிற்கு அழைத்து வந்து அவர் திருவடிகளை நீரினால் தூய்மைப்படுத்தி ஆசனத்தில் அமரச்செய்து பூசித்து வணங்கி அவர்கள் விரும்பும்படி நான்கு விதத்துடன் கூடி அறுசுவை சமைத்த நல்ல உணர்வுகளைப் படைப்பர். இதனைக்

''கொண்டுவந்து மனைப்புகுந்து
குலாவு பாதம் விளக்கியே
மண்டு காதலின் ஆதனத்திடை
வைத்தருச்சனை செய்தபின்
உண்டிநாலு விதத்திலாறு
சுவைத்திறத்தினால் ஒப்பிலா
அண்டர்நாயகர் தொண்டர் இச்சையின்
அமுது செய்ய அளித்துள்ளார்''

என்கிறார் சேக்கிழார்.

வறுமையிலும் விருந்து

இளையான்குடி மாறநாயனார் செல்வம் பெற்றிருந்த காலத்தில் அதன் பயன் அடியவர்களுக்கு அமுது செய்வித்தலே என்று வாழ்ந்திருந்தார். இறையருளால் வறுமை

அடைந்தபோதும் மனநிலை சிறிதும் மாறாமல் அடியவர்களுக்குத் தொண்டு புரிந்து வரும் காலத்தில் சிவபெருமான் விருந்தினராக வந்து வறுமையினால் துன்புறும் போதும் மாறனார் அடியார்க்கு அன்னம் அளித்தலில் சிறந்தவர் என்பதை உலகுக்கு எடுத்துக் காட்ட சிவபெருமான் விழைந்தார். இதனை,

"ஒல்லையில் வறுமைப்பதம் புக உன்னினார்
தில்லை மன்னினார்"

என்கிறார் சேக்கிழார். சிவப்பிரகாசரும் சோண சைலமாலையில்,

"வெண்திரு நீறு புனையும் மாதவர்க்கு
விருந்து செய்து உறும் பெரு மிடியும்
கொண்டநல் விரதத்து இளைக்கும் யாக்கையும் மிக
கொடியனேற்கு அருளு நாளுளதோ?"

என்பதன் மூலம் வறுமை வாழ்வை என்றைக்கு அருளுவையோ என இறைவனிடம் வேண்டுவதைக் காணமுடிகிறது. எனவே அறம் சார்ந்த நிலையில் வறுமை அடைவோரை இவ்வுலகம் போற்றும் என்ட்தில் ஐயமில்லை.

காரைக்கால் அம்மையார்

சிவபெருமான் மீது பக்திக் கொண்ட காரைக்கால் அம்மையார் இல்வாழ்க்கையில் பரமதத்தனை மணந்து இல்லறப் பண்பில் சிறந்து வாழும் காலத்தில் சிவனடியார்கள் வந்தால் அவர்களுக்குத் திருவமுது படைத்தும் பொன்னும் மணியும் துகிலும் பிறவும் தம் அன்பு மிகுதியினால் அவர்களுக்கு வேண்டியவற்றை எல்லாம் கொடுத்து வாழ்ந்தார் என்பதை,

"நம்பரடி யாரனைந்தால் நல்லதிரு வமுதளித்துஞ்
செம்பொன்னும் நவமணியுஞ் செழுந்துகிலும் முதலான
தம்பரிவினால் அவருக்குத் தகுதியின் வேண்டுவ கொடுத்தும்
உம்பர்பிரான் திருவடிகீழ் உணர்வு மிகு ஒழுகுநாள்"

என்னும் அடிகளால் அறியலாம். மேலும் அடியாரை உண்பித்த

சிறப்பினால் தான் அம்மையார் தெய்வீகத் தன்மை பெற்று சிவபெருமானால் அம்மையே என்று அழைக்கப்பெற்றவர் காரைக்கால் அம்மையார்.

வியப்பும் விருந்தும்

திருநாவுக்கரசரின் திருத்தொண்டைக் கேட்ட அளவிலே அவர்பால் அப்பூதியடிகள் அளவிறந்த அன்பு கொண்டு அதன் காரணமாக அவர் திருப்பெயரையே அனைத்திற்கும் வைத்து மகிழ்ந்தார். அப்பூதியாரின் மனைக்கு வந்த திருநாவுக்கரசருக்கு விருந்தமுதுபடைக்க வாழைக் குருத்தை அறுக்கச் சென்ற மூத்த மகன் பாம்பு கடித்து இறக்கின்றான். அவ்வேளையிலும் சிறிதும் கலக்கமின்றி நாயனாருக்கு அமுது செய்விக்க வேண்டிப் பிள்ளையைப் பாயில் சுற்றிப் புறமனை முற்றத்தில் ஒரு பக்கம் மறைத்து வைத்தனர். பின்பு திருநாவுக்கரசரின் திருவருளால் ஒன்றுகெலாம் என்னும் பதிகம்பபாடிப் பிள்ளையை எழுப்புவித்து எல்லோருமாக விருத்துண்டனர். அப்பூதியடிகளின் மனைவி மாண்ட மகனையே மறைத்து சிவனடியாரை விருந்தோம்பிய சிறப்பைக் கண்டால் வியப்பாக உள்ளது. மேலும் சிறுத்தொண்ர் நாயனார் மனைவி திருவெண்காட்டு நங்கையார் பைரவராய் வந்த இறைவனுக்குத் தவத்தால் கிடைத்த தம் மகனைக் கணவனின் கருத்திற்கு ஒத்து பிள்ளைக்கறி கொடுக்க உள்ளமித்தத் தன்மையைக் கண்டால் நாம் அச்சமும், வியப்பும், திகைப்பும் அடைகிறோம்.

முடிவுரை

நாயன்மார்களின் சிறப்புக்கு அவர்கள் மனைவியர் எந்த அளவிற்கு உதவினர் என்பதைச் சேக்கிழார். பெருமான் தமது நூலில் பல இடங்களில் கூறிச் செல்கிறார். விருந்துண்ண வந்த அடியவர்களுக்கு உணவைத் தயார் செய்தவர்கள் பெண்களே ஆவார்கள். நாயன்மார்கள் தம் இல்லம் வந்த அடியவர்களின் கால்களை விளக்க அவர்தம் மனைவிமாரே நீருற்றினர். கணவர் பூசை செய்யும் போது மனைவியர் அருகிலிருந்து உதவினர். மேலும் இன்றைய சூழ்நிலையில் சைவ பெண்கள் தமது பொருளாதார சூழ்நிலைக்கு ஏற்ப ஒழுக்கமும் சிவவேடமும் உள்ள அடியவர்களுக்கு நம்மால் முடிந்த உதவிகளைச் செய்தல் வேண்டும்.

42. அறிவியல் நோக்கில் சைவ சித்தாந்தம்



முனைவர் மி.சு. எழிலரசு
தூய மரியன்னைக் கல்லூரி
தூத்துக்குடி

முன்னுரை

நாவலந்தீவு என்றழைக்கப்பட்ட பழந்தமிழகத்தில் தொன்மை மிக்க சமயமாக முதன்முதலில் தோன்றி வளர்ந்த சமயம் சைவ சமயமாகும். செம்பொருளாய்ச் சிவமெனலாமே என வரும் திருமந்திரத் தொடர், சிந்தனைக்கும், மொழிக்கும் எட்டாத நிலையில் விளங்கும் சிவப்பரம் பொருளைச் சிவம் எனப் போற்றும் தொன்மை மரபைச் சுட்டுவதாகும். சிந்தனைக்கு அரிய சிவமே போற்றி என வரும் திருவாசகத் தொடரும் இம்மரபினை வலியுறுத்தி நிற்றல் காணலாம். சிந்துவெளி நாகரிகத்திற்கு முன்பிருந்தே சிவ வழிபாடு தமிழகத்தில் இருந்து வந்திருக்கிறதென்பதை அறிஞர்கள் பலரும் தம் ஆய்வுகள் வழி நிரூபித்துள்ளனர். எந்நாட்டவர்க்கும் இறைவனாகிய முதலவனைத் தென்னாட்டவராகிய தமிழ் மக்கள் சிவன் என்ற திருப்பெயராற் போற்றி வழிபட்டனர் என்பதைத் ‘‘தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி’’ என வரும் திருவாசகத் தொடரால் இனிது அறியலாம். சிவபெருமானை வழிபட்டு அம்முதல்வனது திருவருட்துணை கொண்டு உலகுயிர்கள் இயங்குந் திறத்தினைத் தமது வாழ்வியல் நுகர்ச்சியில் கண்டு தெளிந்த தமிழ் மக்கள் தமது வாழ்வியலின் முடிந்த முடிவாகக் கண்டுணர்ந்த மெய்யுணர்வுக் கொள்கையே இடைக்காலத்தில் சைவ சித்தாந்தம் என்ற பெயரால் வழங்கப்பட்டது என்பர்.

சைவ நெறியும் சித்தாந்த வளர்ச்சியும்

சிவவழிபாடு என்று தோன்றியது என்பதனை அறுதியிட்டு இதுவரை யாரும் கூறவில்லை. வேத காலத்திற்கு

முற்பட்டது என்பதை மொகஞ்சதாரோ, அரப்பா ஆகிய இடங்களில் அகழ்ந்தெடுக்கப்பட்ட பல சின்னங்கள் வழியாக அறியமுடிகிறது. மொகஞ்சதரோ நாகரிகம் இன்றைக்கு சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது எனக் கூறுகின்றனர். சிவநெறி என்பது வேத காலத்திற்கும் முறபட்டதாய் இந்தியாவில் தென் கோடியிலிருந்து வடவெல்லை வரை பரவி வாழ்ந்த தமிழ் பேசிய மக்களிடையே வழக்கத்தில் இருந்து வந்ததான ஒரு பழமையான வழிபாட்டு நெறி ஆகும். கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் தோன்றிய மணிமேகலையில் சைவ வாதி எனப்படுபவன் பற்றிப் பேசப்படுகிறது. சைவ வாதி மணிமேகலையுடன் சைவக் கொள்கையைப் பற்றி விவாதம் செய்ததாகக் கூறப்பட்டுள்ளது.

ஒப்பற்ற பரம்பொருளாகிய ஒரே கடவுள் சிவமாகிய அன்பே எனக் கொண்டு அந்த அன்பாகிய கடவுளை உலகிற்கு வெளிப்படுத்தும் கொள்கையாகச் சைவசித்தாந்தம் விளங்குகிறது. இதையே திருமூலர்,

''அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாதல் யாரும் அறிந்திலர்
அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப்பரே''

என்று அழகாகக் கூறியுள்ளார். அன்பாகிய சிவத்தை அறிந்தொழுகும் திருநெறி சைவம் ஆயிற்று. நற்கலை கற்று, யோகம் பயின்று பதமுத்தி எய்துதற்குரிய ஞானம் எய்தித் தன்மையும் தலைவனையும் உணர்ந்தவர்களே சைவ சித்தாந்தி ஆவர் என்கிறது திருமந்திரம். பழங்காலம் முதற்கொண்டு தமிழ் மக்கள் ஒழுகி வந்த சைவ நெறிக்கொள்கைகளின் சாரம் திருமூலநாயனார் முதல் சேக்கிழார் நாயனார் வரையுள்ள திருமுறையாசிரியர்களால் எடுத்தோதப்பட்டுள்ளது. அப்பன்னிரு திருமுறைகளின் பிழிவாக அனைத்துக் கொள்கைகளுக்கும் முடிந்த முடிபாகத் தோன்றியவையே சைவ சித்தாந்த சாத்திர நூல்கள் ஆகும். திருமந்திரத்தில் தற்பரம் கண்டுளோர் சைவ சித்தாந்தரே என்ற குறிப்பு வருகிறது. தோத்திர வடிவிலமைந்த

சைவத் திருமுறைகளாகிய செந்தமிழ் இலக்கியங்களிலிருந்து, பதினான்கு சாத்திர நூல்களை உருவாக்கிக் கொடுத்தவர்கள் திருவியலூர் உய்ய வந்த தேவ நாயனார், திருக்கடவூர் உய்ய வந்த தேவ நாயனார், மெய்கண்ட தேவர், அருணந்தி சிவாச்சாரியார், திருவதிகை மனவாசகங் கடந்தார். உமாபதி சிவாச்சாரியார் ஆகிய சான்றோராவர்.

அனைத்துச் சித்தாந்தங்களுக்கும் மணிமுடி

இந்தியாவில் சமணம், பௌத்தம் ஆகிய சமயங்கள் கடவுளை அறியாத நாத்திக சமயங்களாகத் தோன்றி வளர்ச்சி பெற்று வந்தன. பழந்தமிழ் வழிபாட்டில் நிலவி வந்த உயிர்க்கொலையைக் கண்டித்த இச்சமயங்கள் பிறவிசுழற்சிக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட நாத்திக சமயங்களாக விளங்கின. இவைத் தமிழகத்தின் கிறித்துவுக்கு முற்பட்ட காலத்திலேயே வேரூன்றி இருந்தன. கிறித்துவுக்குப் பிறப்பட்ட நூற்றாண்டுகளில் தமிழகத்தில் உருவாகி வளர்ந்த பக்தி இயக்கத்தின் காரணமாகக் கடவுள் கொள்கையின் அடிப்படையில் ஆத்திக சமயங்களான சைவமும், வைணவமும் எழுச்சி பெற்று பக்தி இலக்கியங்கள் தோன்றின. நாத்திக சமயங்களாகிய சமண பௌத்தத்திற்கும், ஆத்திக சமயங்களாகிய சைவ வைணவத்திற்கும் தமிழகத்தில் கொள்கைப் போராட்டம் நடைபெற்றது. சங்கரர், இராமானுசர், மாத்துவர் போன்றோரால் பல்வேறு கொள்கைகள் உருவாக்கப்பட்டன. அவை அத்வைதம், துவைதம், விசிசுடாத்வைதம் என்பனவாகும். இக்கொள்கைகளும் சில குறைபாடுகளைக் கொண்டிருந்தன. இக்குறைபாடுகளைக் களையும் விதமாக அனைத்துக் கொள்கைகளுக்கும் முடிந்த முடிபாக, சிறந்த கொள்கையாகத் தோன்றியதே சைவ சித்தாந்தக் கொள்கையாகும். இக்கருத்தையே திரு. இரா.இராசசேகரன் அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார். மெய்கண்டார் பிறந்த பொழுது தான் பிரம்மசூத்திரத்திற்கு சங்கரர், மத்துவர், முதலானோர் வேறு வேறு உரைகளை எழுதினர். அப்பொழுது நாட்டில் சமய நிலையில் பெருங்குழப்பம் நிலவியது. அக்குழப்ப நிலையைச் செம்மைப்படுத்தி, சைவ சித்தாந்தத்தை நிலை நாட்டவே

மெய்கண்டார் தோன்றினார். (ப.149 இரா.இராசசேகரன் சைவப்

சிவமாகிய பரம்பொருளை முதன்மையாகக் கொண்டு விளங்குவது சைவ சமயம் சிவத்தோடு சம்பந்தம் உடையது. ''சைவம்'' சைவ சமயத் தத்துவங்களை விளக்குவது சைவ சித்தாந்தம். சித்தம்+அந்தம்=சித்தாந்தம். சித்தம்-நிலைநிறுத்தப்பட்ட உண்மை. அந்தம்-முடிவு, முற்ற முடிந்த மெய்ப்பொருட் கொள்கை. அதாவது ஒவ்வொரு கொள்கையையும் நன்கு ஆராய்ந்து இஃது அன்று , இஃது அன்று என்று ஒதுக்கித் தள்ளி விட்டு, இறுதியில் இதுவே முடிந்த முரபு எனவும், இதற்கு மேல் வேறெதுவும் இல்லை எனவும் அறுதியிட்டுக் கூறும் தத்துவமாக விளங்குவதால் இது சித்தாந்தம் எனப்பட்டது. ''அன்பின் வழியது உயிர்நிலை'' அதாவது உயிர்க்கும் உடம்புக்கும் தொடர்பாவது அன்பு என்றார் திருவள்ளுவர். அந்த அன்பையே ''சிவம்'' எனக் கண்டார் திருமூலர். சிவம்-செம்பொருள்,. செம்மை எனும் வேர்ச்சொல்லிலிருந்து வந்தது. திருவள்ளுவர் சிவம் என்பதைச் செம்பொருள் என்றே வழங்கினார். கடவுள் முதற்பொருள். சிவமாகிய முதற்பொருளை உள்ளவாறு உணரும் அறிவு. ஐயம் அதுவோ, இதுவோ என மயங்கும் நிலை. திரிபு ஒன்றை மற்றொன்றாக அறிதல், உண்மை உள்ளவாறு அறிதல். சிவஞானம் என்பது சிவமாகிய மெய்ப்பொருளை உள்ளவாறு உணரும் அறிவு. போதம்-போதித்தல் - ஐயம், திரிபுகளை நீக்கித் தெளிவுண்டாகுமாறு உணர்த்துதல். அதற்காக எழுந்த நூலே சிவஞான போதம் எனப் பெயர்பெற்றது. சிவஞானபோதமானது சமயத்தின் அடிப்படைக் கூறுகளான 1, உடல், 2.உயிர், 3.ஆன்மா, 4.கடவுள், 5.ஆணவம் ஆகிய ஐந்தையும் அறிவியல் அடிப்படையில் விளக்குகிறது. இவ்வைந்தும் சைவ சித்தாந்தம் கூறும் முப்பொருள் உண்மைகளான பதி, பசு, பாசம் என்ற மூன்றன் விரிவாகும்.

பொருள் முதல் வாதமும், கருத்து முதல் வாதமும்

பொருள் முதல் வாதம் நாத்திகக் கொள்கையாகவும், கருத்து முதல் வாதம் ஆத்திகக் கொள்கையாகவும் அறிஞர்களால் அணுகப்பட்டு சிந்தனை வளர்ச்சி பெற்று வந்துள்ளமையை

உலக வரலாற்றில் நாம் காண்கிறோம். ஆனால் பொருள்முதல் வாதமும், கருத்து முதல் வாதமும் ஒரு நாணயத்தின் இரு வேறு பக்கங்களே என்கிறது சைவசித்தாந்தம். நாணயத்தின் இரு பக்கங்களும், இணைந்திருக்கும் போது தான் அது நாணயமாக ஏற்றுக் கொள்ளப்படும். ஏதேனும் ஒரு பக்கம் இல்லாவிடில் அது செல்லுபடியாகாது. இவ்வாறு பொருள்முதல் வாதத்தையும், கருத்து முதல் வாதத்தையும் இணைத்துத் திருமூலர்,

"மரத்தில் மறைந்தது மாமத யானை
மரத்தை மறைத்தது மாமத யானை
பரத்தில் மறைந்தது பார்முதல் பூதம்
பரத்தை மறைந்தது பார்முதல் பூதம்"

என்ற பாடலில் அழகான விளக்கத்தைத் தருகிறார். இப்பாடலில் மரத்தால் செய்யப்பட்ட யானை பொம்மை பொருள்முதல் வாதத்தையும், கருத்து முதல் வாதத்தையும் இணைக்கின்ற அழகான உருவகமாகக் கையாளப்பட்டுள்ளது. யானை பொம்மையை உற்றுநோக்கும் போது அது செய்யப்பட்ட மரத்தின் தன்மையை நோக்கினால் யானையின் உருவம் மறைந்து, மரமாகிய பொருள் மட்டுமே கண்ணுக்குத் தெரிகிறது. அதில் உள்ள கருத்தாக்கிய யானையைப் பற்றிச் சிந்திக்கும் போது மரம் மறைந்துவிடுகிறது. இங்கே பொருள் மறைந்து கருத்து மட்டும் வெளிப்படுகிறது. இப்பாடலை வைத்து திருமூலர் விளக்குவது இப்பேரண்டமாகிய பொருளும், பரமாகிய கடவுளும் ஆகிய இரண்டும் ஒன்றிணைந்தே இப்பேரண்டம் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதாகும். இப்பேரண்டம் ஐம்பெரும் பூதங்களால் ஆனது. இப்பேரண்டத்தை ஆட்சி புரிகிறவர் கடவுள். ஆகவே, கடவுளையும் பேரண்டத்தையும் பிரிக்க முடியாது. இப்பேரண்டத்திலுள்ள அனைத்துப் பொருள்களும் கடவுளின் ஆட்சியில் கடவுளுக்குள் அடங்கியிருப்பதால், இவற்றின் தோற்றம் கடவுளின் தோற்றத்தோடு இணைந்ததாகும். இவற்றின் முடிவு கடவுளின் முடிவோடு இணைந்ததாகும் என்னும் விளக்கத்தின்படி இப்பேரண்டமும், கடவுளும் என்றும் நிலைத்து நிற்கும் ஒன்றேயாகும். ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்க

முடியாது. இதனால், பிறப்பு, இறப்பு என்பனவெல்லாம் இருக்கிற ஒன்றின் மாற்றங்களே தவிர, புதிதாகத் தோன்றுவதோ, இருந்தது அழிந்து விடுவதோ அன்று. இதைத்தான், இல்லது தோன்றாது, உள்ளது போகாது என்று தமிழ் ஞானிகள் கூறுகின்றனர்.

சைவ சித்தாந்த சாத்திரங்களின் மணிமுடியாக விளங்கும் சிவஞான போதகமானது சமயக் கொள்கைகளை அறிவியல் அடிப்படையில் விளக்கிக் கூறும் ஒப்பற்ற நூலாகும். போறிஞர் சன்சுடீன் என்பாரின் கூற்றுப்படி, ஆன்மீகம் சோாத அறிவியல் நொண்டி அறிவியலில்லாத ஆன்மீகம் குருடு எனவே சமயத்தை அறியாத அறிவியலும், அறிவியலை அறியாத சமயமும் குறைபாடுடையன என்பது புலனாகின்றது. இக்குறைபாடில்லாமல் ஆன்மீகத்தை அறிவியல் அடிப்படையில் விளக்கிக் காட்டுவது சிவஞானபோதமாகிய ஆன்மவியல் நூல் ஆகும்.

எதையும் அப்படியே விட்டு விட்டால், தும்பு படிந்து துருப்பிடித்து, குழப்பத்தில் ஆழ்ந்து அழிந்து போகும். இது விஞ்ஞானக் கொள்கை. வீட்டைப் பூட்டி வைத்துப் பாருங்கள். ஆடையைப் பயன்படுத்தாமல் வைத்துப் பாருங்கள். சமயம், தத்துவம் முதலியவையும் அவ்வாறே அவற்றை ஆராய்ந்து புத்துயிர் கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். ஆகையால், சைவ சித்தாந்த தத்துவத்தையும் நாம் புதிய புதிய கண்ணோட்டத்தோடு ஆராய்ந்து, புதிய தெளிவுகளைப் பெறுவது அவசியமாகிறது.

43. சைவ நெறியும் அறிவியல் பார்வையும்



கு. பிரியா
உதவிப்பேராசிரியர் (தமிழ்)
ஞானாம்பிகை மகளிர் கலைக் கல்லூரி
மயிலாடுதுறை

முன்னுரை

சைவ சமயக் குரவர்கள் என்று நாம் போற்றுபடுவர்கள் நால்வராவர். அவர்கள் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர். மாணிக்கவாசகர் ஆகியோராவர். இந்நால்வர் பெருமக்களால் காலத்தால் பிறபட்டவர் என்றும், ஒன்பதாம் நூற்றாண்டு என்றும் கூறப்படுகிறது. இவர் சற்குரு மார்க்கத்தின் வழி இறைவனை அடைந்தார். இவர் திருவாசகமும், திருக்கோவையாரும் பாடியுள்ளார். திருவாசகம், சைவத் திருமுறைகளில் எட்டாம் திருமுறையாகச் சேர்க்கப்பட்டுள்ளது. இவர் இறைவனைப் போற்றும் விதம், தேவாரம் பாடிய முதல் மூவர் பெருமக்களிடமிருந்து சற்று வேறுபட்டுள்ளது. திருவாசகமானது இறையனுபவப் பிழியல் என்று போற்றப்படுகிறது. திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார் என்றும், வள்ளலார்

"நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்து
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே"

என்றும் போற்றப்படுகிறது. இறையருள் கிடைத்துவிட்டால் அறிவின் துணை கொண்டு பெறவேண்டிய அனைத்தும் தாமே வந்துவிடும் என்பதைச் சேக்கிழார் திருஞானசம்பந்தர் புராணத்தில் கூறியுள்ளது போலவே, இறைவன் திருவருள் கூடி உணர்வரிய மெஞ்ஞானத்திலேயே நம்மை மூழ்கவைக்கிறார் மாணிக்கவாசகர். ஆழ்ந்து, உணர்ந்து படிக்குந்தோறும் இறைத்தன்மையின் அதிர்வலையை நம்மை உணரச் செய்கிறார்.

மெய்ஞ்ஞானம் - விஞ்ஞானம்

மெய்ஞ்ஞானமும், விஞ்ஞானமும் வேறுவேறன்று. எதிரெதிர் துருவகளன்று. இரண்டும் முரணானது அன்று. இரண்டும் ஒன்றோடு ஒன்று ஒன்றுபட்ட நிலையில் இருப்பதே நன்மை பயக்கும். மாபெரும் விஞ்ஞானியான ஐன்ஸ்டீன், சமயத் தொடர்பு இல்லாத அறிவியல் நொண்டியானது; அறிவியல் தொடர்பில்லாத சமயம் குருடானது என்று கூறியுள்ளார். ஆகவே சமயத் தொடர்புடன் கூடிய மெய்ஞ்ஞானம், விஞ்ஞானமும் கலந்தே இருந்ததைக் காணமுடிகிறது.

மாணிக்கவாசகருடைய குறிக்கோள்கள் மெய்ஞ்ஞானத்தையும் இறை உணர்வையும் அமுதாய் ஊட்டுவது மட்டும் தான். அதனோடு விஞ்ஞான அறிவோடு விளங்கும்படி அழகாய், எளிமையாய் கூறியுள்ளார்.

உயிரினங்களின் தோற்றம்

மாணிக்கவாசகர் சிவபுராணம் என்ற பகுதியில் உயிரினங்களின் தோற்றத்தை வரிசைப்படுத்தியுள்ளார். கற்பாறையிலுள்ள அணுவாய்க் கிடந்து, பின் புல், அடர்ந்த சிறு செடி, மரங்கள் ஆகிய அசையாதப் பொருட்களுக்குள் புழு, பாம்பு முதலிய ஊர்வனவாகியும், பறக்கும் பறவையாகியும், விலங்குகளாகியும், மனிதராகியும், பேய், பூதகணங்களாகியும், கல்லாகியும் வலிமை பெற்று விளங்கும் அசுரராகியும், உலகியல் துறந்த முனிவராகியும் தேவர்களாகியும், இயங்குகின்ற இந்த அசையாப் பொருள் அசையும் பொருள் என்னும் இருவகைப் பொருள்களுள்ளே எல்லாப் பிறவிகளிலும் பிறந்துவிட்டேன் என்று தன் அனுபவத்தை அழகாய்ப் படம்பிடித்துக் காட்டுவதைப்

''புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅநின்றவித் தாவசங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்''

என்று பாடியுள்ளார். இதில் கடைசி வரி, மேற்சொல்லப்பட்ட எல்லா பிறவிகளும் பிறந்து துன்பத்தில் வருந்தினேன். இப்பிறவியில் இறைவனே உன் பொன்னடிகளைக் கண்டுவிட்டேன். அதனால் வீடுப்பேற்றைப் பெற்றேன் என்றும் கூறியுள்ளார். இக்கூற்று சற்று ஆராயத்தக்கத்தொன்றாகவே உள்ளது. ஏனென்றால் ஒர் உயிர் பெறக்கூடிய ஒரு பிறவியின் வடிவத்தையும் அனுபவித்த இன்பத்துன்பங்களையும் மற்றொரு பிறவியில் நினைவு கூர்வதில்லை. அப்படியிருக்கும் சூழ்நிலையில், மாணிக்கவாசகர் திருவாதவூரில் மனிதராய்ப் பிறந்திருக்கும் இப்பிறவியில் மற்ற பிறவிகளின் வடிவத்தைப் பெற்றிருந்ததைச் சொல்ல முடிந்ததற்கு முதல் காரணம், ஆன்மா என்பது வேறு இந்த உடல் என்பது வேறு என்று பிரித்துப் பார்க்கின்ற திறன் மிகுந்திருந்தால் மட்டுமே அறியமுடியும். திருவாதவூரர்க்கு இத்திறன் இறைவன் ஆட்கொண்டதால் இறை அனுபவத்தால் ஏற்பட்டிருக்கிறது. இதற்கு இறைவனே முழுமுதற் காரணமாகின்றான்.

இவரின் மேற்கண்ட கவிதையை, ஆசிரியப்பா அமைப்பு முறைக்கேற்ப, ஓசை நயத்தை ஒட்டி, வார்த்தைகளை மாற்றினால் கூர்தல் அறத்தைப் பரிணாம வளர்ச்சியைச் சுட்டுவது நன்கு விளங்கும். கல்லாய், புல், பூடு, மரமாய் இவற்றிடையே தோன்றும் புழு, பாம்பாய், இவற்றை உண்ணும் பறவையாய்ப் பல்வேறுபட்ட மிருகமாய், மனிதராய் என்று உயிர் வளர்ச்சி முறையை வரிசைப்படுத்திக் கூறியுள்ளதைக் காணமுடிகிறது.

இதை மெய்ப்பிக்கும் வண்ணம் டார்வினின் பரிணாம கொள்கை அமைகின்றது. ஒருசொல் உயிர்களிடமிருந்து இயற்கையாகப் படிப்படியாக வளர்ச்சி பெறுகிறது. இதுவே டார்வினின் பரிணாம கொள்கையாகும். ஆனால் அரிசுடாட்டில் கடவுள், தேவதைகள், மனிதன், விலங்கு, தாவரங்கள் என மேலிருந்து கீழாகக் கூறியுள்ளார். உலகில் முதலில் தோன்றியது நீர் வாழ் தாவரங்களே. அதிலும் ஒர் செல் உயிரின் (அமீபா) தோன்றலே என்கிறார் அறிஞர் டார்வின். இதே நிலை மாணிக்கவாசகரிடமும் காணப்படுகிறது. இவருக்கு முன்

தோன்றிய தொல்காப்பியரும் உயிர்வர்க்கத்தையும், அவற்றின் இயல்பையும் கண்டு, ஓரறிவு உயிர், ஈரறிவு உயிர் என,

''ஒன்று அறிவனவே உற்றறிவனவே
இரண்டறிவனவே அதனொடுநாவே''

என்று ஆறறிவு வரை குறிப்பிட்டிருப்பார். இந்நிலையின் அடிப்படையில் புல் முதலான உயிர்களுக்கும் உயிர் உண்டு என்ற கூற்றை மெய்ப்பிக்கின்றார் மாணிக்கவாசகர். ''திராவிட சிசு'' என்று ஆதிசங்கரரால் போற்றப்படும் திருஞானசம்பந்தரும் திருமாலின் அவதாரங்களைப் பரிணாம வளர்ச்சியின் படியே பேசியுள்ளார். அவை மீன், ஆமை, வராகம், நரசிம்மம், வாமனன் என்ற முறையில் காணப்படுகிறது.

இயங்கும் உயிர்களின் தோற்றத்தை அமைக்கும் முறையில் (1) நீரில் வாழக்கூடிய உயிரினத்தை (மீன்) முதலாவதாகவும், (2) நிலத்தில் வாழக்கூடிய ஆமையை இரண்டாவதாகவும், (3) நான்கு கால்கள், முதுகெலும்புடன் கூடிய வராகத்தை (விலங்கை) மூன்றாவதாகவும் (4) அடுத்து, மனித உடலுடன் விலங்கு, தலை கொண்ட நரசிம்மத்தை, நான்காவதாகவும், (5) மனித உருவின் தொடக்க நிலையிலுள்ள வாமனனை ஐந்தாவதாகவும் சுட்டியிருக்கிறார். இந்நிலை நன்னூலார் கூறியிருக்கும் ஐயறிவு உயிரினங்களைச் சுட்டுவதாக அமைந்துள்ளது. எல்லா உயிர்களின் தோற்றுவாய் சிவனே ஆகும்.

திருவண்டம்

திருவாதவூரர், திருவண்டப் பகுதியில், உலகம் உருண்டை என்றும் சூக்சுமத்தையும் தாம் வியந்தவாறே தன் அனுபவத்தை நுட்பமாக விவரிக்கின்றார்.

''அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெரும் காட்சி
ஒன்றனுக்கு ஒன்று நின்று எழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன''

இதில் இவர், கதிரவனைச் சுற்றியுள்ள கோள்களின்

தொகுப்பைப் பேரண்டம் என்றும், இவ்வண்டப் பகுதியானது உருண்டை வடிவானது என்றும், இவை எண்ணிலடங்காதவை என்றும் கூறியுள்ளார்.

பெரிய வடிவம் - சிறிய வடிவம்

''இல்நுழைகதிரின் துன்னணுப் புரையச்
சிறியவாகப் பெரியோன் தெரியின்''

என்பதில் இறைவனின் பேருருவத்தைச் சுட்டும் வழியிலேயே அறிவியல் உண்மையை மெய்ப்பிக்கிறார். ஒரு வீட்டுக் கூரையின் துவாரம் வாயிலாக வீட்டினுள்ளே சிறிய அளவில் சூரியஒளி வருகின்றது. அவ்வொளியினூடே அணுப் போன்ற தூசிகள் அலைந்து திரிவதைப் போல வானவெளியில் கோள்கள் மிதந்துக் கொண்டிருக்கின்றன. சிறியதாகிய அணுவிற்கும் பெரியதாகிய அண்டத்திற்கும் அடிப்படை ஒன்றேயாகும். ஆராய்ந்தால் இவ்வுண்மை தெளிவற நன்கு விளங்கும்.

மனிதர்களாகிய நமக்கு அணு போன்ற தூசிகள் அற்பமாவது போலவே இறைவனுக்கு அண்டங்கள் அற்பத் தூசியாகும். இந்த அற்பத் தூசியுள்ளே நாம் வாழ்கிறோம் என்ற உண்மையில் இருந்து இறைவன் எண்ணிலடங்கா கற்பனைக்கு எட்டா பேருருவானவன் என்றும் தூல வடிவைச் சுட்டுகிறார்.

''அணுத்தருந் தன்மையில் ஐயோன் காண்க''

அணுவில் காணப்படும் நுட்பத்தினும் வியக்கத்தக்க நுண்ணிய நுட்பமானவன் இறைவன் என்கிறார். ஒரு பரம்பொருளின் மிகச் சிறிய மூலக்கூறு, அணு என்பது அறிவியல் விதியாகும்.

''சூக்கமொடு தூலத்துச் சூறைமாருதத்து
எளியதுவளியிற் கொட்கப் பெயர்க்குங் குழகன் முழுவதும்''

பெரிய காற்று வீசும் போது சிறிய காற்றும், அத்துடன் சேர்ந்தே சூழன்று இடம் பெயர்கிறது என்ற அறிவியல் உண்மையைப் போலவே பரமனது ஆற்றலில் துணைத் தெய்வங்கள் தொழில் புரிகின்றன. எல்லாவற்றினுக்கும் முழுமுதற் பொருளாய்த்

தோன்றி ஆட்டுவிப்பவன் சிவனேயாவான்.

சூரியன் - சந்திரன்

"நாள்தோறும்
அருக்கனில் சோதி அமைத்தோன் திருத்தரு
மதியில் தண்மைவைத்தோன்"

இறைவன் சூரியனிடத்து வெப்ப ஒளியை அமைத்து, அதற்கு முரணான குளிர்ச்சி ஒளியை, அழகு பொருந்திய சந்திரனிடத்து வைத்தவன், சிவன். கோள்களின் ஒளியின் அடிப்படையில் கிழமைகள் வரிசைப்படுத்தப் பட்டுள்ளன. சூரியக் குடும்பத்தில் நாம் காணும் ஞாயிறு (சூரியன்) அதிக அளவில் ஒளியை உமிழும் தன்மை பெற்றுள்ளது. அடுத்து திங்கள் (சந்திரன்) அதன் பின் புதன், வியாழன், வெள்ளி, சனி என்று கூறப்பட்டுள்ளது. சனி, பலவளையங்களைக் கொண்டிருப்பதால் இருண்டகோள் என்று அழைக்கப்படுகிறது. திருஞான சம்பந்தரும் இறைவனைப் பற்றி தம் தேவாரப் பாடலில் பாடும் போது,

"ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன்
சனிபாம் பிரண்டுமுடனே"

என்றே வரிசைப் படுத்தியுள்ளார்.

கருவளர்ச்சி

இன்றைய காலக் கட்டத்தில் நாம் பல்வேறு தொழில் நுட்பக் கருவியைக் கொண்டு அறியும்; கருவளர்ச்சியை மாணிக்கவாசகர் நமக்கு எளிதாய்க் காட்டியுள்ளார். பெரிய வடிவிலான யானை முதல் சிறிய வடிவான எறும்பு வரையிலான பெண் உயிரினத்திற்குக் கருப்பை, யோனி என்பவை உண்டு. இவற்றினுள்ளே தோன்றும் இடர்களை வரிசைப்படுத்துகின்றனர்.

"ஒருமதித் தான்றியின் இருமையிற் பிழைத்தும்
இருமதி விளைவின் ஒருமையிற் பிழைத்தும்"

என்று வரும் பன்னிரண்டு அடிகளில் கருவளர்ச்சிப் பற்றி பேசியுள்ளார். முதல் மாதம், கருப்பைகளிலே நிகழும் கிருமிப் போரில் பிழைத்த ஒரு விந்தணு கருமுட்டையுடன் சேர்கிறது. கருப்பையில் ஒரு மாதம் ஆனவுடன், காம்புடன் கூடிய தான்றிக்காய் அளவு அடைந்த கரு, கருப்பையுள் பிளவுபடுதலில் இருந்து தப்புகிறது. இரண்டாம் மாத முடிவில், பிற புழுக்களினால் உருவம் எடுக்காமல் இருப்பதிலிருந்து தப்புகிறது. மூன்றாம் மாதத்திலே, கருப்பையில் பெருகும் கொழுப்பு நீர் மிகுதியிலிருந்து தப்பிப் பிழைக்கிறது. நான்காம் மாதத்தில், சூழ்ந்திருக்கின்ற இருளில் தப்புகிறது. ஐந்தாம் மாதத்தில் கருப்பையில், கருப்பை நீரும், இருளும் மிகுந்துள்ளதால் உயிரிழப்பு ஏற்படும். அதிலிருந்து தப்பிப் பிழைக்கிறது. ஆறாம் மாதத்தில், வயிறு விரிவடையத் தொடங்குவதால் அரிப்பு மிகுதியாயிருக்கும். அப்போது நேரும் துன்பத்திலிருந்து தப்புகிறது. பத்தாம் மாதத்தில், கரு வெள்ளப்படும் நிலையில் தாயும் தானும் பெரும் துயரக் கடலில் இருந்து தப்பிப் பிழைத்து நிலவுலகில் குழந்தையாகப் பிறக்கிறது. இத்தகைய துன்பங்களில் பெருந்துணையாய் நம்மைக் காப்பவர் இறைவனே அவன் சிவனே என்கிறார்.

இன்றைய மருத்துவரும் இதே பத்து மாதங்கள். அதாவது இருநூற்று எழுபது நாட்கள் கருவளர்ச்சியாகும் காலம் என்று கூறுகின்றார். முதல் மாதக்கரு வாலுடன் கூடியதாய் இருக்கும் நிலை என்று மருத்துவர்களின் கூற்றும், அடுத்து ஏற்படும் கருவளர்ச்சி பற்றிய கூற்றுகளும், மாணிக்கவாசகரின் காம்புடன் கூடிய தான்றிக்காய் போன்றன இவர் கூறும் கூற்றுக்களும் பொருத்தமாகியுள்ளது. இறைத்தன்மையோடு கூடிய அறிவியல் நுட்பங்களை மாணிக்கவாசகர் கூறியுள்ள நிலையில், அவரது ஆன்மீக அறிவும் அறிவியல் அறிவும் ஒருங்கே பெற்றுள்ள பாங்கு நமக்குத் தெளிவறத் தெரிகின்றது. ஆகவே, சைவ சமய நூல்களுள் ஒன்றான திருவாசகத்தில், சைவ நெறியுடன் அறிவியல் நுட்பங்களும் விரவி காணப்படுகிறது.

44. அறிவியல் சமயம் – சைவம்



முனைவர் இரா. குருநாதன்
முன்னாள் முதல்வர்
தமிழவேள் உமாமகேசுவரனார் கலைக் கல்லூரி
கரந்தை

முன்னுரை

உள்ளம் தான் கோயில், ஊனுடம்பு தான் ஆலயம் என்பது சைவ சமயம் கண்ட உண்மை. உலகையே மூன்று நிலைகளில் அடக்கி, பதி, பசு, பாசம் என்று கண்டது சைவ சித்தாந்த நெறி.

பதி
பசு
பாசம்

மேலே முதன்மையாக இருப்பது பதி இரண்டாவது பசு மூன்றாவது பாசம் பதி நிரந்தரமானது, சுதந்திரமானது, கட்டுக்கள் இல்லாதது. இடையில் உள்ள பசு மும்மலங்களால் கட்டப்பட்டு உள்ளது. மூன்றாவது பாசம் பதியை அணையாத, பசுக்களைக் கட்டுப்படுத்தும் ஆற்றல்மிக்கது. படிவான ஆன்மா பதிவாகிய இறைவனை நோக்கிச் சென்றால் பசுபதியாகும். பாசத்தை நோக்கி பசு வந்தால் கட்டுக்குள் முடங்கிவிடும் என்ற குறிப்பான எச்சரிக்கை வலிமையானது.

உலகப் பொருட்களை மூன்றில் அடக்கிய சைவ சமயத் திறம் வியக்கத்தக்கது. இந்நிலை கண்ட அமெரிக்கர் தம் நாட்டில் சைவ சித்தாந்த சர்ச் என்ற அமைப்பை உருவாக்கி இருப்பது கவனிக்கத்தக்கது. சைவநெறி மனிதர்களாகப் பிறந்த அனைவருக்கும் உரியது. அன்புப் பண்பு உடையவர்கள் அனைவரும் சைவர்கள் என்ற மரபுத் தொடர் நினைக்கத்தக்கது. சைவ சமயம் என்பது வழிபடுவதற்காக மட்டும் ஏற்பட்டதல்ல. வாழும் வழியைக் கூற வந்த சமயம் என்பதை விளக்கும் முகமாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

சமயம் என்ற சொல் பக்குவம் என்ற பொருளில்

அமைந்துள்ளது. அதனால் தான் தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம் என்ற திருமூலர் மொழி புகன்றார். ''தெளிந்தார்க்கு'' என்ற சொல் ஆழம் பொதிந்தது. கோயிலுக்குச் சென்று தேங்காய் உடைத்து, சூடம் காட்டி, தட்சணையைத் தட்டில் போடுவது பக்தி அல்ல, ஆன்மீகமும் அல்ல. இவையனைத்தும் குறிப்பால் உணர்த்தும் ஆன்மீகச் சிந்தனைகள்.

''ஊனுடம்பு ஆலயம்'' என்பது திருமூலர் நல்வாக்கு. தூய்மை செய்து, உணவு படைத்து, துணி கட்டுதல் சடங்கை இறைவனுக்கும் செய்கின்றோம். மனிதனே தெய்வம் என்ற இந்நாளைய வெளிப்பாடாகும்.

''தன்னைப் போல பிறரை எண்ணும்
தன்மை வேண்டுமே - அந்தத்
தனிமை வர உள்ளத்திலே
கருணை வேண்டுமே
பொன்னைப் போல மனம் படைத்தால்
செல்வம் வேறில்லை-இதைப்
புரிந்து கொண்ட மனிதனைப் போல்
தெய்வம் வேறில்லை''

என்ற கவிஞன் வாலியின் சொல்வெட்டு, சைவ சமயத்தின் உள்ளடக்கத்தை வெளிப்படுத்தி உள்ளது. மனிதனுக்குள் இருக்கும் ஆற்றலைச் சைவ சமயம் வெளிப்படுத்தி உள்ளது. இருமூக்கில் இடப்பக்கம் வாரி காற்று உள்ளே போகும் போது வெப்பத்தையும், வலப்பக்கம் உயிர்க்காற்று போகும் போது குளிர்ச்சியையும் தருகின்றது. வெப்பத்தைச் சிவன் என்றும், குளிர்ச்சியைத் திருவாதிரை திருமாலுக்கு உரிய நட்சத்திரம் திருவாதிரை நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் வெப்ப சம்பந்தப்பட்டனையோடு வாழ்வர். திருவோண நட்சத்திரம் குளிர்ச்சியுடையது. இந்நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் குளிர்ச்சி சம்பந்தப்பட்ட நோயோடு வாழ்வதை இன்னும் காணலாகும்.

மனித வாழ்விற்கும், தாழ்விற்கும் மூச்சுக்காற்று மையமாகியுள்ளது. உயிர் கௌவும் காவலனைக் காலன் என்று முன்னோர் பெயரிட்டனர். கால் என்ற சொல்லிற்குத் தமிழில்

காற்று என்று பொருள். உடலையும், உயிரையும் கூறுபடுத்துவதால் கூற்றுவன் என்று பெயரிட்டனர். முன்னோர்களின் கூற்றைக் (சொல்லை) கடைபிடித்தால், காலனை வெல்லலாம். மரணமிலாய் பெருவாழ்வு வாழலாம் என்பதைத் திருமூலர்,

''விட்ட எழுத்தை விடாத எழுத்தால்
கட்டவல்லார் காலனைக் கட்டவல்லார்''

என்று இரண்டே தொடர்களில் பெரிய ஆன்மீக அறிவியலைச் சுட்டியுள்ளார். உள்ளே மூச்சை இழுக்கும் போது எட்டு அங்குலம் காற்று உள்ளே செல்கிறது. மூச்சை விடும் போது 12 அங்குலம் செல்கிறது. விட்ட எழுத்து எட்டு விடாத எழுத்து 12 இருபத்து நாலு மணி நேரத்தில் ஒரு மனிதன் 21600 தடவை மூச்சை உள்ளிழுக்கின்றான். சாதாரண நிலையிலே இதில் ஆசை, கோபம், காமம், பொறாமை ஆகியவை சேரும் போது இன்னும் நட்டமாகும். இதை எல்லாம் உள்ளடக்கி,

''வாயடக்க வாழ்வு
மூச்சடக்க முத்தி''

என்ற பழமொழி ஆன்மீக அறிவியல் சிந்தனையாகும். மரங்களில் நான் அரசாக (அரசமரம்) இருக்கின்றேன் என்பதைக் கண்ண பெருமான் வாக்காகக் கூறுவர். அரச மரத்தை இன்னும் மக்கள் தெய்வமாக வழிபடுவதைக் காணமுடியும். மனிதனுக்குத் தேவையில்லா கார்பன்டை ஆக்சைடு என்னும் காற்றை அரசமரம் எடுத்துக் கொண்டு மனிதனுக்குத் தேவையான ஆக்சிசனைப் பெருவாரியாக விடுகின்றது. கோயில்களில் அரசமரத்தை வைத்திருப்பதன் நோக்கம் இதுவேயாகும்.

மனித வாழ்வில் செரிமானம் மிகவும் அவசியம். செரிமானத்தைச் செம்மையாகச் செய்யும் ஆற்றல் சுக்கிற்கு உண்டு. (இஞ்சி காய்ந்தால் சுக்காகும்)

''சுக்கிற்கு மிஞ்சிய மருந்தில்லை
சுப்பிரமணியனுக்கு மிஞ்சிய கடவுள் இல்லை''

என்ற கிராமிய பழமொழி. சைவ சமய மருந்தினைச் சுட்டியுள்ளது. சுக்கு பல விதமான நோய்களுக்கு உரிய அருமருந்தாகும். முருகனுக்குரியது பஞ்சாமிர்தம். நெய்யும், தேனும் சேரும் போது விசமாகின்றது. அதில் வாழைப்பழம் சேர்ந்தால் விட முறிவு ஏற்படுகின்றது. இப்பிரசாதம் நோய்எதிர்ப்புச் சக்தியை நல்கும். இன்றைய நாகரிக உலகில் வயிற்றுப்புண் என்பது பரவலாகக் காணப்படும் நோயாகும். ஒரு வலிக்கு மருந்து சாப்பிட்டு, பல வலிகளை விலை கொடுத்து வாங்குகின்றனர். வயிற்றுப் புண்ணிற்கு உரிய சிறப்பு மருந்து சைவ காவல் தெய்வமான மாரியம்மனுக்குப் படைக்கப்படும் உணவில் உள்ளது.

மாரியம்மனுக்குப் போடப்படும் படையலில் தயிர் சோறும் வெங்காயமும் இடம்பெற்றிருக்கும். உப்பை மட்டும் தவிர்த்துடுவர். உப்பு பல நோய்களை உள்ளடக்கிய சுரங்கம் என்பதைச் சைவப் பெரியோர் உணர்ந்து உள்ளனர். சைவக் கோயில்கள் அனைத்தும் அறிவியல் கூடங்கள். தல மரங்கள் ஆரோக்கியப் புதையல்கள் படைக்கும் உணவுகள் அருமருந்துகள். அடியார்களை நடமாடும் கோயில்களாகச் சைவ சமயம் குறிப்பிட்டுள்ளது. சைவம் உணர்ந்து பக்குவம் பெறுவோம். சமய நம்பிக்கைக்குள் செல்லுங்கள்.

45. அடியார் இலக்கணம்



கவிஞர் மா. உலகநாதன்
திருநீலக்குடி அஞ்சல்
ஆடுதுறை வழி

முன்னுரை

"தமிழே உனைக் கற்றாரும் கற்றவர்
சொல்லக் கேட்டாரும் இன்புறுவர்"

அன்பும், பணிவும் அடியார்க்கு அழகு என்பர் ஆன்றோர். ஆயினும் அடியார்களுக்குரிய பண்புகளாக 32 வகையானவற்றை வகுத்துத் தந்துள்ளனர். அவற்றுள் முதன்மையான ஐந்து பண்புகளை முன்னிலைப்படுத்தி அடியார்கள் அவற்றை ஏற்றுப்போற்றிய மாண்பினை இக்கட்டுரை வழி சிந்திக்கலாகிறேன்.

முதல் இலக்கணம்

"பொய்யை அறவே மனத்திலும் வாக்கிலும்
முற்றிலும் தவிர்த்து அகற்றவேண்டும்"

ஆம் அடியார்களுக்குப் பொய்யுரை தேவையில்லை. உள்ளும் புறமும் பளிங்கு நீர் போன்று தெளிவுடையதாக இருக்க வேண்டும். இந்த இலக்கணம் அடியார்களுக்கு மட்டுமல்ல. அனைவருக்குமே இருத்தல் இன்றியமையாதது. ஆயினும், உலகாதய வாழ்க்கையில் ஒரு சராசரி மனிதன் இக்கொள்கைகளை அலட்சியப்படுத்திவிட்டு பொருள்தேடிப் புலனின்பம் அனுபவிக்கலாகிறான். ஆனால், இறைத் தொண்டர்ச இந்த உறுதிப்பாட்டிலிருந்து சற்றும் விலகாமல் பயனுள்ள ்ாழ்க்கையை நடத்தி வந்துள்ளனர். சொற்கோ, ஞானசம்பந்தப் பிள்ளையார் தேவாரத்தில்,

"ஒல்லை ஆறி உள்ளம் ஒன்றிக் கள்ளம் ஒழிந்து வெய்ய
சொல்லை ஆறித் தூய்மை செய்து காமவினை யகற்றி
நல்லவாறே உந்தன் நாமம் நவின் றேத்த

வல்லவாறே வந்து நல்காய் வலிவலம் மேயவனே''
(1-50-1)

என்று குறிப்பிடுகிறார். என் மனத்தில் கள்ளம் புகாமல் உன் சிந்தனை ஒன்றையே எண்ணும் வண்ணம் எனக்கருள் செய்வாய். வலிவலம் எனும் தலத்தில் உறைகின்ற வள்ளலே. இறைவா என்று ஊனுருகப் பாடுகின்றார். எத்தனை இடர்கள், துன்பங்கள் வந்தபோதும், பொய்சொல்லாது வாழ்ந்த அரிச்சந்திரன் கதைகளையெல்லாம் நாம் படித்திருக்கிறோம் கேட்டிருக்கிறோம்.

பொய்சொல்லாது வாழும் அடியார்கள் கயிலையில் வாழும் கடவுளுக்கு ஒப்பா வர்கள். அவர்கள் ஐயம் நீங்கிய மெய்யுணர்வு பெற்றவர்கள். இத்தகையோர் இறைவன் பணியே தன் பணியெனக்கருதி, மெய்யன்புடன் இறைவனுக்குத் தொண்டு செய்து நூல்களை ஓதி உணர்ந்து, உருகி, ஒழுகி ஒருமைப்பட்டு நின்றவர்கள் என்கிறார் சேக்கிழார்.

''பொற்பமைந்த அரவாரும் புரிசடையார் தமையல்லால்
சொற்பாதங்கள் வாய்திறவாத் தொண்டுநெறித் தலைநின்ற
பெற்றியினில் மெய்யடிமை யுடையாராம் பெரும்புலவர்
மற்றவர் தம் பெருமையார் அறிந்துரைக்க வல்லார்கள்''

இரண்டாவது இலக்கணம்

''இறைவன் மீது மட்டற்ற அன்பும் உருக்கமும் வேண்டும்''

''தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது'' (குறள் 7)

என்பார் முப்பால் நூலார். இறைவனை எந்த நிலையிலும் எதனோடும் ஒப்பிட முடியாது. அவன் தனக்குவமை இல்லாதான் என்று குறிப்பிடுகிறார். இறைவனை உள்ளஙபோடு உருகி வழிபட வேண்டும் என்பதைக,

''கா.. .ரகிக் கசிந்துருகி கண்ணீர் மல்கி

ஓதுவார் தமை நன்னெறிக்கு ய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே''
''கண்முத்து அரும்ப கழல் சேவடி கை தொழுவார்கள்
உள்முத்து அரும்ப உவகை தருவார்''

நாவுக்கரசரோ,

''தொழுது தூமலர் தூவித் துதித்து
நின்று அழுது காமுற்று அரற்றுகின்றாரையும்''

திருவெம்பாவையில், உன் அடியார் தாள் பணிவோம். ஆங்கவர்க்கே பாங்காவோம் என்று பாவை நோன்பிருக்கும் மங்கையர் நிலையை மனங்கொள்ளும் வண்ணம் பாடுகிறார் மாணிக்கவாசகப் பெருமான்.

''நல்காது ஒழியான் நமக்கென்று உன் நாமம் பிதற்றி
மல்கா, வாய்குழறா, வணங்கா, மனத்தால் நினைந்து உருகிப்
பல்கால் உன்னைப் பாவித்துப் பரவிப் பொன்னம்பலம் என்றே ஒல்கா
நிற்கும் உயிர்க்க கிரங்கி, அருளாய் என்னை உடையானே''

இவ்வாறாக, அடியார் பெருமக்கள் இறைவனின் மீது தீராக்காதல் கொண்டு உருகி உருகிப் பாடிப் பரவுகிறார்கள்.

மூன்றாவது இலக்கணம்

''புலனடக்கமும் அறுபகை வெல்லுதலும்'' பெரிய யானையைச் சிறிய அங்குசம் அடக்குவது போல, பொறி புலன்களை அடக்கி நல்வழிப்படுத்திய அடியார்களை நாயன்மார்கள் சரிதத்தில் காண்கிறோம். இளமை மீதூற இன்பத்துறையில் எளியரானார் திருநீலகண்டார் திருவினும் உருவின் மிக்க மனைவியார் இருந்தும் பரத்தையரை நாடிய செய்தி அறிந்து, ஊடல் கொண்ட மனைவி, ''தீண்டுவீராயின் எம்மைத் திருநீலகண்டம்'' என்று ஆணையிட்டார். ''எம்மை'' என்று பன்மையாகக் கூறியபடியால் இனி இவரையேயன்றி ஏனைய மாதர்களையும் என் மனத்திலும் தீண்டேன் என்றார் ஏதிலார் போல நோக்கினார்.

''ஆதியார் நீலகண்டத்தளவு தாம் கொண்ட ஆர்வம்
பேதியா ஆணைகேட்ட பெரியவர் பெயர்ந்து நீங்கி
ஏதிலார் போலநோக்கி எம்மை என்றதனால் மற்றை
மாதரார் தமையும் என்றன் மனத்திலும் தீண்டேன்''

என்றார். அப்பர் பெருமான்,

''ஐவரை அகத்தே வைத்தீர் அவர்களே வலியர் சாலச்
செய்வது ஒன்று அறியமாட்டேன்'' *(4-54-9)*

வலிமையான ஐம்புலன்களையும் என் அகத்திலும் புறத்திலும் வைத்து அவைகளைக் கட்டுக்குள் கொண்டு வா என்றால் எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை என்று ஆதங்கப்படுகிறார்.

நான்காவது இலக்கணம் : புற ஒழுக்கம்

சிவனடியார்கள் மனத்தில் இரக்கம், கருணை முதலிய நற்குணங்கள் கொண்டோராய் வாழ வேண்டும். சத்திய வாழ்க்கை வாழவேண்டும் திருக்குறளிலும், திருமுறைகளிலும் பிற அற நூல்களிலும் கண்ட அறநெறிகளைப் பின்பற்றி வாழ வேண்டும்.

''இன்மையால் சென்று இரந்தார்க்கு இல்லை என்னாது
ஈந்து வக்கும் தன்மையர்''

விண் பொய் அதனால் மழைவிழாது ஒழியினும் விளைவுதான் மிக உடை. மண் பொய் அதனால் வளமிலாது ஒழியினும் தமது வண்மை தொழுவார். உண்ப கரிவார் உலகின் ஊழி பலதோறும் நிலையான பதி தான் சண்பைநகர் ஈசனடி தாழும் அடியார் தமது தன்மையதுவே.

புற ஒழுக்கத்திற்குச் சான்றாக தண்டியடிகள் வரலாற்றைச் சொல்லலாம். புறக்கண் இல்லாமலேயே அகக்கண் கொண்டு இவர் செய்த தொண்டு நெகிழ்ந்து போற்றக்கூடியது. ஆம் அவருக்கு பிறவியிலேயே கண் இல்லை.

திருக்குளமெடுத்தல்

திருவாரூர் கமலாலயக் குளக்கரைகள் எங்கும் சமணர்களின் பாழிகளாகி பழுதுபட்டது. கண்ணில்லாத நிலையிலும் அத்திருக்குளத்தை பெருக அகழ்ந்து தொண்டு செய்ய வேண்டுமென்று கருதினார். என்னே ஒரு உறுதிப்பாடு. தண்டியடிகள் கரையில் ஒரு கயிற்றையும் குளத்தில் ஒரு கயிற்றையும் கட்டி, அதைப்பற்றிக் கொண்டு ஒவ்வொரு கூடையாக மண்ணை அகழ்ந்து கரை சேர்த்துவந்தார். இதனைக் கண்டு மனம் பொறாத சமணர்கள் தண்டி நாயனாரை இகழ்ந்தும், சிவனாரைக் கேலி பேசியும் அவரின் தொண்டுக்கு இடையூறு செய்தனர். நாயனார் மனம் நொந்து பூங்கோயிலின் வாயிலில் நின்று எம்பெருமானே. எனக்கு வந்த இந்த இடர் களைய வேண்டுமென்று வேண்டினார். அன்றிரவு கண்ணுதற் கடவுள் கனவில் தோன்றி,

> "நெஞ்சின் மருவுங் கவலையினை யொழிநீ நின் கண் விழித்தந்த
> வஞ்ச அமணர்கள் தங்கண்கள் மறையுமாறு காண்கின்றாய்
> அஞ்சவேண்டா என்று அருளிய யவர்பால் நெஞ்சில் அவ்விரவே
> துஞ்சும் இருவில் அரசன்பால் தோன்றிக் கனவிலருள் புரிவார்"

(பெ.புராணம்-3609)

என்றார். அன்பனே நீ கவலையை விடுக ; நாளைக்கு உன் கண்கள் ஒளிபெறும். சமணர்கள் கண்களை இழப்பார்கள்; அஞ்சாதே என்றும் அதே நேரத்தில் அந்நாட்டு அரசனின் கனவிலும் தோன்றி, தண்டியின் நற்செயலைப் பெறாத சமணர்கள் அப்பணிக்கு இடர் செய்தார்கள். நீ அவ்விடத்திலே சென்று அவன் கருத்தை முடிப்பாய் என்று பணித்து மறைந்தருளினார். செய்தியறிந்த அரசன், தண்டியடிகளை நேரில் கண்டு ஆறுதல் கூறி யாம் சமணரைத் தண்டிப்போம். கவலையை விடுக, என்றான். அவ்வாறே, அடுத்தநாள் தண்டியடிகளார்,

> "ஏய்ந்த அடிமை சிவனுக்கியான் என்னில் இன்றென் கண்பெற்று
> வேந்தனெதிரே திருவாரூர் விரவுஞ் சமணர் கண்ணிழப்பார்
> ஆய்ந்த பொருளுஞ் சிவ பதமே ஆவதென்றே அஞ்செழுத்தை
> வாய்ந்த தொண்டர் எடுத்தோதி மணிநீர் வாவி மூழ்கினார்"

(பெ.புராணம் 3615)

குளத்தில் மூழ்கி எழுந்ததும் கண்பெற்றுத் திகழ்ந்தார். அதே சமயம், சிவத் தொண்டுக்கு இடையூறு செய்த சமணர்கள் கண்களை இழந்து, இருப்பிழந்து இடர்ப்பட்டு நீங்கினார்கள். திருப்பணிகள் செய்தும், ஐந்தெழுத்தை இடைவிடாது ஓதியும் சிவ புண்ணியம் செய்த தாண்டியடிகளின் புற ஒழுங்கு அவருக்கு கண்ணொளி பெற்றுத் தந்தது.

ஐந்தாவது இலக்கணம்

சாதி, இனம் மொழி அடிப்படையிலான வெறுப்புணர்வுகளிலிருந்து விடுபட வேண்டும். சாதியின் ஆதிக்கமும், அவலங்களும் நால்வர் வாழ்ந்த காலத்திலும் இருந்திருக்கிறது என்பதை அறியமுடிகிறது. ஆயினும் அடியார் பெருமக்கள் இந்தப் பிறபோக்கு எண்ணங்களிலிருந்து விடுபட்டு ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்றார் பண்பாட்டு அடிப்படையில் வாழ்ந்துள்ளனர். திருஞானசம்பந்தர் தாழ்ந்த சாதியைச் சேர்ந்த திருநீலகண்ட யாழ்பாணரை தம்முடன் சேர்த்துக் கொண்டு இறை பணியாற்றினார். அவரை ஐயர், ஐயர் என்றே அழைத்தார். அவரை வரவேற்றபோது,

> ''அளவிலா மகிழ்ச்சியினார் தமை நோக்கி ஐயர்நீர்
> உளமகிழ இங்கனைந்த உறுதி உடையோம்''
>
> *(திருஞான-133-1-2)*

அந்தணரான திருநீலநக்கர், ஞானசம்பந்தர் கேட்டுக்கொண்டதற் கிணங்க, தமது வீட்டின் வேள்விச்சாலையில் யாழ்பாணருக்கும் அவரது மனைவி மதங்க சூளாமணி அம்மையாருக்கும் உறங்க இடம் கொடுக்கிறார்.

முடிவுரை

இவ்வாறு அடியார் பெருமக்கள் அவர்தம் பண்புகளிலிருந்து பிறழாது சிவத்தொண்டு செய்து இறைவனோடு இரண்டறக் கலந்தனர் என்ற செய்திகள் சமய இலக்கியங்களிலிருந்து அறியலாகிறது.

46. இல்லற நெறி தத்துவம் கொடுத்த சிவபெருமான் – திருவிளையாடல் ஒரு பார்வை

முனைவர் சே.வெங்கட்ராமன்
நுண்கலை ஆய்வாளர்
சென்னை

முன்னுரை

சிவனடியார்கள் பலர் பக்தியின் வழியாகத் தொண்டு, தானம், அர்ப்பணிப்பு ஆகியவைகளின் மூலம் சிவனின் திரு அருள் பெற்ற நாயன்மார்களாக அருள்புரிகிறார்கள். இவர்களின் இறைத் தொண்டின் மிக சிறப்பானதாகத் திருநீலகண்ட நாயனார், திருகாப்பு சுந்தரி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர். இவர்கள் கணவன் மனைவியாக வாழ்ந்து முதுமை அடைந்தது வரை இச்சையை அகற்றி வாழ்ந்தனர். ஒருவனுக்கு ஒருத்தி என்ற தத்துவ அடிப்படையிலும் இல்லறமே நல்லறம் என்ற இல்லற வாழ்வு முக்கியத்துவத்தையும் சிவபெருமான் திருநீலகண்ட நாயனார் மூலம் அருளாசி வழங்கியுள்ளார். அதனை மையப்படுத்தி இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

சேக்கிழார்

கி.பி. 1200 குன்றத்தூர் வேளாளர் மரபினைச் சார்ந்தவர். இவரது இயற்பெயர் அருண்மொழித்தேவர் என்பதாகும். சேக்கிழார் என்பது குடிப்பெயர் அநபாயச் சோழனின் அமைச்சராக இருந்துள்ளார். பெரிய புராணத்திற்கு முதல் நூல் சுந்தரர் அருளிய திருத்தொண்டத் தொகை ஆகும். நம்பியாண்டார் நம்பி அருளிய திருத்தொண்டர் திரு அந்தாதி வழி நூல் ஆகும். சுந்தரர் - ஓரிரு சொல் ஓரிரு அடிகளில் அடியவரைக் குறிப்பிட்டுள்ளார். அதை மேலும் விரிவுபடுத்தி சேக்கிழார் பாடியருளினார். அவ்விரு தலைப்பின் மூலம் திருத்தொண்டர் புராணம் என சேக்கிழார் கூறியுள்ளார். ஆனாலும் திருத்தொண்டர் புராணம் என்பதைக் காட்டிலும் பெரியபுராணம் என்ற பெயரே சிறந்ததென புலவர் வ.ஞானபிரகாசம் குறிப்பிட்டுள்ளார்.

நாயன்மார்களின் தொண்டு

ஒவ்வொரு சிவனடியார்களும் செய்த தொண்டுகளைச் சுருக்கமாக வெளிக்கொண்டு வந்துள்ளேன்.

1. தில்லைவாழ் அந்தணர்	பொன்னம்பலவரைப் பூசித்தவர்கள் (தொகையடியவர்)
2. திருநீலகண்டர்	திருநீலகண்டம் மொழிந்தவர்
3. இயற்பாகையார்	மனைவியையே ஈந்தவர்
4. இளையான் குடிமாறன்	வறுமையிலும் அமுது படைத்தவர்
5. மெய்ப்பொருளார்	உயிர்விட்டும் திருநீறு போற்றியவர்
6. விறன் மிண்டர்	அடியவர் வழிபாடு
7. அமர் நீதியார்	ஆடை வழங்கியவர்
8. எறிபத்தர்	பாதகம் கண்டால் பொங்கி எழுபவர்
9. ஏனாதிநாதர்	திருநீறு போற்றி உயிர் தந்தவர்
10. கண்ணப்பர் (உடல்உறுப்பு)	கண்ணணைத் தந்தவர்
11. குங்குலியக் கலயர்	குங்குலியம் புகைத்தவர்
12. மானக் கஞ்சாறர்	மகளின் கூந்தலைத் தந்தவர்
13. அரிவாட்ட தாயர்	திருஅமுது, கீரை, மாவடு படைத்தவர்
14. ஆனாயர்	இறை புகழைக் குழலில்இசைத்தவர்
(மும்மையால் உலகாண்ட சுருக்கம்)	
15. மூர்த்தியார்	சந்தனம் அரைத்துத் தந்தவர்
16. முருகர்	பூத்தொண்டு செய்தவர்
17. உருத்திர பசுபதி	உருத்திரம் வழிபாடு
18. திருநாளைப் போவார்	தோல், வார், நரம்பு கோரோசனை தந்தவர்-தில்லையை வழிபட ஏங்கியபவர்
19. திருக்குறிப்புத் தொண்டர்	ஆடை துவைத்துத் தந்தவர்
20. சண்டேசுரர் (திருநின்ற சுருக்கம்)	மணலில் லிங்கம் அமைத்து பாலபிசேகம் செய்தவர்
21. திருநாவுக்கரசர்	தேவாரம் பாடி உழவாரத் தொண்டு செய்தவர்
22. குலச்சிறையார்	அடியவர் வழிப்பாடு சமணம் வீழத்

	துணை நின்றவர்
23. பெருமிழலைக் குறும்பர்	சுந்தரைப் போற்றியவர்
24. காரைக்கால் அம்மையார்	திருவருளால் மாம்பழம் பெற்றவர் பேயாகித் தமிழ்ப் பாடியவர்
25. அப்பூதியடிகள்	திருநாவுக்கரசரைப் போற்றியவர் தண்ணீர் பந்தல் மூலம் அறம் செய்தவர்
26. திருநீரகர்	ஆத்மார்த்த பரார்த்த பூசை செய்தவர்
27. நமிநந்தியடிகள்	தண்ணீரில் திருவிளக்கை ஏற்றியவர்
(வம்பறா வரிவண்டுச் சுருக்கம்)	
28. திருஞானச் சம்பந்தர்	வேதம், தமிழ் செய்தவர் சமணத்தை வீழ்த்தி சைவத்தை நிலைநாட்டியவர்
29. ஏயர்கோன் கலிக்காமர்	இறைவனைத் தூதுநடத்தியமைக்குச் சுந்தரர் மேல் சினம் கொண்டவர்
30. திருமூலர்	சிவாகமங்களைத் தமிழில் பாடியவர்
31. தண்டியடிகள்	சமணத்தை எதிர்த்தவர் திருக்குளத் திருப்பணி செய்தவர்
32. மூர்க்கர்	சூதாடி அன்னதானம் செய்தவர்
33. சோமாசி மாறர்	சோமயாகம் செய்தவர்-சுந்தரரைப் போற்றியவர்
வார் கொண்ட வனமுலையாள் சுருக்கம்	
34. சாக்கியர்	கல்லெறிந்து வழிப்பட்டவர்
35. சிறப்புலி	அன்னதானம் செய்தவர்
36. சிறுத் தொண்டர்	பிள்ளைக் கறி செய்து அமுது படைத்தவர்
37. கழறிற்று அறிவார்	சைவ நெறி ஓங்க ஆட்சி செய்தவர் கயிலை நாதனுக்கு உலா பாடியவர்
38. கணநாதர்	சம்பந்தரைப் போற்றியவர்
39. கூற்றுவர்	திருவடியை முடியாகச் சூடிக் கொண்டு ஆட்சி செய்தவர்
பொய்யடிமை இல்லாத புலவர் சுருக்கம்	
40. பொய்யடிமை இல்லாத புலவர்	மெய்ப்பொருளாகியஇறைவனுக்கு அடிமைப்பட்டவர்கள் (தொகையடியவர்)
41. புகழ்ச்சோழர்	திருநீறு போற்றி தீயில் இறங்கியவர்
42. நரசிங்கமுனையரையர்	ஆதிரைநாளில் அடியவர்கள் அமுது படைத்தவர்

43. அதிபக்தர்	பிடிக்கும் மீன்களில் முதல் மீனை இறைவனுக்குக் காணிக்கை தந்தவர்
44. கலிக்கம்பர்	தவறுகண்டு மனைவியின் கையை வெட்டியவர்
45. கலியர்	திருவிளக்கை ஏற்றியவர்
46. சக்தி	தவறாகப் பேசியவர் நாவை அறுத்தவர்
47. ஐயடிகள் கடவர் கோன்	தலயாத்திரை செய்து வெண்பா பாடியவர்

கறைக்கண்டன் சருக்கம்

48. கணம்புல்லர்	தலை முடியையும் விளக்காக ஏற்றியவர்
49. காரி	திருக்கோயில் திருப்பணி செய்தவர்
50. நின்றசீர் நெடுமாறர்	சமணம் துறந்து சைவம் போற்றியவர்
51. வாயிலார்	அகப் பூசை செய்தவர்
52. முனையடுவார்	போருக்குத் துணை நின்று பொருளீட்டி அன்னதானம் செய்தவர்

கடல் சூழ்ந்த சருக்கம்

53. கழற்சிங்கர்	தவறுகண்டு மனைவியின் கையை வெட்டியவர்
54. இடங்கழியார்	அன்னதானத்திற்குக் கருவூலத்தை திறந்து விட்டவர்.
55. செருத்துணையார்	தவறுகண்டு அரசியின் மூக்கை அறுத்தவர்
56. புகழ்த்துணையார்	திருக்கோயில் பூசை செய்தவர்
57. கோட்புலியார்	இறைவன் நிவேத்தியத்திற்கு வைத்த நெல்லை உண்ட உறவினரைக் கொன்றார்

பக்தராய்ப் பணிவார் சருக்கம்

58. பக்தராய்ப் பணிவார்	தொகையடியார்கள்
59. பரமனையே பாடுவார்	தொகையடியார்கள்
60. சித்தத்தைச் சிவன் பாலே வைத்தார்	தொகையடியார்கள்
61. திரு ஆரூர்பிறந்தார்கள்	தொகையடியார்கள்
62. முப்போதும் திருமேனி தீண்டுவார்	தொகையடியார்கள்
63. முடுநீறு பூசிய முனிவர்	தொகையடியார்கள்
64. அப்பாலும் அடிச் சார்ந்தவர்	தொகையடியார்கள்

மண்ணியசீர்ச் சருக்கம்

65. பூசலார்	மணக்கோயில் கட்டியவர்
66. மங்கையர்க்கரசியார்	சமணத்தை வீழ்த்தி சைவம் நிலைநாட்டியவர்
67. நேசர்	ஆடை தானம் செய்தவர்
68. கோச்செங்கட்சோழர்	திருக்கோயில்கள் கட்டியவர்
69. திரு நீலகண்ட யாழ்ப்பாணர்	இசைக்கருவியால் இறைபுகழை யாழில் மீட்டியவர்
70. சடையனார்	சுந்தரரின் தந்தையார்
71. இசை ஞானியார்	சுந்தரரி தாயார்
	சுந்தரரையும் சேர்த்து 72 பேர்

சிவத்தொண்டில் மாறுபட்ட மேலான தொண்டு செய்தவர்கள்
சமணத்திலிருந்து சைவத்திற்கு மாற துணை புரிந்தவர்கள்

1. குலச் சிறையார்	அடியார் வழிபாடு சமணம் வீழ்த்த துணை நின்றவர்
2. திருஞான சம்பந்தர்	வேதம் தமிழில் செய்தவர்
3. தண்டியடிகள்	மணத்தை எதிர்த்தவர்
4. நின்றசீர் நெடுமாறர்	திருக்குளத் திருப்பண் செய்பவர்
5. மங்கையர்கரசியார்	சமணம் துறந்து சைவம் போற்றியவர் சமணத்தை வீழ்த்தி சைவம் நிலைநாட்டியவர்

ஆடை வழங்கி தொண்டு செய்தவர்கள்

1. திருநீலகண்ட யாழ்பாணர்	இசை கருவியின் மூலம் இறை புகழை யாழில் மீட்டியவர்
2. ஆனாயர்	இறைபுகழைக் குழலில் இசைத்தவர்

குழந்தை தானம் செய்து சிவதொண்டு செய்தவர்கள்

1. சிறுதொண்டர்	பெற்ற பிள்ளையினைக் கறி சமைத்தவர்
2. மானக் கஞ்சாறர்	மகளின் கூந்தலைத் தந்தவர்

கண் தானம்

1. கண்ணப்பர்	தன் கண்ணையே சிவனுக்காகக் கொடுத்தவர்

மனைவி தானம்

1. இயற்பகையார்	மனைவியை ஈந்தவர்

1. புகழ்சோழர்	திருநீறு போற்றி தீயில் இறங்கியவர்
2. கலிக்கம்பர்	தவறு கண்டு மனைவியின் கையை வெட்டியவர்
3. சக்தி	தவறாகப் பேசியவர் நாவை அறுத்தவர்
4. கழற்சிங்கர்	தவறு கண்டு மனைவியின் கையை வெட்டியவர்
5. செருத்துணையார்	தவறு கண்டு அரசியின் மூக்கை அறுத்தவர்
6. கோட்புலியார்	இறைவன் நிவேத்தியத்திற்காக வைத்த நெல்லை உண்ட உறவினரைக் கொன்றவர்

திருதொண்டில் தீருநீலகண்டத்தின் மீது ஆணையினால் மேன்மையான தொண்டு செய்தவர் திருநீலகண்ட நாயனார்

ஒரே இல்லத்தில் கணவன் மனைவியாக இருந்த போதிலும் இல்லற நெறி வாழ்க்கை வாழாமல் திரு நீலகண்டத்தின் மீது ஆணையினால் ஒருவரை ஒருவர் தொடாமல் வாழ்ந்து கொண்டு முதுமையே அடைந்து விடுகின்றனர்.

முடிவுரை

திரு நீலகண்டத்தின் மீது ஆணையினால் சிவபெருமான் நேரில் வந்து இல்லற நெறி வாழ்க்கை வாழ மூப்பு அடைந்தவர்களை இளமையாக்கி அருள் புரிந்துள்ளார். உயிர் தானம் ஒரே நாளில் முடிவடைகிறது. ஆனால் இச்சைகளைத் துறந்து முதுமை வரை ஒரே வீட்டில் கணவன் மனைவியாக வாழ்ந்த முன் உதாரணம் கொண்ட திருநீலகண்டரும் திருகாப்புசுந்தரி அம்மை தம்பதியினர்களின் அர்ப்பணிப்பு இயற்கையை விட மேன்மையான சிறப்பாகும்.

இதன் மூலம் இன்றைய காலத்தில் ஒருவனுக்கு ஒருத்தி என்ற இல்லற வாழ்க்கை நெறிமுறை தத்துவமும், இல்லறமே நல்லறம் என்ற கூற்றுபடியும் மக்கள் வாழ எல்லாம் வல்ல ஆண்டவன் சிவப்பெருமானால் உலகிற்கு உணர்த்தப்பட்டிருக்கின்றது என்பது உண்மையாகின்றது.

47. சைவத் தமிழ் நெறியில் குமரேச சதகம்



பா.உதயகுமார்
தமிழாய்வாளர்
திருப்புவனம்

முன்னுரை

சைவத்தமிழ் நெறியில் காலம் தொட்டு வந்த சிற்றிலக்கியங்களில் குமரேச சதகம் என்னும் நூல் சிறந்ததொரு பக்தி நூலாகவும், வாழ்வியல் இலக்கணங்களை வகுத்துக்காட்டும் நல்லதொரு நீதி நூலாகவும் உள்ளது. திருவாசகம், திருமந்திரம், பெரியபுராணம் போன்ற சைவ நூல்களோடும், ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நல்வழி மூதுரை நறுந்தொகை போன்ற நீதி நூல்களோடும், மேலும் திருக்குறள் மணிமேகலை போன்ற இலக்கியங்களில் கூறப்படும். வாய்மை, அன்பு, கருணை, பக்தி, ஒழுக்கம் ஆகிய அறவாழ்வுக்கான கோட்பாடுகளையே இக்குமரேச சதகம் எனும் சிற்றிலக்கியமும் கூறுகிறது என்பதை விளக்குவதே எமது இந்த ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

சைவ சமயத்தின் மெய்ப்பொருள்

சைவ சமயம் என்பது சிவ சமயம். சைவ சிந்தாந்தம் என்பது - சைவ சமயத்தின் தெளிவுண்மை, சைவநூல் என்பது - சிவ ஆகமங்கள். சைவம்-சிவபெருமானையே முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயமாகும். சமயத்துவம் என்பதற்கு, மதத்தின் அடிப்படையான உண்மை என்பதும் எல்லை. காலம், தருணம், வேளை, மதம், உடன்படிக்கை, தீட்சை, மரபு ஆகியவையாகும். ஆகவே சைவ சமயம் தொன்மைத் தொட்டு வருவன. காலம் கடந்தவையாகும். ஆகவே சைவநெறி காட்டும் சிவப்பரம் பொருளையே வழிபடும் முழுமுதற்கடவுளாகக் கொண்டு தொழுது பக்தி செய்து வாழ்பவர்கள் சைவநெறியாளர்கள். சைவத்திற்கு நாதமும் விந்துமாக இருப்பது திருமந்திரமும், திருவாசகமுமே ஆகும். உலகம் உய்யவும் சைவம்

நின்றோங்கவும் சிவத்தின் அருளால் அமைந்த நூல் திருத்தொண்டர்புராணம் என வழங்கும் தெய்வச் சேக்கிழார் இயற்றிய பெரிய புராணம். இந்நூல் சைவத்திற்கு அரணாக அமைந்திருக்கிறது. மேலும் சைவநெறி இலக்கியங்களில் மிகப் பெரிய நூல்களாகத் திகழ்வது திருமந்திரமும், திருவாசகமும் தேவாரமும் மேற்கண்ட பெரிய புராணமும் சிவஞான போதமும் திருப்புகழ் போன்ற பேரிலக்கியங்கள் ஆகும். இதன் வரிசையில் அருணகிரியார் குமரகுருபரர், நக்கீரர் முதலிய மகான்கள் படைத்தருளிய ஞான நூல்கள் எல்லாம். சிவபெருமானையே முருகக்கடவுளாகக் கண்டும், துதித்தும், பத்தி செய்தும் தொண்டும் செய்தும் பிறவிப் பெருங்கடல் நீந்தி நிலமிசை நீடுவாழ்கிறார்கள்.

தந்தைமொழித் தமிழ்

ஆதி சைவம் வீர சைவம், ஏக சைவம், தூய சைவம் என்று, சொல்லக்கூடிய சைவத்தின் மூலம் சிவமே. மலமற்ற ஒன்றே சிவம். சிவநெறியே சைவ நெறியாகும்.

''சிவம்வேறு சைவம் வேறு என்றில்லை
சிவமே சைவம், சைவமே சிவம்
சிவமொழியென்பதும் சைவமொழியென்பதும் ஒன்றே''

இதற்கு அகச்சான்று யாது எனில், என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே என்ற திருமூலரின் திருமந்திரமே நமக்கு மெய்மொழியாக விளக்குகிறது. மேலும் ஒரு அகச்சான்றாக வரலாற்றுச் செய்தி யாது எனில், ஒரு முறை வடலூர் வள்ளலார் அவர்களிடம் சிறி சங்கராச்சாரிய சுவாமிகள் சமசுகிருதமே எல்ல மொழிகளுக்கும் தாய்மொழி எனக் கூறினாராம். உடனே வள்ளலார் அவர்கள், அப்படியாயின் தமிழ் தந்தை மொழி எனக்கூறி தமிழின் சிறப்பை விரிவாக விளக்கித் தமிழ் என்னும் சொல்லுக்கு ஓர் உரையும் அப்போதே செய்து சிறி சங்கராச்சாரியாருக்குத் தமிழின் பெருமையை உணர்த்தி அருளினார் என்ற வள்ளலார் வரலாற்றுச் செய்தியின் மூலம் தந்தை சிவபெருமானின் மொழி தமிழே என்பதில் ஐயமின்றி நமக்கு அறியமுடிகிறது.

செகத்தோர் போற்றும் சிவனடியார்கள்

சைவத்தமிழ் வளர சமயக்குரவர்களாகிய சம்பந்தர் அப்பர் சுந்தரர். மாணிக்கவாசகர் ஆகியவரும் சந்தானக் குரவர்களான, மெய்கண்டார் அருள்நந்திசிவம், உமாபதிசிவம், மறைஞான சம்பந்தர் ஆகியவர்களும் சைவம் வளர அரும்பணி ஆற்றியவர்கள். மேலும் சிவபெருமானின், பேரருள் உபதேசத்தை நந்திதேவரும், நந்தி தேவரிடமிருந்து திருமூலரும், ஞான உபதேசம் பெற்றுச் சைவத்தமிழ் வழியே உலகர் உய்ய பேர் ஒழுக்கம் பற்றி செந்நெறிக் காட்டினர் சிறந்த இலக்கியங்கள் மூலமாக, அருளாளர்கள் இவர்களின் பேர் இலக்கியங்கள் காலத்தால் அழியாத சாகாவரம் பெற்றவை. மேற்கண்ட அருளாளர்கள் நெடுங்காலம் உலகில் சித்தர்களாய் இருந்து, செயற்கரிய பலசெயல்கள் செய்து, சிவமயமாய்ச் சிறந்த இலக்கியமாக வாழ்கின்றார்கள்.

கந்தர் அடியார்களின் இலக்கியங்கள்

எண்ணில் பல சித்தர்களும் ஞானிகளும் யோகிகளும் முனிவர்களும் கந்தக் கடவுளையே சொந்தக் கடவுளாகவும் முழுமுதல் கடவுளாகவும், வழிபட்டுப் பல பக்தி இலக்கியங்களைப் படைத்தருளினார்கள. அவ்வகையில் அருணகிரியார் இயற்றிய திருப்புகழ். நக்கீரர் இயற்றிய திருமுருகாற்றுப் படை, குமரகுருபரர் இயற்றிய நீதி நெறிவிளக்கம். உலக நாதனார் இயற்றிய உலகநீதி. தண்டபாணி சுவாமிகளின் சிறிதேவ சேனாபதி கவசம், இவருக்கு முருகதாசர் என்ற பேரும் உண்டு. தேவராய சுவாமிகள் அருளிய கந்தர் சசுடி கவசம் - சிறிமத் சத்குரு சந்தானந்த சுவாமிகள் அருளிய சிறிசுகந்தகுரு கவசம், பாம்பன் சிறி மத் குமரகுருநாத சுவாமிகள் அருளிச் செய்த பகை கடிதல், குமாரசுதவம், சண்முக கவசம் வடலூர் வள்ளலார் என்று அனைவராலும் அன்போடு அழைக்கப்படும் சிதம்பர இராமலிங்க சுவாமிகள் அருளிச் செய்த கந்தர் சரணப்பத்து, தெய்வமணிமாலை ஆகிய அருள்நிறைந்த முருகபெருமானின் திருப்புகழை கந்தனடியார்கள் மனம் மொழி மெய்களால் நெகழ்ந்துருகி தமிழ்க்கடவுள்

முருகப்பெருமானின் பேரருளைப் பாடி நூலாக்கினார்கள். பக்தியாலும் தொண்டாலும் தூய நல் ஒழுக்கத்தாலும் அருள் குணத்தாலும் பேரின்ப பெறுவாழ்வைப் பெற்றுய்ந்தார்கள்.

வாழையடி வாழையென வந்த குருபாததாசடர்

மேற்கண்ட அருளாளர்கள் வரிசையில் வாழையடி வாழையென வந்தவர். அருள்மிகு திரு குருபாததாசரும் ஒருவராவர். இவரது இயற்பெயர் முத்து மீனாட்சிக்கவிராயர் இவரது மற்றைய செய்திகள் கிடைக்கப்பெறவில்லை. இவர் அருளிச்செய்த குமரேசசதகம், புதுக்கோட்டைக்கு அருகே உள்ள கோயில் கொண்டிருக்கும் குமரக் கடவுளையே பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பெற்ற நூல் குமரேச சதகம். சதகம் என்பதற்கு நூறு - நூறு செய்யுட் கொண்ட பிரபந்தம் ஆகும். அதாவது நூறு பாடல்கள் கொண்ட இலக்கியமாகும். குமரேச சதகமெனும் இச்சிற்றிலக்கியம் சிறந்த ஆன்மநேத்தை வளர்க்கும் நூலாக உள்ளது. காப்பு அவையடக்கம் நீங்க நூறுபாடல்களைக் கொண்ட இலக்கியமாக உள்ளது. இக்குமரேச சதகம் - உலக மாந்தர்களை உய்விக்கும் உயர்ந்த நூல்கள் வரிசையில் இந்நூலும் சிறந்தொரு நூலாகும். குமரேச சதகத்தில் வரும் நூறுபாடல்களும் அருள் அன்பு, அறிவு, கல்வி, அறம், அடக்கம் தெளிவு வீரம். காதல், நட்பு, கடமை, ஈகை, புகழ் நிலையாமை, புலை கொலை, களவு தவிர்த்தல், ஊழ், பொறுமை தவம். ஞானம் ஆகிய நல்ஒழுக்கப் பண்புகளை அழியாச் செல்வங்களை அழகாக அனைவருக்கும் எடுத்துக்கூறும் அருமையான நூல். இக்குமரேச சதகம் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை என்பதை கற்றுணர்ந்து அறியலாம்.

திருநீறுபெறும் முறை

சைவத்தின் அடையாளமாக இருப்பது திருநீறு. இதை நீறு இல்லா நெற்றிப்பாழ் என்பார் ஔவையார். மேலும்,

''கங்காலன் பூசும் கவசத்திருநீற்றை
மங்காமல் பூசி மகிழ்வரே ஆமாகில்
தங்கா வினைகளும் சாரும் சிவகதி
சிங்காரமான திருவடி சேர்வீரே என்று திருநீற்றின்

பெரும்பயனை அழகாகச் சொல்கிறார் திருமூலர்
கனியும் அன்புடையரல்லார் ஆயினும் கழியாத் தூயோர்
ஆவார் வெண்ணீறுபூசின், என்பது
திருவுத்தர கோச மங்கை தல புராணம்''

திருஞான சம்பந்தப் பெருமானின் திருநீற்றுப் பதிகம் தான் மதுரையம்பதியில் கூன்பாண்டியன் என்ற மன்னனின்,

''வெப்பு நோயைத் தீர்த்தது என்பது வரலாறு
பூச இனியது நீறு புண்ணியமாவது நீறு
பேச இனியது நீறு பெருந்தவத் தோர்களுக்கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு, அந்தரமாவது நீறு
தேசம் புகழ்வது நீறு, திரு ஆலவாயான் திருநீறே''

இப்பாடல் வரிசையில் திருநீறு பெறும் முறை விளக்கும் பாடல் சிறப்பாக அமைந்துள்ளது. கொடுப்பவர்கள் கீழ்நிற்க மேல்நின்று திருநீறு வாங்கியிடினும் செங்கை ஒன்றாலும், விரல் மூன்றாலும் வாங்கினும், திகழ்தம் பலத்தினோடும் அரியதொரு பாதையில் நடக்கின்ற போதினும், அசுத்த நிலமான அதினும் அங்கே தரிக்கினும், தந்திடின் தள்ளினும் அவர்க்கு நரகம் என்பர் கண்டாய் என்று திருநீறு வாங்கும் முறையை அழகாகக் கூறுகிறார். குருபாததாசர் அவர்கள்.

திருநீறு அணியும் முறை

''திருநீறு அணியும் முறையை அழகாக விளக்கி
சைவநெறி சமயத்திற்குப் புற அடையாளமாகத்
திகழும் திருநீற்றின் பெருமையைச் சிறப்பாக
எடுத்துக்காட்டுகிறது வரும் பாடல்,
பக்தியொரு சிவசிவா என்று திருநீற்றைப் பரிந்து
கையாலெடுத்தும்
பாரினில் விழாதபடி அண்ணாந்து செவியோடு
பருத்தபுயமீது ஒழுக, நித்தம் மூவிரல்களால்
நெற்றியில் அழுந்தலுற நினைவாய்த் தரிப்பவர்க்கு
நீடு வினை அணுகாது. தேகபரி சுத்தமாம்
நீங்காமல் நிமலன் அங்கே சத்தியொடு நித்தம்
விளையாடுவான்

முகத்திலே தாண்டவம் செய்யும் திரு சஞ்சலம் வராது
பரகதியும் உதவும் இவரையே''

சக்தியும், சிவனும் எனலாம் என்று திருநீறு அணியும் முறையைத் தெளிவாக விளக்குகிறார் ஆசிரியர். இன்று நெற்றி நிறைய திருநீறு அணியும் வழக்கம் குறைந்து கொண்டே வருகிறது. காரணம் உருவ அழகை கெடுப்பதாகவும் அது ஒரு அடையாளக் குறியாகவும் நினைத்து விலக்கி வருகிறார்கள் பலர். முன் காலத்தில் மருத்துவர்கள் உடல் பிணி நீக்கும் மருந்தாகவே திருநீற்றைப் பயன்படுத்தி நோயாளிகளுக்கு வழங்கினார்கள். நோய் குணமானவர்கள் திருநீற்றைத் தெய்வமாகவே எண்ணித் தரையில் வீழாது. மேலான நீறை அண்ணாந்து சிவசிவா என்று நெற்றி நிறைய பூசி மகிழ்ந்தார்கள். சளி மற்றும் சரும நோய்களுக்குத் திருநீறையே பயன்படுத்தினர் நம் தமிழர்கள். குழந்தைகளைக் குளிப்பாட்டின உடனே குழந்தையின் உச்சியில் உள்ளங்கையளவு நீறு எடுத்து அப்பி குழந்தைக்குச் சளி, இருமல் வராமலிருக்க செய்தார்கள் நம் தாய்மார்கள். கண்ணுக்கு அணிகலம் கண்ணோட்டம் என்பது போல் நெற்றிக்கு அணிகலம் திருநீறே ஆகும்.

உழவே தலை

உழுவார் உலகத்தார்க்கு ஆணி, உழவே தலை
உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் என்பது
பொய்யாமொழி புலவரின்
மெய்மொழி - சீரைத்தேடின் ஏரைத்தேடு
தொழுதூண் சுவையின் உழுது ஊண் இனிது -
என்பது கொன்றை வேந்தன்

உழவர்க்கு அழகு உழுதுஊண் விரும்பல் வெற்றிவேற்கை
ஏற்றம் உழுது உண்டு வாழ்வதற்கு ஒப்பு இல்லை கண்டியூர்

பழுது உண்டு வேறு ஓர் பணிக்கு நல்வழி
உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்
- பாரதிப்பாடல்

ஏர்முனைக்கு நேர் இங்கே எதுவுமே இல்லை என்பது

கவிஞர்கள்

உட்பட அனைவரது ஆழமான தெளிவான உண்மையே

உழவு இல்லையே உலக உயிர்களுக்கு உணவே இல்லை. உயிர் வாழ்வதற்கு ஆதாரம் ஏதுமில்லை என்பது தான் சத்தியம். அதன் அடிப்படையில் வேளாளர் இயல்பு என்ற தலைப்பில் வரும் பாடல். உழவுத் தொழிலையும், உழவரையும் ஏற்றும் வகையில் அருமையாக அமைந்திருக்கிறார் ஆசிரியர். புகழ்மிக்க அதிகாரமும் தொழிலாளர் சீவனமும், வீரரண சூரவல்லியும் வல்லமைகள் சகலமும் வேளாளர் மொழியின் வரவினால் விளைவஅன்றோ? மயிலேறி விளையாடும் குகனே புல்வயல் நீடுமலை மேவு குமரேசனே என்று வழிபடும் போதும் உலக உயிர்களின் உணவுக்குப் பாடுபடும் உழவர்களின் உன்னதத்தை உயர்த்திக் கூறும் இப்பாடல் கற்பதற்கும் கற்பவர் வாய்வுரைக் கேட்டுச் சுவைப்பதற்கும் அருமையுடையவை.

முடிவுரை

பல்வகை நூல்களோடு இச்சதக நூலையும் ஒப்பிட்டு அதன் கருத்து ஒற்றுமையை விளக்கிய கட்டுரையின் வழியாக அமைத்துள்ளேன். அனைவருக்கும் பயன் தரும் பக்தி நூல் இக்குமரேச சதக நூல். இந்நூலை நன்கு கற்று வழிப்பட்டு கந்தக் கடவுளின் மகிமையை அனைவரும் உணர வேண்டும் என்பதே என் ஆர்வமாகும். கந்த சஷ்டி கவசம் போல் இக்குமரேச சதகமும் மக்கள் மனங்களில் உலாவர வேண்டும்.

48. சைவ இலக்கியங்களில் இறையுணர்வும் பக்தி நிலையும்



க.ச.பவானி
உதவிப்பேராசிரியர் (தமிழ்த்துறை)
அவினாசிலிங்கம் மனையியல்
மகளிர் உயர்கல்வி நிறுவனம்
கோயமுத்தூர்

முன்னுரை

தமிழ் இலக்கியங்களில் சங்க இலக்கியத்திற்கு அடுத்துத் தோன்றிய இலக்கியங்கள் நீதி இலக்கியமும், பக்தி இலக்கியமும் ஆகும். இப்பக்தி இலக்கிய காலத்தில் தோன்றியவையே திருமுறைகளும் நாலாயிர திவ்விய பிரபந்தமும் ஆகும். சைவத்திற்குத் திருமுறையும், வைணவத்திற்குத் திவ்விய பிரபந்தமும் தோன்றின. இந்தப் பக்திப் பேரவையில் மூழ்கித் தழைத்தவர் பலர். சைவ சமயத்தைச் சார்ந்த பலர் பலநிலைகளில் சைவ நெறியினைப் பரப்பி இறைவனுள் கலந்து நின்றனர். இவ்விறையினைப் பரப்பி இறைவனுள் கலந்து நின்றனர். இவ்விறை நிலையில் இறைவர், கடவுள், தெய்வம் பல பெயர் நிலைகளைக் கொண்டு வணங்கினர். இந்நிலையினைப் பற்றியும், இறையுணர்வும், பக்தி, பக்தி நிலை பற்றியும் தெளிவாகக் காட்டுவனவாக இக்கட்டுரை அமைகிறது.

இறை பெயர் நிலை

உலகத் தோற்றம், வளர்ச்சி முதலியவற்றை ஆராய்ந்து கொண்டு சென்றால் எல்லாவற்றிற்கும் மூலகாரணம் உண்டு என்பது விளங்கும். அம்மூலப்பொருளைத்தான் சான்றோர் இறைவன், தெய்வம், இயையுள், கடவுள் என்றெல்லாம் பெயரிட்டு வணங்கினர். இதனையே மாணிக்கவாசகர்,

“ஒரு நாமம் ஒருருவம் ஒன்றுமில்லார்க்கு ஆயிரம்
திருநாமம் பாடித் தெள்ளேணம் கொட்டாமோ”

என்று பாடியுள்ளார். இபற்றுக்கு அடிப்படைக் காரணம் அன்பின் உணர்ச்சியின் கிளர்ச்சி தான் என்பது கூறலாம்.

இறைவன்

இறைவன் அழிவில்லாத வாழ்நாளும், பிணியே இல்லாத வாழ்க்கையும் அறியாமையே இல்லாத முற்றறிவும் இயற்கையாகவே பெற்றியங்குவது இறையாகும் என்று துரை அரங்கசாமி தம் நூலில் சிறப்பாகக் கூறியுள்ளார். இறை இறுத்தல் என்று பொருள். இறுத்தல்-தங்குதல் தலைமை என்றும் பொருள். தங்குதல் எங்கும் வியாபகமாய்த் தங்குதல், தலைமை அறிவிச்சை செயல்களில் முதன்மை. இறை என்ற சொல் அன் விகுதி பெற்று இறைவன் என்றும், இகர விகுதி பெற்று இறைவி என்றும் நின்று பொருள்தரும்.

''முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப்படும்'' (குறள்:388)

என்கிறார் வள்ளுவர். எல்லா ஆற்றலும் உடையதாய் எல்லாவற்றையும் படைப்பதாய்க் காப்பதாய் அமைவது இறைஆகும். ஆன்மீக உலகில் காணப்பெறும் பொருட்கள் அனைத்தும் அதுவேயாகக் காணும் காட்சியும் இறைக்காட்சியே ஆகும் என்பதை மாணிக்கவாசகர்,

'வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான் எனதென்று அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என் சொல்லி வாழ்த்துவனே

என்று பாடியுள்ளார்.

தெய்வம்

தெய்வம் என்ற சொல் மிகச்சிறந்த பொருளை உடையது. தமிழில் தேவு என்ற பகுதியிலிருந்து பிறந்த சொல் தெய்வமாகும். தேவன், தேவி, தேவர் என்ற சொற்கள் தேவு என்ற முதல் நிலையிலிருந்து பிறந்த சொற்கள் எனலாம். இறைவன், தெய்வம் என்ற நிலைப்பாட்டிலேயே கடவுள் என்ற

சொல்லும் அமைந்துள்ளது.

இறையுணர்வு

'மனிதன் தன்னால் காரணம் கூற இயலாத நிகழ்ச்சிகள் உலகில் நடைபெறுவதைக் கண்டான். காரணகாரியத் தொடர்பின்றி எங்கும் எதுவும் நடைபெறுவதில்லை என்றுணர்ந்தான். இதன் பயனாக உண்மைகாணும் முயற்சி தொடர்ந்து நடைபெற்று வந்ததன் விளைவே சமயம் என்பதை ஆவேலுப்பிள்ளை அவர்கள் தனது தமிழர் சமய வரலாறு என்னும் நூலில் அழகாக எடுத்தியம்பியுள்ளார்.

அச்சம், நன்றியுணர்வு, நன்னிமித்தம் ஆகிய உணர்வுகளின் வெளிப்பாடே பக்தி. மக்கள் அச்ச உணர்வு காரணமாகவும் மேற்கொண்ட செயல்களில் இறையுணர்வு பதித்திருந்தது. இயற்கையின் துன்பங்களுக்கு அஞ்சி, தங்களைக் காத்துக்கொள்ள வேண்டி தீ, கடல், காற்று, மலை என்பவற்றை வணங்கினர். நன்றி உணர்வால் சூரியன், சந்திரன், மழை முதலியவற்றை வணங்கினர். உலக அறிவு பெற்று உயிர்வாழ வேண்டி மக்கள் கொண்டிருந்த நம்பிக்கைகள் சமுதாயத்தில் கடவுட் கோட்பாடுகள் மலரத்துணை நின்றன. மக்களின் நம்பிக்கைகள் பக்தி உணர்வுக்குக் கால்கோள் நாட்டின.

''காலப்போக்கில் மக்களின் அறிவு முதிர்ச்சிக்கு ஏற்ப இவ்விறையுணர்வும் வளர்ந்தது. பல்வேறு பிரிவுகளாக வளர்ந்தன. இப்படி வளர்ந்த கோட்பாடு ஏதோ ஒரு முறையில் மக்களின் உயிரோடும் உடலோடும் நன்றி நிற்கின்றது'' என்று க.காந்தி அவர்கள் தமது தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும் என்னும் நூலில் அழகாக கூறியுள்ளார்.

பக்தி

பக்தி என்பது அன்பைவிட உயர்ந்தது. தமிழரின் இறையுணர்விற்கு அடிப்படை உயிர்த்துடிப்பு அன்பாகும். அன்பு என்ற சொல் பக்தி என்ற நிலைக்கு அடித்தளமாக அமையும் பெருமை உடையது. பக்தி என்பது வடமொழி அன்பு என்பது தமிழ்மொழி பசு என்ற அடிச்சொல்லிலிருந்து பிறந்தது பூசித்தல்.

பசனை - பசித்தல் என்றால் ஒன்றுபடுதல் என்று பொருள். இறைவனோடு ஒன்றுபட வேண்டுமானால் அவரிடம் அன்பு கொள்ள வேண்டும். ஒருவர் மற்றவருக்குச் செய்யும் உபகாரத்தின் அடிப்படையில் தோன்றுவது அன்பு. இந்த அன்பே இறைவனோடு ஒன்றுபடுவதற்குக் காரணமாகின்றது. உபகாரம் செய்வதனால் ஏற்படும் நன்றி உணர்வே இந்த அன்புக்குக் காரணமாக அமைகின்றது. நன்றியுணர்வு மறவாமையை ஏற்படுத்துகிறது. எனவே எண்ணமெல்லாம் இறைவனுடைய வடிவமாக ஆகிவிடுவதே பக்தி தான் கெட்டு நிற்கும் அன்பு நிலையே பக்தி என்பதை,

''ஊன்கெட்டு உயிர்கெட்டு உணர்வுகெட்டு என் உள்ளமும் போய்
நான் கெட்டவா பாடித்தெள்ளேணம் கொட்டாமோ''

என்பார் மாணிக்கவாசகர். பக்தி என்பது கடவுள், குரு முதலியோரிடத்து வைக்கும் அன்பு வழிபாடு ஆகிய பொருண்மைகளுடைய வடமொழி வழித் தமிழுக்கு வந்த சொல்லாகும் என்பர் ச.வே.சுப்ரமணியம்.

பக்தி சொல்லாட்சி

பக்தி என்ற சொல்லுக்கு அன்பு என்பது பொருள். வடமொழியில் ''கலந்து நிற்றல்'' என்று பொருள் கூறுவர். தமிழ்க் கவிஞர்கள் பக்தி என்ற சொல்லை வைத்து இறைவனோடு ஆன்மாக்கள் கலந்து நிற்கும் நிலையைப் பாடினர். திருநாவுக்கரசர், இறைநோக்கி,

''பக்தனாய்ப் பாடமாட்டேன்'' என்றும்,
(தேவாரம் 4:23:1)

''முத்தனை முடிவொன்றிலா மூர்த்தினை'' என்றும்
(தேவாரம் 5:40:8)

''பக்தியால் ஏற்றிநின்று பணிபவர் நெஞ்சத்துள்ளார்''
(தேவாரம் 4:25:5)

என்றும் பாடியுள்ளார். திருஞானசம்பந்தர்,

''பக்தர்கட்கு அருள் செய்து பயின்றானே''
(தேவாரம் 3:4:10)

என்றும்,

''பக்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்''
(தேவாரம் 4:25:5)

என்றும் கூறியுள்ளார்.

அன்பு நெறியே பக்தி நெறி

அன்பு நெறியே பக்தி நெறியாகும். இறைக்காட்சி பெற உரிய நெறிகள் இரண்டு. இறைஞானம் பெறற்குரிய நெறியை அறிவுநெறி என்றும், இறைக்காட்சி பெறற்குரிய நெறியை அன்பு நெறி என்றும் வழங்கலாம். அறிவு நெறியை வடநூலார் ஞானமார்க்கம் என்றும், அன்பு நெறியை பக்தி மார்க்கம் என்றும் கூறுவர். அறிவு நெறிக்கும் அன்பு நெறியே இன்றியமையாதது. ஞானம் என்பது ஈசன் பால் அன்பு. எனவே அறிவு நெறியையும் அன்பு நெறியினுள் அடக்கித் தமிழருடைய தனிப்பெரும் நெறி அன்பு நெறியே எனத் துணியலாம். இதனை துரை, அரங்கசாமி அவர்கள், ''அறிவு நெறி என்பது கல்வியறிவு நிறைந்தவர்களால் மேற்கொள்ளப்படுவது. அன்பு நெறி என்பது கற்றார்க்கும் மற்றார்க்கும் ஒருங்கே பயன்படுவது''

''நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுள்ளே, புக்குநிற்கும் பொன்னார்சடைப் புண்ணியன்'' என்று திருநாவுக்கரசர் கூறினாற்போல அன்பின் வழியினால் பக்தியும், பக்தியின் நெறியினால் இறைவனையும் அடையமுடியும். எனவே அன்பு நெறியே பக்தி நெறியாக மலர்கிறது.

பக்தி உணர்வும் பயனும்

பக்தி உணர்வு உலகம் முழுவதும் பரவிப் பண்பையும் அன்பையும் வளர்த்தது. மன்னருக்கும் மக்களுக்குமிடையே உள்ள இடைவெளி நீங்கி நெருக்கம் ஏற்பட்டது. இயற்றமிழ், இசை வடிவு பெற்றது. அதனால் மக்கள் அனைவரிடமும் அருந்தமிழ் பயின்றது. பண்டிதர் மொழியாக இருந்த பைந்தமிழ்,

பாமரர் மொழியாக மாறியது. வடசொல் கலப்பு குறைந்து சொல்வளம் சிறந்து விளங்கியது. தமிழ்மொழி பக்திமொழியாக உருப்பெற்றது. பதிகமுறை தோன்றியது. பக்தி இலக்கியங்களான தேவார, திவ்விய பிரபந்தங்கள் பிறந்தன. சைவ வைணவ சமயங்கள் தமிழ் மொழிக்கும், தமிழ் மக்களுக்கும் இரு கண்கள் என்றாயின். பழஞ்செய்யுள் மரபு முறையில் சிற்றன்பக்காதல் பேரின்பக்காதலாக அமைந்தது.

தொகுப்புரை

எல்லாவற்றுக்கும் மூலக்காரணமாக விளங்கும் மூலப்பொருளைத் தான் சான்றோர் இறைவன் என்று வணங்கினர். நன்றி உணர்வாலும், அச்ச உணர்வாலும் அந்த இறைவன் மீது பக்தி ஏற்படுகின்றது. அன்பு நெறியே பக்தி நெறியாக மலர்கிறது. அதன் விளைவாகப் பக்தி இலக்கியங்கள் முகிழ்ந்தன. கோயில்கள் பெருகின. சைவ இலக்கியங்கள் பக்தி நெறி பரப்பி, இறை உணர்வை தூண்டின. இச்செய்திகளை உள்ளடக்கியதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

49. பட்டினத்தார் பாடல்களில் சைவக் கோட்பாடுகள்



ரோ. விசயலட்சுமி
ஆய்வியல் நிறைஞர்
இராணி மேரிக் கல்லூரி
சென்னை

முன்னுரை

உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே என்று தொல்காப்பியம் கூறும். சாராண மனிதனை உயர்ந்தவனாக, மேம்பட்டவனாக ஆவதற்கு ஆவன செய்வது சமயம். ஒரு சமுதாயத்தில் விழுமியங்கள், கதைகள், பழமொழிகள், சமயம் என்பவற்றினூடாக வெளிப்படுகின்றன. இறையுணர்வு என்பதே அன்புணர்வுதான். அன்பு சுரக்கும் இடத்தில் அருள் சுரக்கும் என்பதைக் கொள்கையாய்க் கொண்டது சைவ சமயம்.

மனிதனை நல்வழிப்படுத்துவதற்கும், நெறிப்படுத்துவதற்குமான ஊடகமாகச் சமயம் செயற்படுகின்றது. மனிதனை நன்னெறிப்படுத்த ஒவ்வொரு காலக்கட்டத்திலும் பெரியோர்கள், அருளாளர்கள் பலர் தோன்றியுள்ளனர். அவர்களுள் வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபில் சைவமும், தமிழும் தழைக்கச் செய்த அருளாளருள் பட்டினத்தார் தனியிடம் பெறுகிறார்.

காலத்தால் மிகத் தொன்மையான தத்துவ வளமிக்க சமயம் சைவ சமயமாகும். சைவத்தின் கோட்பாடுகளைப் பட்டினத்தார் பாடல்கள் வழி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சைவம்

அன்பே சிவம் என்பதுதான் சைவத்தின் தாரக மந்திரம். சிவபெருமானை முழுமுதற்கடவுளாக வணங்கும் சமயமாகும். சிவர் யார்? எத்தகைய இயல்புடையவன் என்ற வினாக்களுக்கு,


''அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே''

சைவ சமயம் சிவ வழிபாட்டுக்கும், இறைவனுக்கும், மனிதனுக்குமான பாலமாகவும், தமிழுக்கும் ஆற்றிய பணிகள் கட்டுரைக்க இயலாதவை. சமயம் என்பது அடையாளமும், வெறும் குறிகளும் அன்று. அவற்றைக் கடந்து நின்று மனிதரை நெறிப்படுத்துவதற்கும் முறைப்படுத்துவதற்கும் தோன்றியது.

சைவ வழிபாடு

சைவ நெறியின், சிவ வழிபாட்டின் நோக்கம் ஞானத்தைப் பெறுவதே. சிவ வழிபாடும், சிவநெறி அடிப்படைக் கொள்கைகளும் வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட தொன்மையுடையவை. பாசமாம் பற்றறுத்து பாரிக்கும் ஆரியனே என்ற வரிகள் சிவ வழிபாட்டின் நோக்கத்தை விளக்குகின்றன.

மூன்று மூலங்கள்



பசுவாகிய உயிர் பாசமாகிய பற்றிலிருந்து விடுபட்டு பதியாகிய இறைவனை (சிவனை) அடைவதே வழிபாட்டின் நோக்கமாகும்.

சைவ சித்தாந்தம்

சைவ சித்தாந்தம் என்னும் உன்னதநெறி சைவ சமயத்தின் உயிர்நாடி எனப் போற்றப்படுகின்றது. சைவ சித்தாந்தத்தினை வேதாந்தம் எனும் மரத்தில் காய்த்த பழுத்த கனி என்கிறார். "வேதம் என்னும் பாதபம் வளர்த்தனை"

அன்பே சிவம்

அன்பே சிவம் அன்பு தான் எங்கள் சிவபெருமான். அன்பு வேறு, சிவன் வேறு என்பார். அறியாமைமிக்கவர்கள். இரண்டும் ஒன்றே என்று உணர்ந்தால் மட்டும் இறையருள் வாய்க்கும். இதனை வலியுறுத்திய திருவள்ளுவரும்,

"அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு"

என்கிறார்.

"காடே திரிந்தென்ன காற்றே புசித்தென்ன கந்தைசுற்றி
ஓடே யெடுத்தென்ன வுள்ளென்பி லாதவ ரோங்குவிண்ணோர்
நாடே யிடைமரு தீசர்க்கு மெய்யன்பர் நாரியர்பால்
வீடே யிருப்பினு மெய்ஞ்ஞான வீட்டின்ப மேவுவரே"

உள்ளத்தில் மெய்யன்பில்லாதவர்கள் காட்டில் வாழ்ந்தாலும் காற்றையே யுணவாய்க் கொண்டாலும், கந்தைத் துணியை அணிந்து பிச்சையேற்றாலும் ஒன்றும் பயனில்லை. இறைவனுக்கு வேண்டியது அன்பு. அவ்வன்புடையோர் எவ்விடமிருந்தாலும் இறையருள் கிட்டும் எனப் பட்டினத்தார் அன்பின் மேன்மையை எடுத்துரைப்பது நோக்கத்தக்கது.

மனிதநேயப் பரிவு

மனிதம்+நேயம் = மனிதநேயம்

சைவம் மனித நேயத்தை வற்புறுத்தும் ஓர் அன்பு நெறி சிற்றுயிர்கள் இடத்தும் கருணை காட்ட வேண்டும் என்பதனைக்

"கோத்து பிரகாசங் கொண்டுருகி பண்டமெல்லாம்

காத்தபடியே கயிலாயஞ் சேராமல்
வேற்றுருவப் பட்டியேன் வெள்ளம் போலுள்ளுருகி
ஏற்றுங் கழுவி லிருந்தபிண மானேனே''

எல்லா உயிர்களிடத்திலும் அன்பு செலுத்த வேண்டும். இதனை வலியுறுத்தியே,

''எவ்வுயிரும் நீங்கா துறையும் இறைசிவ னென்று
எவ்வுயிர்க்கும் அன்பாயிரு''

என மறைஞான தேசிகரும் கூறுவது ஈண்டு மனங்கொள்ளத் தக்கதாகும். இரக்கமின்றி வாழும் வாழ்க்கையினைப் பட்டினத்தார் கழுவிற்றொங்கிய பிணத்திற்கு ஒப்பாக்குவது ஏற்கத்தக்கது.

ஈகை என்னும் ஈடு இணையில்லா அறம்

''ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்'' எனக் கொன்றை வேந்தன் ஈகையின் சிறப்பை எடுத்துரைக்கிறது.

''நாயாய்ப் பிறந்திடி னல்வேட்டையாடி நயம்புரியுந்
தாயார் வயிற்றினரராய்ப் பிறந்து பின் சம்பன்னராய்க்
காயா மரமும் வறளாங் குளமுங்கல் லாவுமென்ன
ஈயா மனிதரை யேன்படைத் தாய்கச்சி யேகம்பனே''

காயாத மரமும், நீரில்லாத குளமும், கல்லாற் செய்யப்பட்ட பசு இவைகளினால் பயனில்லாததைப் போன்று ஈகையில்லா மனிதரின் பிறப்பினைப் பட்டினத்தார் இகழ்ந்துரைக்கிறார். இதனை வலியுறுத்தியே வள்ளுவரும்,

''ஈத்து உவக்கும் இன்பம் அறியார்கொல் தாம் உடைமை
வைத்து இழுக்கு வன்கணவர்?''

என ஈகையின் அறத்தை எடுத்துரைக்கிறார்.

கொல்லாமை, புலால் உண்ணாமை

உடம்பினில் உயிர் இருக்கும் வரை மட்டுமே. அவன் மனிதன்; உயிர் பிரிந்தால் பிணம். இறந்த பிணத்தை இடுகாட்டில்

புதைக்கிறோம். வாயில்லாத சீவராசிகளைக் கொன்று நம் வயிறு என்னும் இடுகாட்டில் புதைக்கிறோம். கொலையும் புலானுண்ணுதலுமே பாவங்களுள் தலையானவை.

"கொன்றேன்னேக முயிரையெல் லாம்பின்பு கொன்றுக் கொன்று

தின்றே னதன்றியுந் தீங்குசெய் தேனது தீர்கவென்றே
நின்றேனின் சந்நிதிக் கேயத னாற்குற்ற நீ பொறுப்பாய்
என்றே யுனைநம்பி னேனிறைவாகச்சி யேகம்பனே"

பல உயிரகளைக் கொன்றேன். பின் வதைத்து அவைகளைப் புசித்துப் பல தீமைகளைச் செய்தேன். அறியாமையால் செய்த குற்றங்கள் அனைத்தும் பொறுத்து மன்னித்தருள்க என இறைவனிடம் பட்டினத்தார் வேண்டி நிற்கிறார். இவ்வாறே தாயுமானவரும்,

"கொல்லா விரதங் குவலயமெல்லாம் ஓங்க
எல்லார்க்குஞ் சொல்வது என்னிச்சை பராபரமே"

என்கிறார்.

ஒன்றே குலம் ஒருவனே தேவன்

இறைவன் ஒருவன் அவனே பரம்பொருள் அவன் ஒருவனே மெய்ப்பொருள் "ஒன்றென்றிரு தெய்வமுண்டென்றிரு" தெய்வம் ஒன்று என்றும், அத்தெய்வம் என்றும் உண்டு என்று நம்பியிருக்க வேண்டும் என்று பட்டினத்தார் இறைவனின் தன்மையை இடித்துரைக்கிறார். இதனைத் திருக்குறள்,

"தனக்குவமை இல்லாதான்" என்கிறது
"யாதொரு தெய்வம் கொண்டீர் அத்
தெய்வமாகி யாங்கே
மாதொரு பாகனார் தாம் வருவர்"

என சிவஞான சித்தியார் கூறுவது இறைவன் ஒருவனே என்னும் இவ்வுண்மையைத் தெளிவுபடுத்துகிறது.

நிலையாமை

பொதுவாக உயிர்களின் நிலையாமையைச் சொல்லி இறைவனை நாடச் சொல்லுதல் மரபு. உயிர், யாக்கை, பிரபஞ்சத்தின் உட்பொருட்களும் அனைத்தும் அழியக் கூடியது.

''ஊருஞ் சதமல்ல வுற்றார் சதமல்ல வுற்றுப்பெற்ற
பேருஞ் சதமல்ல பெண்டீர் சதமல்ல பிள்ளைளுஞ்
சீருஞ் சதமல்ல செல்வஞ் சதமல்ல தேசத்திலே
யாருஞ் சதமல்ல நின்றாள் சதங்கச்சி யேகம்பனே''

என நிலையாமையைப் பட்டியலிடுகிறார் பட்டினத்தார். இந்த நிலையாமையினைச் சான்றோர்கள் பலர் காலங்காலமாக வற்புறுத்தி வருகின்றனர்.

''நெருதல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமையுடைத்திவ் வுலகு''

என்று ஆன்றோர்கள் அருளிச் சென்ற மணிமொழியினையும் ஈண்டு நோக்குக. இதனையே,

''மலர்தலை உலகத்து மரபுநன்கு அறியப்
பலர் செலச் செல்லாக் காடுவாழ்த்தொடு''

எனப் பழமை காட்டுகிறது தொல்காப்பியம்

முடிவுரை

சமூக நல்லுறவையும், விழுமிய பண்பாட்டையும், மக்களிடையே வளர்த்தெடுப்பதற்கு முதன்மையாகச் சமயங்கள் துணைபுரிகின்றன. மனத்தைச் சமைத்துப் பக்குவப்படுத்தலே சமயம் எனப்படுகிறது. பல நாள் பணிந்து இரந்தால் எவ்வுலகும் அளிக்கும் இயல்புடையவன் என்றும் பிறவாயாக்கைப் பெரியோன் என்று சிவ பெருமானின் சிறப்புகளைப் புராணங்களும், காப்பியங்களும் எடுத்துரைக்கின்றன. முழு முதற்கடவுளான சிவபெருமானின் திருவடிவத்தையும், உலக மாந்தர் இயல்பையும், நிலையாமையையும், பிறவித் துன்பத்தையும் உலகிற்கு அறிவுறுத்துவதிலும் சிறப்பு வாய்ந்தவர் பட்டினத்தார் என்று அறியமுடிகிறது.

50. பாவாணர் பார்வையில் சிவனியம்

முனைவர் அ.சுனோலியா
உதவிப்பேராசிரியர்
இதயா மகளிர் கல்லூரி
கும்பகோணம்

முன்னுரை

மொழி ஞாயிறு எனப் போற்றப்படும் ஞா.தேவநேயப் பாவாணர் சிறந்த சொல்லாராய்ச்சி அறிஞராவார். இவர் தமிழின் தொன்மை, சிறப்பு பிற மொழிகளுக்குத் தாயாய் விளங்கும் தன்மை ஆகியவற்றை ஐம்பத்திற்கும் மேற்பட்ட தம் நூல்களின் வழியே நிறுவியுள்ளார். இவர் கிறித்தவச் சமயத்தைச் சார்ந்தவர் ஆயினும் தமிழிய மதங்களான சைவம், வைணவ இலக்கியங்களை ஆழ்ந்து கற்று, அவற்றின் சிறப்புகளையும், மேன்மைகளையும் பலவாறு எடுத்துரைத்துள்ளார். சைவ சமயம் சார்ந்த அவரது கருத்துக்களை இக்கட்டுரையில் காண்போம்.

மதம் - சமயம் வேறுபாடு

ஆறு, நெறி, கொள்கை, மதம், சமயம் என்பன ஒருபொருட் பன்மொழிகளாக வழங்கப்படுகின்றன. ஆனால் இவற்றுள் நுண்ணிய வேறுபாடு உண்டு. குறிப்பாக மதம், சமயம் ஆகிய இரண்டும் வடசொல்லென்று கருதப்படுகின்றது. இருபொருள் அல்லது நெறிமுறை இன்னவாறிருத்தல் வேண்டுமென்று மதித்துக் கொள்வது மதம், இறைவனை இம்மையிலேனும் மறுமையிலேனும் அடைவதற்குச் சமைவது சமயம். மதத்தைக் காட்டிலும் சமயத்திற்கு ஒழுக்கமும் நோன்பும் மிகவும் வேண்டுவனவாகும் எனப் பாவாணர் உரைக்கின்றார்.

மூவகை மதம்

மக்களின் அறிவுநிலைக்கேற்ப, மதத்தை

1. சிறுதெய்வ வணக்கம்
2. பெருந்தேவ மதம்
3. கடவுள் சமயம்

என மூவகைப்படுத்துகின்றார். இன்பம், துன்பம் ஆகிய இருகாலத்திலும், இம்மை நலத்தை மட்டுமே கருத்தில் கொண்டு சிறுதெய்வங்களை வழிபடுவது, காவு கொடுப்பது ஆகியவை சிறுதெய்வ வணக்கம். சிவன் அல்லது திருமால் என்னும் பெயரால் இறைவனை நாள்தோறும் வழிபட்டு உயிர்க்கொலை நீக்கி, அவ்வம் மத அடையாளம் தாங்கி, இருதிணை உயிர்க்கும் தீங்கு செய்யாது இயன்றவரை நன்மை செய்வது பெருந்தேவ மதம் ஆகும். எங்கும் நிறைந்திருக்கும் இறைவனை உருவ வணக்கமின்றி, உள்ளத்திலேயே வழிபட்டு, இம்மையிலேனும் மறுமையிலேனும் வீடுபெறவொழுகுவது கடவுள் சமயமாகும்.

பெருந்தேவ மதம்

தமிழர்கள் நிலங்களை ஐந்து வகையாகவும் அதற்குரிய தெய்வங்களை ஐந்தாகவும் கொண்டு வழிபட்டனர். அத்தெய்வ வணக்கத்துள் இரண்டு மட்டுமே மதமாக வளர்ச்சி அடைந்தன. சேயோன் வணக்கத்திலிருந்து சிவமதமும் மாயோன் வணக்கத்திலிருந்து திருமால் மதமும் தோன்றி வளர்ச்சி அடைந்தன. எங்கும் நிறைந்தவன் இறைவன் என்றும் கொள்கை ஏற்பட்ட பிறகு தீயின் கூறாகச் சிவனையும் நீரின் கூறாகத் திருமாலையும் வழிபட்டனர்.

சிவமதம்

குமரிநாட்டு மக்கள் மேற்கூறிய மூவகை மதநிலையிலும் சிறந்து விளங்கியுள்ளனர். குறிப்பாகச் சிவமதம் மிகவும் தொன்மை உடையதாகக் காணப்படுகின்றது. சேயோன் என்பவன் குறிஞ்சி நிலத் தெய்வமாகச் சுட்டப்படுகின்றான். ஆனால் பாவாணர் சேயோன் சிவன் என்றும் இரு சொற்களுமே ஒரே மூலத்தினின்று தோன்றிச் சிவந்தவன் என்னும் பொருளைக் கொண்டனவாகும் என்கிறார்.

செய் - செய்ம்மை செம்மை - செவ்வை
செம் - செவ் - செவ - செவப்பு
செவ - சிவ - சிவப்பு - சிகப்பு
சிவ - சிவல் - சிவலை

நெருப்பின் கூறாக நின்று உலகத்தை இயக்கும் இறைவன் எனக் கூறும் பாவாணர், தீவண்ணன், அந்திவண்ணன், அழல்வண்ணன், மாணிக்கக் கூத்தன் முதலிய சிவன் பெயர்களைச் சான்றாகக் காட்டுகின்றார்.

இலிங்க வழிபாடு

இலக்கு என்றால் குறி, இலக்கு - இலக்கம் - இலங்கம் என மாறி இலிங்கம் என்பது உருவானது எனவும், இந்த லிங்க வழிபாடும். இறைவனின் உண்மை வடிவைக் காணமுடியாத இல்லறவாணர்க்கே உரியதாகும். மேலும் கண்ணுக்குப் புலனாகக் காணும் நடராசர் உருவமும் அகக்கரண வளர்ச்சியடையாத பொதுமக்கட்குரியதாகும்.

1. திருவிலங்கம் 2.நலவிருக்கையன் 3.ஆற்றல் தோற்றி 4.மணவழகன் 5.மங்கைபங்கன், 6.சிவை கந்தர் சேர்ந்தான் , 7.சக்கர மீந்தான், 8.முத்திருமேனி, 9.மாலிடங் கொண்டான் , 10.தென்முகநம்பி, 11.மண்டையேந்தி, 12. குறளன் முதுகொடித்தான், 13.காமனைக் காய்த்தான், 14.காலனை யுதைத்தான், 15.கடல் வனைந்தானைக் கொன்றான், 16.முப்புரமெரித்தோன், 17.எண்காற் புள்ளுருவன், 18.நஞ்சுண்டான் (அ) கறைமிடற்றன், 19. முப்பாதன் , 20.ஒரு பாதன், 21.பேமுருவன், 22.விடையேறி, 23.பிறைசூடி, 24.நடவராசன், 25.கங்கைதாங்கி என்னும் இருபத்து ஐந்தும் சிவவழிபாட்டிற்குரிய வடிவங்களாகும். இது அகக்காண வளர்ச்சியடையாத பொதுமக்கட்கு உரியதாகும்.

சிவமத விரிவளர்ச்சி

மேற்கூறிய இச்சிவமதமானது பிற்காலத்தில் விரிவான வளர்ச்சியைக் கண்டது ஆரியர் வருகையினால் பல புராணக் கதைகளும் உருவாகித் தெய்வங்களுக்குள் உறவு முறைகளும் கற்பிக்கப்பட்டன. நாக வணக்கத்தார், நாகவுருவைத் தம் தலையுச்சியில் அணிந்திருந்தனர். அவரைச் சிவனியர் ஆக்குவதற்காகச் சிவன் முடி மீதும் நாகவுருவிருப்பதாகப்

படிமையமைத்து விட்டனர். அதோடு சிவன் பாம்புகளையே பல்வேறு அணிகளாக அணிந்திருப்பதாகவும் காட்டி, நாகப்பன், பாம்பணியார் முதலிய பெயர்களையும் உருவாக்கினார்.

தமிழகம் முழுவதும் வேந்தராலும் தொழப்பட்ட காளி, சிவனின் தேவியாக்கப்பட்டாள். இறுதியில் திருமாலும் பெண்ணாக மாறிச் சிவபெருமானின் இடப்பாகத்தில் அமர்ந்தான் என்றும் கதையும் எழுந்தது. அரசன் என்பதன் பொருளாக அரி என்பது தோன்றியிருக்கலாம்.

ஆசிரியரின் வருகையால் உண்டான மாற்றங்கள்

ஆரியர் சிவ வணக்கம் செய்து வந்த சிவனியரை ஆண் குறித் தெய்வ வணக்கத்தார் எனப் பழித்து வந்தனர். பின்னாளில் ஆரிய தெய்வங்களையும் தமிழ்த் தெய்வங்களையும் இணைத்துக் கதை கட்டிவிட்டனர். சிவன் மற்றும் திருமால் ஆற்றி வந்த முத்தொழில்களையும் வெவ்வேறாகப் பிரித்தனர். பிரமனைப் புதிதாகப் படைத்து, படைப்புத் தெய்வமென்றும் திருமாலைக் காப்பு தெய்வமென்றும் சிவனை அழிப்புத் தெய்வமென்றும் முத்திருமேனிக் கொள்கையைப் புகுத்தினர்.

பகீரதன் கதையால் சடைமேற்கங்கையும், திங்கள் சாபம் பெற்ற கதையால் முடிமேற் பிறையும், நஞ்சுண்ட கதையால் கழுத்தில் கருநிறமும், தாருகவனக் கதையால் கரியுரிப் போர்வையும் பிரமன் தலை கொய்த கதையால் கையில் மண்டையோடும் பிராமண ஒப்புமையால் பூணூலும் குடுவையும், தமிழ்ச் சிவன் வடிவை ஆரிய வடிவாக மாற்றின. இக்கதைகளால் கங்கையணிந்தோன் மதிசூடி, பிறைசூடி (சந்திரசேகரன்) மதியழகன் (சோமசுந்தரன்) கறைமிடற்றோன், மணிமிடற்றோன் (நீலகண்டன்) மண்டையேந்தி (காபாலி) இரப்பெடுத்தோன் (பிச்சாடனன்) முதலிய பெயர்கள் தோன்றின. ஐந்திணைத் தெய்வ வணக்கத்திலிருந்து வளர்ச்சி பெற்ற இரு மதங்களில் சிவனிய மதமே தொன்மை வாய்ந்ததாகும். அனைவருக்கும் எளிதாய் விளங்குவதற்காக இறைவனையும் ஆற்றலையும் அம்மையப்பனாக உருவகித்தனர். எனவே தொன்மைச் சமயமும் தமிழியச் சமயமுமாகிய சிவனியச் சமயத்தைப் போற்றுவோமாக.

51. சித்தர் வழிபாட்டு நெறியும் கோட்பாடுகளும்



ஆர். மோகனராம்
சித்த மருத்துவர்
திருபுவனம்

முன்னுரை

"அன்பின் வழியது உயர்நிலை
அந்நிலையே சிவர்நிலை"

உலகம் உயர்வடைய ஒரேவழி அன்பு, ஆண்டவனின் அன்பு எங்கு சென்றாலும் காணலாம். அன்பெனும் பாதை புலப்பட தூய்மையான மனத்தை அடைய வேண்டும் என்பதை,

"ஆசை அற்றவிடம் அகப்பேய்
ஆசாரம் கண்டாயே
ஈசன் பாசமடி அகப்பேய்
எங்ஙனம் சென்றாலும்"

என்றார் அகப்போப் சித்தர். அன்பெனும் இறையுணர்வை சித்தத்தால் சிந்தித்து, மெய்ப்பொருளாம் செம்பொருள், செம்மொழியாம் தமிழில் கண்டு தெளிந்தவர்களே சித்தர்கள். சிவனே சித்தன் என்றும், பண்டைய தமிழ்ச் சித்தர்களின் கொள்கைகளும் செயல்களும் தாந்திரிக சமயத்துடன் சேர்ந்தது சைவ சமயமாகவும், சித்தாந்தங்களாகவும் நின்று நிலவுவதால் தமிழே சைவத்தமிழ் என்பர்.

அமைதியாக இரு என்பதை பேச்சுவழக்கில் சிவனே என்று இரு என்று சொல்கிறோம் அல்லவா? கிராமிய வழக்கில் சுக்குக்கு மிஞ்சிய மருந்தும் இல்லை. சுப்பிரமணியனுக்கு மிஞ்சிய சாமியும் இல்லை என்றும், தந்தை சொல்கேள் மகனே அப்பனுக்குப் புத்தி சொன்ன சுப்பன் அல்லவா இவன் என்றும், சித்தன் போக்கு சிவன் போக்கு ஆற்றின் போக்கு அதன் போக்கு இவன் போக்கு என்னவோ என்று குறிக்கோள் இல்லாதவனைக் கூறுவதும், இன்னும் பல சொற்றொடர்களாலும், உண்ணும்

உணவு முதல் சைவமா அசைவமா? என்று கேட்கும் அளவிற்கு அன்றாட வாழ்வில் சைவத்தமிழ் ஆழ்ந்து கலந்துள்ளமை அறிய கண்ணாடியின்றிக் கைப்புண்பார்ப்பது போல் ஆகும். கடவுளைக் காண முயலுபவன் பக்தன், கண்டு தெளிந்தவன் சித்தன் என்பர் தெ.போ.மீ. அவர்கள். எல்லா உயிர்கட்கும் ஏற்புடைய உணர்வை அன்பு, உலகில் பொருட்கள் யாவும் இயற்கையே அவ்வியற்கையின் விளக்கமாகச் சிவன் சித்தனாக வந்த கதைகள் திருவிளையாடல் புராணமாகும்.

தாயுமானவர் சுவாமிகளின் சித்தர் சித்தி சித்தித்திறங்கா காட்டிற்குச் சிவனே தேவர் சிங்கமே என்ற பாடல் வரிகளால் தமிழின் இறையாண்மையை உணரமுடியும். பண்டைகாலம் முதல் சித்தர்களுடைய கொள்கையும் செயலும் தனித்தமிழ் ஒன்றிர்க்கே உரியதாக இருந்து வருகிறது.

''என்னவென்று சொல்லுவேன் இலக்கணம் இலாததை?
மன்னுகின்ற செந்தமிழ்ப் பதம் கண்ட பண்பென
மின்னகத்தில் மின்னொடுங்கி மின்னதானவாறு போல்
என்னகத்துள் ஈசனும் யானும் அல்லது இல்லையே''

என்றார் சிவவாக்கியர். அவரின் இறையுணர்வு அனுபவம் தமிழுடன் இசைந்துச் செல்வதை அறியலாம். சித்தர்கள் தமிழ் மரபினர் ஆதலால், தமிழ் எழுத்து எண், ஒலிக்குறிப்புகளால் உணர்வித்த இறையுணர்வு கோட்பாடுகளையும் வழிபாட்டு நெறிகளையும் சுருக்கி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

மொழி வழி இறையுணர்வு

அணு முதல் அண்டம் வரை உலகம் அனைத்திலும் இயக்கத்தில் உள்ளன. இவ்வியக்கத்தின் விளைவால் ஒலி தோன்றுகின்றன. இவ்வொலியே நாதம் என்பர். ௐ என்பது பிரணவம் எனும் உயிர்ப்பு ஆற்றலின் ஒலிக்குறிப்பு தமிழ்மொழியின் பன்மை வினைச் சொற்கள் யாவும் ஓம் என்ற ஒலிக்குறிப்புடன் முற்றுப்பெறும் எடுத்துக்காட்டாக. வந்தோம் இருந்தோம், நின்றோம், செய்தோம், முதலிய சொற்களின் இறுதியில் உயிர்ப்பு ஆற்றல் ஒலிக்குறிப்பு. தமிழ்மொழி மாபுவழியே வருவதால் அம்மொழியில் இறையுணர்வு

வெளிப்பாடு கலந்துள்ளமைக்கு சான்றாகும்.

இறைநிலையை நான்கு வேதத்திற்குள் அடக்கி, விதிகளையும் ஆசார அனுட்டானங்களையும் ஏற்படுத்தி, வேதம் ஓதுபவர் உயர் குலத்தோர் என்றும், சாதி இன சமய வேறுபாடுகளைப் புகுத்தி, பக்தி பாசாங்கில், பொய் வழித்தடத்தில் வாழ்க்கையைப் பதித்து, மெய்யெனக் கூறி, வடமொழியை முதன்மையாகக் கொண்டது ஆரியம் என்றால் அன்பெனும் பிடியில் அகப்படும் மலையே என்று மெய் நெறிகாட்டிக் காலத்தை வேதிக்கக்கற்றவன் வேதியன் என்றும் அந்தணன் என்போன் அறவோன் என்றும், சித்தத்தால் சிந்திப்பவனே சித்தன் என்றும், சிந்தனையை இறைவனிடம் செலுத்தி மௌனியாக இருப்பவனே முனிவர் என்றும், உடல் மெய் என்றும், சிவனே சிவன் என்றும், உள்ளத்தால் உணரும் உணர்வே மெய்வாழ்க்கை என்றும், அறிவின் வழித்தடத்தில் இறையுணர்வு கோட்பாட்டை யாவருக்குப் பொதுவாக்கி தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவருக்கும் இறைவா போற்றி எனும் சிறப்பினைப் பெற்றது சைவர்தமிழ் ஒன்றே.

2. இயற்கை வழி இறையுணர்வு

''முத்தமிழ்க் கற்று முயங்குகின்ற மெய்ஞ்ஞானிகளுக்குச்
சத்தங்கள் ஏதுக்கடி குதம்பாய்
சத்தங்கள் ஏதுக்கடி குதம்பாய்''

என்றார் குதம்பைசித்தர். முத்தமிழ்க் கற்றோரே மெய்ஞ்ஞானிகள் நிறைகுடம் தளும்பாது என்பது போல் மௌனியாக இருப்பர். பேசுவதும் மந்திரங்கள் செபிப்பதும் இல்லை. எழுத்து, சொல், இலக்கணங்கள் இல்லா மௌனமொழியே முத்திரை மெய்யுணர்வு முத்திரைகள் மூலம் வெளிப்படுத்துவர் என்பது மரபு இவ்வுலகில் இயற்கையை விட மேலான எழில் எதுவும் இல்லை. இயற்கையைப் போற்றி, புகழ்ந்து, வாழ்த்தி, வணங்கி வழிபட்டனர்.

3. உணர்வின் வழி இறையுணர்வு

உணரும் உணர்வே உணர்வென்று அறிவதாலும், உள்ளத்து உணர்வு மொழியாகவும், சொல்வழி செயலாகவும், அச்செயலுக்கு விதி வழிவித்திட்ட மதியாகவும், மதியும் சித்தத்தின் சிந்தனை விளைவாகவும், காலம் பரிமாணத்தில் நிகழ்வுகள் நிகழ சிவனே சித்தமாவதால் ''சித்தத்தில் சிவனைக் காண் சேர்மனம் நற்புத்தி'' என்றனர்.

''கோளில் பொறியில் குணமிலவே எண் குணத்தான் தாளை வணங்கா தலை'' என்கிறார் ஐயன் திருவள்ளுவர் தலை என்றால் முதன்மை என்று பொருள் கொண்டு, மெய்யறிவு பெற குருவே துணையாவதால், குருவை கடவுளாக வணங்குதல் மரபாயின. அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு என்ற குறட்பாவில் சுட்டெழுத்து அ தமிழில் முதல் எழுத்தாகவும், அதுவே எண் எட்டாகவும் இருப்பதால் எண் குணத்தான் என்று குறிப்பால் உணர்த்தி,

''ஓரெழுத்து உலகெலாம் உதித்த அட்சரத்துனே
ஈரெழுத்து இன்பமேது அறிகிலீர்
மூவெழுத்து மூவராய் மூண்டெழுத்த மூர்த்தியை
நாலெழுத்து நாவிலே நவின்றது சிவாயமே''

என்றனர்.

4. புலன்வழி இறையுணர்வு

உலக வாழ்க்கையில் ஐம்புலன்களால் உணரும் உணர்வும் மெய்யாக இருப்பதில்லை. ஆசை, பாசம், காமம், குரோதம் முதலியவைகளால் இதன் மூலம் மயக்கம் ஏற்படும். ஆகையால் மானிடப் பிறவிக்கு ஆறாம் அறிவாகப் பகுத்தறிவு கொடுக்கப்பட்டுள்ளது. கள்ளப்புலன் ஐந்தும் காண மணிவிளக்கையும் உள்ளத்தின் ஒளியாகும் தனி பெருங்கருணையையும் புரிந்துணர்ந்து கொள்ளலாம்.

''பட்டமும் கயிறுபோல் பறக்கின்ற சீவனைப்
பட்டறிவினாலே பார்த்து நீ படு முடிச்சுபோடடா
திட்டவும் படாதடா சிவனை விடாதடா

கட்டாநீ சிக்கெனக் களவறிந்த கள்வனை
என்று புலனாய்ந்து, புலன் அறிந்து
புலம் பெயரா திருக்க புலனடைக்கி
சித்தியும், முக்தியும், தன்னறிவும்
தன்னிறைவும் பெற்று பிறப்பெண்ணும்
பேதமை நீக்கி சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு''

கண்டனர் சித்தர்கள் அதன் படிநிலைகள் கல்வி, ஞானம், யோகம், தவம் காலப் பரிமாணத்தில் மானிடவாழ்வு என்பது அணுவிலும் அணுவேயாகும். பிறப்பு இறப்பு எனும் சுழற்சியிலிருந்து விடுபட்டு உயர்நிலை அடையும் வழிகளை உணர்விப்பது மெய்க்கல்வி சாகா திருப்பதற்குத்தான் கற்குங்கல்வி அன்றோ வாகான மெய்கல்வி என்றார் இடைக்காட்டுச் சித்தர். இறை நாட்டமே என்பது தெளிவு மனத்தால் கற்கும் மெய்க்கல்வி அறிவில் தெளிவு ஞானம் என்பர். ஞானம் அடையும் நல்வாய்ப்பே யோகம் என்பர். யோகமும் தவத்தாலன்றிக் கிடைப்பது அரிது. அத்தவமும் குரு அருளால் சித்தித்து, இறை அருளால் முற்றுப்பெறும்.

5. இறையுணர்வும் வழிபாடும்

சித்தர்கள் இயற்கையை வழிபட்டனர். இயற்கை தத்துவங்களை வணங்கினார். உடலும், உயிரும் அல்லது உயிரும் உடலும் எட்டு சூட்சம கயறுகளால் கட்டப்பட்ட தென்றும் அதன் கூட்டுத்தொகை பத்து என்ற தத்துவத்தில் 10 வயதுடைய சிறு பெண்ணாக உருவகப்படுத்தி வாலாம்பிகை எனும் சக்தியை வணங்கினார். இவளே சித்தர்களின் தாய் அன்னை ஆத்தா என்று போற்றப்பட்டாள். இவரின் அருளால் அட்டமாச் சித்திகள் அடைந்தனர். சிவன் வழிபாடும் உடன்பாடே தமிழ்மொழி தத்துவக்கடவுளான முருகனைச் சித்தர்களின் தலைவனாகவும் சிவகுருவாகவும், குலதெய்வமாகவும் வழிபட்டனர். நக்கீரர், அருணகிரிநாதர், தாயுமானவர் சுவாமிகள் முதலானோர் முருகப்பெருமான் அருளால் சித்தி பெற்றவர்கள்.

பல சித்தர்கள் பலர் இலிங்கம் பிரதிட்டை

செய்துள்ளனர். கல், மண், ஐம்பொன், செம்பு முதலியவற்றால் தெய்வ உருவச் சிலைகள் அமைத்துள்ளனர். போகர் எனும் சித்தர், நவபாசனங்களால் பழனி தண்டாயுதபாணி சிலைவடித்து தாபிதம் செய்துள்ளார். வேதியில் அறிவியலுக்கு அப்பால் வியப்பூட்டும் வகையில் பழனி தண்டாயுதபாணி சிலை அமைத்துள்ளனர். ஆய்ந்து தெளிந்த அறிவுச் செறிவுடைய நம் முன்னோர்கள் விட்டுச் சென்ற தடயங்கள். நினைவுச்சின்னங்கள், குறியீடுகள் பொருட்கள் யாவும் வழிப்பாட்டுக்குரியவையாக இருக்கின்றன. குருவழி பாரம்பரியமாக வழிபாடுகள் செய்கின்றனர்.

முடிவுரை

மானிட பிறவிக்கு மட்டும் ஆறு அறிவு உள்ளமையால் இந்த ஆறாம் அறிவைப் பயனுடையதாக்கி, ஏழறிவு, எட்டறிவு, ஒன்பதறிவு எனும் படிநிலைகளைக் கடந்து, பகுத்தறிவு, பத்தாம்நிலை, சிவநிலை சீவர்கள் அடைவது சித்தர்களின் நோக்கமாகும். மானிடப் பிறவியில் மட்டும் மெய்க்கல்வி, யோகம், ஞானம், தவநெறிகள், பயில வாய்ப்புகள் உள்ளமையால் அதற்கான உடற்கூறு அமைப்பும். இயற்கையாக அமையப் பெற்றுள்ளமையால், மானிட பிறவி இருக்கும் பொழுதே சித்தி பெற்று விட வேண்டும் என்பதால்,

"பார்திட சோம்பினால் பலியாது பொய்வாதம்
பார்திட சோம்பினால் பரமும் கிடையாது
பார்திட சோம்பினால் படுவர் பிறப்புக்குள்ளே
பார்திட வல்லார்கட்கு பகல் இரவு ஒண்ணுமோ"

என்றனர். மண்ணுலக வாழ்க்கையிலும், விண்ணுலக வாழ்க்கைக்கும் வெற்றிப்பாதை சோம்பல் நீக்குதல் அதற்கு, குறைந்தபட்சம், பார்க்கும் முயற்சியாவது மேற்கொள்ள வேண்டும் என்பதாம். இவ்வாறு உலக மக்களுக்கு, ஆன்மீக அறிவியலிலும், வாழ்வியல் நெறிமுறைகளிலும் வெற்றிக்கான வழித்தடம் அமைத்துக் கொடுத்த சித்தர்களை வழிபடுவோம். சிவனைப் போற்றுவோம். "இறையுணர்வின் ஊடகமாய்த் திகழும் தமிழை வணங்குவோம்"

52. போகர் ஏழாயிரத்தில் சிவன்

ஆ. ஏழுமலை
முனைவர்பட்ட ஆய்வாளர்
சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலம்
புதுவைப் பல்கலைக்கழகம்
புதுச்சேரி

முன்னுரை

வாய்மொழி வழியாகத் தோற்றம் பெற்ற இலக்கியங்கள் காலமாற்றத்திற்கு ஏற்ப சங்க இலக்கியம், அற இலக்கியம், பக்தி இலக்கியம், காப்பியம், சிற்றிலக்கியம், சித்தர் இலக்கியம், நவீன இலக்கியம் என தன்னை மேன் மேலும் புதுப்பித்துக் கொண்டும், புதிய செய்திகளைத் தன்னுள் தாங்கிக் கொண்டும் திகழ்கின்றது. இந்த இலக்கியங்கள் அவை தோன்றிய காலத்தில் காட்டுவதாகவே அமைகின்றது. இதனைத் தொல்காப்பியர் ''உயர்ந்தோர் கிளவியும் வழக்கொடு புணர்தலின் வழக்குவழிப் படுதல் செய்யுட்குக் கடனே'' (நூற்பா 1162) பொருளியல் எனும் நூற்பா மூலம் விளக்குகின்றார். அவ்வகையில் சித்தர்களில் குறிப்பிடத்தக்கவரான போகரின் சப்தகாண்டம் என்னும் நூலில் இடம்பெறும் சைவசமயக் கடவுளான சிவபெருமான் பற்றிய புராணச் செய்திகளை விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

போகர் வரலாறு

கடவுள் மனிதனைப் படைத்தார் எனும் ஆத்திகவாதியானாலும், மனிதன் கடவுளைப் படைத்தான் எனும் நாத்திகவாதியானாலும் அவர்களின் அறிவுக்கு எட்டாத பரம்பொருள் ஒன்று உண்டு என்பதை அனைவரும் ஏற்றுக்கொண்டு தான் ஆக வேண்டும். அது இயற்கை சக்தியாகவோ அல்லது இறை சக்தியாகவோ எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். அவரவர் எண்ணங்களுக்கு ஏற்ப பெயர் வேண்டுமானால் வேறுபடலாம். ஆனால் பரம்பொருள் ஒன்றுதான். இதனைக் கண்டுணர்ந்தவர்கள் சித்தர்கள். அந்தச் சித்தர்களில் குறிப்பிடத்தக்கவர் போகர்

ஆவார்.

பதினெண் சித்தர்களில் ஒருவர் போகர் என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாகும். இவரின் முழுப்பெயர் போகநாதன். இவர் தன்னைப் போகநாதன், கைலாச போகரிசி எனக் கூறிக் கொள்கிறார். இவரின் குருநாதன் காலாங்கி நாதர். போகரின் சீடர் புலிப்பாணிச் சித்தர் ஆவார்.

போகரின் காலம்

போகரின் காலத்தை அறிந்துக் கொள்ளவேண்டின் முதன்மைச் சான்றுகளை அவர்தம் நூல்களில் இருந்தே தேடுதல் சிறப்பு. அவ்வகையில் "போகர் இலக்கியங்கள் ஓர் ஆய்வு என்னும் தலைப்பில் முனைவர் பட்டம் ஆய்வு" மேற்கொண்ட அ.ராசேந்திரன் அவர்கள் போகரின் காலத்தைப் பின்வருமாறு கூறுகின்றார். போகர் ஏழாயிரத்தில் 15-16ஆம் நூற்றாண்டுகளுக்குப் பிற்பட்ட வழக்குகள் மிகுதியாக உள்ளன. இட்டிலி, எருமுட்டை, சடுதி, சொச்சம், பராக்கு, மதாச்சாரம், பண்டு, சீசாபோன்ற சொல் வழக்குகள் அறப்பள்ளிச்சுர சதகத்திலும் காணப்படுவதால் இவர்காலம் கி.பி. 1701க்கு முற்பட்டதென்பது தெளிவு. சந்த காண்டத்தில் காணப்படும் துட்டு, கிளாசு போன்ற சொற்கள் 16ஆம் நூற்றாண்டில் தான் தமிழில் புகுந்தன. 15ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பற்பம், மரியாதை போன்ற சொற்களும் இவரால் கையாளப்படுகின்றன. எனவே இவரது காலம் கி.பி. 15ஆம் நூற்றாண்டுகளுக்குப் பிற்பட்டதென்பது தெளிவு.

போகர் சன்னதியில் போகர் வழிபட்டதாகக் குறிக்கப்பட்டு வழிபாட்டில் வைக்கப்பட்டுள்ள உமாமகேசுவரி, துர்க்கை, முருகன், சிவன் முதலியோரின் செப்புத் திருமேனிகள் 16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. எனவே இவரது காலம் 16ஆம் நூற்றாண்டுக்கு உட்பட்டது என்பது தெளிவு. குமரகுருபரர், அதிவீரராம பாண்டியன் போன்றவர்கள் பற்றிய செய்திகள் போகர் ஏழாயிரத்தில் இடம் பெறுவதால் இவது காலம் கி.பி. 15,16ஆம் நூறறாண்டாக இருக்க வேண்டும் என அ.ராசேந்திரன் அவர்கள் தமது ஆய்வில் கூறியுள்ளார். போகரின்

காலம் 15,16ஆம் நூற்றாண்டு எனில் அப்போதைய தமிழக நிலை என்னவாக இருந்தது. தமிழகத்தின் சமுதாய நிலை என்ன, மக்களின் சமய வழிபாட்டு முறை எவ்வாறு இருந்தது. எந்த மாதிரியான இலக்கியங்கள் தமிழகத்தில் நிலவியது என்பதனை அறிந்து கொள்வது மிகவும் அவசியமாகும்.

கி.பி.1309 இல் வீரபாண்டியன், சுந்தர பாண்டியனுக்கு இடையில் நிகழ்ந்த வாரிசுரிமைப் போரால் தென்னிந்தியாவிற்கு வருகைபுரிந்த மாலிக்காப்பூர் தென்னிந்தியப் பகுதிகளை வென்று அங்கு முகலாய ஆட்சியினை நிறுவியதோடு தமிழகத்தில் நிலவிய பேரரசுகளின் ஆட்சிமுறை முடிவுக்கு வந்து சிற்றரசுகளும், குறுநில மன்னர்களும் தோன்றினர். தென்னகத்தில் ஆட்சி அமைத்த முகலாயர்கள் இந்துக் கோயில்களை இடித்தும் இந்துக்களையும் கொன்றுகுவிக்க ஆரம்பித்தனர். இந்து மதத்தை அடியோடு அழிக்க எண்ணினார். இவர்களுக்கு அஞ்சி இந்து சமயவாதிகள் காடுகளில் சென்று மறைந்து வாழ முற்பட்டனர். இந்து சமயத்தை அழிக்க வேண்டும், அடக்க வேண்டும் என்று ஆட்சியாளர்கள் எண்ணியதாலையே கி.பி. 16ஆம் நூற்றாண்டில் எண்ணிலடங்கா தல புராணங்கள் தோன்றலாயின. மு.அருணாசலம் அவர்கள் 16ஆம் நூற்றாண்டைப் புராண இலக்கிய காலம் என்றே கூறியுள்ளார்.

எப்பொழுதெல்லாம் அடக்குமுறை அதிகமாகின்றதோ அப்பொழுதெல்லாம் அதற்கான எதிர்வினைகள் மிக வீரியத்துடன் எழுகின்றது. மத நம்பிக்கையை அழிக்க வேண்டும் என்று எண்ணியதாலையே அது மக்கள் மத்தியில் மிக ஆழமாக வேரூன்றி வளர ஆரம்பித்தது. இறை நம்பிக்கைத் தொடர்பான நூல்களும், புராணங்களும் 16ஆம் நூற்றாண்டில் மிக அதிகமாகப் பரவியது. எனவேதான் அக்காலத்தில் வாழ்ந்த போகர், சிவபெருமான் தொடர்பான பல பாடல்களைத் தம் நூலில் பதிவு செய்துள்ளார்.

போகர் ஏழாயிரத்தில் சிவன்

''சித்தர்கள் சிவனைக் குருவாகவும், முழு முதல்

தெய்வமாகவும் கொண்டவர்கள். பிற தெய்வங்களை எல்லாம் தூற்றுபவர் இல்லை எனினும் போற்றுபவர் இல்லை'' (முனைவர் இரா.பாசுகரன் போகர் ஏழாயிரம் ஓர் ஆய்வு, பக்.101) என இரா.பாசுகரன் சித்தர்களின் கடவுள் வழிபாடு குறித்து கூறியுள்ளார். இவர் கருத்திற்கு ஏற்ப போகரும் தம் நூலில் சிவனே பரம்பொருள் பிற தெய்வங்களை மனிதப்பிறவியில் முக்தி பெற்றவர் எனக் கூறியுள்ளார். சிவ வழிபாடு இன்று நேற்று தோன்றிய வழிபாட்டு முறையன்று. மிக நீண்டதொரு வரலாற்றுப் பின்னணியைக் கொண்டது. அதனை சர்சான்மார்ல் துரைமகனார் பின்வருமாறுக் கூறியுள்ளார். ''மொகஞ்சதரோ, அரப்பா ஆகிய இடங்களில் அகழ்ந்தெடுக்கப்பட்ட புதைபொருள்களால் நமக்குப் புலனாகும் செய்திகள் பலவற்றுள் முதன்மை வாய்ந்ததும் நிகரற்றதுமாகத் திகழ்வது சைவ சமயத்தின் வரலாறெனின் அது மிகை ஆகாது. செம்புக் காலத்திற்கும், கற்காலத்திற்கும் முற்பட்ட தொல் பழங்காலத்தில் சைவசமயத்தின் வரலாறு தொடங்குவதும், உலகப் பழம்பெருஞ் சமயங்களில் மிகப்பழைய சமயமாகச் சைவசமயம் விறுடன் நின்று நிலவுவதும் குறிப்பிடத்தக்கனவாகும்'' (க.வெள்ளைவாரணார், சைவசித்தாந்த சாத்திர வரலாறு பக்.08) இவ்வாறு மொகஞ்சதரோ காலம் முதல் மோடி காலம் வரை சைவசமயத்தின் வரலாறு என்பது மீக நீண்டதாகும்.

சிவன் போகர் சந்திப்பு

போகர் தன் நூலான போகர் ஏழாயிரத்தில் ரசவாதம், குண்டலினி யாகம் முதலான அனைத்து யாகம், மூலிகை சம்மந்தமான செய்திகளையும் பாமரனும் புரிந்து கொள்ளும் விதமாக எளிய தமிழில் எழுதியதால் சினம் கொண்ட பிற சித்தர்கள் சிவனிடம் முறை இட சிவன் போகரைக் கைலாயம் அழைத்து விசாரனை நடத்தி போகரின் பொதுத் தொண்டினை வெகுவாகப் பாராட்டினார் என்ற குறிப்பு போகர் ஏழாயிரத்தில் காணப்படுகின்றது.

''அழை என்று நாம்சொன்னால் வருவதில்லை
அந்தமாம் கயிலாய தட்சிணாமூர்த்தி

குழையென்ற குருவண்டை அனைவருந்தான்போந்து
குனிந்துமே அடிவணங்கி இருக்கும் போது
தழை வென்ற அனைவருந்தாம் ஒருமித்தாற்போல்
சடுதியாய் வந்ததென்ன என்றுகேட்க
விழைவென்ற போகரென்று முனிவர்தாமும்
பேரான சத்திரந்தான் புகன்றிட்டாரே''
(போகரர் ஏழாயிரம் முதல் காண்டம் பாடல்எண்-825)

இப்பாடலின் மூலம் சித்தர்கள் பரம்பொருளான சிவனுடன் நேரடியாக உரையாடும் இயல்பினை உடையவர்கள் என்னும் சித்தர்கள் தங்களுக்குள் எழும் பூசல்களைச் சிவனிடம் முறையிட்டுத் தீர்த்துக் கொண்டனர் என்பதையும் அறிந்துகொள்ள முடிகின்றது.

இலிங்கபாடாணம்

போகர் இலிங்கபாடானம் தோற்றம் பற்றி பின்வருமாறு கூறுவதாகப் பாடல் உள்ளது.

''திருவுகின்ற சிவன் தானும் முப்புரத்தைச்
சினந்தெரிக்க வெந்துமேதான் எரிந்து போச்சு
உருகின்ற ருத்திரமூஞ் சப்போ தானார்
உயர்ந்தநெற்றிக் கண்ணினாலே பொரியை வீசி
நருவுகின்ற ரசகந்தி நிலத்தே வீழ
நடுங்கியேதான் லயமா கிலிங்க மாச்சே''
(பா.எண்.20181)

கொடிய பாம்பின் நஞ்சில் இருந்து மருந்து எடுப்பதைப் போன்று இவ்வுலக உயிரினங்களுக்கும் தேவர்களுக்கும் துயரினை அளித்து வந்த அசுரர்களையும் அவர்களின் மூன்று உலகையும் அழித்து மக்களைக் காத்ததோடு மட்டும் அல்லாமல் அந்த அசுரர்களை அழித்த நெருப்புக் குழம்பைக் கொண்டு மூலிகை செய்து மக்களின் நோய்களை நீக்கி உடல் பொலிவுடன் வாழ வழியினையும் சிவபெருமான் புரிந்தார் என்பதை அறிந்துக் கொள்ளமுடிகின்றது.

சிவன் மணக்கோலம்

'வந்துமே தான் அவரவர்கள் வரிசையாக
வகையாக அவரவர்கள் இருக்கத் தக்க
தந்துமேதான் இடத்திலுமே யிருந்திட்டார்கள்
தயானிததியாமம் சிவனுமணக் கோலமாகி''
(பா.எண்.2933)

இப்பாடலில் சிவன், பார்வதி அன்னையின் திருமணத்தைத் தேவர்கள் முன்னிலையில் பிரம்ம தேவன் நடத்தி வைத்தார் என்னும் செய்தியினைப் போகர் பதிவு செய்துள்ளார். சாயுச்சியம் எனும் இறைவனோடு ஒன்றிணைந்து நிற்கும் நிலையினை அடைந்த போகர் பரம்பொருளான சிவபெருமானின் திருமணத்தை நேரில் கண்டுகளித்து உளம் மகிழ்ந்ததோடு மட்டுமல்லாமல் அனைவரும் அந்நிகழ்வினைப் படித்துணர்ந்து கொள்ளும் விதமாக தம்நூலில் அந்நிகழ்வினை அழகாக விளக்கியுள்ளார்.

போகர் ஆயிரத்தெட்டு சிவாலயபட பெருமைக்கூறல்

போகர் தம் சீடரான புலிப்பாணி சித்தரிடம் ஆயிரத்தெட்டு சிவாலயங்கள் குறித்தும் ஒவ்வொரு திருத்தலத்தின் பெயர் அவை அமைந்திருக்கும் ஊர் முதலியவற்றையும் பஞ்சபூத தளங்கள் பற்றியும் மிக விரிவாகத் தம் பாடலில் கூறியுள்ளார்.

''தானான பஞ்சபூத சுதலமேதென்றால்
தாக்கான காளசுதிரி காஞ்சியாகும்'' *(பா.எண்.6912)*

முடிவுரை

பதினெண் சித்தர்களில் ஒருவரான போகர் தம் பாடல் மூலம் சிவத்தொண்டு புரிந்து மக்களும் பரம்பொருளான சிவனை அடைந்து வாழ்வில் எல்லா வளமும் பெற்று விளங்கிட வழிவகை செய்துள்ளார் என்பதை அவர்தம் பாடல் மூலம் அறிந்துக்கொள்ள முடிகின்றது.

53. சித்தாந்த முத்தியில் திருவருள் அனுபவம்

முனைவர் இர.மங்கையர்க்கரசி
விரிவுரையாளர், தமிழ்த்துறை
அன்னைதெரசா மகளிர் பல்கலைக்கழகக் கல்லூரி
கொடைக்கானல்

முன்னுரை

உமையம்மையொடு திருக்கயிலாய மலையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் சிவாகமப் பொருளை நந்தியெம் பெருமானுக்கு அருளினார். இதுவனா அருளுரையாக வளர்ச்சி பெற்று வந்த சிவாகப் பொருள் பரஞ்சோதி முனிவர் வழியே திருவெண்ணெய் நல்லூரில் தோன்றிய மெய்கண்டாரால் அருளப்பெற்று சிவஞானபோதம் எனப் பெயர் பெற்றது. இதுவே சைவசித்தாந்த உண்மைகளை விளக்கம் சாத்திர நூல்களுள் சிறப்புப் பெற்றதாகும். இவ்வாறு சிவாகமப் பொருள் விரிந்து வரலாற்றினையே திருக்கயிலாய மரபு என்கின்றனர்.

சிவஞான முனிவர்

மா தவசியாக வாழ்ந்து திராவிட என்ற அடையாள மொழியோடு திராவிட மாபாடியகாரர் என அடையாளங் காட்டப்பட்டவர். சிவஞான முனிவர் சிவஞானமுனிவர் பிறந்து வளர்ந்த ஊர் விக்கிரமசிங்கபுரமாகும். அவ்வூர் பொதிகை மலைக்கு அருகே திருநெல்வேலியில் இருந்து அம்பாசமுத்திரம் செல்லும் வழியிலுள்ளது. இவ்வூரில் வாழ்ந்தபோது அவரது பெயர் முக்காளலிங்கர் என்பதாகும்.

பொதிகை மலையில் அகத்தியர் வாழ்ந்து வந்ததாகக் கூறப்படுகின்றது. இவரின் அருளைப்பெற்ற குடும்பம் ஆனந்தங்கூத்தர் என்பவரது குடும்பம். இவர்தம் இல்லக்கிழத்தியின் பெயர் மயிலம்மை இவர்களின் அருமை மகவே முக்காளலிங்கர். ஒரு முறை திருவாவடுதுறை ஆதீனத்

தம்பிரான்களை முக்காளலிங்கர் வீட்டிற்கு அழைத்து அம்மாவிடம் அவர்களுக்குப் படைக்குமாறு வேண்டிக் கொண்டார். அவர்கள் உணருவந்திவிட்டு ஊரிலுள்ள மடம் ஒன்றில் தங்கியுள்ளார்கள். வெளியே சென்றிருந்த ஆனந்தங்கூத்தர் இல்லத்திற்கு வருகிறார். அப்பொழுது ஐந்து வயதே நிரம்பியிருந்த முக்காளலிங்கர் தம்பிரான்மார்களுக்கு தாய் உணவு படைத்ததை,

''அருந்ததியென் னம்மை யடியவர்கட் கென்றுந்
திருந்த வமுதளிக்குலசெல்வி பொதருந்தவே
யானந்தக் கூத்து ரகமகிழத் தொண்டுசெயு
மானந்த வாத மயில்''

என ஒரு வெண்பாவாக வடித்துக் கூறியுள்ளார். சிவஞான முனிவர் தம் ஞானகுருவாகிய வேலப்ப தேசிகருக்கு,

''கல்வி ஞானக் கடலமு தாயசீர்
பல்கு தேசிகர் பாதம் இறைஞ்சுவாம்''

என்ற சிவதத்துவ விவேகம் என்ற நூலுள் வணக்கம் செலுத்தியுள்ளார். இப்பாடலில் ஐந்தெழுத்து இயல்பும் அவற்றை ஓதும் முறையையும் அவற்றில் உள்ளீடும் அறிவித்து சிவபோகத்தில் அழுத்திச் செயலினை ஏற்று நெறிப்படுத்துகின்ற குரு நெறியாளராக வேலப்ப தேசிகரைப் புகழ்ந்து குருவின் செயலையும் தெளிவுபடுத்தியுள்ளார்.

சிவஞான முனிவர் காலம்

சிவஞான முனிவர் வரலாற்றைக் காண உதவும் அகச் சான்றுகளுள் தலையாயதாக இருப்பது செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ் நூலின் பாடல் ஒன்று. அப்பாடல் சிறப்புப் பாயிரத்துள் இடம்பெற்றுள்ளது. அப்பாடலுள் சிவஞான முனிவர் நூலை அரங்கேற்றிய நாள் குறிப்பிடப்பட்டுள்ளது. அச்செய்யுளில் குறிப்பிட்ட நாள் சாலிவாகன சகாத்தம் 1694 இக்கர வருடம் மாசி மாதம் 27 எனவும் அது கி.பி. 1772 எனவும் கூறப்படுகிறது.

சிவஞான முனிவர் வாழ்ந்த காலம் 1785 ஏப்பால் மாதம் வரை என்பது முடிவு செய்யப்பட்டுள்ளது. சகாத்தம் 1708க்குச் சரியான விசுவாவசு ஆண்டு சித்திரைத் திங்கள் 8ம் நாள் ஞாயிற்றுக்கிழமை சிவஞான முனிவர் சிவானந்தப் பேறுற்றார் என்பர்.

பசுத்துவ நீக்கமும் சிவத்துவ விளக்கமும்

இறைவன் உடங்கி உடனியங்கிப் பிரிப்பின்றி நின்று உதவி செய்துவரும் அத்துவித அனுபவத்தைக் கடைப்பிடித்து அவன் திருவடிக்கு அன்பு செய்து சிவானந்த பூதியை அனுபவித்தல் பாசவீட்டின் பயனாகப் பசுத்துவ நீக்கமும் சிவானந்த பேறும் என உடனிகழ்ச்சிப் பயனாக விளக்கப்பெறும்.

"உள்ளத் துள்ளமு தூறி யுணர்தொறுந்
தெள்ளத் தேறித் தெளிந்த சிவானந்த
வெள்ளத் தேதுளை வார்க்கு விளங்குவான்
கள்ளத் தார்க்கரி யானளங் காடனே"

என்று சிவானந்த வெள்ள அனுபவம் பற்றிக் கூறுவார். சிவானந்த வெள்ள அனுபவமானது ஆன்மாவாகிய உள்ளத்தினர் உள்ள இருக்கிற உள்ளமுதாம் இறைவன் அனுபவம் ஊறி உணர்ந்து வெளிப்படுவது எனவும் அதன் தெளிவை தேறித்தேறி அனுபவிக்கிற சிவானந்த அனுபவத்தை மேலேறி அனுபவிக்கலாம் எனவும் விளக்குகிறார் முனிவர். இறைவனோடு ஏகனாகி நின்று அனுபவிக்கிற சிவானந்தப் பேற்றை இரண்டறக் கலந்து வாழ் இன்பநிட்டை என்று குறிப்பிட்டுச் சுட்டுகிறார். மேலும்,

"கானுமாறுமற் றரிதரி தாமெனக் கணிப்பிலாப் பல
கோனை மாமறை யாவையுந் தனித்தனி குழறுவ தல்லாமல்
மானு மாறிது தானெனக் காட்டிட வல்லதே யிளங் காட்டிற்
பேனு நாயக னடிவர்க் கெளியவன் பெற்றியை
முறையோடே"

என்ற பாடலில் வல்வினை கழிந்து பரமானந்த வெள்ளத்தில்

சாதல் பிறத்தல் இன்றி நிலைத்தன்மையில் பராபாத்தோடு கலந்து நின்று வாழப்பெறுதலைப் பசுத்துவ நீக்கமும் சிவப்பேராகவும் விளங்குவார்.

முக்திபேறு

பல்வேறு சமயவாதிகளும் தங்கள் சமயத்தின் மூலம் பெறும் முடிநிழலைப் பயனாக முத்தி நிலையைச் சுட்டியுள்ளனர்.

''மங்கையர்க்களின்பமே முத்தியென் றுங்கந்த
மடிவதே முத்தி யென்றும்
வருமுக் குணங்கெடுதல் முத்திவினை மாய்வதே
வளர் முத்தி மூன்று மலம்
பங்கமுற மேலமுத்தி யென்றுநித் தியதேகம்
புற்றுவது முத்தி யென்றும்
பலவும் பகுத்தறிதன் முத்தியுயிர் கெடுவதே
படர்முத்தி சித்திகளெலாம்
தங்கதுவது முத்திபாடாணமொத் திடுவதே
திருமுத்தி யென்று முயிர்கள்
தடுமாற மலமறுந் தகலாத திருவடித்
தாமரையென் முடியி லூன்றி
அங்குமுயிர் பொருளெலாங் கைக்கொண்டு நாயினேற்
காருந்த முத்தி கந்த
அருணான வாரியோ''

என்ற பாடலில் முத்தியின் இயல்பைப் பாடியுள்ளார்.

முடிவுரை

உயிர்களைத் தடுமாறச் செய்யும் இறைவனின் திருவடி சேர்ந்து உடல், உயிர், பொருள், ஆவி எல்லாவற்றையும் திருவருள் அனுபவமாகக் கொண்டு ஆனந்த முத்தி அனுபவத்தையே சித்தாந்த முத்தி என விளக்கினார் முனிவர்.

54. சைவசித்தாந்தம் காட்டும் வாழ்க்கை நெறி

ச.பா.நாகமணி
பொருளாளர், மெய்கண்டார்
அருள்நெறி மன்றம்
மதுரை

முன்னுரை

''சிவசிவ என்கிலர் தீவினையாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்
சிவ சிவ என்றிடத் தேவருமாவர்
சிவ சிவ என்னச் சிவகதி தானே''-திருமந்திரம்

இவ்வுலகில் வாழும் உயிர்களில் மனிதர்களுக்கு வழிகாட்டுவதற்கு உதவும் சாதனமாகத் திகழ்பவை சைவ சித்தாந்தக் கருத்துக்களே ஆகும். ''சைவம்'' என்பது சிவத்துடன் சம்பந்தம் உடையது என்பதாகும். முழுமுதற்கடவுள் எனத் துதிக்கத் தக்கவர் சிவபெருமான் மட்டுமே ஆவார். அவர் அருளிச் செய்த முதல் நூல்கள் வேதமும், ஆகமமும் ஆகும். வேதம் பொது நூலாகவும், ஆகமம் சிறப்பு நூலாகவும் கருதப்படுகின்றன. விபூதி, உருத்திராக்கம் சிவச்சின்னங்களாகவும், திருவைந்தெழுந்தே மூலமந்திரமாகவும், சிவலிங்க வழிபாடே மேலான வழிபாடாகவும், அவ்வழிபாட்டைத் தக்க ஞானாசிரியராகத் திகழும் குருமூலமாக உபதேசம் பெற்றுச் செய்வதே சிறப்பு என்பதை உணர்ந்தும் ஒழுகும் நெறியே சைவநெறியாகும்.

சைவ சித்தாந்தம்

நம் வாழ்வில் அனுபவிக்கின்ற பல்வேறு வகையான அனுபவங்களுக்கும் தெளிவான தீர்வு தருவது சைவ சித்தாந்தமேயாம். நம் வாழ்க்கை முறைகளை நாம் எப்படி வாழ்ந்து காட்டினால் துன்பம் இன்றி வாழலாம் என்பது பற்றியும், உடல்+உயிரின் தொடர்பு பற்றியும், நாள்தோறும் நாம்

அனுபவிக்கும் இன்ப துன்பத்திற்குக் காரணம், இறைவன் ஊட்டும் ஊழ்வினைப் பயனே என்பது பற்றியும், நாம் அவற்றிலிருந்து விடுபடும் முறைகளைப் பற்றியும், இவ்வுலகில் நாளும் நிம்மதியாய் வாழ்க்கை கொள்ள வேண்டிய நெறிகள் பற்றியும் அவற்றின் வாயிலாகப் பேரின்பப் பெருவாழ்வை எப்படிப் பெறலாம் என்பது பற்றியும் உணர்த்துவதே சைவசித்தாந்தம் மட்டுமேயாகும்.

சாத்திரமும், தோத்திரமும்

அவ்வாறு நாம் உணர்வதற்கு நமக்குள் சைவசித்தாந்தத்தைத் தெளிவிக்கும் நூல்களாகத் தமிழில் அமைந்தவை. மெய்கண்ட சாத்திரங்கள் ஆகும். அத்தெளிவுக்குத் துணை நிற்கும் நூல்களாக இருப்பவை திருமுறைகள் ஆகிய தோத்திரங்கள் ஆகும். மரபுவழி வந்த அருளாளர்களின் சைவ வாழ்வின் தோய்விலே எழுந்த ஆய்வு முடிவுகளே ''சைவ சித்தாந்த சாத்திர நூல்கள்'' ஆகவும் அவர்களின் அன்பில் மலர்ந்தவைத் தோத்திரப்பாடல்கள் ஆகவும் வெளிக் கொணரப்பட்டன. சைவ வாழ்வியலுக்குச் சாத்திரமும், தோத்திரமும் இரண்டு கண்கள் போன்றவை. அதனால் தான் மேனாட்டுக் கிறித்துவப் பாதிரியாரான டாக்டர் சி.யு.போப் அவர்கள் இந்திய நாட்டிலுள்ள சமயங்கள் எல்லாவற்றிலும் மிக விரிந்ததும், பெரும்பான்மையான மக்களால் தழுவப் பெற்றதும், ஐயத்திற்கு இடமின்றி உண்மையிலேயே பெருஞ்சிறப்பு வாய்ந்ததும் சைவ சமயமே ஆகும். தமிழ்மக்களின் உள்ளங்களை அது பெரிதும் கவர்ந்து அரசு வீற்றிருக்கின்றது எனப் பாராட்டியுள்ளார். இத்துனை சிறப்புடைய சைவ சமயத்தின் முடிந்த முடிவான கொள்கையே சைவசித்தாந்தக் கொள்கையாகும்.

சாத்திர தோத்திரங்களின் வழியாகவே இறையருள் பெறலாம் என்பதைத் திருநாவுக்கரசர், ''சாத்திரமும், தோத்திரமும் ஆனார் தாமே'' என நமக்காக அருளி உள்ளார். மனிதர்கள் சைவ சித்தாந்தக் கருத்துக்களை அறிந்து உணர்வதற்கு, உறுதுணையாக இருப்பவை தோத்திர நூல்களும், சாத்திரநூல்களுமேயாகும். தோத்திரங்கள் இலக்கிய நூல்கள்

என்றால், அந்த இலக்கியங்களிலிருந்து வகுக்கப்பட்ட இலக்கண நூல்களே சாத்திரங்கள் எனலாம். இறையருளாளர்களின் இறை அனுபவநிலைகளை எடுத்து உரைபவை தோத்திர நூல்கள். சிவஞான உபதேசம் பெற்றவர்கள் அருளிய ஞானநூல்கள் சாத்திரநூல்களாகும்.

தோத்திர நூல்கள் இறைவனிடம் உயிர்களை அன்பால் அடையச் செய்விக்கும். சாத்திர நூல்கள், உயிர்களைப் பதிஞானத்தால் இறைவனை உணரச் செய்விக்கும். இறைவனைப் போற்றும் புகழ்நூல்களான தோத்திர நூல்கள், பன்னிரண்டு சைவத் திருமுறைகள் ஆகும். அதன்பின் தோன்றிய சாத்திரநூல்கள் பலவாக இருப்பினும் சிறப்பாகச் சொல்லப்படுபவை பதினான்கு மெய்கண்ட சாத்திரங்கள் ஆகும். தோத்திரம் சொல் என்றால் சாத்திரம் பொருள் எனப்படும். இதனைச் சொல்லும் பொருளெலாம் ஆனார் தாமே, தோத்திரமும் சாத்திரமும் ஆனார் தாமே என்னும் திருநாவுக்கரசுப் பெருமானின் திருவாக்கு தெளிவாக்குகிறது.

தோத்திர நூல்களுள் இலைமறை காய்மறையாகக் காணப்படும் சாத்திரக் கருத்துக்கள், சாத்திரநூல்களுள் வகைப்படுத்தப்பட்டுக் காரண காரியத்துடன் விளக்கப்படுகின்றன. சுருங்கக் கூறினால், சாத்திர நூல்களுக்கு அடிப்படைக் கருவூலங்கள் தோத்திர நூல்களே எனலாம்.

சைவ சித்தாந்தம் காட்டும் வாழ்க்கை நெறி

இவ்வாறு தோத்திரம், சாத்திரம் பற்றி ஓரளவு தெரிந்து கொண்ட மனிதர்கள் முதலில் உணர்ந்து கொள்வது, இறைவனாகவ வணங்கத்தக்க முழுமுதற்கடவுள் எம்பெருமானாகிய சிவபெருமான் மட்டுமே என்பதாகும். உலகெங்கும் நடைபெறும் அனைத்துச் செயல்களும் அவனது செயல்களே என்பதையும் அழுத்தமாகத் தெரிந்து உணர்ந்து கொள்கின்றனர். தோத்திர நூலாசிரியர்கள், நாயன்மார்களின் வரலாறுகள் சித்தாந்த உண்மைகளை மனிதனுக்கு உணர்த்துகின்றன. அவற்றுள் சிலவற்றைக் காண்போம்.

அருளாளர்கள் தலங்கள் தோறும் சென்று இறைவனை

வழிபட்டது. ''ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே'' என்னும் சிவஞானபோதம் பன்னிரண்டாம் சூத்திர சித்தாந்த உண்மையை உணர்த்துகிறது. திருநாவுக்கரசர், என் கடன் பணி செய்து கிடப்பதே என உழவாரப் படை கொண்டு அலகிட்டது. சீவன்முத்தர்கள் தாம்பெற்ற அத்துவித நிலையிலிருந்து வழுவாதிருக்க, சரியைப் பணி செய்ய வேண்டும் என்பதை உணர்த்துகின்றது.

சீவன்முத்தர்கள் சிவமே கண்டிருப்பர். பரஞானத்தால் பரத்தைத் தரிசித்தோர், பரமே பார்த்திருப்பர். பதார்த்தங்கள் பாரார் என்னும் சிவஞான சித்தியார், சு பக்கம், 310ஆம் பாடலின் சித்தாந்த உண்மை, நாவுக்கரசர் திருவையாற்றில் உள்ள உயிர்கள் அனைத்தையும் சக்தியும், சிவமுமாகக் கண்டகாட்சியில் நமக்குத் தெரியவருகிறது. மேலும் அவர் திருப்புகலூரில் உழவாரப் பணி செய்த போது கண்ட பொன்னையும், நவமணிகளையும் பருக்கைக் கற்களாகக் கருதித் தூர எறிந்ததும், அழகிய அரம்பையர் தம் ஆடல், பாடல்களால் அவரை மயக்க முற்பட்டபோதும் தன் மனம் திரியாது, சித்தத்தைச் சிவன்பாலே இருத்தித் தான் செய்யும் திருப்பணிகளில் உறுதியாக நின்றதும், உலகவிடயப் பேகாப்பற்றும் அவற்றுக்குக் கருவியாக உள்ள செல்வப் பொருட்பற்றும் நீங்கியவர்கள் சிவன்முத்தர்கள் என்ற சித்தாந்த உண்மையை உணர்த்துகின்றது.

''அரனடிக்கு அன்பர் செய்யும் பாவமும் அறமதாகும்'' என்ற சிவஞான சித்தியாரின் சுபக்கப் பாடல், தாதையைத் தாளற வீசிய சண்டிக்குச் சிவபெருமான் தான் உண்ட கலமும், உடுப்பலவும் சூடுவனவும், அவனுக்காகச் சண்டீசனுமாம் பதம் அருளியதையும் விளக்கி நமக்கு உணர்த்துகிறது. மேலும் சிவஞானபோதம் எட்டாம் சூத்திர விளக்கத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்குவது கண்ணப்ப நாயனாரின் வரலாறாகும்.

ஆற்றுநீர் காட்டாற்று வெள்ளமாகப் பெருக்கெடுத்து ஓடுகையில், பயிர்கள், கால்நடைகள் மட்டுமின்றிக்

கிராமத்தையே கூட அழித்து விடுகிறது. அதே நீரை அணைகட்டித் தேக்கிப் பயன்படுத்தும் போது குடிநீர், விவசாயம், மின்சாரம் தயாரித்தல் ஆகிய பல ஆக்கவேலைகள் நடைபெறவும் உதவுகிறது. ஒருவகையில் பார்த்தால், மனித மனமும் காட்டாற்று வெள்ளம் போன்றது தான். அதன்போக்கில் விட்டுவிட்டால் மனிதனை அலைக்கழித்து, அதோகதியாக்கி விடும். மனத்தைக் கட்டுப்படுத்தச் சிந்தையில் சைவ சித்தாந்தக் கருத்துக்களைக் கொண்டுவந்து அதன்வழிச் செல்ல வேண்டும். அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?

சாதாரண மனிதர்களாகிய நாம் நம் வாழ்வின் அன்றாடப் பணிகளைத் தடையின்றிச் செவ்வனே செய்ய வேண்டும். இன்பத்தில் மகிழும் நாம் துன்பத்தில் துவளத்தான் செய்வோம். அப்போது, நாம் பெறும் இன்ப துன்பங்களுக்குக் காரணம் நமது முற்பிறவிகளில் நாம் செய்த புண்ணிய பாவங்களே என்பதை உணர்வதுடன், இப்பிறவியில் நாம் எப்படி வாழ்ந்தால் இனி நமக்கு வரும் பிறவி எப்படி அமையும் என சிந்தித்து நல்லதையே நினைந்து, நல்லதைச் செய்வோம். இந்நிலையில் நம்மிடம் இறையருள் கூடி நாம் இறையுடன் ஒன்றி, அனைத்தும் இறை அருளாலே நடைபெறுகிறது. நம்மால் எதுவுமே செய்யமுடியாது என்பதை உணர்ந்து எம்பெருமானிடம் சரணாகதி ஆகி விடுவோம்.

இவ்வாறு சிவபெருமானிடம் ஒப்படைத்த பின் உலக மயக்கங்களிலிருந்து பையப் பைய விலகி இன்பத்தில் விரும்பும், துன்பத்தில் வெறுப்பும் கொள்ளாது இருவினை ஒப்பு நம்மில் ஏற்படும். அவரவர் செய்த வினையின் பயன் அவரவர்க்கே. அதனால் மனத்தால் கூடத் தீங்கோ, தவறோ செய்யமாட்டோம். ஒரு காலத்தில் நாம் மிகப்பெரிதாக நினைந்து மகிழ்ந்த அல்லது வருத்தப்பட்ட பல விசயங்கள் நமக்கு எதுவுமே அற்ற அற்பமாகத் தோன்றும்.

சரீரமாகிய உடலால் ஆலயங்கள், அடியார்களுக்குத் தொண்டு செய்வது சரியை ஆகும். உடல் உள்ளத்தால் சிவபூசை செயல்களைச் செய்து மனத்தைச் சிவத்துடன் ஒன்றிப்பது

கிரியை எனப்படும். புற எண்ணங்களை விலக்கிச் சிவத்தையே நினைத்து அகபூசை, தியானம் செய்து ஆன்மாவைச் சிவசம்பந்தமாக்கி நிற்பது யோகம் எனப்படும். இம்மூன்று தவங்களால் இறையுடன் இரண்டறக் கலப்பது சிவஞானம் பெறுவதாகும்.

நிறைவுரை

சைவ சித்தாந்த நெறிப்படி வாழ்வது என்பது, மணிவாசகப் பெருமான் அருளியபடி இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க என ஏகனாக இவ்வுலக உயிர்களுக்காகச் சத்து+சித்து+ஆனந்தமாய் உயிர்களுடன் ஒன்றாய், வேறாய், உடனாய் நின்று ஐந்தொழில் ஆற்றி உயிர்களை உய்வித்து ஈடேற்றி வரும் சிவபெருமானை எப்போதும் நினைந்தபடி கடமைகளில் வழுவாது வாழ்வதுடன் இன்ப துன்பங்களைச் சமமாகக் கருதி நல்லதையே நினைந்து, நல்லதையே செய்து, அனைத்தும் அவன் செயலே என்ற நினைவுடன் உலக பந்த பாசங்களிலிருந்து மெள்ள, மெள்ள விலகி, இறைவனிடம் நம் அணுக்கத்தைக் கூட்டிக் கொள்ள வேண்டும். இவ்விதமாக வாழ்வது தான் சைவசித்தாந்தம் காட்டும் வாழ்க்கை நெறியாகும். இதில் இறையருள் கிட்டுவது திண்ணமாகும். நமசிவாய வாழ்க. நாதன்தாள் வாழ்க.

55. பேயாரின் தனிச் சிறப்புகள்

தமிழ்மாமணி திருமேனி நாகராசன்
விரிவுரையாளர் (ப.நி.)
காரைக்கால்

முன்னுரை

தமிழ்வேதம் எனப் போற்றப்படுபவை பன்னிரு திருமுறைகள் ஆகும். அவற்றை அருளியவர்கள், திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர், திருமாளிகைத் தேவர், கருவூர்த்தேவர், கண்டராதித்தர், சேந்தனார், சேதிராயர், பூந்துருத்தி நம்பி, திருவாலி அமுதனார், புருடோத்தநம்பி, வேணாட்டடிகள், திருமூலர், திருவாலவாயுடையார், காரைக்காலம்மையார், கல்லாட தேவநாயனார், நக்கீரதேவநாயனார், கபிலதேவ நாயனார், பரணதேவ நாயனார், அதிரா அடிகள், ஐயடிகள் காடவர்கோன், இளம் பெருமானடிகள், சேரமான் பெருமாள், பட்டினத்தடிகள், நம்பியாண்டார் நம்பி, சேக்கிழார் என்னும் இருபத்தேழு ஞானியர் ஆவர். அவருள் காரைக்காலம்மையார் மட்டுமே பெண்பாலர் என்பது பெருஞ்சிறப்புக்குரிய செய்தியாகும்.

இனி, பெரியபுராணம் சிறப்பித்த மங்கையர்க்கரசியார், இசைஞானியார், காரைக்காலம்மையார் என்னும் மகளிர் நாயன்மார் மூவருள் பாடல் நெறியால் பரமனை வழிபட்ட ஒரே பெருமாட்டியார் காரைக்காலம்மையாரே என்பதும் வியக்கத்தக்க செய்தியே.

அம்மையாரது காலம் கி.பி. 5 ஆம் நூற்றாண்டு என்பார் பன்னிரு திருமுறை வரலாற்று அறிஞர் க.வெள்ளைவாரணார் அவர்கள். அம்மையார் காலத்தில் தமிழகத்தின் பெரும்பகுதி களப்பிரர் என்னும் அயலார் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது என்பது வரலாறு. களப்பிரர் சமண சமத்தைப் போற்றினார். பௌத்தமும் அப்பொழுது செல்வாக்குப் பெற்றிருந்தது. களப்பிரர்களால் பிறமொழிகள் ஆட்சி அதிகாரம் பெற்றன. அறிஞர் பலர் சமணம்

சார்ந்தனர். களப்பிரர் காலத்தில்தான் சமணச் சான்றோர் நீதிநூல்கள் பலவற்றைப் படைத்தார்கள். அவையே பின்னாளில் பதிணென் கீழ்க்கணக்கில் தொகுக்கப்பட்டன.

இருண்டகாலம் என ஒருசில வரலாற்று ஆய்வாளர்களால் குறிக்கப்பட்ட களப்பிரர் காலத்தில் தான் காரைக்காலம்மையார் சைவமும் தமிழும் மறுமலர்ச்சி பெறத் தோன்றினார். சங்க இலக்கியங்கள் எல்லாம் சிவபெருமானை, ''ஆலமர் செல்வன், முக்கண் செல்வன், மழுவாள் நெடியோன், நீலமணிமிடற்று ஒருவன், நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன், நீள்நிமிர் சடைமுது முதல்வன்'' எனப் பலவாறு சில சொற்களால் மட்டும் சிறப்பித்துப் பேசின. ஆனால் அம்மையார் தாம் சிவனைப் போற்றித் தமிழிலக்கிய உலகில் முதன் முதலில் செந்தமிழ் சிற்றிலக்கியங்கள் பாடியவர்.

அம்மையார் தாம் தமிழ்ச் சமூகத்தில் கணவனால் முதன் முதலில் தெய்வமாக வணங்கப்பட்டவர். அவனைத் தொடர்ந்து வணிகர்குல மரபினராலும் குலதெய்வமாகக் கொண்டாடப்பட்டணர். இதனை அறிஞர் க.த. திருநாவுக்கரசு கி.பி. ஐந்தாண்டு நூற்றாண்டு முதல் தமிழ்நாட்டின் வணிகர்கள் காரைக்கால் பேயாரைத் தங்கள் குலதெய்வமாகக் கருதிப் போற்றி வழிபட்டனர் என்று உறுதிப்படுத்துகிறார். தொடர்ந்து சில நூற்றாண்டுகள் தமிழகச் சிவனாலயங்களில் ஊர்த்துவ தாண்டவம் ஆடும் ஈசன் திரு முன்பு அம்மையாரின் எலும்பு உருவச் செப்புத் திருமேனி அமர்ந்த கோலத்தில் திருநிலைப்படுத்தப்பட்டு வணங்கப்பட்டது என்றும் அவர் கூறுகிறார்.

அம்மையார் அரன்மீது அற்புதத் திருவந்தாதி, இரட்டை மணிமாலை, மூத்த திருப்பதிகம் என்னும் மூன்று சிற்றிலக்கியங்களைச் செய்துள்ளார். அற்புதத் திருவந்தாதி ஈசன்மீது அம்மையார் பாடிய முதல் பிரபந்தமாகும். அந்தாதி இலக்கியத்தைத் தமிழில் முதலில் அறிமுகம் செய்து வைத்தவரும் அம்மையார்தாம். அவ்வந்தாதியின் 101 பாடல்களுள் 83 பாடல்களில் சிவனது தோற்றப் பொலிவை

அம்மையார் வருணித்துள்ள புலமைத்திறம் பெருமிதம் அளிக்க வல்லதாகும்.

அம்மையார் பாடிய இரட்டைமணிமாலையும் தமிழுக்கு அவரது கொடையே. கட்டளைக் கலித்துறை முன்னும் வெண்பா பின்னுமாக இருபது பாக்களால் இறைவன் மீது அவ்விலக்கியம் பாடப்பட்டது. இந்தச் சிற்றிலக்கியம் வழியாகக் கட்டளைக் கலித்துறை என்னும் கவிதையைத் தமிழுக்குத் தந்த தனிப்பெரும் புலவரும் அம்மையாரே.

மூன்றாவதாக அம்மையார் அருளிய இலக்கியம் மூத்த திருப்பதிகங்கள் ஆகும். திருவாலங்காட்டில் காலை உயரே தூக்கி அண்டமுற நிமிர்ந்தாடும் சிவபெருமானது ஊர்த்துவ தாண்டவத்தைக் கண்டு பத்திப்பரவசம் கொண்டு அம்மையார் பாடிய இசைப்பாடல்கள் மூத்த திருப்பதிகங்கள் எனப்பட்டன.

சைவ சமயக் குரவர்களாம் சம்பந்தர், அப்பர், சுந்தரர் பாடிய பதிகங்களினும் அம்மையார் பதிகங்கள் காலத்தால் முற்பட்டவை என்பதால் அவை மூத்த பதிகங்கள் எனப்பட்டன. பைந்தமிழ்ப் பெருவெளியில் பதிகம் என்பதைப் பக்தி இலக்கிய நெறிப்படுத்திப் பாடிய இலக்கியச் சிற்பியும் அவரே. அவர் காட்டிய பதிகநெறி நின்றே சம்பந்தரும், அப்பரும், சுந்தரரும் பதிகப் பெருநெறி கண்டனர் என்பது வரலாறு.

பதிகத்தின் இறுதியில் அம்மையார் பாடியுள்ள பதினொன்றாம் பாடலுக்குக் கடைக்காப்பு என்பது பெயர். பதிகத்திற்குக் கடைக்காப்பு உத்தியைக் கண்ட சிறப்பினரும் அவரே. கடைக்காப்பில் பதிகம் பாடியவர் பெயரும் பதிகம் பாடுவார் பெறும் பயனும் அம்மையாரால் வரையறுக்கப்பட்டுள்ளன. அவர் காட்டிய கோட்பாட்டைப் பின்னாளில் சம்பந்தர் முதலிய அருளாசிரியரும் கடைப்பிடித்தனர்.

திருமுறையைப் பண்ணிசையால் பாடும் திருநெறியைத் தொடங்கி வைத்த ஆளுமையும் காரைக்காலம்மையார்க்கு உண்டு. ''கொங்கை திரங்கி'' எனத் தொடங்கும் முதற்பதிகத்தை

அம்மையார் நைவளம் (நட்டபாடை) பண்ணில் பாடியுள்ளார். இந்தப் பண்ணில் தான் நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞானசம்பந்தர் தமது முதற்பதிகத்தைப் பாடியுள்ளார் என்பதும் கவனிக்கத்தக்கதாகும். நட்ட பாடை என்னும் இந்தக் கம்பீர நாட்டையைத் தான் இசை நிகழ்ச்சியை மங்கலகரமாகத் தொடங்க இசை வாணர்கள் இன்று கடைப்பிடித்து வருகின்றனர்.

அம்மையார் தமது இரண்டாவது பதிகத்தை இத்தளம் பண்ணில் பாடியுள்ளார். இந்தப் பண்ணையே சுந்தரர் தமது முதற்பதிகத்தின் பண்ணாக ஆண்டுக் கொண்டார் என்பதும் நினைக்கத்தக்கது. இப்பண் இப்பொழுது மாயாமாளவ கௌளை என்று வழங்கப்படுகிறது. இது கருநாடக இசை அரங்குகளில் இன்று வரையில் மிகச் சிறந்த இடத்தைப் பெற்றுள்ளது. சம்பந்தரும் சுந்தரரும் அம்மையாரைப் பின்பற்றி அவர் பாடிய பண்களை முறையே தம்பதிகங்களில் போற்றி கொண்டார்கள் என்றால் அப்பெருமாட்டியின் தமிழிசைப் புலமையை என்னென்பது?

மூத்த திருப்பதிகங்கள் இரண்டையும் அம்மையார் திருவாலங்காட்டு இடுகாட்டில் நள்ளிரவில் ஈம நெருப்பிடையே நெடுந்தாண்டவம் ஆடும் சிவனார் அடிக்கு அருகில் இருந்து பாடியவை என்று காட்டுகிறார் சேக்கிழார் அடிகள். பேய்கள் சுற்றித் திரியும் நள்ளிரவில் இடுகாட்டில் அமர்ந்து கொண்டு இலக்கியம் பாடிய தனிப்பெரும் ஆளுமை உலகில் வேறு எவர்க்கும் உண்டோ?

பிறப்பு இறப்பு ஒன்றில்லா இறைவனால் அம்மையே என்று அன்போடு அழைக்கப்பட்ட அதிசயப் பிறவியும் அம்மையார் ஆவார். உலகில் வேறு எந்த மகளிர்க்கும் கிடைக்காத பெரும்பேறு இதுவாகும். சேக்கிழார் அடிகளாரும் அம்மையே என்னும் சொல்லைச் சிறப்பளிக்கும் ஒப்பற்ற சொல் என்றே போற்றுகிறார். காரைக்காலம்மையார் என்னும் திருப்பெயரைச் சொல்லியும், வணங்கியும், உலகினர் உய்வு (வாழ்வு) பெற வேண்டும் என்றும் சேக்கிழார் கருதுகின்றார்.

"அம்மையே என்னும் செம்மை
ஒருமொழி உலகம் எல்லாம்
உய்யவே அருளிச் செய்தார்"

(காரை,புராண.பா.58 அடி:3-4)

இன்னும் இறைவனை அமுதன், அட்டமூர்த்தி, இயமான், புயங்கன், புண்ணியன், பெரியான், குாகன், சீராளன், சோதியாய், திங்களாய், நுதற்கண்ணான், வேதியன் எனப் பலப்பல திருப்பெயர்களைச் சொல்லி முழுமுதற் கடவுளை வழிபடும் திருநெறிக்கு (நாமாவளிக்கு) வழிகாட்டிவரும் அம்மையாரே ஆவார்.

நிறைவாக, சிவனாலயச் சுற்றில் செயற்கரிய செய்த நாயன்மார் அத்துணைப்பேரும், நின்ற நிலையில் அடியார்க்கு அருள, அம்மையார் மட்டும் அமர்ந்த திருக்கோலத்தில் அருளும் பேறு பெற்றுள்ளார் என்றால், இதனினும் பெறற்கரும் பெருஞ்சிறப்பு வேறு உண்டோ?

"மணிவாசகப் பெருமானும் என்னையும் இருப்பது ஆக்கினன் என்று அருளிச் செய்துள்ளார். அருளியல் அனுபவப் போற்றினுள் முடிநிலைப் பேறும் பேறனுபவமாகத் திகழ்வதும் இருப்பது என்ற அனுபவமே" (பேராசிரியர் வை.இரத்தினசபாபதி)

56. குதம்பைச் சித்தர் உணர்த்தும் வாழ்வியல் நெறிகள்



முனைவர் மோ.ச.மகேசுவரி
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
சிறி சாரதா மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
சேலம்

முன்னுரை

இலக்கியங்கள் ஒவ்வொரு காலகட்டத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்வினை, வரலாற்றினை, பண்பாட்டினை, கலாச்சாரத்தினை வெளிப்படுத்துவதாக அமைகின்றன. இலக்கியங்கள் வருங்கால சந்ததியினருக்கு உணர்த்திச் சென்ற அறநெறிகள் ஏராளம். சித்தர்களின் பாடல்களில் மக்கள் அறிந்துக் கொள்ளக்கூடிய நிலையாமை கருத்துக்கள் மிகுந்து காணப்படுகின்றன. அந்த வகையில் குதம்பைச் சித்தரின் பாடல்களில் காணப்படும் வாழ்வியல் நெறிமுறைகள் குறித்து ஆய்வாக இக்கட்டுரை அமைகிறது.

குதம்பைச் சித்தர் பெயர்க்காரணம்

குதம்பைச் சித்தர் இடையர் குலத்தை சார்ந்தவர். இவர் மயிலாடுதுறையில் சமாதியானார் என்றும் கூறுவர். இவர் பாடலில் குதம்பாய் என்னும் மகடூஉ முன்னிலைப்படுத்திப் பாடியுள்ளார். குதம்பை என்பது பனை ஓலை சுருளுக்குப் பெயர். இதைப் பெண்கள் காதுகளில் அணிவது மரபாகும். இதனால் இவளுக்குக் குதம்பை சித்தர் எனப் பெயர் வந்தது. இவர் இல்லறத் துறவியாக இருந்து பின் அழகர் மலை என்னும் திருப்பதியில் சமாதியானார் என்றும் கூறுவர்.

கடவுளின் இயல்பு

மக்கள் இறைவனை உருவமாகவும் சோதி வடிவமாகவும் வழிபடுகின்றனர். ஆதியும் அந்தமும் ஆகிய கடவுள் ஒருவனே சோதி வடிவில் நிற்கின்றான். இதனை,

"ஆதியும் அந்தமும் ஆன ஒருவனே
சோதியாய் நின்றானடி குதம்பாய்
சோதியாய் நின்றானடி"

என்ற பாடல் எடுத்தியம்புகிறது.

"அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி"

என்னும் பாடலில் வள்ளலார் அருட்பெருஞ்சோதி வழிபாட்டு முறையை மேற்கொண்டு அச்சோதியில் இரண்டறக் கலந்தார் என்பதை அறியமுடிகின்றது.

முக்தி

ஐம்புலனகளையும் அடக்கி உலகப்பற்றை நீக்கி இறைவன் மீது பற்றுவைத்தோம் என்றால் முக்தி அடையலாம். ஆமையைப் போல் ஐம்புலன்களையும் அடக்கி மௌனமாக இருப்போருக்கு முக்தி கிடைக்கும் என்பதனை,

"ஆமைபோல் ஐந்தும் அடக்கித் திரிகின்ற
ஊமைக்கு முத்தியடி குதம்பாய்
ஊமைக்கு முத்தியடி"

என்ற பாடல் வழி அறியமுடிகின்றது. வள்ளுவரும்

"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து"

என்னும் குறள் வாயிலாக ஒரு பிறப்பில் ஆமைப்போல் ஐம்புலன்களையும் அடக்கி ஆள்பவனுக்கு பலப்பிறப்பிலும் அவனுக்கு காப்பாகும் அமையும் என்பது புலனாகின்றது.

உடலின் இழிவு

நம் உடலானது நாற்றம் உடையது. அதனால் தான் நாம் உடலுக்கு வாசனைப் பொருட்களைப் போட்டுக் கொள்கிறோம். குதம்பைச் சித்தர் இது எதற்கு என்கிறார். இதனை,

"பேசறு நாற்றம் பெருகும் உடலுக்கு

வாசனை ஏதுக்கடி குதம்பாய்
வாசனை ஏதுக்கடி''

என்கிறார். மேலும் போராட்டம் செய்து வியர்த்த உடம்பிற்கு நீராடுவது எதற்கு என்கிறார். இதனை,

''போராட்டம் செய்து புழுத்த வுடம்பிற்கு
நீராட்டம் ஏதுக்கடி குதம்பாய்
நீராட்டம் ஏதுக்கடி''

என்னும் பாடலின் வாயிலாக உடம்பு அழியக்கூடியது. அதற்கு எதுக்கு வாசனைப் பொருட்கள், குளித்தல் எதற்கு என்பதன் மூலம் உடல் நிலையாமையை உணர்த்துகின்றார். வள்ளுவரும், ''புறந்தூய்மை நீரான் அமையும்'' என்கிறார்.

பொய்த்தவ ஒழுக்கம்

சங்ககாலத்தில் போலித் துறவிகள் இல்லை. ஆனால், இன்றோ போலித்துறவிகள் மக்களை ஏமாற்றி வருகின்றனர். செந்நிறக்காவியை உடுத்தி தெருவில் அலையும் துறவிகளுக்கு நல்வழி கிடையாது. அதனால் மன உறுதியுடன் தவம் மேற்கொள்ள வேண்டும் என்பதனைச்

''செங்காவி பூண்டு தெருவில் அலைவோர்க்கு
எங்காகும் நல்வழியே குதம்பாய்
எங்காகும் நல்வழியே''

என்ற பாடலின் மூலம் உண்மையான துறவியாக விளங்க வலியுறுத்துகிறார். மேலும்,

''வெண்ணீறு பூசியே வீதியில் வந்தோர்க்குப்
பெண்ணாசை ஏதுக்கடி குதம்பாய்
பெண்ணாசை ஏதுக்கடி''

என்ற வரிகளின் வாயிலாகத் திருநீறு பூசி வீதியில் வருபவர்க்குப் பெண்ணாசைக் கூடாது என அறிவுறுத்துகிறார். இராமாயணத்தில் இராவணன் பொய்த்தவவேடம் பூண்டு சீதையை அபகரித்தான் என்பதையும், விசுவாமித்திரர் தவத்தில் இருந்த போது ஊர்வசியின் மீது மையல் கொண்டார் என்ற

செய்தியும் அறியமுடிகின்றது. இதனால் பொய்த்தவம் கூடாது என்பது பெறப்படுகிறது.

செல்வநிலையாமை

மனித வாழ்க்கையே நிலையில்லை. அதில் செல்வம், இளமை, யாக்கை. உயிர் போன்றவை நிலையில்லை என்பதனைத் திருமூலர் பாடல் வழி அறியமுடிகின்றது. மேலும், மக்கள் சேர்த்து வைக்கும் பொன்னும் பொருளும் இறந்தபிறகு உடன்வருவதில்லை. உற்றார், உறவினர், ஊரார், உடன்பிறந்தோர், பெற்றவர் முதலிய யாரும் உடன் வருவதில்லை என்பதனைத்

''தேடிய செம்பொன்னும் செத்தபோது உன்னோடு
நாடி வருவதுண்டோ? குதம்பாய்
நாடி வருவதுண்டோ?''

என்னும் வரிகளில் மனிதர்கள் இறக்கும் போது பொன்னும் பொருளும் எடுத்துச் செல்வதில்லை என்று எடுத்துரைக்கின்றார். மேலும்,

''தங்கப்புட்பம் தின்னவனும் மண்ணுக்குள்ளே
கம்பங்களி தின்னவனும் மண்ணுக்குள்ளே
வாழ்க்கை வாழத்தான் கையில் என்ன
கொண்டு வந்தோம் கொண்டு செல்ல''

என்ற திரையிசைப் பாடலும் மனித வாழ்வின் நிலையாமையை எடுத்துரைக்கின்றது.

''வீடு வரை மனைவி
காடு வரை பிள்ளை
கடைசி வரை யாரோ''

எனும் திரையிசைப் பாடல் வாயிலாக இறக்கும் போது யாரும் உடன்செல்வதில்லை என்ற வாழ்க்கை எதார்த்தத்தை எடுத்துரைக்கின்றது.

உயிரோடு செல்பவை

நாம் இறக்கும் போது பொன்னோ, பொருளோ எதுவும் நம்முடன் வராது. ஆனால் நம்முடன் நல்வினை, தீவினை, செய்ததவம் செய்த கொலைப்பாவம், செய்த தர்மம் ஆகியவை வரும்.

''நல்வினை தீவினை நாடிப் புரிந்தோர்பால்
செல்வன நிச்சயமே குதம்பாய்
செல்வன நிச்சயம்''

என்ற பாடலில் இறக்கின்ற போது நம்முடன் வருபவை எவை என்பதை எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

தவச்சிறப்பு

காமத்தை வென்று கடுமையான தவத்தைச் செய்பவரைக் கண்டு எமனும் பயப்படுவான். பொய் கூறுவதை வெறுத்து ஒதுக்கி மெய்யை விரும்புவோர் தான் உண்மையானவர் என்றும், பிற உயிர்களைக் கொல்லாத விரதமும், குளிரைத் தாங்குதல், பிறர் பசியை நீக்குதல். நல்ல விரதங்கள் என்கிறார். மேலும் ''யான் எனது'' என்னும் பற்றுகளைவிட்டவன் வானவர் ஆவார். இதனை,

''யான் என்னது என்னும் இருவகைப் பற்றற்றோன்
வானவன் ஆவானடி குதம்பாய்
வானவன் ஆவானடி''

என்னும் பாடல் மூலம் தவத்தின் சிறப்பு அறியமுடிகிறது. கலைஞர் கருணாநிதி ''நான் என்று சொன்னால் உதடுகூட ஒட்டாது. நாம் என்று சொன்னால் தான் உதடுகூட ஒட்டும்'' இதன் மூலம் நான் என்பது அகந்தையைக் காட்டுகிறது என்பது புலனாகின்றது.

மருத்துவம்

''மருத்துவம் என்பது பல்வேறு நோய்களையும் தடுப்பனவும் தீர்ப்பனவுமான பல்வேறு நலப்பொருள்களின் தொகுதியாகும்'' என்று மோகன் காந்தி மருத்துவத்திற்கு

விளக்கம் தருகிறார். நோயின் குணத்தை நன்கு ஆராய்ந்து அதனைப் போக்க வல்லவனே மருத்துவன் ஆவான். ''மருத்துவன்'' என்ற சொல் வழக்கு சங்க காலம் முதலே தமிழகத்தில் நிலவிவந்துள்ளதை, உறையூர் மருத்துவர் தாமோதரனார், மருத்து நல்லச்சுதனார் எனும் சங்கப்புலவர்களின் பெயர்களைக் கொண்டே அறிந்து கொள்ளலாம். மருத்துவர் தாமோதரன் இயற்றிய,

''திருந்திய யாக்கையுள் மருத்துவன் ஊட்டிய
மருந்துபோல் மருந்து ஆகி மனன்உவப்ப''

எனவரும் பாலைகலியின் பாடலில் ''மருத்துவன்'' எனும் சொல் இருந்ததை அறியமுடிகின்றது. வாதம், பித்தம், சிலேத்துமம் என்ற மூன்று பிணிக்கூறுகளை அறியாதவர்கள் எந்த நோயினையும் தீர்க்க முடியாது என்கிறார். மேலும், நாடியின் சத்தத்தைக் கொண்டு எந்த தாதுவில் கோளாறு என அறிபவனே உண்மையான மருத்துவன் என்பதனை,

''சத்துவகை தாது தன்னை அறிந்தவன்
சுத்த வயித்தியனே குதம்பாய்
சுத்த வயித்தியனே''

என்ற பாடலில் உண்மையான மருத்துவன் எப்படி இருக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

''நோய்நாடி நோய்முதல் நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்''

என்னும் குறளில் வள்ளுவர் நோய் இன்னதென்று ஆராய்ந்து நோயின் காரணத்தையும் ஆராய்ந்து அந்த நோயைத் தீர்ப்பவனே மருத்துவன் என்கின்றார்.

தலங்கள்

இறைவன் உறையும் தலங்களைத் தரிசிப்பதும், வேண்டுதல் வைப்பதும் தமிழர்களின் பண்பாகும். தமிழகத்தில் ஒவ்வொரு இறைவனுக்கும் தனித்தனி தலங்கள் காணப்படுகின்றன. நம்முடைய தூய்மையான உள்ளம் போன்று

தெய்வம் குடியிருக்கும் சுத்தத் தலங்கள் வேறில்லை என்கிறார். மேலும், அன்புடைய பக்தர்களின் மனக்கோயிலே கடவுள் இன்புற்றிருக்கும் கோயிலாகும். இதனை,

''அன்பான பக்தர் அகக்கோயில் கர்த்தற்கே
இன்பான கோயிலடி குதம்பாய்
இன்பான கோயிலடி''

என்னும் பாடலில் எடுத்துரைக்கின்றார். இதே கருத்தினை,

''உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானாற்கு வாய் கோபுரவாசல்
தெள்ளத் தெளிவார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலன்ஐந்தும் காளா மணிவிளக்கே''

என்ற திருமூலர் பாடலில் உடம்பைக் கோயில் என்றும் நடமாடும் கோயில் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அறியாமை

இன்று படித்தவர்களும், படிக்காதவர்களும் நாளும் கோளும் பார்த்து நல்ல செயலைச் செய்கின்றனர் மருத்துவம் பார்ப்பதற்கும் நல்லநாள் பார்ப்பது அறியாமையேயாகும். தீராத நோயில் துன்பப்படுபவர்களுக்கு நாளும் கோளும் பார்த்து மருத்தவம் செய்வது அறியாமை என்பதனை,

''மீளா வியாதியில் மேன்மேலும் நொந்தார்க்கு
நாளேது கோளேதடி குதம்பாய்
நாளேது கோளேதடி''

எனும் பாடலில் அறியாமையைப் பற்றி எடுத்துரைக்கின்றார். இன்றைய விஞ்ஞான வளர்ச்சியிலும் சகுனம் பார்ப்பதும், நற்சொல் கேட்பதும் மக்களிடையே காணப்படுகின்றது. சகுனம் பார்த்தல், சந்தியா வந்தனம் செய்தல் முதலிய மதிக்கப்பெறும் சடங்குகள் யாவும் அறியாமையின் விளைவுகள் என்பதனை,

''சாற்றும் சகுனங்கள் சந்தியா வந்தனம்
போற்றும் அறிவீனமே குதம்பாய்
போற்றும் அறிவீனமே''

என்னும் பாடல் வழி தெற்றெனத் தெரிகின்றது.

நிறைவுரை

இக்கட்டுரையில் இறைவன் சோதி வடிவில் இருக்கின்றான் என்றும், ஐம்புலன்களை அடக்கினால் முக்தி அடையலாம் என்றும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. உடலின் இழிவு நிலையினையும், பரத்தையர் நிலையினையும் அறியமுடிகின்றது. பொருளாசைப் பற்றியும், பொய்த்தவ ஒழுக்கத்தினைப் பற்றியும், செல்வநிலையாமை பற்றியும் கூறப்பட்டுள்ளது. உயிரோடு செல்லக்கூடியவை எவை என்றும் தவச்சிறப்பின் மேன்மையினையும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. சாதிகள் குறித்தும், உண்மையான மருத்துவர் பற்றியும் கூறப்பட்டுள்ளது. தூய்மையான உள்ளம் தான் சுத்தமான தலம் என்றும், நாளும் கோளும் பார்த்து மருத்துவம் செய்வது அறியாமை என்றும் எடுத்துரைத்துள்ளார். குதம்பைச் சித்தரின் பாடல்கள் வாழ்க்கைக்குத் தேவையான அறிவுரைகளும், அறவுரைகளும் எடுத்தியம்புகின்றன. இவற்றை அனைவரும் பின்பற்றினோமென்றால் வாழ்வில் துன்பம் ஏற்படாது என்பது உறுதி.

57. சித்தர்களின் அற்புதச் சித்துக்கள்



முனைவர் அ.மகாலெட்சுமி
உதவிப் பேராசிரியர்
மீனாட்சி இராமசாமி கலை மற்றும்
அறிவியல் கல்லூரி
தத்தனூர், அரியலூர் மாவட்டம்

முன்னுரை

யோகமும், ஞானமும் வாய்க்கப் பெற்றவர்கள் சித்துக்களைச் செய்ய வல்லவர்கள், சித்தர்கள் எனப்படுவர். சித்துக்கள் எட்டு வகைப்படும். இவற்றை அட்டமா சித்துக்கள் என்பர். (அட்டம்-எட்டு)

1.	அணிமா	:	உடலைச் சிறிதாக்கிக் கொள்ளும் திறம்
2.	மகிமா	:	உடலைப் பெரிதாக்கிக் கொள்ளும் திறம்
3.	கிரிமா	:	கிரி-மலை, மலைபோன்று உடலைத் திடமாக்கிக் கொள்ளும் திறம்
4.	இலகிமா	:	இலகு-லேசானது உடலை பஞ்சுபோல் லேசாக்கிக் கொள்ளும் திறம்
5.	பிராப்தி	:	எதையும் நினைத்த மாத்திரத்தில் அடையும் திறம்
6.	பரகாமியம்	:	பர-பிற. பிறர் உடலில் புகுந்து வெளியேறும் திறம்
7.	ஈசத்துவம்	:	ஒன்றனை (அ) ஒரு செயலை உருவாக்கி (படைத்தல்) பாதுகாத்து (காத்தல்) நிறைவு செய்யும் (அழிக்கும் திறம்)
8.	வசித்துவம்	:	உலக உயிர்களைத் தன் வயப்படுத்தி தன் ஆளுகைப்படி நடக்கச் செய்யும் திறன்

சித்தர்களுக்கு சாதி, மத, பேதம் இல்லை. ஆண், பெண் மேல், கீழ் எனும் வேறுபாடுகள் இல்லை. அறுபதுக்கும் மேற்பட்ட சித்தர்கள் உள்ளனர். 18, 108, 1008 எண்ணிக்கையை சிறப்பாக கருதுவது மரபு. இந்த அடிப்படையில் சித்தர்கள் பதினெண்மர் (18) என்று கூறுவது மரபு. சித்தர்களுள் திருமூலர் முதன்மையானவர்.

பதினெண் சித்தர்கள்

1) திருமூலர், 2)போகமுனிவர், 3)அகத்தியர்,

4)புலிப்பாணி, 5) கொங்கணச்சித்தர், 6)சட்டைமுனி, 7)கடுவெளிச் சித்தர், 8)உரோமமுனிச் சித்தர், 9)தேரையர், 10)பாம்பாட்டி சித்தர், 11)சிவவாக்கியார், 12)குதம்பைச் சித்தர், 13) மச்சமுனி, 17) பத்திரகிரியார், 15)பட்டினத்தார், 16)அகப்பேய் சித்தர், 17) இடைக்காட்டு சித்தர், 18)அழுகணிச் சித்தர்.

சித்தர்கள் மருத்துவ நூல், மந்திர நூல், யோக நூல், ஞான நூல், இரசவாத நூல் போன்ற பலவகையான நூல்களை இயற்றி உள்ளனர். சுத்தமார்க்கத்தைச் சேர்ந்த ஞானசித்தர்கள் வித்தக சித்தர் கணம் என இவர்களை அழைப்பர். தமிழக சித்த மரபு திருமூலரிலிருந்து தொடங்குகிறது. சித்தர்களுள் திருமூலர், சிவவாக்கியர், பட்டினத்தார், திருமாளிகைத் தேவர், கரூரார் ஆகியோர் பஞ்சவர் என அழைக்கப்படுபவர். சித்தர்களுள் பெரும்பாலோர் சைவர் எனினும் சமயம் கடந்தவர்கள். சமரச சன்மார்க்க நெறி நிற்பவர்கள் இவர்கள். இவர்களைப் பற்றி மு.வரதராசனார்.

''சாதி சமய வேறுபாடுகளைக் கடந்தவர்கள்; சடங்குகளையும், சடங்குகளோடு ஒட்டிய வழிபாடுகளையும் போற்றாதவர்கள் தன் வாழ்க்கை அனுபவங்களாலர் கண்டறிந்த உண்மைகளை மட்டுமே தெளிவாக எடுத்து சொல்வது இவர்களின் நோக்கம். இவர்கள் தத்துவ ஞானிகள், மெய்யுணர்வு பெற்றவர்கள் இவர்களில் சிலர் யோகிகளாய் சிறப்புற்றவர்கள். சிலர் மருத்துவர்களாய் விளங்கியவர்கள் என்று குறிப்பிடுவார்'' இவர்கள் வளர்த்த மருத்துவக் கலை சித்த மருத்துவம் என இன்றும் போற்றப்படுகிறது.

சித்தர்கள் காயசித்தியை முதற்குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். வள்ளுவர், தாயுமானவர், வள்ளலார், ஔவையார் போன்றோரையும் சித்தர் பட்டியலில் சேர்ப்பர். சித்தர் பாடல்கள் தோன்றியகாலம் பதினைந்தாம் நூற்றாண்டிற்கும் முற்பட்டது. தொகுக்கப் பெற்றது பதினெட்டாம் நூற்றாண்டு அல்லது பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதி.

சிலசித்தர்களின் அற்புதங்கள்

திருமூலர்

யோகப் பயிற்சியினால் நீண்ட காலம் வாழ்ந்தவர் கயிலாய மலையில் நந்திதேவரின் உபதேசத்தைப் பெற்ற யோகி, அட்டமா சித்தி பெற்றவர். அகத்தியரிடம் கொண்ட நட்பால் பொதியமலை நோக்கி வந்து, திருவாவடுதுறையை அடைந்து அங்குள்ள இறைவனை வணங்கி, அப்பதியினின்று அகன்று போகும் போது காவிரியாற்றின் கரையில் பசுக்கூட்டம் அழுவதைப் பார்த்து, அப்பசுக்கள் மேய்க்கும் மூலன் என்ற இடையன் இறந்து கிடக்க, யோகியார் அப்பசுவின் துன்பத்தைப் போக்க எண்ணி தான் பயின்ற சித்தினால் அம்மூலன் உடலில் தம் உயிரைப் புகுத்தினார். பசுக்கள் மகிழ்ந்தன. மீண்டும் திரும்பியவுடன் யோகியர் உடல் அங்கில்லை.

திருமூலர் ஓரிடத்தில் நின்றார். மூலன் என்ற இடையனின் மனைவி தன் கணவன் இன்னும் வரவில்லையே என்று தேடிக்கொண்டு சென்றாள். தன் கணவன் போல நின்ற யோகியரைப் பார்த்தாள். அவரை தம் இல்லத்துக்கு அழைத்துச் செல்ல முயன்றாள். முடியவில்லை, தன் கணவனின் நிலையை பலரிடம் உரைத்து, எல்லோரும் அவ்விடம் சென்று பார்த்த போது திருமூலர் யோகத்தில் இருக்கக்கண்டு அவரை மாற்ற இயலாது என்று மூலனின் மனைவியிடம் உரைத்து உண்மையை மக்கள் உணர, திருவாவடுதுறையை அடைந்த யோகியார் இறைவனை வணங்கி அரசமரத்தின் கீழ் யோகத்திலிருந்து 3000 ஆண்டுகளில் 3000 செய்யுளை இயற்றினார்.

''ஒன்றே குலம் ஒருவனே தேவன், அன்பே சிவம்'' என்ற உயரிய கருத்தையும் கூடுவிட்டுக் கூடுபாயும் கலையையும் உருவாக்கியவர். உலகில் உள்ள மக்கள் அறிவுத் தெளிவு பெறாதவராய் உள்ளனர். இதனைத்

''தேய்ந்தற்று றொழிந்த இளமை கடைமுறை
ஆய்ந்தற்ற பின்னை அரிய கருமங்கள்
பாய்ந்தற்ற கங்கைப் படர்சடை நந்தியை

ஓர்ந்துற்றக் கொள்ளும் உயிருள்ள போதே''

என்கிறார் திருமூலர்.

போக முனிவர்

திருமூலரின் மாணாக்கரான காலங்கிநாதரின் மாணாக்கர் இவர். போகர் ஏழாயிரம், போகர் திருமந்திரம், நிகண்டு பதினேழாயிரம் முதலான நூல்களை எழுதியவர். மருத்துவப் பழஞ் சுவடிகளைப் போகரின் பெயரால் கூறுவது நடைமுறையில் காணப்படும். போகர் நிகண்டும் மருத்துவம் பற்றிக் கூறும் நூலே.

எனக்கு செத்தவர்களைப் பிழைக்க வைக்கும் சஞ்சீவி மூலிகைகளைக் காட்டித்தாருங்கள் எனப் போகர் சித்தர் ஓர் ஞானக்கனியை காட்டி அதை சாப்பிட வைத்து, சஞ்சீவி மூலிகை பற்றி எதுவும் அளிக்காதுவிட்டார். பலகாலம் சோர்வின்றி, தவம் புரியும் ஆற்றல் பெற்றார். போகர் சித்தர் காட்டிற்குச் சென்று கொண்டிருந்த போது ஒரு புற்றிற்குள்ளே தவம் செய்த சித்தரின் தவ ஒளி, வெளியில் வீசுவதைக் கண்டு, புற்றுச்சித்தரை விழிக்க வைத்த பெருமை போகர் சித்தருக்குண்டு.

கடுவெளிச் சித்தர்

கடுவெளி என்பது வெட்டவெளி அதாவது பிரமம். இந்த சித்தர் பிரபஞ்சத்தை வெட்ட வெளியாகக் கண்டு தம் ஆத்மானுபவத்தைப் பிறரும் அறிந்து நலம் பெறுவதற்காகப் பாடிய பாடல்கள் கடுவெளிச்சித்தர் பாடல்கள்,

''நந்தவனத்தில் ஓர் ஆண்டி-அவன்
நாலாறு மாதாய்க் குயவனை வேண்டிக்
கொண்டு வந்தானொரு தோண்டி-மெத்தக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி''

என்ன அருமையான சொல்லாட்சி இலக்கணம் பிறழாமல் அதே சமயம் எளிமை கூட்டிப் பாடலின் வரிகளைக் கொண்ட இவர் பிற்கால சித்தராயிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வரவேண்டியிருக்கிறது.

அகத்தியர்

புலத்தியரின் குரு அகத்தியர். அகத்தியரிடத்தில் சென்ற சிலர் புலத்தியன் மலையைத் தங்கமாக்கிட, மலையையே துருத்திக் கொண்டு ஊதுகிறான் என்றதும் மக்களுக்குப் பஞ்சத்தை இறைவனே உருவாக்குகிறான். இது முன்சென்ம ஊழ்வினை. இதில் சீடன் தலையிடுவதை ஏற்க என்னால் ஒரு போதும் இயலாது என வெகுண்ட அகத்தியர் உடலைப் பற்றிப் பிடித்து தூக்கி, கால் இரண்டையும் கிழித்து உயிர் போக்கிப் பிணத்தை வீசினார். புலத்தியர்தான் கிழிக்கப்பட்ட உடலைச் சேர்த்து மூலிகைக் கலவையால் சொல்லி, உடலுக்கு உயிர்வரும் மந்திரங்களைக் கூறி தன் சிசுயர்களுக்கு உபதேசித்தார்.

பட்டினத்தார்

வானுலக தேவர்களில் ஒருவரான குபேரன் தான் இப்பூவுலகில் பட்டினத்தராக அவதரித்தார் என்று திருவெண்காட்டுப் புராணம் கூறுவர். இவருக்குப் பெற்றோர் வைத்த பெயர் திருவெண்காடர். சிவபக்தர் மூலம் மருதபிரான் என்ற மகனையும் வளர்த்து திரைகடல் ஓடியும், திரவியம் தேடு என்பதை மறுத்ததும் வீட்டிற்குள்ளேயே மகனைச் சிறைவைத்தவுடன் வரட்டி வைரகல்லாகவும், தவிடெல்லாம் தங்கமாகவும் மின்ன மகனின் பெருமையறிந்த தந்தை மகனைப் பாராட்டச் சென்றபோது காதற்ற ஊசி வாராது காண் கடை வழிக்கே என்று எழுதப்பட்ட ஓலையைக் கண்டவுடன் திருவிடை மருதூர் பெருமானே தன் மகன் என்பதை உணர்ந்தவர் பட்டினத்தார் தந்தை.

துறவுக் கோலத்தில் பிச்சையெடுப்பது பட்டினத்தாரின் தங்கைக்கு பிடிக்காததால் ஆப்பத்தில் விசம் வைக்க, விசம் வைத்த அப்பத்தை உணர்ந்த பட்டினத்தார். ‘‘தன்னப்பம் தன்னைச்சுட, வீட்டப்பம் ஓட்டைச்சுடும்’’ என்று கூறி வீட்டின் கூரைமீது அப்பத்தை வீச அவ்வீடு தீப்பற்றி எரிந்தது.

அகப்பேய்ச் சித்தர்

மனமாகிய பேயை வென்ற சித்தர் ஆதலின் இவர் அகப்பேய்ச்சித்தர் எனப்பட்டார். அகம்+பேய்+சித்தர். இந்த அகப்பேய்ச்சித்தர் பெயர் காலத்தால் சிதைவுற்று அகப்பைச் சித்தர் எனவும் கூறுவதுண்டு. மனமாகிய அகப்பேயை அடக்கி வெற்றிகண்டார்க்குச் சிவமாகிய இறைவன் காட்சி தருவார். துன்பமில்லா இன்பநிலையை அடையலாம் என்ற உண்மையைத் தம் பாடல்களில் பாடி வைத்தார். தன்னலம் கருதாது பிறர் நலன் குறித்து கவலைப்படும் இவரது பாடல்கள் அனைத்தும் தத்துவ முத்துக்கள் பாடல்களைப் படிக்கும் தோறும் அலைபாய்ந்து கொண்டிருக்கும் ஆசையை அடக்கவியலும்.

''நஞ்சுண்ண வேண்டாவே - அகப்பேய்
நாயகன் தாள் பெறவே
நெஞ்சு மலையாதே - அகப்பேய்
நீயொன்றுஞ் சொல்லாதே''

அழுகுணிச்சித்தர்

அழுத கண்ணீருடன் காணப்பட்ட சித்தர். இவரது பாடல்களைப் படிக்கும் தோறும் அழுகை உணர்ச்சி உண்டாவதால் அழுகன் சித்தர் எனப்பட்டார் போலும். இவர் பாடும்போது எப்பொழுதும் கண்களிலிருந்து நீர் வழிந்து கொண்டே இருக்கும் என்பதால் இவருக்கு இப்பெயர் ஏற்பட்டதாக சிலர் கூறுவர். இவரது பாடல்கள் ஏறத்தாழ ஒப்பாரிப் பாடல்கள் போலத் தோன்றினாலும் அப்பாடலின் கருத்துக்களை அனுபவ ஞானிகளால் தான் விளக்கிக் கொள்ளமுடியும்.

''ஊனத்தைச் சடலமடி உப்பிருந்த பாண்டமடி
மாற்றிப் பிறக்க மருந்தெனக்குக் கிட்டுதில்லை
மாற்றிப் பிறக்க மருந்தெனக்குக் கிட்டுமென்றால்
ஊத்தைச் சடலம் விட்டே - என் கண்ணம்மா
உன் பாதம் சேரேனே?''

ஊரோமமுனி சித்தர்

இவர் புசுண்ட மாமுனிவரின் சீடர் என்றும் குமாரர் என்றும் கூறுவர். உரோம முனிவரின் உடல் முழுவதும் மயிர் முளைத்திருந்த படியால், உரோம முனி என்று காரணப் பெயர் பெற்றார். ஒரு பிரம்மா இறந்ததால், இவரது மயிர் ஒன்று உதிரும். இவ்வாறு மூன்றரைக் கோடி பிரம்மா இறந்தால் மட்டுமே இவரது வாழ்நாள் முடிவுக்கு வரும். உரோம முனி இறந்தால் அட்டகோண முனிவருக்கு ஒரு கோணல் நிமிரும் என்பர்.

காலங்கியும் போகரும் சீனாவிலிருந்து தமிழகம் வந்து சித்தர்களானது போல ரோம முனியும் ரோமபுரியிலிருந்து வந்த சித்தர் ரோமபுரியுடன் தொடர்புடையவர் பாட்டானது உவமை நயத்திற்கும் சிலேடைக்கும் பஞ்சமேயில்லை.

"மூலவட்டமான குரு பாதங்காப்பு
முத்திக்கு வித்தான முதலே காப்பு
மேலவட்ட மானபரப் பிரமங் காப்பு
வேதாந்தங் கடந்து நின்ற மெய்யே காப்பு"

சித்தர் அகராதிகள்

பதினெண் சித்தர்கள் தொடர்பாகப் பல அகராதிகள் உள்ளன. இவை அரிய பல செய்திகளை உள்ளடக்கி இருக்கின்றன. அவை, 1.வைத்திய மூலிகை அகராதி, 2.வைத்திய மூலிகை விரிவகராதி, 3.வைத்திய மலையகராதி, 4.அரும்பெயர் அனுபந்த அகராதி, 5.தொகை அகராதி, 6.பச்சிலை மூலிகை அகராதி, 7.பரிபாசை அகராதி, 8.கருப்பொருள் அகராதி, 9.மறைத்து வெளிப்படை அகராதி என்பன அவைகள்.

58. சாகா வரம் பெற வள்ளலார் வழியில் உயிரிரக்கம்

முனைவர் ஆ.சுரேசு
உதவிப் பேராசிரியர்
திருவள்ளுவர் பல்கலைக் கழக மாதிரி உறுப்புக்கலை
அறிவியல் கல்லூரி
திட்டக்குடி

முன்னுரை

மரணமிலாப் பெருவாழ்வை அடைந்திட எல்லா மனிதராலும் முடியும் என்பதை அருட்பிரகாச வள்ளலார் கூறித் தானும் அவ்வாறே அடைந்துள்ளார். அதற்கான முதல்வழி அனைத்து உயிர்களிடமும் அன்பு செலுத்துதல் வேண்டும். இறைவனை அடைவதற்கு முதல்படியாகச் சீவகாருண்ய ஒழுக்கத்தை முன் வைக்கின்றார். எந்த ஓர் உயிரையும் துன்புறுத்தாமல், அசைவ உணவை உண்ணாமல், அதை உண்டால் நன்று என்று சொல்லாமல் எவன் ஒருவன் வாழ்கிறானோ அவனே சன்மார்க்கி, அவனால் தான் சாகாமல் இருக்க முடியும். அதற்கு மூலகாரணமாகப் பிற உயிர்களிடம் அன்பு, கருணை, இரக்கம் ஆகியவைக் காட்டும் உயிரக்கக் கோட்பாடுகள் பற்றி ஆராய இக்கட்டுரை முற்படுகிறது.

மீன் பிடித்தவரைத் திருத்தியது

மேட்டுக்குப்பத்தில் மீன் பிடிப்பவர் இருவர் இருந்தனர். வலை வீசப் புறப்படும் அவ்விருவரும் சித்திவளாகத்தின் வழியாகவே செல்வர். வலையும் கையுமாக அவர்கள் நாள்தோறும் அவ்வழியே செல்வதைக் காண்பதற்குப் பெருமானார் அஞ்சினார். வலையும், தூண்டிலும், கண்ணி வகைகளும் கண்டபோதெல்லாம் என் உள்ளம் நடுங்கிய நடுக்கம் நின் திருவுளம் அறியும் என்பது பெருமானார் வாக்கன்றோ?

''துண்ணெனக் கொடியோர் பிறவுயிர் கொல்லத்
தொடங்கிய போதெலாம் பயந்தேன்

கண்ணினால் ஐயோ பிற உயிர் பதைக்கக்
கண்டகாலத்திலும் பதைத்தேன்
மண்ணினில் வலையும் தூண்டிலும் கண்ணி
வகைகளும் கண்ட போதெல்லாம்
எண்ணி என் உள்ளம் நடுங்கிய நடுக்கம்
எந்தை நின் திருவுளம் அறியும்'' (1)

வலைஞரின் கொலைத் தொழிலைக் காணப்பெறாத பெருமானார் அவர்களை அழைத்து வேறு பல நல்ல தொழில்கள் இருக்கும் போது, கொலைத் தொழிலாகிய இவ்வலைத் தொழில் எதற்காக? இதனை விடுத்து வேறு தொழில் செய்து வாழுங்கள் எனப் பலமுறை அறிவுறுத்தினர். வலைஞர்கள் செவி சாய்த்திலர். பின்பு ஒரு நாள் பெருமானார் அவர்களை அழைத்து ''நீங்கள் வீசுவது சிறு வலையா? பெருவலையா?'' என்றனர். அதற்கு வலைஞர்கள் ''சிறுவலை'' எனக்கூறினர். ''சிறு வலையால் சிறு பொருளையே பெறலாம். பெரும்பொருள் பெற்றுப் பெருவாழ்வு வாழ வேண்டுமாயின் பெருவலை வீசுங்கள்'' எனப்பெருமானார் கூறவே, வலைஞர்கள் பெருவலையைத் தங்களுக்குத் தந்து உதவுமாறு வேண்டினர். பெருவலை இதுபோன்று மீன் பிடிக்கும் வலையன்று, பெருவலை என்பது அன்பு, அன்பு வலையை வீசினால் அதற்குள் ஆண்டவனே அகப்படுவான் என்று பெருமானார் அருளினார். பெருமானாரின் கருத்தை உணர்தற்கு இயலாத வலைஞர்கள் இது வழக்கமாகச் சுவாமிகள் சொல்வது தானே என்று பொருட்படுத்தாது தம் வழிச் சென்றனர். அன்று முதல் வலை வீசச் செல்லும்போது சித்தி வளாகத்தின் வழியே சென்றால் பெருமானார் கண்ணில் பட்டுவிடுவோம். ஏதாவது சொல்வார்கள் என்று எண்ணி வேறு வழியாகச் செல்வார். ஆயினர் சென்று வலை வீசினார்கள். மீன்கள் அகப்படவில்லை. வலைகளும் அறுந்தன. ஒருநாளன்றிப் பலநாளும் அவ்வாறே ஆயிற்று. மீண்டும் மீண்டும் வலை அறுதலையும் மீன்கள் அறவே அகப்படாது ஒழிதலையும் கண்ட வலைஞர்கள் இஃது பெருமானாரது செயல் என்று அஞ்சி வலைத் தொழிலை விடுத்தனர். திருவள்ளுவரும் வள்ளலாரின் கொள்கைக்கு அரண்

சேர்க்கும் விதமாக,

> ''கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
> எல்லா உயிரும் தொழும்'' (2)

என்று உயிர்க்கொலை புரியாதவனை எல்லா உயிரும் கைகூப்பி வணங்கும் என்கிறார். மேலும், வள்ளலார் மேட்டுக்குப்பத்தில் பெருமானார் உபதேசம் செய்யும் காலங்களில் முட ஆட்டுக்குட்டி ஒன்று அன்பர்களது கூட்டத்தில் ஓரமாக நின்று கண் இமையாது காதைச் சாய்த்துக் கொண்டு உபதேசங்களைக் கேட்டுக் கொண்டு இருக்கும் உபதேசக் கூட்டம் முடிந்து அன்பர்கள் சித்திவளாகத்தை வலம் வரும்போது முடக்காலோடு நொண்டிக் கொண்டே தானும் அவர்களோடு வலம் வரும். நாள்தோறும் கருங்குழியிலிருந்து தமக்காக வரும் உணவைப் பெருமானார் அந்த முட ஆட்டுக்குட்டிக்கும், முடவராகிய ஆசிரியர் ஒருவருக்கும் வழங்குவது வழக்கம். பெருமானாரது திருவுருவப் படத்தில் பின்னணியாக அமைந்திருக்கும் தருமச்சாலை, ஞானசபை, சித்திவளாகம் ஆகியவற்றுடன் இந்த முட ஆட்டுக்குட்டியைக் காணலாம். பெருமானாரது அருளைப் பெறுவதற்கு அந்த முடஆட்டுக்குட்டி என்ன புண்ணியம் செய்ததோ?

வள்ளலாரைப் போன்று மன இரக்கத்துடன் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை அவர்கள் ஆசிய சோதியில், அரசு வாழ்வைத் துறந்து நள்ளிரவில் வெளிப்பட்டுச் சென்ற புத்தர், பிம்பிசார மன்னனுடைய யாகத்துக்காகக் கொண்டு போகப்பட்ட ஆட்டு மந்தையின் மத்தியில், துன்புற்றிருந்த ஒரு நொண்டி ஆட்டுக்குட்டியைத் தம் தோளில் சுமந்து கொண்டு சென்று, அதன்மீது அளவு கடந்த அன்பு கொண்டு, யாகசாலையை அடைந்து, மன்னனுக்கு அறிவுரை போதித்து, நாடெங்கும் உயிர்க்கொலையை நிறுத்திய வரலாறும் இங்கு நினைக்கத்தக்கதாகும். புத்தர் ஆட்டுமந்தையைக் கண்டு,

> ''கல்லெறி கொண்டதுவோ? விழுந்தொரு
> கால்முட மானதுவோ?
> செல்லும் விழிநீள-உதிரமும்

சிந்தைப் பெருகுதையோ''

என்று கூறி அரசனின் சிந்தனையை மாற்றினார். இதனை உணர்ந்த மன்னர் நாட்டுமக்களுக்குக் கொலையைத் தவிர்க்க,

''ஊனை உண்பதும் உயிர்க்கொலை புரிவதும்
இந்நாள் முதல் இந்நன்னாட் டெல்லையில்
இல்லா தொழிக : ஈது எம் ஆணை'' (3)

என்று கூறிக் கட்டளையிட்டான். அன்று முதல் அந்நாட்டில் மும்மாரி மழை பொழிந்தது; நாடு செழித்தது; நகரம் சிறந்தது என்று வரலாறு கூறுகிறது. இப்படியே நாமும் பின்பற்றுவோம்.

கருணை நிறைந்த ஞானி

சிற்றுயிர்க்கும் இரங்கி ''வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடியவர்'' மக்களுக்குப் பசித்துன்பம் இல்லாத நிலையை உருவாக்க ''சத்திய தருமச்சாலையை'' ஏற்படுத்தியவர். சீவகாருணிய ஒழுக்கமே கடவுள் வழிபாடாகும்.

''அப்பா நான் வேண்டுதல் கேட்டருள் புரிதல் வேண்டும்
ஆருயிட்கட் கெல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணும் நான் சென்றே
எந்தைநின தருட்புகழை இயம்பிடல் வேண்டும்
செப்பாத மேனிலைமேல் சுத்தசிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க அருட்சோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான்செயினும் நீபொறுத்தல் வேண்டும்
தலைவநினைப் பிரியாத நிலைமையும் வேண்டுவனே''
(4)

தாயுமானவரும்,

''எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே'' (5)

என்று குறிப்பிடுகின்றார். திருமூலரும்,

''அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்'' (4)

என்றும் அன்பு நிலையைப் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

சிறப்பாக வாழ சிறந்த வழிகள்

தெய்வங்கள் பெயரால் நேர்த்திக்கடன் என்று எந்த உயிரையும் பலியிடாதீர்கள்; புலால் உண்ணாதீர்கள்; உயிர்களுக்கு உறும் இடையூறெலாம் ஒருவன் தான் அடைந்து, விலக்கி, மகிழ்வானேயானால் சுத்த சன்மார்க்க சுகநிலை பெற்று உத்தமனாகலாம். இறந்தவர்களை எரிக்காமல் புதைத்து சமாதி செய்ய வேண்டும். கருமாதி, திதி, தாலி வாங்குதல், மறுமணம் ஆகியவை வேண்டாம். இவைகள் எல்லாம் வள்ளலாரின் கொள்கைகளாகும். அவர்வழி நடப்போம். வாழ்க்கையைச் செம்மைப்படுத்திக் கொள்வோம்.

சீவகாருண்யத்தின் மேன்மை

ஆகாரம் கொடுக்க நினைக்கின்ற மனம், யோகிகளுக்குடைய சுத்த மனத்திற்கு நிகரானது. ஒருவன் உபசரித்து ஆகாரம் கொடுக்கும் போது, பிறர் உண்ணுவதைத்தான் உண்ணுவதாக நினைத்துக் களிப்படைவானாயின் அவன் ஞானியே ஆவான். சாப்பிட்டவர்களின் திருப்தியைத் தரிசிக்கின்றவர்கள் கடவுளை தரிசித்தவர்கள் ஆவார்கள். கடவுள் இன்பத்தை அனுபவிப்பவர்கள் ஆவார்கள். பசி நீக்கப்பட்ட சீவர்கள், பசி நீக்கியவரைத் தெய்வமாக நினைப்பதால் அவர்கள் தெய்வமே ஆவார்கள். யார் யாரை தடுத்தாலும் சீவகாருண்ய ஒழுக்கத்தை நடத்தி மோட்ச வீட்டின் திறவுகோலைப் பெறுவது முக்கியம். சீவகாருண்யத்தைப் பற்றி இவ்வளவு விரிவாகவும், தெளிவாகவும் உலகில் எவரும் உபதேசிக்கவில்லை. இது வள்ளலாரின் அரும்பெரும் உபதேசமாகும்.

உறவினத்தார், புறவினத்தார்

வள்ளலார் அவர்கள் உயிரைக் கொன்று திண்பவரை,

"உயிர்க்கொலையும் புலைப்பொசிப்பும் உடையவர்கள் எல்லாம்
உறவினத்தார் அல்லர், அவர் புற இனத்தார்; இவர்க்குப்

பயிர்புறும் ஓர் பசிதவிர்த்தல் மாத்திரமே புரிக,
பரிந்து மற்றைப் பண்புரையேல், நன்புறவேல்-இங்கே
நயப்புறு சன்மார்க்கம் அவர் அடையளவும் இதுதான்
நம் ஆணை என்றெனக்கு நவின்ற அருள் இறையே,
மயர்ப்பறு மெய்த்தவர் போற்றப் பொதுவில் நடம்புரியும்
மாநடத்தென் அரசே, என் மாலை அணிந்தருளே'' (8)

என்று ஆறாம் திருமுறையில் அருள் விளக்க-மாலையில் சாடுகின்றார். அதாவது உயிர்க்கொலை புரிவோர் புலால் உண்போர் நம் உறவினர் அல்லர்; அவர்கள் புறவினத்தாராவார். எனவே, அவர்களுக்குப் பசி நீக்கும் உணவினை மட்டும் வழங்க வேண்டும். அவரிடத்துப் பணிந்து நற்பண்புகளுடைய சொற்களைக் கூற வேண்டா, அவர்களிடம் நட்பும் கொள்ள வேண்டா. அவர்கள் தம் இயல்புமாறிச் சன்மார்க்க நெறியில் சேரும் வரையும் இவ்வாறே அவர்களிடம் நடந்து கொள்க ; இதுவே நம் ஆணை என்று எனக்கு அறிவுறுத்திய இறைவனே.

அறியாமையும், மயக்கமும் நீங்கப் பெற்ற உண்மையான அடியார்கள் போற்றிப் புகழும் படியாகத் திருச்சிற்றம்பலத்தில் நடனமாடுகின்ற நடராசப் பெருமானே. நான் பாடும் பாமாலையை ஏற்று அருள்வாயாக என்றார்.

முடிவுரை

பிற உயிர்களைக் கொன்று, உண்டு வாழும் கீழ்மக்களின் வயிறுகள் சுடுகாடுகளைக் காட்டிலும் இழிந்தன ; ஆதலால் அத்திய வினையைச் செய்யலாகாது. நம் பசியைப் போக்க கொலை செய்யப்படும் பிராணிகளுக்கு நாம் உயிருள்ள இடுகாடுகளாக உள்ளோம். பிணங்களின் இடுகாடுகளாக உங்கள் வயிற்றை மாற்றாதீர்கள். புலால் உணவைத் தவிர்ப்போம். கொல்லா நெறியால் குவலயம் காப்போம்.

59. சிவஞான யோகியின் சைவப் பற்றும் தமிழ்ப் பற்றும்



கா.காமாட்சி
உதவிப் பேராசிரியர் (தமிழ்)
சீதாலட்சுமி இராமசாமி கல்லூரி
திருச்சி

முன்னுரை

சைவ சித்தாந்தத்தின் தூய்மையையும் உண்மையையும் பாதுகாத்து வளர்க்கவும் தமிழ் நாட்டில் ஆதீனங்கள் ஏற்பட்டன. ஆதீனத் தலைவர் பண்டார சந்நிதி என்றும் அவருடைய மாணவர்கள் தம்பிரான்கள் என்றும் கூறப்பட்டனர். இவர்கள் மறைபொருளான உண்மைகளைக் குறித்த அறிவில் ஆழ்ந்து தோய்ந்தவர்கள் உயிர்க்குரிய பண்பாட்டினால் ஆன்மீக அனுபவம் அடையப் பெறுகின்றனர் ஞானத்தைப் பெறுபவராகத் தம்மை ஆக்கிக் கொள்ளச் சரியை, கிரியை யோகம் ஆகியவற்றைப் பின்பற்றினர். இம்மூன்றையும் முழுமையாக அடையப் பெற்றவர்களே தெய்வீக அருளைப் பொருளாகக் கொண்ட சிவஞானபோதத்தைப் பெறும் தகுதி உடையவர் ஆவர் சிவஞானத்தைப் பெற்ற சிவஞான யோகியின் சைவப்பற்றும் தமிழ்ப்பற்றும் குறித்து இக்கட்டுரை இயம்புகின்றது.

சைவநெறி உலகிற்கு அருள் பாலித்தவர்

தாமிரபரணிக் கரையில் விக்கிரமசிங்கபுரத்தில் பிறந்து முக்காளா லிங்கர் என அழைக்கப்பட்ட சிவ பக்தர் இவர் சைவ வேளாளர் குடியில் தோன்றிய அகத்திய முனிவரின் வாழ்த்துப் பெற்ற குடிவழியின் ஏழாவது தலைமுறைக்கு உரியவர் தமிழிலும் சமசுகிருதத்திலும் தேர்ச்சியுற்று வயதுக்கு மீறிய அறிவுடையவராகவும் தருக்க ஆராய்ச்சியிலும் ஆற்றல் மிக்கவராகவும், வன்மையுடையவராகவும் நுட்ப மிக்க மொழி பெயர்ப்பாளராகவும் சமய நூல் புலவராகவும் திருவாடுதுறை ஆதீனத்தைச் சார்ந்த மேன்மை பொருந்திய ஆசிரியராகவும்

திகழ்ந்தவர். சிறந்த மாபாடியக்காரராக விளங்கியவர் சைவ ஆகம நெறியை மிகுந்த அக்கறையுடன் வளர்க்கும் விதத்தில் மாணவருக்கு அறிவுறுத்திய தனித் தன்மை வாய்ந்த குருவாகத் திகழ்ந்தவர். சிவஞான போதத்திற்கு இரண்டு உரைகள் அருளியதன் வாயிலாகத் தமிழ் சைவநெறியை உலகிற்கு அருள்பாலித்தவர் சிவஞான யோகியாவார்.

சிவஞான போதஉரை

திருவாவடுதுறைப் புலவர்களின் கூற்றுப்படி யோகி முதலில் சிற்றுரையும் பின்னர் பேருரையும் எழுதினார். சிற்றுரை என்பது சுருக்கவுரையாகும் பேருரை என்பது மாபாடியமாகும். சைவசித்தாந்தத்தின் அங்கீகரிக்கப்பட்ட உரையாசிரியராக ஏற்றுக் கொள்ளப்பட்ட இவ்வுரைகளே காரணமாக அமைந்தன. வடமொழியிலிருந்து மொழிபெயர்க்கப் பட்டதென அவர் நம்பிய தமிழ்ச் சிவ ஞானபோதத்திற்கு உரை எழுதினார். சிவஞான போதத்தின் முப்பத்தொன்பது பிரிவுகளைக் கொண்டு முக்கூற்று அமைப்பில் அவற்றை இடம்பெறச் செய்ததன் வழியாக முழுநூலையும் ஒரு வரிசைக்குட்பட்ட தருக்கவியல் சார்ந்த முறைக்குரியதாக இவ்வுரை அமைந்துள்ளது. இவர் தம் விளக்க உரையைத் தொடங்கும் முன் உலகாயதம் மாத்யமிகம் யோகசாரம் சௌத்திராந்திகம் வைபாடிகம் எனும் நாற்பிரிவுப் பௌத்தம் சமணம் ஆகிய புறப்புறச் சமயங்களையும் தார்க்கிகம் மீமாம்சை ஏகான்மவாதம் பாசுகரரின் பரிணாமவாதம் கிரீட பிரம்ம வாதம் சப்த பிரம்மவாதம் சாங்கியம் யோகம் பாஞ்சராத்ரம் என்ற புறச் சமயங்களையும் பாசுபதம் மகாவிரதம் கபாலிகம் வாமம் பைரவம் ஐக்கியவாதம் உட்பட அகப்புறச் சமயங்களையும் மறுத்துரைக்கின்ற விதமாக இவ்வுரை அமைந்துள்ளது. சான் கைச்ஃபீட் ஐயத்திற்கிடமின்றி தமிழ் சிவஞான போதம் உலகெங்கும் உள்ள பகுத்தறிவுக்கு நெருக்கமான தத்துவங்களில் ஒன்றாகும் என்று கூறுகின்றார்.

சைவ சித்தாந்தத்தின் அங்கீகரிக்கப்பட் உரையாசிரியர்

பாடியம் எழுதுதல் என்பது எளிய செயலன்று. பாடியக்காரர்கள் பலப்பல உணர்வுகளில் ஆளுமை

உடையவராகவும் பல்கலை தேர்ந்தவராகவும் இருக்க வேண்டும். தேசிய மொழியான சமசுகிருதத்திலும் தம் தாய் மொழியிலும் மற்றுமுள்ள வட்டார மொழிகளிலும் கூட தேர்ந்தவராதல் வேண்டும்.

வேதங்களையும் அவற்றின் அங்கங்களையும் சுமிருதிகளையும், இதிகாசங்களையும், ஆகமங்களையும், தோத்திரங்களையும், சாத்திரங்களையும் கற்றிருத்தல் வேண்டும். தம் கல்வியைத் தகுதி மிக்க ஆசான்மார் வழியாகப் பெற்றிருக்க வேண்டும். சுருக்கமாகவும், துல்லியமாகவும் மொழியைக் கையாளும் வல்லமை பெற்றிருத்தல் வேண்டும். நல்ல தருக்கவியல் வல்லவராகவும் இருத்தல் வேண்டும் இத்தகைய ஒட்டுமொத்த தகுதிகளையும் உடையவராகிச் சைவப்பற்றும் மொழிப்பற்றும் உடையவராக விளங்கினார். சிவஞான யோகி சைவ சித்தாந்தத்தின் அங்கீகரிக்கப்பட்ட உரையாசிரியராகக் கருதப்படுகிறார்.

துன்பங்களாலும் குழப்பங்களாலும் ஊக்கமிழக்காத வேடிக்கை கொண்டவர்களால் மட்டுமே மாபாடியத்தில் தேர்ச்சி கொள்ள முடியும். அத்தகையவர்களின் ஓயாமுயற்சி பக்தி உணர்வோடு இரட்டிப்பாகிறது. பொறுமையும், விடாமுயற்சியும் பூண்ட ஆய்வாளர் உடனடியாகவோ பின்னரோ புரிந்து கொண்டு இறுதியில் மிகுந்த பயனை அடைவதையும் உணர்வார் என்று கூறுமளவிற்குச் சிறந்த படைப்பினைப் படைத்தளித்தவர் யோகி. ''கண்ணீர் சிந்த கடுமையாய் உழைப்பவர்க்கே பொருள்கள் புலப்படும்'' என்ற லத்தீன் முதுமொழிக்கேற்ப யோகியார் சித்தாந்தத்தின் நுண்மையை உணர்ந்தவர் இவர் முன்னைய உரையாசிரியர்கள் போலல்லாது முழுவதும் புரிந்து கொண்டவராக அருளப் பெற்றார். இராமகாந்தரால் விமர்சனம் செய்யப்பட்ட பெயர் அறியப்படாத மற்றோர் உரையாசிரியர் இதே மூலத்துக்கு ஞான பதத்தின் பின்னர் எழுதிய தெளிவுரையோடு மாறுபடுகின்றார் என்று ரிச்சார்ட் எச்.டேவிசு கூறுகின்றார். நாடிய பொருள் எனத் தொடங்கும் கம்பராமாயண பல சுருதிப் பாடலுக்குத் திறனாய்வு எழுதினார். இலங்கை ஞானப்பிரகாச சிவஞான சித்தியாருக்குச் சிவசமவாத உரை

என்ற பெயரில் எழுதியிருந்த உரையை மறுப்பதற்கு எழுத்து என்றும் சொல்லுக்கு இட்ட வைர குப்பாயம் என்ற நூலை எழுதினார்.

சிவஞான யோகியின் உரைச் சிறப்பைப் பேராசிரியரும் பேரறிவாளரும் சார்பற்ற திறனாயவாளருமான க.வெள்ளைவாரணர் குறிப்பிடும் பொழுது நோக்குவதற்கு ஒரு நோக்கு மாபாடியத்தை உருவாக்குகிறது. மகாபாடியத்தை மகாமுனி மில்டனின் இழந்த துறக்கத்தோடு ஒப்பிடுவது தவறாகாது என்று கூறுகின்றார். வெவ்வேறு வழிகளைச் சார்ந்திருப்பினும் இரண்டும் உலகளாவிய நூல்கள் என்று பெருமைப்படுத்துகின்றார்.

சிவஞான யோகி குறை காண முடியாத மூலங்களிலிருந்து மறக்க முடியாத உண்மைகளையும் முடிவுகளையும் தம் உரையுள் நிறைத்துள்ளார் தம் கருத்துக்களுக்குத் தொன்னூற்று ஏழு நூல்களிலிருந்து ஆதரவினைப் பெற்றுள்ளார். அவர் எடுத்தாண்டுள்ள பதிவுகள் அகநானூறு அதரீவசிகை அதிகரணார்த்தசங்கிரகம் சுகந்தபுராணம் சிவதரு மோத்திரம் சீவகசிந்தாமணி நாலடியார் எனப் பல்வேறுபட்ட நூல்களிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

சிவஞான யோகியின் சைவப் பற்று

யோகி பல்துறை அறிவுக்களஞ்சியம் தருக்கவாதத்தில் வல்லவர். முன்னாளில் வைணவராயிருந்த சுதர்சன ஆச்சாரியர் என்பவர் வாதத்தில் வைணவர்களை முறியடித்து பின் சைவத்தைத் தழுவியவர் சமசுகிருதத்தில் ஐந்து செய்யு:_களைக் கொண்ட சுலோக பஞ்சகம் எனும் நூலினை மொழி பெயர்த்துத் தரும் பொழுது சிவபெருமானின் தனித்தலைமையை நிறுவுமாறு தம் கருத்திற்குரியதாகப் பயன்படுத்தியுள்ளார் மாபாடியத்துள் பொருத்தமான இடத்தில் மேற்கோளாக விரிவான செய்திகளைத் தருகின்றார்.

சிவன் என்பது காயத்ரி மந்திரங்களில் புனிதமான உட்பொருள் காட்டும் மந்திரம் ஆகும். சிவனுடைய உருவம்

சிறிராமரால் பிரதிசுடை செய்யப்பட்டு வழிபடப் பெற்றுள்ளது. கைலாயத்தில் கிருசுணர் சிவனை வழிபட்டு அவரால் வரமருளப் பெற்றதனால் மகன் ஒருவனைப் பெற்றார் விட்ணு 999 தூய மலர்களையும் தனக்குரிய ஒரு கண்ணையும் சேர்த்து சிவபூசை செய்ததற்குப் பரிசாக சிவன் விட்ணுவுக்குப் பரிசாக ஒரு தெய்வீக சக்கரத்தையளித்தார் சிவன் சிறகுகளை கொண்டியங்கிய அசுரர்களின் முப்புறங்களை எரித்தார். விட்ணுவின் ஒரு மகனான காமவேளைச் சிவன் எரித்தார். சிவன் யமனைக் காலால் உதைத்துக் கொன்றார். சிவன் நொடிப் பொழுதிற்குள் ஆலகாலம் என்னும் கடு நஞ்சினைக் குடித்து உலகைக் காத்தார். விட்ணுவும் மற்றத் தெய்வங்களும் பங்கேற்ற தட்சனின் புனிதமற்ற வேள்வியை அழித்தார். சிவன் அர்ச்சுனனுக்கு வெல்ல முடியாத பாசுபதாசுதிரத்தை அளித்தார் விட்ணு பெண்ணுரு கொண்ட போது சிவன் அவர் வழியாக சாசுதாவை உண்டாக்கினார் நிலவுலகம் எங்கும் உள்ள அறிவுடையவர் யாவரும் சிவனையே அளப்பெரும் பக்தியினால் தொழுகின்றனர். சிவனே தம் பக்தர்களுக்கு எட்டு வகைச் செல்வங்களையும் அளிக்கிறார். விட்ணுவின் பத்து அவதாரங்களிலும் சிவன் போற்றப்பெறுகின்றார். சிவன் நெருப்புத் தூணாக நின்ற போது விட்ணுவும், பிரம்மாவும் அவருடைய அடி முடிகளைக் காண இயலாதவராயினர் எனத் தெய்வங்கள் பிறப்பு இறப்புக்குரியவர்களாய் இருத்தல் போலச் சிவன் பிறப்பு இறப்புச் செயல்கட்கு இலக்கானதில்லை. யோகி தமிழின் சைவ நெறியில் கருவில் திருவுடையவராக இருந்ததோடு அவரது உரை அவருடைய பற்றைக் காட்டும் தகுதி மிக்க சான்றாவணமாகும். அது போலவே அவருடைய தமிழ் நூல்கள் யோகியின் பால் மிகச் சிறந்த உரையாசிரியராகக் காட்டுகின்றன என்று கூறுகிறார்.

யோகியின் உரை நூல்களைக் கற்பதினின்று பழமையான வேதங்கள், வேதாந்தம், பிரம்மசூத்திரம், சைவ ஆகமங்கள் ஆகியவற்றை அவை தோன்றிய மொழியில் பயிலாமலேயே அவற்றைப் புரிந்துக்கொள்ளும் பயனைப் பெற முடியும் என்பதை உணரமுடிகின்றது.

60. சைவ சித்தாந்தத்தில் யோகநெறி



முனைவர் செ.சத்தியமூர்த்தி
பட்டதாரி ஆசிரியர்
ஊ.ஒ.ந.பள்ளி, மேலப்புதுக்குடி
இராமநாதபுரம்

முன்னுரை

சைவ சமயத்தின் நான்கு நெறிகளைச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று கூறுவர். இந்நான்கு நெறிகளும் ஒன்றோடொன்று இயல்பாகவே இணைந்தது மட்டுமல்லாமல் ஒன்றைவிட மற்றொன்றின் வளர்ச்சியும் அதனை அனுட்டிப்போரின் ஆன்ம வளர்ச்சிக்கேற்பவும் அமைந்துள்ளது. இந்நான்கு நெறிகளையும் தாசமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்றும் அழைப்பர். இவற்றில் முதல் இருபடிகளையும் கடந்த பக்குவதாரிகளே மூன்றாம் படியான யோக நெறியில் பிரவேசிக்கவும் அவற்றின் தன்மைகளைப் பயிற்சி செய்து பயனடையவும் முடியும். இறைவனோடு தொடர்பு கொள்ளக்கூடிய சிறப்பு வாய்ந்த யோக நெறியின் வகைகளையும் முக்கியத்துவத்தையும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

யோகநெறி

யோகம் என்பது அறிவுக்கலையின் முழுமையான அனுபவமுறை. யோகம் என்ற சொல் இணைத்தல் என்ற பொருளில் பொதுவாகக் கொள்ளப்படுகிறது. சீவாத்மாவும், பரமாத்மாவும் ஒன்று சேர்வதே யோகம் என்பார் யாக்ஞவல்யர். சிவ சீவ ஐக்கியம் எய்திக் கடவுளோடு வாழும் நிலைபேறுடைய ஆனந்தத்தைத் தருவது யோக நெறியாகும்.

இம்மார்க்கத்தில் மேற்கொள்ளப்படுபவை பஞ்சேந்திரியங்களை ஒடுக்கி இரேசக பூரக வாயுக்களைத் தடுத்துக் கும்பித்திருந்து, பிராணவாயுவைச் சூழ முனையில் நிறுத்தி, சரீரத்துள்ளே ஆதாரங்களையறிந்து, மூலாதாரத்தில் அக்கினியைச் சொலிக்கச் செய்து நாபித் தானத்தில் குண்டலி

சக்தி சொரூபமாயிருக்கும் அமுதத்தை யுருகப் பண்ணி, மற்றை ஆதாரங்களில் அதோமுகமான பதுமங்களை அதனைக் கொண்டு பேதித்து, மேலே சென்று விந்துத் தானத்தின் வழியே யிறங்கிப் பெருகுகின்ற அமுத்தாரையைத் தனதுடல் முற்றும் நிறையச் செய்து முழுச் சோதியான சிவத்தைத் தியானித்திருப்பது முதலியனவாம். இச்சகமார்க்கமே யோகம் எனப்படும் என்று யோக நெறிக்கான விளக்கத்தினை வள்ளலார் வழி நின்று ஊரன்அடிகள் விளக்குகிறார்.

அட்டாங்க யோகம்

பதஞ்சலி முனிவர் யோக சூத்திரத்தில் அட்டாங்க யோகம் என்ற பெயரில் எண் வகை யோக நெறிகளை விளக்குகின்றார். திருமூலரும், இயமம், நியமம், ஆசனம், புராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணம், தியானம், சமாதி என எண் வகை யோக நெறிகளை விளக்குவதோடு ஐயுறாமல் அட்டாங்க நெறியில் நிற்பவர்கட்கு ஞானம் கை கூடிப் பிறவியைக் கடந்து, முத்திக் கரை எய்தலாம் என்பதை,

''அந்நெறி இந்நெறி என்னாதட் டாங்கத்
தந்நெறி சென்று சமாதியி லேநின்மின்
நன்னெறி செல்வாக்கு ஞானத்தி லேகலாம்
புன்னெறி யாகத்திற் போக்கில்லை யாகுமே''

(திருமந்திரம். 551)

என்ற பாடலில் விளக்கியுள்ளார்.

இயமம் (தீதகற்றல்)

இயமம் என்பது நல்ல பண்புகளை உடையராக இருத்தலை வலியுறுத்துவதாகும். இந்நெறி முதன்மையான அடிப்படை யோக நெறியாகும்.

''கொல்லான்பொய் கூறான் களவிலான் எண்குணன்
நல்லான் அடக்க முடையான் நடுச்செய்ய
வல்லான் பகுந்துண்பான் மாசிலான் கட்காமம்
இல்லான் இயமத்திடையில் நின்றானே''

(திருமந்திரம் 554)

என்ற பாடலில் பதினொரு அருஞ்செயல்கள் இயமம் என்ற முதல் யோக நெறியில் எடுத்துக்கூறப்பட்டுள்ளது.

நியமம் (நன்றாற்றல்)

ஆதியாகவும், வேதத்தின் பொருளாகவும் விளங்குகின்ற சோதியுள் சத்தியம் இருப்பதை உணர்ந்து போற்றுபவனே நியமம் உடையவனாகிறான்.

"தவஞ்செபஞ் சந்தோடம் ஆத்திகந் தானஞ்
சிவன்றான் விரதமே சித்தாந்தன் கேள்வி
மகஞ்சிவ பூசையொண் மதிசொல்லீர் ஐந்து
நிவம்பல செய்யின் நியமத்தன் ஆமே" (திருமந்திரம்.557)

என தவம் முதல் மதிசொல் வரை பத்துவகையும் நியமத்துள் அடங்கும்.

ஆசனம் (இருக்கை)

ஆசனம் என்பது யோகம் புரிவதற்குத் தக்க முறையில் கை கால்களை அமைத்து அமருதல் ஆகும். தாமரை இருக்கை (பத்மாசணம்) பத்திராசனம், குக்குட ஆசனம் (கோழி இருக்கை) சிங்காதனம் (அரிமா இருக்கை) போன்ற எட்டுவகை ஆசனங்கள் உடல்வலிமையடையவும், நோயெதிர்ப்புச் சக்தி பெறவும் தளர்ச்சியின்றிக் கிளர்ச்சியுடன் இருக்கவும் பயன்படுகின்றன.

"பத்திரங் கோமுகம் பங்கயங் கேசரி
சொத்திலரம் வீரஞ் சுகாதனம் ஒரேழும்
உத்தம மாமுது ஆசனம் எட்டெட்டுப்
பத்தொடு நூறு பலஆ சனமே" (திருமந்திரம்-563)

என ஆசனங்கள் பத்தும் நூறும் எனப் பலவாகவும் உள்ளன என அறியமுடிகின்றது.

பிராணாயமம் (வளி நிலை)

மூச்சுக்காற்றை அடக்கி, முறையாக இடப்பக்க மூக்கு வலப்பக்க மூக்கு, சுழிமுனை நடுநாடி என முறையாகச்

செலுத்திப் பழகுதல். இதனால் ஆயுள் நீளும். உடல் நலமாக இருக்கும் மூச்சை உள்ளிழுத்தல் பூரகம் என்றும், அடக்குதல் கும்பகம் என்றும், வெளிவிடுதல் ரேசகம் என்றும் வழங்கப்படுகிறது.

''ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்குங்
காற்றைப் பிக்குங் கணக்கறி வாரில்லை
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாளர்க்குக்
கூற்றை யுதைக்குங் குறியது வாமே'' (திருமந்திரம்.571)

பிரத்தியாகாரம் (தொகை நிலை)

பிரத்தியாகாரம் என்பது மனத்தை ஐம்புலப் பொருள்களால் புறத்தே போக விடாது. அகமுகமாகத் திருப்பி ஒருவழிப்படுத்துவதாகும். அகத்தவப் பயிற்சி முறையால் சிவபெருமானை உணர்வின் கண் கருத்துள் வைப்பது இப்பயிற்சியுள் அடங்கும்.

''மூலத் திருவிரல் மேலுக்கு முன்னின்ற
பாலித்த யோனிக்கு இருவிரற் கீழ் நின்ற
கோலித்த குண்டலி யுள்ளே செழுஞ்சுடர்
ஞாலத்து நாபிக்கு நால்விரற் கீழே'' (திருமந்திரம் 580)

மூலதாரத்தில் மூண்டெழும் கனலைக் காலால் எழுப்பி ஓம் எனும் மந்திரம் செபித்தால் சிவன் உள்ளத்தில் எழுந்தருளுவான். குண்டலினி சக்தியை எழுப்பி ஆன்மச்சுடரை மேலே ஏற்றும் நிலையில் ஆன்மா சுத்தம் பெற்றுப் பின் சுகம் அடையும். சிவனருளால் அவன் வடிவைச் சோதி வடிவில் கண்டு இன்புற முடியும்.

தாரணை (பொறை நிலை)

மனத்தினை ஒரு வழிப்படுத்தும் நிலையே தாரணை எனப்படும். புலன் வழிப்படராமல் அகமுகப்பட்டு நிற்கும் மனத்தினைக் குறிக்கத்தக்க பொருளாகிய சிவத்தினிடத்தே கொண்டு செலுத்தி அது கீழ் நோக்கிச் செல்லாதபடிப் பிணித்து நடு நாடியின் உள் வழியாக ஆறு ஆதாரங்களையும் கடந்து மேலைப் பெருவெளியை நோக்கிக் காணாத கண்களும் கேளாச்

செவிகளும் எனக் கண்டோர் கருதும்படி இறைவனை அகத்தே நோக்கி நிற்கும் தாரணைப் பயிற்சியுடையார்க்கு அப்பயிற்சி வாழ்நாள் வீணே கழியாதபடி அடைத்துக் காக்கும் உபாயமாகும் என்பர். ஆதாரங்களில் செலுத்திய மனத்தை மீளவும் உலகியலில் பொறிப்புலன் வழி செல்லாது நிறுத்துதல் தாரணையாகும். இதன் மூலம் திருவருள் இன்பத்துள் திளைக்கலாம்.

தியானம் : (நினைதல்)

தியானம் என்பது இடைவிடாது நினைத்தலாகும். சிவபெருமானை முழுமுதற் குருவாக ஏற்று நினைத்து அந்நினைவிலேயே ஒன்றி நினையாமல் நினைந்து பெறும் அனுபவமே தியானம் எனப்படும். ''ஒளி வடிவாகப் புருவ மத்தியில் தியானிப்பது, சத்தியின் வழிபாடாகும். ஒளிக்கு மேலானது அருவ வழிபாடு. உச்சியில் அருவமாகச் சிவத்தைத் தியானித்தல் சிவத்தியானமாகும்'' என்று தியான யோகத்தை சாதன சாத்திய வழியில் இரண்டு வகைப்படும் என்பர்.

''நாட்டம் இரண்டும் நடுமூக்கில் வைத்திடில்
வாட்டமும் இல்லை மனைக்கும் அழிவில்லை
ஓட்டமும் இல்லை உணர்வில்லைத் தானில்லை
தேட்டமும் இல்லைச் சிவனவ னாமே''

(திருமந்திரம்.604)

என்ற திருமந்திரப் பாடல் மூலம் சிவத்தியானத்தின் மூலம் உலக நாட்டம் ஒழிந்து ஆன்ம இன்பம் பெருகும் என்பது புலப்படுகின்றது.

சமாதி (நொசிப்பு)

சமபாதி என்பது இயமம் முதலான யோக அங்கங்கள் ஏழிலும் பயிற்சி நிரம்பிய ஆன்மா, தன்னை மறந்து சிவத்துடன் ஒன்றியுணரும் நிலையாகும். நான் என்ற சிந்தனையின்றி தியானத்தில் மூழ்கி நினைவு நிலைக்கு அப்பாற்பட்ட உறக்க நிலை அடைதல் சமாதி நிலையாகும். என்று யோக மகிரிசி டாதக்டர் பி.கோபாலனந்தா விளக்குகிறார்.

''சோதித் தனிச்சுட ராய்நின்ற தேவனும்
ஆதியும் உள்நின்ற சீவனு மாகுமால்
ஆதிப் பிரமன் பெருங்கடல் வண்ணனும்
ஆதி அடி பணிந் தன்புறு வாரே'' (திருமந்திரம்-630)

சீவ சமாதி கை வரப்பெற்றவர். இன்புற்று அசைவர அமர்ந்திருப்பார். அந்த நிலையில் சீவன் சிவமாகி சிவன் சக்திகளாய் இணைந்து நின்று காட்சி தரும். எரிகின்ற கற்பூர ஒளியின் சோதியில் இரண்டறக் கலந்து விடுதல் போல் சமாதி நிலையில் இருப்பவர்கள் இறைவனோடு இணைந்து ஒன்றாகி விடுகின்றனர்.

முடிவுரை

சைவ சித்தாந்த நெறிகளில் யோகப் பயிற்சி வேண்டுமென்பதே தலையாய கருத்தாகத் திகழ்கிறது. யோகப் பயிற்சியினாலே பிராணவாயுவை உள்ளடக்கித் தன்னுடைய போதத்தைத் திருவருளிடத்திலே செலுத்துவதே வெற்றி. எனவே சைவ சித்தாந்தம் எடுத்துக்கூறும் அட்டாங்க யோக நெறி நின்று ஆன்மாவுக்கு மேலான ஒப்பற்ற அருள் கண்ணாக நிற்கும் பரம்பொருளைக் காண வேண்டும். அகமும் புறமும் அந்தச் சிவத்துடனே கூடி நிற்கும் யோகமே உண்மையான யோகம் என்பதைச் சைவ சித்தாந்த வழி நின்று தெளிவாக அறிந்து கொள்ள முடிகிறது.

61. உமாபதி சிவம் தரும் இறையும் முத்திநிலையும்

முனைவர் க.இளமதிசானகிராமன்
பேராசிரியர்
புதுவைப் பல்கலைக் கழகம்
புதுச்சேரி

முன்னுரை

தில்லையில் தீட்சிதர் என்று கூறப்பெறும் சைவ வேதியர் குலத்தில் பிறந்தவர் உமாபதி சிவம். சந்தாகுரவர் என்றழைக்கப்பெறும் சைவசித்தாந்த ஆசிரியர்களுள் ஒருவர். மறைஞான சம்பந்தரால் அகப்பற்று நீக்கப்பெற்று அவரது தொண்டரானார். இதனை விரும்பாத தில்லைவாழ் அந்தணர்கள் உமாபதியை ஊரிலிருந்தும் சமூகத்திலிருந்தும் விலக்கி வைத்தனர். நடராசர் ஆலத்தில் பூசைசெய்ய விடாமல் தடுத்தனர். தன் மனத்திலேயே உமாபதி பூசை செய்ய, பூசைப் பெட்டகத்தில் இறை உரு காணாதிருக்க அந்தணார்கள் வியக்க அருளொளி உமாபதி சிவம் வந்தால் காணப்பெறும் என்று கூற அந்தணர்கள் உமாபதியை அழைத்து பூசை செய்வித்தனர் என்பதும், சாம்பனுக்கும் முள்ளிச் செடியாக நின்ற முனீசுரருக்கும் முக்தியளித்ததும் கொடிக்கவி பாடி கொடியினை ஏற்றியதும் இவரது அருட்செயல்கள். இவரைத் தாயுமானவர் சிறப்பித்துப் பாடுவது குறிப்பிடத்தக்கது.

மெய்கண்ட சாத்திரங்கள் பதினெண்களுள் எட்டுநூல்கள் இவரால் இயற்றப் பெற்றவை. அவை சித்தாந்த அட்டகம் என்றும் வழங்கப்பெறுவன. இவை மட்டுமன்றி வேறு எட்டு தமிழ் நூல்களையும் இவர் யாத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது நூல்களில் காணப்பெறும் இறையாகிய சிவபெருமான் குறித்தும், முக்தி நிலை குறித்தும் இக்கட்டுரை விளக்கிச் செல்கிறது.

இறைநிலை

பொன்னும் பொன்னலாகிய அணிகலன்களும் பொருள் தன்மையால் ஒன்றேயாவதைப் போல இறைவனுடைய அருவம் உருவம் அருவுருவமாகிய மூன்று திருவுருவ நிலையும் ஈசனே என்பவர். இறைவனே எல்லாப் பொருளும் ஆயினர் என்றும் கூறுவர். இரண்டறக் கலத்தல் என்னும் பராமுத்தி, பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் உண்மை கொண்டவர்களுக்கே பொருந்தும். இறைவன் கட்டு நிலையிலும் வீட்டு நிலையிலும் உள்ளவரிடத்து அத்துவிதமாய் கலந்து ஒரு தன்மையானாய் நிற்பினும் சுட்டுநிலையில் உள்ளார்க்கு பாசஞானம் ஆகியும் வீட்டு நிலையில் உள்ளார்க்குத் திருவருளாகவும் தோன்றுவான். உயிர் ஆணவமலத்தோடு பொருந்தி பிறக்கும் போதே பரம்பொருளும் அதனோடு ஒன்றியிருக்கத் தடையில்லை என்று கூறுபவர் இறைவனாகிய சிவபெருமானின் திருவடிவம் குறித்தும் பெருமைகள் குறித்தும் புகல்வர்.

சிவபெருமானின் திருவடிவம்

சிவபெருமான் அழகிய திருச்சிற்றம்பலத்தில் நின்று ஆடுகின்ற திருக்கூத்தையும் ஒளி பொருந்திய நீலமணி மிடற்றையும் தனது வடிவில் ஒரு பாதியைக் கொண்ட அன்னை சிவகாமியைத் தனது வடிவில் இடப்பாகத்திலும் கொண்டவன். திரிசடையின் மேல் தாங்கிய கங்கையும் பிள்ளை, பிறையும் திருமேனி, மீது அச்சமின்றி ஆடுகின்ற பாம்பினையும் உடையவன். அழகிய நெற்றியின் மீது நெருப்பு விழியை உடையவன். தாளம் தவறாத தமருதம் என்னும் உடுக்கையும் கையில் தழலும் ஏந்தியவன்; இடையில் கட்டிய புலித்தோலும் அதன்மேல் பூண்ட பாம்பு கச்சும் வீட்டின்ப வெள்ளத்து அழுத்தம் திருத்தாளையும் அடியார் உள்ளத்து நீங்காத ஒளிமிக்க சிலம்பையும் உடையவன்.

உயிர்களைப் பிறப்புக்கு உட்படுத்தும் வினைகளை வென்று அவற்றை உய்விக்க சூளுரைத்துச் சாத்திய வீரக்கழலும் உடையவன். கையில் மானும் மழுவும் கொண்டு இருப்பான்; என்றும் உமாபதிசிவம் சிவபெருமானின் திருவடிவம் குறித்து

விளக்குவர்.

சிவபெருமானின் பெருமைகள்

தோற்றுவித்தல், காத்தல், ஒடுக்குதல் ஆகிய மூன்று தொழிலுக்கும் அதி தெய்வங்களாக முறையே அயன் திருமால் உருத்திரன் ஆகிய மூவரையும் சொல்வது மரபு. ஆனால் முற்றழிப்புக் காலம் என்று கூறப்படும் சர்வ சங்கார காலத்தில் யாவற்றையும் ஒடுக்கித் தான் மட்டுமே நிலைபேறு உடைய தலைவனாக நிற்பவன். சிவபெருமானே பின் சங்கார காரணமாக இருப்பவன் எவனோ அவனே மீண்டும் உலகங்கள் அனைத்தையும் தோற்றுவிக்கும் ஆற்றலை உடையவன். அவ்வாறு தோற்றுவித்த பிறகே உலகைக் காத்தளிக்கும் தொழிலுக்குத் தேவை ஏற்படுகிறது. எனவும் முற்றும் ஒடுக்கிய சிவபெருமான் தோற்றுவிக்கும் தொழிலுக்காக அயனையும் காக்கும் தொழிலுக்காகத் திருமாலையும் தனது எல்லையற்ற அருள்மிகு ஆற்றலினால் அவர்களுக்கு அந்தந்த அதிகாரங்களைக் கொடுத்து முறை செய்கிறான்.

சந்நிதி பாதம் அடைந்த உயிர்களுக்கு முத்தி பேறு எங்கும் போது சிவபெருமான் அவ்வுயிரின் தகுதிக்கேற்பவே அருள் பாலிக்கிறான். ஒருமலம் உடையார்க்கு உள்நின்று ஆணவ மலத்தை அறுத்து அருள்வான். இரு மலருடையார்க்கு தெய்வத் திருவடிவோடு முன்நின்று அவர்களது மலங்களைத் தீர்த்து அருள்வான். மும்மலம் உடையார்க்கு குருவடிவாக எழுந்தருளி மும்மலங்களையும் தீர்த்து ஆட்கொள்வான் என்று இறைவனின் பெருமைகளை உரைப்பர்.

முக்தி நிலை

இவ்வுலகில் வாழும் மக்கள் கருத்தாலும் செயலாலும் பல திறப்பட்டவர்களாய் உள்ளனர். அவர்களுள் சிலர் பொருள் திரட்டுதலையே குறிக்கோளாகக் கொண்டிருப்பர். சிலர், இவ்வுலக இன்பத்திலேயே ஆழங்கால் பட்டு இருப்பர். சிலர் கல்வி அறிவைப் பெருக்குவதிலேயே நாட்டம் கொண்டிருப்பர். ஆனால் ஒரு சிலருக்கு இறைவனருளால் நிலையில்லாததும் அடிக்கடி மாறுந்தன்மையுடையதும் துன்பம் நிறைந்ததுமான

இவ்வுலக வாழ்க்கையில் வெறுப்பும் நிலையுள்ளதும் இன்பம் நிறைந்ததுமான வீடுபேற்றில் மோட்சத்தில் முத்தியை அடைவதில் விருப்பமும் உண்டாகும். இங்ஙனம் முக்தியை அவாவி நிற்பவர்களை முமுட்சுகள் என்று குறிப்பிடுவர் சமய நூலார். துன்பம் கலவாத இன்பம் எதுவோ, அதுவே மோட்சம் அல்லது முத்திநிலை என்று வழங்கப்பெறும்.

முக்தி என்பது உறவு நீராகிய கடலில் தோன்றும் ஒரு முத்து போன்ற சிறப்புடைய தென்னும் பொருளில் முத்தி என வந்தது. முத்து நீருள் தோன்றுவது போன்று முத்தியும் திருவருளாகிய நீருள் தோன்றுவது. முத்து குளிர்ந்து இன்பம் தருவது போன்று முத்தியும் அருள் இன்பம் பயப்பதாகும். உமாபதி சிவாச்சாரியார் பல்வேறு பட்ட சமயங்களின் முத்தி நிலையைப் பற்றிக் கூறிய பின் அவற்றைவிட சிறந்தது சைவ சமய முத்தி நெறியே என்று கூறுவதும் ஏற்கத்தக்கது.

மகளிரிடத்து நுகர்கிற இன்பமே முத்தி என்பது உலகாயதர் கொள்கை. உருவம் வேதனை குறிப்பு பாவனை என்ற ஐந்து கந்தங்களும் கெடுவதே முத்தி என்பது நான்கு வகை பௌத்தர்களில் ஒரு சாரர் ஆன சௌத்திராந்திகர் கொள்கை. முக்குணங்களாகும் கெடுவதே முத்தி என்பது சமணரில் நிகண்டவாதியும் திரீசூரசாங்கியமும் கொண்ட கொள்கை. வினைகள் கெடுவதே முத்தி என்பது பிரபாகர சமயத்தின் கொள்கை. ஆணவ மலம் முற்றிலும் அழிந்து போவதே முத்தி என்பது அகச் சமயத்துள் பேதவாதிகள் கூறும் கொள்கை. இவ்வுடல் முக்தி நிலையிலும் அழியாது நிலை பெற்றிருக்கும் என்பது சிவசமயவாதிகள் கூறும் கொள்கை.

இவ்வுடலில் கட்டுப்பட்டு நிற்கிற ஆன்மா விவேகஞானம் பெறுவது முத்தி என்பது மாயாவதிகளின் கொள்கை. ஆன்மா என்ற ஒன்றே அழிந்து போவது முத்தியாகும் என்பது பாற்கரியவாதிகளின் கொள்கை. உயிர், பசு கரணம் கெட்டுச் சிவகரணம் பெறுவதே முத்தி என்பது அகச்சமயங்களில் ஒன்றான சிவசங்கிராந்தவாதிகளின் கொள்கை. உயிர் ஒன்றையும் அறியாமல் கல்லைப் போல

கிடைக்கும் நிலையே முத்தி என்பது பாடாணவாதிகளின் கொள்கை.

இவ்வாறு பத்துவகையாகச் சொல்லப்பட்ட முத்திகளும் குற்றமுடையன. முத்திநிலையைப் பற்றிய சரியான கொள்கை எதுவெனில் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களிலிருந்தும் விடுதலை பெற்று உயிர் அருளோடும் கூடிப் பேரின்பத்தை எய்துவதே என்பர். இதனைத் திருமூலரும் ஒப்புவர் என்பது குறிப்பிடத்தக்கது.

முன் பிறவிகள் பலவற்றிலும் ஈடுபட்டுப் பெற்று வந்த நல்வினையின் பயனாக ஒருவனது மனம் ஒருமையிலே நிற்கின்ற பக்குவத்தைப் பெறும். அப்போது ஞானாசிரியன் தோன்றி முப்பொருள் இயல்பும் உண்மையையும் உணர்த்துவான் அவ்வாறு ஞானாசிரியன் மொழிகின்ற மெய்ப்பொருளைக் கேட்டல், கேட்டவற்றைச் சிந்தித்தல் சிந்தித்தவற்றின் உண்மை தெளிதல் அப்பொருளோடு ஒத்துநிற்கும் நிட்டைகூடுதல் இவையே முக்திபேறு அடையும் வழிகள் என முத்தி பெறுவதற்கான வழிகளையும் கூறியிருப்பது உமாபதிவனாரின் உயர்நிலையைக் காட்டுகின்றது.

62. சமுதாய சீர்திருத்தப் பணியில் சமயக் குரவர்களின் பங்களிப்பு



முனைவர் சி.பஞ்சநாதன்
மொழிப்புலம்
தமிழ்ப்பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்

முன்னுரை

இந்து சமயத்தில் பக்தி இலக்கியம் தோன்றி அச்சமயத்திற்குப் புத்துரையும், புத்தாற்றலையும் பெறும் செல்வாக்கினையும் தந்தது நாயன்மார்களும் ஆழ்வார்களும் சமயக் குறவர்களும் ஆவார்கள். இந்து சமயத்தினை நிலை நாட்டிடத் தோன்றினர். சைவர்கள், அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பெயர்களையும் சிவபெருமான் அருளிச் செய்தார் எனவும் வைணவர்கள் நான்மறையின் பொருளாய்த் திருமால் உறைகிறார் எனவும் பாடினர்.

சமுதாய சீர்திருத்தப் பணியில் நால்வர்கள்

1. திருநாவுக்கரசர் என்கின்ற அப்பர்

இவரது தந்தையார் பெயர் புகழனார், தாயார் பெயர் மாதினியார். இவரது இயற்பெயர் மருள் நீக்கியார் என்பது ஆகும். திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்டு ஒழுகி சைவசமயத்தின் தொண்டு நெறியை வாழ்ந்து உலகிற்கு உணர்த்தியவர். திருநாவுக்கரசர் இறைவழிபாட்டில் ஒன்றியிருந்து நினைத்தல் வேண்டும் என்பதைத் தில்லைத் திருப்பதிக வழி உணர்த்தியவர். தனக்குச் சூலைநோய் தோன்றியதனால் சொல்லொனாத் துன்பம் அடைந்தார். அந்நோய் நீங்கவும் தான் சமண சமயத்தைச் சார்ந்து நித்தனை செய்ததனால் தோன்றிய குற்றமும் அவரை வாட்ட உள்ளமுருகிப் பாடியது கூற்றாயினவாறு பதிகம். ஆனால் நல்ல சூழலில் பக்திநெறி ததும்ப இன்பமுடன் பாடியது மாதர்பிறைக்கண்ணி யானை பதிகம்

சரியை நெறி

ஒன்றி இருந்து நினைமின்கள் உம்தமக்கு ஊனமில்லை
கன்றிய காலனைக் காலால் அடிந்தான்தன் அடிறவற்காய்ச்
சென்று தொழுமின்கள், தில்லையுள் சிற்றம்பலத்து நட்டம்
ஒன்றிலிருந்து நினைந்து வழிபடுவோர் இறையின்பம் அடைல்
உறுதி என உயர்த்திவர் திருநாவுக்கரசர்

பொய்யாய் ஆரவாரம் மிக்க வழிபாடுகள் பயன்தரமாட்டா. இதை உணர்த்திய பெருமையர் திருநாவுக்கரசர்.

கங்கை ஆடிலென், காவிரி ஆடிலென்
கொங்கு தண்டகுமரித்துறை ஆடிலென்
ஒங்கு மாகடல் ஓதநீர் ஆடிலென்
எங்கும் ஈசன் எனாதவர்க்கு இல்லையே

என்ற பாடல் ஆரவார வழிபாட்டின் பயனிமையை விளக்கக் காண்கிறோம். உள்ளம் என்ற பெருங்கோயில் இறைவனைக் கண்டு வழிபடலாம் என உணர்த்திய இறைத்தொண்டர் திருநாவுக்கரசர் ஆகவே, சமுதாயத்தில் ஆரவார வழிபாடு மனதை ஒருநிலைப்படுத்தாது என்றும் விளக்குகின்றார். ஆரவார வழிபாடு பிற மதத்தில் இல்லை என்றும் குறிப்பிடுகின்றார். மேலும் இவருடைய அற்புதங்களில் ஒன்றான திங்களூர் அப்பூதி அடிகளின் திருநாவுக்கரசர் தண்ணீர் பந்தல் என்பது இவரது புகல் அடியவர்களை சமுதாய பணிக்கு அழைத்துச் செல்கின்றது. அப்பூதி அடிகள் என்ற அந்தணர் வீட்டில் அமுது உண்பதற்கு சென்ற திருநாவுக்கரசர் வாழையிலை பறிக்க சென்ற அவரது மகனை அறவு தீண்டிய நிலையிலும் அமுது படைக்கும் மனநிலையில் இருந்த அப்பூதியடிகளின் விருந்தோம்பலை நினைத்து, பெருமிதம் அடைந்து, தான் உண்ணாது கூப்பிடு என்றழைக்கையில் மகனை அரவு தீண்டிவிட்டது என்பதை அறிந்தவுடன் தன்னுடைய பதிகத்தால் இறைவனை வேண்டி அரவினை வரவழைத்து விசத்தினை எடுத்து அந்தணரின் வாரிசை உயிர்ப்பித்தார். மேலும் இவர் சைவ மத்தின் ஈர்ப்பால் நீற்றறையில் இவரை அடைந்தபோதும்,

''மாசில் வீனையும் மாலை மதியமும்

வீசு தென்றல் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறைப் பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தன் இணையடி நீழலே''

என்று நீற்றறையில் ஈசன் மீது தான் கொண்ட அன்பினால் நீற்றறையானது வீணையின் இசையையும், மாலையில் வீசக் கூடிய தென்றல் போலவும், பொய்கை என்கின்ற ஒடையில் உள்ள குளிர்ச்சி இருந்தது எனக் குறிப்பிடுகின்றார்.

உ. சுந்தரர்

திருநாவலூர் ஆதிசைவ அந்தணர் மரபில் தோன்றியவர். திருமுனைப்பாடி நாட்டில் சடையனார்க்கும் இசைஞானியார்க்கும் திருமகனாய் ஆலாலசுந்தரனார் தோன்றினார். அவருக்கு நம்பியாரூரர் எனும் திருநாமம் இட்டுப் போற்றி வளர்த்தனர். சடங்கவி சிவாச்சாரியாரின் மகளை மணமுடிக்க ஏற்பாடுகள் செய்தலர். இறைவன் முதியவர் வடிவங்கொண்டு வந்து மணத்தைத் தடுத்தார். இறைவனை நீர் பித்தனே என்றார் சுந்தரர். தனக்கு வழிவழி அடிமை என்பதனை ஒலைகாட்டி உறுதிசெய்து மறைந்தார் பெருமான். வந்து தடுத்தாட் கொண்டது இறைவன் என உணர்ந்து, உருக பித்தர் என்றே பாடுக எனப் பணித்தார் இறைவன். அங்ஙனம் பாடிய பாடலே முதற் பதிகமாகும்.

''பித்தாபிறை சூடிபெரு
மானே அருளாளா
எத்தால்மறவா தேநினைக்
கின்றேன்மற்று உன்னை
வைத்தாய்ப் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
நல்லூர் அருட் டுறையுள்
அத்தா உனக்(கு) ஆளாயினி
அல்லேன்எனல் ஆமே''

பித்தனே பிறையணிந்தவேனே பெருமையுடையவனே அருளாளனே என் மனத்துள் எவ்வகையாலும் மறவாது உன்னை வைத்தாய் பெண்ணையாற்றின் தென்திசையிலுள்ள

திருவெண்ணெய் நல்லூரில் அருள்துறை என்னும் சிவாலயத்தில் எழுந்தருளியுள்ள அத்தனே முன்பே உனக்கு அடிமையாகி இப்பொழுது உனக்கு அடிமை அல்லன் எனக் கூறுவது நன்றோ.

3. மாணிக்கவாசகர்

கருங்கல் மனமும் கரைந்து உருகும் வண்ணம் திருவாசகத்தை உலகிற்கு வழங்கியவர் மாணிக்கவாசகர் இறைவன் பக்தி எனும் வலையில் பாடுகின்றவன் என உணர்த்தியவர். வேதங்கள் ஓலமிட்டு, பரம்பொருள் ஆகமமாகி, நின்று அண்ணிப்பவனாக உள்ளான். இறைவனுடைய தடத்த சொருப நிலைகளை இவர்தம் பாடல்கள் உணர்த்துகின்றன. ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்று இல்லான் இறைவன் என்னும் இறைவனுக்கு ஆயிரம் திருநாமம் பாடி வழிபடுகின்றோம் என்பதை உணர இல்லான் இறைவன் என்னும் இறைவனுக்கு ஆயிரம் திருநாமம் பாடி வழிபடுகின்றோம் என்பதை உணர வைத்தார் ஆண்டான் அடிமை என்ற நிலையில் இறைவனை அறிந்து வழிபடுதல் வேண்டும் என்று உலகிற்கு உணர்த்தியவர். காண்பான், காணப்படும் பொருள், காட்சி என்ற மூன்றும் அந்தச் சிவமாக்கி ஆண்ட நிலையை மணிவாசகர் பாடல்கள் விளக்குவன்.

ஞானநெறி

இறைவன் தானே வந்து ஆட்கொண்ட திறத்தை இவர்தம் பாடல்கள் உணர்த்துவன.

''முக்திநெறி அறியாத மூக்கரொடு முயல்வோனைப்
பக்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாரலும் வண்ணம்
சித்தமலம் அனுபவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட
அந்தன் எனக்கு அளியவாறு யார் பெறுவான் அச்சோவோ''

உள்நின்று உணர்த்திய பரம்பொருள் பக்குவம் வாய்ந்த ஆன்மாக்களுக்கு தம் முதல் குருவுமாய் முன்நின்று உணர்த்தும் சிறப்பினை இவருடைய பாடல்கள் வெளிப்படுத்தும். என்கை உனக்கு அல்லது எப்பணியும் செய்யற்க எனவும் கங்குல் பகல்

என்கண் மற்றொன்றும் காணற்க எனவும் என்கொங்கை நின் அன்பர் அல்லார் தோள் சேரற்க எனவும் அழுந்தியறிதல் என்ற சன்மார்க்க நெறி மாணிக்கவாசகரால் உலகிற்கு வழிபாட்டு மறையாக உணர்த்தப்பட்டது. இறைவன் அருள்பெற உலகோரை அவர், தன் அடியவர்க்கு மூலபண்டாரம் வழங்குகின்றான். வந்து முந்துமினே என அழைக்கின்றார்.

4. திருஞானசம்பந்தர்

ஆளுடையபிள்ளை என்று அழைக்கப்படுகின்றார். தந்தை சிவபாத இருதயர். தாயார் பகவதி அம்மையார். சீர்காழி என்ற ஊரில் அந்தணர் மரபில் கவுணியர் குலத்தில் தோன்றியவர். திருஞானசம்பந்தர் மன்னும் மூவாண்டில் அம்பிகையின் பால் உண்டு ஞானம் பெற்றவர். வடகலையும், தென்கலையும் அறிந்தவர் சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் பலதிருத்தங்களுக்குச் சென்றவர். நாளும் இன்னிசையில் சிவன் மெய்ப்புகழை உலகிற்கு உணர்த்தியவர். சிவனடியார் கூட்டத்துடன் தமிழகப் பயணம் மேற்கொண்டவர். திருத்தொண்டர் ஐம்பொறிகளாகிய ஐந்து களிறுகளையும் புறத்தே செல்லவிடாமல் அகத்தடக்கி வண்டுகள் தேனுண்டு இறையினைப் பாடும் மலர்களைக் கொண்டு பூமாலை புனைந்து ஏத்தும் திருக்கேதாரம் திருத்தலங்களைப் பாடி மகிழ்ந்தவர் வழிபடுவோர்க்குப் புலனடக்கம் வேண்டும் என்பதை உணர்த்தியவர்.

கிரியை நெறி

இறைவழிபாட்டில் கிரியை நெறியில் எரி ஓம்புதலுக்குத் தனி இடம் உண்டு. அக்கினிகாரியம் எனப்படும் எரி ஓம்புதலைத் திருஞான சம்பந்தர் தம் பதிகங்களில் பலபல இடங்களில் குறிக்கக் காணலாம். இறைவனுடைய திருக்கோயில்களில் சைவர் போன்றும் கோயில் எனும் தனிச்சிறப்பு தில்லைச் சிற்றம்பலத்துக்கு உண்டு. அத்தகு பெருமைமிகு சிற்றம்பலத்தைத் தலையால் வணங்குவார் தலையானவர் என்பார் திருஞானசம்பந்தர்.

"நித்தமும் நியமம் செய்து நீர்மலர் தூவிச்

சித்தம் ஒன்ற வல்லார்க்கு அருளும் சிவன்கோயில்''
(திருஞான தேவா 2:9:1)

என இறைவழிபாட்டு முறையை வகுத்துத் தந்தவர் திருஞானசம்பந்தர். நெய்யோடு பால்தயிர் ஆடினாய் என இறைவனை நீராட்டு முறையும், பாடினாய் மறையோடு பல்கீதமும் எனப் போற்றும் முறையும் சீலத்தார் தொழுதேத்தும் சிற்றம்பலம் என வழிபடுவோரையும் வேண்டி கைதொழ இல்லையாம் வினை என வழிபாட்டின் பயனையும் விளக்கியவர் திருஞானசம்பந்தர். ஒரு நெறி மனம் வைத்து உணர் ஞானசம்பந்தன் அழிந்து உயிர்வருந்தும் காலத்தில் அஞ்சேல் அருள்பவன் இறைவன் எனத் திரு ஐயாற்றுப் பதிகவழி விளக்கியுள்ளார்.

முடிவுரை

அன்பே சிவம் என இந்து சமயம் கூறுகிறது. ''அன்பு அன்பிற்காகவே'' என்பதே இந்து சமயக் குறிக்கோள். எனவே, இறைவன்பால் செலுத்தும் ஆழ்ந்த அன்பினைப் பக்தி என்று கொள்ளலாம். இறைவனது ஆற்றலை அறிந்து விரும்பி உணர்ந்து செலுத்துகின்ற அன்பினையே பக்தி என சான்றோர்கள் கூறுகின்றனர். சமுதாயத்தில் அன்பின் மூலம் எதையும் சாதிக்கலாம் என்பதைப் பக்திமார்க்கம் மூலம் வழிபாட்டு முறையில் நால்வர்கள் எடுத்துரைக்கின்றனர். சைவ சமயத்தின் மூலம் புத்துரையும், புதிய ஆற்றலையும், பெருஞ் செல்வாக்கினையும் தந்ததற்குக் காரணமாகச் சமயக் குறவர்கள் திகழ்கின்றனர்.

இறைவனின் திருவிளையாடல்கள், சிவனின் அற்புதங்கள் ஆகியவற்றைத் தாம் பாடிய பதிகங்களின் மூலம் எடுத்துரைக்கின்றனர். சாதி, சமய பாகுபாடுகளைக் கடந்த நிலையில் சமயப் பணியை ஆற்ற வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கினர். சிவநெறிகளையும், தத்துவங்களையும், சிவபுராணங்களையும், சைவ சமயத்தின் உயர்ந்த நெறிகளையும் தத்துவங்களையும், இவர்களுடைய பதிகங்கள் எடுத்துக் காட்டுகின்றன. பாமர மக்களைப் பக்தி

நெறியில் கொண்டு சென்று நெறிப்படுத்தவும், பலரை (செல்வந்தர்களை) ஆலய திருப்பணிகள் செய்யவும், சான்றோர்களை உருவாக்கவும், சுருங்கற்கூறின் எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும். இல்லமை இல்லாத நிலை வேண்டும் என்ற உயரிய நோக்குடன் சமயப் பணியையும், சமூகப் பணியையும் இணைத்தே ஆற்றினர்.

இவ்வாறு சமயக் குரவர்கள் சமுதாயத்தில் ஏற்படுத்திய பக்தி இயக்கமானது வெறும் சமயச் சீர்திருத்தமாக இல்லாது, சமுதாயச் சீர்திருத்த இயக்கமாகவும் விளங்கியது. இவ்வியக்கம் மக்களின் வாழ்க்கையில் மட்டுமன்றி அவர்களின் மனத்திலும் புரட்சி அலையை எழுப்பியது. சமுதாயச் சீர்திருத்த பணிகளில் பக்தி என்பது ஓர் உயர்ந்த கருவிகளாகச் செயல்பட்டது. சமுதாயச் சீர்திருத்தப் பணிக்குப் பக்தி மட்டுமே ஒரு கருவியாகக் கொள்ளாமல் பிற வழிகளில் நாமும் முயற்சிக்கலாம்.

63. கண்ணப்ப நாயனார் புராணத்தில் வாழ்வியல் கூறுகள்



முனைவர் கு. இராசலட்சுமி
விரிவுரையாளர், தமிழ்த்துறை
அறிஞர் அண்ணா அரசு மகளிர் கலைக்கல்லூரி
வாலாசாபேட்டை

முன்னுரை

தமிழகத்தில் பன்னெடுங் காலமாகச் சைவமும் வைணமும் தழைத்து வளர்ந்து வருகின்றது. நம் தமிழர்கள் சைவத்தையும் வைணவத்தையும் இரு கண்களாகப் போற்றி வருகின்றனர். சைவ இலக்கியங்கள் தோன்றிய காலந்தொட்டு தமிழ்மொழி ஏராளமான வளர்ச்சியை அடைந்து வருகின்றது. புராணங்கள் நம் தமிழ் மக்களின் பண்பாட்டுச் சின்னங்களாகத் திகழ்கின்றது. குறிப்பிட்ட சில புராணங்கள் மக்களின் மனத்தில் நீங்காத இடம் பிடித்தவை. தலப்புராணங்கள் தோன்றிச் சைவத்தை நிலைபெறச் செய்தன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை திருவிளையாடல் புராணம், பெரியபுராணம் முதலியன. சேக்கிழாரின் பெரிய புராணம் 63 நாயன்மார்களின் வரலாற்றைச் சீரிய முறையில் எடுத்தியம்புகிறது. அடியார்கள் இறைவன் மீதுக் கொண்ட பக்தியைப் பறைசாற்றி நிற்கின்றதைக் காணமுடிகிறது. கண்ணப்ப நாயனார் புராணத்தில் மனித வாழ்வியல் கூறுகளை இக்கட்டுரை ஆராய்கின்றது.

நிலச் சூழல்

கண்ணப்பநாயனார் புராணத்தில் குறிப்பிடப்படும் நிலம் குறிஞ்சி நிலமாகும்.

> ''இத்திரு நாடு தன்னில் இவர் திருப்பதியா தென்னில்
> நித்தில அருவிச் சாரல் நீள்வரை சூழ்ந்த பாங்கர்''
> (கண்ணப்ப நாயனார் புராணம் 2)

அருவிகளும், சாரல்களும் நிறைந்த மலைநாட்டினை உடையது இத்திருநகர் என்று பொத்தப்பி நாடு என்பதை அறியமுடிகிறது.

நீள்வரை சூழ்ந்த பாங்கர் என்று குறிப்பிடுவதால் இது மலை நாட்டைப் பதிவு செய்வதை உணர முடிகிறது. மலையும் மலை சார்ந்த நிலம் குறிஞ்சி நிலமாகும். எனவே குறிஞ்சி நிலம் பதிவு செய்வதை உணரமுடிகிறது.

தெய்வ வழிபாடு

குறிஞ்சி நில மக்களின் தெய்வம் முருகக் கடவுள். கண்ணப்ப நாயனார் புராணத்தில் குறிஞ்சி நிலக் கடவுளான முருகனைக் குறிப்பிட்டுள்ளது.

''மயிலுடைக் கொற்ற வூர்தி வரையரங் கிழிந்த திண்
அயிலுடைத் தடக்கை வென்றி அண்ணலார் அருளினாலே''

சிரபுஞ்ச மலையைப் பிளந்த வலிமையான வேற்படையினையும், மயிலினை ஊர்தியாக உடையவனுமாகிய முருகப்பெருமான் என்றதனால் முருகனை வழிபாட்டுக் கடவுளாகக் கொண்டிருந்தனர் என்பதனை உணரமுடிகின்றது.

ஊர்ப்புறம்

குறிஞ்சி நில மக்களாகிய குறவர், குறத்தி வாழ்கின்ற ஊர்ப் புறம் சிறுகுடி என்பதாகும். இதனை,

''அருவரைக் குறவர் தங்கள் அகன்குடிச் சீறூர் அயம்
வெருவிழா எடுத்து மிக்க பெருங்களி கூருங்காலை''

குறவர்களின் குடிகள் விளங்கித் தோன்றுமாறு தந்தைக்குத் திண்ணனார் மகனாகப் பிறந்தார். அதனால் பெரிய குடில்களைக் கொண்ட அந்தச் சீறூரில் உள்ள மக்கள் அதனை விழாவாகக் கொண்டாடினார் என்றதனால் குறவர், கானவர் இனத்தைக் குறிப்பிட்டுள்ளமையை உணரமுடிகிறது.

நீர் நிலை

குறிஞ்சி நிலத்தில் உள்ள நீர் நிலை அருவி நீர், சுனைநீர் முதலிய நீரினை மக்கள் உபயோகப்படுத்தினர் என்பதனை,

''நித்தில அருவிச் சாரல் நீள்வரை'' (கண்.நாய.2)

என்ற பாடல் வரி உணர்த்துகின்றன.

உயிரினங்கள்

கண்ணப்ப நாயனார் புராணத்தில் உயிரினங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது. குறிஞ்சி நிலத்திற்குரிய பறவைகளும், விலங்குகளும் சுட்டப்பட்டுள்ளன.

பறவைகள்

குறிஞ்சி நிலத்திற்கு உரிய பறவைகள் வாரணச் சேவல் கோழிகள், மயில்கள், கிளி முதலியன.

''வாரணச் சேவ லோடும் வரிமயிற் குலங்கள்விட்டுத்''

என்ற வரியில் பறவைகளைப் பதிவு செய்திருப்பதை உணர முடிகின்றது.

விலங்குகள்

குறிஞ்சி நிலத்திற்குரிய விலங்குகள் யானை, புலி, கரடி, பன்றி முதலியன. இதனை,

''கடுமுயற் பறழினோடும் கான ஏனத்தின் குட்டி
கொடுவரிக் குருளை செந்நாய் கொடுஞ்செவி
ஏனமோடு மானினங்கள் எண்குதின் கலைக்குலம்
கானமேதி யானைவெம் புலிக்கணங்கள் கான்மரை''

(கண்.நாய.78)

மிகுந்த வேகமுடைய முயல்குட்டி, காட்டுப்பன்றிக் குட்டி, புலிக்குட்டி, செந்நாய்க் குட்டி போன்றவற்றின் பின் சென்றனர் என்றும், காட்டுப் பன்றிகளுடன் மான் வகைகள், கரடிகள், வன்மையான கலைமான் கூட்டங்கள், காட்டு எருமைகள், யானைகள், காட்டுக்குதிரைகள் போன்ற விலங்குகளை அம்புகளினால் வீழ்த்தினர் என்று கூறுவதின் மூலம் குறிஞ்சி நிலத்தில் உள்ள விலங்குகளைப் பதிவு செய்திருப்பதை உணரலாம்.

தாவரங்கள்

தாவரங்கள் மனித வாழ்க்கையின் ஆதாரங்கள், தாவரங்கள் இல்லையெனில் மனிதன் உயிர் வாழ முடியாது.

குறிஞ்சி நிலத்தில் மூங்கில், அகில், சந்தனம் முதலிய மரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும், குறிஞ்சி மலரினையும், முல்லைப் பூவையும், வெட்சிப் பூவையும், உணர்த்தியுள்ளன. இதனை,

''கரைவளர் கழையின் முத்தும் கார்அகில் குறடும் சந்தும்''

''வெறிகொண்ட முல்லைப் பிணைமீது குறிஞ்சி வெட்சி''

என்ற வரிகளில் மரங்களையும், பூவினையும் பதிவு செய்வதை உணர முடிகின்றது.

உணவு முறை

''ஐவன அடிசில் வெவ்வேறமைந்தன புற்பாற் சொன்றி
மொய்வரைத் தினைமென் சோறு மூங்கில்வன் பதங்கள்
கைவினை எயினராக்கிக் கலந்தவளன் கிழங்கு துன்ற''

என கூறுகின்றன. அதாவது வேடர்கள், சமைத்த மலையரிசிச் சோறு, பலவகையான புல்லரிசிச் சோறு, தினையின் மென்மையான சோறு, மூங்கிலின் வலிய அரிச்சோறு போன்றவையுடன் தசையும், கிழங்குகளும் சேரும்படி கலந்து உண்டனர். மேலும் செந்தினைமாவும் தேனும் கலந்து உண்டனர். தேனில் தோய்த்து வெந்த இறைச்சியையும் விளாம்பழத்தையும் தேனையும் கலந்து பிசைந்து கவளமாச் செய்தும் உண்டனர். இறந்த ஈயல் உணவையும் உண்டனர் என்பதனை,

''செந்தினை இடியும் தேனும் அருந்துவார் தேனில் தோய்த்து
வெந்தஊன் அயில்வார் வேரி விளங்கனிக் கவளம் கொள்வார்''

என்ற வரிகளினால் குறிஞ்சி நில மக்கள் உண்ட உணவினை தெளிவாக உணரலாம்.

பழக்க வழக்கங்கள்

குறிஞ்சி நில மக்களிடையே பல வகையான பழக்க வழக்கங்கள் இருந்தன. அவற்றுள் குறவரின் குல மரபின், வில்வித்தை பயிலத் தொடங்கும் முன் பறையறைவிக்கும் பழக்கத்தையும், காப்பு அணிவிக்கும் மேற்கொண்டனர்

என்பதனை,

> ''சேடரின் மிக்க செய்கைத் திண்ணன்றால் பிடிக்கிறாள் என்று
> ஆடியல் துடியும் சாற்றி அறைந்தபேர் ஓசை கேட்டு''

என்ற வரிகளின் மூலம் உணர முடிகின்றது. மேலும்,

> ''சிலையினைக் காப்புக் கட்டும் திண்புலி நரம்பிற செய்த
> நலமிகு தாப்பு நன்னான் நாகனார் பயந்த நாகர்''

அதாவது வில்லினைக் காப்பு கட்டுவதற்காக நன்மையுடன் கூடிய நல்ல வேளையில் புலி நரம்பினாலே செய்யப்பட்ட காப்பினை வேடர்குலம் விளங்கவே, திண்ணனாரின் முன்கையில் கட்டினர். என்றதனால் காப்பு அணியும் வழக்கத்தைக் குறவர்கள் மேற்கொண்டனர் என்பதனை உணரமுடிகிறது.

ஆடை அணிகலன்கள்

குறிஞ்சி நில மக்கள் பசிய இலைகளால் ஆன இலைமாலைகளை உடலில் சுற்றிக்கொண்டனர். பலவகை மலர்மாலைகளைச் சூடினர். மணிகள் கட்டிய வடத்தோலை மேலே கட்டிக்கொண்டனர். உடலில் பல கறைகளால் ஆன அணிகலன்களைப் பூண்டனர். இதனை,

> ''பாசிலைப் படலை சுற்றிப் பன்மலர்த் தொடையல் சூடிக்
> காசுடை வடத்தோல் கட்டிக் கவடிமெய்க் கலன்கள்
> பூண்டார்''

என்ற வரிகளில் கூறுவதை உணர முடிகின்றது.

இசைக் கருவிகள்

மனிதன் வாழ்வில் இசைக்கருவிகள் பெரும் பங்கு வகிக்கின்றன. மனிதன் பிறந்தது முதல் இசைக்கருவிகளைக் கையாளுகின்றான். அதன் அடிப்படையில் குறிஞ்சி நில மக்களாகிய வேடுவர்கள் பல்வேறு இசைக்கருவிகளைப் பயன்படுத்தியமையைக் கண்ணப்ப நாயனார் புராணம் எடுத்தியம்புகின்றது. உடுக்கை, குறடு முதலிய பறையறைவிக்கும் கருவிகள், தொண்டகப்பறை, கொம்பு துடி, பம்பை முதலியன இசைக் கருவிகளைக் குறிஞ்சி நில மக்கள்

பயன்படுத்தியுள்ளனர். இதனைத்

''துடிக்கு குருட்டி ஓடித் தொடக்கு நாய்ப்''

(கண்.நாய.24)

என்றும்,

''தொண்டக முரசும் கொம்பும் துடிகளும் துளைகொள் வேயும்''

(கண்.நாய.38)

என்றும்,

''கோடுமுன் பொலிக்கவும் குறுங்கணா குளிக்குலம்
மாடுசென் றிசைப்பவும் மருங்குபம்பை கொட்டவும்''

(கண்.நாய.72)

கூறப்படுவதினால் பல்வேறு இசைக்கருவிகளை இந்நில மக்கள் பயன்படுத்தியுள்ளமைப் புலனாகின்றது.

முடிவுரை

இவ்வாறாகக் கண்ணப்ப நாயனார் புராணத்தில் குறிஞ்சி நிலமக்களின் வாழ்வியல் கூறுகளான தெய்வம், தாவரங்கள், மக்கள் இனம், விலங்குகள் உண்ணும் உணவு முறை, அணிகின்ற ஆடை வகைகள், பயன்படுத்திய இசைக்கருவிகள் முதலியவற்றை இக்கட்டுரையின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது.

64. ஐம்பூதங்கள் உணர்த்தும் இறைநெறி



முனைவர் ச. பபீதா
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
அக்சிலியம் கல்லூரி
காந்திநகர், காட்பாடி

முன்னுரை

சைவசமயம் தமிழகத்தின் மிகவும் பழமையான சமயம் ஆகும். சிவபெருமான் சைவசமயத்தின் கடவுளாகக் கருதப்படுகின்றார் தென்னாட்டு தெய்வமாகச் சிவனே திகழ்கின்றார். ஆகையால் தான் சிவனைத் தென்னாடுடையார் சிவனேப் போற்றி என்று சிறப்பாக வழங்கப்படுகிறது. தெய்வத்திற்குத் தேவையான வழிபாட்டு சடங்குகளை செய்ய மக்கள் கருதினர். ஆதிகாலத்தில் இறைவனை நம் முன்னோர்கள் சோலைகளிலும், பூம்பொழில்களிலும் சென்று வழிபட்டனர். அவர்களின் வழிபாட்டு முறைகள் மிகவும் பயனுள்ளதாகவும் இயற்கையோடு பின்னிப் பிணைந்த ஒரு பக்தி நெறியாகவும் இருந்து வந்தது.

சங்கத்தமிழர்களின் பக்திநெறி

சங்ககாலத் தமிழர்களின் வழிபாட்டு முறைமையைக் காணும் போது வியப்பும் உற்சாகமும் ஏற்படுவதோடு அவர்களின் ஆன்மீக அறிவையும் அறிந்து கொள்ள முடிகின்றது. அனைவரையும் வியக்கவைக்கும் அளவில் அவர்களின் வழிபாட்டு நெறி அமைந்திருந்தது உண்மையே என்ற கருத்துடையவர்கள் நம் முன்னோர்கள். ஏனெனில் பஞ்சபூதங்களால் ஆனது உலகம் அதே பஞ்சபூதத்தால் ஆனது தான் மனித உடலும் ஆகையால் பஞ்சபூதங்களுக்கு நாம் தீங்கிழைத்த போது அவை நம்மைத் தாக்கும். அதன் காரணமாக இவ்வுடலும் அழியும் என்பதில் திடமான நம்பிக்கை கொண்டிருந்தனர்.

இந்த நம்பிக்கை தான் இவர்களை இயற்கையோடு சேர்ந்து வாழ வழி செய்தது. இயற்கைச் சூழல்களுக்கும்

எந்தவொரு பாதிப்புமின்றி இருந்தது. அதே நேரத்தில் மனிதர்களும் உடல் ஆரோக்கியத்தோடு, உள்ள ஆரோக்கியமும் கொண்டு, வலிமை, கருணை, அன்பு, அறநெறிமிக்க ஒரு வாழ்வுதனை வாழ்ந்தனர்.

பஞ்சபூதத் தலங்கள்

பஞ்சபூதங்கள் என்று சொல்லும் போது அவை முறையே இயற்கையைத்தான் குறித்து நிற்கின்றது என்பது அனைவருக்கும் தெரிந்ததே. நிலம், நீர், காற்று, வானம் ஆகிய இப்பஞ்சபூதங்கள் இல்லையென்றால் அவைதம் தொழிலில் சரிவர செயல்பட்டு இயங்கவில்லையென்றால் இந்த உலகத்தின் இயக்கம் நின்று போய்விடும்.

மனிதனின் உடலானது கண், செவி, மெய், வாய், மூக்கு என்ற ஐம்புலன்களால் ஆனது. இந்த ஐம்புலன்களை அடக்காவிட்டால் உடலுக்குப் பிணி ஏற்பட்டு பல உபாதைகளுக்குக் காரணமாகி உடலானது அழிந்து போகும் என்ற உண்மையை பஞ்சபூதத்தின் தகவமைப்பைக் கொண்டு அறியலாம். இயற்கையின் வடிவமானவன் தான் இறைவன் என்பதனை உலகிற்கு உணர்த்த எண்ணியதால் தான் ஐம்பூதங்களின் அம்சங்களில் இறைவனை வைத்து வழிபாடு செய்கின்றோம். ஒவ்வொரு பூதத்திற்கும் ஒவ்வொரு தலமாய் அமைத்து அங்கு வீற்றிருக்கும் இறைவனை அத்தலத்தின் அம்சமாய் வழிபடுகின்றோம்.

1. நிலத்தின் தெய்வமாய்த் திகழ்பவன்-காஞ்சிபுரம்-ஏகாம்பரநாதர் கோவில்
2. நீரின் அம்சமானவன்-திருவானைக்கா-ஐம்புகேசுவரர்
3. நெருப்பின் அம்சமானவன்-திருவண்ணாமலை-அர்த்தநாதீசுவரர்
4. காற்றின் வடிவானவன்-திருக்காளத்தி-காளகத்தீசுவரர்
5. வானத்தின் வடிவான-சிதம்பரம்-தில்லைநடராசப் பெருமான்

இவ்வாறாக இறைவன் எல்லாமுமாக எல்லாவற்றிலும் கலந்தவனாக நிற்கின்றான் என்பதனை,

''பாரிடை ஐந்தாய் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி''

என்று மனம் உருகிறார் மாணிக்கவாசகர்.

அறிவு - விளக்கம்

''ஒன்றறிவு அதுவே உற்றறிவு அதுவே
இரண்டறிவு அதுவே அதனொடு நாவே
மூன்றறிவு அதுவே அவற்றொடு மூக்கே
நான்கறிவு அதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறிவு அதுவே அவற்றொடு செவியே
ஆறறிவு அதுவே அவற்றொடு மனமே''

நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினாரே (தொல்காப்பியம் பொருள் மரபு) பஞ்சபூதங்களில் முதன்மையான நிலம், அவைப் போல உயிர்வாழும் நிலம் போலவே அதன் அசைவும் இருக்கும். நமது தோலும் ஒரறிவு உடையதாவரத் தன்மைபோன்றதே.

இரண்டாவது பூதம் நீர்-நமது வாயில் ஊறும் உமிழ்நீர் சுவையறியத் துணைசெய்வது நீரில் உயிர்ப்பவை நுண்ணுயிரிகள். மூன்றறிவுடைய உயிர்கள் மூன்றாம் பூதமாகிய காற்றின் ஆளுகைக்கீழ் வருகின்றன. நறுமணம் மூக்கின் வழியாக நுகரப்படுகின்றன. காற்று மணமாக மாறி வாசனையை நுகரச் செய்கின்றது. நிலம், நீர் ஆகியவற்றில் வாழும் புழுக்கள் இறகு பெற்றுகாற்றின் உதவியோடு பறக்கின்றன.

நான்காவது பூதம் நெருப்பு - அது கண்களோடு பொருத்திப் பார்க்கக் கூடியது ஒளி, வெளிச்சம் என்ற விதத்தில் அது பரவி நிற்பதனை கண்களே உணருகின்றது. ஐந்தாவது பூதம் வானம்-அறிவாகிய ஒலியை உள்வாங்கி செவிவழி உணர்த்தக்கூடியது. பஞ்சபூதங்களையும் உணர்ந்து உள்வாங்கி, வெளியே செலுத்தும் ஆறாவது அறிவை பெற்றவர்களை

மனிதர்கள் என்கிறோம். ஆக பஞ்சபூதங்களையும் ஒன்றிணைத்து உருவாக்கப்பட்டவன் தான் மனிதனும், ஓரறிவு முதல் சொல்லப்பட்ட உயிர்நிலைகளிலும் இறைவன் உறைகின்றான் என்பதனை உணர்ந்து கொண்டால் மனிதவாழ்வு மேம்படும்.

இறைநெறியில் முதன்மை வாய்ந்தது அன்புநெறியே ஆகும். ஏனெனில் இறைவன் அன்புக்குட்பட்டவன் என்பதனை,

"அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில்புகும் அரசே
அன்பெனும் வலைக்குட் படுபரம் பொருளே
அன்பெனும் கரத்தமர் அமுதே
அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே
அன்பெனும் உயிர்ஒளிர் அறிவே
அன்பெனும் அணவுள்ளமைந்த பேரொளியே
அன்புருவாம் பரசிவமே" (திருவருட்பா-வள்ளலார்)

65. பெரியபுராணம் உணர்த்தும் வாழ்வியல் கூறுகள்



முனைவர் மு. இராசசிறி
விரிவுரையாளர், தமிழ்த்துறை
அறிஞர் அண்ணா அரசு மகளிர் கலைக்கல்லூரி
வாலாசாபேட்டை

முன்னுரை

உலகியல் பல்வேறு சமயங்கள் உள்ளன. அவற்றுள் இறைவன்பால் நல்லாற்றுப்படுத்தி, தொன்மை வாய்ந்த சமயமாகச் சைவ சமயம் போற்றப்படுகின்றது. சைவ சமயக் கடவுளான சிவபெருமானைப் போற்றும் பக்தி இலக்கியத்தைச் சார்ந்தவைப் பன்னிரு திருமுறைகளாகும். இத்திருமுறைகளுள் பன்னிரண்டாம் திருமுறையாகப் போற்றப்படுகிறது. திருத்தொண்டர் புராணமாகிய பெரியபுராணமாகும். சேக்கிழாரால் இயற்றப்பட்ட இவ்விலக்கியம் இறைவனின் பெருமையையும், தமிழர் தம் சமுதாய பண்பாட்டினையும் அறிந்துக் கொள்ள உதவுகிறது. இப்பெரியபுராணம் உணர்த்தும் பண்பாட்டுக் கூறுகளை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வழிபாடு

உலக உயிர்கள் இறைவனை அடைவதற்கு வழிபாடு இன்றியமையாததாகும். அவ்வழிபாடு உயிர்களின் பாதுகாவலுக்கும், கல்வி, பொருள், புகழ் முதலான சீரிய செல்வங்கள் சேர்வதற்கும், மேம்படுத்துவதற்கும் வழிவகுக்கிறது. இதனைத் தொல்காப்பியர்,

> ''வழிபடுதெய்வம் நிற்புறங் காப்ப
> பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
> பொலிமின்'' (தொல்.செய்.106)

என்று புறநிலை வாழ்த்து நூற்பாவில் விளக்கியுள்ளார். வழிபடும் மாந்தரை தெய்வம் முன்னின்று காக்கும் என்றும், பல்வேறு

நலன்களைத் தந்து வாழ்விக்கும் என்பதும், வழிபடுவோரையும், அவர்களது வழித்தோன்றல்களையும் முறையாகக் காக்கும் என்பதும் அறியமுடிகிறது. வழிபாட்டில் மேற்கொள்ள வேண்டிய முறைகளாக நால்வகை நெறிகள், ஐந்தெழுத்தின் பெருமை, திருநீற்றுப் பெருமை, பாடித் தொழுதல், விண்ணப்பங்கள், போலிச் சடங்குகளைத் தவிர்த்தல் ஆகிய முறைகள் தேவாரப் பாடல்களில் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன.

பூசை முறை

இறைவனது திருமேனியை நன்னீராட்டி, மலரிட்டு அருச்சித்து அவரது பெருமைகளைப் போற்றி வணங்குவது வழிபாட்டு மரபாகும். இவ்வாறு மலரிட்டு வணங்குதல் ஒருபுறம் இருக்க, ஞானநெறி நின்று பூசை செய்யும் முறைகளையும் அப்பர் குறிப்பிட்டுள்ளார். பிரதோச வழிபாட்டையும், அந்நாளில் உள்ள நோன்பு முறையையும் விளக்குவதாகத் தேவாரப் பாசுரங்கள் விளக்குகின்றன.

''நீரிடைத் துயின்றவன் தம்பி நின் சாம்புவின்
போரிடைச் சுக்கிரீவ னநுமான் தோழக்
காருடைய நஞ்சுண்டு காத்தருள் செய்த
சீருடை சேட்வாழ் திருவு சாத்தானமே'' (அப்பர்)

நம்மைக் காக்க நஞ்சுண்ட எம்பெருமான் இத்தலத்தில் பிரதோச காலத்தில் நடக்கும் முழு பாக்கியமும் தர உடையர் என்பதை இப்பாடல் உணர்த்துகின்றது. இவ்வுலகில் தெய்வங்கள் பல வடிவங்களில் இருப்பதாகக் கூறப்பட்டாலும் அவை அனைத்தும் ஒன்றே என்பதைத் திருமூலர் தம் பாடல்களில் விளக்கியுள்ளார்.

''நின்றது தானாய் நிறைந்த மகேசுவரன்
சென்றாங்கு இயங்கும் அரன் திருமாலவன்
மன்றது செய்யும் மலர்மிசை மேலப்பன்
என்றிவராக இசைந்திருந்தானே''

(திருமந்திரம்-பா.403)

இறைவன் மகேசுவரனாகவும் மாலவனாகவும், பிரம்மனாகவும் இருக்கிறான் என்பது இப்பாடல் வழி புலானகிறது. மூன்று

தெய்வமும் ஒன்றே என்பதை அறியாத மக்களின் வேறுபட்ட கருத்தினைக் கண்டு வியக்கிறார். இறைவன் ஒருவனே என்பதை அறியாமல் பிதற்றுபவர் மாசில்லாதவர். சிவம் பரம்பொருள் என்பதை,

''நீசர் அதுஇது என்பர் நினைப்பிலார்
தூசு பிடித்தவர் தூர் அறிந்தார்களே'' (திருமந்.105)

என்ற பாடலின் வழி சிவனே அனைத்துமாய் நின்று உலகு ஏழையும் படைத்தான் என்பதைக் குறிப்பிட்டுள்ளார்.

அருள் தன்மை

கருணைத் தன்மை வாய்ந்த இறைவன் தீயவர்களுக்குத் தீயைக் காட்டிலும் வெம்மையானவன் அன்பர்களுக்கு நீரைக் காட்டிலும் தன்மையானவன் அன்பு செய்வோருக்குத் தாயைக் காட்டிலும் கருணை புரிபவன். இறைவன் தன்னை அப்பா என்று அழைப்பவருக்கு அப்பனாகவும், மனிதர்களுக்கு மனிதனாகவும் தேவர்களுக்குத் தேவ வடிவிலும் விரும்புகின்ற வடிவில் அருள் செய்பவன். இறைவன் அருள் பெற வேண்டுமானால் வாயரா வாழ்த்திக் குற்றமில்லா மனத்துடன் துதித்தால் இறைவனது அருளைப் பெறுதல் எளிதாகும் என்பதை,

''ஏந்தியும் எம்பெருமான் என்று இறைஞ்சியும்
சுத்தம் செய்து அருள் பெறலாமே'' (திருமந்.39)

இப்பாடல் உணர்த்துகின்றது.

திருமணம்

மனித சமுதாயம் அறிவியல் முன்னேற்றத்தில் பல வியத்தகு முன்னேற்றத்தைக் கண்ட போதிலும், தமிழரிடையே பண்பாட்டில் ஒன்றான திருமணச் சடங்கு செய்யும் முறை சங்க காலம் முதல் இன்றும் வரை இருக்கத்தான் செய்கிறது. இத்திருமணச் சடங்கு பற்றிப் பெரியபுராணம் குறிப்பிடுகிறது. தொல்காப்பியம் எண்வகைத் திருமணத்தைக் குறிப்பிடுகிறது. அக்காலத்தில் எட்டு வகைத் திருமணங்கள் வழக்கத்தில் இருந்துள்ளமை காண முடிகின்றது. பிரம்மம் தெய்வம், ஆருடம்,

பிரசாபத்தியம், ஆசுரம், காந்தருவம், இராக்கதம், பைசாசம் என்பனவாகும். இதனைத் தொல்காப்பியம்,

"அறன் நிலை ஒப்பே பொருள்கோள் தெய்வம்
யாழோர் கூட்டம் அருள் பொருள் விளைவே
இராக்கதம் பேய்நிலை என்றிக்கூறிய
மறையோர் மன்றல் எட்டு"
(தொல்.கள.இளம்பூரணர் உரை)

எனப் பட்டியலிட்டுக் காட்டுகிறது. பெரியபுராணத்தில் சுந்தரர், திலகவதியார் ஞானசம்பந்தர், பரவையார், காரைக்காலம்மையார் முதலானோர் வரலாற்றினைப் படிக்கும் பொழுதே இத்திருமணச் சடங்குகள் குறித்து அறியமுடிகிறது.

நாளோலை விடுத்தல்

பெற்றோர்களும், உறவினர்களும், திருமணத்திற்குச் சில நாள்களுக்கு முன்பாகவே திருமணம் நடைபெறும் நாள், நேரம், இடம் குறித்துப் பத்திரிகை அனுப்புதல் நாளோலை விடுத்தல் ஆகும். சுந்தரரின் பெற்றோர்களும் பெண்களும், ஆடவர்களும், மணமகள் இல்லத்திற்கு நாளோலை ஏந்திச் செல்ல மணமகன் மணமகள் இல்லத்தினர் எதிர்கொண்டு பணிந்து அதை ஏற்றுக் கொள்கின்றனர். இதனைப் பெரியபுராணத்தில் சேக்கிழார்,

"மங்கலம் பொலியச் செய்த மணவினை யோலை யேந்தி
அங்கயற் கண்ணினாரு மாடவர் பலரு மீண்டிக்
கொங்கலமலர்ச் சோலை மூதூர் குறுகிரை எதிரே வந்து
பங்கல வதனி மாரு மைந்தரும் பணிந்து கொண்டார்"
(பொ.பு.156)

சம்பந்தர் வரலாற்றினைக் கூறுமிடத்தில்,

"திருமணஞ் செய் கலியாணத் திருநாளுந் திகழ்சிறப்பின்
மருவி யோரையும் கணித மங்கல நூலவர் வகுப்பப்
பெருமண நாளோலை பெருஞ் சிறப்பினுடன் போக்கி"
(பெ.பு.1067)

என்று நாளோலைக் குறித்தச் செய்தியினைக் கூறக் காணலாம்.

காப்பு நான் கட்டுதல்

திருமண நாளுக்கு முன் நாளில் முரசு முதலிய மங்கல ஓசை முழங்க மணமகனை அலங்கரித்து ஆகம விதிப்படி பொன் நாணைக் கட்டுகின்ற வழக்கம் இருந்தமை காணமுடிகின்றது. சம்பந்தருக்குக் காப்பு நாண்கட்டும் செய்தியினை,

''மாறிலா நின்ற வலந்தரு புகலியின் மணமீக்
கூறுநாளின் முன் வாளினில் வேதியர் குழாமும்
நீறு சேர் திருந் தொண்டரு நிகரிலா தவருக்
காறு சூடினா ரருட்டிருக் காப்பு நாண னிவார்''

(பெ.பு.3080)

என்ற பாடல் மூலம் நான் அணியும் வழக்கத்தை அறிந்து கொள்ளமுடிகிறது.

தீ வலம் வருதல்

தீயினை இறைவனின் வடிவமாகக் கருதி வேள்வித் தீயினை மணமக்களின் முன்பாக எரியூட்டி தீவலம் வந்து திருமணம் நடைபெற்ற நிகழ்வானது மக்களிடையே நிலவி வருவதைக் காணலாம். சம்பந்தரும் துணைவியாரும் தீவலம் வந்து திருமணம் முடிந்ததும் நல்லூர் பெருமணக் கோயிலில் எழுந்தருளி இருக்கும் இறைவனை வழிபட்ட செய்தியினைக் காணமுடிகின்றது.

விருந்தோம்பல்

சங்ககால மக்கள் பண்பாட்டினைப் போற்றி வாழ்ந்து வந்தனர். பண்பாட்டின் தலையாயப் பண்பாக விருந்தோம்பலைக் காத்து வாழ்ந்துள்ளனர். தலையாயக் கடமையாக இல்லறத் தலைவி விருந்தோம்பலைப் போற்றி வந்தாள் என்பதனை,

''விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்''

(தொல்.கற்பியல்.111)

என்று கூறியுள்ளார். விருந்தினரை நாளும் பாதுகாத்து வருதல் தலையாய கடனென வள்ளுவர் கூறுகிறார்.

''இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு
தென்புலத்தார் தெய்வம் விருந்துஒக்கல் தான் என்றாங்
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை''

கணவனும், மனைவியும் இணைந்து நடத்தும் இல்லறம் அறமாகக் கருதப்பட்டது. உற்றார் உறவினர் மட்டுமின்றித் தம்மை நாடி வருவோர்க்கு உண்டியும், உடையும் உறையுளும் கொடுத்து உபசரிப்பது தலையாயக் கடமையாகக் கொண்டிருந்தனர். இதனைப் பெரியபுராணத்திலும் காணமுடிகிறது.

தன் மகனையே உணவாக இறைவன் கேட்ட போது அன்புடன் உணவு சமைத்துக் கொடுத்த சிறு தொண்டரும், நாவுக்கரசருக்குத் திருவமுது படைக்க தன் இல்லத்திற்கு அப்பூதி அடிகள் செய்த செயலும் விருந்தோம்பலின் மேன்மையைக் புலப்படுத்துகிறது. இக்கருத்து சமயக் கருத்தாக அன்றி சமுதாயத்தில் நிலவி வந்த விருந்தோம்பல் பண்பை புலப்படுத்துவதாக அமைந்துள்ளது.

நிறைவுரை

பெரியபுராணம் உணர்த்தும் வாழ்வியல் கூறுகளில் வழிபாடு, பூசை முறை, அருள் தன்மை, அன்புடைமை, திருமணம் குறித்த நாளோலை விடுதல், காப்பு நாண்கட்டுதல். தீவலம் வருதல், விருந்தோம்பல் முதலானவற்றை இக்கட்டுரை ஆராய்ந்துள்ளது.

66. சிவபெருமானின் முக்கண் புராணம்



தொ.மோ. வைசுணவி
ஆய்வியல் அறிஞர் (பரதம்)
தமிழ் இசைக் கல்லூரி
சென்னை

முன்னுரை

''புராணம்'' என்பதன் பொருள் பழமையான வரலாறு என்பதாகும். எது தொன்று தொட்டு இன்று வரை பரவியிருக்கின்றதோ அதுவே புராணம். இவை சமயக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு தோன்றியனவாகும். ஒரு சார் புலவர் வகையைச் சார்ந்த சூதர் என்பவரே ஆதியில் புராணங்களை இயற்றினர். ''சமயம்'' என்பது நம்பிக்கைகளின் அடிப்படையில் உருவாகிறது. நமது தாய்த்திரு நாட்டில் விரிவாகப் பரவியுள்ள சமய நெறிகளுள் ''சைவ'' சமயம் மிகவும் குறிப்பிடத்தக்கது. சிவ வழிபாடு என்பது சிவநெறியாகும். எனவே தான் சிவநெறியை சைவநெறி என்று குறிப்பிடுகின்றோம். சைவ சமய நூல்கள் பெரும்பாலும் உலக நலம் குறித்த உயர் சிந்தனைகளைக் கொண்டு எழுதப்பெற்றதாக அமைகின்றன.

இறையருள் வெளிபட்டத் தலங்களும், அடியவர்கள் துன்பங்கள் நீங்கப்பெற்று மனம் மகிழ்ந்த தலங்களும், பற்பல காரணங்களால் மக்களால் நாடிவரப்படுகின்றன. பயண வசதிகள் இல்லாத காலந்தொட்டே, அடியவர்கள் இக்கோயில்களுக்குச் சென்று வழிபட்டு வருகின்றனர். வரலாற்று நிகழ்வுகள், செவிவழிச் செய்திகள் இவற்றோடு, சிலக் கற்பனைக் கூறுகளையும் கலந்து இயற்றப்பட்டதே தலபுராணங்கள். சமய நம்பிக்கை பெருகவும், இறைத்தத்துவம் மக்கள் மனத்தில் பதியவும், தலபுராணங்கள் உறுதுணை புரிகின்றன. சைவ சமய இலக்கியங்களில், சிவபெருமானைப் பற்றி எழுதப்பட்ட தலபுராணங்களில் தனிச்சிறப்பு வாய்ந்த, முக்கண் புராணம் எனப் போற்றப்படும் திருவிளையாடல் புராணம், கந்த புராணம், மற்றும் திருத்தொண்டர் புராணம் பற்றிய சில செய்திகளை

இக்கட்டுரையில் காண்போம்.

திருவிளையாடல் புராணம்

சிவபெருமானின் முக்கண்களில், பரஞ்சோதி முனிவரால் எழுதப்பட்டத் திருவிளையாடல் புராணம் அவரது இடக் கண்ணாகப் போற்றப்படுகிறது. இப்புராணம், மீனாட்சி அம்மை அரசாளும் மதுரை மாநகரின் தலபுராணமாகும். மதுரை சற்குருவிடம் ஞானோபதேசம் பெற்ற பரஞ்சோதி முனிவரின் கனவில், மீனாட்சி அம்மைத் தோன்றிச் சிவபெருமானார் நிகழ்த்திய திருவிளையாடல்களைப் பாடுமாறு பணித்தாராம். அம்மையின் அன்புக் கட்டளைக்கு அடிபணிந்து, அவர் ''சத்தியாய்'' என்று மக்கள் மொழியில் தொங்கி, சிவபெருமான் நிகழ்த்திய 64 திருவிளையாடல்களையும் மதுரைக் காண்டம், கூடற்காண்டம், திருவாலவாய் காண்டம் என்ற மூன்று காண்டங்களாக, 3363 செய்யுள்களில் பெருங்காப்பியமாகப் பாடி, அருள்மிகு சொக்கநாதர் சன்னதியில் அரங்கேற்றினார்.

மதுரைக்காண்டம் - 18 படலங்கள்
கூடற்காண்டம் - 30 படலங்கள்
திருவாலவாயக் காண்டம்-16 படலங்கள்

திருவிளையாடற் புராண உறுப்புக்கள் - காப்பு, வாழ்த்து, நூற்பயன், கடவுள் வாழ்த்து, பாயிரம், அவையடக்கம், திருநாட்டுச்சிறப்பு, திருநகரச் சிறப்பு, திருக்கயிலாயச் சிறப்பு, புராண வரலாறு, தலச்சிறப்பு, தீர்த்த சிறப்பு, மூர்த்தி சிறப்பு, பதிகம் ஆகியவையாகும்.

''சக்தி யாய்ச்சிவ மாகித் தனிப்பர-முத்தி யான முதலைத் துதிசெயச்
சுத்தியாகிய சொற்பொருள் நல்குவ-சித்தி யானைதன் செய்யபொற் பாதமே'' (காப்பு)

சிவனே சக்தியாகவும், சிவமாகவும் பிரிந்து நின்று, முத்திப்பேறு அருளும் முதல்வனாகத் திகழ்கிறான் என்பதே இக்காப்பின் பொதருள். இது தவிர, நூலாசிரியர் தமிழ் மீது கொண்ட காதலினால், வேதங்கள் பூசித்து அடைத்திருந்த

திருமறைக்காட்டு சிவாலயத்தின் கோபுர வாயிற்கதவைத் திருநாவுக்கரசரின் தமிழே திறக்கச் செய்தது என்ற செய்தியைப் பின்வரும் தனது செய்யுளில் அழகாகக் கூறுகிறார்.

''மறைக் கதவினைத் திறந்ததும், கன்னித் தண்டமிழ்ச் சொல்லோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்''

கந்தபுராணம்

தமிழ்மொழியில் அழகென்ற சொல்லுக்குப் பொருளானவனாகிய முருகபெருமான் மேல், காஞ்சிபுரம் குமரகோட்டத்தில் அர்ச்சகராகத் திகழந்த, கச்சியப்ப சிவாச்சாரியாரால் இயற்றப்பட்டது. கந்தபுராணம், சிவபெருமானின் முக்கண்களில், அவரது நெற்றிக்கண்ணாக இந்த நூல் கருதப்படுகிறது. முருகபெருமானுக்காக எழுதப்பெற்ற புராணங்களிலேயே, கந்தபுராணம் தலைசிறந்தது. முருகபெருமானே, திகடசக்கர என்று அடி எடுத்துத்தந்து, கச்சியப்ப சிவாச்சாரியர் இந்தப் புராணத்தை எழுதியிருக்கிறார். சைவ வழிபாடும் முருக வழிபாடும் ஒன்றே என்னும் தத்துவம் இந்த நூலில், கீழ்க்கண்ட பாடல் வரிகளின் மூலம் விவரிக்கப்பட்டுள்ளது.

''அருவமும் உருவம் ஆகி-அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய நின்ற சோதிப்-பிழம்பதோர் மேனி யாகிக்
கருணைசேர் முகங்கள் ஆறும்-கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒரு திரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய''

வடமொழி ''சுகாந்த'' த்தில் ஒரு பகுதியான சங்கர சங்கிதையில் கூறப்படும் ஆறுமுகக் கடவுளின் வரலாறு இந்நூலில் விளக்கப்பட்டுள்ளது. சிவபெருமானின் நெற்றிக்கண்ணிலிருந்து உதித்த ஆறு பொறிகளே ஒன்று சேர்ந்து ஆறுமுகன் ஆவதும், அவர் கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப் பெறுவதும், கந்தன் சூரனை அழிப்பதும், ஆகிய பொருட்சுவை மிக்கச் செய்திகள் பாடல் வடிவில் தொகுக்கப்பட்டுள்ளன. சங்கர சங்கிதையில் 7 காண்டங்கள் உள்ளன. அவற்றுள் முதல் ஆறு காண்டங்களாகிய சம்பவ காண்டம், அசுர காண்டம், மகேந்திர காண்டம், யுத்த

காண்டம், தேவ காண்டம், தட்ச காண்டம், கச்சியப்ப சிவாச்சாரியாரின் படைப்பில் உள்ளன. கந்த புராணம் இலங்கையில் அதிகமாகப் பயிலப்பட்டு வருவதாகத் தமிழறிந்த பெரியோர்களால் கூறப்படுகிறது.

திருத்தொண்டர் புராணம்

பக்தி என்பது உணர்வு மட்டுமே என்று கருதப்பட்டிருந்த போது, வார்த்தைகளால் கூட படிப்பவர்களுக்கு அவ்வனுபவத்தை தர இயலும் என்பதற்குச் சான்றாக அமைவது, தொண்டை நாட்டில் குன்றத்தூரில் பிறந்த சேக்கிழாரால் இயற்றப்பட்டிருக்கும் திருத்தொண்டர் புராணம் இவரது இயற்பெயர் அருண்மொழித் தேவர். சிவபெருமானின் முக்கண்களில், இப்புராணம் சிவபெருமானின் வலக் கண்ணாகக் கருதப்படுகிறது. பன்னிரு திருமுறைகளுள், இப்புராணத்தைச் சேக்கிழார் புராணம், பெரியபுராணம் என்றும் கூறுவர். சோழ மன்னரின் வேண்டுதலுக்கிணங்கிச் சேக்கிழார் தில்லைக்குச் சென்று நடராச பெருமானை வணங்கி நின்ற போது, சிவபெருமான் உலகெலாம் என்று அடி எடுத்துக்கொடுக்க, அதை வைத்துத் திருத்தொண்டர் புராணத்தின் வாழ்த்தை இயற்றியனாராம்.

''உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்-நிலவு லாவிய நீர்மலி வேணியன் அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்-மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்'' (வாழ்த்து) தில்லையில் சோழ மன்னரின் முன்னிலையில் இந்நூல் அரங்கேற்றப்பட்டது. சேக்கிழாரை பெருமைப்படுத்தும் வகையல் நூல் அரங்கேறியவுடன், அவரையும், அவர் இயற்றிய பெரியபுராணத்தையும் கரி மேல் ஏற்றித் தானும் பின் தொடர்ந்து கவரி வீசி வீதிகளில் ஊர்வலமாக சோழ மன்னர் அழைத்துச் சென்று, தொண்டர் சீர் பரவுவார் என்ற பட்டத்தையும் அளித்து சிறப்பித்தாராம். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை தமது சேக்கிழார், பிள்ளைத்தமிழ் என்னும் நூலில் பக்தி சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி என்று சேக்கிழாரைப் போற்றுகிறார். திருத்தொண்டர் புராணம், பெருங்காப்பிய இலக்கணங்கள் பலவற்றைக் கொண்டது. இப்புராணம், அக்காலத்தில் வழக்கில் இருந்த ''யாப்பு'' முறையில்

அமைக்கப்பட்டது. இதில் சிவனடியார் வரலாறுகளைத் தொகுத்துத் தந்த சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் தனது காப்பியத் தலைவராகச் சேக்கிழார் கொண்டுள்ளார். கயிலாய மலையின் இயற்கை அழகையும், அங்கு வீற்றிருக்கும் சிவபெருமானின் திருக்கோலத்தை உபமன்யு முனிவர் தனது சீடர்களுக்கு உரைக்கும் போக்கில் இக்காப்பியம் தொடங்குகிறது. ''தம்பிரானைத் தன் உள்ளம் தழீ இயவன்-நம்பி யாரூரான் நாம் தொழும் தன்மையன்'' திருக்கூட்டச் சிறப்பில், சைவ அடியார்கள் புறத்தூய்மையும், அகத் தூய்மையும் மிக்கவர்கள் என்பதைப் ''பூசுநீறு போல் உள்ளும் புனிதர்கள்'' என்னும் அடியில் குறிப்பிடுகிறார். மேலும் சைவ அடியார்கள் இன்ப துன்பங்களால் பாதிப்பு அடையாதவர்கள். பொன் பொருளில் நாட்டம் இல்லாதவர்கள் என்பதைக் கீழ்காணும் அடிகளின் மூலம் நமக்கு தெரியவருகிறது.

முடிவுரை

தமிழ்நாட்டில் புராணங்கள் என்று வழங்கபபடும் நூல்களுள் முதலிடம் பெறுபவை திருத்தொண்டர் புராணம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம். இம்மூன்று புராணங்களும் சிவபெருமானின் கருணைப் பெருவெள்ளத்தினை உலகத்தார் எளிதில் பெற்றுய்யுமாறு வாரி வழங்குகின்றன. பல்வேறு சமயங்களைப் பற்றிய குறிப்புக்களையும், தமிழ் இலக்கிய வரலாற்றின் செழுமையையும், புராணங்களைத் தவிர பழந்தமிழ் நூல்களின் மூலமும் நாம் அறிய வருகிறோம். புலமை மிக்க சைவப் பெருங்கவிகள தங்கள் அளப்பரிய புலமையைத் தாம் இயற்றிய தலபுராணங்களில் பதிவு செய்துள்ளனர். விளக்கம் காணப்படாத எண்ணற்றப் புதிர்களுக்கு இவர்கள் விளக்கம் கண்டறிந்துள்ளனர். பழந்தமிழர்கள் சமய பற்று கொண்டவர்களாக இருந்தனர் என்பதையும், எல்லாவற்றையும் கடந்து நிற்கும் சிவபெருமானே சைவ சமய இறைவன் என்பதை உறுதிபடுத்தும் வகையில், சைவம் சிவனுடன் சம்பந்தமாவது என்னும் திருமூலர் வாக்குப்படி நூல்களின் மூலமும், புராணங்களின் மூலமும் அறிய வருகிறோம்.

67. வள்ளலார் வாழ்வும் வழிகாட்டுதல்களும்



தி.பிரகாசி மேரி
உதவிப்பேராசிரியர்
கோவிந்தம்மாள் ஆதித்தனார்
மகளிர் கல்லூரி
திருச்செந்தூர்

முன்னுரை

ஆன்மீகத்தின் பிறப்பிடம் நம் பாரதநாடு என்பது எவ்வளவு உண்மையோ அதே அளவு உண்மையானது பாரத ஆன்மீகத்துக்குத் தாயகம் தமிழகம் என்பதுமாகும். சமய அரங்கிலே பக்தி உணர்வுக்குரிய இடம் வேறு எந்த உணர்வுக்கும் கிடையாது. தமிழகத்து சமய அரங்கில் தொன்றுதொட்டு இமாலய ஆளுமை கொண்ட சான்றோர்கள் வாழையடி வாழையாகத் தோன்றினார்கள்; நம் காலத்திலும் அத்தகு சான்றோர்கள் தமிழகத்தில் உண்டு. பெருமைக்குரியதமிழ் ஞானப்பரம்பரையில் 1823-1874 ஆகிய காலப்பரப்பில் தமிழகத்துச் சமய தத்துவ அரங்கை வளப்படுப்படுத்திய பெருமை வள்ளலார் என்று சிறப்பிக்கப்படுகின்ற இராமலிங்க சுவாமிகளுக்கு உரியது. வள்ளற் பெருமானின் வாழ்க்கை வரலாற்றின் வழி இவ்வுலக மக்களுக்கு அவர் கூறிச்சென்ற வாழும் வழிமுறைகளும் நெறிமுறைகளையும் சற்றே விளக்கியுரைக்கும் வகையில் இக்கட்டுரை அமைகின்றது.

சமூகச் சூழல் - வள்ளலாருக்கு முன்

(1) அடிமைநிலை

சாதி சமயப் பிளவுகளைப் பெரிதுபடுத்திப் பிரித்தாளும் சூழ்ச்சியில் வெற்றி கண்டு வெள்ளையராட்சி வேரூன்றி விட்டது. சுதந்திரம், தன்னாட்சி என்ற சொற்களெல்லாம் வழக்கிழந்து மறக்கப்பட்ட சொற்களாகிவிட்டன. தூக்கத்தையே வரமாகப் பெற்ற கும்பகருணனைப் போல அடிமைப்

பெருந்துயரிலேயே தன்னுணர்வின்றிக் கிடந்தது பாரத சமுதாயம்.

(2) மனநிலை

மனவளம் தரும் உளவியல் வாழ்க்கை எப்படி இருந்தது? உழுவித்து உண்போரும், எப்படியோ இந்தச் செல்வத்தைப் பெற்றோரும் தவிர அரிச்சுவடிப் படிப்புக்கூட பாமரர்க்கு இல்லை. படிக்க வேண்டும் என்ற உணர்வுகூட இல்லாமல் வெறும் உழைப்புப் பொம்மைகளாய் உலவிக் கிடந்தனர் மக்களில் பெரும்பாலோர்.

(3) பொருளாதாரம்

ஆதாரமாகும் பொருள் அடகு வைக்கப்பட்டு விட்டதால் பொருளாதார அடிப்படைக்கு அன்றைய அடிமைச் சமுதாயத்தில் இடம் இல்லாமல் சுத்த சூனியங்களாக வாழ்ந்தனர் நம்மக்கள். இதுதான் வள்ளலார் தோன்றுவதற்கு முன் இருந்த தமிழ்ச்சமுதாயம். பெண்ணுக்கு ஏது வெட்கம் என்று கேள்வி எழுப்பியவர்களும் தத்துவச் சொற்களை வைத்துக் கொண்டு வீண் வாதமாடியே வென்றவர்களும் பிறப்பு வழிச்சாதி என்று ஆசாரம் பேசியவர்களும் தான் அன்றைய சமய மத, அரங்கில் தலைமை தாங்கி அடிமைகளிடையே தலைமை தாங்கிகளாய் இருந்தார்கள்.

வள்ளலாரின் பிறப்பு

மருதூர் இராமையா பிள்ளைக்கும் சின்னம்மையாருக்கும் ஐந்தாவது மகனாக 5.10.1823-ல் பிறந்தார். இராமலிங்க அடிகளார், வீட்டுக்குள் தளர்நடையிட்டு வளரும் பிள்ளை ஏழு எட்டு வயதில் தெருவில் விளையாடும் பிள்ளையாக விளங்குவதே பொதுவிதி. ஆனால் விளையாட்டுப் பிள்ளைப் பருவத்திலேயே வள்ளற் பெருமானின் வழி வேறாகக் காட்சியளிக்கிறது. ஒன்பதாம் வயதிலேயே அம்பலவானரால் ஆட்கொள்ளப்படுகிறார். இதன் காரணமாகத் தம்பெயருக்குரிய தலைப்பெயரெழுத்தாகத் தம் தந்தையார் பெயரின் முதலெழுத்தை அடிகள் பதிக்கவில்லை. சிதம்பரம்

இராமலிங்கம் என்றே அம்பலவாணர் திருத்தலப் பெயரையே முன்னமைத்தார்.

அம்பலவாணரே தந்தை

அம்பலவாணரே தந்தை என்று உறவு கொண்டாடிய வள்ளலார் உலகியலில் உறவினர் எவரையும் அகமணத்தில் ஏற்க விரும்பவில்லை.

''தந்தையாய் மனை மக்களென்று உலகச்
சழக்கிலே இடர்உழக்கும் என் மனந்தான்
கந்த வாதனை இயற்றுகின்றது காண்
கடையனேன் செயக்கடவ தொன்றறியேன்
எந்தையே எனை எழுமையும் தொடர்ந்த
இன்ப வெள்ளமே என்உயிர்க் குயிரே
சிந்தை ஓங்கிய ஒற்றிஎம் தேவே
செல்வமே பரசிவ பரம்பொருளே''(1157)

இப்பாடல் இளமைப் பருவத்திலேயே இராமையபிள்ளையே தம் தந்தை என்பதை அவர் மனம் துறந்துவிட்டது. பரசிவப் பரம்பொருளுக்கே தந்தையின் கடமை என்று வற்புறுத்துகிறார் வள்ளலார்.

வள்ளலார் கற்ற கல்வி

வள்ளலார் தம் தமையனாரிடம் ஆரம்பக்கல்வி பெற்றார். கல்விச் சாலைகளில் அவர் சிக்கவில்லை. தமையனார் சபாபதிப்பிள்ளை தம் தம்பிக்கு நிகண்டு முதலியன கற்பிக்க முயன்று தோற்றார். பின்னர் தம் ஆசிரியராகிய காஞ்சிபுரம் மகாவித்துவான் சபாபதி முதலியாரிடம் கற்குமாறு ஏற்பாடு செய்தார். இரண்டு சபாபதிகளிடமும் இராமலிங்கர் கற்றது ஏதுமில்லை என்பது மிகையாகாது. ஆனால் அருட்பெருஞ்சோதி ஆண்டவராகிய சபாபதி உள்ளூரக் கற்பித்த கல்வி இராமலிங்கரை உருவாக்கியது. வள்ளலாருக்கே உரிய வழியில் கலைஞானம் பெறுவிக்கும் பொறுப்பை ஆண்டவனே ஏற்றுக் கொண்டான். வள்ளலார் பெற்றது ஓதாமல் உணர்ந்த கல்வி இதனை,

''ஓதி உணர்ந்தவ ரெலாம்
எனைக் கேட்க எனைத்தான்
ஓதாமல் உணர்ந்து உணர்வாம்
உருவுறச் செய்த'' *(4112)* என்றும்,

''எட்டிரண்டு என்என்றால் மயங்கிய என்றனக்கே
எட்டாத நிலையெல்லாம் எட்டுவித்த''

என்றும் இறைவனாகிய குருவை வள்ளலார் குறித்திருக்கிறார்.

சமுதாய ஒளிவிளக்கு

நாடும் மக்களும் அயலார் ஆட்சியில் உழன்று தம் நாகரிகம் பண்பாடுகளை மறந்து வாழ்ந்த காலத்தில் மிகச் சிலரே நமக்கே உரிய கல்விச் செல்வத்தைப் பாதுகாத்துப் பண்பாட்டை ஓம்பினார்கள். ஆனாலும் புதுமை காணவோ புரட்சியுணர்வு தழைக்கவோ அவர்கள் பணியால் எவ்வகைச் சாதனையும் இல்லை. வள்ளலார் போக்கு அந்த வழியிலே அமையவில்லை. பழமரபு கெடாமல் புதுநெறிக் காட்டி மலர்ச்சி பெறும் ஆக்கவழி வள்ளலாரால் வகுக்கப்பட்டது. இறைவனின் அருளால் தெளிவு பெற்றுவிட்ட வள்ளலாருக்குத் தம் காலத்துச் சமுதாயத்தின் அவலத்தைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அருளானராகையால் வேதனைப்பட்டிருக்கிறார். ஒரு தலைமுறைக் காலப்பரப்பில் அவர் உள்ளம்பட்ட பெருவேதனையைத்தான் பிள்ளைப் பெருவிண்ணப்பப் பாட்டிலும் சத்தியப் பெருவிண்ணப்பத்தில் உரைநடையிலும் வள்ளலார் பதிவு செய்திருக்கிறார்.

புதிய ஆட்சிமுறை

காலத்தின் கட்டாயத்தை உணர்ந்த வள்ளலார் சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தை உருவாக்கினார். பல்வேறு சமயங்கள் தத்துவங்கள் சூழலிலேயே வாழ்ந்தாலும் பாரதத்தின் அரசியல் அடிமை வாழ்வை வள்ளலாரால் மறக்க முடியவில்லை. இந்த நாட்டில் எத்தகைய ஆட்சி விளங்க வேண்டும் என்பதை,

''அச்சந் தவிர்த்தே அருளிற் செலுத்துகின்ற

விச்சை அரசே விளங்கிடுக- நச்சரவம்
ஆதிக் கொடிய உயிர் அத்தனையும் போய் ஒழிக
நீதிக் கொடிவிளங்க நீண்டு'' (5617)

என்றும்,

''கருணை இலா ஆட்சிகடுகி ஒழிக
அருள்நயந்த நன்மார்கள் ஆள்க-தெருள்நயந்த
நல்லோர் நினைத்த நலம்பெறுக நன்றுநினைத்து
எல்லாரும் வாழ்க இசைந்து'' (5618)

என்றும் அவர் பாடியதை நோக்க வேண்டும். தாம் உருவாக்கிய கொள்கைகள் உருவம் பெற்று உலவுவதற்கு எண்ணம் சொல் செயல் ஆகிய மூன்று வகையிலும் வள்ளலார் செயல்பட்டுள்ளார்.

சாதிகளைச் சாடியவர்

சமய கருத்துக்களையும், உணர்வுகளையும் மக்களிடையே பரப்புவதற்கு என்றே தோன்றியவை திருமடங்கள். ஆனால் நம் மடாலயங்கள் சமயப்பணி மட்டுமே செய்கின்றன என்று சொல்ல முடியுமோ? இது சம்பிரதாயம் என்றும் தொன்று தொட்டுவரும் வழக்கம் என்றும் சத்தில்லாத வாதங்களைச் சொல்லிச் சமய மடங்களைச் சாதி மடங்களாக ஆக்கி வைத்திருக்கிறோம் என்பதை மறைப்பதில் பயனில்லை. சாதிக் கொடுமையால் தனிவாழ்க்கைகள் பல சரிந்தன. வள்ளலாரின் தொண்டுக்கும் சாதிக்கொடுமை எதிரணி வகுத்தே நின்றது. பல சமயங்களில் சாதி சமய தோத்திர சாத்திரக் கோளாறுகள் வள்ளலாரின் சமரசப் பணிக்குத் தடையாக இருந்தன.

காலத்துக்குக் கட்டாயம் வேண்டிய கருத்துக்களைத்தான் வள்ளலார் வகுத்து விரித்தார். அவருடைய கொள்கையைப் பற்றி அறிந்த சமுதாய தலைவர்கள் அவற்றைச் சீரணிக்க முடியாமல் நேராகவும் மறைமுகமாகவும் எதிர்த்தனர். கருணை மரபில் வந்தவர் வள்ளலார். அவர் சாதிப்பெயரைச் சொல்லியே மறுப்பியக்கம் நடத்தியது. அன்றைய சமுதாயம் அவருக்குக் கருத்துவளம் இருந்தது. அதைச் செயல்படுத்தச் சங்கமும்

இருந்தது. ஆனால் சமய அரங்கின் இருளும் சாதிப்பிரிவின் கொடுமையும் தான் அக்காலத்தில் வெற்றிக்கொடி தாங்கின.

உயிர்களிடத்தில் இரக்கம்

உயிர் இரக்கமாகிய சீவகாருண்யமே வள்ளலார் வழியின் உயிரோட்டம். பிறரிடத்தும் பிறவிடத்தும் காட்டும் அருள் உணர்வு வெறும் உள்ளக்கசிவு மட்டுமே என்று வள்ளலார் கருதவில்லை. ஆன்ம அனுபவ முதிர்ச்சிக்கும் முழு வெற்றிக்கும் உயிர்களிடத்துக் காட்டும் இரக்கமே காரணமாகும்.

''கருணையே வடிவாய்ப் பிறர்களுக்கு அடுத்த
கடுந்துயர் அச்சமா திகளைத்
தருணநின் அருளால் தவிர்த்து அவர்க்கின்பம்
தரவும், வன் புலைகொலை இரண்டும்
ஒருவிய நெறியில் உலகலொம் நடக்க
உருற்றவும் அம்பலந் தனிலே
மருவிய புகழை வழுத்தவும் நின்னை
வாழ்த்தவும் இச்சைகாண் எந்தாய்'' *(3407)*

சீவகாருணிய ஒழுக்கம் என்ற நூலிலும் திருவருட்பா பாடல்களிலும் சீவகாரணியம் பற்றிய குறிப்புகளும் விளக்கங்களும் ஏராளமாய் உள்ளன. சன்மார்க்க தத்துவத்தின் மையக்கருத்தே சீவகாருணியம் தான் என்பது உண்மை.

முடிவுரை

சிலவாழ்நாட்களும் பல பிணிகளும் சிற்றறிவும் கொண்டது மனித வாழ்வு. அதனை எச்சரிக்கையோடு பேணிப் போற்ற வேண்டும். ஒரு கண நேரம் கூட வீணடிக்கக் கூடாது. எந்தக் கணத்திலும் வாழ்வு முடிந்துவிடக் கூடும். எனவே வாழும் முறைக்குத் திட்டம் கட்டாயம் வேண்டும்.

குறிப்பிட்ட குழப்பச் சூழலில் குறிக்கோள் நெறியில் உறுதிகாட்டிச் சமுதாயப்பணி செய்வே பிறப்பவர்களின் தோற்றத்தை அவதாரம் என்று குறிப்பது இந்த நாட்டு ஞான பரம்பரையின் மரபு. அந்த மரபிலே கணிந்ததால் வள்ளற்பெருமானை அவதாரச் செம்மல் என்று மதிப்பது பொருத்தமே ஆகும்.

６௮. சித்தரின் சிறப்புகளும் வழிபாட்டு முறைகளும்

த.கிறிகூடி
முனைவர்பட்ட ஆய்வாளர்
இலக்கியத்துறை
தமிழ்ப்பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்

முன்னுரை

பூசை செய்யும் முறைகள் மனிதருக்கு மனிதர் வேறுபாடாய் இருக்கலாம். எந்த வகைப் பூசையாக இருந்தாலும் மணம் மிக்க மலர்கள் இடம் பெற்று இருக்கும். குறிப்பாக மல்லிகை, செண்பகம், முல்லை, பன்னீர், நாகதாழி என்ற நாகமலர், வில்வம், தாழம்பூ போன்றவை சித்தர்கள் பயன்படுத்தினர்.

சித்தர்கள் மனித சமுதாயத்திற்குச் செய்து இருக்கும் தொண்டுகள் அளவிடற்கு அரியது மருத்துவம், யோகம், கல்பம் என்று பல துறைகளிலும் மனித சமுதாயம் இன்புற்று வாழ்வதற்காகவே சித்தர்கள் காடுகளில் காணப்படுகின்றனர். காடுகளில் கிடைக்கும் மூலிகைகளைப் பயன்படுத்தி மனிதர்களுக்கான நோய்களைப் போக்குவதற்குச் சித்த மருந்துகளைக் கண்டறிந்து வைத்தனர்.

சித்தர்களின் சிறப்பு

விஞ்ஞான முறையும், விஞ்ஞான ஆராய்ச்சியும் தமிழகத்துக்குப் புதியன அல்ல. ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்தில் விஞ்ஞானிகள் பலர் வாழ்ந்திருந்தனர். அவர்கள் மனித சமுதாயத்திற்குச் செய்திருக்கும் நன்மை அளவற்றது. அவர்கள், மக்கள் அனைவரும் நோய் நொடியில்லாமல் வாழ்வதற்கான, இன்பத்துடன் வாழ்வதற்கான, துன்பங்களிலிருந்து கரையேறுவதற்கான, வழிகள் பலவற்றைக் கண்டறிந்தனர்.

அவர்கள் கண்டறிந்த உண்மைகள் பலவற்றை ஆராய்ந்து தெளிந்தனர். அவர்கள் கண்டறிந்த உண்மைகளை மனித சமுதாயம் அனுபவிக்கும்படி செய்தனர். அவர்கள் கண்டறிந்த விஞ்ஞான ஆராய்ச்சியையும் பலனையும் மனித சமுதாயம் இன்னும் அனுபவித்துக் கொண்டு வருகிறது.

இன்றைய விஞ்ஞானிகளும் மனித சமூகம், உலகம் முன்னேறுவதற்கான பல உண்மைகளைக் கண்டுபிடித்துத் தான் இருக்கின்றனர். ஆயினும் மனிதப் பூண்டே இல்லாமல் நாசம் ஆக்கி அழித்துவிடக்கூடிய உலக நாகரித்தையே பாழாக்கிவிடக் கூடிய உலகத்தையே சுட்டுச் சாம்பலாக்கி விடக்கூடிய, கொடுமையான அழிவுச் சக்திகளையும் கண்டு பிடித்திருக்கின்றனர். இத்தகைய சக்தியுள்ள எறிகுண்டுகள், வெடிகுண்டுகள் முதலியன செய்யப்பட்டுளளன. இன்றைய விஞ்ஞானிகளின் இத்தகைய கண்டுபிடிப்புகளால் இன்றைய உலகம் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. இதனால் உலக மக்களிடையே அச்சம், நடுக்கம், ஒருவரை ஒருவர் நம்பாமை வாழ்விலே அவநம்பிக்கை, எப்பொழுது என்ன நடக்குமோ என்ற பீதி, இவை பிறந்து பேயாட்டம் ஆடுகின்றன.

பண்டைத் தமிழகத்து விஞ்ஞானிகள் மனித குலத்தின் வாழ்வுக்காகவே உழைத்தார்கள். ஆதலால் அவர்கள் மக்களையோ, உலகத்தையோ, இயற்கை பொருள்களையோ நாசமாக்கக்கூடிய தீய சக்திகளைக் கண்டுபிடிக்கவில்லை. இவைகளைக் கண்டுபிடிப்பதில் தங்கள் அறிவையும், காலத்தையும் செலவிட்டு வீணாக்கவில்லை. சமூகம் மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கான துறையிலேயே அவர்கள் உழைத்தார்கள் காலங் கடத்தினார்கள், கருத்தைச் செலுத்தினார்கள். அவர்கள் தாங்கள் உழைத்த, முயன்ற துறையில் வெற்றியும் கண்டனர்.

தமிழ்நாட்டுப் புலவர்களிலே பலருக்குச் சித்தர் நூல்களைப் பற்றித் தெரியாது. பெரும்பாலான புலவர்கள் சொல் நயம் பொருந்திய பாடல்களைத் தான் இலக்கியம் என்று பாராட்டுவார்கள். இலக்கணத்தைப் பற்றிக் கவலைப் படாமல்

பொது மக்களுக்குப் புரிய வேண்டும் என்னும் கருத்துடன், வழக்கு சொற்களையும் இணைத்துப் பாடப்பட்டிருக்கும் பாடல்களைப் படிக்கும் வழக்கமோ, சொல்லப்படும் பொருளைக் கருதியாவது அவற்றைப் போற்றும் வழக்கமோ பெரும்பாலான தமிழ்ப் புலவர்களிடம் இல்லை. சித்தர்களின் நூல்கள், பாடல்கள், புலவர்கள் போற்றும் நடை நயம் பொருந்தியவை அல்ல.

பூசை முறை

மேருவையும், சிறிசக்கரத்தையும் பூசை செய்பவர்கள் சாபம் கொடுத்தால் இந்த உலகமே தீயால் வெந்துவிடும். மேரு பூசை செய்வதற்குக் குரு முகமாக ஒப்புதலும் சித்தரின் உபதேசம் என்ற தீட்சையும் வேண்டும். தெரியாதவர்கள் தீட்சை பெறாதவர்கள் மேருபூசை செய்யக்கூடாது. மேருபூசை செய்பவர்கள் வாய்திறந்து உபதேசம் சொன்னால் வாசசித்தியும் கவகை சித்தியும் கைவரும்.

வாலைத் தாயின் மூன்றெழுத்து அஉம் எனும் பிரணவம் ஆகும். பிரணவ மந்திரமாகிய அஉம் எனும் மந்திர உச்சாடனையால் வாலைத்தாயை வணங்கி பூசை செய்து, அஉம் திரிபுர சுந்தர்யை நமக எனும் எட்டெழுத்தை உச்சாடனம் செய்து பூசை செய்து அஉம் யாமனா தேவி நமக என்றும் யாமனயையும் பூசை செய்ய வேண்டும்.

வாலைக் குமரியாகிய வாலைத் தாயுமானவள் குடிகொண்டு இருக்கும் வீடே மனித உடல் வாலைத் தாயே குண்டலினித்தாயே ஆனாள் உடம்பின் மையத்தில் ஆதியந்தமாகிய இடத்தில் இருக்கும் வாலைத்தாயானவள் சுசும்னா நாடி எனப்படும் இருநாடியாகிய சுழுமுனை நாடி வழியாக மூலதாரத்தை விட்டு எழுந்து ஆறு ஆதாரச் சக்கரங்களாகிய சுவாதிட்டானம், மணிப்பூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்கினையையும் கடந்து சககுரதனத்தில் பீடம் கொள்வாள். வாலைத் தாயான குமரியானவள் பாதி நிலாவைத் தன் தலையிலே சூடியிருக்கும் பத்து வயதே நிரம்பிய என்றும் இளமை குன்றாத குமரியாவாள்.

''வாமியிவள் மர்மம் வைத்துப் பூசை பண்ண
மதியுனக்கு வேணுமடா அதிகமாக
காமிவெகு சாமிசிவ காமரூபி
காணரிது சிறுபிள்ளை கன்னிகன்னி''

வாலைக் குமரியைப் பூசை செய்வதற்குத் தெளிந்த புத்தி வேண்டும். சிவன் மேல் காமங் கொண்ட இந்த பத்து வயதுக் கன்னியை அறிந்து கொண்டால் சித்தராகலாம். வாலைக் கன்னியைத் தெரிந்து கொண்டாலும் மனம் அடக்க கற்றுக் கொள்ள வேண்டும். இக்கன்னியைப் பூசை செய்ய வேண்டும் என்று உலகோரிடம் சொன்னால் சிரிப்பார்கள். காமம் அடங்கிய சித்தனுக்கே வாலைக்குமரி தன் உருவத்தைக் காட்டுவாள்.

குண்டலினித் தாயானவள் மேலேழுந்து வாலைப் பீடமாகிய உச்சந்தலையில் அமர்வது என்பது எல்லோர்க்கும் கிடைக்காது. விட்டகுறை தொட்ட குறையாகவும் வரலாம். கிடைக்கக் கூடாது என விதி இருந்தால் எவ்வளவு முயற்சிகளும் வீண்தான். வாலைத் தாயாகிய குண்டலினிக் குமரியின் அருமை பெருமைகளைப் பக்தியில்லார்க்குச் சொல்ல கூடிய வாலைக்குமரியாகிய குண்டலினித் தாயின் பூசை செய்து தான் பதினெட்டுச் சித்தர்களும் சித்தர் ஆனார்கள்.

வாலைக்குமரி எனும் குண்டலினிக் குமரியை பூசை செய்யும் ஆண்களும், பெண்களும் கடுமையான பிரம்மச்சர்ய விரதம் மேற்கொள்ள வேண்டும். குண்டலினிக் குமரியானவள் கொஞ்சிப் பேச ஆரம்பித்து விட்டால் காமமும் தலைவிரித்தாடும். எனவே குண்டலினித் தாயனவள் எழுச்சி பெறும் காலங்களில் காமத்துக்கும் உடல் உறவுக்கும் முக்கியத்துவம் கொடுத்தால் காயசித்தி என்ற பருஉடல் சித்தி கிடைக்காது.

வீணாசை கொண்டு திரிய தேயுது
மெய்யல்ல பொய் வாழ்வு பொய்க்கூடு
காணாத வாலையைக் கண்டு கொண்டாற்காட்சி
காணலா மாகாய மாளலாமே

வீணாக ஆசை கொண்டு அலைவதை விடுத்து வாலையைக் கண்டு ஆகாயத்தை ஆளக்கூடிய சக்தியைப் பெற வேண்டும் என்பதாம். சித்தர்களின் பெண் தெய்வம் தான் வாலை. நயமான சித்தர்களுக்கெல்லாம் வாலைத்தான் தாயாவாள். எனவே வாலையைப் பூசித்தால் சித்தர்கலாம் என்பதாம். பருப்பு வடை, தவல் வடை, உளுந்த வடை, தோசை, அப்பம், பால், மாம்பழம், பலாப்பழம், வாழைப்பழம், தேங்காய், வெல்லம், வெற்றிலை, களிபாக்கு, சீவல், சுண்ணாம்பு, நெய் வேத்தியம், மல்லிகை, செண்பகம், கதம்பம், பன்னீர்ப்பூ, கத்தூரி, புனுகு, சாம்பிராணி ஆகியவை வாலைப் பூசைப் பொருட்களாகும்.

''வறந்திட்ட வாலைக்கு வயதோகேளு
வளமாகப் பத்தாறு வயதுமாமே''

வாலைக்குமரிக்கு என்றுமே வயது பதினாறு தான். வாலைக்கு வயோதிகம் இல்லை. நரையில்லை, திரையில்லை, பிணியில்லை, மூப்பில்லை, சாக்காடு என்ற மரணமும் இல்லை. என்னும் பதினானவள்தான் இந்த வாலைக்கன்னி எனும் வாலைக்குமரி.

69. சித்தர்களும், சிவவழிபாடும்



சு.பேச்சிமுத்து
வரலாற்றுத்துறை உதவிப் பேராசிரியர்
காமராசு கல்லூரி
தூத்துக்குடி

முன்னுரை

ஆதிகாலத்தில் இருந்தே மனிதன் தெய்வங்களை வழிபட்டு வருகிறான். முதன்முதலில் மனிதன் தன்னைவிட பெரிய உருவத்தையும், இயற்கை சக்தியையும் கண்டு பயந்து அவற்றை வழிபடத் தொடங்கினான். இவ்வாறு ஏற்பட்டது தான் வழிபாட்டு முறைகள் ஆகும். இறைவன் என்பவர் ஒருவரே அவரை வழிபடும் முறைகள் தான் வேறுபடுகின்றன. வேறுபாட்டின் அடிப்படையில் தான் இந்துக்கள் கிறித்துவர்கள், முகமதியர்கள் எனப் பல வகையாகப் பிளவுப்பட்டு இருக்கின்றனர். வாழ்க்கை நெறிமுறைகளுக்குத் தேவையான பழக்க வழக்கங்கள் மற்றும் வழிபாட்டு முறைகள் ஆகியவற்றை மனிதனுக்கு கற்றுக் கொடுத்தவர்கள், சித்தர்களும், முன்னோர்களும் எனவே அவர்களையும் வழிபடத் தொடங்கினார். சித்தர்கள் மனிதனுக்கும், ஆதிகடவுளான சிவபெருமானுக்கும் இணைப்பு பாலமாகத் திகழ்கின்றனர். இவர்கள் மணி, மந்திரம், மருத்துவம் ஆகியவற்றின் மூலம் மனிதர்களை இறைசக்தியோடு இணைக்கின்றனர். சித்தர்கள் தங்களுடைய தவ வலிமை, பெரிய சக்திகளின் வாயிலாக இந்த உலகத்தையும், மனிதர்களையும் இயக்கி வருகின்றனர். இத்துணை அரிய சக்திகளைக் கொண்ட சித்தர்களையும் இறைவழிபாட்டு முறையினையும் காண்போம்.

சித்தர்கள்

சித்தர்கள் என்பவர்கள் சித்தத்தைச் சிவன்பால் வைத்தவர்கள், சித்துக்கள் செய்பவர்கள், சிவானுபூதி பெற்றவர்கள். இவர்கள் சிவத்துடன் கூடினமையால் பிறப்பு, இறப்பு அற்றுச் சிறப்புற்று என்றும் ஒன்று போலிருப்பர்.

சித்தர்கள் மல மற்றவர்கள் என்றும் அழியா விழுபேற்றினர். மலச்சார்பால் நிகழும் இருவினை மாசற்றவர்கள் என்பார் சி.எசு.முருகேசன். பொதுவாகச் சித்தர்கள் பதினெட்டு பேர் என்ற எண்ணிக்கையில் கூறுவதுண்டு. அகத்தியர், இடைக்காடர், உரோமமாமுனி, கமலமுனி, கூன்கண்ணர், கூர்மமுனி, கயிலாயநாதர், கொங்கனர், கோரக்கர், சட்டைமுனி, சுந்தரனார், திருமூலர், நந்தி, பிரமமுனி, பிண்ணாக்கீசர், போகர், மச்சமுனி, வாசமுனி என்போர் பதினெண் சித்தர்கள். இயேசுநாதர், முகமதுநபி ஆகியோரும் சித்தர்களே. பிற்காலத்தில் வந்த இராமலிங்க அடிகளாரும் ஒரு சித்தரே. சித்தர் திருமூலர் நமக்குத் தந்தருளிய நூல் திருமந்திரம். நமது உள்ளமே கோயில், உடல் ஆலயம், வாய் கோபுர வாசல், நம் உயிர் சிவலிங்கம், ஐம்புலன்களும் விளக்குகள் என்கிறார்.

பிற உயிர்களிடத்து அன்பு செலுத்த வேண்டும் என்பதனைத் தெளிவாக எடுத்துரைத்த திருமூலர் ''அன்பே சிவம்'' என்பதனைத் தெளிவுபடுத்துகிறார். அன்பின் வழியது உயிர்நிலை என்பார் திருவள்ளுவப் பெருந்தகையும். இறைவனை அர்ச்சிக்க ஒரு வில்வ இலை போதும். இறைவனைத் தன்னகத்தே கொண்ட பசுவுக்கு ஒரு கைப்பிடி புல்லேனும் கீரையேனும் தர வேண்டும். பசித்த ஏழைக்குத் தான் உண்ணும் போது ஒரு கைப்பிடி உணவு வழங்க வேண்டும். மற்றவர்களுக்கு இனிமை தரக்கூடிய இனிய சொற்களைப் பேச வேண்டும் என்ற எளிய நெறிமுறைகளைக் கூறியவர் திருமூலர். எளியோர்க்கு உதவுதலே இறைவர்க்கு நாம் செய்யும் இறைபணி என்கிறார் திருமூலர், கடவுள் மனிதனிடத்தில் உறைகின்றார். எங்கும் நிறைந்துள்ள இறைவன் நம் மனத்தில் பூரணமாக நிறைந்துள்ளார்.

மக்களுக்குப் பயன் அளித்தோர்

இறையைத் தேடுவதில் மட்டுமல்லாது மனிதனது உடலுக்கும் மருத்துவத்துறையில் பயனளிக்கும் சித்த மருத்துவத்தைத் தந்து சென்றவர்கள் சித்தர்கள். உணவு முறையே நோயற்ற வாழ்வைத் தரும் என்றனர். ஒரு வேளை உண்பவன் யோகி, இருவேளை உண்பவன் போகி மூன்று வேளை

உண்பவன் ரோகி. இதுவே சித்தர்கள் கூறும் அறிவுரை. இராமலிங்க அடிகளாரோ அரை வயிறு உணவு, கால், வயிறு, நீர், கால் வயிறு காற்று என்று உண்ணுதலையே அளவறிந்து உண்க என்றார்.

அட்டமாசித்துகள்

சித்தர்கள் எண் பெரும் பேறுகள் என்ற அசுடமா சித்துகள் கைவரப்பெற்றவர்கள். அவை, 1.அணிமா (நுண்மை), 2.மகிமா (பருமை), 3. இலகிமா (மென்மை), 4.கரிமா (விண் தன்மை), 5.பிராப்தி (விரும்பியதெய்தல்) 6.பிரகாமியம் (நிறைவுண்மை), 7.ஈசத்துவம் (ஆட்சியனாதல்), 8.வசித்துவம் (கவர்ச்சி) செம்பு பொன்னாவது போன்று மேனிலை எய்திய உள்ளத்தார் திருவருளால் திருவடிப்பேறு தெரிந்து பொருந்திய சிவப்பேற்றினராகி அட்டமாசித்துகள் கைகூடப் பெறுவர். சித்தர்கள் சித்துகளை தேவையற்ற காலங்களில் செய்து வீணாக்குவதில்லை. சிவபெருமான் மதுரையில் கல்யானைக்குக் கரும்பு கொடுத்து உண்ணச் செய்ததாகத் திருவிளையாடல் புராணம் கூறுகிறது. அப்பொழுது இறைவனே மாபெரும் சித்தனாக வெளிவந்ததாகக் கூறுகின்றனர். இயேசு நாதரும் கடலின் மீது நடந்து தனது சீடர்களையும் நடக்கச் செய்தார் என விவிலியம் கூறுகிறது.

அட்டகர்மங்கள்

முன்பு ஆன்மீகத்தில் இருந்தவர்கள் அசுடகர்மம் முதலில் படித்தனர். பின், அதைப்பயின்றனர். அசுட கர்மமாவது 1.மோகனம், 2.வசியம், 3.சுதம்பனம், 4.ஆகர்சணம், 5.உச்சாடனம், 6.பேதனம், 7.வித்வேடனம், 8.மாரணம் என்பர். இவற்றில் தேர்ந்தபின் இச்சக்திகளைத் துணை கொண்டு வனத்துக்குள் சென்று அவர்கள் தவம் இயற்ற ஆரம்பித்தனர். தமக்கு வேண்டியவற்றை ஆகர்சண சக்தி மூலம் பெற்றுக் கொண்டனர். துறவிகளின் ஆரம்ப நிலைக்கு உதவியாக ஏற்பட்டது தான் அசுடகர்மசித்துகள்.

மனமது செம்மையானால் மந்திரம் ஓத வேண்டாம் என்பது பெரியோர்கள் வாக்கு. யோக நிலைக்கு இரண்டு

பயிற்சிகள் அவசியம் தேவை. ஒன்று மனதை அடக்கப் பயில வேண்டும் (அல்லது) சுவாசத்தை நிறுத்திப் பழக வேண்டும். எங்கு மனம் ஒடுங்குகிறதோ அங்கு சுவாசமும் ஒடுங்கும். எங்கு சுவாசம் ஒடுங்குகிறதோ அங்கு மனமும் ஒடுங்கும் என்பார் சித்தர் மருத்துவர் சிறி மிசுடிக் செல்வம் சுவாமிகள்.

தமிழ் எழுத்துக்களால் வழிபாடு

தமிழ் எழுத்துக்களுக்கும், தெய்வீகத்திற்கும் மிகவும் நெருங்கிய தொடர்பு உண்டு எந்தெந்த எழுத்து உடலில் எந்த பாகத்திலிருந்து வெளிப்படுகின்றது. வாயில் எப்படி ஒலியாக வெளிவருகின்றது என்பதைத் தொல்காப்பியரின் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் விளக்கிக் கூறுகின்றது. தமிழ் ஒலிகளுக்குச் சக்தி அதிகமாக இருப்பதால் உலகின் பல்வேறு பாகங்களில் இருந்து சிவசித்தர்கள் இங்கு வந்து பின் தமிழ் கற்று மணி, மந்திர, ஔடதப் பாடல்களைப் பாடியுள்ளனர். 27 நட்சத்திரங்கள், 9 கிரகங்கள், 12 இராசி மண்டலங்கள் தமிழ் மந்திரங்களுக்குக் கட்டுப்பட்டவை. இவ்வாறு தமிழ் எழுத்துக்களால் ஆன மந்திரங்களால் சிவபெருமானைப் போற்றித் துதித்து வழிபடலாம் என்று கூறுகிறார் டாக்டர் சிறி மிசுடிக் செல்வம் சுவாமிகள்.

சித்தர்கள் கூறும் வழிபாடு

மணி, மந்திரம், மருந்து சித்தர்கள் வழிபாட்டின் முக்கியக் கூறுகள். நமசிவாய, சிவாயநம, ஓம் சிவசிவ ஓம் எனும் மந்திரங்களல் ஏதேனும் ஒன்றை ருத்ராட்ச மணியை அணிந்து குறித்த மணிப்பொழுதில் திருநீறு எனும் மருந்தை அணிந்து இறைவனை வழிபட்டால் போதும், ஆச்சார அனுட்டானங்கள் தேவையில்லை என்பது இவர்களது வாதம். அவரவர் செய்த வினையின் பயன்களை அனுபவித்துக் கழித்திடல் வேண்டும். ஆயிரம் மந்திரம், மருந்துகள், வழிபாடுகள் செய்ய முடியாததை அன்னதானம் செய்துவிடும். பசித்திருக்கும் ஏழைக்கு ஒரு பிடி அன்னம் வழங்குவது மேலான கடவுள் வழிபாடு அதுமட்டுமல்லாமல் நாய், பூனை, குரங்கு, அணில், ஆடு, மாடு, காகம், எறும்பு போன்ற உயிரினங்களுக்குப்

பழம், பிசுகெட், பொரி, அவல், மிட்டாய் போன்றவற்றை வழங்குவதும் அன்னதானம் போன்றதுதான்.

சிக்கல்கள் தீர சிறந்த செபம்

இலெமூரியா கண்டம் அழிவதற்கு முன்னாலேயே சிவவணக்கம் இருந்ததாக வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். நீங்கள் எந்த கோயிலுக்குப் போனாலும் சிவசிவ என போட்டிருப்பார்கள். மந்திரங்களில் செபிக்க எளிதானது சிவமந்திரம் தான். இது சம்பந்தமாகப் பல சிவனடியார்களை வேண்டிக் கொண்டதில் ஒரு எளிமையான மந்திரம் கிடைத்தது. அம்மந்திரம் தான் ஓம்சிவசிவ ஓம். இதற்குத் தீட்சை பெற வேண்டியதில்லை. சைவ உணவும் சீவ காருண்ய உணர்வு மட்டும் இருந்தால் போதும். மேற்படி ஓம்சிவசிவ ஓம் நல்ல பலனளிக்கும் என்பார் மருத்துவர் சிறி மிசுடிக் செல்வம் சுவாமிகள். தங்களுக்குச் சூட்சுமமாக நின்று உதவும் நண்பன் ஓம்சிவசிவஓம். எந்த வனத்தில் இருந்தாலும், எந்த மலையில் இருந்தாலும் எந்த கடலில் இருந்தாலும் எந்த இக்கட்டான நிலையில் இருந்தாலும் இம்மந்திரம் உங்களைக் காப்பாற்றும்.

முடிவுரை

கோயில் இல்லாத ஊரில் இருக்க வேண்டாம் என்பது பழமொழி. அதுபோல கோவில் இல்லாத ஊர் மக்கள் வாழ தகுதியற்ற ஊராகும். இன்றைய சூழ்நிலையில் சமூகத்தில் தெய்வ நம்பிக்கைகளும், ஆலயங்களின் எண்ணிக்கைகளும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. ஆனால் சித்தர்களின் சீவ சமாதிகளும், சித்தர்களின் அருளும் நிறைந்துள்ள கோயில்களில் தான் மக்களின் நியாயமான வேண்டுதல்களும், கோரிக்கைகளும் நிறைவேற்றுகின்றன. இதற்குக் காரணம் இந்த கோயில்களில் மட்டும் தான் வழிபாட்டு முறைகள், பூசை முறைகள், இதர விழாக்கள் போன்றவைச் சரியாகவும், ஒரே சீராகவும் நடைப்பெற்றுக் கொண்டு இருக்கின்றன. இவைகள் அனைத்துமே சித்தர்கள் காட்டிய வழிமுறைகள் ஆகும். எனவே தான் எண்ணற்ற கோயில்கள் இருந்தாலும் குறிப்பிட்ட சில கோவில்கள் மட்டுமே சிறப்பு பெற்ற கோவில்களாகத் திகழ்கின்றன.

70. திருத்தொண்டர் புராணம் - ஓர் ஒப்பாய்வு



அருட்கவி கு.இராமு
சென்னை

முன்னுரை

திருத்தொண்டு செய்தவர்கள் தமிழுக்குத் தொண்டு செய்தவர்கள் இறைவனுக்குத் தொண்டு செய்தவர்கள், அடியார்க்கு அமுது படைத்தவர்கள், சேவை செய்தவர்கள், தக்க சமயத்தில் உதவிகளைச் செய்தவர்களே அறுபத்து மூவர் ஆவார்கள்.

இவர்களில் சிலர் அந்தணர்கள், ஆதி திராவிடர்கள், அரசர்கள், குயவர்கள், வேற்று மதத்தைச் சுவைத்துத் திரும்பியவர்கள். இப்படிப் பற்பல பிரிவினரும் இதன்கண் உள்ளனர். இவர்களில் சில் முற்பிறப்பின் பயனாய் இறைவனால் தடுத்தாட் கொள்ளப்பட்டவர்கள். இதற்குச் சான்றாகத் திருவாளர் சுந்தரமூர்த்தி சுவாமிகளைக் கூறிடலாம். அவர்களில் சிலர் இறைவனைப் பக்தி மார்க்கத்தில் சென்று வழிபட்டுப் பாடல்கள் எழுதி, பற்பல அற்புதங்களை நிகழ்த்தினர். சிலர் நண்பர்களைக் கொண்டு அவ்வப்போது ஏற்படும் இயற்கை நிகழ்வுகளில் சிக்கிய மக்களுடைய நலனுக்காக இறைவனிடம் பொன் பொருளைப் பெற்று, மக்களுக்குத் திருவமுது படைத்தும் தொண்டாற்றினர்.

பலர் அடியார்களுக்கு அமுது படைக்காமல் தாம் உணவு உட்கொள்வதே இல்லை. தம் கொள்கையில் உறுதியாக இருந்தவர்களும் இதில் உண்டு. பிறர் பொருளைப் பாதுகாத்து, பிறகு உரியநேரத்தில் உரியவரிடம் வழங்கித் தொண்டு செய்தவர்களும் உண்டு.

சிலர் இறையடியார்களுடைய ஆடைகளை

வெளுத்தளிக்காமல் தம்முடைய குலத்தொழிலைச் செய்து பிடிவாதத்துடன் வாழ்ந்தவர்களும் இதில் அடங்குவர். இதனால் சிவனடியார்கள் அனைவரும்ட வைராக்கியத்துடன் செயல்பட்டுத் தங்கள் பணியில் உறுதியோடு இருந்து வந்தனர். இவர்களில் சிலர், மக்களுடைய நலனைக் கருத்தில்கொண்டு ஆண் பனையைப் பெண் பனையாக மாற்றி, மக்களுக்குப் பயன்தரும் வகையில் செய்தனர். தங்கள் கண்ணில் பட்ட செயல் மூலமாக அவர்களுடைய துயரத்தினைப் போக்கக் கருதியவாறு இறைவனிடம் வேண்டி, முதலையின் வயிற்றுக்குள் கிடந்தவனை அந்த வயதுடன் மீட்டுத் தந்த பெருமைக்குரியவர்கள் சிவனடியார்களே ஆவர்.

தமிழுக்கு அவர்கள் செய்து வந்த அற்புதத் திருத்தொண்டு பற்றிக் கூறவும் வேண்டுமோ. தமிழில் பாமாலை பாடி நாகம் கடித்து இறந்த சிறுவனைச் சிவ ஆலயத்துள் கிடத்தி மீண்டும் கடித்த நாகமே விடத்தைத் திரும்பப் பெற்றிட்ட அற்புதங்களைக் கூறிடும் போது உடல் சிலிர்க்கிறது. இதைச் செய்தவர் திருநாவுக்கரசர் அன்றோ.

கணவன் தந்த மாங்கனியைச் சிவனடியார்க்கு அமுது படைத்திட்ட பிறகு, கணவர் வந்து கேட்டபோது இல்லை என்னாமல் இறைவனிடம் இறைஞ்சி அதி அற்புத மாங்கனியைப் பெற்று வந்து, கணவர் விருப்பத்தைப் பூர்த்தி செய்திட்ட காரைக்கால் அம்மையாரின் பக்தியைக் கலியுக மக்கள் காணும்படி வரலாற்றில் இடம்பிடித்து இறைவனே அம்மையே என அழைக்கும்படி வாழ்ந்தவர்.

தந்தையிடம் அடம்பிடித்துக் குளிக்கச் சென்றவருடன் சென்று, குளக்கரையில் அமர்ந்த பிறகு தந்தை தடாகத்தில் மூழ்கியதை அறிந்து கதறி அழுதிட்ட பாலகனைக் கண்ணுற்ற பார்வதியார், அக்குழந்தைக்குப் பொற்கிண்ணத்தில் பால்சுரந்து கொடுத்தாள். இது இம்மண்ணில் தோன்றிய மாதர்களுக்குரிய கருணையைப் பறைசாற்றுகின்றதன்றோ. இறைவனுக்குரிய மலரினை மூக்கால் மோந்தமைக்காக அவளுடைய மூக்கைக் கொய்திட்ட மூர்க்கருக்கும் முக்தி கிடைக்கச் செய்தவர் சிவன்

என்பதைச் சொல்லவும் வேண்டுமோ. இறைவனைக் காண வேண்டும்; பிறகு இறைவனுக்கு நிகழும் திருவிழாவினைக் காண வேண்டும் என்ற ஆவலுடன் இருந்த நந்தனாருடைய நல் விருப்பத்தினைப் பூர்த்தி செய்திட்ட நடராசருடைய பெருமையை எப்படி எடுத்துரைப்பது.

பசித்தவருக்குப் புசிக்க உணவளிக்கக் கருதியபோது சிவனடியார் பிள்ளைக் கறியைக் கேட்டு அதனைச் சமைத்து வைத்துண்ணும் போது பிள்ளையை அழைத்துச் சாப்பிட வைத்த செயலை என்னவென்று சொல்லுவது. பிச்சைக்காரன் கொடுத்திட்ட திரு ஓட்டுக்காகத் தம் மனைவியின் தலையில் பச்சை மூங்கிலைச் சுமந்து நீராடிச் சத்தியம் செய்திட்ட லீலையை எப்படி விவரிப்பது என்றே புரியவில்லை. அகிலத்தில் கோடானு கோடி மக்கள் பிறந்து இறக்கின்றனர். சிலர் இருக்கின்றனர். சிலர் இறந்தும் வாழ்கின்றனர். சிலர் வாழும் போதே இறந்தவர்களாயிருப்பர்.

இறை அடியார்கள் எப்போதும் இறைச் சிந்தனையோடு இருப்பர். அத்துடன் அவர்கள் இறைவனுடைய அற்புதங்களை அகிலமறிய வழிகாட்டியாக இருப்பர். சென்னை மயிலையில் அரவம் தீண்டி மாண்டவளை எரித்து, அடைத்து வைத்திருந்த சிவனேசன் செட்டியாருடைய திருமகள் பூம்பாவையை மீண்டும் உயிர் பெற்றிடச் செய்திட்ட அந்த அற்புதத் திருக்காட்சியைக் காண வைத்தது மட்டிட்ட எனத் தொடங்கிய தேவாரப் பதிகத்திற்குப் பெருமை சேர்த்திட்ட திருஞானசம்பந்தருடைய தேவாரத்தின் மகிமையை அறிய வைத்த அற்புத திருவிளையாடலை, எப்படி எடுத்தியம்பிட இயலும்.

மாணிக்கவாசகரை அழைத்து உபதேசமளித்து, அவருடைய கடமையை நினைவுபடுத்தி வந்த பணியை மறக்கச் செய்து, பிறந்த பயனைச் செய்யச் செய்து அரசன் தந்த பொன்னைக் கொண்டு ஆலயத்தினை உருவாக்கி, அதற்கு அரசன் தந்த தண்டனையைத் தாம் ஏற்று, பிறகு இறையருளால் பரி தந்து நரியாக்கி நாடகமாடியது நமச்சிவாயமே அல்லவா?

ஆற்றின் கரையை அடைக்க வந்து தந்த பிட்டை உண்டு

சோம்பிய சோமசுந்தரரைப் பிரம்பால் அடித்த அரசன் முதல் ஆருயிர்கள் வரை முதுகில் அடையாளம் காட்டிய அரன்பற்றிக் கூறவும் முடியுமோ. இறைவர்க்கு வைத்த நெல்லை உண்ட தம் உறவினர் அனைவரையும் வாளால் வெட்டி வீழ்த்திப் பால்பருகும் பாலகனையும் விடாமல் வெட்டிய வீரனையும் ஆட்கொண்ட தன்மையைப் பொன்னேட்டில் பொறிக்க வேண்டியவையல்லவோ. மதுரைக்குச் செல்லும் ஆளுடைப் பிள்ளைக்குத் துணையாகச் சென்று, பதினாயிரம் சமணர்களைக் கழுவேற்றிடச் செய்ததும் வரலாற்றுப் பதிவுகளில் ஒரு பதச் சோறாய் அமைந்துள்ளதே.

ஆண்கள் மட்டுமா அடியார்கள் இல்லையில்லை ; பெண்களுக்கும் அதில் சம பங்கு உண்டென்று பறைசாற்றியவாறு தோன்றிய காரைக்காலம்மையார், ஔவையார், திலகவதியார், மங்கையர்க்கரசியார், மாதினியார் என்ற பட்டியலும் நீள்கின்றதல்லவோ இதுதான் இந்திய மண்ணில் தோன்றிய எல்லா மாதரசியர்க்கும் கிடைத்திட்ட மாபெரும் பெருமைக்கு வித்திட்டவர்கள் ஆவார்கள் என்பது வெள்ளிடை மலையே அன்றோ.

தென்பகுதியில் நதியை உருவாக்கிட இறைவன் னாட்சி கலியாண நினைவாக வைகையைப் படைத்திட்ட அற்புதம். அகத்தியப் பெருமாள் மூலமாகவே பொதிகை மலையில் இருந்து ஒரு வற்றாத தாமிர பரணியைக் கொடுத்திட்ட சிவன் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகுமே. இருப்பதைக் கொண்டு அடியார்க்கு அமுது படைப்பது சரியே. ஆனால், அப்படியில்லாத போதும் நிலத்தில் விதைத்திட்ட நெல்லை அள்ளிக் கொணர்ந்து கழுவி வறுத்து அரியலாக்கிச் சமைத்துக் கொல்லைப் புறத்துக் கீரையுடன் இரவிலும் பகலிலும் அடியார்களுக்கு அமுது படைத்திட்ட வேளாளர் குலத் திலகத்தின் செயல், குன்றின் மீது இட்ட விளக்காகுமன்றோ.

ஆலயப்பணி செய்யலாம். ஆனால், அதில் சுடர்விடும் ஒளி குறையும் போது எண்ணெய் ஊற்றலாம். தன் தலையையே கொய்து எண்ணெயாய் ஊற்றியதுதான் இந்த அற்புதமான

அறுபத்து மூன்று நாயன்மார்களுடைய வரலாறு. கைப்பொருள் கரைந்திட்ட போது அரைத்த சந்தனக் குறடு தேய்ந்தாலும் மனம் மாறாதபடி மனைவியை விற்றாகிலும் சிறுதொண்டு செய்யக் கருதிய அடியார்களுடைய பெயர் இறைவனுக்குச் சமமானதாகின்றதல்லவோ.

இது மட்டுமா. இன்னும் பல வினோதங்களும் நடந்திருக்கின்றதென்பதை நினைவு கூறலாமே. வரும் அடியார்களுக்குப் பொன் கொடுக்கலாம். அரசனாய்ப் பிறந்தால்; பொருள் கொடுக்கலாம் வணிகனாயிருந்தால்; அமுதினைப் படைக்கலாம் வேளாளனாய் இருந்தால்; பற்பல வேதங்களையும் கலை ஞானத்தையும் போதிக்கலாம் அந்தணனாய் இருந்தால் ஆனால், இப்படி ஓர் அடியார் இருந்தார் என இயம்புவதை நம்பித்தான் ஆக வேண்டும். இது இம்மண்ணில் நிகழ்ந்திட்ட வரலாற்றுப் பதிவாகும் அன்றோ?

ஒரு சிவனடியார்க்கு மாங்கனி கொடுத்தார். சரி, பிள்ளைக்கறி கொடுத்தார் சரி. கழுத்தை அறுத்து எண்ணெயாய் தீபமேற்றினார் சரியே. விதைத்திட்ட வித்தைக் கொண்டு அமுதளித்ததும் சரியே. ஆனால் அடியார் விரும்பியவாறு அவருக்குத் தம்முடைய மனைவியை படுக்கைகளிக்க முன் வந்திட்ட பரம பக்தரையும் இப்பதிவில் காணமுடியும். இப்படி எண்ணற்ற செயல்களில் ஈடுபட்ட தம்மை யார் என்று காட்டிக் கொள்ளாமலேயே திருத்தொண்டு செய்திட்ட சிவனடியார்களுடைய திருத்தொண்டுகளையும், அவர்களுடைய அன்பையும் அவனி அறிய வைப்பது, இந்த அடியேனுக்கு ஆண்டவன் தந்த ஒரு சிறிய நற்பணியாகவே கருதி, இதனைச் செய்ய முற்பட்ட போது, பல செய்திகள் கோவையாகக் கிடைத்திட்ட பதிவேயாகும்.

வாழ வேண்டிய வயதில் கிராமம் தோறும் சென்று பல இன்னல்களுக்கு இலக்காக வாழ்ந்து நமக்கு நல்வழிகாட்டிய ஔவை, காக்கைப் பாடினியார் போன்றவர்களையும் நினைவு கொள்ளல் வேண்டும். இளமையைப் பெண்கள் இனிதே அனுபவிக்கக் கனவு காண்கின்ற இவ்வையகத்தில், மக்களுடைய

நற்பணியே மகேசன் பணியென்று இளமையில் விநாயகப் பெருமானிடம் வேண்டி, இளமையை மாற்ற இளமையிலேயே முதுமையைப் பெற்று அரிய பல அற்புதங்களை நிறைவேற்றி, அரசன் முதல் ஆண்டி வரையிலும் நேரில் சென்று நற்றொண்டு புரிந்திட்ட நல்ல நங்கை ஔவைப் பிராட்டி ஒருவரே என்றால் அது மிகையன்றே.

பஞ்சணையில் படுத்துறங்கிப் பதிவிரதையாய் வாழ வேண்டியவர், கிராமம் தோறும் சென்று கூழுக்கும் பாடிய குழந்தையாய் வாழ்ந்தவர் நம் தாய் ஔவைப் பிராட்டியவர்களை நம் வாழ்நாளில் மறக்கவே முடியாது. குழந்தைகளுக்கு ஆத்திசூடி, அரசர்களுக்குக் கொன்றை வேந்தன், மானிடப் பிறவி எடுத்தவர்களுக்கெல்லாம் நல்ல வழிகாட்டி காலத்தால் அழிக்கவே முடியாத மூதுரையை முழங்கிய மூதாட்டித் தமிழ்தாய், முருகனை மாற்றி முருகனால் மாற்றப்பட்ட மாத்தமிழ் மாதரசியே வாழ்க.

காலங்கள் மாறிக்கொண்டே செல்லும். ஆனால், இறையடியார்களுடைய திருத்தொண்டு ஏதாகிலும் ஒரு வகையில் உலகு அறியச் செய்யப்படுகிறது. உண்மையான தொண்டு செய்பவனுடைய செயல் எப்படியாவது என்றாகிலும் ஒரு நாள் இவ்வுலகம் உணரும் படியாய்ச் செய்கின்றான் இறைவன். இதுதான் உண்மையாகும். உலகில் எண்ணற்ற மனிதர்கள் தோன்றுகின்றனர். அவர்களின் எண்ணி விரல் விட்டு எண்ணக் கூடியவர்களாக உலகில் வாழ்பவர்கள் எத்தனை எத்தனை பெயர்களோ?

அதில் சிவனடியார்களுக்காகப் போற்றப்படும் திருத்தொண்டர்கள். இந்த வரலாற்றுப் பதிவில் இடம் பெற்றவர் என்ற பெருமைக்குரியவர்கள் ஆவர். மலர்கள் எல்லாம் மாலையாவனவுமில்லை. அவற்றில் பல இறைவனுக்குச் சாற்றப் பயன்படுவனவும் இல்லை. இது இயற்கையின் நியதி. எண்ணற்ற பதிப்பகங்கள் இருப்பினும் அதில் சிறந்தோங்கி இருப்பன சிலவே. அதில் மணியான செயல்புரியும் மணிவாசகம் போலாகும் என்று சொல்வது போலவே, எல்லாப் பணிகளிலும்

இறைவனுடைய பதிவு ஏற்படும் போது சிறப்படையும் தானே.

இதுபோன்ற ஆன்மீகம் மற்றும் தொண்டு செய்த மக்களுடைய வாழ்க்கையை நாம் படிக்கும்போது நம் நாட்டுப் பாரம்பரியச் செய்திகளை நாம் அறிந்திட இது ஒரு நல்ல வாய்ப்பாய் அமைகிறது. மேலும் தொண்டுள்ளங்கள் சிறந்து மேலோங்கும் திறம் ஏற்பட்டு விரிவடைய ஏதுவாக இருக்கும்; தமிழின் தன்மை மேலோங்கவும் உதவியாக இருக்கும்.

தமிழ்நாட்டின் சிறப்புக்களைப் பல்வேறு நாட்டு மக்களும் அறிய, இது ஒரு நல்ல வாய்ப்பாக விளங்கிவிடும். பிறகு அவை பல்வேறு நாட்டு மொழிகளிலும் மொழிபெயர்க்கப்படும் போது, உலக அளவில் இந்தியர்களுடைய மன வளம், சகிப்புத் தன்மை, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை போன்ற பல செய்திகளை இதன் மூலம் நாம் அறிந்து, மற்றவர் அறியச் செய்யலாம்.

நேற்றைய வாழ்க்கையே இன்றைய வரலாறு. இது ஏற்புடையதாகும். மேலும் நம்முடைய வருங்கால இளைய சமுதாயத்திற்கு இது ஒரு கலங்கரை விளக்காய் அமையும். காலத்தின் கட்டாயத்தால் ஆன்மீகம் ஒரு வழியில் புறக்கணிக்கப் பட்டாலும், வேறு வழிாக அது மேலும் வளர்ச்சியோடு விரிவடைகிறது என்பது வெள்ளிடை மலையே ஆகும். ஒவ்வொரு வரலாறும் ஒவ்வொரு முக்கிய நிகழ்வைப் பதிவு செய்து, அது மனித வாழ்விற்கு ஒரு பானுவாய் ஒளியை உமிழ்கின்றது என்பது நம்முடைய முன்னோர்களுடைய வாழ்க்கை வரலாற்றின் மூலம் இதனை உலகு அறியும்படி செய்து மகிழ்ந்திடலாமே.

71. சைவ சமய இலக்கியத்தில் வாழ்வியல் நெறிகள்



முனைவர் பெ.கணேசு
பேராசிரியர், தலைவர்
சமூகவியல் துறை தங்கவயல் சட்டக் கல்லூரி
கோலார் தங்கவயல்
கருநாடக மாநிலம்

முன்னுரை

சைவ சித்தாந்தம், சைவம், சிவ சம்பந்தம் உடையது என்று இலக்கணம் கூறுவார் திருமூலர். இறைவன் முழுமுதற் கடவுள். சுதந்திரம் உடையவன். கடந்து நிற்பவன் என்ற பொருளைக் கடவுள் என்ற சொல் குறிக்கும் என்கிறார் நச்சினார்க்கினியர். சங்ககால நூல்கள் சிவன், திருமால் முதலிய கடவுளர்களைப் பற்றியும், காவிரி பூம்பட்டினம், மதுரை, வஞ்சி முதலிய நகரங்களில் இவர்களுக்குக் கோயில்கள் உள்ளன என்றும் கூறுகின்றன. தமிழர் சமயமாகிய சைவத்தினை விளக்கவெழுந்த தொன்னூல்கள் பல. அவற்றுள்ளும் தில்லை நகரைச் சார்ந்த மறைஞான சம்பந்த நாயனாரால் இயற்றப்பெற்ற சைவ சமய நெறி என்னும் நூலும் ஒன்றாகும். இந்நூலார் 16-ம் நூற்றாண்டினர். இவர் நூலுக்கு 19-ம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த யாழ்ப்பாணத்து ஆறுமுக நாவலர் புத்தரையொன்று யாத்துள்ளார்.

சைவம் என்ற சொல்லுக்குச் சிவ சம்பந்தம் உடையது என்று பொருளாகும். சிவனுடன் ஒன்றியிருப்பதாகிய ஒரு நிலையை எடுத்துக் கூறும் சமய நெறியே சைவம் என்பது திருமூலர் கருத்து. சிவ சம்பந்தம் என்ற சொல் சிவ சம்பந்தம் உடைய நூல்களையும், கொள்கைகளையும் குறிக்கும். பன்னிரு திருமுறைகள் பதினான்கு சாத்திரங்களும் சிவ சம்பந்தம் உடைய நூல்களாக விளங்குகின்றன. அவற்றுள் நுவலப்படும் செய்திகள் கொள்கைகளாக இலங்குகின்றன.

சிவபிரானை முழுமுதற் பொருளாகக் கொண்டு திகழும் சமய நெறிக்குச் சைவ சமயம் என்று பெயர். சிவம் சிவத்தோடு சம்பந்தமென்றான் என்பது ஆன்றோர் வாக்கு. சைவ சமயம் என்பதைச் சைவநெறி என்று ஆன்றோர் கூறுவர். சைவ சமயத்தைப் பின்பற்றும் அருளாளர்கள் சைவர்கள் ஆவர். சைவ என்னும் சொல்லானது சிவம் என்னும் சொல்லினின்றும் தோன்றியது. சிவம் என்றால் மங்கலமானது என்று பொருள். சைவ சித்தாந்தம் என்பது முடிந்து முடிவினைக் குறிக்கும் சித்தாந்தம் என்பது சைவ சமயத் தத்துவக் கொள்கையாகும். சித்தர்கள் கண்ட வாழ்க்கைத் தத்துவமே சித்தாந்தமாகும். பொதுவாக இச்சொல்லுக்குப் பலர் தரும் விளக்கமாகிய சித்தாந்தம் (அறிவின் முடிவு அல்லது அறிவர் முடிவு) என்பது பொருளாகும்.

தொன்மை நெறி

சைவ சமயம் மிகப்பழமையான நம்பிக்கையாகும். இது ஒரு தற்கால இயக்கமன்று. பழங்காலந்தொட்டு இன்றுவரை உயிரோட்டமான நம்பிக்கையாக வரலாற்றுக்கு முதற்பட்ட சமயம் எனும் சிறப்பினையுடையதாகச் சைவ சமயம் திகழ்கிறது. அமெரிக்காவின் இயற்கை வரலாற்று அருங்காட்சியகத்தின் விஞ்ஞானிகள் *10,000* ஆண்டுகளுக்கு முற்பட்ட சிவனின் பெருங்கோயிலை குளோரிடா மாவட்டத்தில் கண்டுபிடித்து, உலகுக்கு தெரிவித்தனம். சிவ வழிபாட்டின் கண்டெடுக்கப்பட்ட பொருட்கள், எழுத்துக்கள் ஆகியவற்றை ஆராய்ந்த கிராசு பாதிரியார் அவர்கள், மிக பழங்காலந்தொட்டே சைவ சமயம் இருந்து வருகின்றது என்ற கருத்தை உறுதிபடுத்துகின்றார். சிவ வழிபாடானது பழமையான இந்தியாவெங்கும் பரவிய ஒன்று என்று பாய் எனும் அறிஞர் குறிப்பிடுவார்.

தத்துவ விளக்கங்கள்

சிவனைப் பற்றிய குறிப்புகள் விரிவாக வந்துள்ளன. காத்தல் கடவுளாகிய சிவபெருமான் எல்லாவற்றையும் அழிக்கின்றான். அழித்த பிறகு கொடு கொட்டி எனும் கூத்தினை ஆடுகிறான். இக்குறிப்புகள் சிவபெருமான் படைத்தல், காத்தல்,

அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழில்களைச் செய்கிறான் என்ற சைவ சித்தாந்த கருத்தை உணர்த்துகின்றன. சங்க இலக்கியங்களில் சிவன் என்ற சொல் காணப்படவில்லை. ஆனால் அவர் உருவமைப்பு, இயல்பு, தன்மையை விளக்கும் வகையில் முது முதல்வன், இறைவன் போன்ற விளக்கங்கள் காணமுடிகின்றன. தமிழ் நாட்டில் வடக்கே இருந்து வந்த களப்பிரர்கள் பாண்டிய மன்னர்களை வெற்றிகண்டு தம் சமயத்தையும், பண்பாட்டினையும் புகுத்தினர். அவர்கள் ஆட்சி முடிவடையும் சமயம் சைவ சமயக் குரவர்கள் தோன்றினர். இறைவன் புகழைப் பாடுவதற்கும் பரப்புவதற்கும் இசையைப் பயன்படுத்தினர். இந்தக் காலத்தில் தோன்றிய நம்பியாண்டார் நம்பி பக்தி இலக்கியத்தை வகுத்தும் தொகுத்தும் தந்தார். அவை திருமுறை எனப்பட்டன. தமிழ் சைவ இலக்கியங்கள் தோத்திரம் என்றும் சாத்திரம் என்றும் இரு வகைப்படும்.

சைவ சித்தாந்தம்

சைவம் தமிழ் மொழிக்குத் தந்த விலைமதிப்பற்ற கொடைகளுள் ஒன்று சைவ சித்தாந்தம். விவேகானந்தருக்கு அது சே.எம்.நல்லசாமி பிள்ளையால் மொழிபெயர்த்து தரப்பட்டபோது, அவரை அது வியக்கவைத்தது. மூவர் தேவாரம், திருமந்திரம் தந்த ஒளியில் மெய்கண்டார் படைத்த சிவஞானபோதமும், அதற்கு சிவஞான யோகிககள் வரைந்த பேருரையும் அளவற்ற தமிழர்களின் நுண்மான்நுழைபுலனுக்குக் கட்டியம் கூறி நின்றன. இந்நூலுக்கு அருணந்தி சிவாச்சாரியார் எழுதிய செய்யுள் வடிவிலான உரைநூலே சிவஞான சித்தியார் என்பது. தமிழின் பெருமை பேசும் ஆறு நூல்களில் இதுவும் ஒன்றாகக் குறிக்கப்பட்டது. மெய்கண்ட சாத்திரங்களும், பண்டார சாத்திரங்களும் தமிழ் கற்றுணர்ந்திருந்த வடமொழி, தமிழுக்கு அறிவுக்குச் சான்று கூறுவன.

இறைவன் அருளிய நெறி

சைவ சமயக் கருத்துக்கள் இறைவனால் அருளப்பட்டன. திருக்கயிலையில் விளங்கும் சிவபெருமான் நந்திதேவருக்குச் செய்த உபதேசத்தின் வழி வழியாகப் பெறும் அருள்திரு

மெய்கண்ட தேவருக்கு வாய்ந்தது. அவர் வழியாகவே சைவ நெறிகள் வளர்ந்தன; ஆதினங்கள் தோன்றின.

கோயில் நெறி

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம், ஆலயம் தொழுவது சாலவும் நன்று எனும் முதுமொழிகளுக்கு ஏற்றவாறு, கோயில் வழிபாடு எனும் பண்பாடு சைவ சமயத்தின் உயிர் நாடியாகும். ஆலயங்கள் அமைதியைப் பரப்பும் அன்பு நிலையங்கள், கோயில் என்றால் இறைவனின் இல்லம் என்று பொருள். இவ்வுடம்பே ஆலயம். உள்ளிருக்கும் ஆன்மா இறைவனின் திருமேனி, தியானமே வழிபாடு எனும் சீரிய கருத்துக்கள் சைவ சமயத்தில் உண்டு. ஊனுடம்பு ஆலயம் என்பது திருமூலர் வாக்கு. சைவ சமயம் உலக அரங்கில் வாழும் மக்கள் அனைவரும் வழிபாட்டின் பயனை அடைய வழிவகுத்திருக்கிறது. மேலும் பக்தி என்பது சைவ சமயத்தின் அடிப்படையான கருத்தாகும். ஆலய வழிபாட்டில் பக்திக்கு மிகச் சிறப்பான இடம் உண்டு.

சைவ மடங்களின் தோற்றம்

சைவ சமயத்தை நிலைநிறுத்தும் பொருட்டுத் தாங்களும் பிற சமயத்தினர் போன்று மடங்களை ஏற்படுத்தி சமயத்தை நிலைநாட்டினர். மடங்கள் என்ற அமைப்பு முதலில் பெரிய புராணத்தில் காணப்படுகிறது.

வாழ்க்கை நெறி

முழுமையான வாழ்க்கையை அடைவதற்கு உரிய நெறி சைவ நெறியாகும். அதிகாரம், செல்வம், சிற்றின்பம் எனும் நிலையிலிருந்து மக்களைத் தூய்மை, ஒற்றுமை, தெய்வீகம் எனும் உயிரிய நிலைக்கு அழைத்துச் செல்கிறது. சைவம் எச்செயலையும் இறை சிந்தனையோடு செய்து வாழ்க்கையைத் தவமாக கருதவேண்டும் என தவநெறியை எடுத்துப் பேசும் சமயம் சைவ சமயமாகும். இது ஒரு செயல்முறை சமயமாகும்.

சைவ மங்களின் நோக்கம்

நன்னோக்கம் கொண்ட அமைப்பே வளர முடியும். மக்கள் மன்றில் நிலைக்க முடியும். நோக்கமில்லாதது எதுவும் சிறப்படைய முடியாது. எல்லாவுயிர்க்கும் நோக்கம் உண்டு. ஈண்டு எவ்வுயிர்தான் இலக்கு அன்று இருப்பது என்றார் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை. எனவே நோக்கம் என்பது அடிப்படை உயிர்ப்பொருள். ஒவ்வொரு சமய மடங்களும் சிறப்பான சில நோக்கங்களைக் கொண்டுள்ளன. சிறப்பாகச் சைவ மடங்கள் அனைத்தும் சைவத்தின் சிறப்பினையும் பெருமையையும் பேசுவதைத் தலையாய நோக்கங்களாக கொண்டுள்ளன. எனவே திருமடங்கள் சிவ நெறியாளர்கள் தங்கவும், சிவனடியார்கள் வீற்றிருக்கவும், சிவன் பெருமையை விளக்கவும் அமைந்தனவாகக் கருதல் வேண்டும்.

தமிழ் மக்கள் வழிபாடு

திருமுருகாற்றுப்படை காலம் தொடங்கித் தமிழ் மக்கள் வழிபாடு கடவுளர்களிடையே உறவு முறை கற்பிக்கும் பழக்கம் ஏற்பட்டுள்ளது. எனவே அவ்வகையில் தாய்த்தெய்வ வழிபாடாகிய சக்தி வழிபாடு, முருக வழிபாடு, கி.பி. 5ம் நூற்றாண்டுக்குப் பின் தமிழகத்தில் தோற்றம் கொண்டு வளர்ந்த கணபதி வழிபாடு, சிவன், சக்தி, முருகன் அம்சமாகக் கருதப்பட்ட சிறுதெய்வ வழிபாடு என்பன ஒருங்கிணைந்து சிவவழிபாட்டின் அங்கங்களாயின. எனவே சைவ இலக்கியங்கள் என்ற குறியீட்டில் மேற்குறித்த அனைத்து வழிபாட்டு இலக்கியங்களும் ஒருங்கிணைந்துக் கொள்ளப்பட்டன.

ஒரே கடவுள் நெறி

இவ்வுலகில் பல்வேறு சமயங்கள் இருக்கின்றன. பல்வேறு வடிவங்களில் இறைவனை வழிபாடு செய்கின்றனர். உருவ நிலையிலும், உருவமற்ற நிலையிலும் எந்த வகையில் வழிபட்டாலும், ஒரே பரம்பொருளின் பல்வேறு நிலைகளில் ஒன்றைத்தான் நாம் வழிபடுகிறோம். ஒன்றே குலமும், ஒருவனே தேவனும் என்பது திருமூலர் வாக்கு. அனைத்து

பொருள்களாகவும் இறைவன் இருக்கின்றான். எங்கும் நீக்கமற நிறைந்துள்ளான் எனும் கருத்தை வானாகி, மண்ணாகி, வளியாகி, ஒளியாகி எனும் பாடல் மூலம் மாணிக்கவாசகர் தெளிவுபடுத்துகிறார். பல கடவுட் கோட்பாட்டிற்கு இடம் கொடுத்து, ஒரு பரம்பொருள்தான் பல்வேறு நிலையங்களில் உள்ளது எனும் தெளிவான ஞானத்தைப் புகட்டும் சமயம் சைவ சமயமாகும். உலகுக்கு ஒருவானய் நின்றாய் நீயே என்பார் அப்பர் பெருமான். எந்த ஏகநாயகன் அர்த்த நாரீசுவரராக, சிவ சக்தியாக நின்று அருள்புரிகின்றான். ஒரே கடவுளின் இருவேறு நிலைகளைச் சைவம் சுட்டிகாட்டுகிறது. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் எனும் கருத்திற்கேற்ப இறைவனை அம்மையப்பராகக் கண்டு வழிபடும் சமயம் சைவ சமயமாகும். அவனது அருளே சக்தியாகும். அருளது சக்தியாகும் அரன் தனக்கு என்பது சிவஞான சித்தியார்.

சிவன்

சிவன், சிவபெருமான் வலது கையில் சூலம் மற்ற கையில் உடுக்கையும் இடது கையில் மான் மற்ற கையில் அக்கினிச் சட்டியும் வைத்துக்கொண்டு தெற்கு முகமாக பார்த்து நிற்கிறார். பொருளையோ சுகத்தையோ, செல்வத்தையோ கொடுக்க நிற்கவில்லை. தன்னை நினைப்பவரை எதிர்பார்த்து நிற்கிறான் சிவபெருமான்.

1. உன் மனம் அலைபாய்வதை நிறுத்து, நான் உன்னை ரட்சிக்கிறேன் என்பதற்கு மானை வைத்துள்ளார். 2. மனம் அலையைப் போல் ஆடும், அங்கும் இங்கும் ஓடும். அதற்காக உடுக்கை ஆட்டி நான் இங்கு இருக்கிறேன் எனச் சுட்டிக் காட்டுகிறார். 3.சூலத்தால் மாய சுகத்தை குத்தி எறிந்து, தூய்மைப்படுத்தி அழைத்துக் கொள்கிறார். 4.தீமையையும், மாய சுகத்தையும் தீயில் இட்டு எரிக்கிறார்.

முடிவுரை

மேலும் சைவம் என்பதும், சைவ சித்தாந்தம் என்பதும் தனித்தனிப் பொருட் குறிப்புடையன என்பதையும், இந்திய நாடு முழுவதிலும் சைவ சமயம் பரவியுள்ளது என்பதையும்

தமிழ்நாட்டுக்கே தனிச்சிறப்பாக உரிய சைவக் கொள்கையே சைவ சித்தாந்தம் என்பதையும் அறியமுடிகிறது. உலகத்தின் தோற்றத்தைப் பற்றியும் அதில் அகமும் மக்களது வாழ்வியல் பற்றியும் அவர் பெறுவதற்குரய உயர்நலம் பற்றியும் நம் முன்னோர் ஆராய்ந்து கண்டுள்ளனர். அவர்கண்ட முடிவுகளைக் காலந்தோறும் வளர்ந்து வரும் அறிவியல் அளவை முறைகளுக்கு ஏற்றபடி ஒழுங்குப்படுத்திப் பெரியோர்கள் சமயம் என்னும் பெயரால் வழங்கி வந்துள்ளனர். அத்தகைய சமயங்களுள் ஒன்றே சைவ சித்தாந்தம் என்பது.

தென் இந்தியச் சமயங்களில் சைவ சமயக் கோட்பாடுகள் மிகவும் பழமையான விலைமதிப்பற்ற கோட்பாடுகளாக இருந்து வந்துள்ளன. மிகப்பழமையான ரிக் வேதம், இதிகாசங்களில் கூட சிவலிங்க வழிபாடுகள் இருந்ததற்கான சான்றுகள் உள்ளன. சமயநோக்கில் சிறந்ததாக நம்பிக்கையான வாழ்க்கை முறைகளை எடுத்துக் கூறும் ஒன்றாகச் சைவ சமயக் கோட்பாடுகள் உள்ன. சைவ சமயம் ஆரியர்களின் காலத்திற்கு முன்பாகவே இருந்து வந்துள்ளது என்றும், தமிழது மக்களை மிகவும் கவர்ந்த நிலையில் காணப்படுகிறது. என்றும் சி.யு.போப் சிறப்பித்துக் கூறுகிறார். மேலும் இயல்பில் ஊறிய கற்பனையணியுடனும் உணர்ச்சிப் பெருக்குடனும் வெளிப்பாட்டழகுடனும் கூடிய பக்தி இலக்கியச் செல்வத்தினை உலகில் தமிழர் தம் சைவத்தைத் தவிர வேறு எச்சமயமும் எய்தவில்லை என பெர்னர்டு என்பவர் சிறப்பித்து கூறுகிறார். சைவ சமயத்திற்குச் சான்றுகளாக வேதங்கள், சிவாகமங்கள், திருமுறைகள், சாத்திர நூல்கள் உள்ளன.

72. சமுதாய நெறியில் சமயக் குரவர்கள்



கோ.கலைச்செல்வன்
முதுகலைத் தமிழாசிரியர்
எம்.ஆர்.சி. அரசு மகளிர் மேனிலைப்பள்ளி
வீரப்பன்சத்திரம்

சமயத்தின் தேவையும் பயனும்

குறையுடைய மனிதனை நிறையுடையவனாக்க ஓரளவு கல்வி துணை செய்யும். ஆனால், முழுமையாகத் துணை செய்யக் கல்வியால் இயலாது. எத்தனை விதங்கள் தான் கற்கினும் கேட்கினும் என் இதயமும் ஒடுங்கவில்லை என்பார் தாயுமானவர். கற்றாரை யான் வேண்டேன் கற்பனவும் இனி அமையும் என்பார் மாணிக்கவாசகர். இதனால் கல்வி தீது என்றும் கற்றலில் பயனில்லை என்றும் பொருள் கொள்ளற்க. கல்லான் நெஞ்சின் நில்லான் ஈசன் என்றார் திருஞானசம்பந்தர். கல்வியின் பயன் அறிவு. அறிவின் ஆக்கம் அருள் கல்வியின் பயனாகிய அறிவை நாடாமல், அருளைப் பெறாமல் கற்றுள்ளோம் என்று தருக்குதல் கூடாது. கற்ற நூற் கருத்தினை வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தும் பொழுது அறிவு வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தும் பொழுது அறிவு தோன்றுகிறது. அந்த அறிவு வளரும் தன்மையது. அறிதோறும் அறியாமை என்பார் திருவள்ளுவர் ஒரு குறை நிறையைத் தர இயலாத நிறைநலம் ஒன்று தான் குறை நிக்கத்திற்குத் துணை செய்ய முடியும். நிறை நலத்தைத் தரமுடியும். குறைவிலா நிறைவாகக் கோதிலா அமுதாக இருந்தருளும் இறைவன் தான் உயிர்களின் குறை நீக்கத்திற்கும் நிறைநலப் பேற்றுக்கும் துணை செய்ய முடியும் குறை நீங்காத வரையில் துன்பம் நீங்காது; துன்பம் சேராது; இன்ப விழைவுடைய உயிரின் குறை நீக்கத்திற்கு நிறைநலப் பேற்றுக்கு இன்றியமையாது வேண்ட்ப்படுவது சமயம் ஆகும்.

தீண்டாமை நமது சமயத்திற்கு ஒரு கறை

நமது சமுதாயத்திற்கு ஒரு சாபக்கேடு தீண்டாமை

தீண்டாமையை ஆசாரம் காட்டி நிலைநிறுத்த விரும்புவாரை அப்பரடிகள்,

''சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியோடு வானாளத் தருவரேனும்
மங்குவார் அவர் செல்வம் மதிப்போமல்லோம்
மாதேவர்க் கோகந்தர் அல்லாராகில்
அங்கமெவலாம் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரிததுத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கண்பராகில்
அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே''

என்ற பாடலால் இடித்துக் கூறுவார். என் நால்வர்களும், ஆழ்வார்களும் அவதரிக்காத வடபுலத்தில் இன்றும் பொது மக்களுக்கு வழிபாட்டுரிமை இருக்கிறது. காசித்திருக்கோயிலுக்குள் பக்தர்கள் சென்று அங்கு எழுந்தருளியிருக்கும் இறைவனைக் கங்கை நீர் கொண்டு திருமுழுக்குச் செய்து வழிபாடு செய்து கொள்ளலாம். இங்ஙனம் நிகழ்வதால் எந்தப் பண்பாடும் அங்கு வழிவழி உரிமையை இழக்கவில்லை. சாதி வேற்றுமைகளை எதிர்த்துப் போராடி ஒரு குலம் அமைக்க முயன்ற ஞானிகள் தோன்றிய இந்த மண்ணில் பக்தர்களுக்குத் திருக்கோயில் வழிப்பாட்டுரிமையை மறுப்பது நியாயமும் அன்று; நெறியுமன்று; முறையுமன்று.

சமய சமுகாய மறை

''இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை
நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
யாவர்க்கும் ஆம் உண்ணும் போது ஒரு கைப்பிடி
எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல்
வேறு ஒன்று அறியேன் பராபரமே
என் கடன் பணி செய்து கிடப்பதே
வான் முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க
சாத்திரம் பல பேசும் சழக்கர்காள்
கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்
பறைச்சி ஆவது ஏதுடா? பணத்தில் ஆவது ஏதடா?

இறைச்சி தோல் எலும்பிலே இலக்கமிட்டு இருக்குதோ?
வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்
மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்''

இத்தனைத் தொடர்களும் இவை போல்வன பலவும், சமயம் சார்ந்த பண்பாட்டில் செழித்த அரிய தமிழ்க் கொடைகள். இவ்வரியவரிகள் வருங்கால தலை முறையைச் செதுக்கப் பயன்படும் வைரவரிகள். சைவம் தழைக்கவும், சமுதாய மடமையைக் கொழுத்தவும் பக்தி மார்க்கத்தில் மானுடம் தழைப்பட்டு மனித மனத்தை நெறிப்படுத்த வந்த மகாபுருசர்களாகச் சமயக்குரவர்களை சைவம் பார்க்கிறது.

பக்தி இயக்கத்தில் விளைவாகச் சமயத்தின் காவலர்களாக ஆழ்வார்களும் நாயன்மார்களும் தோன்றினர். அவர்கள் தம் சமயக் கருத்தைத் தம் சமுதாயப் பணிகள் மூலம் பரப்பினர். சமயம் என்பது அடியார்களின் உள்ளுணர்வுகளின் வெளிப்பாடு என்றே கூறலாம். புலன் உணர்வுகளுக்கு அப்பாற்பட்ட இறையுணர்வை உணர்ந்து அனுபவிக்கும் பொழுது, வெளிப்பாடாகத் தோன்றும் மெய்ப்பாடுகளும் நடத்தைகளும் அவர்களின் சமய அனுபவத்தைக் காட்டுகின்றன.

சிவஞான போதம் அதன்இறுதி நூற்பாவான பன்னிரண்டாம் நூற்பாவில் அடியார் பெருமையைப் பறைசாற்றுகின்றது. சிவனடியாரைச் சிவனாகவே கருதிப் போற்றப்படுகிறது.

''பசகோவிந்தத்தில் சங்கரர் அடியார்
கூட்டத்தோடு இருப்பதே உறுதி பயப்பது''

என்கிறார். ஏனெனில் நம் மனமாசு அகலவும் நாம் பெறும் இறையுணர்வு, பக்தி நிலைக்கவும் அடியார் கூட்டம் தேவையாகின்றது. ''அடியார்கள் பக்தர்கள் என்பவர்கள் நம் போன்ற மக்களால் எளிதில் புரிந்து கொள்ள முடியாத பண்பாட்டையும், நடைமுறைகளையும் மேற்கொண்டுள்ள ஒரு கூட்டத்தார் அவர்கள் எல்லா நாட்டிலும் உள்ளனர்'' சைவ வைணவ நெறியில் மட்டுமல்லாமல் இசுலாம் கிருத்துவத்திலும்

இத்தகைய அடியார்களைக் காணமுடிகிறது. அனுபவம் மறுவடிவம்,

''இவர்கள் அனைவரும் தொண்டு செய்தல்
சிவபெருமானை முழு முதலாக ஏற்றுக் கொள்ளுதல்
தன்னலத்தை அடியோடு துறந்துவிடுதல்
பிறர் பொருட்டாக வாழ்தல்
அச்சம் என்பதை வாழ்விலிருந்து அகற்றுதல்
தன் குறிக்கோளுக்காக உயிரைவிடச் சித்தமாயிருத்தல்''

என்ற அடியார் பண்பு எல்லோருக்கும் ஏற்றதேயாகும்.

வல்லார் நால்வர்

''பூழியர்கோன் வெப்பொழித்த புகலியார் கோன்கழல் போற்றி
ஆழிமிசை கல்மிதப்பில் அலைந்த பிரான் அடிபோற்றி
வாழிதிருநாவலூரார் வன்தொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி போற்றி''

திருநாவுக்கரசர் தம் தொண்டின் வலிமையால், நீற்றறை, யானை, கல் ஆகியவை எதிர்க்கும் ஆற்றல்களை இழந்தன. நீற்றறை பொய்கையானது நஞ்சு அமுதமானது; யானை வணங்கியது; கல் தெப்பமானது. எனவே தீயவர்களின் தீயபண்பை மாற்றி நல்லவராக்கும் சிறப்பு அவர்களிடமிருந்தது என உணரலாம்.

திருஞானசம்பந்தர் தம் வாழ்நாளில் மிகப் பெரும் புரட்சி செய்துள்ளார். சமண பௌத்தத்தை வீழ்த்தி சைவத்திற்கு உயிர்கொடுத்தார். பல கோயில்களுக்குச் சென்று பதிகம் பாடிப் பக்தி பயிர் வளர்த்தார். சாதி வேறுபாட்டைக் களைந்தார். இறந்தவர்களுக்கு உயிர் கொடுத்து அற்புதம் செய்தார். மதமாற்றம் செய்தார். பிற மதவாதங்களைத் தகர்த்தார். சைவமும் தமிழும் அவரால் புத்தொளி பெற்றன.

திருஞான சம்பந்தரின் சமத்துவப்பணி

நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தர் சைவ சமயக் குரவராக விளங்குவதோடு உயர்ந்த கவிஞராகவும்

விளங்குகிறார். இவர்தம் பாடல்களில் கற்பனை அழகும், உணர்வின்பமும், எளிமையும் இழைந்திருக்கும்; பண் சிறந்து விளங்கும். இவருடைய பதிகங்களே வேதங்களின் சாரம் பொருந்தியிருக்கும் என்று கூறுவர். இவர் தன்னைத் தமிழ் ஞானசம்பந்தன்; முத்தமிழ் விரகன் என்று அழைத்துக் கொள்கிறார். சங்கப் புலவர்களின் இயற்கை மணம் இவருடைய பாடல்களில் அதிகம். பாடல்களில் பக்திச்சுவை இரண்டறக் கலந்து விளங்குகிறது. இவருடைய பதிகங்கள் முதல் மூன்று திருமுறைகளாக விளங்குகின்றன.

காயத்ரி மந்திரம் ஓதி வந்த அந்தணர்க்குத் திருவைத்தெழுத்து ஓதியதைப் போலவே, சோதிடக் கட்டுகளால் பிணிக்கப்பட்டுள்ள மக்களை விடுவிக்க,

> “வேயுறுதோளி பங்கன் விடமுண்ட
> கண்டன் மிக நல்ல வினைதடவி
> மாசறுதிங்கள் கங்கை முடிமேல் அணிந்துஎன்
> உளமேபுகுந்த அதனால்
> ஞாயிறு திங்கள் செவ்வாய், புதன், வியாழன்
> வெள்ளி, சனி பாம்பு இரண்டு முடனே
> ஆசறு நல்லதல்ல அவை நல்லதல்ல
> அடியார் அவர்க்குமிகவே”

என்னும் பாடலின் மூலம் வழிகாட்டுகிறார். மூடக்கட்டுக்களைத் தகர்த்தெறியப் பாடுபட்டவர் திருஞானசம்பந்தர். அவரது சிந்தனை சொல், செயல் அனைத்திலும் நேர்மை இருந்தது. அந்தணரான சம்பந்தர் தன்னுடனேயே தான் செல்லும் இடங்களிலெல்லாம் பாணர் குலத்தைச் சேர்ந்த திருநீல கண்ட யாழ்ப்பாணரை உடனிருத்திக் கொண்டார். தான் பாடும் பாடலின் வேகத்திற்கு ஏற்ற வேகத்தில் தனது யாழிசை இசைக்க இயலாதநிலை வந்தபோது யாழினையே முறித்தெறியத் திருநீலகண்டர் முற்பட்டார். அப்போது தனது அன்பால் அவரைத் திருஞானசம்பந்தர் தடுத்தாட்கொண்டார் இதன் மூலம் திருஞானசம்பந்தரின் மனிதநேய ஒருமைப்பாடு வெளிப்படுகிறது.

திருநாவுக்கரசர்

> "கொடிகாட்டி ஆண்ட பல்லவப் பேரரசை எதிர்த்து
> நாமர்க்கும் குடியல்லோம்"

என்று விடுதலை முழக்கம் செய்தவர் அப்பரடிகள். அந்த விடுதலை முழக்கத்திற்கு அவர் கொடுத்த விலை அதிகம்.

சுந்தரர்

தன்னை அடிமை என்று கூறிய இறைவனைப் பித்தா எனக் கோபித்துப் பேசினார். இறைவன் சுந்தரரை ஆட்கொண்டபின் பித்தா எனத் தொடங்கிப் பாடுமாறு பணிந்தார், சுந்தாரும். பித்தாபிறை சூடி பெருமானே அருளாளா எத்தா நன்மற வாதேறிக்கின்றேன் மனத்து உன்னை வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருள் துறையுள் அத்தா உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனலாமே எனப் பாடினார்.

கணிகையர் குலத்துப் பரவையார் மீது காதல் கொண்டார். இவரது காதலுக்குச் சிவபெருமானே பாலமாக இருந்து உதவி புரிந்தார். இதனைப்

> "பரவை என்னும் என் காதலிக்கும் எனக்கும்
> பற்றாக உள்ள பெருமானே"

என்று சுந்தரரே குறிப்பிட்டுள்ளார். மன்னர் மகனாக அனைத்து இன்பங்களும் பெற்று வாழ்ந்தவர் சுந்தரர். இறைவன் தடுத்தாட்கொண்டபின்,

> "வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்
> பாழ்போவது பிறவிக்கமல் பசிநோய் செய்த பறிதான்
> தாழாது அறம் செய்மின் தடங் கண்ணான்மல ரோனும்
> கீழ்மேலுற நின்றான்திருக் கேதாரம் எனீரே"

எனப் பாடும் மனப்பக்குவம் கொண்டார்.

மாணிக்கவாசகர்

''தொல்லை இரும்பிறவிச் சூழம் தளைநீக்கி
அல்லல் அறுத்து ஆனந்த மாக்கியதே
எல்லை மருவா நெளிமளிக்கும் வாதவூர்
எங்கோன் மற்றைத் திருவாசகம் என்னும் தேன்''

மணிவாசகப் பெருமான் பாடியருளிய திருவாசகத்தைத் தன் கைப்பட எழுதிய அழகிய திருச்சிற்றம்பல முடையான் எனக் கையொப்பமும் இட்டதில்லை. கூந்தப் பெருமானிடம் சிந்தையைப் பறி கொடுத்தது இத்திருவெம்பாவைப் பாடல்களிலேயே என்றால் இதன் தனித் தன்மை விளங்கும் பாவைப் பாட்டிலேயே மயங்கிய அப்பெருமான் பாவை பாடிய வாயால் கோவை பாடு எனப் பணித்தார். ஆடவல்லான் மட்டுமா? ஆங்கிலேயரான சி.யு.போப் அவர்கள் மயங்கியது இத்திருவெம்பாவையில் தான். மார்கழித் திங்களில் திருவண்ணாமலைக்கு அலுவல் காரணமாக வந்த போப் அவர்கள் மங்கையர்கள் கூடி மகாதேவன் புகழ்பாடி மகிழ்ந்தனர். அதைக்கேட்ட போப் திருவாசகத்தினை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார் என்றால் இதன் சிறப்பினை உணரலாம் அல்லவா?

முடிவுரை

நான் யார் என்ற கேள்விக்கு ஒவ்வொரு மனிதனும் விடை காண முற்படும் பொழுது முன்னோர் காட்டிய பாதையில் நாம் பயணிக்க ஏதுவாக சமயக் குரவர்கள் கண்டு சொன்ன அமுத மொழிகள் யாவும் மனித குலத்திற்கு வழிகாட்டும் என்பதில் ஐயமில்லை.

73. காரைக்கால் அம்மையார்



ஏ. பிரபாகரன்
முனைவர்பட்ட ஆய்வாளர்
தமிழ்நாடு கவின்கலை பல்கலைக்கழகம்
சென்னை

முன்னுரை

இறைவனோடு இசையோடு கலந்த சைவத் தமிழால் பாடியவர்களில் நம் காரைக்கால் அம்மையாரே தொன்மையானவர். இவர் எழுதிய பாடல்களில் ஒரு பாடலின் இறுதி வார்த்தையை அடுத்த பாடலின் முதல் வார்த்தையாகப் பயன்படுத்தி எழுதும் அந்தாதி முறையை முதன்முதலில் அறிமுகம் செய்தவரும் காரைக்கால் அம்மையார் தான். தான் பிறந்து வாழ்ந்த ஊரின் பெயயருடனேயே இணைந்து காரைக்கால் அம்மையார் என்று அறியப்படும் இவர் இயற்றிய பாடல்கள் அனைத்தும் தேவார காலத்துக்கு முன்பே இயற்றப்பட்டது. காரைக்கால் அம்மையாரின் பதிக முறையைப் பின்பற்றியே பிற்காலத்தில் தேவாரம், தேவாரப் பதிகங்கள் அமைக்கப்பட்டது மற்றுமொரு சிறப்பு.

வாழ்க்கையும், வரலாறும்

காரைக்கால் அம்மையார் தேவார மூவருக்கும் மூத்தவர் தமிழுக்கும், சைவத்துக்கும் ஆற்றிய தொண்டு அளவிட முடியாத ஒன்று.

"வங்கம்மலி கடல் காரைக்காலின் கண்வாழ் வணிகர்
அழகுமிகப் புனிதவதியார் பிறந்தார்"

பிறந்து பேசக் கற்றுக்கொண்டதிலிருந்து சிவபெருமானின் மீது பேரன்பு கொண்டு இருந்தார். விளையாட்டுப் பருவத்திலும் அவர் சிவபெருமானின் நாமத்தையே சொல்லிக்கொண்டு விளையாடுவாராம். வளர்ந்து பருவம் அடைந்த போது நாகப்பட்டினத்தைச் சேர்ந்த நிதிபதி எனும் புகழ்மிகு வணிகனின் மகன் பரமதத்தனுக்குப் புனிதவதியாரை திருமணம்

செய்துவைக்க விரும்பினார். விரும்பியபடி சில பெரியோர்களைத் தனதத்தனிடம் அனுப்பினார். இருவீட்டாரின் விருப்பம் போல் திருமணம் செய்து கொடுக்கப்பட்டார். தன்னுடைய மகளைப் பிரிய மனமில்லாத தனத்தத்தன் தன் இல்லத்திற்கு அருகிலேயே ஒரு இல்லம் அமைத்துத் தன்னுடைய மகளும் மருமகனும் இல்லற வாழ்க்கையை தொடங்குவதற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் செய்து கொடுத்தார்.

அம்மையாருக்கு நாளுக்கு நாள் சிவபெருமானின் பக்தியும், நேசிப்பும் முருகிப் பெருகி ஓங்கி வளர்ந்து கொண்டே இருந்தது. தன்னுடைய இல்லத்திற்கு வரும் சிவனடியார்களுக்கு அம்மையார் அமுதும் பொன்னும் பொருளும் கொடுத்து மகிழ்ந்து வந்தார்; அடியார் பசி தீர்த்தார்.

ஒருநாள் பரமதத்தனைக் காணவந்தவர்களில் சிலர். அவனுக்கு இரண்டு மாங்கனிகள் கொடுத்தார்கள். அவன் அவைகளை வாங்கி, அவர்கள் குறைகளைப் போக்கி அவ்விரு மாங்கனிகளையும் தன்னுடைய இல்லத்திற்கு அனுப்பிவைத்தான். அம்மையாரும் அப்பழங்களை வாங்கி வைத்தார். அந்த நேரத்தில் சிவனடியார் ஒருவர் பசியால் வாடி களைப்பாய் வந்து நின்றார். அம்மையார் அவர்தம் நிலையைக் கண்டு அடியார் பசி தீர்ப்பேன் என்று பாதம் கழுவ தண்ணீர் கொடுத்தார். களத்திலே திருவமுது படைத்தார். கறியமுது சமைக்கப்படாமல் இருந்த நிலையில் ''சிவனடியாரே விருந்தினராய் வந்துள்ளார்'' என்பதை உணராத புனிதவதியார் இப்பேற்றினும் சிறந்ததொன்றில்லை எனக் கருதி கணவன் அனுப்பிய இரண்டு மாங்கனிகளில் ஒன்றைக் கொண்டு வந்து படைத்தார். சிவனடியாரும் மாங்கனியுடன் அமுதுண்டு அம்மையின் செயலைப் பாராட்டிச் சென்றார்.

அம்மையாருக்கு வந்த சோதனை

பரமதத்தன் பசியாற பகலிலே தன்னுடைய இல்லத்திற்கு வந்தார். வழக்கம் போல் நீராடிவிட்டு அமுதுண்ண அமர்ந்தான். அம்மையார் திருவமுது, கறியமுது முதலியவற்றைப் படைத்தார். மேலும் அம்மையார், கணவன் கொடுத்தனுப்பிய மாங்கனியைக்

கொண்டு வந்து வைத்தார். அக்கனியைச் சுவைத்த பரமதத்தன் சுவையாக இருந்ததால், மற்றொரு கனியையும் கொண்டு வரும்படி கூறினான்.

கணவரிடம் கனி இல்லை என்று எப்படிச் சொல்வது என்று தவித்து அவ்விடம் விட்டு அகன்ற அம்மையார், நான் இப்படித் தவிப்பது தான் இறைவனின் திருவுளம் என்றால் அப்படியே ஆகட்டும் என்று இறைவனின் திருவடிகளையே நினைத்தப்படி ''உற்றவிடத்து உதவும் பெருமானே'' என்று இறைவனை நினைக்க ஆண்டவன் அருளால் ஒரு மாங்கனி அம்மையார் கையில் வந்து நின்றது. அந்த மாங்கனியைத் தன் கணவருக்கு இட்டார். அதை உண்ட பரமதத்தன் ஆகா இப்படியொரு சுவையில் இருக்கிறதே? இது நான் அனுப்பிய மாங்கனியாய் இருக்குமோ? கண்டிப்பாக இருக்கவே முடியாது. அது தான் கொடுத்து அனுப்பிய கனி இல்லை என்பதை உணர்ந்த பரமதத்தன், இதைப் போன்றதொரு உன்னதமான சுவைகொண்ட கனியானது மூன்று உலகங்களிலும் கிடைப்பது அரிது. இத்தகைய சுவை மிகுந்த கனி ஒன்றை நீ எங்கிருந்து பெற்றாய்? இது யார் கொடுத்த கனி? என்று கேட்டார்.

''திருவருள் உதவிய திறத்தை வெளியிடலாமோ
கணவனுக்கு உண்மையை மறைத்தலுந் தவறன்றோ''

என்று இருவழியிலும் அம்மையார் நெஞ்சம் சுழன்றது. பின்னர் அம்மையார் தெளிவுற்று, இக்கனி சிவனருளால் எனக்குக் கிடைத்தது என்று நடந்த நிகழ்வை அப்படியே விளக்கினார். பரமதத்தனோ திருவருள் நெறியல் நில்லாதவன். அவனுக்கு ஐயம் தீரவில்லை. அவன் அம்மையாரைப் பார்த்து சிவனருளா சிவனருளாயின் அவனருளால் இன்னுமொரு கனி கொண்டு வா பார்க்கலாம் என்றான்.

அம்மையார் அவ்விடத்தை விட்டு நீங்கி ''அடியார்க் கெளியனாகிய ஆண்டவனைச் சிந்தித்த வண்ணம் இறைவா எனக்கு இன்னுமொரு பழம் அருளால் வேண்டும் இல்லையேல் என்னுரை பொய்யாகும் என்று இறைவனை மனமுருகி வேண்டினார். எங்கும் நிறைந்த இறைவன் அருளால்

மாங்கனியொன்று மீண்டும் அம்மையாரின் கையில் வந்தது. அதை கணவருக்கு கொடுத்தார். பரமதத்தன் கையில் வாங்கிய கணமே அந்த மாங்கனி மறைந்து போனது. கனி மறைந்ததுமே அம்மையார் சாதாரண பெண் அல்ல இவள் தெய்வம்'' அம்மையாரை விட்டு நீங்குதல் வேண்டும் என்ற நோக்கத்தோடு தன் கருத்தை வெளியில் சொல்லாமல் அம்மையாரை விட்டுப் பிரிந்து வாழ்வதே நல்லது என நினைத்தான்.

பிறகு தான் கடல் மீது சென்று வாணிபம் செய்து பொருள் திரட்டி வருவேன் என்று சுற்றத்தாரிடம் வணிக நோக்குடன் செல்வதாகப் பொய்யுரைத்துச் சென்றான். பரமதத்தன் வணிகத்தில் ஈட்டியப் பொருள்களுடன் காரைக்கால் திரும்பாமல் பாண்டிய நாட்டுக்குச் சென்று அங்கேயே ஒரு வாணிப பெண்ணை மணந்து கொண்டான். அவளுக்கு ஒரு பெண் குழந்தையும் பிறந்தது. குழந்தைக்குத் தான் தெய்வமாகக் கொண்டு வழிபட்டு வரும் முதல் மனைவியின் பெயரையே வைத்து சிறப்பாக வாழ்ந்து கொண்டிருந்தான். பரமதத்தன் பாண்டிய நாட்டிலிருப்பதை புனிதவதியாரின் சுற்றத்தார் தெரிந்து கொண்டு அம்மையாரை அழகிய பல்லக்கில் அமரச் செய்து பாண்டிய நாட்டுக்கு அழைத்துச் செற்னர். அம்மையாரின் வரவைக் கேட்ட பரமதத்தன் மனைவி மக்களுடன் விரைந்து வந்து புனிதவதியாரின் திருப்பாதங்களில் விழுந்து வணங்கினான்.

அம்மையாரது படைப்புகள்

1. அற்புதத் திருவந்தாதி-101 (வெண்பா)

2. திருஇரட்டை மணிமாலை-20 (கட்டளைக் கலித்துறையும், வெண்பாவும்)

3. திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகம்-22 (விருத்தப் பாக்கள்)

அம்மையாரது படைப்புகளில் வெண்பா என்னும் பா வகையில் அந்தாதி முறையில் பாடப்பட்டுள்ளது. நளவெண்பா புகழேந்தியாரைக் காட்டிலும் அம்மையார் வெண்பாவை கையாளும் முறை உச்சம். யாப்பிற்காக சொல்லை சிதைவு

படுத்தாது. சொல்லும் பொருளும் இணைந்து இயங்கும் பாடல்களும், காதலுமட பக்தியும் கசிந்துவரும் பாவமும் பண்ணும் இசையும் துள்ளல் நடையும், மந்திரச்சொல்லின்பமும் அற்புதத் திருவந்தாதிக்கு அணிகலனாய்த் திகழ்கிறது.

''காலையே போன்றிலங்கு மேனி
விங்கிருளே போலும் மிடறு''

சூரிய உதயம், கடும்பகலின் சூடு, அந்திமாலை, கும்மிருட்டு என ஒரு நாளின் காட்சிக் கோலங்களைச் சிவனை நோக்கி எவ்வுருவமோ நின் உருவம் எனக் கேட்டு எங்கும் எதிலும் சிவபெருமானையே காண்கிறார்.

''சங்கரனை தாழ்ந்த சடையானை புண்ணியனை''

வேதியனை, வேதப்பொருளானை, வேதத்திற்கு ஆதியனை நோக்கி நீ ஏன் கொடிய பாம்பை அணிந்திருக்கின்றாய் என்று தாயன்பில் உருகி சிவனைக் காண்கிறார். ''தாழ்சடை எட்டுத்திசையும் வீசி இடம் திருவாலங்காடே'' சிவன் அழித்தற் கடவுள். அவனுக்கு உவப்பான இடம் சுடுகாடு. எங்கே அகங்காரம் அழிகிறதோ அங்கே மாயையும், கன்மமும் பொடியாகின்றன. அங்கே தான் திருக்கூத்தனின் திருநடனமும் திகழ்கின்றது. அம்மையாரைத் திருவாலங்காட்டில் இட்டுச் சென்ற சிவபெருமான் அம்மையாருக்காக நடனமாடியதையும் காணமுடிகிறது.

முடிவுரை

காரைக்கால் அம்மையார் சிவத்தாண்டவம், பக்தி, சித்தாந்தம், சிவபெருமானைப் பாடும் போது எடுத்தாண்ட புராணக்கதைகள், இலக்கிய வடிவங்கள் என பரந்துபட்ட துறைகள் எல்லாவற்றிலும் சைவத்தமிழ் நெறி வளர்த்த அறிஞர்களில் காரைக்கால் அம்மையார் ஓர் முன்னோடியாகவும், ஒரு தனி மனிதப் புரட்சியாளராகவும் திகழ்கிறார்.

74. வள்ளலாரின் சைவ நெறி



சு.தீபா
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
அக்சிலியம் கல்லூரி
வேலூர்

முன்னுரை

புறஇருள் நீக்கும் பெருஞ்சோதியை, அகஇருள் நீக்கும். அருட்பெருஞ்சோதியாக்கி அதனையே பாடுபொருளாகக் கொண்டு அருட்பாவினை அருளிய வடலூர் இராமலிங்கம் பிள்ளை, சைவ மரபில் பிறந்து பக்திப்புரட்சி செய்தவர். இவர் அருள் பழுத்த செழுங்கனி அகம் பழுத்த சிவஞான அமுது மருட்பா எனச்சொல்லி ஏசிய கூட்டங்களுக்கிடையே அருளமுதாய் அருட்பாவை நமக்களித்த தெய்வீம மணமலர். தன்னுடைய தூய்மையான பக்தியால் திருவிளங்க சிவயோகச் சித்தியெல்லாம் விளங்கப் பெற்றவர் சைவ நன்னெறிகளில் சன்மார்க்கத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்ட இராமலிங்க அடிகளாரின் சைவ நெறியை எடுத்தோதுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சைவப் பின்னணி

இராமலிங்க அடிகளார் பிறந்தது சைவ மரபு. இவரது பெற்றோரும் சிவனை ஆராதிக்கும் தொண்டர்கள். அதனால் வள்ளலாருக்கும் இயற்கையிலேயே சைவத்தில் ஈடுபாடு இருந்தது. பிறந்த ஐந்தாவது மாதத்திலேயே இறைநிலை உணர்ந்தவரானார். யாருக்கும் புலப்படாது இருந்த சிதம்பர இரகசியத்தில், இராமலிங்கர் இறைவனை உணர்ந்தார். இதனை,

> "தாய் முதலோரோடு சிறிய பருவமதில் தில்லைத்
> தலத்திடையே திரைதூக்கத் தரிசித்த போது
> வேய்வகைமேல் காட்டாதே என்றனக்கே எல்லாம்
> வெளியாகக் காட்டியவன் மெய்உறவாம் பொருளே"

என்ற வள்ளலாரின் பாடலாலேயே அறிந்துக் கொள்ளலாம்.

இந்நிகழ்வை யாரும் சொல்லாதபோதும் வள்ளலார் தானே உணர்ந்தது இறையருளாலேயே அன்றி வேறென்ன சொல்ல. உபாசன மூர்த்தி, முருகன், உபாசனகுரு, ஞானசம்பந்தர், உபாசனாநூல், திருவாசகம் என வள்ளலார் தனக்கான வழிபாட்டு நெறியினைச் சைவத்திலிருந்து தான், தேர்ந்தெடுத்துக் கொண்டார். திருவருட்பாவின், பெரும்பாலான பகுதிகள் திருவாசகத்தோடு ஒன்றுபடுவதிலிருந்து அதனை அறிந்து கொள்ள முடிகிறது. காய்வகை இல்லாது, உளத்தே கனிந்த கனியாகவும், கனவிலும், நனவிலும், விட்டுப்பிரியாத களிப்பாகவும், மணிமன்றில் நடம்புரியும் இறைவனை, தமது பக்திப் பயணத்திற்கு வள்ளலார் துணையாக்கிக் கொண்டார். உருவிளங்க, உயிர்விளங்க, உணர்ச்சியது விளங்க, உலகமெலாம் விளங்க அருள் புரியும் சிவத்தை தமது இளம் வயதிலேயே பெருந்தாயாக உணர்ந்தவர் வள்ளலார்.

இறைவனை அடையும் வழி

சைவர்கள் இறைவனை அடையும் வகையினை, வகுத்த விதத்தினை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற சைவச் சாதனங்களாகக் குறிப்பிடுவர்.

சாதனங்கள்	மார்க்கங்கள்	பயன்
1. சரியை	தாசமார்க்கம்	சாலோகம்
2. கிரியை	சற்புத்திர மார்க்கம்	சாமீபம்
3. யோகம்	சக மார்க்கம்	சாரூபம்
4. ஞானம்	சன்மார்க்கம்	சாயுச்சியம்

இந்த முறைகளில் இறைவனை அணுகுவது சைவர்களின் தன்மை. இத்தன்மைகளை அவர்கள் தங்களது கடமைகளாகவே கொண்டு செயல்படுவர். இச்சைவ நெறிகளில் வள்ளலார் அமைத்தது சன்மார்க்கம் அவர் அமைத்த சமரச சுத்த சன்மார்க்க சங்கம் என்பது புதியதான மதமோ, அல்லது சமயமோ, அல்ல. வேற்றுமைகளைக் களைந்து, அறியாமையை நீக்கி, சமுதாயத்தில் மறுமலர்ச்சியை நிலவச் செய்யும் நெறியாளர்கள் கூடும் சங்கமாகவே அதனை உருவாக்கினார். இதனை மா.பொ.சிவஞானம் அவர்களின் கூற்றினால் அறிந்து

கொள்ளமுடிகிறது. சைவ நெறிகளிலேயே உயர்ந்த சன்மார்க்கத்திலிருந்து சமரச சுந்த சன்மார்க்கத்தை வள்ளலார் அமைத்திருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது.

ஐந்தெழுத்தில் அனைத்தும் அடங்கும்

சைவமரபில் மரபில் பிறந்ததால் தானோ என்னவோ, வள்ளலருக்கு இயற்கையிலேயே நமசிவாய என்னும் மந்திரத்தின் மீது ஈடுபாடு இருந்தது. சிவாயநம என்றோ, நமசிவாய என்றோ சொல்லப்படும் ஐந்தெழுத்துக்கு ஈடுஇணையே இல்லை என்கிறார் வள்ளலார். சைவர்களின் மூலமந்திரமாகிய நமச்சிவாயத்தை போற்றிய விதத்திலிருந்து அவரது சைவப்பற்றினை நம்மால் அறிந்துக்கொள்ள முடிகிறது.

''நம்பினோர்களை வாழ்விக்கும் நலத்தை
நமச்சி வாயத்தை நான்மற வேனே''

என்று குறிப்பிடும் போதும், நல்ல வாழ்வை நான்மறைப் பொருளை நமச்சிவாயத்தை நான் மறவேனே என்று குறிப்பிடும் போதும், வள்ளலரின் சைவப்பற்றினை நன்கு உணர்ந்து கொள்ளமுடிகிறது. சைவர்கள் போற்றிய நமசிவாய என்னும் இந்த மந்திரம் தான் வள்ளலாரையும் வழிநடத்தியிருக்கிறது என்பதற்கு, மேற்கண்டவை போன்ற திருவருட்பா பாடல்களே சான்று பகர்கின்றன. நிலையாமைகள் பல நிறைந்த இவ்வுலகில் நிலையான நமச்சிவாயத்தை மறவாமல் இருந்தால் வீடுபேறு நிச்சயம் என்பதனை, வள்ளலார் பலப்பாடல்களில் பதிவு செய்திருக்கிறார்.

''பெற்ற தாய்தனை மக மறந்தாலும்
பிள்ளையைப் பெறுந்தாய் மறந்தாலும்
உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும்
உயிரை மேவிய உடல் மறந்தாலும்
கற்ற நெஞ்சகம் கலை மறந்தாலும்
கண்கள் நின்றிமைப் பதுமறந் தாலும்
நற்ற வத்தவர் உள்ளிருந் தோங்கும்
நமச்சி வாயத்தை நான்மற வேனே''

(திருவருட்பா-820)

என்னும் இவ்வரிகளில், நிறம் மாறும் உலகில் அனைத்தும் நிலைக்கும் என்ற கனவில் வாழ்ந்து வரும் மனிதர், உணரும் வகையில் வள்ளலார் நமச்சிவாயத்தை நற்றுணையாக்கியிருக்கிறார். உம்பர் வான்துயர் ஒழித்தருள் சிவம் என்றும், உலகமெலாம் புகழும் உத்தமப் பொருள் சிவம் என்றும், தம்பமாய் நின்று அகிலத்தைத் தாங்குவது சிவம் என்றும், தருத்தின் பயனாகத் திகழ்வது சிவம் என்றும் வள்ளலார் சிவத்தைப் போற்றுகிறார்.

சைவத்தின் மீது கொண்ட பற்று

வள்ளலார் சிறந்த சைவப்பற்றாளரான அவரது மூத்த சகோதரர் திரு.சபாபதிப்பிள்ளை அவர்களால் வளர்க்கப்பட்டவர். அதனாலேயே அடிகளாருக்கும், சைவத்தின் மீதும், சிவத்தின் மீதும், இயல்பான பற்று இருந்தது. அதனால் தான் அவர், தேவாரம், திருவாசகம் போன்ற சைவ நன்னெறிகளைப் போற்றும் பனுவல்களைப் படித்திருக்கிறார். இதற்குத் திருவருட்பாவே சான்று பகரக் காணலாம். வள்ளலார் தம்முடைய அருட்பாவில், சைவசமயக் குரவர் நால்வரையும் போற்றி,

''ஆளுடைய பிள்ளையார் அருள்மாலை
ஆளுடைய அரசுகள் அருள்மாலை
ஆளுடைய நம்பிகள் அருள்மாலை
ஆளுடைய அடிகள் அருள்மாலை''

என நான்கு மாலைகளை அருளியுள்ளார். இச்சொல்லாடல்கள் முறையே, திருஞானசம்பந்தரையும், திருநாவுக்கரசரையும், சுந்தரமூர்த்தியையும், மாணிக்கவாசகரையும் குறிப்பிடுவதை அறியமுடிகின்றது என ஊரன் அடிகள் குறிப்பிடுவார்.

வள்ளலாரின் சிவானுபவம்

வள்ளலார் ஆன்மீக வழியில் வந்த பாரம்பரியமிக்க சைவ சமயச் சொற்பொழிவுகளின் மூலம் சிவபெருமானை வணங்கிக் கைங்கரியம் செய்யும் குடும்பமாதலால் இவர் சிறுவயது முதலே, சைவநெறி இறை உணர்வுடன் திகழ்ந்து வந்தார்.

''திருவிளங்க சிவயோக சித்தியெலாம் விளங்க
சிவஞான நிலைவிளங்கச் சிவானுபவம் விளங்கத்
தெருவிளங்குத் திருத்தில்லைச் சிற்றம் பலத்தே
திருக்கூத்து விளங்கஒளி சிறந்ததிரு விளக்கே''

இப்பாடல் வள்ளலார், சிவானுபவத்தை உணர்ந்து போற்றிருப்பதை நன்கு அறிவுறுத்துகிறது.

வள்ளலார் போற்றிய அன்புநெறி

சிவனைப் போற்றும் சைவம் சாத்வீகத்தின் அடையாளம். சாத்வீகம் என்பது மென்மையான அன்பினை உணர்த்துவதாகும். வள்ளலாரும், இந்த எதிர்பார்ப்பில்லாத அன்பினைத் தான் விரும்பினார் என்பதற்கு வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்னும் அவரது கூற்றே மிகச் சிறந்த சான்று எனலாம். திருமூலரும்,

''அன்பும் சிவமும் இரண்டென்பார் அறிவிலார்
அன்பே சிவமாவதை ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவதை ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாகி அமர்ந்திருந் தாரே''

என்று சொல்லி, அன்பையும், சிவத்தையும், ஒருங்கிணைத்திருக்கிறார். வள்ளலாரும், அதே அன்பைத் தான் தனக்கான பாதையாக அமைத்துக் கொண்டார். அன்பும் சிவமும் வேறில்லை என்ற திருமூலரின் வாக்கை உண்மையாக்கியிருக்கிறார். அன்பே சிவம், அன்பே சத்தியம், அன்பே நித்தியம், அன்பே ஆனந்தம், அன்பே பேரின்பம், அன்பே அனைத்துமாகும் என்பது வள்ளலாரின் பதிவுகளில் சில. அன்பெனும் உயிருள் ஒளிர்தரும் அறிவே, அன்புருவாம் பரமசிவமே என்ற வள்ளலாரின் பக்தி காலப்போக்கில் சமுதாய நோக்கில் உருவெடுத்தது. சமூகசீர்திருத்த பாணியில் அவரது படைப்புகள் அமைந்தன. உண்மை வழிபாடு என்பது வெறும் உருவ வழிபாட்டில் அடங்கி விடுவதில்லை. இயலாமையில் உழல்வோரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் தான், இறைவழிபாடு என்பது நிறைவைக் காண்கிறது என்கிறார்

வள்ளலார்.

நிறைவாக

சிற்றம்பலத்து இறைவனை உள்வாங்கிய வள்ளலார். சைவ நெறியை அடித்தளமாகக் கொண்டபடி, தனது பக்திப் பயணத்தைத் தொடங்கினார். பக்தியில் பக்குவமடைந்த வள்ளலார் இறைவனைப் பரவெளியாய், மேகங்களாய், அணுக்களாய், தூலமுமாய், சூக்குமமாய், அதனினும் நுண்ணிய பொருளதாய். ஒருதன்மை அற்றதாய் ஒன்றுள் பலவாய், பலவற்றுள் ஒன்றாய், உணர்ந்திருக்கிறார். மனதார இறைவனைப் பாவித்து பரநிலை எய்தினர். கோயில்களிலும், கோயில் கோபுரங்களிலும் மகேசனைக் காண முயன்றவர் மனிதச் சேவையில் காண முயல்வதே சரியென்றுணர்ந்தார். அந்த வகையில், வள்ளலாரின் பக்தி, சக உயிர்களைப் பாதுகாக்கச் சொல்லிய உன்னத சக்தி.

75. தமிழ் இலக்கியங்களில் காணலாகும் சைவப் பதிவுகள்



முனைவர் கோ, செந்தில்செல்வி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
அகசிலியம் கல்லூரி
காட்பாடி, வேலூர்

முன்னுரை

உலகில் வாழும் உயிரினங்களில் தன் அறிவாலும் ஒழுக்கத்தாலும் செயலாலும் உயர்ந்து நிற்பவன் மனிதன். இதற்குரிய காரணங்கள் பல. அவற்றுள் தலையாயது அவன் மேற்கொண்டொழுகும் சமய நெறியேயாகும். இவ்வுலகில் நிலவும் சமயங்கள் பல. இதனைத் தான் தாயுமாவை அடிகளும்,

''வேறுபடு சமயமெல்லாம் புகுந்து பார்க்கில்
விளங்குபரம் பொருளே
நின்விளையாட்டலல்லால் வேறில்லை''

என்கிறார். இங்ஙனம் திகழும் சமயங்கள் பலவற்றுள் எது மெய்ச்சமய மெனின், பிறசமயம் கொள்கைகளை எல்லாம் புறம் தள்ளாது. இவையாவும் உயிர்களின் பக்குவ நிலைக்கு ஏற்ப இறைவனது கருணையினால் அமைந்தவை எனக் கொண்டு அவற்றின் வேறாய சிறப்புத் தன்மையினைக் கொண்டொழுகும் சமயமேயாகும். இத்தகையது தான் சைவ சித்தாந்த நன்னெறியாகிய சைவ சமயமாகும். இச்சிவ பரம்பொருளை வழிபட்டு வருகிறோம். இவற்றுள் சங்கமம் என்பது சிவனடியார்களைச் சிவம் என்று பாவித்து வழிபடுதலே ஆகும். இங்ஙனம் வழிபடுகின்ற சிவனைக் குறித்த தமிழ் இலக்கிய பதிவுகளைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

தமிழ் இலக்கியங்களில் சைவப் பதிவுகள்

தமிழ் இலக்கியங்களில் தொன்மையது சங்க இலக்கியமாகும். இவற்றிலிருந்து தான் அக்காலத்திய சமுதாய, அரசியல், சமயநிலைகளை அறியமுடிகின்றது. சங்க

இலக்கியங்களை விட மிகவும் தொன்மையானதென கருதப்படும் தொல்காப்பியத்திலும் சிவன் குறித்த பதிவுகளுக்குப் போதிய சான்றுகள் இல்லையெனிலும் சைவமரபு கருத்துக்கள் அடங்கியிருத்தலைக் காணமுடிகின்றது.

தொல்காப்பியம் கூறும் சைவ கருத்துக்கள்

சங்க இலக்கியங்களை விட மிகவும் தொன்மையானதெனத் தொல்காப்பியம் கருதப்படுகின்றது. இந்நூலில் திருமால், முருகன், இந்திரன், வருணன் ஆகிய கடவுள்களும் கொற்றவை என்னும் பெண்பாற் தெய்வமும் வழிபடப்பட்டன என்ற குறிப்புகள் உள்ளன. ஆனால் சிவனைப் பற்றிய செய்தி எதுவும் வெளிப்படையாக அறியப்படவில்லை. தொல்காப்பியம் ஓர் இலக்கண நூலாதலின் அவ்விலக்கண அடிப்படையில் சில சைவ மரபுக் கருத்துக்கள் அடங்கியிருப்பதைக் காணலாம். அவ்வகையில் உயிர், மெய் என்னும் தமிழ் மொழியின் எழுத்துப் பெயர்கள் சைவ சித்தாந்த மெய்ப்பொருளியலுக்கு ஏற்ப அமைந்துள்ளன. தனித்தியங்கும் இயல்புடைய உயிரை உயிர் எழுத்து குறிப்பிடுவதாகவும், உயிரால் இயக்கப்படுகின்ற உயிரல்லாத பொருள்களை மெய்யெழுத்து குறிப்பிடுவதாகவும் கருதலாம். இவை இல்லாத உயிர்களின் தோற்றம் உடலோடு கூடிய நிலையினால் தான் காட்சிப்படுகிறது என்பதனை மெய்யின் வழியது உயிர் தோன்று நிலையே என்றும், மெய்யின் வழியாகத் தோன்றினும் உயிர் தன் அடிப்படையில் மாறுவதில்லை என்பதனை மெய்யோடு இயையினும் உயிர் இயல் திரியா எனவும் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது.

தொல்காப்பியத்தில் வரும் திணை என்ற சொல்லுக்கு ஒழுக்கம் என்பது ஒரு பொருளாகும். சைவ சித்தாந்த ஒழுக்க நெறியினைத் திணையில் தொல்காப்பியமும் குறிப்பிடுகின்றது. பிறவியின் நிலையாமையை உணர்ந்து வாழ்க்கையின் துன்பங்களை எதிர்த்து நிற்பதுடன் சிறந்ததைப் பெறுவதற்குப் பயிற்சியும் வேண்டும். இல்லறத்தில் வாழ்ந்து அதற்கு அப்பால் செல்லும் முயற்சியில் தனித்துச் செல்லாது மனைவி மக்கள் உள்ளிட்ட பிறரையும் சேர்த்துக் கொண்டால் அவர்களும் ஊக்கம்

பெறுவர் என்பதனைத் தொல்காப்பியம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

''காமம் சான்ற கடைக்கோட் காலை
ஏமம் சான்ற மக்களோடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே''

இதே போன்ற காலம் உலகம் உயிரே உடம்பே என்னும் நூற்பாவில் ஊழ்வினை தானே வந்து உயிர்களைப் பற்றாது. அறங்காவலனாகிய இறைவன் வகுக்கும் வழியே அது உயிர்களை வந்தடையும் என்பதனைத் தொல்காப்பியம் சுட்டுகின்றது. தொல்காப்பியத்தில் வரும் கந்தழி என்னும் ஒரு பற்றுக்கோடுமின்றி அருவாகித் தானே நிற்கும் தத்துவம் கழந்த பொருள் என விளக்கப்படுகின்றது. இச்சொல் சார்போ இல்லாத இறை (பதி) சரியான சார்பை உணராததால் பற்றப்பெற்ற உயிர் (பசு) தவறான சார்பும் பற்றுமாகிய தளை (பாசம்) ஆகிய முப்பொருளின் இருப்பும் இயல்பும் உள்துறையாகக் கொண்டதெனலாம்.

தொல்காப்பியம் முதலில் குறிப்பிட்ட தெய்வங்களையன்றிக் கடவுள் என்ற சொல்லையும் பயன்படுத்துகின்றது. இச்சொல் கடந்த நிலையைக் குறிக்கும். ஆனால் இச்சொல் சிவனைக் குறிப்பதாகக் கொள்வதற்குப் போதிய சான்றுகள் இல்லை எனலாம்.

சங்க இலக்கியத்தில் காணலாகும் சிவன் பற்றிய பதிவுகள்

சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை நூல்களிலோ, பத்துப் பாட்டிலோ சிவன் என்னும் சொல் பயிலப்படவில்லை. எனினும், அகநானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, கலித்தொகை ஆகியவற்றில் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் சிவனைப் பற்றியவையாகும். ஆனால் இப்பாடல்கள் பிற்காலத்தில் இணைக்கப்பட்டவை என்ற கருத்தும் உள்ளது. இவ்விலக்கியங்களில் காணப்படும் சிவனைப் பற்றிய குறிப்புகளைச் சிவனது திருமேனியைக் குறிப்பனவாகவும்,

ஏந்தியுள்ள பொருட்கள், ஊர்தி பற்றியனவாகவும் உறைவிடங்கள் பற்றியனவாகவும் செயல்கள் பற்றியனவாகவும் வகைப்படுத்தலாம்.

சிவனின் திருமேனி பற்றிய குறிப்புகள்

தாழ்சடை பொலிந்த அருந்தவத்தோன் (புறம்) முக்கட் செல்வன் கறைமிடற்று அண்ணல் நலமனிமிடற்று அண்ணல் (புறம்) நீலமேனி வாழிலை பாகத்தொருவன் (ஐங்குறுநூறு) வைங்காட் பார்ப்பான் (பரிபாடல்) ஈர்ஞ்சடை அந்தணன் மணிமிடற்று எண்ணகியல் (கலித்தொகை)

சிவனின் திருமேனி தாங்கியுள்ள பொருட்கள், ஊர்தி பற்றிய குறிப்புகள்

கொன்றை மலர் அணிந்திருத்திருந்ததைப் பற்றிப் புறநானூறு பின்வருமாறு கூறுகிறது. கண்ணி கார் நறும் கொன்றை காமர் வண்ண மார்பில் தாருங்ெ ,ான்றை (புறம்)

பிறைச்சந்திரனைத் தலையில் சூடியதைப் பற்றிப் புறநானூறும் மேகத்தை கையிலயேந்தியுள்ளதை ஐங்குறுநூறும், கங்கையைத் தலையில் வைத்துள்ளதையும் திருவாயில் வேதங்களைக் கொண்டிருப்பது ஆகியவற்றைக் கலித்தொகையும் குறிப்பிடுகின்றன. மழுவாள் நெடியோன் தலைவனாக என மதுரைக் காஞ்சி மழுவைத் தாங்கியுள்ளதைக் குறிப்பிடுகின்றது. கலித்தொகை கையில் கபாலம் ஏந்தி இறைஞ்சுவதையும், புலித்தோல் ஆடையையும் குறிப்பிடுகின்றது. சிவனின் ஊர்தி பற்றி புறநானூறு ஊர்திவால் வெள்ளேறே சிறந்த சீர்கெழு கொடியும் அவ்வேறேன்ப எனப் பேசுகின்றது.

காப்பியங்களில் காணலாகும் சைவ குறிப்புகள்

இருபெரும் தமிழ்க் காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றில் கூடச் சிவன் என்ற பெயர் பயிலப்படவில்லை. ஆனால் மணிமேகலை சைவ மரபைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. சிலப்பதிகாரம் பல கடவுளரின் கோயில்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. அவற்றுள் சிவன்

கோயிலுக்கு முதலிடம் தரப்பட்டுள்ளது.

''பிறவா யாக்கைப் பெரியான் கோயிலும்
ஆறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்''

சிலப்பதிகாரத்தில் தான் முதன் முதலாகப் பஞ்சாக்கரமாகிய திருவைந்தெழுத்தைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது.

''அருமறை மருங்கின் ஐந்திலு எட்டினும்
வருமுறை எழுத்தின் மந்திரம் இரண்டும்
ஒருமுறையாக உளம்கொண்டோதி''
(சிலம்பு 11, அடிகள் 128-30)

சிலப்பதிகாரம் சேரன் செங்குட்டுவனைச் சிவனின் அருளால் பிறந்தவன் என்று பேசுகின்றது.

''செஞ்சடை வானவன் அருளினில் விளங்க
வஞ்சித் தோன்றிய வானவ''

செங்குட்டுவன் சிவனையும், விட்ணுவையும் சிவனுடைய தாளைத் தலையிலும் விட்ணுவின் மாலையைப் புயத்திலும் அணிந்ததையும் சிலம்பு குறிப்பிடுகின்றது. மணிமேகலையும் பல கடவுள்களின் கோயில்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. அவற்றுள்ளும் சிவன் கோயிலே முதலிடம் பெற்றுள்ளது.

''நுதல்விழி நாட்டத் திறையோன் முதலாப்
பதிவாழ் சதுக்கப் பூதமீறாக''

மணிமேகலையில் முதன்முதலாகச் சிவனின் அட்டமூர்த்தம் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. மணிமேகலை (27,86-95) இறைவன் சூரியன், சந்திரன் ஆகிய இரு ஒளிகளையும், ஐந்து பூதங்களான நிலம், நீர், நெருப்பு, காற்று, வெளி ஆகியவற்றையும் செய்பவனாகிய உயிரையும் வடிவங்களாக உடையவன் என்றும், இறைவனது உடல் பன்மையைப் பற்றிய அறிவானது என்றும், இறைவன் இயலுலகைப் படைத்தலையும் அழித்தலையும் ஒரு விளையாட்டாகச் செய்கின்றான் என்றும், பிறப்பு இறப்புக்களினால் உயிர்களுக்கு ஏற்படும் களைப்பை இறைவன் நீக்குகின்றான் என்றும், அவனை விட எதுவுமில்லை

என்றும், அவனது பெயர் ஈசானன் என்றும் பேசுகின்றது.

காப்பிய காலத்திற்குப் பின்னும் பல்லவர் காலத்தின் தொடக்க நிலையிலும் தோன்றியவராகக் கருதப்படும் திருமூலர் தமது திருமந்திரத்தில் சைவ சித்தாந்தத்தைப் பற்றி முதன் முதலாகக் குறிப்பிடுகின்றார். ஆவர் சைவத்தில் வழங்கி வந்த பல்வேறு பிரிவுகளைப் பற்றியும் நூலில் குறிப்பிட்டுள்ளார். திருமூலரின் திருமந்திரமே தமிழ்நாட்டின் இருண்ட காலமெனக் கருதப்படும், கி.பி. 5,6வது நூற்றாண்டுகளில் ஏற்பட்ட சைவத்தின் வளர்ச்சி பற்றி அறிய உதவுகின்ற சான்றாகத் திகழ்கின்றது. திருமூலரின் திருமந்திரத்திற்கு முற்பட்ட தமிழ் இலக்கியங்களில் சிவன் என்ற பெயர் மேலானதாகக் குறிப்பிட்டிருந்ததற்குப் போதிய சான்றுகள் இல்லையென்றும் ஆனால், கடவுளுக்கு இருபெயரிட்டு வழங்கலாம் என்பதினையும் மட்டுமே பழங்காலத் தமிழர் அறிந்தும் பயின்றும் வந்துள்ளனர் எனக் கருதலாம் என்றும் வி.வி. ரமண சாத்திரிகள் குறிப்பிடுகின்றார்.

முடிவுரை

தமிழ்மொழியில் உள்ள சமய நூல்களிலும், இலக்கியங்களிலும் சைவப்பதிவுகள் மிகுந்து காணப்படுகின்றன. தமிழ் நாட்டில் பார்க்குமிடமெல்லாம் சிவாலயங்களை அமைத்தும், சைவத் திருமுறைகளை வகுத்தும் எந்நாட்டவர்க்கும் இறைவனாகிய சிவபிரானைப் போற்றி வழிப்பட்டு வருவதைக் காணமுடிகிறது. சிவனின் திருமேனி பற்றிய குறிப்புகளையும், சிவனின் திருமேனியுள்ள பொருட்கள், ஊர்தி, இறைவன் உறையும் இடம் முதலிய குறிப்புகளையும் இக்கட்டுரை வழி உணரமுடிகின்றது.

76. திருமந்திரம் உணர்த்தும் அரசாட்சி முறை



முனைவர் **மோ. ஞானப்பூங்கோதை**
மெய்கண்டார் அருள்நெறி மன்றம்
மதுரை

முன்னுரை

உலகம் உய்யத் திருமூலரால் அருளிச்செய்யப்பட்ட அரும்நூல் திருமந்திரம். நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழியாம் மந்திரம் நினைப்பவரைக் காத்து நிற்கும். ஆம் திருமூலரின் வாய்மொழியாம் திருமந்திரமும் உலகையே காத்து நிற்கும். மக்களை முன்னெடுப்பதில் மூவன் உரை செய்த மூவாயிரந் தமிழும் முன்னிற்பவையே யெனினும் அவற்றுள் பத்துத் தமிழை அவற்றித் தமிழாய்க் கொண்டு அரசாட்சி முறையை முரசறைந்து காட்டுவது இக்கட்டுரையின் நோக்கம்.

மன்னன், உலகுக்கு உயிர்

மன்னனானவன் உலகுக்கு உயிர் போன்றவன் என்பது சங்க இலக்கிய மரபு. இவ்வுலகுக்கு யான் உயிர் என்னும் அறிதல் ஒவ்வொரு மன்னனுக்கும் இருக்க வேண்டியது அவசியமாகும்.

> ''நெல்லும் உயிரன்றே ; நீரும் உயிரன்றே ;
> மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்;
> அதனால் யான் உயிர் என்பது அறிகை
> வேல்மிகு தானை வேந்தர்க்குக் கடனே'' *(புறம்,186)*

என்கிறார் மோசிகீரனார். அதாவது நாட்டு மக்களாகிய உடம்பைக் காத்தும் நிலைநிறுத்தியும், உயர்த்தியும் நிற்கும் உயிர் போன்றவன் மன்னன் என்பது இப்பாடல்வழி உணர்த்தப்படுகிறது.

> ''மண்ணில் வாழ்தரு மன்னுயிர்கட்கெலாங்
> கண்ணும் ஆவியுமாம் பெருங் காவலன்''

என்று சேக்கிழார் பெரியபுராணத்தில் எடுத்துரைக்கிறார். எனவே

ஒரு அரசு என்பது ஒரு நாட்டிற்கு எவ்வளவு அவசியமானது என்பதும் அதன் முக்கியத்துவம் நமக்குப் புரியவருகிறது.

அறநெறி நிற்றலே அரசர்க்கு அழகு

அறம், பொருள் இன்பமான அறநெறியை வழாமமற்புல்லி, மறங்கடிந்து, வையம் போற்ற அரசாள்வதே ஒரு அரசனக்கு அழகாகும். இம்மையில் மிகுந்த செல்வத்தையும் மறுமையில் சிறந்த முத்தியையும் வேண்டிடின் ஒரு மன்னன் அறநெறி பிறழாமல் ஆட்சி செய்தல் வேண்டும் என்கிறது திருமந்திரம். மேலும் தம்டைய சிறந்த ஆட்சியின் கீழ் வாழும் குடிகளிடத்து அவர்தம் வருவாயுள் ஆறில் ஒரு பங்கே பெறுதல் வேண்டும்; அதற்கு மேற்பட விரும்புதல் அரசற்குக் குற்றமாகும் என்றும் காட்டுகிறது. அப்பாடல்,

> ''திறந்தரு முந்தியும் செல்வமும் வேண்டின்
> மறந்தும் அறநெறியே ஆற்றல் வேண்டும்
> சிறந்த நீர் ஞாலஞ் செய்தொழில் யாவும்
> அறைந்திடில் வேந்தனுக்கு ஆறில் ஒன்றாமே''

என்பதாகும்.

குடிகாத்தலே முடிமன்னன் கடன்

மன்னனானவன் தன் ஆட்சியின் கீழ் வாழும் குடிமக்களுக்கு எவ்வித இடையூறும் வாராவண்ணம் தக்கவாறு காத்து நிற்க வேண்டியவனாவான். அவன் அன்பிலும், அறிவிலும், பொறுமையிலும், வீரத்திலும், மாணத்திலும் சிறந்து விளங்குவது பெரிதல்ல ; தம் குடிமக்களுக்குத் தம்மாலோ, தம் பரிசனத்தாலோ, பகைவராலோ, கள்வராலோ, பிற உயிரினங்களாலோ இடையூறு ஏற்படின் அக்கணமே விரைந்து அவ்விடையூற்றினைக் களைவதே அவனது முதற்கடமையாகும். அதிலும் தவமியற்றுவோரைக் காத்தல் மிக அவசியமாகும்.

> ''மாதவர் நோன்பும் மடவார் கற்பும்
> காவலன் காவல் இன்றெனின் இன்று''

என்கிறது மணிமேகலை பசுக்களையும், பெண்களையும்

துறவறத்ததாரையும், தேவர்களாலும் போற்றப்படுகின்ற சிவனடியார்களையும் அவர்தம் வேடத்தையும் மதித்துக் காத்தல் மன்னவனுக்குக் கடமையாகும். இக்கடமையை அவன் செய்யாவிடில் மறுமையில் மீளா நரகத்திற்குப் புகுவான் என்று,

''ஆவையும் பாவையும் மற்றற வோரையுந்
தேவர்கள் போற்றுந் திருவேடத் தாரையும்
காவலன் காப்பவன் காவா தொழிவனேல்
மேவும் மறுமைக்கு மீளா நரகமே'' (திருமந்,242)

என்ற பாடல்வழித் திருமூலர் எடுத்துரைக்கிறார். சிவ வழிபாட்டிற்குப் பால் முதலான ஐந்தையும் தருவன பசுக்கள் அறவோர்க்கு அளித்தல், அந்தணர் ஒம்பல், துறவோர்க்கு எதிர்தல், விருந்தெதிர் கோடல், சிவ வழிபாட்டிற்கு உதவல் எனப் பெண்களின் அறநெறி வெகு சிறப்புடையதாய்க் காட்டப்பட்டுள்ளது. மேலும் அறநெறிப் பொருளை உணர்த்துபவர்கள் துறவறத்தாரும் சிவனடியார்களும் ஆவர். ஆக மன்னன் இந்நால்வர்க்கும் நலிவு வாரா வண்ணம் கர்த்தாவே அறநெறி காத்தலாகும் என்பதைத் திருமூலர் நுட்பமாக இப்பாடலில் காட்டியுள்ளார். இதனால் உலகநெறியும் காக்கப்படுகிறது. உய்யும் நெறியாம் மெய்ஞ்ஞான நெறியும் காக்கப்படுகிறது.

சமயநெறி போற்றல்

ஒரு மனிதனைப் பக்குவப் படுத்துவது சமயமாகும். தனிமனித மேன்மையே ஒரு நாட்டின் மேன்மைக்கு ஆதாரமாகும். ஆதலால் நாட்டில் சமயநெறியை வலியுறுத்துவது மன்னனின் கடமையாகும். ''அரசன் எவ்வழி அவ்வழி குடிகள்'' ஆதலினால் அரசினர் தாம் முதலில் சமயநெறியைக் கடைபிடித்து நிற்பதோடு, தம் குடிமக்களும் அவ்வாறே சமயநெறியைக் கடைப்பிடிக்குமாறு செய்தலில் கருத்துடனும் கண்டுப்பிடிப்புடனும் இருத்தல் வேண்டும். அப்பொழுது தான் நாடு முழுவதும் நல்லுணர்வு தானே பரவி நிற்கும். மெய்ப்பொருள் நாயனார் இவ்வாறாகத் தம் நாட்டை அறநெறி வழாமல் ஆண்ட திறத்தைப் பெரியபுராணம் விரித்துரைக்கும்.

மக்கள் எச்சமயத்தைச் சார்ந்தவராயினும் அச்சமய ஒழுக்கங்களை முறையாகக் கடைப்பிடிப்பதில் கண்டிப்புடன் இருத்தல் அவசியமாகும். சமய ஒழுக்கத்தில் நில்லாதாரை இம்மையிலேயே மன்னானானவன் தண்டனை கொடுத்துத் திருத்த வேண்டும். இல்லையேல் மறுமையில் இறைவன் தரும் பெருந்தண்டனைக்கு அவர்கள் ஆளாக நேரிடுவதோடு அரசனுக்கும் தண்டனை பிறக்கும். இக்கருத்தைத் திருமந்திரம்,

''தத்தம் சமயத் தகுதி நில்லாதாரை
அத்தன் சிவன் சொன்ன ஆகம நூல்நெறி
எத்தண்டமும் செய்யும் மும்மையில் இம்மைக்கே
மெய்த்தண்டம் செய்வது அவ்வேந்தன் கடனே''
(திருமந்.246)

என்னும் பாடல்வழிப் புலப்படுகிறது. ''யாதாயினும் ஒரு சமயத்தை மெய்யென்று நம்புகிறவன் அந்தச் சமயத்தின் வழி ஒழுகும் ஒழுக்கம் இல்லாத வாழுது பயன் பெறான். அந்த சமயத்திற்குரிய கடவுள் இவரென்பதும் அவருடைய இலக்கணங்களும், அவரால் விதிக்கப்பட்ட புண்ணியங்களும், விலக்கப்பட்ட பாவங்களும், அந்த புண்ணிய பாவங்களின் பலன்களாகிய சுக துக்கங்களும், அவரை வழிபடும் முறைமையும், அந்த வழிபாட்டினாலே பெறப்படும் பிரயோசனமும் ஆகிய இவைகளை அறியும் அறிவு உதியாத போது அந்த ஒழுக்கம் உண்டாகாது. சற்குரு முகமாக விதிப்படி பெறப்படும் சமயநூல் கல்வி கேள்வி இல்லாதபோது அந்த அறிவு உதியாது. ஆதலால் கல்வியும் அறிவும் ஒழுக்கமுமாகிய இந்த மூன்றும் வேண்டும். இது எல்லாச் சமயத்தார்க்கும் ஒத்த துணிவு என்று ஆறுமுக நாவலர் கூறியிருப்பது இங்கு சிந்திப்பதற்குரியதாகும்.

மன்னானனவன் நாள்தோறும் நாட்டில் தவநெறி நாடிப் பின்னர் அறநெறி (சிவநெறி) நாட வேண்டும் என்று காட்டுகிறது திருமந்திரம் (238) சிவநெறியை எங்கும் பரப்பும் வகையில் இறைவனது அருளையும், அதன்வழி மழை முதலான இயற்கையின் செழுமையையும் மக்களுக்கு வருவிக்கிறான்

மன்னன்.

மன்னனும் மதுவுண்ணாமையும்

பெறுதற்கரிய அறிவைப் பெற்றிருந்தும் மது உண்பவராயின் அது அவ்வறிவை மழுங்கச் செய்வதோடு, மனம் மொழி மெய்யைத் தன்வசப்படுத்தி, நாண் அழியச்செய்து, கேட்டினையே செய்விக்கும். இதனால் இருமையும் கெடும். பொருளாலும், படையாலும் பெரிதே சிறந்து விளங்கும் அரசானயினும் அவன் மதுவை விரும்புவானாயின் அவனுக்குப் பகைவர் எவரும் அஞ்சமாட்டார். வினையை விலை கொடுத்து வாங்குவதற்கு ஒப்பாகும்.

"கையறி யாமை உடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல்"

என்பார் திருவள்ளுவர். குடிமக்களும் பொருள் கொடுத்து இக்கேட்டினை வரவழைத்துக் கொள்ளின் நாட்டின் நிலை என்னாகும்? தான் மதுவை விலக்குவதோடு தம் நாட்டிலும் கள்ளுண்ணுதலை ஒழித்தல் ஒரு அரசனுக்கு முக்கியமான கடமையாக இருக்க, அவன் தானும் கள்ளுண்டு தம் மக்களையும் அக்கேட்டில் வீழச் செய்து, அதற்கென வரியும் வாங்குவானாயின் அந்நாட்டின் நிலை என்னாகும் என்பதை நினைத்துக்கூட பார்க்க முடியவில்லை.

திருமூலர் திருமந்திரத்தில் இவ்வாறு நர்ட்டில் எவரேனும் கள்ளுண்பராயின் அவருக்கு உடனே தண்டனை கொடுத்துத் திருத்த வேண்டியது அரசனது முதற்கடமை என்று காட்டுகிறார். தண்டிக்க வேண்டும் என்று திருமந்திரம் காட்டுவதிலிருந்து கள்ளுண்ணுவதற்கு எவருக்கும் உரிமையில்லை என்பது புரியவருகிறது. இது ஒரு தீயச் செயல் என்றும் அறநெறிக்குப் புறம்பானது என்றும் மக்களும் உணர வேண்டும்; அரசனும் அதை அறியவேண்டும். மக்களைக் கண்ணிலிருந்து காப்பாற்ற வேண்டிய அரசனே கள்ளுண்டு திரிவதோடு, அதற்கு வழிவகை செய்தும், அதனைத் தன் வருவாய்க்குச் சாதகமாக்கிக் கொண்டும் ஆட்சி செய்வானானால் அந்நாடு எவ்வளவு சீர்குலைந்து போகும் என்பதையும், அது நரக தண்டனைக்கு ஆளாக்கும் என்பதையும்

ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

> "கால் கொண்டு கட்டிக் கனல்கொண்டு மேவேற்றிப்
> பால் கொண்டு சோமன் முகம்பற்றிஉண்ணாதோர்
> மால் கொண்டு தேறலை உண்ணும் மருளரை
> மேல் கொண்டு தண்டஞ்செய் வேந்தன் கடனே"
> (திருமந்.245)

என்பதே இக்கருத்தை உணர்த்தும் திருமந்திப் பாடலாகும். இப்பாடலில் மேலும் ஒரு கருத்துப் பெறப்படுகிறது. காலாகிய பிராணவாயுவை இடகலை பிங்கலை வழிச் செல்லாதவாறு தடுத்து, சுழுமுனை வழி ஏறச் செய்து, அதனால் அங்கு வளர்கின்ற மூலக்கனவை மேலேற்றிய நிலையில் உடம்பிலுள்ள ஆறு ஆதாரங்களில் ஆஞ்ஞை என்றழைக்கப்படும் சந்திர மண்டலத்தில் பொழியும் ஆனந்த அழுத்தத்தை உண்டு நிட்டையில் அழுந்தி அமைதி கொள்ளுதல் யோகப் பயிற்சியால் பெறப்படுகின்ற ஒன்றாகும்.

> "ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி ஒண்சுடர்
> ஞான விளக்கினை ஏற்றி நன்புலத்
> தேனை வழித்திறந்து ஏத்துவார்க்கிடர்
> ஆன கெடுப்பன அஞ்செழுத்துமே"

என்று திருஞானசம்பந்தர் தேவாரம் எடுத்துரைப்பதை அறியலாம். இவ்வாறு யோக நிட்டையில் அழுந்த முடியாதவர் கள்ளுண்ணுவதன் வழி இவ்வானந்தத்தைப் பெற முடியும் என்று தவறாக நினைந்து கள்ளுண்டுத் திரியும் மருளரைத் தண்டிக்க வேண்டியது வேந்தனின் கடமை என்பது இத்திருமந்திரப் பாடலின் வழித் தெரியவருகிறது.

சோமன் என்றால் சந்திரன், காற்றைத் தடுத்துச் சுழுமுனையில் ஏறச்செய்து உடம்பின் கண் உள்ள சந்திரமண்டலத்தில் நிறுத்திச் செய்யப்படுகின்ற யோக நிட்டையின் பயனே சோமபானம் என்பதைப் புரிந்து கொள்ளாமல் அதை வேள்வியின் கண் தயாரிக்கப்படும் பானம் எனக் கொள்ளுதல் அறியாமையே. உயிருக்கு நலம் பயக்கும்

இச்சோமபானத்தைப் பெறுவதற்கு முயற்சிக்காமல் உடலுக்கும் உயிருக்கும் கேடு விளைவிக்கும் பானத்தைத் (கள்ளை) தயாரிப்போர்க்கும் உண்போர்க்கும் அரசன் தான் அறிவு புகட்ட வேண்டும் என்பதே திருமந்திரம் உணர்த்தும் பாடமாகும்.

யோக கலையைப் புரிந்து கொள்ளாததனாலும், சமயநெறியின் நில்லாததனாலும் தவறாகப் பொருள் கொண்டவையே மதுபான உபயோகிப்பிற்குக் காரணமாகும். ஒருவனது இருகால்களையும் பனைமரத்தில் ஏறுவதற்கேற்பக் கட்டி, சுண்ணாம்புக் கனல் கூடிய பானையை அம்மரத்தின் மேலேற்றி, பனைப் பாளையிலிருந்து வடியும் பாலை அப்பானையில் இறக்கி இரவு வரை சந்திர ஒலையில் வைத்துக் கொணர்கின்ற கள் என்று தவறாகப் பொருள் கொண்ட தன்மையைத் திருமூலர் இப்பாடல் வழி நமக்கு எடுத்துரைக்கிறார்.

நிறைவுரை

ஒரு நாடு, சமயநெறியைப் பின்பற்ற ஒழுக வேண்டியது அவசியமாகும். அறநெறி வழிநின்று ஆட்சி செய்ய, சமயநெறியே மன்னனுக்குத் துணை செய்யும். அதற்கு அவ்வச் சமய வேடநெறியும் போற்றப்பட வேண்டும். அதில் உள்ள கண்டிப்பே மனிதனின் உடல் தூய்மைக்கும், மனத்தூய்மைக்கும் ஆதாரமாகும். அதுவே ஒட்டுமொத்த சமுதாயத் தூய்மைக்கும் சுற்றுச்சூழல் தூய்மைக்கும் வழிவகுக்கும். அடுத்ததாகக் கள்ளுண்ணாமையை வலியுறுத்துவது ஒரு அரசின் தலையாய கடமையாகும். இவ்விரு செயல்பாடுகளும் மாறி அமைந்திருக்கும் ஒரு அரசு நிச்சயமாக ஒரு சிறந்த அரசாக இருக்க முடியாது.

77. குலச்சிறையாரின் வாழ்வும், சைவத்தொண்டும்



முனைவர் க.ஆனந்தி
உதவிப்பேராசிரியர்
பான் செக்கர்சு மகளிர் கல்லூரி
தஞ்சாவூர்

முன்னுரை

காப்பியங்கள் எழுந்த காலத்தில் புராணங்களும் தோன்றின. வழி, வழியாக சொல்லப்பட்டு வந்த கதைகளும், வரலாற்றுச் செய்திகளும் தான் புராணங்கள் என்று அழைக்கப்பட்டது. பெரியபுராணம் இயற்றிய சேக்கிழார் நாயன்மார்கள் வாழ்ந்த ஊர்களுக்கு நேரில் சென்று அவ்விடங்களில் செவிமரபாக வழங்கிய செய்திகளைத் தொகுத்து செய்யுள் இயற்றினார் என்பர். அந்த வகையில், பாண்டிய மன்னனின் அமைச்சராகவும், பாண்டியன் மனைவியான மங்கையர்க்கரசியாரின் திருத்தொண்டுக்குத் தொண்டராக விளங்கியவருமானவர் தான் குலச்சிறைநாயனார். பாண்டிய நாட்டின் மணமேற்குடி என்னும் பதியில் தோன்றியவர் திருஞானசம்பந்தரின் பொன்னடியைப் போற்றிப் பாண்டிய நாட்டில் சைவநெறி பெருகுவதற்கு துணை நின்றவர். அதன் பாங்கினை பெரியபுராணம் வழி இக்கட்டுரையில் காண்போம்.

மணமேற்குடியின் சிறப்பு

பலரால் பாராட்டப்பெற்ற தொன்மையான புகழ் கொண்ட பாண்டியநாட்டில் செந்நெல் விளங்கும் வயல்களும், இனியகரும்புத் தோட்டங்களும், நெருங்கி வளர்ந்த பாக்குமரங்களும் என நிலை பெற்ற வளங்களை உடையதாக விளங்கியது மணமேற்குடி என்னும் ஊராகும். வள்ளல் தன்மையில் சிறந்து விளங்கும் பெருமக்கள் வாழும் ஊராகவும் திகழ்ந்து மணமேற்குடி. இதனை,

"செந்நெல் ஆர்வயல் தீங்கரும் பின் அயல்

துன்னுபூகப் புறம்பணை சூழ்ந்தது
மன்னுவண்மையினார் மணமேல்குடி'' (பெரிய. 2,1700)

என்னும் பாடல் வழி அறியமுடிகிறது.

குலச்சிறையாரின் பண்புரைத்தல்

வன்தொண்டராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளால் ஒப்பற்ற பெருநம்பி என்று ஓதப்பெற்ற, சொல்லுதற்கு அரிய சிறப்பின் மிக்க குலச்சிறையார், உறுதிமிக்க பக்தியால் திருத்தொண்டில் தவறாது விளங்கினார். சிவபெருமானின் சிறந்த தொண்டராக விளங்கிய நாயனார், சிவனடியார்கள் மீது அன்பு கொண்டும், அவர்களின் திருப்பாதங்களை வணங்கி மகிழ்ந்தும், இனியமொழிகளால் ஏத்திக் கூறுபவராகவும் விளங்கினார். இதனை திருஞானசம்பந்தர் 3-ஆம் திருமுறை, திரு ஆலவாய்த் திருப்பதிகத்தில் குலச்சிறையாரின் திருத்தொண்டுப் பற்றிப் பாடியுள்ளார்.

''கணங்களால் வரினும் தமியராய் வரினும்
ஆடியவர் தங்களைக் கண்டால்
குணங்கொடுபணியும் குலச்சிறைகுலாவும்
கோபுரம் சூழ்மணிக் கோயில்
மணங்கமழ் கொன்றைவாளரா மதியம்
வன்னிவன் கூவிளமாலை
அணங்குவீற் றிருந்தசடை முடியண்ணல்
ஆலவாய் ஆவதும் இதுவே''

மேலும்,

''குறியில் நான்குகுலத்தினர் ஆயினும்
நெறியின் அக்குலம் நீங்கினர் ஆயினும்
அறிவு சங்கரற்கு அன்பர் எனப்பெறில்
செறிவுறப் பணிந்து ஏத்திய செய்கையார்''
(பெரிய.2,1704)

என்கிறார் சேக்கிழார். அதாவது அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் குலத்தை சேர்ந்தவர்களாக இருப்பினும் அல்லது அக்குலத்திற்குரிய தன்மையிலிருந்து மாறுபட்ட

குலத்தைச் சேர்ந்தவராயிருப்பினும் அவர் சிவனடியராக இருந்ததால் அவர்களை வழிபடுவதில் குலச்சிறையார் சிறந்து விளங்கினார். குலவேறுபாடு கருதாது விளங்கும் சமுதாய மேன்மையான ஒருவரை பெருமை விளங்கச் செய்யும் இக்கூற்றினை, திருநாவுக்கரசர் 6-ஆம் திருமுறை பொது தனித்திருத் தாண்டகத்தில்,

''கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில்
அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே''

என்று பாடியுள்ளார். உலக மக்கள் விரும்பும் நலத்தை விரும்புபவராய்ப் பற்றொழியாத நிலையில் தன்னலனைக் கருதி வாழ்பவராக இருப்பினும் பிறைச் சந்திரனைச் சிவந்தசடைமுடியின் கண் தரித்துள்ள சிவபிரானுக்கு அடியவர் என்றால் அத்தன்மையுடையவர்களைத் தரையில் தம் எட்டு அங்கமும் பதிய வணங்கி, ஏத்திவழிபடும் பண்புடையவர். மேலும்,

''எண் பெருக்கிய அன்பால் எதிர்கொண்டு
நண்பு கூர்ந்து அமுதுஊட்டும் நலத்தினார்''
(பெரிய.2,1705)

குலச்சிறையார் பல அடியார்கள் ஒன்றாகக் கூடிவரினும் அல்லது ஒருவர் மட்டுமே தனித்து வரினும் தம் எண்ணத்துள் அடங்காத பேரன்பு கொண்டு வருபவர்களுக்கு உணவளிக்கும் பண்பினைமுடையவர்.

''பூதிகோவணம் சாதனத் தால்பொலிந்து
ஆதிதேவர் தம் அஞ்செழுத் தாம் அவை''
(பெரிய.2,1706)

சிவனடியார்களுக்குரிய திருநீறு, கோவண ஆடை முதலிய தனங்களால் பொலிந்து இறைவனாகிய சிவபெருமானின் திருவைந்தெழுத்தை முறைப்படி ஓதும் அன்பர்களை நாள்தோறும் வணங்கும் தன்மையுடையவர். இப்படிப்பட்ட பண்புகளையெல்லாம் கொண்டவராக விளங்கினார் குலச்சிறையார்.

பாண்டியன் அவையில் அமைச்சர்

நல்ல பண்பு நலன்களையும், குணங்களையும் கொண்ட குலச்சிறையார் பாண்டியன் அவையில் அமைச்சராகத் திகழ்ந்தார்.

''இன்னநல்லொழுக்கத்தினால் ஈறிலாத்
தென்னவன் நெடுமாறற்குச் சீர்திகழ்
மன்னுமந்திரிகட்கமேல் ஆகியார்
ஒன்னலார்ச் செற்று உறுதிக்கண் நின்றுளர்''

(பெரிய.2,1707)

எல்லையில்லா சிறப்பொடு விளங்கிய நிலையில் பாண்டிய மன்னனான நெடுமாறனுக்குச் சிறப்புடைய அமைச்சர்களில் மேன்மை கொண்டு முதன்மை பெற்றவராகிப் பகைமன்னர்களைப் போர்க் களத்தில் அழித்து வெற்றி காணும் வகையில் குலச்சிறையார் விளங்கினார். பக்தியில் திளைத்ததோடு மட்டுமல்லாது நல்லமைச்சராகவும் இருந்துள்ளார் என்பது தெரியவருகிறது.

பாண்டிமாதேவியாரின் தொண்டுக்கு மெய்த் தொண்டராதல்

கூன் பாண்டியனின் மனைவியான மங்கையர்க்கரசியார் 63 நாயன்மார்களில் ஒருவர். திருஞானசம்பந்தர் வரலாற்றில் இவரைப் பற்றிய செய்திகள் வந்துள்ளமை அறிந்த ஒன்று. இதில் கூன்பாண்டியன், நின்றசீர் நெடுமாறன் என்ற பெயர் பெறுவதற்கு காரணமான ஞானசம்பந்தரை குலச்சிறையாரும், மங்கையர்க்கரசியாரும் இணைந்து பாண்டிய நாட்டிற்கு அழைத்துவரும் செய்தி காணப்படும். இங்ஙனம் இருவரும் சைவசமயத்தின் மீதும், சிவன் மீது கொண்டிருந்த பற்றும் தெரியவருகிறது. இதனை சேக்கிழார் குறிப்பிடுகையில்,

''ஆய செய்கையார் ஆயவர் ஆறணி
நாயனார் திருப்பாதம் நவின்றுளார்
பாயசீர் புனைபாண்டிமாதேவியார்
மேய தொண்டுக்கு மெய்த்தொண்டர் ஆயினார்''

(பெரிய.2.1708)

குலச்சிறைநாயனார், கங்கை தரித்த நாயகரான ஈசன் திருப்பாதமலர்களைத் துதிக்கும் சிறப்பின் மிக்க பாண்டிமாதேவியார் செய்யும் திருத்தொண்டுக்கு உறுதுணையாய் விளங்கிய மெய்த்தொண்டராய் இருந்துள்ளார்.

சைவம் தழைக்க வாழ்ந்தவர்

சமணர்களோடு வாதிட்ட குலச்சிறையார், திருஞானசம்பந்தரோடு இணைந்து அனல்வாதம், புனல்வாதம் ஆகியவற்றில் வெற்றி பெற்றார். சமணர்களை கழுவில் ஏற்றி சைவத்தின் பெருமையை உலகிற்கு நிலைநிறுத்தினார். இதனை பெரியபுராணத்தில் சேக்கிழார் குறிப்பிடும்போது,

''புன்நயத்து அருகந்தார் பொய் நீக்கவும்
தென்னர் நாடுதிருநீறு போற்றவும்
மன்னுகாழியர் வள்ளலார் பொன்னடி
சென்னிசேர்த்தி மகிழ்ந்த சிறப்பினர்'' (பெரிய.2,1709)

''வாதில் தோற்றஅமணரைவன்கழுத்
தீதுநீங்கிட ஏற்றுவித் தார்திறம்
யாது போற்றினேன்'' (பெரிய.2,1710)

என்கிறார். அதாவது புன்மையுடைய சமணர்களின் பொய்த்தன்மையை நீக்கவும், பாண்டியநாடு சைவம் விளங்கச் செய்யும் திருநீற்றின் நெறியைப் போற்றவும், சிறப்பின் மிக்க திருஞானசம்பந்த சுவாமிகள் திருவடியைப் போற்றி வணங்கி மகிழ்ந்த பெருமையுடையவர் குலச்சிறையார்.

முடிவுரை

அன்றைய காலத்தில் சமயநெறியை மக்கள் சரிவர பின்பற்றியுள்ளனர். இறைவன் மீது மிகுந்த பற்றும், அதேசமயத்தில் தங்களுடைய பொறுப்புகளில் அக்கறையோடும் விளங்கியுள்ளனர். குற்றங்கள் அல்லாத நல்ல பண்புகளும், குணங்களும் நிறைந்த மக்களாகவும் வாழ்வதற்கு சமயம் வழிவகுத்துள்ளது. அந்த வகையில் குலச்சிறையாரும் சைவநெறியில் திளைத்து, சிறந்ததொரு வாழ்வை வாழ்ந்திருக்கிறார் என்பது தெரியவருகிறது.

78. சேக்கிழார் வகுத்த காப்பிய நெறி



முனைவர் சு.சத்தியா
உதவிப்பேராசிரியர் (தமிழ்த்துறை)
பான் செக்கர்சு மகளிர் கல்லூரி
தஞ்சாவூர்

முன்னுரை

பக்தி இலக்கியங்களில் சைவ அடியார்களின் பக்திநெறியை பன்னிரு திருமுறைகள் நமக்கு வெளிப்படுத்துகின்றன. இப்பக்தி நெறியில் நின்ற நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்றினை காப்பியமாக தொகுத்து வழங்கியதில் சேக்கிழாரின் நுண்ணறிவு போற்றுதற்குரியதாகும். இவர் மட்டும் அறுபத்து மூன்று நாயன்மார்கள் வாழ்ந்த ஊர்களுக்குச் சென்று அவர்கள் வாழ்க்கை வரலாற்றினையும் பக்தியின் சிறப்பையும் தொகுக்கவில்லை என்றால் சைவம் வளர்ந்திருக்காது. ஏன் பெரியபுராணம் என்ற காப்பிய நூலே தோன்றியிருக்காது. இந்நூல் காப்பியத்தில் அடங்கவில்லையென்றாலும் காப்பியத்திற்கான கூறுகளை நிரம்பப் பெற்றுள்ளன. இதனடிப்படையில் பெரியபுராணத்தில் சேக்கிழார் வகுத்த காப்பிய நெறியை வெளிப்படுத்தவதாக இக்கட்டுரை அமைகிறது.

பெரியபுராணம் வரலாற்றுக் காப்பியம்

தமிழ்மொழியில் எண்ணற்ற காப்பியங்கள் இருந்தாலும் பெரும்பாலும் வடமொழிக் கதையின் தழுவல்களே. சிலம்பும் மேகலையும் கவிநயமிக்க வரலாற்றுக் கதைகளாகும். பெரியபுராணமோ தமிழகத்தில் வாழ்ந்த சிவனடியார்களின் வாழ்க்கை வரலாறுகளைக் கூறும் வரலாற்றுக் காப்பியமாக உள்ளது. மேலும் இந்நூல் அனைத்து அடியார்களின் ஒருமித்த பக்தியின் நோக்கத்தை வணங்குவது வணங்குவதற்காகவே வேறு எந்த நலனும் தேவையில்லை என்னும் பக்திவீரம் உடையோராக அடியவர் விளங்கும் சிறப்பினை,

''கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்'' *(திருத்.பு.143)*

எனும் பாடல் நன்கு உணர்த்துகிறது.

சேக்கிழாரின் காப்பிய நெறி

சேக்கிழார் இதற்கு முன்னர் தோன்றிய காப்பியங்கள் போல் அல்லாமல், தனித்துவத்தைக் காப்பியமாகப் படைத்துள்ளார் என்றுதான் கூறவேண்டும். பக்தியின் சுவையைப் பாவிகமாகவும், அடியாரின் பெருமைகளைப் பாடுபொருளாகவும் கொண்டு தனிச் சிறப்புற்று விளங்கிய இந்நூல் பக்திக்காப்பியம் என்று அழைக்கப்படுகின்றது. இந்நூலிற்கு அமைந்துள்ள மற்றொரு சிறப்பு வரலாற்றுக் காப்பியம் என அழைக்கப்படுவதாகும். காரணம்,

1. தலைமையை மாற்றி ஓர் கூட்டுத் தலைமையைப் படைத்தளித்த முதல் தமிழ் காப்பியம்.

2. நாற்பயன் நிலைக்கு உயரிய நெறியாக பக்தி மார்க்கத்தின் பயனை அடியாரின் வாழ்வியல் கொண்டு அகிலம் பின்பற்ற ஏதுவாக அமைந்துள்ள விளக்கக் காப்பியம்.

3. ஒன்பான் சுவையைக் கடந்து பக்தி என்னும் புதுச்சுவையைக் காப்பியத்தின் தலைமைப் பண்பாக்கி வெற்றி கண்ட முதல் காப்பியம்.

4. ஆண்டி முதல் அரசன் வரை அனைவரும் சமம் என்பதைச் சுட்டிக்காட்டி, சமுதாய ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் காப்பியம். கால வரலாற்றை அறிய துணைபுரியும் வரலாற்றுக் காப்பியமாகத் திகழும் தமிழ் காப்பியம்.

5. கதை, கதை மாந்தர், கதை நிகழ்விடம் போன்ற கூறுகள் எல்லாம் தமிழகத்தைச் சேர்ந்தவையாக முழுவதும் தமிழகக் கதையாக அமைந்த காப்பியம்.

பெரியபுராணக் காப்பியச் செய்திகள்

இந்நூல் புதுவகையில் இயற்றப்பட்ட காவியமாகும். பெரியபுராணத்திற்கு முன்னர் தோன்றிய காப்பியங்கள் எல்லாம் தனி மனிதனையும், மன்னர்களையும் பாடியவை. சேக்கிழாரோ சமுதாயத்தில் இருந்த சிவனடியார்களைப் பாடிப் புதுவகைக் காப்பியம் உருவாக்கினார். தண்டி கூறும் பெருங்காப்பியத்தின் இலக்கணப்படி பெரியபுராணத்தில், கடவுள் வாழ்த்தும், வணக்கமும் நூல் கூறும் பொருளும் முதலில் இடம்பெற்றுள்ளன. திருத்தொண்டர் புராணம் என்பது சுந்தரர் பற்றிய புராணமாகும். சுந்தரர் சிவபிரானுக்குத் தோழரானமைப் பற்றி தம்பிரான் தோழனார் என்று பெயர் பெற்றார் எனின், அவரைத் தன்னேரில்லாத் தலைவர் என்று படைத்துக் காட்டியுள்ளார் சேக்கிழார். சுந்தரருக்குச் சோழநாட்டை உரிமையாக்கி நாட்டுச் சருக்கம் பாடியுள்ளார். அவ்வாறே சுந்தரர் பிறந்த திருவாரூரைச் சிறப்புடைய நகரமாகக் கொண்டு திருநகரச் சிறப்பைப் பாடியுள்ளார்.

அறம்-இல்லறம், துறவறம் என இருவகைப்படும். சுந்தரர், பரவையார் இல்லறமும் மற்ற நாயன்மார்களின் இல்லறமும் இல்லறம் என்னும் தலைப்பில் அடங்கும். அடியேன் வேண்டுவன் தவநெறியே என்று சுந்தரர் கூறுவதில் துறவற உணர்ச்சியை காணமுடிகிறது. துறவறத்திற்கு சான்றாகத் திருநாவுக்கரசர் போற்றப்பெறுகிறார். பொருள் - அகம், புறம் என இருவகைப்படும். சுந்தரர் செய்து கொண்ட காதல் திருமணங்கள் அகப்பொருள், புராணத்துள் வரும் அறம், பொருள், வீடு என்பன புறப்பொருளாகும்.

இன்பம்-இன்பம் என்பது கற்பியல் அது சுந்தரர் - பரவையார் வாழ்வில் காணப்படுவதாகும். வீடு-வீடு என்பது இவ்வுலகப் பற்றினின்றும் விடுதலைப் பெறுதல். அதாவது ஆசையை வெறுத்து முடிவில்லாத இறைவனது அருளில் திளைத்து இருத்தல் என்பதாகும். இதற்கு இந்நூலில் உள்ள நாயன்மார் வரலாறு அனைத்தும் தக்க சான்றாகும் என்று துணிந்து கூறமுடிகின்றது.

வருணனைகள்

தண்டி குறிப்பிடுகின்ற மலை, கடல், நாடு, நகர், காலம் போன்றவற்றின் சிறப்பினை புனைந்தவுடன் அழகுற எடுத்துக் கூறுவது காப்பிய இலக்கியத்தின் தனிச்சிறப்பாகும். இத்தகு நிலையில் பெரியபுராணத்தின் ஆசிரியர் சேக்கிழாரும் அடியார்கள் சென்று இறைவனைத் தரிசித்த இடங்கள், காலங்களை எழிலுடன் வருணணை செய்துள்ளார்.

கடல் வருணனை

திருக்குறிப்புத் தொண்டர் புராணம் (39-40) அதிபத்தர் புராணம் (7) திருநாவுக்கரசர் புராணம் (132) ஆகிய இடங்களில் கடல் வருணனை காணப்பெறுகிறது.

பருவக் காலங்களின் வருணனை

கார்காலம் - ஆநாய நாயனார் புராணத்தில் கார்காலம் பற்றிய குறிப்புகள் காணப்படுவதை,

''நீலமா மஞ்ஞை ஏங்க நிரைக்கொடிப் புறவம் பாடக்
ஞாலநீ ரடங்கி லாடக் காரென்னும் பருவ நல்லாள்''
(திருத்.பு.949)

முன்பனி - திருஞானசம்பந்தர் புராணத்தில் முன்பனிக் காலக்கூறுகள் இடம்பெற்றுள்ளன. சான்றாக கீழ்வரும் பாடல் வெளிப்படுத்துகிறது.

''மொய் பனிகூர் குளிர்வாடை
முழுது உலவும் பொழுதே யாய்க்
கொய் தளிர்மென் சோலைகளும்'' (திருத்.பு.2233)

முதுவேனில் ''வெகுண்டு வெங்கதிர் பரப்பலின் முதிர்ந்தது வேனில்'' (திருத்.பு.2287) என்ற பாடல் சான்றாகிறது.

ஐந்துவகை சிறுபொழுதுகள்

1.மாலை (திருத்.பு.2095), 2.யாமம், 3.வைகறை, 4.ஏற்படுகாலை (திருத்.பு.783), 5.நண்பகல் (திருத்.பு.3337) இவற்றை,

"மாலை யாமம் புலர்வதும் வைகறை
வேலை செய்வினை முற்றுவெண் ணீறணி"
(திருத்.பு.2111)

என்ற பாடலடிகள் புலப்படுத்துகின்றன.

மந்திரம்

உருத்திர பசுபதி நாயனார் வரலாற்றில் பின்வரும் பாடல்கள் சான்றாகின்றன.

"தெள்ளு தண்புனல் கழுத்தள வாயிடைச் செறிய
உள்ளு றப்புக்கு நின்றுகை உச்சிமேற்குவித்து
தள்ளு வெண்திரைக் கங்கைநீர் ததும்பிய சடையார்
கொள்ளும் அன்பினில் உருத்திரம் குறிப்பொடு
பயின்றார்" (திருத்.பு.1041)

தூது

சுந்தரர் சங்கிலியாரை மணந்து கொண்டதை அறிந்த பரவையார் சுந்தரர்பால் கடுங்கோபங் கொண்டு சுந்தரர் வேண்டியபடி பரவையாரது கோபத்தைத் தணிக்க ஆருர்பெருமான் பரவையாரிடம் தூது சென்றார் என்பதற்கு (திருத்.பு.3485-3504) சான்றாகின்றன.

செலவு

செலவு என்பது செல்லுதல் எனப் பொருள்படும். அது யாத்திரை செய்தல், போர்மேர் செல்லுதல் முதலாகப் பலவகைப்படும். பெரியபுராணத்துள் அப்பர், சம்பந்தர், சுந்தரர் சென்ற தலயாத்திரைகள் பல செய்யுட்களில் விரித்துக் கூறப்பட்டுள்ளன. மேலும், சிறுத்தொண்டர் (திருத்.பு.3669-3670) புகழ்ச்சோழர் (திருத்.பு.3963-3965) புராணங்களில் போர் மேற் செலவு குறிப்பிடப்பட்டுள்ளது.

போரும் வெற்றியும்

பெரியபுராணத்தில் குறிப்பாக புகழ்ச்சோழருக்கும் அதிகனுக்கும் இடையில் நடைபெற்ற போரும், சோழர் பெற்ற

வெற்றியும் (திருத்.பு.3966-3978) வடபுலத்து முதல் மன்னனுக்கும் பாண்டியன் நெடுமாறனுக்கும் இடையில் நடைபெற்ற நெல்வேலிப் போரும், பாண்டியர் வெற்றியும் (திருத்.பு. 4076-4080) குறிப்பிடத்தக்கவையாகும்.

ஒன்பான் சுவை

பெரியபுராணத்தில் தொல்காப்பியர் கூறி எண்வகைச் சுவைகள் மட்டுமல்லாது பக்தி என்னும் சுவை சேர்ந்து ஒன்பான் சுவையாக சேக்கிழார் காப்பியம் படைத்துள்ளார்.

நகை

சுந்தரர் பரவையாரைக் கண்டு காதல் கொண்டதை (திருத்.பு.306) என்ற பாடலடியில் விளக்கியுள்ளார்.

அழுகை

திருமருகலில் பாம்புக் கடித்து வணிகன் இறந்துபோன பொழுது அவனுடன் அவனை மணந்து கொள்ளும் ஆர்வத்துடன் உடன் போக்கில் வந்த வணிகன் மகள் தான் உடன் வந்ததையும், தனது துன்பத்தையும் கூறி இறைவனை வேண்டும் முறையில் அவளது அழுகையினை (திருத்.பு.2378) என்ற பாடலடியில் விளக்கியுள்ளார்.

இளிவரல்

சிவபக்தியில் திளைத்த ஏனாதி நாதரிடம் பகைமை கொண்ட அதிசூரன் வாட்போர் புரிந்தான் அவனது தந்திரச் செயலை (திருத்.பு.636) என்ற பாடலில் கூறியுள்ளார்.

மருட்கை

சுந்தரர் திருவாரூர்க் கோயிலில் பரவையாரை முதற்கண் கண்டு வியப்புற்ற நிகழ்வினை, ''கற்பகத்தின் பூங்கொம்போ காமன்தன் பெருவாழ்வோ'' என்று பாடி வியந்ததை சேக்கிழார் அழகுபடக் கூறியுள்ளார்.

அச்சம்

காரைக்கால் அம்மையார் (திருத்.பு.1772) பேய்

உருக்கொண்டபோது பார்ப்பவர்கள் அச்சம் கொண்டு ஓடியதை இப்பகுதியைப் படிப்பவருக்கே அச்சத்தை ஏற்படுத்துமாறு விளக்கியுள்ளது. சேக்கிழாரின் பேராற்றலை வெளிப்படுத்துகிறது.

பெருமிதம்

கல்வி, தறுகண், இசைமை, கொடை என்னும் நான்கிலும் மேம்படுதல் பெருமிதம் எனப்படும். இங்கு கல்வியின் பெருமிதத்தை சேக்கிழார் *(திருத்.பு.103)* பாடியுள்ளார்.

வெகுளி

அடியார்கள் யார் வந்து எதைக் கேட்டாலும் இல்லையே என்று சொல்லாத இயற்பகையார் இயற்கைக்கு மாறாகத் தன் மனைவியையே அடியார் கேட்டார் என்பதற்காக அனுப்பினார் என்ற செய்தி பக்தியின் பாற்பட்டது என்பதை *(திருத்.பு.422)* பாடலில் கூறியுள்ளார்.

உவகை

உள்ளம் மகிழும் உணர்வின் வெளிப்பாடே உவகை. பக்திச்சுவை நனிச் சொட்ட சொட்ட பணிந்துருகும் அடியார் தம் உள்ளம் அடையும் உவகையைப் புகழ்ந்துப் பாடும் சேக்கிழார்,

"எண்ணரும் பெருமைத் தொண்டர் யாவரும் மகிழ்ச்சி எய்தி
புண்ணியப்பிள்ளையாரைப் புகழ்ந்தடி போற்றிப் போத
மண்ணெலாம் உய்ய வந்த வள்ளலார் தம்மைக் கண்டு
கண்ணினார் பயன்கொண்டார்கள் கண்ணி நாட்டவர்கள் எல்லாம்" *(திருத்.பு.2765)*

என்ற பாடல் விளக்குகிறது.

சருக்கங்கள்

சுந்தரர் பாடிய திருத்தொண்டர் தொகை பதினொரு செய்யுட்களையுடையது. ஒவ்வொரு செய்யுளிலும் நாயன்மார் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. பத்தாம் செய்யுளில் மட்டும்

தொகை அடியார் எழுவர் குறிக்கப்பெற்றுள்ளனர். சேக்கிழார் சுந்தரர் பாடலில் ஒவ்வொரு செய்யுளின் முதற்சீரை அல்லது முதலிரண்டு சீர்களைச் சருக்கங்களின் பெயர்களாக அமைத்துள்ளார். அச்செய்யுளில் குறிக்கப்பட்ட நாயன்மார்களின் வரலாறுகளை அச்செய்யுளுக்குரிய சருக்கத்தில் விவரித்துள்ளார். அவர் இங்ஙனம் திருத்தொண்டர் தொகையின் பதினொரு செய்யுட்களையும் பதினொரு சருக்கங்களாகக் கொண்டுள்ளார். சான்றாக, ''தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்'' தில்லைவாழ் அந்தணர் சருக்கம். மேலும் பெரியபுராணம் காப்பியமே எனும் கருத்து வெளிப்பாட்டை ஆராய்ச்சியாளர்கள் பல்வேறு நூல்களில் தெளிவுப்பட உரைத்துள்ளனர். சான்றாக, மா.இராசமாணிக்கனாரின் பெரியபுராண ஆராய்ச்சி *(ப.20)* க.வெள்ளை வாரணனார் பன்னிரு திருமறை வரலாறு முதல் தொகுதி *(ப.254)* மேற்கண்டவற்றை நோக்கும்போது பெரியபுராணம் காப்பியங்கள் வரிசையில் இடம்பெறாமல் போனாலும் காப்பியத்திற்குரிய இலக்கணங்களைப் பெற்றுள்ளன என்பதை இக்கட்டுரை தெளிவுப்படுத்துகிறது.

79. சிலப்பதிகாரத்தில் சைவசமயக் கூறுகள்



த.அமுதசோதி
தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியர்
பான்செக்கர்சு மகளிர் கல்லூரி
தஞ்சாவூர்

சிலப்பதிகாரத்தில் சைவசமயக் கூறுகள்

இந்து சமயத்தின் அகச்சமய அறுவகைகளுள் சைவமும் ஒன்றாகும். சிவனை இடையறாது எண்ணி உள்ளம் உருகும் செந்நெறியே சைவசமயமாகும். திலகத்திலிருந்து (திலம்-எள்) எடுப்பது தைலம் ஆகும். அதுபோல சிவத்திலிருந்து உருவான சமயநெறியே சைவமாகும். சிவனடன் ஒன்றியிருப்பதாகிய ஒருநிலையை எடுத்துக் கூறும் சமயநெறியே சைவம் என்பதைத் திருமூலர்,

"சைவம் சிவனுடன் சம்பந்தமாவது"

என்று கூறியுள்ளதன் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது. சைவம் குறித்தவச்சிரவேல் முதலியாரின் கருத்து.

"உலகமுதற்பொருளாகிய சிவனையே தெளிந்து வழிபடும் நெறிக்குப் பெயராகி வழங்கி வருவது சைவமாகும்" இக்கருத்துக்களின் மூலம் சைவ சமயத்திற்கும், சிவனுக்கும் உள்ள தொடர்பினை அறியலாம்.

சிவன் சொற்பொருள் விளக்கம்

சிவன் என்ற சொல்லுக்குப் பல்வேறுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளமையைக் கீழ்க்காணும் குறிப்புகளால் அறிந்துகொள்ள முடிகிறது. சிவன் என்ற சொல் "எளிதில் நலம் தருபவன்" என்று பொருள்படும். அது செம்மை என்பதன் அடியாகப் பிறந்தது. செம்மை, செந்நிறம், நேர்மை, நீதி, ஒழுங்கு, நன்மை, மங்களம், முழுமை முதலிய பலபொருள்களைத் தருகிறது. சிவ என்பது சிவப்பு நிறத்தைக் குறிக்கும் உரிச்சொல்லாகும். ஆகவே சிவன் சிவந்த நிறமுடையவன். அவனுடைய சடைமுடியும் சிவப்பு நிறத்தை

உடையது என்பதை,

"செய்யன் சிவந்த ஆடையன்"

எனும் சங்க இலக்கியப் பாடல் வழி அறியலாம். சிவன் என்னும் சொல்லிற்கு க. சுப்பிரமணியப் பிள்ளை, "சிவன் என்றசொல் முழுமுதற் கடவுளைக் குறிக்கப் பயன்பட்ட போது எங்கும் நிறைந்திலங்கும் கடவுளின் ஆற்றல் என்று கூறுவர்" இக்கருத்துக்களின் மூலம் கடவுள் எங்கும் நிறைந்து இருக்கின்றார் என்ற உண்மையை அறிந்துக் கொள்ளமுடிகிறது.

சங்க இலக்கியங்களில் சிவபெருமான்

சங்க காலத்திலிருந்து இன்று வரை சிவனை முழுமதற் கடவுளாகக் கொண்டுவழிபடும் சமயம் சைவசமயமாகும். தொல்காப்பியர் குறிப்பிடும் தெய்வங்களில் சிவபெருமான் இடம் பெறவில்லை. சங்க இலக்கியங்களிலும் சிவன் எனும் பெயரை எங்கும் காணமுடியவில்லை. ஆனாலும் அவனுடைய உருவ அமைப்பையும், இயல்பையும், தன்மையையும் குறிக்கும் வகையில் தொடர்கள் இடம்பெற்றுள்ளன என்பதனை, ஆலமர்ச் செல்வன், முதுமுதல்வன், சடைமுடி உடையவன், முக்கண்ணன், நீலமணிமிடற்றன், மாதொருபாதியான், கங்கையை அணிந்தவன், அழித்தற் கடவுள், கணிச்சியோன் என்று தொடங்கும் பாடலடிகளால் அறிந்துகொள்ளமுடிகிறது.

எட்டுத்தொகை நூல்களுள் அகநானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, கலித்தொகை ஆகிய ஐந்து நூல்களின் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் சிவபெருமானைப் பற்றியே அமைந்துள்ளன. கி.பி. ஏழாம் நூற்றாண்டில் பக்தி இலக்கியகால வரலாற்றில் நாடெங்கும் உள்ள சிவத்தலங்களுக்குச் சென்று சிவபெருமானின் புகழை இன்னிசைப் பாக்களாகப் பாடி சைவ சமயத்தை வளர்த்த பெருமை பன்னிருதிருமுறை ஆசிரியர்களைச் சாரும். இவர்களின் பாடல் தொகுப்புகளைப் பன்னிருதிருமுறைகள் என்று போற்றப்படுகின்றன. இச்செய்திகளின் மூலம் சங்ககாலத்திலிருந்தே சிவவழிபாடு சிறப்புற்றிருந்த நிலையை உணர்ந்து கொள்ள முடிகின்றது.

சிலம்பில் சிவபெருமான்

இரட்டைக் காப்பியங்களில் ஒன்றான சிலம்பில் பல்வேறு தெய்வங்களுக்கிடையில் சிவபெருமானுக்கே முதலிடம் வழங்கப்பட்டுள்ளன. சைவசமயக் கடவுளான சிவபெருமானைப் பெரியோன், இறையோன் என்றும் நினைத்த மாத்திரத்தலே திருமேனி கொள்பவர் என்றும் அவருக்குப் பாண்டிய நாட்டிலும், சோழநாட்டிலும் கோயில் இருந்தன என்பதையும் இளங்கோவடிகள் கூறியுள்ளமையை,

''பிறவாயாக்கைப் பெரியோன் கோயிலும்''

(சிலம்பு.கா.5:169)

''நுதல்விழிநாட்டத்து இறையோள் கோயிலும்''

(சிலம்பு.கா.14:6)

''அருந்தெறல் கடவுள் அகன் பெருங்கோயில்''

(சிலம்பு.13:137)

என்ற பாடலடிகளால் எடுத்தியம்பியுள்ளதை அறிந்து கொள்ள முடிகிறது.

சிவபெருமானின் திருவுருவச் சிறப்பு

சிவபெருமான் கங்கையையும், பிறைச்சந்திரனையும் தன் தலையில் சூடியுள்ளார். கழுத்தில் பாம்பையும், கொன்றைமலர் மாலையையும் சூடியுள்ளார். கையில் மான் குட்டியையும், மழுவாயுதத்தையும் ஏந்தியுள்ளார் என்பதை,

''கங்கை சடைமேற் கரந்தானே
கலைமான் மறியுங் கனல்மழுவும்''

எனனும் பாடலடிகளால் அறிந்துகொள்ள முடிகிறது. கண்ணகியின் அழகிய நெற்றிக்கு சிவனின் தலையிலுள்ள இளம்பிறையானது உவமையாக்கப்பட்டுள்ளது என்பதை,

''குழவித்திங்கள் இமையவர் ஏத்த
அழகொடு முடித்த அருமைத்து ஆயினும்
பெரியோன் தருகதிருநுதல் ஆகுக''

எனும் பாடலடிகள் உணர்த்துகிறது.

அர்த்தநாரீசுவரர்

சிவனும் சக்தியும் இணைந்தவடிவத்தினை சைவ சமயத்தில் அர்த்தநாரீசுவரர் எனக் குறிக்கப்படுகிறது. உமையம்மையை சிவபெருமான் தமது இடப்பாகத்தில் கொண்டுள்ளார் என்பதை,

''கங்கை முடிக்கு அணிந்த கண்ணுதலோள் பாகத்து
மங்கை உருவாய் மறைஏத்தவே நிற்பாய்''
(சிலம்பு.கா.12:9-10)

என்றும்,

''மலைக்கண் மடவாள் ஒருபாலாய்ப்
பற்றி உலகம் பலிதேர் வாய்''

என்றும் சிலம்பு கூறுகிறது. சிவனின் திருவுருவ விளக்கங்களும், புராணக் கதைகளும் சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றிருத்தலால் சைவசமயமும், சிவவழிபாடும் இக்காப்பிய காலத்தில் நிலைபெற்றிருந்தமையைப் புலப்படுத்துகிறது.

திரிசூலம்

சிவபெருமான் கையில் ஏந்திய திரிசூலத்தின் வடிவம் போல கொடும்பாளூர், நெடுங்குளம் என்னும் இரண்டு ஊரிற்கும் இடையில் மூன்று வழிகள் உண்டு என்ற இக்கருத்தினை,

''பிறைமுடிக் கண்ணிபெரியோன் ஏந்திய அறைவாய்ச்
சூலத்து அருநெறி கவர்க்கும்''
(சிலம்பு.கா.11:72)

என்ற பாடலடிகளால் அறியலாம். மதுரைக்குச் செல்லும் வழியினை இவ்வாறு சுட்டிக் காண்பித்துள்ளார் இளங்கோவடிகள்.

சிவபெருமான் நடனம்

கடலாடுகாதையில், மாதவியின் பதினொரு வகையான ஆடல்கள் கூறப்பட்டுள்ளன. அவற்றில் சிவபெருமான்

முப்புரங்களை எரித்தபின் ஆடிய கொடுகொட்டி எனும் ஆடல்வகை இடம்பெற்றுள்ளது. கொடுகொட்டி என்பது உமையவள் ஒருபாகத்தில் தாளம் போட்டுக் கொண்டிருக்க சிவன் ஆடும் ஆட்டமாகும். இதனை,

''திரிபுரம் எரியத் தேவர் வேண்ட
எரிமுகப் பேரம்பு ஏவல் கேட்ப
உமையவள் ஒரு திறனாகவோங்கிய
இமையவன் ஆடியகொடுகட்டி ஆடலும்''

(சிலம்பு.கா.6:40-43)

என்ற பாடலடிகள் எடுத்துரைக்கின்றது. கொட்டிச்சேதம் என்பது சிவன் ஆடும் மற்றொரு ஆட்டமாகும். சிவன் ஆடும்பொழுது அவருடைய சிவந்த திருவடிகளில் அணிந்துள்ள சிலம்பு ஒலித்தது. செங்கையிலுள்ள பறைமுழங்கியது. சிவந்த கண்கள் நிறைந்த அருட்குறிப்பை வழங்கின. செஞ்சடை எல்லா திசைகளிலும் விரிந்து பரவியது. ஆனால் இவருடைய இடப்பாகத்தில் இருக்கும் இறைவியின் அணிகலன்களான சிலம்பு, கைவளை, குண்டலம் ஆகியவை அசையவோ, ஒலிக்கவோ இல்லை. இதனை சிலம்புகாதை எண்.28 (பா.65-75) மூலம் எடுத்துக்காட்டியுள்ளார்.

இச்செய்தியின் மூலம் சிலப்பதிகார காலத்தில் பெரும்பான்மையான மக்களால் மேற்கொள்ளப்பட்ட வழிபாடு சிவவழிபாடு என்பது திண்ணம். ஐந்தெழுத்து மந்திரமாகிய நமச்சிவாய எனும் மந்திரத்தைப் பற்றி முதன் முதலில் குறிப்பிடும் தமிழ்நூல் சிலப்பதிகாரம் என்பதை,

''அருமறை மருங்கினும் ஐந்தினும் எட்டினும்''

(சிலம்பு. 11-128)

என்ற பாடலடிகளால் அறியமுடிகிறது. இச்செய்திகளின் மூலம் சிலப்பதிகாரத்தில் சிவபெருமான் பெற்றிருந்த இடத்தையும் சைவசமயக் கூறுகள் நிரம்பி இருப்பதனையும் உணரமுடிகின்றது.

80. சுந்தரர் தேவாரத்தின் நட்பறம் (சிவனார் - சுந்தரர் தோழமை)

கி.நாகரத்தினம்
முனைவர்பட்ட ஆய்வாளர் (முழு நேரம்)
பாரதியார் பல்கலைக் கலை
அறிவியல் கல்லூரி
வால்பாறை

முன்னுரை

பக்தி இலக்கியத்திற்கு முற்பட்ட பழந்தமிழ் இலக்கண இலக்கியங்களில் இறையும் இறைவழிபாடும் நானிலத்திற்கு ஏற்ப பிரித்து ஆங்காங்கே பதிவு செய்யப்பட்டிருந்தாலும் வழிபாடு தொடர் நிகழ்வாக சமூகத்தோடு இணைந்த மக்கள் இயக்கமாக மாறியது பக்தி இயக்க கால கட்டத்தில் தான். இக்காலக் கட்டத்தில் பக்தி இலக்கியங்கள் உருவாகக் காரணமாயிருந்த அடியார்களை நாயன்மார்கள் எனக் குறித்து அவர்களின் வாழ்க்கையைப் பின்னாளில் திருத்தொண்டர் புராணமாக நம்பியாண்டார் நம்பி தொகுத்தெழுதினார். இப்படி வழிபாட்டு முறையை மக்களிடையே முறைப்படுத்திய அடியவர்கள் தங்கள் வாழ்வை இறைவனோடு இணைத்துக் கொண்ட முறையைப் பின்வந்தவர்கள் நான்காகப் பிரித்தறிவர். அவை சத்புத்ரமார்க்கம், தசமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்பன. அவற்றுள் சுந்தரர் இறைவனோடு கொண்டிருந்த நட்பை, தோழமையைக் கூறும் சக மார்க்கத்தின் தன்மையை அவர் பாடிய பாடல்களின் அக மற்றும் புறச் சான்றுகள் வழி அறிந்து மனித நட்பிற்கும் மனிதன் இறைவனோடு கொண்டிருந்த நட்பிற்குமான உறவை, தொடர்பை அறிவதையே இக்கட்டுரை முன்னெடுக்கிறது.

உலகின் பிற மதங்கள் இல்லறத்தை வெறுக்க இல்லறத்தோடு கூடிய வாழ்க்கையைத் தமிழ்ச்சமயங்கள் வலியுறுத்தின. துறவறம், இல்லறம் கடந்து வரும் போது தான் அதை மேற்கொண்டோருக்கு முக்தி கிடைக்கிறது என்பதையும்

அறிவுறுத்தின. இந்த அடிப்படையில் தான் குறிப்பிட்ட கால கட்டத்திற்கு மேல் நம் அடியவர்கள் தம் மனைவியருடன் இறைவனடி சேர்ந்த இசை வாழ்வும் வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதை மெய்ப்பிக்கும் நோக்கில் புறச்சமய பாதிப்பு அதிகமிருந்த காலத்தில் வாழ்ந்த சுந்தரரின் வாழ்க்கை புரிதல் நோக்கில் பின்வருமாறு பகுத்துக் கொள்ளப்படுகிறது. அவை,

1. இறைவன் தடுத்தாட் கொள்வதற்கு முன் சுந்தரன்
2. தடுத்தாட் கொண்டபின் சுந்தரன்
3. தம்பிரான் தோழரான சுந்தரன்
4. இறைவன் சுந்தரர் நட்பில் அறம்

இறைவன் தடுத்தாட் கொள்வதற்கு முன் சுந்தரன் (அ) இளமையில் சுந்தரன்

சுந்தரனார் திருமுனைப்பாடி நாட்டிலுள்ள திருநாவலூர் என்னும் ஊரில் சடையனார் இசைஞானியார் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தவர். இவர் ஆதி சைவர் எனும் குலத்தைச் சேர்ந்தவர். இவரது இயற்பெயர் நம்பியாரூரன். இவரது அழகினைக் கண்டு சிவபெருமானே சுந்தரர் என்று அழைத்தமையால், அப்பெயரிலேயே போற்றப்படுகிறார். சுந்தரர் சிறுவயதில் தெருவில் விளையாடிக் கொண்டிருந்த போது திருமுனைப்பாடி அரசர் நரசிங்கமுனையர் கண்டார். சிறுவர் சுந்தரனை அழைத்துச் சென்று இளவரசனைப் போல அனைத்துக் கலைகளையும் கற்றுத் தருகிறார்.

தடுத்தாட் கொண்ட பின் சுந்தரர்

சடையனார் தம் மகனான சுந்தரருக்குப் புத்தூர் சடங்கவி சிவாச்சாரியார் மகளைத் திருமணம் புரியவிருந்த நாளில் சுந்தரர் முற்பிறவியில் வேண்டிக் கொண்டிருந்தபடி சிவபெருமான் முதிய அந்தண வடிவில் தோன்றி அத்திருமணத்தைத் தடுத்துச் சுந்தரரை ஓலைகாட்டி ஆட்கொண்டார். அப்போது இவர் இறைவனிடம் வன்மையாகப் பேசி வழக்குரைத்தமையால் ‘‘வன்தொண்டன்’’ என்னும் பெயர் பெற்றார். இறைவன்

இவரைத் தோழனாக ஏற்றுக் கொண்டதால் தம்பிரான் தோழன் எனவும் அழைக்கப்பெற்றார்.

இறைவன் - சுந்தரர் நட்பு

இறைவனே வந்து தன்னைத் தடுத்தாட் கொண்டதை உணர்ந்த சுந்தரர் முதன் முதலில் தன் இறையுணர்வைச் சிந்தையில் ஏந்தி மெய்விதிர்த்து தலைமேல் கைகுவித்து

''பித்தா பிறைசூடி பெருமானே யருளாளா
எத்தால் மறவாதே நினைக்கின்றேன் மனத் துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர்
அருள் துறையுள்
அத்தா உனக்கு ஆனாய் இனி அல்லேன் என லாமே''
(சு.தேவாரம் 01)

எனும் பாடலைப் பாடுகிறார். இதில் இறைவனை நோக்கி ''பித்தா'' என்னும் சொல்லைப் பயன்படுத்துகிறார். பித்தா என்றழைப்பதை இறைவனும் ரசிக்கின்றார். இதை பெரியபுராண தடுத்தாட்கொண்ட புராணத்தின் அகச் சான்றுகளும் புலப்படுத்துகின்றன.

சிவன்

''முன்பு எனைப் பித்தன் என்றே மொழிந்தனை ஆதலால்லே
என் பெயர் பித்தன் என்றே பாடுவாய்''
(பெ.பு.219)

என்பன. மேற்காணும் உரையாடல்களைக் கண்ணுறும் போது நட்புக்குள் நல்மொழி, வசைமொழி என்ற வரையறையில்லாமல் தோழமை உரிமையின் மிகுதியால் அதை ஏற்றுக் கொள்ளப்படும் நட்பறத்தைக் காணமுடிகிறது. இறைவன் தோழராக சுந்தரரை அறிவித்திருந்தாலும் அவரின் உயர்தன்மை காரணமாக அவருடன் நெருங்கிப் பழக அஞ்சியவராய்

''முண்டம் தரித் தீர்முது காடுறைவீர்
முழுநீறுமெய் பூசுதிர் மூக்கப் பாம்பைக்

கண்டத்திலும் தோளிலும் கட்டி வைத்தீர்
கடலைக் கடைந் திட்டதோர் நஞ்சை உண்டீர்
பிண்டம் சுமந் தும்மொடும் கூடமாட்டோம்
பெரியாரோடும் நட்பினி தென்றிருந்தும்
அண்டம் கடந் தப்புறத் தும் இருந்தீர்
அடிகேள் உமக்கு ஆட்செய அஞ்சுதுமே''
(சு.தேவாரம்-12)

என்று கூறி இத்தன்மையினான உன்னை நான் எப்படி நெருங்கிப் பழகுவது என்று சிவனிடம் மன்றாடுகிறார். இது தோழமையின் ஆரம்பக்கட்டமே. இவ்வாறு அஞ்சி நிற்கும் தோழரான சுந்தரரை அஞ்சாரே என்றணைத்த அகச்சான்றுகளையும் திருப்பாண்டிக் கொடுமுடி எனும் தலப் பதிகத்தின் வழி அறியமுடிகின்றது.

''அஞ்சினார்க்கரன் ஆதி என்றடி யேனும் நான்மிக
அஞ்சினேன்
அஞ்சல் என்றடித் தொண்ட னேற்கருள் நல்கினாய்க்கு
அழிகின்றதென்'' *(சு.தே.492)*

இதன்வழி நண்பன் அச்சமுறும் நேரங்களில் அச்சம் களைந்து நட்பை வலுப்படுத்தும் செயலை சுந்தரரிடத்து இறைவன் செய்வதை நாம் அறியமுடிகிறது.

இந்நிகழ்வை திருப்பெருமங்கலக் குடியில் சிவனாருக்குத் திருப்பணி செய்து வாழ்பவரான ஏயர்கோன் கலிக்காமர் கேள்வியுற்று சுந்தரரின் தோழமை மார்க்கத்தினை உணராது அவர்மேல் சினம் கொண்டு,

''நாயனை அடியான் ஏவும் காரியம் நன்று சால
ஏயும் என்று இதனைச் செய்வான் தொண்டனாம் என்னே
பாவம்
பேயேன் பொறுக்க ஒண்ணாப் பிழையினைச் செவியால்
கேட்பது
ஆயின பின்னும் மாயாது இருந்தது என் ஆவி என்பார்''
(பெ.பு.3538)

என வன்மையாகக் கண்டித்துப் பிணங்கி நிற்கிறார். கலிக்கமரின்

இந்நிலையை அறிந்த சுந்தரர் அவரின் எண்ணங்களை மாற்ற சிவனிடம் விண்ணப்பிக்கின்றார். சிவனார் சுந்தரரின் தோழமையைக் கலிக்காமருக்கு உணர்த்த கலிக்காமருக்குச் சூலை நோய் தந்து,

''வந்துணை வருத்தும் சூலைவன் தொண்டன் தீர்கில் அன்றி
முந்துற ஒழியாது என்று மொழிந்து அருள் செய்யக் கேட்டு''
(பெ.பு.3545)

கலிக்காமர் சுந்தரன் வந்து தான் தன் சூலை தவிர்ந்து நான் உய்வேன் என்றால் இவ்வுயிரைத் துறப்பேன் என்று பின்வருமாறு,

''மற்றவன் இங்கு வந்த தீர்பதன் முன் நான் மாயப்
பற்றி நின்று என்னை நீங்காப் பாதகச் சூலை தன்னை
உற்ற இவ்வயிற்றினோடும் கிழிப்பன் என்று உடைவாள் தன்னால்
செற்றிட உயிரினோடும் சூலையும் தீர்ந்தது அன்றே''
(பெ.பு.3551)

எனக் கூறி தன்னுயிரை மாய்த்துக் கொள்கிறார். கலிக்காமர் இறந்ததை அறிந்த சுந்தரர். ''நன்றென மொழிந்து நானும் நண்ணுவேன் இவர் முன்பு'' (பெ.பு.3557) என்று வாளையெடுக்க உடனே தம்பிரானார் அருளினால் கலிக்காமர் உயிர் பெற்றெழுகின்றார் எழுந்ததும் அவர்தம் கண்முன் வாளெடுத்து தன்னை மாய்த்துக் கொள்ளவிருக்கும் சுந்தரரைக் கண்ணுறுகிறார். அந்நிலையில்,

''கேளிரே ஆகிக் கெட்டேன்'' என விரைந்து எழுந்து கையில் வாளினைப் பிடித்துக் கொள்ளவன் தொண்டர் வணங்கி வீழ்ந்தார். (பெ.பு.3558)

அதன் பின்னர் கலிக்காமரும் சுந்தரரும் ஒருவரை ஒருவர் புரிந்துக் கொள்கின்றனர் இறைவன். கலிக்காமரின் அதீத பக்தியையும் சுந்தரரின் நெருக்கமான தோழமையையும் உணர்த்துவதோடு நட்பில் உயர்வு தாழ்வு இல்லை. அவரவர் வாழ்க்கைச் சூழலுக்கு ஏற்ப நட்பு அமையும். அதில் யாருடைய

தலையீடும் இருக்கக்கூடாது என்னும் நட்பறத்தை கலிக்காமருக்கு மட்டும் உணர்த்தாமல் நமக்கும் உணர்த்தியுள்ள பாங்கு இங்குப் போற்றுதற்குரியது.

மதிப்புரை

மேற்கூறப்பட்ட அகச் சான்றுகளின் வழி நாம் உயர் நட்பைப் பற்றி அறிந்தாலும் உணர்ந்தாலும் அவை மனித நட்பினின்று மாறுபட்டவையே. அறநூல்கள் வரையறுக்கும் நட்பின் எல்லைக்குள் இவை அடங்கா. ஏனெனில் வறுமையில் உதவுதல், காதலிக்குத் தூதாகச் செல்லல் எனச் சாதாரண மனித நட்புகளைப் போல் காணப்பட்டாலும் கண்பார்வை இழக்கச் செய்தல் சுந்தரரின் பெருமையை அறிவதற்காக கலிக்காமருக்குச் சூலை நோய் தந்து அவர் தன்னைத் தானே வாளால் வெட்டி மரணமடையச் செய்தல், சுந்தரர் சிற்றின்பங்களில் திளைக்கும் போதெல்லாம் ஒவ்வொரு விதமாகக் கடும் தண்டனை அளித்து மீண்டும் சரி செய்வதுமான இந்நட்பை எந்த வரையறைக்குள் அடக்குவது. இதைப்பற்றி அறிய தனி இலக்கணம் ஏதும் உண்டா? அவ்வாறு உண்டெனில் அந்நட்பு வரையறைக்குள் இவரது மிஞ்சு தமிழில் இடம்பெறும் இந்நட்பு அடக்கப்படுமா? எனவும் சுந்தரருக்கும் இறைவனுக்குமான உறவை அறியவும் சிறந்த அகச்சான்றாகக் காணப்படும் அவரது தேவாரப் பதிகங்களின் வழியே ஆய்வு செய்து தெளிவுபடுத்துவதற்கான சிறு முயற்சியே இத்தேடல்.

81. திருநாவுக்கரசர் தேவாரத்தில் சைவசித்தாந்தக் கருத்துக்கள்

சி.தமிழ்க்கனி
உதவிப்பேராசிரியர்
பாரதியார் பல்கலைக் கழக கலை
அறிவியல் கல்லூரி
வால்பாறை

முன்னுரை

திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட செல்வர் எனப் போற்றப்படும் திருநாவுக்கரசரைப் பற்றியும், அவரருளிய தேவாரத் திருப்பதிகங்களில் காணலாகும் சைவசித்தாந்தக் கருத்துக்களையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதே இவ்வாய்வின் நோக்கம். அன்றியும் சைவ சித்தாந்தக் கருத்துக்களைத் தெரிந்து கொண்டு, தம் வாழ்விலும் கைக்கொண்டு, சிவபூசை செய்வராயின் எம்பெருமானின் திருவருளுக்கு உரியராகி, இறுதியில் அவனது திருவடி இன்பம் பெறுவதற்கும் ஏதுவாகும்.

நாவுக்கரசர் தேவாரத்தில் சைவ சித்தாந்தம்

நிலக்கரி யுகத்திற்கு முன்னருள்ள காலந் தொட்டே சைவ சமயம் உள்ளதாகத் தெரிகிறது என்பர். ர.இராமானுசாச்சாரி. இத்தகு பழமையான சைவத்தின் முடிந்த முடிபினைக் கூறுவது சைவ சித்தாந்தம். சிவத்துக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பு - சிவத்துக்கும் உயிரில்லாத உலகிற்குமுள்ள தொடர்பு உயிர்க்கும் உடம்புக்கும் உளதாகிய தொடர்பு ஆகியவற்றை விரித்துரைப்பது, சைவசித்தாந்தம். திருநாவுக்கரசர் திருவாய் மொழிந்தருளிய தேவாரத் திருப்பதிகங்களில், இத்தெய்வத் தமிழ்நாட்டில் தொன்று தொட்டு இருந்து வரும் சைவசித்தாந்தக் கருத்துக்கள் இடம்பெற்றுள்ளதை விரிவாகக் காணமுடியும். எந்தப் பாடலை நோக்கினும் அதன் கண் ஏதாதொரு சைவ சித்தாந்தக் கருத்து இடம் பெறுவதை அறியலாம்.

பதியிற் கொள்கை

சைவ சித்தாந்தம் கூறும் இறை (பதி) உயிர் (பசு) தளை (பாசம்) எனும் எல்லா மூன்றினும் பதி முதன்மைப் பொருள், ஈசன் எல்லா இடங்களிலும் கலந்தும் விரிந்தும் விளங்குபவன் அந்தமும் ஆதியும் ஆனவன். பிறவியைத் தரும் பந்தமாகவும், அதிலிருந்து விடுவிக்கும் முக்திக்குரிய வீட்டுலகமாகவும் இருப்பவன். இதனை, நாவுக்கரசர்,

"அந்தமும் ஆதியும் ஆகிநின்
நீர் அண்டம் எண்திசையும்
பந்தமும் வீடும் பரப்புஇன்
நீர் பசு ஏற்றுகந்தீர்
வெந்தழல் ஓம்பும் தென் திசைக்கே
உந்திடும் குறிக்கொள் மினேன்"

என்று கூறுவதால் அறியலாம். திருவீழிமிழலையுள் எழுந்தருளியுள்ள எம்பெருமானே தென்திசைக்காலன் என்னை உந்தித் தள்ளும் போது நான் மறந்தாலும் அடியேனை மறவாது குறிக்கொண்டு காத்தருள் புரிவீராக என இறைவனின் பேரருளை புலப்படுத்துகின்றார் நாவுக்கரசர்.

பதியானது, சொரூப நிலையில் சிவம் என்றும் தட்ப நிலையில் சத்தி என்றும் இயம்பிடும் சொரூப நிலையில் சக்தி செயற்படாது அடங்கியிருத்தலால், பதியானது சிவம் செயற்படும் கடந்த நிலையில், சிவம், அதனோடு அச்செயலையெல்லாம் உடன் இயைந்து இயற்றி நிற்றலால் சிவமும் சக்தியும் அம்மை அப்பனால் மாதொரு பாகனாய்க் காட்சி நல்கும். நாவுக்கரசர் எல்லாம் வல்ல எம்பெருமான் அம்மையப்பனாய்க் காட்சி நல்கும் திறத்தினைப் பல்வேறு பாக்களில் வியந்து பாடுகிறார்.

"கொம்பாகும் கொடிமருங்குற் கோல்வளையாள்
ஒருபாகர்
பால் ஒத்த மென் மொழியாள் பங்கலின
ஒருடம்பு இருவர் ஆகி
பாதியாம் உமைதன் னோடும்

பாகமாய் நின்று''
என்று இறைவனை உமைபாகனாக ஏற்றுகிறார்.

பசுக் கொள்கை

நாவுக்கரசர் பசு என்ற சொல்லை பல இடங்களில் பயன்படுத்தியுள்ளார்.

''பாலனார் பசுபதியார்
பசுபதி பாவகனை
பசுபதியைப் பாவகனை
பசுபதீ பண்டரல்கர்''

என்று பசுக்குப் பதியாகும் பரமனைக் கூறுகிறார். பசு என்றால் ஆன்மாவை குறிக்கும் எனவே, ஆன்மா என்ற சொல்லையும் பயன்படுத்துகிறார். ''அருந்துவதால் ஆன்மாவின் இடமதாகி'' என்ற பாடல் சான்று பகர்கிறது.

முதல்வனும் உயரும்

உயிர்கள் ஒரு காலத்தில் தோன்றியனவும் வல்ல இறைவனால் படைக்கப்பட்டனவுமல்ல. முதல்வனைப் போல அநாதியாகக் காலம் கடந்து உள்ள பொருள்களேயாம்.

''பதிபினைப் போல் பசுபாசம் அநாதி''

என்கிறார். உயிர் அறிவுப்பொருள் எனினும் இறைவனது அறி போன்ற பேரறிவுடையதன்றும் அது இற்றறிவுடையதாய் உள்ள பொருள் அனைத்தையும் முற்ற அறிதல் இறைவனின் அறிவு இறைவனைச் சார்ந்தே உயிர் அமையும். இறைவன் கருவாக நின்று அனைத்துப் பொருட்களையும் நிலைபெறுத்துபவன்.

''திருவின் நாதனும் செம்மலர் மேலுரை
உருவினாய், உலகத்தின் உயிர்க்கெலாம்
கருவினாகி முலைத்தவன் கானுலில்
பரமனாய பரஞ்சுடர் காண்டினே''

என்று இறைவனின் பேரறிவையும், பேரருளையும் இணைத்துப் பாடுகிறார் நாவுக்கரசர்.

பாசக் கொள்கை

பாசம் என்றால் கட்டு என்று பொருள் பாசம் என்றும் சொல்லுக்கு கயிறு என்றும் பொருள் கூறலாம். உயிரைக்கொண்டு பசுவைக் கட்டுவது போல உயிர்கள், ஆணவம் கன்மம், மாயை என்றும் கயிற்றால் கட்டப்பெற்றுள்ளன. நாவுக்கரசர் தம் தேவாரத்தில் இப்பாசம் என்ற சொல்லை எடுத்தாள்கின்றார்.

''பாசமும் கழிக்இல்லா
பாசமற்றுப் பரம நான் பரவமாட்டேன்
பந்த பாசம் அறுத்து
பாச வினைகள் தீர்க்கும் மன்னவன்''

எனப் பல பதிகங்களில் பாசம் பற்றி குறிப்பிடுகிறார்.

மும்மலங்கள்

சைவசித்தாந்தம் கூறும் மலங்கள் மூன்று அணவம், கன்மம், மாயை என்பன. இவை உயிர்களை சார்ந்து நிற்கும் தளைகள் ஆகும். இம்மூன்றும் சடசக்திகள் எனப்படும் நாவுக்கரசர் மும்மலங்கள் குறித்தார். ''வினையாத தொர் பரிசில் வருபசு பாச வேதனையொலர் டனையாயின்'' என கூறுகிறார்.

திருநாவுக்கரசர் கூறும் நெறி தொண்டு நெறியாகும். நாவுக்கரசர் கூறும் இச்சைவசித்தாந்த கருத்துக்கள் அவர் அருளிய ஒவ்வொரு பதிகத்திலுள்ள ஒவ்வொரு பாடலையும் இந்த ஆய்வுக் கண்ணோட்டத்தில் ஆராய்ந்து கூறப்பட்டுள்ளது.

82. பக்தி இலக்கியத்தில் மரபு

வெ.கிருட்டினவேணி
தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியர்
பாரதியார் பல்கலைக் கழக கலை
அறிவியல் கல்லூரி
வால்பாறை

முன்னுரை

தமிழ் பக்தி இலக்கியங்களில் மிகுதியும் பேசப்படுபவை சைவம் மற்றும் வைணவம். சமயங்கள் வேறுபட்டிருப்பினும் அவை போதித்த கொள்கைகளும் காட்டிய நெறிமுறைகளும் ஒன்றாகவே இருந்தன. பல்லவர் காலத்தில் (கி.பி. 600-850) பல்வேறு வகையான பக்தி இலக்கியங்கள் தோன்றின. கி.பி. 7ஆம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் பிற்காலச் சோழர் எழுச்சி பெற்று 10 ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலத்தை சமய மறுமலர்ச்சிக் காலம் எனலாம். அக்காலக் கட்டத்தில் ஆழ்வார்களும், நாயன்மார்களும் பல்வேறு வகையான இலக்கியங்களைப் படைத்தனர். அவ்விலக்கியங்களின் (சைவம், வைணவம்) மரபு குறித்தும் பின்னாளில் அடைந்த மாற்றம் குறித்தும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

சங்ககாலத்தை அறிவதற்கு அக்கால இலக்கியங்களன்றி வேறு சான்றுகள் இல்லை. பிறவாயாக்கைப் பெரியோன் என்று சிவன் சங்க இலக்கியத்தில் முதலில் வைத்துப் போற்றப்படுகிறார். அரியலால் தேவி இல்லை அரியும் சிவனும் ஒன்று என்னும் நிலையே சங்க இலக்கியங்களால் காணப்படுகிறது. நிலப்பரப்பின் அடிப்படையில் அமைந்த தெய்வங்களே மக்கள் வழிபாட்டில் நிலவின. இறைவனை முன்னிலைப்படுத்திப் பாடுவதாகப் பண்டைய இலக்கியங்கள் இருந்தன.

> ''தீயுனுள் தெறல் நீ பூவினுள் நாற்றம் நீ
> கல்லினுள் மணியும் நீ சொல்லினுள் வாய்மை நீ
> வெஞ்சுடர் ஒளியும் நீ திங்களுள் ஒளியும் நீ
> அனைத்தும் நீ அனைத்திலும் உட்பொருளும் நீ''

என்னும் பாடல்வழி காண்பவை எல்லாம் கடவுள் என்ற உயரிய நோக்குடன் தமிழர் வாழ்ந்ததை அறியமுடிகிறது. சங்க இலக்கியத்திற்கு முற்பட்ட தொல்காப்பியத்தில் சிவன் என்னும் பெயர் காணப்படவில்லை. மாயோன், சேயோன், வேந்தன், வருணன் என்னும் நானில தெய்வங்களே குறிப்பிடப்பட்டுள்ளன.

ஆரியர் வருகையினால் ஏற்பட்ட மாற்றம்

கலை, நாகரிகம், சமயம், பண்பாடு இவற்றில் தனித்தன்மை பெற்று விளங்கிய தமிழகம் கி.பி. 3ஆம் நூற்றாண்டில் மாறுதலுக்கு உட்பட்டது. பிறநாட்டவரின் கொள்கைகளும், சடங்குகளும் தமிழகத்தில் புகுந்ததால் அன்பை அறத்தை அடிப்படையாகக் கொண்டு தமிழகச் சமயங்கள் ஆரவாரம் நிறைந்த சடங்குகளுக்குப் புகலிடமாயின.

பண்டைய தமிழகத்தை ஆராய்ந்த க.ப. அறவாணன் தமிழகத்தில் சங்ககாலக் கடைப்பகுதியின் தமிழகம் ஆரியாமத் தொடங்கிவிட்டது. அறத்தினையே பேசிவந்த தமிழினம் கடவுளர்களோடு பேரம் பேசத்தொடங்கியது. தமிழ் மன்னர் ஆரியரின் கைப்பாவைகளாகி விட்டனர். பண்பாட்டிலும் பழக்க வழக்க அளவிலும் வடநாட்டிலிருந்து தென்னாடு போந்த ஆரியரால் தமிழகம் நிலை குலைந்து விட்டது என்கிறார் (சைனரின் தமிழிலக்கணக் கொடை, பக்.51,52)

கொலை, வேள்வி, உயிர்பலிக் கொடுத்து வேள்வி செய்தல் முதலிய ஆரவாரச் சடங்குகள் தமிழகத்தில் ஏற்பட்டதால் பைரவம், கபாலிகம், காளாமுகம் என்னும் வன்முறைச் சடங்குகள் தோன்றலாயின. அக்காலத்தில் வடமொழிச் சொற்கள் பல தமிழில் கலந்து நடைமுறை சொற்களாக்கப்பட்டன.

சிவன்-ருத்திரன் மால் விஷ்ணு கொற்றவை-துர்க்கை அரசு-இராசியம் அமைச்சன்-மந்திரி, மன்னன்-இராசா ஆரியர் வருகையினால் ஏற்பட்ட வேள்வி முறைகளையும் உயிர்பலிகளையும் தமிழக மன்னர் வரவேற்றனர் என்பதை

இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி (புறநானூறு) முதலிய மன்னர்கள் வடமொழிக்கு ஆக்கம் தந்து வேதவேள்விகளை ஆதரித்தனர்.

சமயத்துறையில் ஏற்பட்ட மாற்றம்

ஆகம வழிபாடுகளும் சாத்திர முறைகளும் தோன்றுவதற்கு முன்னர் தமிழக மக்கள் மரபுகளையும், மலைகளையும், இயற்கைப் பொருள்களையும் இறைவனாக எண்ணினர். இவர்கள் வழிபாட்டில் வெறியாட்டும் குரவைக் கூத்து செல்வாக்குப் பெற்றிருந்தது.

வெறி அறி சிறப்பின் செவ்வாய் வேலன்

வெறியாட்டு அயர்ந்த காந்தள் (தொல், பொருள், புறம், ஐந்து) என்னும் அடிகள் வெறியாட்டு நிகழ்வை வெளிப்படுத்துகின்றன. இந்நிலை இடைக்காலத்தில் முற்றிலும் மாறுபட்டது. சமயத்துறைகளிலும் பண்டைய தமிழர் வழிபாட்டு முறைகளிலும் ஆசிரியர்களின் வழிப்பாட்டு முறையே ஆதிக்கம் பெற்றிருந்தது கொல்லாமை அறத்தைக் கடைபிடித்த தமிழ்ச் சமூகத்தில் வேள்வி முறைகள் தொடங்கலாயின. உயிர்பலி கொடுத்து வேள்வி செய்வதைத் தமிழ் சமயங்கள் வன்மையாக கண்டிக்கலாயின. எனினும் சமயத்துறையில் வளர்ச்சி ஏற்படவில்லை. மாறாக அவை பிற மதங்களின் பெருக்கத்திற்கும், வளர்ச்சிக்கும் வழிவகுத்தன.

ஆழ்வார்களும் நாயன்மார்களும்

தமிழ்ச் சமுதாயம் புலை வேள்விகளுக்கும் கொலைச் சடங்குகளுக்கும் நிலைக்களனாய் அமைந்ததை கண்ட சான்றோர் பெருமக்கள் பக்தி இயக்கத்தை ஏற்படுத்தினார். அவ்வியக்கம் வேள்விபுரி தலை தடுத்து, பலியிட்டு படைத்தல் பூசையாகாது, அர்ச்சனைப் பாட்டோடுயாகும் என்னும் நிலையை உருவாக்கியது. திருஞானசம்பந்தர், சுந்தரர், திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர் முதலான சைவசமய குரவர்களும் திருமங்கையாழ்வார் தொண்டரடிப் பொடியாழ்வார் முதலான ஆழ்வார்களும் பல்வேறு வகையான பக்திப் பாடல்களைப்

பாடினர். இவர்கள் சடங்குகளும் வேதவேள்விகளும் பயனற்றவை என்பது எடுத்துரைத்தனர்.

பக்தி இலக்கியங்களின் வளர்ச்சி

பக்தி இலக்கியம் சங்க இலக்கியத்தின் வளர்நிலை எனலாம். சங்க இலக்கியத்தில் காணப்படுய் அகத்திணை மரபுகள் பக்தி இலக்கியத்தில் ஆண்டான் - அடிமை பாவனையாகிய பின்னர் நாயகன் - நாயகி பாவமாக வளர்ச்சியுற்றது. மனம், மொழி, மெய்களால் இறைவனை அருவமாக இன்றி உருவநிலையிலும் அளிப்படலாயினர். இதனால் தன்னை நாயகியாகவும் இறைவன் நாயகனாகவும் பாவித்துப் பாடும் மரபு ஏற்பட்டது.

''உள்ளம் சிலிக்குதே கண்ணா
உன் முகத்தைப் பார்க்கப் பார்க்க
கள்ளங் கரவின்றி யுன்னை
காதலிக்கக் காதலிக்க என்
உள்ளம் சிலிர்க்குதே கண்ணா''

(மீராபாய் பாடல்)

என்னும் பாடலில் மீரா தன்னைத் தலைவியாகவும் கண்ணனைத் தலைவனாகவும் பாவித்து பாடுவதை அறியமுடிகிறது. ஆண்டாளின் நாச்சியார் திருமொழி தலைவியின் காதல் அவலத்தை புலப்படுத்துவதாக அமைந்துள்ளது. மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும் எண்ணில் நல்கதிக்கு யாதுமோர் குறைவிலை (திருநா தேவாரம்)

என்னும் நோக்கோடு அருட்செல்வர் தமிழகத்தின் பல பகுதிகளுக்கு சென்று திருப்பாடல்களைப் பாடினர். அங்ஙனம் சமய ஆசாரியர்கள் நேரில் சென்று தனித்தனியே பதிகங்கள் பாடிய இடங்களும் ஊர்களும் பாடல் பெற்ற தளங்கள் எனவும் அவ்வாறு தனித்தனியே பதிகங்களுள் பாடப்பெறாமல் பாடல்களில் இடையிடையே குறித்து வைக்கப்பெற்ற இடங்கள் வைப்புத்தலங்கள் எனவும் அழைக்கப்பட்டன. அத்தலங்கள் தோறும் சென்று தொண்டர்கள் பல்வேறு திருப்பாடல்களைப் பாடுவதும் வழிபடுவதும் இன்று வழக்கமாகிவிட்டன.

சென்னையில் திருவான்மியூர், மயிலாப்பூர் முதலான பல்வேறு பகுதிகளில் நாள்தோறும் சைவ, வைணவ இலக்கியங்கள் குறித்த நிகழ்ச்சிகள் இன்றும் நடைபெற்று வருகின்றன.

இக்காலத்தில் பக்தியின் நிலை

இன்றைய சூழலில் இறைவனுக்காக பணி செய்பவர்களும் உண்டு. இறைவனை வழிபடாதவர்களும் உண்டு. இறைவனிடம் அருள்கேட்ட நிலை மாறி, இன்று பொருள் கேட்கும் நிலையே வளர்ந்து உள்ளது சமுதாயத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் பக்தியிலும் பிரதிபலிக்கிறது. கடவுளர்களின் திருக்கோயில்களுக்குச் சென்றால், இன்ன பலன் கிடைக்கும் என்னும் நோக்கிலேயே ஆலயங்கள் செல்வதும் பனுவல்கள் ஓதுவதும் இன்று வாடிக்கையாகி விட்டன.

''ஏர்ஆனைக் காவில் உரை என் ஆனைக் கன்றளி
போர் ஆனைக் கன்றுதனைப் போற்றினால்-வாராத
புத்திவரும் பக்தி வரும் புத்தி உற் பக்திவரும்
சக்தி வரும் சித்திவருந் தான்''

(தனிப்பா.பா.1 அ.மாணிக்கம்)

என்னும் பாடல் விநாயகப் பெருமானை வழிபட்டால் ஏற்படும் பலனை விரித்துரைக்கிறது. இக்காலத்தில் பெரும்பாலன ஆடவர், பதவி உயர்வு கருதியும் வணிக வருவாய் வேண்டுமென்றும் இறைவனை வழிபடுகின்றனர். கன்னிப்பெண்கள் திருப்பாவை, திருவெம்பாவை முதலான நூல்களை ஓதி நல்ல கணவன் கிடைக்க வேண்டுமென்று கூட்டு வழிபாடு செய்கின்றனர். ஔவையார் நோன்பு நோற்கும் வழக்கம் இன்றும் சில பகுதிகளில் இருந்து வருகிறது. பொருள் முதல் வாதத்தையே நோக்கமாகக் கொண்ட இச்சமுதாயத்தில் வணிகமுறை பக்தியே வளர்ந்துள்ளது எனலாம்.

இறைவனை முன்னிலைப்படுத்திப் பாடும் மரபும் சங்கம் தொடங்கி இன்று வரை பல்வேறு நிலைகளில் வளர்ச்சியடைந்துள்ளது. சமுதாயத்தில் ஏற்பட்ட மாற்றங்களின் விளைவே பக்தி இலக்கியத்தின் இன்றைய பிரதிபலிப்பு. காலமாற்றத்தினால், தன்நலன் காக்கவே பக்தியைப்

பயன்படுத்திய மனிதர்களைப் பற்றிய இலக்கியங்களும் எதிர்காலத்தில் வரலாம். இன்று, அறிவியல் முன்னேற்றத்தால் மனிதன் பல்வேறு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும் ஆன்மவைப் பற்றி அறியாமையால் வெளிச்சம் தெரியாமல் இருட்டிலேயே பயணிக்கிறான். அறிவியலறிவும் ஆன்ம அறிவும் (இறையறிவும்) இணைந்தால் ஒவ்வொரு மனிதனுக்கும் வெற்றி என்பது திண்ணம்.

83. சைவ சமயத்தில் தத்துவம்

முனைவர் இராமரத்தினம்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
பாரதியார் பல்கலைக் கழக கலை
அறிவியல் கல்லூரி
வால்பாறை

முன்னுரை

சைவ சமய நூல்களை இருபிரிவுகளாகப் பிரிக்கலாம். (1) தோத்திர நூல்கள் (2) சாத்திர நூல்கள், முழுமுதற் பரம்பொருளாம் சிவபெருமானை வழிபடுவதற்கான பக்திப் பாடல்கள் அனைத்தும் தோத்திர நூல்களில் அடங்கும் பன்னிரு திருமுறைகளும் பிறவும் இவ்வகையில் அடங்கும். சைவ சித்தாந்தக் கோட்பாடுகளை அளவைகளாலும் பொருந்துமாற்றாலும் விளக்கும் நூல்கள் சாத்திரங்கள் எனப்படும். சைவ சித்தாந்த நூல்கள் முதன் முதல் திருமந்திரத்தில் தான் காணப்படுகின்றது. சைவம் என்பது சிவம் என்னும் செந்தமிழ் சொல்லாய் பிறந்து சிவனோடு தொடர்புடைமை என்னும் பொருளில் வழங்குவது சிவனைப்பற்றிய நிலைமையையும், சைவநூல்களையும் சிவனடியைச் சேர்ந்ததற்குரிய நெறியையும் அச்சொல் குறிக்கும். சித்தாந்தம் என்பதற்கு சித்த+அந்தம் என்ற இருசொற்களால் ஆகிய முடிவின் முடிபு ஆகும் என்று கா.சுப்பிரமணியபிள்ளை கூறுவார்.

சாத்திர நூல்களின் வகைகள்

1. திருவுந்தியார், 2.திருக்களிற்றுப்படியார், 3.சிவஞானபோதம், 4.சிவஞான சித்தியார், 5.இருபா இருபஃது, 6.உண்மை விளக்கம், 7.சிவப்பிரகாசம், 8.திருவருட்பயன், 9.வினாவெண்பா, 10.போற்றிப் பஃறொடை, 11.கொடிக்கவி, 12.நெஞ்சுவிடுதூது, 13.உண்மை நெறிவிளக்கம், 14.சங்கற்ப நிராகரணம் எனவே சைவசித்தாந்த நூல்கள் பதினான்கு என வழங்கப்படுகிறது.

திருவுந்தியார்

திருவாசகத்தில் இருபது கலித்தாழிசைகளைக் கொண்டு வரும் திருவுந்தியார் போலவே இந்நூல் நாற்பத்து ஐந்து கலித்தாழிசைகளைக் கொண்டு அமைந்துள்ளது. இந்நூலாசிரியர், திருவியலூர் உய்யவந்த தேவநாயனார் ஆவார். இவருடைய மாணவர் ஆளுடைய தேவநாயனார் அவருடைய மாணவர் திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார் ஆவார். இவர் திருக்களிற்றுப்படியார் என்னும் நூலைச் செய்துள்ளார். இந்நூல் நூறு வெண்பாக்களால் அமையப்பெற்றுள்ளது திருவுந்தியாருக்குச் செய்யுள் வடிவில் அமைந்த உரையாகத் திருக்களிற்றுப்படியார் விளங்குகின்றது.

திருக்களிற்றுப் படியார்

திருக்களிற்றுப்படியார் ஆசிரியர் திருக்கடவூர் உய்யவந்த தேவர். காலம் கி.பி. 1178 ஆகும். இந்நூல் நூறு வெண்பாக்களால் ஆனது. இந்நூலில் அறுபத்து மூன்று நாயன்மார்களின் அனுபவங்கள் சில எடுத்துக்காட்டப் பட்டுள்ளன. சிவதர்மம், சிவயோகம், சிவஞானம் ஆகிய மூன்றும் இறைவனடி சேர்வதற்கு உரிய சாதனங்களாகக் கூறப்பட்டுள்ளன.

சிவஞானபோதம்

இதன் ஆசிரியர் மெய்கண்ட தேவர் ஆவார். சிவஞான போதம் பன்னிரண்டு சூத்திரங்களை உடையது. முதல் ஆறு சூத்திரங்களும் பொது அதிகாரம் எனப்படும். பின் ஆறும் உண்மை அதிகாரம் எனப்படும். பதி, பாசம், பசு ஆகிய மூன்றின் உண்மைகளை உணர்த்தும். இது பிரமாண இயல் எனப்படும். நான்கு, ஐந்து, ஆறு சூத்திரங்கள் பசு, பாசம், பதி இலக்கணங்களைக் கூறும். இது இலக்கண இயல் எனப்படும். ஏழு, எட்டு, ஒன்பது சூத்திரங்கள் பசு பாசத்தைவிட்டுப் பதியை அடையும் சாதனம் கூறும் இது சாதன இயல் எனப்படும்.

சிவஞான சித்தியார்

இதன் ஆசிரியர் மெய்கண்ட தேவரின் மாணவரான

அருணந்தி சிவாச்சாரியார் ஆவார். இந்நூல் பரபக்கம், சுபக்கம் என இரு பகுதிகளை உடையது. பரக்கத்தில் மதமும் மறுப்புமாகப் புறச் சமயங்கள் விளங்கப்படுகின்றன. சுபக்கத்தில் சைவ சித்தாந்த உண்மை நிலை நாட்டப்படுகின்றது. விருத்தப்பாவில் அமைந்துள்ளது.

இருபா இருபஃது

இது அருணந்தி சிவாசாரியரால் எழுதப்பட்ட நூல் ஆகும். இருபது பாடல்களைக் கொண்டது வெண்பா. ஆசிரியப்பாவில் அமைந்து அந்தாதியாகப் பாடப்பட்டுள்ளது. இந்நூலில் கூறப்படும் பொருள். குருவணக்கம், முப்பொருள் உண்மை, குருவருள் என்ற மூன்று பாகுபாட்டில் அடங்கும். இந்நூலில் ஆணவத்தின் எட்டு குணங்களும் மாயையின் ஏழு தன்மைகளும் கன்மத்தின் ஆறு இயல்புகளும் விளக்கப்படுகின்றன.

உண்மை விளக்கம்

இதன் ஆசிரியர் திருவதிகை மனவாசங் கடந்தார் ஆவார். உண்மை விளக்கமானது வெண்பாக்களால் ஆனது. இந்நூல் முப்பதாறு தத்துவங்கள் பற்றி கூறுகின்றது. திருவைந்தெழுத்தின் பொருள், ஓதும்முறை, ஓதலால் உண்டாகும் பயன், குருலிங்க சங்கம வழிபாடு, முக்திப்பேறு இவைபற்றி இந்நூலில் கூறப்பட்டுள்ளன.

சிவப்பிரகாசம்

சிவப்பிரகாசம் என்னும் நூலை இயற்றியவர் உமாபதி சிவம் ஆவார். இந்நூல் விருத்தப்பாவால் ஆனது. இந்நூல் முதலாக உள்ள எட்டு நூல்களும் இவர் எழுதியவையே. திருக்கயிலாய ஆசிரியர்கள் சைவ நூலின் இயல்பு ஆணவம், கன்மம், வினைப்பயன் வரும் வழிகள், மாயையின் விரிவுகள் ஆகியன இந்நூலில் கூறப்படுகின்றன.

திருவருட்பயன்

இதன் ஆசிரியர் உமாபதிசிவம். இது குறள் வெண்பாவால் ஆன நூல். 100 குறட்பாக்கள் பத்து

அதிகாரங்களாகப் பகுக்கப்பட்டுள்ளன. பதிமுதுநிலை, உயிரவை நிலை, இருள்மல நிலை, அருளது நிலை, அருளுருநிலை, அறியும்நெறி, உயிர் விளக்கம், இன்புறுநிலை, ஐந்தெழுந்தருள்நிலை, அனைந்தோர் தன்மை, முதல் ஐந்து அதிகாரம் பொது எனவும் பின் ஐந்து அதிகாரம் சிறப்பு எனக் கூறப்படும்.

சிவா வெண்பா

இதன் ஆசிரியர் உமாபதிசிவம் ஆவார். பதின்மூன்று வெண்பாக்களை உடையது. ஆசிரியர் தம் குருவான மறைஞான சம்பந்தனை வினவும் முறையில் சாத்திர உண்மைகள் முதல் பன்னிரெண்டு பாடல்களில் வெளிப்படுத்தப்படுகின்றன.

போற்றிப் பஃறொடை

இதன் ஆசிரியர் உமாபதிசிவம் ஆவார். இது பஃறொடை வெண்பாவால் ஆன நூல். இறைவனைப் போற்றிப் புகழ்ந்து கூறும் தோத்திர நூல் என்றும், பதி பசு, பாசம் என்ற முப்பொருட்களின் இயல்புகளையும் அவைகளுக்குள்ள தொடர்புநிலைகளையும் தத்துவ முறையில் விளக்கக்கூறும் சத்திரநூல் என்றும் கூறப்படுகிறது.

கொடிக்கவி

இந்நூல் நடராசப்பெருமானது கோயிலில் கொடி ஏறும் பொருட்டு உமாபதி சிவத்தால் பாடப்பட்ட நூலாகும். ஒரு கட்டளைக் கலித்துறையும் நான்கு வெண்பாக்களையும் கொண்டது. ஞானதீட்சையின் பயன் ஐந்தெழுத்தின் பெருமை ஆகியவை கூறப்பட்டுள்ளன.

நெஞ்சுவிடு தூது

இந்நூல் ஆசிரியர் உமாபதிசிவம் ஆவார். இந்நூல் கலிவெண்பாவால் ஆனது. 129 கண்ணிகளை உடையது. இந்நூலின் ஆசிரியர் தம்மைத் தலைவியாகவும் தம் ஞானசிரியரான மறைஞான சம்பந்தரைத் தலைவராகவும் கருதி அவரிடம் சென்று, அவரருளைப் பெற்று அதற்கு அடையாளமாக அவரிடமுள்ள மாலையை வாங்கி வருமாறு தம்

நெஞ்சைத் தூதாக அனுப்பும் முறையில் அமைந்துள்ளது.

உண்மை நெறி விளக்கம்

உமாபதி சிவம் எழுதிய இந்நூல் ஆறு ஆசிரிய விருத்தப்பாக்களால் அமைந்துள்ளது. இதில் தத்துவரூபம், ஆன்மக்காட்சி, ஆன்ம சுத்தி, சிவரூபம், சிவதரிதம், சிவயோகம், சிவபோகம் என்னும் பத்துக் காரியங்களால் உயிரானது இறைவனது திருவடியை அடையும் எனக் கூறப்படுகிறது.

சங்கற்ப நிராகரணம்

இந்நூல் உமாபதி சிவத்தால் எழுதப்பட்டவையாகும். இருபது அகவற்பாக்களையும் ஒரு வெண்பாவாலும் ஆகியது. சித்தாந்தத்தின் வழியே முக்தி அடையும் நிலை கூறப்படுகிறது.

சித்தாந்தத்தின் தத்துவநிலை

சைவ சித்தாந்தத்தின் சிறப்பாக பேசும் பொருள்கள் மூன்று அவை பதி, பசு, பாசம் இவற்றுள் பாசம் ஆணவம், கன்மம், மாயை எனும் மூவகையில் வைத்துச் சொல்லப்படும். கன்மம் என்பது வினை அல்லது தொழில் ஆணவ மலத்தைச் சார்பான ஆன்மாக்கள் செய்யும் வினைகளின் தொகுப்பே கன்ம மலம் என்னும் பெயருக்கு உரித்தாகும். மறைமலையடிகள் ஒருவர் செய்யும் நல்வினை தீவினைகளும் அவற்றின் பயனும் கன்மம் எனப்படும்.

தத்துவ நிலை

நீராரும் கடலுடுத்த நிலவுலகின் கண் முன்னைப் பழமைக்கும் பழமையாயும் பின்னைப் புதுமைக்கும் புதுமையாயும் விளங்குவது சைவ சமயம். இச்சைவ சமயம் சிவத்துடன் தொடர்புடையது. சிவ வழிபாடே உலகில் தொன்மையானது என்பதற்கு மொகஞ்சதாரோ போன்ற அகழ்வராய்ச்சிகளில் கண்டெடுக்கப்பட்டுள்ள சிவ வடிவ சிற்பங்களே ஆதாரம். மேலும் சிவ வழிபாடு குறித்து பல ஆன்றோர்கள் நமக்கு தெரிவித்த கருத்துக்களும் சிவ வழிபாட்டினை விளங்கச் செய்வன.

சிவ தத்துவத்தின் குண நல இயல்புகள்

இறைவன் எல்லையற்ற பேரானந்தத்தினால் ஆனந்த நடனம் ஆடும் போது தாளசதியுடன் சேர்ந்த அந்த அங்க அசைவுகளானவை உலகை உருவாக்கி முத்தொழிலும் புரிகிறது. பிரம்மனின் அழிக்கும் தொழிலைச் சிவபெருமான் செய்கின்றார். அந்த ஒரு பகுதியான பிரம்மன் தமோ-குண பிரதான மாயாவிலுள்ள உறைந்து சிவபெருமானே காட்சியளிக்கிறார். அந்தப் பெருமானே எல்லா உயிர்களிலும் நீக்கமற நிறைந்துள்ளார். அவரே கைலாச மலையில் வாசம் செய்கின்றார். அவரே ஞானத்தின் பெட்டகமாகவும் கருவூலகமாகவும் உள்ளார். பார்வதி, காளி மற்றும் துர்க்கா இல்லாத சிவன் தூய நிர்க்குண பிரம்மனாக உள்ளார். தன்னுடைய உண்மையான தூய பக்தர்களுக்காக மாயா (பார்வதி) உடன் இணைந்து சகுண பிரம்மனாக காட்சியளிக்கின்றார்.

முடிவுரை

சைவ சமயத்தில் சாத்திர நூல்கள் வகைகள், சித்தாந்தத்தின் தத்துவநிலை, இறைநிலைத் தத்துவம், சிவதத்துவத்தின் குண நல இயல்புகள் ஆகியவற்றில் சிவபெருமானின் பக்தி நிலையை முற்றிலும் அறியமுடிகின்றது.





தமிழ் ஐயா வெளியீட்டகம்
ஔவைக்கோட்டம், திருவையாறு.